தென்னிந்தியத் திருச்சபை

**கன்னியாகுமரிப் பேராயம்**

# அருளுரைக் கையேடு
# 2022



… என் வாயின் சொற்கள்
உமக்கு ஏற்றவையாய் இருக்கட்டும்;
என் உள்ளத்தின் எண்ணங்கள்
உமக்கு உகந்தவையாய் இருக்கட்டும். திபா 19:14

தென்னிந்தியத் திருச்சபை

**கன்னியாகுமரிப் பேராயம்**

# அருளுரைக் கையேடு

# 2022

கருப்பொருள்

**“திறந்த உலகில் ஒரு திறந்த திருச்சபையை இணைந்து எதிர்நோக்குதல்”**

**(Envisioning Together an Open Church in an Open World)**

*வெளியீடு :*

*தொடர்புத்துறை, கன்னியாகுமரிப் பேராயம்*

# ஆசியுரை

***"உண்மையாகவே, மக்களினங்களின் அன்பர் அவர்; அவர் தம் புனிதர்கள் அவர் கையில் உள்ளனர். அவர்கள் அவரது பாதங்களில் அமர்வர்; அனைவரும் அவரது கூற்றுகளை ஏற்றுக்கொள்வர்."***

***(இச 33:3)***

ஆண்டவரின் அழைப்பால், அவர்தம் வார்த்தையால் போதகப்பணி செய்யும் நமக்கு அவர் அருளிய வாய்ப்புக்காய் அவரைப் போற்றுவோம். நமது பேராயத்தின் வழி வருடந்தோறும் வெளியிடப்படும் அருளுரைக் கையேடு, ஞாயிறு மற்றும் சிறப்பு ஆராதனைகள் அனைத்தும் சிறப்புடனும், பேராய அளவில் இசைவாகவும் இணைந்து செயல்பட வழி காட்டுகிறது. எனவே, இதனை முறைப்படுத்தி தரும் தலைப்பு, திருமறைப் பாடங்களை நாம் தியானித்து மக்கள் சந்திக்கும் ஆன்மிகத் தேவைகள் மற்றும் அனுபவங்களோடு போதனை செய்வது உகந்தது. தென்னிந்தியத் திருச்சபையின் விசுவாசப்பயணத்தின் பவளவிழா ஆண்டில் பயணிக்கிறோம். இவ்வாண்டின் கருப்பொருளாக **"திறந்த உலகில் ஒரு திறந்த திருச்சபையை இணைந்து எதிர்நோக்குதல்"** ***(Envisioning Together an Open Church in an Open World)*** என்பதை இவ்வாண்டில் நம்முடைய அனைத்துத் தியானங்களிலும், இறைவேண்டல்களிலும், திருப்பணிகளிலும் பிரதிபலிப்போம். ஒழுங்கு செய்யப்பட்ட கூடுகைகள் தவிர, திடீர் செய்தி சொல்ல வரும் நபர்களைத் தவிர்ப்பது நலம். நாம் ஜெபத்தோடு ஒரு செய்தி அல்லது பிரசங்கம் செய்வது பிரசவ வேதனைக்குச் சமம். எனவே, ஆயர்கள், திருப்பணிவிடையாளர்கள் அனுதினமும், திருமறையைப் படித்துத் தியானிக்கவும், சேகர அளவில் இணைந்து அருளுரை சார்ந்த கருத்துகளைப் பகிர்ந்து மக்களைப் போய்ச் சேரும் அளவில் நாம் புரிந்து தெளிவாக நிதானமாக மற்றும் தூய்மையாக இறைவார்த்தைகளைப் பகிர்ந்தளிப்போம்.

மேலும், நமது தென்னிந்தியத் திருச்சபையிலும் பேராய அளவிலும் உள்ள மிக முக்கியமான நாள்களைச் சிறப்பித்து அந்த ஞாயிற்றுக்கான செய்திகளைச் சொல்வது சிறப்புக்குரியது. தகுந்த ஆயத்தத்தோடு, பாடல்கள், திருமறைப் பாடங்கள், சிறப்பு நிகழ்வுகள், தொழுகைக்கு அழகு சேர்க்கும் தூய்மை உள்ளிட்ட அலங்காரம் அனைத்தும் நமது தொழுகைகள் மகிமைபெற தேவையானதாகும்.

2022 ஆவது வருடத்திற்கான அருளுரைக் கையேடு வடிவம்பெற உழைத்த அனைவரையும் வாழ்த்தி ஜெபிக்கிறேன். இந்தப் பணியை ஒருங்கிணைத்த தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு. C. **கில்டன் தயானந்த்**, தொகுப்பாசிரியராகப் பணிபுரிந்த அருள்திரு. **ரமேஷ்** D. **தாஸ்** மற்றும் அவருடன் இணைந்து இப்பணிகளை நிறைவேற்றியோரையும், நூல் வடிவம் பெற உழைந்த மார்த்தாண்டம் C.S.I. அச்சகத்தார் அதன், கண்காணிப்பாளர் அருள்திரு. A. **மகேர் ஷால் அஸ்பாஸ்** ஆகியோரையும் பாராட்டுகிறேன். தந்தை, மைந்தர், தூய ஆவியார் திருப்பெயரில் வாழ்த்தி ஆசி கூறுகிறேன்.

பேரருள்திரு. அறிவர். A.R. ***செல்லையா,*** M.A.,B.D.,M.Th.,D.Min.
பேராயர், கன்னியாகுமரிப் பேராயம்

# இயக்குநரிடமிருந்து...

*கிறிஸ்துவில் அன்பானவர்களே!*

மறைநூல் வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் (யோவா 5:39) என்ற இறை வார்த்தையின்படி திருமறையின் வார்த்தைகளை ஆராய்ந்து அவற்றைத் தியானம் செய்து, இறைமக்களுக்கு வாழ்வியல் சூழல்களோடு போதிக்க அருளுரைக் கையேடு - 2022, அருளுரையாளர்களுக்கு உதவுமென்று நம்புகிறேன்.

அருளுரைகள் ஒரு சிற்பியின் கரத்தில் உள்ள உளி போன்றது. மானிடர்களின் உள்ளங்களைச் செதுக்கி இறைநம்பிக்கையில் முதிர்ச்சியடையவும், கிறிஸ்துவில் வாழவும், வளரவும் உதவுகின்றது. "திருச்சபை கடவுளுடைய வார்த்தையால் உருவாக்கப்பெற்றது, அவருடைய வார்த்தையைச் சார்ந்திருக்கிறது" (The church is a creation of God by His word and is dependent on His word) என்ற ஜாண் ஸ்டாட் என்பவரின் கூற்றுப்படி திருச்சபை அவருடைய வார்த்தையைச் சார்ந்திருக்கிறது. இவ்வார்த்தையை அருளுரை வழி விளக்குவது இறைப்பணியாளர்களாகிய நமது கடமை. "திருமறையின் அதிகாரத்தை அடையாளம் கண்டு கொள்ளுகிறவர்கள் மனச்சாட்சியுடன் போதிக்கும் அருளுரையாளர்களாக இருக்க வேண்டும்" (We who recognize the authority of Scripture should be the most conscientious preachers) என்ற ஜாண் ஸ்டாட் என்பவரின் கூற்றுப்படி திருமறையின் முழு அதிகாரத்தையும் தெளிவாகப் புரிந்து மக்களின் வாழ்வுக்குக் பொருத்தமானதாகத் திருமறையை விளக்கி உண்மையான மனச்சான்றோடு அருளுரையாற்றுவது நம் பொறுப்பு.

"இறைவார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது. . . ஆன்மாவையும், ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது; எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது; உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது" (எபி 4:12). அத்தகைய ஆற்றல் நிறைந்த இறைவார்த்தைகளை உள்ளங்களின் ஆழங்களில் ஊடுருவிச் சென்று மாற்றங்களை விதைக்கிறது, பண்படுத்துகிறது, மனங்களைப் பகுத்தறியச் செய்கிறது. இறைவார்த்தைகளைத் தகுந்த ஆயத்தத்துடன் எடுத்துரைக்க ஆண்டவர் அருள் செய்வாராக. 2022-ஆம் ஆண்டின் கருப்பொருளான, **"திறந்த உலகில் ஒரு திறந்த திருச்சபையை இணைந்து எதிர்நோக்குதல்"** என்பது நாம் வழங்குகின்ற எல்லா அருளுரைகளிலும் பிரதிபலிக்கட்டும்.

2022 ஆம் ஆண்டிற்கான அருளுரைக் கைந்நூலை வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த மாண்பமை பேராயர் பேரருள்திரு. அறிவர். A.R. **செல்லையா** அவர்களுக்கு நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். அருளுரைக் கையேட்டைத் தொகுக்கும் கடினமான பணியில் கரம் கொடுத்தவர்கள் பலர் தொகுப்பாசிரியராக பணிவிடையாற்றிய அருள்திரு. ரமேஷ். D. தாஸ், உடன் பணிவிடைகளில் தோள் கொடுத்து உழைக்கும் திருப்பணியாளர் B. சாம் ஜெபசிங் ஆகியோருக்கும், உடன் பணியாற்றியோர்க்கும், அருளுரைகளை எழுதிய ஆயர்கள் மற்றும் திருப்பணிவிடையாளர்களுக்கும், அச்சுப் பணிகளைக் கருத்தாய் நிறைவேற்றிய மார்த்தாண்டம் C.S.I. அச்சகத்தார்க்கும், அதன் கண்காணிப்பாளர் அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடவுளின் திருப்பெயர் போற்றப்பெறுக!


கிறிஸ்துவின் பணியில்,

அருள்திரு. C. **கில்டன் தயானந்த்,** M.A.,B.D.,M.Th.,

இயக்குநர்,

தொடர்புத்துறை, C.S.I. கன்னியாகுமரிப் பேராயம்

email: csikkd.communication@gmail.com

## தொகுப்பாசிரியரிடமிருந்து...

***இயேசு கிறிஸ்துவில் அன்புமிக்கவர்களே,***

அருளுரைகள் மக்களை நல்வழிப்படுத்தும் இறைவார்த்தைகள். இது நான்கு சுவர்களுக்குள்ளாக மக்களை சிறைப்படுத்துவதாக அமையாமல், மக்களை செயல்படத் தூண்டுபவைகளாக அமைய வேண்டும். மேலும் நமது அருளுரைகள் கிறிஸ்துவை மையப்படுத்தியே அமைதல் வேண்டும்.

A sermon without Christ in it is like a loaf of bread without any flour in it - Charles Spurgeon.

சாரமில்லாத உப்பைப் போல நமது அருளுரைகள் அமையாமல், மக்கள் வாழ்வில் சுவை கொடுத்து சிந்திக்கத் தூண்டுவதாக இருக்க வேண்டும். இந்நூலை ஒரு கையேடாக மட்டும் கொண்டு இறைவேண்டலோடு அருளுரைகளை ஆயத்தப்படுத்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2022-ஆம் ஆண்டின் அருளுரைக் கையேட்டைத் தொகுக்கும் கனமான பொறுப்பினை என் கரங்களில் தந்த பாசமிகு பேராயர் பேரருள்திரு. அறிவர். A. R. **செல்லையா** அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். இப்பொறுப்பான பணியினைச் சீரோடும், சிறப்போடும் நிறைவேற்ற நல்லூக்கம் தந்து என் பணியினைத் தன் பணியாகக் கருதி உதவிய பேராயத் தொடர்புத்துறை இயக்குநர் அருள்திரு. C. கில்டன் தயானந்த் அவர்களுக்கும், என்னோடு தோளோடு தோள் கொடுத்து தன் உழைப்பை எழுத்தாக்கிய அன்பு நண்பர் திரு. B. சாம் ஜெபசிங் அவர்களுக்கும், ஆயத்தப் பணிகளில் உதவிய அருள்திரு. R. சாம் பிரின்ஸ், அருள்திரு. T. P. ஸலீம் தங்க குமார், அருள்திரு. J. நேச பிரின்ஸ், அருள்திரு. A. கால்வின் தேவநேசன், திரு. A. கிளாட்ஸ்டன் ரூப ராஜ், திரு. M. R. மில்ட்டன் மார்க், திரு. J. வைஜூஷ், திரு. M. பிரிஸ்டன் வினோ, திரு. S. வெஸ்லின், திரு. S. ஜெப யாபேஸ், திரு. A. S. இர்வின் ஸ்மைல், திரு. G. பெர்லிங்டன் ஆகியோருக்கும், இறைவேண்டலோடு அருளுரைகளை எழுதிய பேராயர், பேராயரம்மா, சேகர ஆயர்கள், ஆயர்கள் மற்றும் திருப்பணிவிடையாளர்களுக்கும் நன்றி சொல்கிறேன். அருளுரைக் கையேடு - 2022, குறித்த நேரத்தில் வெளியிட உதவிய பேராய அச்சகக் கண்காணிப்பாளர் அருள்திரு. A. மகேர் ஷால் அஸ்பாஸ் அவர்களுக்கும் மார்த்தாண்டம் C.S.I. அச்சகத்தாருக்கும் நன்றி சொல்கிறேன்.

இறைப்பணியில்
அருள்திரு. ***ரமேஷ். D. தாஸ்*** M.A., B.D., M.Th.
தொகுப்பாசிரியர்

# பொருளடக்கம்


1. 01-01-2022 ஒப்படைக்கப்பெற்ற கூட்டாண்மைக்கான இறையழைப்பு 1
2. 02-01-2022 மீட்புக்கான திருவெளிப்பாடு 5

**வார இறைவேண்டல்**

3. நாள் 1 - எம்மை எழுப்பி முழுநிறை ஒளிக்கு எம்மைக் கொணர்வீராக 11
4. நாள் 2 - தாழ்மையான தலைமைத்துவம் சுவர்களைத் தகர்த்து அன்பினால் கட்டுகிறது 14
5. நாள் 3 - கிறிஸ்துவின் எழுந்தருளல் உலகை தலைகீழாகப் புரட்டிப் போடுதல் 17
6. நாள் 4 - சிறியதாயினும் துன்பமாயினும் நாங்கள் ஒன்றையும் இழப்பதில்லை 20
7. நாள் 5 - ஒரே ஆண்டவரால் வழிநடத்தப்பெறுதல் 22
8. நாள் 6 - ஒரே ஆண்டவரைச் சுற்றி வழிபாட்டில் கூடிவருதல் 25
9. நாள் 7 - கூட்டுறவின் அருள்கொடைகள் 27
10. நாள் 8 - விலகிச் செல்லும் பழக்கப்பட்ட வழித்தடங்களுக்கு அப்பால் கடவுளின் புதிய பாதைகளை நோக்கி 29
11. 09-01-2022 தூயவராயிருங்கள் 31
12. 16-01-2022 ஒரே உடல் ஒரே திருமுழுக்கு 36
13. 23-01-2022 அன்பினால் ஒன்றிணைக்கப் பெற்றோம் 41
14. 26-01-2022 அனைவருக்கும் சமத்துவமும், நீதியும் 47
15. 30-01-2022 ஆண்டவரைப் போற்றுங்கள் (இறை வழிபாடு) 52
16. 06-02-2022 கிறிஸ்துவே வாழ்வின் முன்மாதிரி 56
17. 06-02-2022 திறன் மிகு இளையோர் 60
18. 13-02-2022 படைப்பில் கூட்டுச் சார்புடைமை 64
19. 13-02-2022 நோய்மையில் நலம் பெறுதல் 67
20. 20-02-2022 படைப்பின் சீர்கேடு 70
21. 27-02-2022 தவக்காலம்: ஒரு மீட்பின் காலம் 73
22. 02-03-2022 சிலுவை : பிறர்பொருட்டுத் துன்புற ஓர் அழைப்பு 77
23. 06-03-2022 மீட்புப் பணியில் பெண்கள் 80

24. 06-03-2022 ஒதுக்கப்பட்டோரோடும், ஓரங்கட்டப்பட்டவரோடும் இருத்தல் 85
25. 13-03-2022 பாவச் சுமையிலிருந்து விடுவித்தல் 90
26. 20-03-2022 எல்லைகளைக் கடந்து இறைநம்பிக்கையை ஒப்புக்கொள்ளல் 94
27. 27-03-2022 ஒடுக்குகிற கட்டமைப்புகளை மாற்றுருவாக்கம் செய்தல் 97
28. 03-04-2022 சிலுவையும் சீடத்துவத்திற்கு ஒரு புதிய முன்மாதிரியும் 101
29. 10-04-2022 ஓசன்னா: ஆண்டவரே எம்மை மீட்டருளும் 105
30. 11-04-2022 எதிர்பார்ப்பில் ஏமாற்றம் 112
31. 12-04-2022 கேள்விக்குப் பதிலுரைக்கும் ஆண்டவர் 115
32. 13-04-2022 நற்செயலின் நறுமணம் 118
33. 14-04-2022 நன்றித் திருவிருந்து : துன்புறும் மானிடத்தோடு ஒன்றிப்பு 120
34. 15-04-2022 சிலுவை: மீட்பின் நிறைவேறுதல் 123
35. 16-04-2022 புதுவாழ்வுக்கான எதிர்நோக்கு 126
36. 17-04-2022 உயிர்ப்பு: எல்லையற்ற மாற்றுருவாக்கத்தைக் கொண்டாடுதல் 130
37. 24-04-2022 உயிர்த்த ஆண்டவரால் பேராற்றல்படுத்தப்பெறுதல் 134
38. 01-05-2022 உயிர்த்த ஆண்டவரோடு திருமறையை மீள்படித்தல் 140
39. 01-05-2022 தச்சனாகிய யோசேப்பு 144
40. 08-05-2022 உயிர்த்த ஆண்டவரால் அதிகாரப்படுத்தப்பெறுதல் 147
41. 15-05-2022 கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : உண்மை 150
42. 22-05-2022 கிறிஸ்துவின் சிந்தையோடு அருட்பணி 154
43. 29-05-2022 தூய ஆவியாரால் நடத்தப்பெறுதல் 161
44. 05-06-2022 வாரும் தூய ஆவியாரே, எம்மை விடுவித்தருளும் 166
45. 05-06-2022 ஆண்டவருக்கு அஞ்சுவதே ஞானத்தின் தொடக்கம் 169
46. 12-06-2022 மும்மை (திரித்துவம்) : அன்பின் சமூகம் 172
47. 12-06-2022 கடவுளின் படைப்பைப் பேணி வளர்த்தல் 177
48. 19-06-2022 வழிபாட்டில் இறைவெளிப்பாடு 182
49. 26-06-2022 சீடர்களை உருவாக்குங்கள் 186
50. 03-07-2022 இழப்பை ஒரு பொருட்டாகக் கருதாமல் கொடுத்தல் 191
51. 10-07-2022 இறையியல் கல்வி : நம்பிக்கைக்குரியவர்களை உருவாக்குதல் 196
52. 17-07-2022 இறைமக்கள் : கிறிஸ்துவின் மந்தை 201

| | | | |
|---|---|---|---|
| 53. | 24-07-2022 | அருள்பொழிவுத் திருப்பணி : கிறிஸ்துவின் நறுமணம் | 206 |
| 54. | 31-07-2022 | திருமணம் : அன்பின் நீடித்த வாழ்வு | 211 |
| 55. | 07-08-2022 | அருட்பணி: எல்லா இடங்களிலிருந்தும் எல்லா இடங்களுக்கும் | 215 |
| 56. | 14-08-2022 | திருமுழுக்கு : விண்ணிலிருந்து பிறத்தல் | 219 |
| 57. | 15-08-2022 | முடிவெடுப்பதில் பங்கேற்பு | 223 |
| 58. | 21-08-2022 | திருவிருந்தாகிய திருவருட்சாதனம் | 228 |
| 59. | 28-08-2022 | கடவுளும் பல்சமயப் பற்றுறுதியாளர்களும் | 233 |
| 60. | 04-09-2022 | கல்வி : திருச்சபையின் திருப்பணி | 236 |
| 61. | 11-09-2022 | பெண்களின் திருப்பணியை நினைவுகூர்தலும் கொண்டாடுதலும் | 241 |
| 62. | 18-09-2022 | பணிவிடையில் ஒன்றிப்பு | 244 |
| 63. | 21-09-2022 | வன்முறைச் சூழலில் அமைதி | 249 |
| 64. | 25-09-2022 | முதியோரைப் பராமரித்தலும் ஏற்றுக்கொள்ளுதலும் | 254 |
| 65. | 02-10-2022 | அனைத்து இறைமக்களின் குருத்துவம் | 258 |
| 66. | 09-10-2022 | இயலாமை: பராமரித்தலும் மதித்தலும் | 261 |
| 67. | 16-10-2022 | செயலில் கிறிஸ்துவுடன் இளையோர் | 266 |
| 68. | 23-10-2022 | நுகர்வோரியத்திற்குக் கிறிஸ்தவ மறுமொழி | 272 |
| 69. | 30-10-2022 | கடவுளின் இறையாண்மையின் கொண்டாட்டம், நீதியும் அமைதியும் | 275 |
| 70. | 06-11-2022 | இந்தக் குழந்தை என்னவாகப் போகிறது? | 279 |
| 71. | 13-11-2022 | திராட்சைச் செடியும் - கொடிகளும் | 283 |
| 72. | 20-11-2022 | பெண் குழந்தையின் பெருமதிப்பை உறுதி செய்தல் | 287 |
| 73. | 27-11-2022 | கடவுளின் வாக்குறுதிகளைக் கொண்டாடுதல் எலிசபெத்துடனான மரியாவின் சந்திப்பு | 290 |
| 74. | 04-12-2022 | இறைவாக்கு : இருமுனையுள்ள கூர்வாள் | 297 |
| 75. | 11-12-2022 | இம்மானுவேலின் வாக்குறுதி | 301 |
| 76. | 18-12-2022 | ஆயத்தம்: ஆண்டவர் வருகிறார் | 304 |
| 77. | 24-12-2022 | கடவுளுக்கே மாட்சி உரித்தாகுக | 307 |
| 78. | 25-12-2022 | கிறிஸ்துப் பிறப்பு: அருளின் மேல் அருள் | 310 |
| 79. | 31-12-2022 | வாருங்கள் ஆண்டவர் நல்லவர் | 314 |

## புதிய மாத நன்றித் தொழுகை


80. 01-02-2022 வழியை அறியச்செய்யும் ஆண்டவர் 318

81. 01-03-2022 கண்மணியெனக் காக்கும் ஆண்டவர் 321

82. 01-04-2022 இருளை ஒளிமயமாக்கும் ஆண்டவர் 323

83. 01-05-2022 புத்துயிர் அளிக்கும் ஆண்டவர் 326

84. 01-06-2022 மனவிருப்பத்தை அருளும் ஆண்டவர் 328

85. 01-07-2022 எளியோர் சார்பில் செயலாற்றும் ஆண்டவர் 331

86. 01-08-2022 மகிழ்வைத் தரும் ஆண்டவர் 333

87. 01-09-2022 பேரன்பைப் பொழியும் ஆண்டவர் 335

88. 01-10-2022 அச்சம் அகற்றும் ஆண்டவர் 338

89. 01-11-2022 அடைக்கலம் அருளும் ஆண்டவர் 341

90. 01-12-2022 விண்ணப்பத்தைக் கேட்கும் ஆண்டவர் 344


## தவக்கால புதன் & வெள்ளி


91. 04-03-2022 சிலுவையும் தாழ்மையும் 349

92. 09-03-2022 வெளிவேடமாகிய புளிப்புமா 352

93. 11-03-2022 சிலுவையும் கடவுளின் வல்லமையும் 355

94. 16-03-2022 கொள்ளையிட்டுத் தின்னும் ஓநாய்கள் 357

95. 18-03-2022 சிலுவையும் நலமருள்தலும் 360

96. 23-03-2022 தம்பட்டமடிக்கும் தற்புகழ்ச்சி 363

97. 25-03-2022 சிலுவையும் அநீதியான அதிகாரமும் 366

98. 30-03-2022 இதயத்தை மந்தமாக்கும் பாரம் 369

99. 01-04-2022 சிலுவையும் பெருமை பாராட்டுதலும் 372

100. 06-04-2022 சிலை வழிபாடான பேராசை 376

101. 08-04-2022 சிலுவையும் ஊனியல்பும் 379


## சிலுவைத் திருமொழிகள்


102. 1 - விண்வாழ்வின் தகுதியாக்கும் மன்னிப்பு 383

103. 2 - விண்வாழ்வின் அங்கீகரிக்கும் ஏற்பு 385

104. 3 - விண்வாழ்வின் குணமாக்கும் அரவணைப்பு 389

105. 4 - விண்வாழ்வில் மகிமையாகும் கைவிடப்படுதல் 392

106. 5 - விண்வாழ்வின் எதிர்பார்க்கும் தாகிப்பு 397

107. 6 - விண்வாழ்வின் கடமையாகும் நிறைவு 399

108. 7 - விண்வாழ்வின் மணிமுடியாகும் ஒப்படைப்பு 401

## விழாக்கால அருளுரைகள்


109. குழந்தைகள் குடும்பத்தின் மகிழ்ச்சி 405

110. அருட்பணி : மானிடத்திற்குப் பணிவிடை 408

111. இளையோரே இலக்கை நோக்கிப் பயணிப்போம் 410

112. நம்பிக்கையால் நற்சான்று பகர்ந்த லீதியா 415

113. ஆண்டவரைப் பாடுவோம் 418

114. குழு இறைவேண்டல் 421

115. அறுவடை பண்டிகை (திருவிழா) 423

116. செயல்படும் திருச்சபை 426

## LITURGICAL COLOURS - 2022

| | |
|---|---|
| **January 1 to January 6**<br>**(Christmas Season)** | **White** |
| **January 7 to March 1**<br>**(Epiphany Season)** | **Green** |
| **March 2 to April 16**<br>**(Lenten Season)** | **Purple** |
| **April 17 to June 4**<br>**(Easter Season)** | **White** |
| **June 5 to June 11**<br>**(Pentecost Season)** | **Red** |
| **June 12**<br>**(Trinity Sunday)** | **White** |
| **June 13 to November 26**<br>**(Pentecost Season)** | **Green** |
| **November 27 to December 24 Morning**<br>**(Advent Season)** | **Purple** |
| **December 24 Eve to December 31**<br>**(Christmas Season)** | **White** |

01-01-2022

**புத்தாண்டு & உடன்படிக்கை நாள்**

## ஒப்படைக்கப்பெற்ற கூட்டாண்மைக்கான இறையழைப்பு

### GOD'S CALL FOR COMMITTED PARTNERSHIP

| | |
|---|---|
| இச 10:12-22 | 1தெச 4:1-8 |
| திபா 23 | மாற் 10:35-45 |

**"ஏனெனில் மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்."**

(மாற் 10:45)

இத்திருவசனத்தை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வரும் வேலூர், கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி, பெங்களூர் ஐக்கிய இறையியல் கல்லூரி இவைகளின் சேவை பெரிதும் பாராட்டுதற்குரியது.

ஆண்டவரின் அழைப்பில் பங்குபெறுவது ஒரு சேவையின் நோக்கம், சாட்சியின் நோக்கம் மற்றும் அர்ப்பணிப்பின் நோக்கம் எனலாம். புத்தாண்டின் ஆரம்ப நிலையில் ஆண்டவரோடு கொண்டுள்ள உடன்பாட்டின் நோக்கத்தின் வாயிலாக வெளிப்படுத்தியபடி,

- Partnership of God's Call in Service
- Partnership of God's Call in Witness
- Partnership of God's Call in Commitment

ஆண்டவரின் திருப்பணி வியாபார ரீதியாகவும், விளம்பர ரீதியாகவும் பல வகையில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை மறுபடியும் திருச்சபைகள் புரிந்துகொண்டு புத்தாண்டிலே செயல்பட ஆண்டவரோடு உடன்பாடு கொள்வோம்.

### *1. ஆண்டவரின் பணியில் பங்கு பெறுதல் என்பது சேவை செய்ய* (Partnership of God's Call in Service):

ஊழியம் செய்தலின் சிறப்பே சேவை என்று எளிதாகப் புரிந்துகொள்ளலாம். திருச்சபை வரலாற்றில் இது அடிப்படையாக அமைந்தது ஆகும். இன்று இது சற்று அபூர்வமாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. நமது மனதில், நான் இதைச் செய்தால் எனக்கு என்ன லாபம்? அல்லது என்ன கிடைக்கும்? என்ற எண்ணம் மேலோங்கி உள்ளது. ஆனால் ஆண்டவரோடு இணைந்து அவரது பணியினை நிறைவேற்ற வரும்போது, நான் அல்ல, ஆண்டவரே என்ற பகிர்தல் எண்ணம் வந்தால் அது சேவையாகக் காணப்படும். திருச்சபை சேவை

செய்யும் ஊடகமாக எதிர்பார்க்கப்படுகிறது. திருச்சபையின் வரலாற்றில் நிறைவேற்றப்பட்ட மருத்துவச் சேவை, கல்விச் சேவை, சமூகச் சேவை, அத்தோடு இக்காலக்கட்டத்தில் வேலை வாய்ப்பு பெறுவதற்கான திட்டங்களை வகுத்து சேவை செய்வது சமூகத்தால் எதிர்பார்க்கப்படுகின்ற சேவையாகும்.

சேவையின் நோக்கமே பிறருக்குப் பணிவிடை என ஆண்டவர் கூறுகிறார் (மத் 25:42-45). அதனை ஆண்டவர் பசியில், காவலில் மற்றும் அன்னியனாய் இருந்தபோது பிறருக்குச் செய்த சேவை எல்லாம் எனக்கே செய்தது என்கின்றார். எனவே கிறிஸ்துவின் வழியில் தமது சேவைகளை நிதானித்து அறிந்து செயல்படுவோம்.

## *2. ஆண்டவரின் பணியில் பங்கு பெறுதல் என்பது சான்று பகரும் வாழ்வு* (Partnership of God's Call in Witness):

ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களுக்கு இடப்பட்ட பெயர்களில் ஒன்று சாட்சி. திப 1:8 இல் "தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" என்றார் கிறிஸ்து.

திருமறையில் சாட்சி என்பதற்கு பயன்படுத்தப்படும் கிரேக்க வார்த்தை 'மார்ட்டுரேயா' அதன் பொருள் ஆண்டவருக்காய் இரத்தம் சிந்தி சாட்சியாய் மரிப்பதை குறிப்பிடுவதாக உள்ளது. எனவே திருச்சபைத் தலைவர்களில் ஒருவரான தெர்த்துல்லியன் குறிப்பிடும்போது 'இரத்தசாட்சிகளின் ரத்தம் திருச்சபையின் வித்து' என்றார்.

எனவே நமது திருச்சபையானது தனது தியாகத்தால் குறிப்பாக ஐக்கியத்தில் சாட்சி (திபா 133:1), கனியுள்ள வாழ்வின் சாட்சி (யோவா 15:8), குடும்பமாக சாட்சி (திப 10:2), ஆராதனையில் சாட்சி (திப 2:46,47), மற்றும் பரிசுத்தத்தில் சாட்சி (1தெச 4:7), விசுவாச வாழ்வில் சாட்சி (1தெச 2:10), இன்னும் பல அனுதின வாழ்வில் எதிர்பார்க்கப்படுகின்றன.

கடவுள் நமக்குச் செய்த நன்மைக்காக நன்றியுடையவர்களாக இருப்பதே சாட்சி. இந்தச் சாட்சி எக்காலமும் பொருந்தும். எனவே தான் நான் உம்மைப்பற்றி ரட்சகா, வீண் வெட்கம் அடையேன், பேரன்பைக் குறித்தாண்டவா நான் நான் சாட்சி கூறுவேன் என்ற அர்த்தமுள்ள சாட்சியின் பாடல் இதனை எடுத்துக் கூறுகின்றது.

எனவே ஆண்டவரின் பணியில் பங்கு பெறுவோரின் சாட்சி முதன்மையானது. நமது நடை, உடை, பாவனை அனைத்திலும்

சாட்சியாய் இருத்தல் அவசியம். சாட்சி என்ற செயல் எழுத்திலோ, பேச்சிலோ அல்ல, அது வாழ்வியல் சார்ந்ததாக அமைய வேண்டும். ஜாண் ஸ்டாட் கூறிய கூற்று யாதெனில், “The rose does not need to preach, it simply spreads its fragrance. The fragrance is the sermon.” சாட்சியின் சிறப்பு சாட்சியங்களை ஏற்றுக்கொள்ளுதல் என்பதாகும். இதனை சாட்சியாய் வாழ்ந்த சீடர்கள் மற்றும் மிஷனெரிகள் வாழ்வின் வழி கண்டுகொள்ள முடிகிறது.

சாட்சியாய் வாழ பணிவும், துணிவும் அவசியம். திப 4:12இல் “இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால் நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின் கீழ், மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை.”

### 3. ஆண்டவரின் பணியில் பங்கு பெறுதல் என்பது அர்ப்பணிப்பு (Partnership of God’s call in commitment):

ஆண்டவரால் அழைப்பு பெற்றவர்கள் அனேகர். அழைக்கப்பட்டவர்கள் அர்ப்பணிப்போடு தங்களது கடமைகளை செய்தால் அவர்கள் வழி கடவுளின் நாமம் மகிமைப்படக்கடவது. அழைப்பு பெற்றவர்கள் சலுகை பெற அல்ல, பொறுப்புடன் வாழ்வதற்கே அழைக்கப்பட்டுள்ளனர். எடுத்துக்காட்டாக, மோசேயின் அர்ப்பணிப்பு. மோசே பெரியவரான பின்பு பார்வோனுடைய மகளின் மகன் என அழைக்கப்பட மறுத்ததும் நம்பிக்கையினாலே தான். பாவத்தில் சிறிதுகாலம் இன்புறுவதைவிட, கடவுளுடைய மக்களோடு சேர்ந்து துன்புறுவதையே அவர் தேர்ந்துகொண்டார் (எபி 11:24,25).

புதிய ஏற்பாட்டில் இந்த அர்ப்பணிப்பின் நிலையினை புரிந்துகொள்ள மத் 16:24 இல் ஒருவர் என்னைப் பின்பற்ற விரும்பினால் அவர் தன்னை வெறுத்து சிலுவை சுமக்கக் கடவன் என்கிறார்.

ஒரு புது வருடத்தின் ஆரம்ப நாளை காணச் செய்த கடவுளோடு நாம் நிரந்தரமான ஓர் தீர்மானம் செய்து கொள்வோம். அது என்ன தீர்மானமெனில் பிலிப் 2:5, கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது என்ற தியாகச் சிந்தையினைப் பெருக்கிக் கொள்வோம்.

திருச்சபை, அதன் திருப்பணி, கடவுளுடைய ஆளுகையின் கீழ் கருவியாக இருப்பதால் அவரது ராஜ்யம் வளரவேண்டும். அவரது சித்தம் செய்யப்படவேண்டும் என்ற அயராத அர்ப்பணிப்பு அவசியமாக உள்ளது.

இந்தியாவில் நற்செய்திப்பணி செய்த மிஷனெறி ஒருவர் அண்ணல் காந்தியடிகளிடம் இந்தியாவில் கிறிஸ்தவம் இன்னும் வளர வேண்டுமெனில் எமது பொறுப்பு என்ன என்று கேட்ட போது காந்தியடிகள் கூறியது யாதெனில், 'ஆண்டவர் கற்பித்ததுபோல வாழ வேண்டும்' என்றாராம். இப்புத்தாண்டில் கடவுள் தரும் கிருபையான ஒவ்வொரு நாளிலும் தருணங்களிலும் நமது வாழ்வில் தாழ்மையிலும், நேர்மையிலும், தூய்மையிலும், முழு அர்ப்பணிப்போடும், ஒப்படைப்போடும், திருச்சபையோடும், பிறரோடும் மற்றும் இயற்கையோடும் அர்ப்பணிப்புடன் செயல்படுவோம். அர்ப்பணிப்பின் வெளிப்பாடு நம் வாழ்வினை முழுமைப்படுத்தட்டும்.

***இறையாசி என்றும் நம்மோடு தங்கியிருப்பதாக!***

பேரருள்திரு. அறிவர் A.R. **செல்லையா**
பேராயர்

| | |
|---|---|
| 02-01-2022 | **கிறிஸ்துப் பிறப்புக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு** |

## மீட்புக்கான திருவெளிப்பாடு

**REVELATION FOR SALVATION**

| | |
|---|---|
| விப 3:1-14 | திப 16:6-10 |
| திபா 27 | யோவா 12:20-32 |

**"... ஆண்டவரே என் மீட்பு..."** (திபா 27:1).

மருத்துவர் தியோடர் ஹோவர்ட் சாமர்வெல் 1890-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் நாள் இங்கிலாந்திலுள்ள கெண்டல் நகரில் பிறந்தவர். இவர் மலையேற்ற வீரர் என்றால் அது மிகையாகாது. இவர் 1922 ஆம் ஆண்டு ஒரு குழுவாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏற முயன்றார். தடம் அமைத்து ஏறிக்கொண்டிருக்கும்போது விநோதமான ஒரு இரைச்சல் கேட்டது. என்னவென்று ஏறிட்டுப் பார்த்த போது, அவர்களின் தலைக்கு மேல் ஒரு பனி மலை பெயர்ந்து வருவதைக் கண்டனர். சாமர்வெல் உட்பட அனைவரும் பயத்தில் அலறினர். திடீரென சாமர்வெல் அவர்களின் தலைக்கு மேல் இருந்த பனிப்பாறை நீட்டல் அந்தப் பனிமலையை இரண்டாக பிளக்கச் செய்தது. அந்த பிளவில் சாமர்வெல் நின்றபடியால் அவரோடிருந்தோரை அந்த பனிமலை அமிழ்த்தி இழுத்துச் சென்றது. அந்த பனி சிகரத்தில் சாமர்வெல் தனிமையில் தத்தளித்தார். இனி நாமும் மடிய வேண்டியது தான் என்று எண்ணி பனிமலையில் இருந்து குதிக்க எழுந்தார். எழும்பும் போது நீண்ட வெண் அங்கிக்குள் இருந்து ஒரு கை ஆசியுடன் எழுந்தது போல் வெளிப்பட்டு அவர் தலைக்கு மேல் நின்றது. அது காயம் நிறைந்த இயேசுவின் கை என உணர்ந்த அவர், "இயேசுவே என் மீட்பரே" என கதறினார். மலையிலிருந்து இறங்கிய அவர் மருத்துவ அருள்பணியைச் செய்யும் அழைப்பை பெற்று நெய்யூர் வந்தார்.

மருத்துவர் சாமர்வெல் அவர்களுக்கு பனி சிகரத்தில் கிடைத்த கடவுளின் திருவெளிப்பாடு அவரின் மீட்புக்கு காரணமாக அமைந்தது என்றால் அதை யாரும் மறுக்கவே முடியாது. எங்கெல்லாம் மீட்புப் பணி நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் கடவுள் தம்மை வெளிப்படுத்துகின்றார் என்பது தான் உண்மை. மொத்தத்தில் திருவெளிப்பாட்டின் நோக்கமும் முதன்மையும் மீட்பு என்பது தான் உண்மை.

### *1. துயரங்களில் திருவெளிப்பாடு* (விப 3:7)

"அப்பொழுது அவர் கூறியது, எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன். அடிமை வேலை வாங்கும்

அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன். ஆம் அவர்களின் துயரங்களையும் நான் அறிவேன்.''

யோசேப்பின் வழியாக எகிப்துக்குச் சென்ற இஸ்ரயேலரை, யோசேப்பை அறியாத பார்வோன் அரசர், கடும் வேலையால் அவர்களை ஒடுக்குவதற்காக அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை அவர்கள் மேல் நியமித்தார். பார்வோனுக்காக அவர்கள் பித்தோம், இராம்சேசு ஆகிய நகர்களைக் கட்டியெழுப்பினர். அதோடு எகிப்தியர் இஸ்ரயேலரை கடினமான சாந்து, செங்கல் வேலையாளும் அனைத்து வயல்வெளி வேலையாலும் அவர்களை கொடுமைப்படுத்தினர். இதனால் இஸ்ரயேலரின் வாழ்வே கசந்து போகும்படி செய்தனர். இஸ்ரயேலர் நாளுக்கு நாள் எண்ணிக்கையில் பெருகினதையும், அவர்களின் ஆள் பலத்தையும் கண்டு அஞ்சிய மன்னன், அவர்கள் எண்ணிக்கையில் பெருகிடாமல் இருக்க தந்திரமாய் ஆலோசனைப் பண்ணி, எபிரேய மருத்துவ பெண்களான பூவா, சிப்ரா வழியாக இஸ்ரயேலர்களுக்கு பிறக்கும் ஆண் பிள்ளைகளை எல்லாம் கொன்று போடவும் அறிவுறுத்தினார். இவ்வாறு இஸ்ரயேலர் பட்ட, அனுபவித்த துயரங்கள் கொஞ்ச நெஞ்சமல்ல. தாங்க முடியாத துயரங்களின் உச்சக் கட்டத்தில் இஸ்ரயேலர் ஆண்டவரை நோக்கிக் கதறினர். இஸ்ரயேலரின் துயர கதறலை கேட்ட ஆண்டவர், அவர்களை மீட்பதற்காக தம் மாமனாரின் மந்தையை மேய்த்து வந்த மோசேயை அழைக்கிறார். மோசேக்கு ஆண்டவர் தம்மை முட்புதரின் நடுவில் இருந்து வெளிப்படுத்தினார். எப்படி முட்புதர் நெருப்பில் எரிந்து கொண்டிருக்கிறதோ அவ்வாறு இஸ்ரயேலர் எகிப்தில் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். ''எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்; அடிமை வேலை வாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலைக் கேட்டேன். ஆம், அவர்களின் துயரங்களை நான் அறிவேன்'' (விப 3:7) ''எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும், தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு . . . அவர்களை நடத்தி செல்லவும் இறங்கி வந்துள்ளேன்.'' (விப 3:8) என்றார் ஆண்டவர். இங்கே எகிப்தின் அடிமைத்தனத்தில் துயரங்களை அனுபவிக்கும் இஸ்ரயேலரை மீட்க கடவுள், தம்மை மோசேக்கு வெளிப்படுத்தினார். எங்கெல்லாம் மக்கள் துன்பங்களை துயரங்களை அனுபவிக்கின்றனரோ அங்கெல்லாம் அவர்களை மீட்க ஆண்டவர் தம்மை வெளிப்படுத்துகின்றார். ஆகாரின் துயரத்தில் தம்மை வெளிப்படுத்திய ஆண்டவர் (தொநூ 16:11), (தொநூ 21:15-19) நமது துயரங்களிலும் தம்மை வெளிப்படுத்தி மீட்டருளுவார்.

## *2. தூதுப்பணிக்கான திருவெளிப்பாடு*

"இக்காட்சியைப் பவுல் கண்டதும் நாங்கள் மாசிதோனியருக்கு நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்று கடவுள் தீர்மானித்துள்ளார் என எண்ணி அங்குச் செல்ல வழி தேடினோம்" (திப 16:10)

"பசார்" என்ற எபிரேயச் சொல்லையும், "எவாங்கலித்சேர்" என்ற கிரேக்கச் சொல்லையிம் தூது அறிவிப்பு என மொழியாக்கம் செய்தாலும், "வெற்றியின்" அல்லது "மீட்பின் நற்செய்தியை அறிவித்தல்" என்பதே இவற்றின் அடிப்படை பொருள். தூய பவுலார் தனது இரண்டாவது தூதுரைப் பயணத்தில் சீலா, தீமோத்தேயு ஆகியோரை இணைத்துக் கொண்டு புறப்படுகிறார். ஆசியாவில் இறைவார்த்தையை அறிவிக்காதவாறு தூய ஆவியார் தடுக்க, அவர்கள் பித்தினியாவுக்கு செல்ல முயன்ற போது இயேசுவின் ஆவியார் அவர்களை அங்கு போகவிடவில்லை. எனவே அவர்கள் துரோவா நகரை அடைந்தனர். துரோவா ஒரு கடற்கரை பட்டணம்; உரோம ஆட்சியின் கீழ் இருந்த ஒரு பட்டணம், "அலெக்சாந்திரியா துரோவா" என்பது இதன் முழுப்பெயர். அங்கே தூய பவுலார் ஒரு காட்சி காண்கின்றார். அது என்னவெனில், மாசிதோனியர் ஒருவர் வந்து நின்று, "நீர் மாசிதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யும்" என்று வேண்டினார். இக்காட்சியைக் கண்ட பவுல், "நாங்கள் மாசிதோனியருக்கு தூதுப்பணி செய்ய கடவுள் தீர்மானித்துள்ளார்" என்று சொல்லி மாசிதோனியாவுக்கு புறப்பட ஆயத்தமாயினர். மாசிதோனியா மக்களின் மீட்புக்கான கடவுளின் திருவெளிப்பாட்டை புரிந்த பவுல், சீலாவோடும், தீமோத்தேயுவோடும் மாசிதோனியா புறப்படுகின்றனர். எனவே தான் பவுலின் தூதுரைப் பணியை பற்றி மிகவும் விரிவாக ஆய்வு செய்த ரோலண்ட் ஆலன் கூறுவார்: "பவுல் தம் தூதுப்பணியில் எந்த மனித சக்தியையும், தன் அறிவு பலத்தை அல்லது ஞானத்தையும் நம்பிச் செயல்பட்டதில்லை. முழுக்க முழுக்கக் கடவுளின் தூண்டுதலையும் அவரின் திருவெளிப்பாட்டையும், அவர் காட்டிய வழிமுறைகளையும் பின்பற்றினார் என்பது தூதுப்பணியின் வேகத்தில் நாம் காண முடிகிறது." இயேசு ஆண்டவர் தாம் விண்ணேற்பு அடைவதற்கு முன் "உலகமெங்கும் சென்று படைப்பிறகெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்" (மாற் 16:15) என்று தம் சீடர்களுக்கும் கட்டளைக் கொடுத்தார். இக் கட்டளையின் பின்னணியில் நோக்கும் போது, திருச்சபை மற்றும் கிறிஸ்தவர்களின் அடிப்படைத் தன்மையே தூதுப்பணி தான் என்பது தெளிவாகிறது. எனவே தான் பேதுருவும், யோவானும் "என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும், கேட்டதையும்

எடுத்துரைக்காமல் இருக்க எங்களால் முடியாது'' (திப 4:20) எனவும், தூய பவுலார், ''நற்செய்தியை அறிவிக்கிறேன் என்றாலும் அதில் நான் பெருமைப்பட ஒன்றுமில்லை; இதை செய்ய வேண்டியக் கட்டாயம் எனக்கு உள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு'' (1 கொரி 9:16) எனவும் சொல்கின்றனர். இந்த தூதுப்பணி மிகவும் சவால் நிறைந்த பணி. எனவே தான மோசே கடினமான பாலைவன பயணத்தையும், எசேக்கியல் அடிமைத்தன வாழ்வையும், எலியா தம் உயிருக்கான ஆபத்தையும் (1அர 19:10), எரேமியா தம் உயிரையும் கொடுக்கும் நிலை நேர்ந்தது. மொத்தத்தில் தூதுப்பணி கடவுளின் மீட்புப் பணி. அந்த கடவுளின் மீட்புப் பணியை நிறைவேற்ற கடவுள் தம் அடியாருக்கு தமது திருவெளிப்பாட்டை கொடுக்கிறார் என்பதே உண்மை.

## *3. துன்புற்று மாட்சியுறுவதற்கான திருவெளிப்பாடு*

''. . . மானிட மகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்து விட்டது'' (யோவா 12:23)

யோவான் 12-ஆம் அதிகாரம் முதல் எட்டு வசனங்களில் பெத்தானியா சென்ற இயேசுவுக்கு மரியா என்ற பெண் இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத் தைலத்தை பூசுகிறார். அப்போது யூதாசு, இந்தத் தைலத்தை முந்நூறு தெனாறியத்துக்கு விற்று அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா? என்றார். உடனே இயேசு ''. . . என் அடக்க நாளை முன்னிட்டு அவர் இதைச் செய்யட்டும்'' (யோவா 12:7) என்றார். மரியாவின் இச்செயல் இயேசு இவ்வுலக மக்களுக்காக துன்புறப் போகிறார் என்பதன் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

யோவான் 12-ஆம் அதிகாரம் 12-19 வரையுள்ள வசனங்களில் இயேசு வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேமுக்குள் நுழையும் குருத்தோலைப் பவனிப் பற்றியச் செய்தி எழுதப்பட்டுள்ளது. இந்த நிகழ்வும் இயேசு இவ்வுலக மக்களுக்காகத் துன்புறப் போகிறார் என்பதன் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது.

யோவான் 12 ஆம் அதிகாரம் 20-26 வரையுள்ள வசனங்களில் பஸ்கா திருவிழாவுக்கு வந்த கிரேக்கர்கள் சிலர் பிலிப்புவிடம் ''நாங்கள் இயேசுவை காண விரும்புகிறோம்'' என்றனர். இச்செய்தியை அந்திரேயாவும், பிலிப்புவும் இயேசுவிடம் சொல்ல, அவர் ''மானிட மகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது'' என்றார். மானிட மகன் இயேசு தன்னை மானிட மகன் என்கிறார். மானிட மகன் என்ற இச்சொல்

தானியேல் நூலிலும் இடம் பெற்றுள்ளது (தானி 7:13). தானியேல் 7ஆம் அதிகாரத்தில் முதல் எட்டு வசனங்களும் அக்கால உலகின் வல்லரசு நாடுகளான அசீரியா, பபிலோனியா, மேதியா, பெர்சியா ஆகியன மக்களைத் துன்புறுத்திய செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வல்லரசு நாடுகள் மக்களைத் துன்புறுத்தி, அவர்களுக்கு எண்ணில்லாத தொல்லைகளைக் கொடுத்தன. மக்களை ஈவு இரக்கமின்றி கொன்று குவித்தன, கொடுமை நிறைந்த இந்நாடுகளை குறித்த அரக்கக் குணம் படைத்த இவற்றின் சின்னங்களும் கொடிய உயிரினங்களே. கழுகுகளின் இறகுடையச் சிங்கமும், தம் பற்களின் ஊடே மூன்று விலா எலும்புகளை கொண்ட கரடியும், நான்கு சிறகுகளையும், நான்கு தலைகளையும் உடைய புலியும், இரும்புப் பற்களையும் பத்து தலைகளையும் கொண்ட கொடிய விலங்கு ஒன்றும், இந்த நான்கு வல்லரசுகளின் சின்னங்களாய் இருந்தன. ஆனால் தானியேல் நூல் உலகில் இன்னொரு அரசு எழும்பப் போவதாகவும், அதன் அதிகாரம் மென்மையானதாகவும், மனிதத்தன்மைக் கொண்டதாகவும் இருக்கும் என காட்டுகிறது. ஆகவே இஸ்ரயேலருக்கு புதியதோர் அரசை விரைவில் கடவுள் தொடங்குவார் எனவும் அந்த அரசுக்கு கடவுள் தம் பிரதிநிதியாக “மானிட மகனை” அனுப்புவார் எனவும் எண்ணினர். இங்கே மானிட மகன் மகிமை பெறும் நேரம் எது வெனில் இயேசு இவ்வுலக மக்களுக்காக துன்புறுவதையே குறிக்கிறது. கோதுமை மண்ணிலிருந்து உயிர் தோன்றுவது எப்போது? அது மடியும் போது; அது மண்ணில் விழுந்து அழியும் போது. அது போலவே தம் அழிவின் மூலம் தான், சாவின் மூலம் தான் புது வாழ்வும் மாட்சியும் இவ்வுலகிற்கு வர போகிறது என்பதையே இயேசு வலியுறுத்தியுள்ளார். மொத்தத்தில் இயேசு துன்புறுவதால் தான் இவ்வுலகிற்கு மீட்பு கிடைக்கும் என்பதன் வெளிப்பாடே மானிட மகன் என்பது.

நாமும் இயேசு கிறிஸ்துவைப் போல துயரங்களில், தூதுப் பணிகளில் துன்புறுதல்களில் கடவுளின் திருவெளிப்பாட்டை பெற்று மீட்புப்பணி செய்ய தூய ஆவியார் துணைபுரிவாராக!

அருள்திரு. J. **நேச பிரின்ஸ்**

# வார இறைவேண்டல் - 2022

கருப்பொருள்

**கிழக்கில் அந்த நட்சத்திரத்தைக் கண்டு**
**அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்** (மத் 2:2)

**(We saw the star in the east, and we came to worship Him)**

## எம்மை எழுப்பி முழுநிறை ஒளிக்கு எம்மைக் கொணர்வீராக

**RAISE US UP AND DRAW US TO YOUR PERFECT LIGHT**

செக் 4:1-7 2திமொ 1:7-10
திபா 139:1-10 யோவா 16:7-14

**" இதோ முழுவதும் பொன்னாலான விளக்குத்தண்டு ஒன்றைக் காண்கிறேன். . ."**
(செக் 4:2)

நிலையற்ற, அழிந்து போகின்ற, உலகில் நம்பிக்கையற்ற நிலையில் வாழும் நாம் தூரத்தில் இருந்து நம்பிக்கையின் ஓர் ஒளி வீசுமா என எதிர்நோக்குவதுண்டு. தீமைகள் நிறைந்த சூழலில் நன்மையை நாம் எதிர்பாக்கிறோம். நாம் நமது நம்பிக்கையை நாம் வழிபடும் கடவுளில் பதிக்க வேண்டும். நம் வாழ்வுச் சூழலில் இறைவனுடைய தலையீடு பிறர்நலன் நாடும் மனிதர்கள் வழியாகவும், இறைவனே ஒளியாக வெளிப்படும் நிலையிலும் இருக்கும் என்பதை உணர வேண்டும். மனித வாழ்வில் இருள் நிறைந்த சூழலில் கிழக்கிலிருந்து ஒரு விண்மீன் தோன்றியது இருளை ஊடுருவிச் செல்லும் ஒளியாக வெளிப்படும் இறைவனை அடையாளப்படுத்தியது. இவ்வொளியைக் கண்டு, எழுந்து அவ்வொளி காட்டும் வாழ்வைத் தொடர இறைவன் தரும் வழிமுறைகளைத் தியானிப்போம்.

### *1. இறையாவியால் ஆற்றல் பெறுவோம்:*

தடைகளும், தடங்கலும் நிறைந்த வாழ்வில் முன்னேறிச் செல்ல வழி காட்டும் இறைவன் நமக்குத் தரும் அறைகூவல் ". . . உனது ஆற்றலாலும் அல்ல, வலிமையாலும் அல்ல, ஆனால், எனது ஆவியாலே ஆகும். . ." (செக் 4:7). மெசியாவின் வருகையை எதிர்நோக்கிய சூழலில், செக்கரியா தீர்க்கர் வாழ்ந்த காலத்தில் எருசலேம் ஆலயம் மீண்டும் கட்டியெழுப்பப்படுமா? என்ற கேள்விக்கு விடையாக ஆண்டவர் காட்சி வாயிலாகக் கூறும் செய்தி செருபாபேலின் தலைமையில் துவங்கப்பட்ட கோவில் பணி விரைவில் முடிவுறும், ஆண்டவரின் ஆற்றல் இப்பணியை நிறைவு செய்யும், எல்லா தடைகளும் தகரும் என்ற வாக்குறுதி தரப்படுகின்றது.

நாம் வாழும் காலச் சூழல்களில் பெருந்தொற்று ஏற்படுத்திய தாக்கம் பெரும் மலை போன்ற தடைகள் நிறைந்த அனுபவங்கள். நம் சுய ஆற்றலை நம்பிப் பயணித்தால் அமிழ்ந்து போய்விடுவோம். சுய ஆற்றலை நம்பி பயணித்த நெபுகத்னேசர் 'நான் கட்டியெழுப்பியதன்றோ இந்த மாபெரும் பாபிலோன்' (தானி 4:30) என்று பெருமை கொண்டவர் இறை கரத்தினின்று தண்டனை பெற்றார். சுய ஆற்றலை நம்பிய பேதுரு கடலில் அமிழ்ந்து போகும் நிலையைப் பெற்றார்.

சுய ஆற்றலை ஏன் நம்புகிறோமென்றால் திறமை மீது அதிக நம்பிக்கை, இறையாற்றலை மறந்து விட்ட நிலை. மெய் ஒளியாம் இறைவனைச் சார்ந்து பயணித்தால் ஆற்றல் பெறுவோம்! மாற்றம் பெறுவோம்! ஆற்றல் இழந்து வலிமை குன்றிய இறைமக்களின் நிலையும், திருச்சபையின் வாழ்வும் மறு கட்டமைப்பு செய்யப்படும்.

### *2. இறை ஒளியால் பூரணமாவோம்:*

ஒளியின்றி உலகில் யாரும் வாழ இயலாது, ஒளியின்றி உயிரினங்கள், மரம், செடி ஒன்றும் வளர இயலாது. ஒளியை சூரியன் மூலம் பெற்று வாழ்கிறோம். ஒளி சரியான பாதையில் பயணிக்க வழி காட்டுகின்றது. இருளை அகற்றி ஒளியைப் படைத்தவர் (தொநூ 1:13) இருளின் பிடியினின்று விலகி ஒளியின் பாதையில் பயணிக்க அழைக்கின்றார். ஒளியின் வெளிச்சங்கள் திருமறையில் பல நிலைகளில் வெளிப்படுத்தப்படுகின்றது. இறை வார்த்தையாம் ஒளி நம்மை வாழ்விக்கின்றது, கலங்கரை விளக்காக வழி காட்டுகின்றது. மெய் ஒளியாம் நமதாண்டவர் இயேசு உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் (லூக் 1:78.79), உலகிற்கு ஒளி (யோவா 8:12. 9:5), காரிருளில் பேரொளி (எசா 9:2).

இருளின் பிடியிலிருப்போர் தீமை, தண்டனை, அழிவு, அறியாமை, பாவம் ஆகியவற்றிற்கு அடையாளமாக உள்ளனர். இருளை நேசிப்பவர்கள் ஒளியை விரும்பி ஏற்கவில்லை ஆனால் இறை ஒளியில் பயணிக்க விரும்புபவரை அவர் பூரணராக்குகின்றார்.

ஆண்டவர் இயேசுவின் பிறப்பில் விண்மீனின் ஒளி ஞானியர்க்கு வழிகாட்டியது, வயல்வெளியில் இடையர் முன் தோன்றிய ஒளி அவர்கள் அச்சத்தை அகற்றி அவர்களை நற்செய்தியின் தூதுவர்களாக மாற்றியது. அந்த ஒளி நம்மை உயிர்ப்பிக்கின்றது, விழிப்படையச் செய்கின்றது

(யோவா 1:4 -5,9). அந்த ஒளியின் வழியில் நாம் பயணித்தால் பூரண வாழ்வைப் பெறுவோம்!

விண்மீனின் ஒளியைக் கண்ட ஞானியர் தம் அறிவால் அரண்மனை நோக்கிப் பயணித்தனர். இது உலக ஞானத்தின் வெளிப்பாடு, இதனால் பல மழலைகளின் உயிர்களும் பறிக்கப்பட்டன. இறைஞானத்தைச் சார்ந்து பயணித்தபோது புதிய பாதை கண்டனர்.

இறை ஒளியில் பயணித்தால் உண்மை புலப்படும், விடுதலை வாழ்வைப் பெறுவோம். மாட்சி பொருந்திய நற்செய்தி ஒளியைக் காண முடியாதபடி அறிவுக் கண்களை பல தீமைகள் குருடாக்கிவிட்டன (2 கொரி 4:4). நாம் இறை ஒளியில் பயணிக்க தீமைகளைக் களைவோம், இறை ஒளியில் பூரணராவோம்.

அருள்திரு. **C. கில்டன் தயானந்த்**

# தாழ்மையான தலைமைத்துவம் சுவர்களைத் தகர்த்து அன்பினால் கட்டுகிறது

## HUMBLE LEADERSHIP BREAKS DOWN WALLS AND BUILDS UP WITH LOVE

எரே 23:1-6 பிலி 2:5-11
திபா 46 மத் 20:20-28

**"உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும்"** (மத் 20:27).

எந்தத் தலைவனும் பிறப்பால் தலைவன் அல்ல, மாறாக வாழ்வில் பெறும் அனுபவங்கள் வழியாக அவன் வளர்த்துக்கொள்ளும் தலைமைத்துவப் பண்புகள் அவனைத் தலைவனாக உருவாக்கம் செய்கிறது. ஆணவமும், அகந்தையும் தலைமைத்துவத்திற்கு எதிரானது. திருமறை தாழ்மையான தலைமைத்துவத்தையே கற்றுத்தருகிறது. இயேசு கிறிஸ்துவும் முதன்மையை விரும்பியவர்களுக்கு, "உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும்" என்று கூறினார் (மத் 20:27). இது தாழ்மையான தலைமைத்துவத்தின் இன்றியமையாமையை உணர்த்துகிறது. அத்தகைய தாழ்மையான தலைமைத்துவத்தின் பண்புகளைத் தியானிப்போம்.

### *1. பெருமை எனும் சுவர்களை உடைப்போம்*

தலைமைத்துவத்திற்கு முற்றிலும் எதிரானது வீண் பெருமை. பணிவு நம் வாழ்வில் அலங்கரிக்க இடம் தராத போது பெருமை, சுயநலம், ஆணவம், அகந்தை, இறுமாப்பு, பிறர் நலன் பேணாமை, தன்னைப்பற்றி அதிக அக்கறை கொள்ளுதல் ஆகிய சுவர்கள் ஓங்கி வளர்ந்து நிற்கும். இத்தகைய சுவர்கள் வளர்ந்து நின்ற மனநிலையின் வெளிப்பாடாக, மக்கள் மேய்ப்பர்களின்றிச் சிதறடிக்கப்பட்டார்கள், துரத்தியடிக்கப்பட்டார்கள், பராமரிப்பின்றிக் கைவிடப்பட்டார்கள் (எரே 23:2). பிலிப்பிச் சபையில் கட்சி மனப்பான்மை, வீண் பெருமை, தன்னைச் சார்ந்தவற்றில் மிதமிஞ்சிய அக்கறை கொள்கிற நிலையால் தாழ்மையின் பண்புகளின்றி கிறிஸ்துவின் மனநிலையை விட்டு விலகினர். கட்சி மனப்பான்மையாகிய சுவர் (பிலி 2:3) பெருகிய போது பிலிப்பிச் சபையில் கொரிந்துச் சபையைப் போன்று சிலர் பேதுருவுக்கும், சிலர் அப்பல்லோவிற்கும், சிலர் பவுலுக்கும், சிலர் கிறிஸ்துவுக்கும் ஆதரவாளர்கள் என்ற பிரிவினை சுவர்கள் வளர்ந்தன.

வீண் பெருமையாகிய சுவர் (பிலி 2:3) வளரும் போது தன் பெயர், குலப் பெயர், ஊர் பெயர், கல்வி, பணம் ஆகியவை முன்னிலை பெறும். பாபேல் கோபுர நிகழ்விலும் வீண் பெருமையாகிய சுவரை நிலை நாட்ட முயற்சித்தனர். விளைவு சிதறடிக்கப்பட்டனர். அசீரிய அரசன் தன் படை பலம், ஆள் பலம், தன் அறிவு சார்ந்து பெருமை கொள்கிறான். ‘என் கைவலிமையாலே. . . என் ஞானத்தாலும், அறிவுக் கூர்மையாலும் திட்டங்கள் தீட்டினேன். . .’ (எசா 10:13). இதனால் இறைத்தண்டனையைப் பெறுகின்றார். தாழ்மைக்கெதிரான மனநிலைகளான கட்சி மனப்பான்மை, வீண் பெருமை, சுயநலம் சார்ந்த சுவர்களைத் தகர்த்து, தடைகளைத் தாண்டி, கிறிஸ்துவின் மனநிலையை கைக்கொண்டு (பிலி 2:5), நல்ல தலைமைப் பண்புகளை நம்மில் வளர்ப்போம்.

## *2. தாழ்மையை அணிவோம்*

தாழ்மை இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கும் ஒரு நற்பண்பு. இவ்வுலகம் மனத் தாழ்மையும் பணிவும் உள்ளவர்களை வலுவிழந்தவர்களாகவும், கோழைகளாகவும் சித்திரிக்கின்றது. தாழ்மை என்பதைப் பலமுள்ள பண்பாகவே திருமறை குறிப்பிடுகின்றது. தாழ்மையை அணிந்தவர்கள் தங்களைக் குறித்து மிதமிஞ்சி எண்ணாமல் நியாயமாகவே எண்ணுகிறார்கள், அடக்கமாக வாழ்கிறார்கள் (1பேது 5:6). அதுமட்டுமல்ல, மற்றவர்களிடம் நல்ல குணங்களைக் கவனித்து, அதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறார்கள் (பிலி 2:3). எனவே, இப்படிப்பட்டவர்களிடம் பொறாமை உணர்வு எழுவதில்லை (கலா 5:26). இயேசு கிறிஸ்து தாழ்மையின் சிகரமாக விளங்கினார். தூய பவுலார் இந்த மனத்தாழ்மையின் பண்பைப் பிலிப்பி திருச்சபைக்கு முன் மாதிரியாக்குகிறார். கனிவும், மனத் தாழ்மையும் வெளிப்படுத்தும் ஆண்டவர், அத்தகைய மனநிலை நம்மில் பெருக விரும்புகிறார். அவர் தம்மை வெறுமையாக்கினார் என்பது தம்மை ஒன்றுமில்லாமலாக்கினார் என்பதல்ல, மாறாக அவர் தம் விருப்பத்தை வெறுமையாக்கி, தம்மைக் கடவுளின் திருவிருப்பத்திற்கு ஏற்ப மாற்றினார். அவர் தம்மை வெறுமையாக்கி அடிமையின் வடிவமேற்றார். அடிமை என்பவர் எஜமானின் பணியாளனைவிடத் தாழ்ந்தவர். தலைவனுக்குப் பணிவிடை செய்வதுதான் அடிமையின் கடமை. இயேசு கிறிஸ்து ஒரு அடிமையின் தாழ்நிலைக்குத் தம்மைத் தாழ்த்தினார். கடவுளின் திருவிருப்பத்திற்குப் பணிவிடை செய்யும் பணியாளராகத் தம்மை மாற்றினார். பதவியை நாடித் தேடி வந்தவர்களுக்கு பாதங்களைக் கழுவி பணிவிடை செய்வதே பணியாளனின் கடமையென்று கற்றுக் கொடுத்தார். சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே

தாழ்த்தினார் (பிலி 2:8). கீழ்ப்படிதல் என்பது தாழ்மையின் வெளிப்படையான பண்பாகும். இது ஒருவர்மேல் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட கட்டுப்பாட்டிற்கு அடங்கி போகும் நிலை அல்ல, மாறாக ஒருவர் தன் முழுச் சுதந்திரத்தோடு, தாமாகப் பணிந்து, இறைவனின் திட்டத்தோடு இணைந்து கொள்வதாகும். இயேசு கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் என்பது அவரது இறப்பு வரை வெளிப்பட்டது. தம்மை தாழ்த்தி, இறைத்திட்டத்துக்குத் தம்மை விட்டுக் கொடுத்தார்.

கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி சுயத்தை வெறுமையாக்கி, இறைவிருப்பம் நிறைவேற்றும் பணியாளர்களாய், அவர் கரத்திற்கு அடங்கி நடப்போம்.

தாழ்மையின் பண்பை அணிவோம், தன்னைத் தாழ்த்துகிறவர் உயர்த்தப்படுவார் என்பதை நினைவில் பதிப்போம். செருக்குற்றோரை அவர் இகழ்ச்சியுடன் நோக்குவார்; தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார் (யாக் 4:6). மனத்தாழ்மை நல்லுறவையும், அமைதியும் தரும்.

பல அடுக்கு மாடிகளும், உயரமான கோபுரங்களும் இடியால் தாக்கப்படாமல் இருக்க இடிதாங்கியைப் பொருத்துவது போல, ஒவ்வொரு மனிதனும் பதவி, பணம், புகழ் இவைகளால் உயர்ந்தாலும் தாழ்மை, பணிவு, போன்ற இடிதாங்கிகளை இதயத்தில் நிரந்தரமாகப் பொருத்திக் கொள்ள வேண்டும். நான் கனிவும், மனத்தாழ்மையும் உடையவர் என்று தம்மையே முன்மாதிரியாகக் காட்டி (மத் 11:20), பதவி, பணம், பெருமை, சுயநலம், ஆணவம் போன்ற சுவர்களைக் களைந்து தாழ்மையின் பண்பை அணிந்து தலைமைத்துவத்துக்கு மிகத்தேவையான அன்பை அடிப்படையாகக் கொண்டு மக்களை வழிநடத்தி, புதிய சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்.

அருள்திரு. **C. கில்டன் தயானந்த்**

நாள் 3 வார இறைவேண்டல்

# கிறிஸ்துவின் எழுந்தருளல் உலகை தலைகீழாகப் புரட்டிப் போடுதல்

## THE PRESENCE OF CHRIST, TURNING THE WORLD UPSIDE DOWN

நெகே 4:18-21 2தெச 2:13-3:5
திபா 2:1-10 மத் 2:1-5

**" ஏரோது அரசன் கலங்கினான். அவனோடு எருசலேம் முழுவதும் கலங்கிற்று"**
(மத் 2:3)

கிறிஸ்துவின் பிறப்பு, இவ்வுலகில் பல மாற்றங்களையும், அதிர்வுகளையும் ஏற்படுத்தியது. இவ்வுலகின் தலைமைத்துவங்களுக்கு சவாலாக தாழ்மையின் கோலமேற்று, பிறந்து, மக்கள் வாழத் தடைகளாய் இருந்தவைகளை உடைத்து, அநீதிகளை அழித்தார். அதிகாரம் (Power), பதவி (Position), உடமைகள் (Possession) போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மனிதர்களுக்கு நடுவில் தம்மையே வெறுமையாக்கி மனுக்குலத்திற்கு முன் மாதிரியானார். கிறிஸ்துவின் பிறப்பு ஏரோது அரசனின் உள்ளத்தில் கலக்கத்தை ஏற்படுத்தியது. தன் பதவிக்கும், அதிகாரத்திற்கும் ஆபத்து வந்துவிட்டது என்று முழு எருசலேம் நகரத்தையும் கலங்கச் செய்துவிட்டான். அச்சுறுத்தல்கள் நிறைந்த உலகில் நீதி, நேர்மை வழியில் நடந்து அவர் காட்டிய பாதையில் பயணிக்க கிறிஸ்துவின் எழுந்தருளல் நமக்கு எவ்வாறு உதவி செய்கிறது என்பதைத் தியானிப்போம்.

### *1. அதிகாரங்களை அதிர வைத்த இயேசு:*

ஏரோது அரசன் கலங்கினான். . . (மத் 2:3)

அதிகாரங்களை வைத்து அடக்குமுறை செய்பவர்களும், அதிகாரங்களால் மக்களை அதிர வைப்பவர்களும் இவ்வுலகில் உண்டு. அதிகாரங்களால் வீழ்ந்து போனவர்களும், தொண்டு செய்து சாதனை படைத்தவர்களும் உண்டு. இயேசு, பாலனாக மண்ணில் பிறந்த போது, விவேகமுடைய, கற்றுத் தேர்ந்த ஞானியர் அவரைப் பணிந்தனர் (மத் 2:11). இவர்கள் அறிவுக்கூர்மை, நுண்மதி, திட்டமிடும் திறன் உள்ளவர்கள் என்பதில் ஐயமில்லை. இத்தகைய ஞானியர் விண்மீனைக் கண்டு வழிநடத்தல் பெற்றனர். ஆயினும் தங்கள் சுயபுத்தியை நம்பி அரண்மனையில் தேடினர். அநீதியான அதிகாரத்தை நோக்கி தொடுத்த,

‘யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே?’ என்ற அவர்களின் தேடல் கேள்வி அமைதியின் நகரமாகிய எருசலேம் கலங்கியது. ஏரோது அரசனின் உள்ளமும் கலங்கியது, இக்கலக்கத்தின் காரணம் போலியான அமைதியின் வாழ்வா? அல்லது பதவியைப் பறிக்க இன்னொருவர் பிறந்துவிட்டார் என்ற செய்தியா? இத்தகைய செய்திகளால் கலக்கமுற்றவர் தவறான உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றார். பதவியைத் தக்க வைப்பதற்கு எத்தகைய நிலைக்கும் அதிகார மோகம் கொண்டோர் செல்வர், எதையும் செய்யத் துணிவர். ஏரோது இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொலை செய்ய உத்தரவு பிறப்பித்தான்.

அவர் பிறப்பிலே சாதாரணமானவர்கள் அசாதாரன நிலைக்கு உயர்த்தப்பட்டனர். அசாதாரன நிலையில் வாழ்கிறோம் என்றவர்கள் சாதாரண நிலைக்குத் தள்ளப்பட்டனர். இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் மரணம் வரையிலும் அதிகார மையங்களில் இருப்பவர்கள் அவரைக் கண்டு அஞ்சினர். அவரை அரசராக்க, அதிகாரத்தை அளிக்க பலர் விருப்பம் கொண்டனர். ஆனால் இறை விருப்பம் நிறைவேற தம்மை அர்ப்பணித்தார். நாமும் பெயர், புகழ், பதவி போன்ற அதிகார மையங்களை நோக்கிப் பயணிக்காமல். நீதி, நேர்மையோடு பணிவிடை செய்வோம். அநீதியான அதிகாரங்களைக் கண்டு அஞ்சாமல் இயேசு காட்டிய பாதையில் பயணிப்போம்.

## ***2. அச்சுறுத்தல் நடுவிலும் அமைதியருளும் கிறிஸ்துவின் எழுந்தருளல்:*** (மத் 2:2)

நாம் வாழும் காலம் அச்சுறுத்தல்கள் பெருகி வரும் சூழல். பெருந்தொற்று நோயின் அவலங்களால் பெருகிய அச்சுறுத்தல்கள், வாழ்விழந்த தொழிலாளர்கள், வலுவிழந்த பொருளாதாரம், விலைவாசி உயர்வுகள், இயற்கைப் பேரிடர்கள், வன்முறைகளால் சிதையும் மானுடம். இத்தகைய நெருக்கடிகள் நடுவில் கிறிஸ்துவின் பிறப்பு நம்பிக்கை, அமைதியின் தூது, “மக்களைக் குணப்படுத்துவதற்காகவும், நல்லிணக்கம், ஒப்புரவு மற்றும் நம்பிக்கையைக் கொண்டு வருவதற்காகவும், கிறிஸ்து துன்பங்கள், நெருக்கடிகள் நிறைந்த உலகிற்கு வந்தார் என்கிறார் பேராயர் ஜஸ்டின் வில்பி. கிறிஸ்துவின் பிறப்பு நெருங்க வைக்கும் நெருக்கடிகள் நடுவில் நம்பிக்கையின் விடிவெள்ளியாய் நம்மிடம் வந்துள்ளது.

அச்சுறுத்தல்கள் நடுவிலும் நம்பிக்கையின் விதையை மக்களுக்குள் விதைத்தவர் நெகேமியா. நெகேமியா பாரசீகத் தலைநகரான சூசாவில் மன்னர் அர்த்தக்சஸ்தாவுக்குப் பணிவிடை செய்தார்.

இப்பணிவிடை நடுவிலும் எருசலேம் நகரின் மதிலைப் பல எதிர்ப்புகளுக்கிடையில் மனம் தளராது செய்தார். அச்சுறுத்தல்கள் நடுவிலும் இஸ்ரயேல் மக்களிடையே சமய சமூக மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். எருசலேம் மதிலை மறுகட்டுமானம் செய்யும் போது சன்பல்லாற்றும், தோபியா அவர் தோழர்களும் சதி செய்தனர். இத்தகைய அச்சுறுத்தல்கள் நடுவிலும் மனமும், உடலும் தளராதபடி மக்களைத் திடப்படுத்தி "எம் கடவுளே நாங்கள் ஏளனம் செய்யப்படுவதைப் பாரும்" (நெகே 4:4) என்று இறை நீதி வெளிப்பட வேண்டினார். ஒரு கையால் வேலையும், மறு கையால் ஆயுதம் ஏந்தினர். நெருக்கடிகள் நடுவிலும் அழைத்தவர் நம்மை நடத்துவார் என்று அமைதியருளும் இறை கரம் பற்றி செயலாற்றினர்.

இன்று, நீதியை சமுதாயத்தின் உண்மை நிலையாக மாற்றுவதற்கான செயல்பாடுகளுக்கு நம்மை ஒப்புக்கொடுக்க அழைக்கப்படுகிறோம். கடவுள் இயேசு கிறிஸ்து வழியாக இவ்வுலகில் நிறைவேற்றிய நீதி மற்றும் அமைதி சார்ந்த செயல்கள் நிறைவேற வேண்டும். கிறிஸ்துவின் எழுந்தருளல் சமுதாயத்தில் மறுமலர்ச்சியைத் தந்தது போல, சமுதாயத்திலிருக்கும் திருச்சபை சமுதாயத்திற்குப் புதுமை படைக்க அழைக்கப்பட்டிருக்கிறது.

அமைதியின் வேந்தராம் இறைவனின் கரம் பிடிப்போம், நெருக்கடிகளின் நடுவிலும் நற்செய்தியாகிய கிறிஸ்துவின் வழி நடப்போம்.

அருள்திரு. **C. கில்டன் தயானந்த்**

நாள் 4 வார இறைவேண்டல்

# சிறியதாயினும் துன்பமாயினும் நாங்கள் ஒன்றையும் இழப்பதில்லை

**THOUGH SMALL AND SUFFERING, WE LACK NOTHING**

மீக் 5:2-5a, 7-8 1பேது 2:21-25
திபா 23 லூக் 12:32-40

**" யூதா நாட்டுப் பெத்லகேமே, யூதாவின் ஆட்சி மையங்களில் நீ சிறியதே இல்லை; ஏனெனில், என் மக்களாகிய இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார்"** (மத் 2:5,6).

இத்திருமறைப்பகுதி மீக்கா இறைவாக்கினரால் உரைக்கப்பட்ட ஒரு பகுதி ஆகும். மீக்கா இறைவாக்கினர் யூதாவின் நாட்டுப்புற நகர் ஒன்றில் தோன்றியவர். இஸ்ரயேல் மக்கள் நேர்மையற்று, அநீதிக்குத் தலைவணங்கி, தீச்செயல்கள் பல புரிந்தனர். ஏழைகளை ஏமாற்றி, அனாதைகளை நசுக்கினர். இது போலவே யூதா மக்களும் வாழ்ந்து வந்தனர். இதனால் இஸ்ரயேல் மக்களுக்கு ஆமோஸ் முன்னறிவித்த தண்டனை யூதா மீதும் வரும் என்று மீக்கா முன்னறிவித்தார். அதே நேரத்தில் மீட்பு பற்றியும் முன்னறிவித்தார். பெத்லகேமே நீ சிறியதாயினும் துன்பமாயினும் ஒன்றையும் இழப்பதில்லை என்ற வாக்குக் கொடுக்கப்படுகிறது. புதிய ஆண்டில் நாம் தடம் பதித்துள்ளோம். இப்புதிய ஆண்டில் சிறியதாயினும் துன்பமாயினும் ஒன்றையும் இழப்பதில்லை என்று கடவுள் நமக்கு கற்றுத் தருகிறார்.

***1. சிறியதாயினும் ஆட்சியில் அமரும் பேறுபெறுதல்:*** (மீக் 5:2)

பெத்லகேம் யூதாவிலுள்ள சிறிய பட்டணம். பெத்லகம் அனைவராலும் வெறுக்கப்பட்ட பட்டணம். எனினும் கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்ற முதுமொழிக்கேற்ப ஆட்சியில் அமருகின்ற பேறு பெத்லகேமுக்குக் கிடைத்தது. ஆண்டவரின் சார்பில் அரியணையில் அமருகின்ற பாக்கியம் பெத்லகேமுக்குக் கிடைக்கும் என்று மீக்கா முன்னறிவித்தார். அது இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியது.

தாவீது அற்பமாக எண்ணப்பட்டவர். அவரது தந்தை, சகோதரர்கள் கூட அவரை சிறியவன் என்று எண்ணினர். தாவீது கோலியாத்தை வீழ்த்தப் பயன்படுத்தியதும் சிறிய கல் (1சாமு 17:40-50). ஆனால் சிறியதாயினும் ஆண்டவர் பயன்படுத்தும்போது உயர்வே.

கிதியோன் தன்னை மிகவும் சிறியவரென்று எண்ணினார். கடவுளின் கரத்தில் ஒப்புக்கொடுத்தபோது பானைகளை எடுத்து உடைத்தார். சிறிய பானை உடையும் சத்தம் கேட்டு, எதிரிகளாகிய மீதியானியர்கள் புறமுதுகு காட்டி ஓடினார்கள் (நீத 7:15-21). சிறுவன் ஐந்து அப்பம், இரண்டு மீன் பகிர்ந்தான். அந்தச் சிறியதை ஆண்டவர் பெரிதாக மாற்றினார் (யோவா 6:1-11).

இன்று பல்வேறு நிலைகளில் நாம் சிறியவர்களாக மாற்றப்பட்டாலும் கடவுள் சிறிய பெத்லகேமைப் பேறுபெற்றதாக மாற்றியதுபோல நம்மையும் ஒன்றிலும் குறைவு இல்லாமல் பேறு பெற்றவர்களாக மாற்ற நம்மை கடவுளின் கரத்தில் ஒப்புக்கொடுப்போம்.

***2. துன்புற்றாலும் கிறிஸ்துவுக்குச் சொந்தமாகுதல்:*** (1பேது 2:21)

துன்பம் வாழ்வில் நம்மை மெருகூட்டுகிறது. திருப்பாடலாசிரியர் சொல்லும்போது எனக்குத் துன்பம் விளைந்தது ஏன்? நன்மைக்காகவே; அதனால் உம் விதிமுறைகளை நான் கற்றுக்கொண்டேன் (திபா 119:71) எனக் குறிப்பிடுகிறார்.

தூய பேதுரு குறிப்பிடும்போது நன்மை செய்தும் துன்புறுவது கிறிஸ்துவுக்கு நம்மைச் சொந்தமாக்குகிறது. ஏனென்றால் இயேசு கிறிஸ்து நமக்காகத் துன்புற்று சிலுவையை ஏற்று நல்ல முன்மாதிரியினை விட்டுச் சென்றுள்ளார். அந்த அடிச்சுவடுகளைப் பின்பற்றி வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம் (1பேது 2:21) என்றார்.

புனித பவுலார் கிறிஸ்துவுக்காக துன்பப்படத் தன்னை ஆயத்தப்படுத்தினார். எனவே கல்லெறி, சாட்டையடி, சிறை, போன்றவற்றைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு (2கொரி 4:8-10) ஆண்டவர் இயேசுவை உயிர்த்தெழச் செய்த கடவுள் நம்மையும் அவரோடு உயிர்த்தெழச் செய்து அவர் திருமுன் நிறுத்துவார் என்ற நம்பிக்கையில் உறுதியாயிருந்தார் (2கொரி 4:14).

இயேசு கிறிஸ்து சீடர்களுக்குச் சொல்லும்போது, அதிகாரத்தில் இருப்பவர்கள் உங்களைப் பிடித்து துன்புறுத்துவார்கள், சிறையிலடைப்பார்கள். இழுத்துச் செல்லப்படுவீர்கள் என்றும், என் பெயரின் பொருட்டு எல்லாராலும் வெறுக்கப்படுவீர்கள். இருந்தாலும் உங்கள் தலைமுடி ஒன்றும் கீழே விழாது மன உறுதியோடிருங்கள் (லூக் 21:12-19) என்று நம்பிக்கையூட்டுகிறார்.

இப்புதிய ஆண்டிலும் நாம் சிறியவர்களாயினும், நம்மில் இருப்பவை சிறியவையாயினும் துன்பம் அனுபவித்தாலும் கடவுள் பெரிய காரியங்களை நம் வழியாகச் செய்வார் என்ற மனத் தெளிவோடு முன்னேறுவோம்.

அருள்திரு. R. **டேவிட் ஜெபசிங்**

நாள் 5 வார இறைவேண்டல்

# ஒரே ஆண்டவரால் வழிநடத்தப்பெறுதல்

**GUIDED BY THE ONE LORD**

விப 13:17-14:4 திவெ 22:5-9
திபா 121 மத் 2:7-10

**“ஆண்டவர், பகலில் அவர்களை வழிநடத்த மேகத்தூணிலும், இரவில் ஒளிகாட்ட நெருப்புத் தூணிலும் இருந்தார். பகலிலும் இரவிலும் அவர்கள் பயணம் செய்வதற்காக அவர் அவர்கள் முன் சென்று கொண்டிருந்தார் ”** (விப 13:21).

ஆறு இலட்சத்திற்கும் மேலான இஸ்ரயேலர் நாற்பது ஆண்டுகளாக எகிப்திலிருந்து கானானுக்குப் பயணித்தனர். அந்தப் பயணத்தின் தொடக்கத்தைப் பற்றியும், தொடரும் கடவுளின் வழிநடத்துதலைக் குறித்தும் விப 13ஆம் அதிகாரத்தின் வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது. கடவுள் நமக்கென்று நியமித்திருக்கின்றவைகளைக் கண்டு கொள்வதற்கும் சென்றடைவதற்கும் அவர் காட்டும் வழியில் நடப்பது இன்றியமையாதது என்பதை இஸ்ரயேலரின் கானான் நோக்கிய பயணம் நமக்கு மிகச் சிறந்த கற்பிதமாய் இருக்கின்றது. கடவுள் தலைமுறைதோறும் தம் மக்களை நடத்துகிறார் (விப 4:5) என்பதை ஒரே ‘ஆண்டவரால் வழிநடத்தப் பெறுதல்’ என்னும் கருப்பொருள் விளக்கிக் கூறுகிறது. புதிய ஆண்டில் கடவுள் எவ்வாறு நம்மை நடத்துகிறார் என்பதைத் திருமறையின் வாயிலாகத் தியானிப்போமாக.

## *1. வழியில் நம்முடன் நடக்கும் ஆண்டவர்*:

இஸ்ரயேலரின் கானான் நோக்கிய பயணத்தில், பெலிஸ்தியர் நாட்டின் வழியாக மக்களை நடத்திச் செல்வது என்பது மிகவும் குறுகிய வழி; சீக்கிரமாகச் சென்றடையக்கூடிய பாதையாகும் (விப 13:17-18). குறுகிய வழி, அதுவும் விரைவாகச் சென்றடையக் கூடிய வழி சாத்தியமாக இருக்கும்போது, ஏன் கடவுள் நெடுந்தொலைவான ஒரு வழியைத் தேர்ந்து கொண்டார்? ஆடவர் ஆறு இலட்சம் பேர், அவர்களோடு பெண்கள், குழந்தைகள், பல இனப்பெருந்திரள் மக்கள் மற்றும் பெருந்தொகையான கால்நடைகளும் இருந்தபோதிலும், ஏன் கடவுள் இத்தகையை வழியைத் தேர்ந்து கொண்டார்?

ஏனென்றால், கடவுள் நம் வாழ்வுக்குக் காட்டும் வழி என்பது அல்லது அருளும் விடுதலை என்பது இடப்பெயர்ப்பு மட்டும் அன்று; இருப்பிடத்தை மாற்றிக் கொள்வதை மட்டும் உள்ளடக்கியதும் அன்று; மாறாக, மாற்றுருவாக்கத்தையும், புதிய வாழ்க்கை முறையையும் உள்ளடக்கியதாகும்.

கடவுள் தம் மக்களை விடுவிக்கிறார். ஆனால் அதன் வாயிலாக விடுதலை வாழ்வில் நாம் நிலைத்திருப்பதற்கான வழிமுறைகளையும் கற்றுத் தருகிறார் (மத் 7:14). மனிதப் பார்வையில் அவ்வழிகளும் வழிமுறைகளும் தொலைவானவையாகவும், கடினமானவைகளாகவும் இருக்கலாம். ஆனால் அத்தகைய வழிகளில் கடவுள் நம்முடன் இருப்பதுவே உன்னதம். பாலைநிலப் பயணம் முழுவதும் கடவுள் இஸ்ரயேலருடன் நடந்தார். தடுமாறும்போது அவர்களைத் தாங்கினார். வழிதவறும்போது கடிந்து கொண்டார். பாதை பாடுள்ளதாக இருந்தாலும், கடவுள் உடன் இருப்பது ஆசீர்வாதம்.

விப 13:19இல், யோசேப்பின் எலும்புகளை மோசே தம்மோடு எடுத்துச் சென்றது, அவை புனிதமானவை என்பதாலா? அல்லது அவை வழிபாட்டுக்குரியவை என்பதாலா? ஒருபோதும் இல்லை. யோசேப்பின் எலும்புகள், கடவுள் நம்பிக்கைக்குரியவர், பராமரிப்பவர் எனச் சான்று பகிர்கின்றன. கடவுள் தம் மக்களை வாழ்வில், அவர்களது வழியில் அவர்களைச் சந்திக்கிறார், சிறையில், குழியில், பஞ்சத்தில் அவர்களைக் காக்கிறார் என்பதற்கு அவை அடையாளமாய் உள்ளன. எனவே, யோசேப்பின் வாழ்வில் எவ்வாறு கடவுள் அவரோடு வழி நடந்தார் என்பது குறித்த நினைவுகளைத் தங்களோடு சுமந்து செல்வதற்கும், தொடர்ந்து கடவுள் தங்களோடு வழிநடக்க வேண்டும் என்ற தங்கள் வாஞ்சைக்கும் அடையாளமாக யோசேப்பின் எலும்புகளை எடுத்துக் கொண்டனர்.

விப 13:21இல், இஸ்ரயேலரின் பாலைநிலப் பயணத்தில், அவர்கள் பகலில் மிகுந்த வெப்பத்தினாலும், இரவில் இருளினாலும், குளிரினாலும் கடினங்களைச் சந்தித்தனர். எனவே, சுட்டெரிக்கும் சூரிய வெப்பத்திலிருந்து இஸ்ரயேல் மக்களைக் காக்க பகலில் மேகத்தூணிலும் (மேகஸ்தம்பம்), இரவில் வெளிச்சமும் வெப்பமும் தருவதற்கு நெருப்புத்தூணிலும் (அக்கினிஸ்தம்பம்) கடவுள் இருந்தார்(விப 13:21). மேகமும் நெருப்பும் படைப்புகளின் வழியாகக் கடவுளின் தனித்துவமான இடைபடுதலைக் குறிக்கின்றன. கடவுள், வழியில் தம் மக்களுடன் நடக்கிறார், முன் செல்கிறார், பின்னே காக்கிறவராய் வருகிறார் என்பதற்கு அடையாளமாய் உள்ளன. வாழ்க்கைப் பயணத்தின் வழியில் நம்முடன் நடக்கும் ஆண்டவரது கரத்தைப் பற்றிக் கொள்வோம்.

## 2. வழியில் நம்மை நடத்தும் ஆண்டவர்:

கிறிஸ்து பிறந்தபோது, விண்மீன் வாயிலாக அவரது பிறப்பை அறிந்துகொண்ட ஞானிகள், அவரை வணங்க வந்தனர். அதற்கான அவர்களது வழி உலகப் போக்கிலான சிந்தனையைக் கொண்டதாயும், தெரிந்தெடுப்பாயும் இருந்தது. எனவேதான், விண்ணக மேன்மைகளைத் துறந்து, மண்ணகத்தில் மனிதராக வந்தவரை வணங்க, விண்மீன் வழிகாட்டிய போதும், அவ்வழியைத் தவறவிட்டுவிட்டு, அரண்மனை சென்றனர் ஞானிகள்.

விண்மீன் வாயிலாக இறைநடத்துதலைப் பெற்றும், அதைப் பின்தொடராததால், தவறான வழியைத் தேர்ந்து கொண்டதால் பேரிழப்புக்குக் காரணமாயினர் (மத் 2:16). தவறான வழி, துன்பத்திற்கும் துயரத்திற்கும் காரணமாயிற்று. ஆனால், கடவுள் காட்டிய வழியில் நடப்பது, அவரால் வழிநடத்தப்பெறுவது மட்டில்லா மகிழ்ச்சிக்கு ஏதுவாகும்; மீட்பரைக் கண்டு வணங்க வழிவகுக்கும் (மத் 2:10,11).

நாம் அனைவரும் முற்போக்காக இருப்பதை, செயல்படுவதை விரும்புகிறோம். முற்போக்கு என்பது நாம் தவறான வழியில் சென்று கொண்டிருந்தால், அதை விட்டுவிட்டுச் சரியான பாதைக்குத் திரும்புவதாகும். அவ்வாறு சீக்கிரம் திரும்பிச் செல்லும் மனிதரே முற்போக்கானவர் (We all want progress, but if you’re on the wrong road, progress means doing an about-turn and walking back to the right road; in that case, the man who turns back soonest is the most progressive) என்கிறார் பேராயர் ஃபுல்டன் ஷீன் (Fulton Sheen).

நாம் விரும்பும் வழியில் கடவுள் நம்மை நடத்துவதற்கன்று; அவர் காட்டும் வழியில் நடப்பதற்கு நம்மை ஒப்படைக்க வேண்டும். அதுவே வாழ்வை, மீட்பைக் கண்டடைவதற்கான வழி.

கொள்ளைநோய், இயற்கைப் பேரிடர், பொருளாதார நெருக்கடிகள், போன்ற சவால்களோடு புதிய ஆண்டில் நுழைந்துள்ளோம். கடவுள் நமக்கு வகுத்து வைத்திருக்கும் வழியில் பயணிக்கவும், நம்முடன் அவர் நடக்கவும் நமது வாழ்வை ஒப்படைப்போம். கிறிஸ்துவே நமக்கு வழியாகவும் நம்மை வழிநடத்துபவராகவும் திகழ்வாராக!

திரு. B. **சாம் ஜெபசிங்**

## ஒரே ஆண்டவரைச் சுற்றி வழிபாட்டில் கூடிவருதல்
### GATHERED IN WORSHIP AROUND THE ONE LORD

| | |
|---|---|
| விப 3:1-6 | திவெ 4:8-11 |
| திபா 84 | மத் 28:16-20 |

**“...நெடுஞ்சாண் கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள்”** (மத் 2:11b).

வழிபாடு வாழ்வோடு இணைந்தது. வழிபாடு என்ற வார்த்தை இறையவரோடு உறவுகொள்ள வழி செய்கின்றது. இறைவழிபாட்டில் ஒரே ஆண்டவர் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. இஸ்ரயேல் மக்களின் வழிபாட்டில் தங்களோடு இணைந்து வாழ்ந்த மக்களின் வழிபாட்டு முறை பெருந்தாக்கத்தைக் கொடுத்தது. ஆனால் இஸ்ரயேல் மக்களின் வழிபாட்டில் புதுப்பிக்கப்பட்டு உடன்படிக்கை சிறப்புமிக்கதாக அமைந்தது அதன் முக்கியத்துவத்தினை இஸ்ரயேலரின் தொடர் வழிபாட்டில் காணமுடியும். இதன் விளைவு என்பது வழிபாட்டில் முதன்மைப்படுத்தப்பட்ட ஒரே ஆண்டவர் என்ற நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை இன்னும் வழிபாட்டில் முதன்மைப்படுத்தப்படுகிறது.

### *1. வழிபாட்டில் இறைவெளிப்பாடு:*

வழிபாட்டில் ஆண்டவர் தம்மை வழிபடும் மக்களுக்கு வெளிபடுத்துகின்றார். காணக்கூடாத இறைவனை தம் கண்முன் காண்கின்ற அனுபவசூம வழிபாடு. எகிப்தில் அடிமைகளாயிருந்த இஸ்ரயேல் மக்களின் அழுகுரலைக் கேட்ட ஆண்டவர், எரிகின்ற முட்செடி காட்சியின் வழியாக மோசேக்கு தன்னை வெளிப்படுத்தினார். ஆனால் மோசே கடவுளை உற்று நோக்க அஞ்சியதால் தம் முகத்தை மூடிக்கொண்டார் (விப 3:1-6). இறைவனைக் மானிடக் கண்களால் பார்க்க இயலாது என்ற நம்பிக்கையோடிருந்த சூழலில் மோசேக்கு தன்னை வெளிப்படுத்தினார். கடவுள் தூயவர் என்பதையும், இருக்கின்றவராக இருக்கின்றவர் என்பதையும், மோசேக்கு தெரிவுபடுத்தினார். ஏசாயா இறைவாக்கினர் ஆலயத்தில் கண்ட திருக்காட்சி இறைவெளிப்பாட்டின் அடையாளமாகவே அமைந்திருக்கின்றது. (எசா 6:1-5) ஆண்டவரைப்பார்த்த எவரும் உயிரோடிருக்க முடியாது (விப 33:20) என்று நம்பிக்கையிருந்த சூழலில் இறைவனின் திருவெளிப்பாடு உண்மையான ஒரே ஆண்டவரை வழிபடத் தூண்டுகின்றதாகவே அமைகின்றது.

## *2. வழிபாடு ஒரே ஆண்டவரை வழிபடத் தூண்டுகிறது:*

யோவானின் திருக்காட்சிகளில் முக்கிய பங்கு வகிப்பது விண்ணுலக வழிபாட்டுக் காட்சி. அரியணையைச் சுற்றிலுமிருந்த நான்கு உயிர்கள் தூயவர், தூயவர், தூயவர், எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவர் இருந்தவரும், இருக்கின்றவரும், வறவிருக்கின்றவரும் இவரே என்று இடையராது பாடிக்கொண்டிருந்தன. (திவெ 4:8) கடவுளின் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும் 24 மூப்பர்கள் இப்பாடலால் எழுச்சியுற்று அரியணையில் வீற்றிருந்தவர் முன் விழுந்து என்றென்றும் வாழ்கின்ற அவரை வணங்கினார்கள். (திவெ 4:10) உண்மையான ஆண்டவரை அடையாளம் கண்டு வழிபடத் தூண்டும் நிகழ்வாகவே அமைகிறது. மத்தேயு 28:16-20 இல் உயிர்த்த ஆண்டவரை கலிலேயாவிலுள்ள மலையில் கண்டார்கள். கண்டவர்கள் அங்கே அவரைப் பணிந்து கொண்டார்கள். மத்தேயு 2:1-11 இல் இயேசு பிறந்த செய்தியை விண்மீன் வழியாக அடையாளம் கண்ட ஞாணிகள் எருசலேமுக்கு வந்து ஏரோதின் அரண்மனைக்குச் சென்று அவரை வணங்க வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் தங்கள் பயணத்தை தொடர்ந்து இயேசுவாகிய குழந்தையைக் கண்டு நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள். (மத் 2:11). இறையவரின் திருக்காட்சி நம்மையும் வழிபடத்தூண்டுகின்றதாகவும் அமைகிறது.

இன்றைய நம் திருச்சபை தொழுகைகள் ஒரே ஆண்டவரை தொழுதுகொள்ள தூண்டுகின்றனவா? என்ற கேள்வி கேட்கபட வேண்டிய ஒன்றே. இறை பிரசன்னத்தை உணருவதற்கு நம் கண்கள் பார்வையற்றவையாகவே அமைந்திருக்கிறது. நாம் இறையவரின் கிருபையை உணராமல் ஒடுங்கிய பார்வையுடையவர்களாயிருப்தே அதற்கு காரணம். கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்டெடுக்கப்பட்டு, அவரில் நம்பிக்கையுடைய சமூகமாக நம் திருச்சபை வழிபாடுகள் அமைய வேண்டும். மேலும் திருச்சபையின் வழிபாடுகள் கிறிஸ்துவாகிய குழந்தைக்கு நேராக மக்களை வழிநடத்திச் செல்லுவதாக அமைதல் சிறப்பானது.

அருள்திரு. **ரமேஷ். D. தாஸ்**

# கூட்டுறவின் அருள்கொடைகள்

## THE GIFTS OF COMMUNION

ஒசே 6:1-6 திப 3:1-10
திபா 100 மத் 6:19-21

**"...அப்பொழுது நாம் அவர் முன்னிலையில் வாழ்ந்திடுவோம்"** (ஒசே 6:2).

கூட்டுறவு (communion) என்னும் வார்த்தை எண்ணங்களை அல்லது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுதல், கூடி கலந்து பேசுதல், கருத்துப் பகிர்வு போன்ற பொருள்களை தன்னகத்தே கொண்டது. இதை இணைந்து வருதலும், பகிர்தலும் என்ற கருத்தின் அடிப்படையிலும் புரிந்து கொள்ளலாம். கிறிஸ்தவத்தின் அடிப்படையே கூட்டுறவாகும். இறையன்பை அடிப்படையாகக் கொண்டு இணைந்து வருவதும், செயல்படுவதும் இன்றைய காலத்தின் அடிப்படை தேவையாகும். ஆனால் இன்று கிறிஸ்தவத்திற்குள்ளும் பல வேறுபாடுகளை உருவாக்கி கூட்டுறவின் தன்மைகள் சிதைக்கப்பட்டுவருகின்றது. புத்தாண்டில் கூட்டுறவு மறு கட்டுமானம் செய்யப்பட நமக்குள் ஏற்பட வேண்டிய மாற்றங்கள் எவை என்பதைச் சிந்திப்போம்.

### *1. அன்புள்ள இதயம்:*

கிறிஸ்தவத்தின் அடிப்படையே அன்புதான். அதைத்தான் ஆண்டவரும் விரும்புகிறார். ஒசெ 6:1-6 வரையுள்ள பகுதியில் இஸ்ரயேல் மக்கள் ஆண்டவர் தங்களிடம் கோபத்துடன் இருப்பதாக நினைத்து அவரை கண்டுகொள்ளாமல் இருந்தார்கள். இம்மக்கள் ஆண்டவரிடத்தில் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக மட்டும் ஆண்டவரிடத்தில் அன்புடையவர்களாக காணப்பட்டனர். வறண்ட ஆன்மீக வாழ்வினையே வெளிப்படுத்தினர். இம்மக்கள் இறைவனிடம் காண்பித்த அன்பு என்பது காலை நேர மேகம் போலவும், கதிரவனைக் கண்ட பனிபோலவும் மறைந்து போகிறது என வேதனை கொள்கிறார். எனவே இம்மக்களிடம் ஆண்டவர் பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்; எரிபலிகளை விட கடவுளை அறியும் அறிவையே விரும்புவதாக கூறுகின்றார். இறை-மனித உறவினை அன்பினால் வளர்க்கும் உறவு பரிமாற்றத்தை இங்கு வெளிப்படுத்துகிறார். இறை அன்பை வெளிப்படுத்தும் இதயங்களாய் இவ்வுலகில் வாழ்ந்து கூட்டுறவை உருவாக்குவோம்.

### *2. இறையருளைப் பகிர்தல்:*

திப 3:1-10 வரையுள்ள பகுதியில் தேவாலயத்திற்கு சென்ற பேதுருவும், யோவானும் கோவிலின் அழகு வாயிலில் அமர்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்த கால் ஊனமுற்றிருந்த ஒருவரை சந்திக்கின்றனர். அவர் இவர்களிடம் பிச்சையாக பணத்தை கேட்க, இவர்களோ அந்த மனிதருக்கு தேவையான ஒன்றை, சிறப்பான ஒன்றை அவருக்கு கொடுக்கின்றனர். "வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை; என்னிடம் உள்ளதை உமக்கு கொடுக்கிறேன்" எனக் கூறி அவரைத் தூக்கிவிட்டனர். இறைவன் நம்மிடம் விரும்புவது இவ்வுலகின் பொருட்களைப் பகிர்பதல்ல இறையருளைப் பகிர்வதே. அதுவே கூட்டுறவின் அடிப்படையாகும்.

எனவே நாம் இறையன்பை இவ்வுலகில் வெளிப்படுத்தி இறையருளைப் பகிர்ந்து வாழ வேண்டும். கிறிஸ்து தம் திருச்சபைக்கு கூட்டுறவு என்னும் பரிசினை தம் திருச்சபைக்கு தந்திருக்கிறார். நாம் நமக்குள்ளிருக்கும் வேறுபாடுகளை களைந்து கூட்டுறவு என்னும் அருட்கொடையை இவ்வுலகில் உருவாக்கி ஒன்றாவோம்.

அருள்திரு. **ரமேஷ். D. தாஸ்**

நாள் 8 வார இறைவேண்டல்

## விலகிச் செல்லும் பழக்கப்பட்ட வழித்தடங்களுக்கு அப்பால் கடவுளின் புதிய பாதைகளை நோக்கி

**BEYOND THE FAMILIAR ROUTES OF SEPARATION TO GOD'S NEW PATHS**

எரே 31:31-34 எபே 4:20-23
திபா 16 மத் 11:25-30

**"...வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினார்கள்."** (மத். 2:12).

ராபர்ட் ஃப்ரோஸ்ட் என்ற ஆங்கல கவிஞர் "தி ரோட் நாட் டேக்கன்", (The Road Not Taken) என்ற கவிதையில் சாலைகள் நம் வாழ்க்கையை அடையாளப்படுத்துகிறது என எழுதுகிறார். நம் வாழ்வில் நாம் தேர்ந்தெடுக்காத பாதை, நடக்காத பாதை என்கிறார். நாம் தேர்ந்தெடுத்த பாதை நமது எதிர்காலத்தை, நமது இலக்கை தீர்மானிக்கிறது. தவறான பாதையை தேர்வு செய்தால் நாம் அதை திரும்ப பெற முடியாது. எனவே தேர்வு செய்யும் போது புத்திசாலிகளாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறார்.

இப்புதிய ஆண்டில் அடியெடுத்து வைத்து பயணத்தை ஆரம்பித்திருக்கும் நாம் பயணித்து வந்த தவறான பாதைகளை கண்டறிந்து அப்பாதைகள் வழியாக பயணிக்காமல் மாற்று பாதைகளில் பயணிக்க ஆண்டவர் அழைப்பு தருகின்றார். நாம் நம்முடைய மாற்றுப் பாதைகளை தேடிக் கண்டுபிடிக்க இயலாதிருக்கும் போது புதிய பாதைகளைக் கண்டு பயணிக்க ஆண்டவர் நமக்கு வழிகாட்டுகிறவர் என்பதை தியானிப்போம்.

### *1. மாற்றுப் பாதை திசைகளை மாற்ற அழைக்கிறது:*

குழந்தையாகிய இயேசுவை பார்த்து வணங்கி பரிசுகளை கொடுக்க வந்த ஞானியர் அவரைப் பார்த்து விட்டு, மாற்றுப்பாதையில் பயணிக்க அறிவுறுத்தப்பட்டனர். எந்த விண்மீன் இயேசுவாகிய குழந்தையை காண வழிநடத்தி வந்ததோ அதே ஒளி அவர்களுக்கு மாற்றுப் பாதையைக் காண்பித்தது. அவர்களும் அந்த மாற்றுப்பாதையில் பயணித்தனர். ஒருவேளை மாற்றுப்பாதையில் பயணிக்கவில்லை என்றால், இயேசுவாகிய குழந்தை ஆபத்தில் சிக்கியிருக்கும்.

ஆண்டவர் இப்புதிய ஆண்டில் நம்மை மாற்றுப்பாதையில் பயணிக்க அழைக்கின்றார். கிழக்கிலிருந்த வந்த ஞானிகள் தாங்கள் பயணித்து

வந்த பாதையின் வழியாக திரும்பிப் போக வேண்டாம் என எச்சரிக்கப்பட்ட போது குழம்பி இருக்கலாம். ஆனால் இறைவெளிப்பாட்டால் நம்பிக்கையூட்டப்பட்டு வேறு வழியாய் தங்கள் நாடு திரும்பினார். வாழ்வில் மாற்றுப்பாதைகள் உண்டு என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். நாம் எதிர்பார்க்காத மாற்றுப் பாதையில் பயணிக்க இப்புதிய ஆண்டில் ஆண்டவர் நம்மை வழிநடத்துவார்.

### *2. புதிய உடன்படிக்கையின் வழியாய்ப் பயணிக்க அழைக்கிறது:*

எரேமியா 31:31-34 வரையுள்ள திருமறைப்பகுதியில் அடிமைகளாய் இருந்த இஸ்ரயேல் வீட்டாரோடும், யூதா வீட்டாரோடும் புதிய உடன்படிக்கையை உருவாக்கவிருப்பதாக ஆண்டவர் எரேமியா இறைவாக்கினர் வழியாக அழைப்பு விடுக்கின்றார். ஆண்டவர் இஸ்ரயேல் மக்களை விடுவித்து, அழைத்து வரும் வழியில் சீனாய் மலையில் அவர்களோடு உடன்படிக்கை செய்கின்றார். இஸ்ரயேல் மக்கள் தகுதியுள்ளவர்கள் என்பதற்காக கடவுள் அவர்களை தெரிந்து கொள்ளவில்லை. மாறாக, அவர்களின் முற்பிதாக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்றார். ஆனால் அவர்கள் உடன்படிக்கையின் விதிகளை மீறினார்கள். எனவே, ஆண்டவர் தமது உடன்படிக்கையைப் புத்தாக்கம் செய்ய விரும்புகின்றார், எரேமியா இறைவாக்கினர் வழியாக உடன்படிக்கையை உருவாக்குகிறார். இந்த புதிய உடன்படிக்கையின் விதிகள் கற்பலகைகளிலல்ல மக்களின் இதயங்களில் எழுதப்படும். அறிவுரைகள் வெளியிலிருந்து வருவதில்லை. மாறாக, அவைகள் உள்ளுணர்வில் எழும்பும். இஸ்ரவேலர் ஒவ்வொருவருக்கும் கடவுளே இவற்றைக் கற்றுக் கொடுப்பவர் என்கிறார் (எரேமியா 31:31-34).

பழைய, பாழாக்கப்பட்ட, பயனற்றுப்போன வாழ்வை விட்டு, புதிய வாழ்வின் பாதைகளை தெரிந்தெடுத்து பயணிக்க இப்புதிய ஆண்டில் ஆண்டவர் நம்மை அழைக்கின்றார். நம் வாழ்வின் பயணத்தில் நாம் பழகிப்போன வழிகள் அடைக்கப்படும் போது எப்படி நாம் பயணத்தைத் தொடருவோம் என தடுமாறும் போது ஆண்டவர் புதிய பாதைகளை நமக்கு ஆயத்தம் செய்கிறார். வாழ்வின் பாதைகள் அடைபடும் போது ஆண்டவர் தம் ஒளியில் நம்மை நடத்துவார். அவர் ஒளியில் நாம் இணைந்து பயணித்து திருப்பயணிகளாவோம்.

அருள்திரு. **ரமேஷ் D. தாஸ்**

09-01-2022

திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

# தூயவராயிருங்கள்

**BE HOLY**

இச 7:1-11 எபே 5:18-20
திபா 5 யோவா 17:13-17

**"... உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் தூய மக்களினம் நீங்கள்"** (இச 7:6a).

அன்னை தெரசா மரணபடுக்கையில் இருந்த போது பத்திரிக்கையாளர் ஒருவர் அவரைப் பார்த்து, "உங்களை எல்லோரும் வாழும் புனிதர் என்று கூறுகின்றார்கள். இந்த உலகிலேயே ஒரு புனிதராக கருதப்படுவது என்ன விதமான உணர்வைத் தருகிறது" என்று கேட்டார். அதற்கு அன்னை "புனித வாழ்வு" என்பது ஒரு சிலருக்குக் கொடுக்கப்பட்ட ஆடம்பரம் அல்ல; மாறாக ஒவ்வொருவரும் வாழ்ந்து காட்ட வேண்டிய கடமை. (Holiness is not the luxury of a few, but the duty of every one) என்று சொல்லி விட்டு தன்னை கேள்விக் கேட்ட அந்த பத்திரிக்கையாளரை உற்று நோக்கி, "நீ ஒரு பத்திரிக்கையாளன். உன்னுடைய பத்திரிக்கைப் பணியிலே புனிதமுள்ளவனாக இருப்பது தான், கடவுள் உன்னிடம் எதிர்பார்ப்பது" என்றாராம்.

புனித வாழ்வு என்பது, அல்லது தூயவாழ்வு என்பது, "ஒவ்வொரு மனிதனும் தான் இயங்கும் நிலையில் வாழ்ந்து காட்ட வேண்டிய கடமை". யாவே கடவுள் தம் மக்களாகிய இஸ்ரவேலரைப் பார்த்து கூறும் வார்த்தை "உங்கள் கடவுளாயிருக்குமாறு உங்களை எகிப்திலிருந்து வெளிக் கொணர்ந்த ஆண்டவர் நானே! நீங்கள் தூயவராயிருங்கள். ஏனெனில் நான் தூயவர்" (லேவி 11:45). ஆண்டவர் இயேசு கிறிஸ்து மலைப் பொழிவில் கூறும் போது "... உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்" (மத் 5:48) என தூய வாழ்வுக்கு அழைப்பு கொடுப்பார்.

புனித பேதுரு அடிகளாரும் தன்னுடைய கடிதத்தில், "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" என்று மேற்கோள் காட்டுவார். தூயபவுலார் எபேசியருக்கு கடிதம் எழுதும் போது தொடக்கத்திலேயே சொல்லும் வார்த்தை, "நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி, உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மை கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார்" (எபே 1:4) என்று அழுத்தமாக குறிப்பிடுகிறார்.

ஏன் நாம் தூயவராக வேண்டும்? என்ற கேள்விக்கு பிறருக்கு நற்செய்தியை அறிவிக்கும் கருவியாக விளங்கும் முன் நமக்கு, நாமே நற்செய்தி அறிவிப்பது தான் தூயவராகுதல் என்பது. பிறருக்கு நற்செய்தி அறிவிக்கும் கருவியாக மாற்றப்படுமுன் இறைவாக்காளர் ஏசாயா: நெருப்பினால் தூய்மைப்படுத்தப்படுகிறார் (ஏசா 6:6). அதேபோல உரேமியாவும் இறைவனால் தொடப்பட்டு தூய்மைப்படுத்தகிறார் (எரே 1:9).

நாம் அறிவிக்கும் நற்செய்தியால் தொடரப்படும் மக்களின் எண்ணிக்கையைவிட நமது தூயவாழ்வோடு கூடிய நற்செய்தியால் தொடரப்படுகின்ற மக்களின் எண்ணிக்கைதான் அதிகம். எனவேதான் புனித பவுலார்; ஒவ்வொருவரின் தனிப்பட்ட வாழ்விலும் காணப்படும் பண்பு நலன்களைக் குறித்து பேசும் போது, அவர்கள் குறை சொல்லுக்கு ஆளாகாதவர்களும் (1தீமோ 3:2). எல்லோரிடமும் நற்சான்று பெற்றவர்களாகவும் (1தீமோ 3:9) இருக்க வேண்டும் என்று கூறுவார். ‘இராபர்ட் முர்ரே’ என்னும் அறிஞர், “ஒரு தூய்மையான மனிதன் கடவுளின் கையில் இருக்கும் ஒரு வலிமையான ஆயுதம்” என்று கூறுவார். தூயவாழ்வின்படி நிலைகளைக் கொடுக்கப்பட்ட திருமறைப் பகுதி சார்ந்து சிந்தித்து நாமும் தூயவர்களாக விளங்க கடவுள் நம்மை அழைக்கிறார்.

***1. தூயவர்களின் நிலைப்பாடு*** (இச 7:6) :

“ஏனெனில் உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் தூய மக்களினம் நீங்கள். மண்ணிலுள்ள எல்லா மக்களினங்களிலும் உங்களையே தம் சொந்த மக்களாக, கடவுளாகிய ஆண்டவர் தேர்ந்து கொண்டார்”. இன்றைய பழைய ஏற்பாட்டுத் திருமறைப் பகுதியில் இஸ்ரயேலர் கானானுக்குள் நுழையப் போகும் போது கானானின் காட்சியை அவர்கள் கண்முன் நிறுத்துகின்றார். கானானில் குடியேறி உங்கள் வாழ்வை தொடங்கும் போது அங்கு உங்கள் நிலைப்பாடு எத்தகையாக இருக்க வேண்டும் என்பதை இங்கு தெளிவுபடுத்துகிறார். ‘யவே கடவுளால்’ தெரிந்தெடுக்கப்பட்ட தூய இனத்தவர்களாகிய இஸ்ரயேலர், யாவே கடவுளுக்குப் பணிந்து நடக்க வேண்டும். நாற்பது ஆண்டு காலமாக இறைவன் அவர்களை நடத்தி வந்த விதத்தை மறந்துவிடக் கூடாது. கடவுள் கற்றுத் தந்த ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும். பாலைவனப் பயணத்தில் மன்னாவைப் பெற்றுக் கொண்டதை நினைவுபடுத்தி தம்முடைய உடலுக்கடுத்த நலன்களும், ஆவிக்குரிய நன்மைகளும் இறைவனிடமிருந்தே வருகின்றன என்பதில் உறுதியுடன் இருப்பதோடு மட்டுமல்ல; மன்தன் எல்லாவற்றிற்கும் இறைவனையே சார்ந்து இருத்தல் வேண்டும். அனைத்திற்கும் மேலாக “.... உங்களை எகிப்திலிருந்து வெளிக்

கொணர்ந்த ஆண்டவர் நானே! நீங்கள் தூயவராயிருங்கள்; ஏனெனில், நான் தூயவர்! (லேவி 11:45)''. இதுதான் உங்கள் நிலைப்பாடு என்பதை கடவுள் தெளிவுப்படுத்துகின்றார்.

எகிப்து நாட்டிலே அடிமைகளாக விற்கப்பட்ட யோசேப்பும், பாபிலோனிய அடிமைகளாக கொண்டு போகப்பட்ட தானியேலும், அவர் தம் நண்பர்களும் தாங்கள் சந்திக்க எதிர்ச் சூழலிலும் பாவம், செய்ய கட்டயப்படுத்தப்பட்ட நிலையிலும், அவர்கள் தங்கள் நிலைபாட்டிலிருந்து சற்றேனும் நிலைகுலையவில்லை. ஆகவே அவர்கள் அந்நிய நாட்டில் உயர்த்தப்பட்டார்கள்; தூயவர்களாக அடையாளப்படுத்தப்பட்டார்கள்.

அன்பர்களே! திரித்துவக் கடவுளால் திருநிலைப்படுத்தப் பட்டவர்களாய், நாம் வாழும் சூழலில் தவறிபோவதற்கும், தூய்மையை இழப்பதற்கும் ஏராளமான வாய்ப்புகள் உண்டு. இநத் உலகின் செழுமை, நாகரிய வளர்ச்சி, கலாச்சார சீரழிவுகள், கணினியின் கட்டுக்கடங்காத ஆதிக்கம், நம் தூய வாழ்வை அசைக்க நேரிடும். அச்சூழலில், ''அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள். உங்கள் எதிரியாகிய அலகை; யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கம் சிங்கம் போலத் தேடி திரிகிறது'' (1பேது 5:8) என்றும் பேதுரு அடிகளாரின் எச்சரிப்பை உணர்ந்து விழிப்போடிருந்து, தங்கள் நிலைப்பாட்டில் தெளிவுடன் இருந்து தூயவர்களாய் விளங்குவோம்.

### ***2. தூயவர்களின் வெளிப்பாடு*** (யோவா 17:16) :

''நான் உலக சார்ந்தவனாய் இல்லாதது போல் அவர்களும் உலகச் சார்ந்தவர்கள் அல்ல''. ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னுடைய ஆசாரியத்து இறைவேண்டலில்: தம் அடியவர்கள் தூயவர்களாக விளங்க வேண்டும்; தங்கள் தூயத்தன்மையை உலகு சார்ந்து அல்ல, உன்னதரை சார்ந்து நின்று உவெளிப்படுத்த வேண்டும் என்று தந்தையாம் கடவுளிடம் இறைவேண்டல் செய்கின்றார்.

மட்டுமல்லாது தம் அடியவர்களின் தூயவாழ்வைக் குறித்து கரிசனை உடையவராய், ''உலகத்தில் வாழும் அவர்களை சீயோனிடமிருந்து காத்தருளும் என்றும் வேண்டுதல் செய்கின்றார்''. எப்படி தண்ணீரில் கிடக்கும் தாமரை இலையில், தண்ணீர் ஒட்டிக் கொள்ளாதது போல; உப்பு தண்ணீரில் வாழும் கடல் மீனுக்குள் உப்பு தன்மை இல்லாதது போல தூயவர்களாகிய தமக்குள் இருப்பது இந்த பாவம் நிறைந்த உலகில் தான். ஆனாலும், பாவத்திற்கு விலகி வாழவது தான்: தூ ய வாழ்வின் வெளிப்பாடு என்று ஆண்டவர் கற்றுத் தருகின்றார். ''என்னிடத்தில் பாவம் உண்டென்று யார் சொல்லக் கூடும் (யோவா 8:46)'' என்கிற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வெளிப்பாடு தான் தூ யவர்களின் வெளிப்பாடு.

கி.பி. 11-113 வரையுள்ள கால கட்டத்தில் பித்தானியா நாட்டு மன்னன் Pliny the Young தன்னுடைய நண்பரான Troy நாட்டுக்கு மன்னனுக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில் “தன்னுடைய நாட்டில் அடிமைகளாக இருந்த கிறிஸ்தவர்களைக் குறித்து எழுதியிருந்தார்” அவர்களிடம் மூன்று அடையாளங்களைப் பார்த்ததாக கூறுகின்றார்.

(1) கிறிஸ்தவர்கள் அதிகாலையில் இருட்டோடே கூடி வந்து துதித்துப் பாடுகின்றார்கள்

(2) பின் தியானம் செய்கின்றார்கள்

(3) பின்னர் ஒருவரோடு ஒருவர் கைகோர்த்து, நாங்கள் இன்றைக்கு எந்த குற்றமும் செய்யமாட்டோம் என்று உறுதி எடுத்துச் செல்லுகின்றனர்.

ஆம் தூய கடவுளாகிய தொடக்ககால திருச்சபையின் வெளிப்பாடு தனித்துவமானது.

அன்பர்களே!

அன்பராக வாழ்வில் நம் வெளிப்பாடு எத்தகையது? தனித்துவம் நிறைந்ததா? அல்லது இந்த உலகத்தோடு இணைந்து செல்லும் வெளிப்பாடா? சிந்திப்போம். பவுலார் குறிப்பிடும்போது: “இந்த உலகத்தின் போக்கின் படி ஒழுகாதீர்கள். மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக!....” (உரோ 12:12)என்ற ஓர் ஆற்றல் மிகு அடையாளத்தை குறிப்பிடுவார். ஆம் தூயவர்களின் வெளிப்பாடு உலகை சார்ந்து அல்ல உன்னதரோடு இணைந்து.

### *3. தூயவர்களின் செயல்பாடு* (எபேசி 5:15) :

“ஆகையால் உங்கள் நடத்தையைப் பற்றி மிகவும் கருத்தாய் இருங்கள்,.....”. இங்கே பவுலார் குறிப்பிடும் செய்தி என்னவென்றால், தங்கள் சொல்லிலும், செயலிலும் தூய்மையுடையவர்களே தூயவர்கள் என்கிறார். உங்கள் உரையாடல்களில்; திருப்பாடல்கள், புகழ்பாக்கள், ஆவிக்குரிய பாடல்கள் இவைகள் இடம் பெற வேண்டும். உளமார இசைபாடி ஆண்டவரைப் போற்றுங்கள். உங்கள் நடத்தையைப் பற்றி மிகவும் கருத்தாயிருங்கள், ஒளிபெற்ற மக்களாய் வாழுங்கள் என்கிறார். மட்டுமல்லாது மது அருந்துவோர் தங்கள் அறிவுத்திரன்களை இழந்து தங்கள் செய்யும் செயல்கள் தூய்மையற்றதாக இயற்கைக்கும், இயல்புக்கும் மாறானவைகளாக இருக்கும்; ஆகவே திராட்சை மது அருந்தி குடிவெறிக்கு ஆளாகாதீர்கள். இது தாறுமாறான வாழ்வுக்கு வழிகோலும், தூய ஆவியால் ஆட்கொள்ளப்படுங்கள் (எபேசி 5:18) என்று தூயவர்களின் செயல்பாட்டை பட்டியலிடுகின்றார்.

நன்மை செய்தவராக ஆற்றதெரிந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தூய செயல்பாடுகள் தூயவர்களின் செயல்பாடுகளாக இருக்க வேண்டும். ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னுடைய மலைப் பொழிவிலே;

யார் பேறு பெற்றோர்- உப்பாய்; பிறருக்கு சுவை கொடுத்து போகும், ஒளியார் பிறருக்கு வழிகாட்டுவோரே பேறு பெற்றோர் என்கிறார். இறுதியாக கூறும்போது "இவ்வாறே உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழுவார்கள் (மத் 5:16)".

கலிலேயா நாட்டில் இரண்டு கடல்கள் உண்டு. ஒன்று கலிலேயா கடல். மற்றொன்று சாக்கடல். கலிலேயாக் கடலை 'வாழ்வின் கடல்' என்று சொல்லலாம். ஏராளமான மீனவக் குடும்பங்கள் வாழ்ந்தது இக்கடலை நம்பித்தான். பேதுரு போன்ற மீனவர்களுக்கு வாழ்வு கொடுத்தத இந்த கலிலேயா கடல். ஆனால் சாக்கடலோ அதற்கு நேர் எதிர். அதை 'சாவில் கடல்' என்று கூடச் சொல்லலாம். காரணம், அக்கடலிலிருந்து உப்பின் அடர்த்தியின் காரணமாக ஒரு புழுபூச்சி கூட அதில் வாழ இயலாது. இயேசு கிறிஸ்து தான் வாழ்வை தர வந்தவர் என்பதன் அடையாளமாக வாழ்வின் கடலாகிய கலிலேயா கடலோரமாகவே தன் பணியை அமைத்துக் கொண்டார். சாக்கடல் ஓரமாக அல்ல. தூய வாழ்வுக்கு அழைக்கப்பட்டவர்களாகிய நம் செயல்பாடுகள் எப்படி இருக்கிறது? கலிலேயா கடலாகவா? அல்லது சாக்கடலாகவா?

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் போல நன்மை செய்கிறவர்களாய், கலிலேயா கடலாய் நம் செயல்பாடுகள் அமையட்டும் அப்போது மட்டுமே நாம் தூயவர்கள். இன்றைய கிறிஸ்தவத்தில் பக்தரக்ள் அனேகம்; ஆனால் பரிசுத்தர்கள் எத்தனைபேர் என்பத மிகப்பெரிய கேள்வி. சில பக்தி செயல்களே, ஆவிக்குரிய வாழ்வின் அடையாளம் என்று எண்ணி உளமாற்றம் இல்லாமலே இருந்து விடுபவர்கள்தாள் அனேகர். ஆனால் ஆணடவர் நம்மில் எதிர்பார்ப்பது 'பக்தி' அல்லது பரிசுத்தம். "நான் பரிசுத்தர் நீங்களும் பரிசுத்தமாயிருங்கள்" என்று தான் ஆண்டவர் அறைகூவல் விடுக்கின்றார். இந்த பரிசுத்தம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவை வழியாய் நாம் பெற்றுக் கொள்ள முடியும். அதைத்தான் ஆண்டவர் குறிப்பிடும்போது "..... வழியும், உண்மையும், வாழ்வும் நானே, என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை (யோவா 14:6)" என்று உறுதிபட குறிப்பிடுகின்றார்.

அன்பர்களே! ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின், தூய உதிரத்தினால் "தூயவர்களாய்" நம் நிலைப்பாட்டில் உறுதியுடன் இருந்து நம் வெளிப்பாட்டில் தெளிவுடன் இருந்து நம் செயல்பாட்டில் உண்மையுடன் இருந்து இறையரசை சுவைப்போம். விரிவாக்குவோம்.

"Holiness is not the way to Christ. Christ is the way to Holyness." - Adrian Rogers

அருள்திரு. S.M. **டேனியேல் தேவதாசன்**

16-01-2022

**திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு**

# ஒரே உடல் ஒரே திருமுழுக்கு

**ONE BODY AND ONE BAPTISM**

ஆமோ 9:5-12 | எபே 4:1-6
திபா 115 | மத் 16:13-20

**"நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள், ஒரே எதிர்நோக்கு இருப்பதுபோல, உடலும் ஒன்றே; தூய ஆவியும் ஒன்றே. அவ்வாறே ஆண்டவர் ஒருவரே; நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே; திருமுழுக்கு ஒன்றே."** (எபே 4:4,5).

திருச்சபை வாழ்வில் அருள் அடையாளமாகிய திருமுழுக்கு நம்பிக்கை அடிப்படையில் ஆன்மிக அனுபவமாக அமைதியிருந்தாலும், அதனைப் புரிந்து கொள்வதிலும், ஏற்றுக்கொள்வதிலும் பல வேறுபாடுகள் உள்ளது. பாரம்பரியமாக திருச்சபையில் திருமுழுக்கின் வாயிலாக ஒருவர் அங்கத்தினராகின்றார் என்ற நிலைப்பாடு இருந்தாலும், அதின் உண்மையான பொருளினை இறைமக்களில் பெரும்பாலானவர்கள் அறிந்திடவில்லை. திருமுழுக்கு அதனை சார்ந்த சான்றுள்ள வாழ்விற்கு முக்கியத்துவம் தருவதைக் காட்டிலும் திருமுழுக்கு பெறும் முறை முக்கியத்துவப்படுத்துவதால், ஒரே திருமுழுக்கு என்ற நிலைமாறி, வாடகை இல்லங்களில் வாழ்கின்றவர்கள்தங்கள் வசதிக்கேற்ப இல்லங்களை மாற்றுவது போல, ஒன்றுக்கு மேற்பட்ட திருமுழுக்கினை பெறுகிறவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அனைத்து திருச்சபைகளும் ஒரே கடவுளையும், ஒரே திருமறையையும் ஏற்றுக் கொண்டாலும், கடவுளையும் அவரது வார்த்தைகளையும் புரிந்து கொள்வதிலும், அதற்கு விளக்கம் தருவதிலும், கோட்பாடுகளின் அடிப்படையில் பிரிந்த நிற்கின்றன.

இயேசு திருச்சபையிலும் கடவுளையும், உடலாய் உலகில் வெளிப்பட்ட கிறிஸ்துவையும், தூய ஆவியாரையும், இறை நம்பிக்கையினையும், புதுவாழ்வின் அடையாளமான திருமுழுக்கினையும் பரிந்து கொள்வதில் வேறுபாடு இருந்தது. இச்சூழலில் பவுல் எபேசு திருச்சபைக்கு கடிதம் எழுதும் போது, இறைமக்கள் எல்லாச் சூழல்களிலும் ஒரே எதிர்நோக்குடன் வாழவே கடவுள் அழைத்திருக்கிறார், அதுபோல கடவுளும், அவரது திருமைந்தாராம் கிறிஸ்துவும், கிறிஸ்துவின் உடலாம் திருச்சபையும், தூய ஆவியாரும், திருமுழுக்கும், கடவுளில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும் ஒன்றே எனக் குறிப்பிட்டு, இதில் வேறுபாடுகளோ பிரிவினையோ இல்லை என்பதை இங்கு

தெளிவுப்படுத்துகிறார். ஒரே திருச்சபை, ஒரே திருமுழுக்கு என்ற பவுலின் சிந்தனையினை நமது வாழ்வுச் சூழலில், திருச்சபையின் பற்றுறுதி வாழ்வோடு இணைந்து சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

## *1. ஒரே உடல் ஒரே திருமுழுக்கு இறையாளுகையின் வெளிப்பாடு*: (ஆமோ 9:11,12)

தூய பவுலாரின் சிந்தனையான ஒரே திருச்சபை, ஒரே திருமுழுக்கு என்பதை இன்றைய பழைய ஏற்பாட்டு திருமறைப் பகுதியோடு இணைந்து சிந்திக்கும் போது திருச்சபை வாயிலாகவும் திருமுழுக்கு வாயிலாகவும் வெளிப்படும் இறையாளுகை, இறையாளுகையின் மக்களின் தகவுள்ள செயல்பாடுகளினால் அறிய முடிகிறது. திருச்சபை என்பது இறையாளுகையின் வெளிப்பாடு, திருமுழுக்கின் வாயிலாக இறைமக்கள் இறையாளுகையின் மக்களாக மாற்றப்படுகின்றனர்.

கடவுளின் உடன்படிக்கையின் மக்களாக அழைக்கப்பட்ட இஸ்ரயேலர் கடவுளுக்கு எதிராக செயல்பட்டு, உடன்படிக்கையினை உடைத்ததினால் பல துன்பங்களை வாழ்வில் சந்தித்தனர். இப்பகுதியில் எருசலேமின் வீழ்ச்சி, அதோடு இஸ்ரயேல் மக்களது வாழ்வில் கடவுளின் தண்டனையில் தனிச்சலுகை இல்லை என்பதும், மட்டுமல்லாது எருசலேம் திரும்ப கட்டப்படும் என்ற நம்பிக்கையும் தரப்படுகிறது. இஸ்ரயேலரது மன்னராட்சி வரலாற்றில் தாவீதின் ஆளுகை மிகவும் சிறப்பான, உயர்ந்த, உன்னதமான ஆளுகையாக அமைந்திருந்தது. வீழ்ந்துபோன தாவீதின் ஆளுகையினைத் தர 'மேசியா' வருவார் என்பதை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தனர். இங்கே இறைவாக்கினர் வீழ்ந்து கிடக்கும் தாவீதின் கூடாரத்தை மீண்டும் உயர்த்துவேன் (ஆமோ 9:11) எனக் குறிப்பிடுவது இஸ்ரயேல் சமூகம் இறையாளுகையின் சமூகமாக மீண்டும் உருவாகும் என்ற நம்பிக்கையினைத் தருகிறது.

திருமுழுக்கு இறையாளுகையின் மக்களாக மக்களை உருவாக்கும் நிலையில், அதன்வாயிலாக மக்களது வாழ்வு பழுதுபார்க்கப்படுகிறது, சிதைந்து போன வாழ்வு, கடவுளோடு ஏற்படுத்தும் புது உடன்படிக்கையினால் திரும்ப சீர்படுத்தப்படுகிறது (ஆமோ 9:11). இறையாளுகையில் எவ்விதம் எருசலேம் புதுப்பிக்கப்பட்டு மாற்றுருவாக்கம் செய்யப்படுகிறதோ அவ்வண்ணமே திருமுழுக்கின் வாயிலாக மானிட வாழ்வும் புதுப்பிக்கப்பட்டு, மாற்றுருவாக்கம் செய்யப்படுகிறது. ஆகவே திருமுழுக்கு பெறும் முறையினைக் காட்டிலும் அதினால் ஏற்படும் மாற்றுருவாக்க வாழ்வு முக்கியமானது. மக்களது தீமையினால் வீழ்ந்து போனத் தாவீதின் கூடாரமாகிய இறையாளுகை இஸ்ரயேலில் மீண்டும்

துளிர்ப்பது போல, திருமுழுக்கினால் இறைமக்களது ஆன்மிக வாழ்வும் துளிர்க்கிறது. அதோடு இறையாளுகையின் மக்களாகிய இஸ்ரயேலர் தங்களது சான்றுள்ள வாழ்வினால் பிற இனத்தார் அனைவரையும் தங்களது உடமையாக்கிக் கொள்வது போல (ஆமோ 12), திருமுழுக்கின் மூலம் இறையாளுகையின் மக்களாக மாற்றப்பட்டவர்களது சான்றுள்ள வாழ்வினால், அவர்களைச் சார்ந்தவர்களையும் இறையாளுகையின் மக்களாக மாற்றமுடியும். இறையாளுகையின் மக்களாக தங்களையும் மற்றவர்களையும் மாற்றுருவாக்கம் செய்வதே ஒரே திருமுழுக்கின் உன்னத அனுபவம்.

இன்று திருச்சபை இறையாளுகையின் தகவுகளை வெளிப்படுத்தும் இடமாக செயல்பட கடவுள் எதிர்பார்க்கிறார். சுயநல போக்குகளால் வீழ்ந்து கிடக்கும் திருச்சபை, இறையாளுகையின் மக்களது செயல்பாட்டினால் அதிலுள்ள பழுதுகள் மற்று தீமைகள் நீக்கப்பட்டு, கிழிசல்கள் பழுதுபார்க்கப்பட்டு, சிதைந்து போனவைகள் சீர்படுத்தப்பட்டு மாற்றுருவாக்கம் செய்யப்படும்போது, இறையாளுகையின் தகவுகள் திருச்சபை வாயிலாக உலகில் வெளிப்படும். அதோடு இறையாளுகையின் வெளிப்பாடான ஒரே திருச்சபை, ஒரே திருமுழுக்கினால் ஏற்படும் உடன்படிக்கை உறவு புதுப்பிக்கப்பட்டு மானிடரது வாழ்வு பயனுள்ளதாக அமையும்.

### *2. ஒரே உடல் ஒரே திருமுழுக்கு திருநிலைப்படுத்துதலின் வெளிப்பாடு*: (மத் 16:13-20)

ஒரே உடல் ஒரே திருமுழுக்கு என்பது கிறிஸ்துவின் "மெசியா" தன்மையில் நம்மை இணைக்கின்ற உன்னதமான அனுபவம். இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பேதுருவின் அறிக்கையில், அவர் இயேசுவை "நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்" எனக் குறிப்பிடுகிறார் (மத் 16:16). "மெசியா" என்பதின் பொருள் திருநிலைப்படுத்தப்பட்டவர் அல்லது அபிஷேகம் செய்யப்பட்டவர் என்பதாகும். இயேசுவின் "மெசியா" தன்மையினை அவர் முழுக்கு முனிவர் யோவான் மூலமாக திருமுழுக்கு பெற்றபோது நடைபெற்ற நிகழ்வின் மூலம் அறியமுடிகிறது. இயேசு திருமுழுக்கு பெற்றவுடன் வானம் திறந்தது, கடவுளின் ஆவி அவர் மேல் இறங்கியது, "இவர் என் அன்பார்ந்த மைந்தர், இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்ற வானத்தின் குரல் கேட்டது (மத் 3:13-17). இதன்மூலம் கடவுளின் அன்பார்ந்த மைந்தர் மேசியா, இவர் மக்களின் மீட்புக்காக திருநிலைப்படுத்தப்பட்டவர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இந்த கிறிஸ்துவின் திருப்பெயரில் நாம் பெறும் திருமுழுக்கு கிறிஸ்துவோடு (மெசியா) நம்மை ஒன்றிணைக்கிறது.

இயேசு கிறிஸ்துவை "மெசியா" என அறிக்கையிட்ட பேதுரு, "பாறை" என அழைக்கப்பட்டு, அவரின் மேல் திருச்சபை கட்டப்படும், பாதாளத்தின் வாயில்கள் அதின் மேல் வெற்றிக் கொள்ள முடியாது எனக் கிறிஸ்துவால் அடையாளப்படுத்தப்பட்டார். மெசியாவினால் அடையாளப்படுத்தப்பட்ட பாறையாகிய பேதுருவின் மேல் கட்டப்படும் திருச்சபை "மெசியா"வை எங்களுக்கு காண்பியும் எனக் கேட்பவர்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும். இந்நிலையில் கிறிஸ்துவின் ஒரே உடலாகிய திருச்சபையும், கிறிஸ்துவுக்கு "மெசியா" தன்மையினைக் கொடுத்த திருமுழுக்கும் திருநிலைப்படுத்துதலின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. திருமுழுக்கின் மூலம் திருச்சபையின் அங்கமாகவும், கிறிஸ்துவோடும், இணைக்கப்பட்டுள்ள இறைமக்கள் திருநிலைப்படுத்தப்பட்டவர்கள். திருநிலைப்படுத்தப்பட்டவர்கள் தீமைகளோடு வாழ்கிறவர்கள் அல்ல, எப்போதும் தூய்மையாக வாழ வேண்டியவர்கள். இறை நீதியினை கிறிஸ்துவைப் போல உலகில் வெளிப்படுத்தி வாழ்கின்றவர்கள்.

ஆகவே திருமுழுக்கினை அடையாளமாகவும், திருமுழுக்கினால் கிடைக்கின்ற ஆன்மிக அனுபவத்தினை நாமும் நம்மோடு வாழ்கிறவர்களும் பெற்று நிறைவுடன் வாழ நமது வாழுவும் செயல்பாடும் "என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்" எனக் கூறிய கிறிஸ்து அனுபவமாக மாறி, நற்சான்றுடன் வாழ்ந்திட நம்மை ஒப்படைக்க வேண்டும்.

### *3. ஒரே உடல் ஒரே திருமுழுக்கு ஒருமைப்பாட்டின் வெளிப்பாடு*: (எபே 4:1-6)

கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபை ஒருமைப்பாட்டின் மையமாக, பன்மையில் ஒருமையினை வெளிப்படுத்தும் இயக்கமாக செயல்பட வேண்டும். திருமுழுக்கின் மூலம் திருச்சபையின் அங்கத்தினராக இணைக்கப்பட்டுள்ள இறைமக்களது வாழ்வு கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட அழைப்பிற்கு ஏற்றவாறு அமைந்திட வேண்டும் (எபே 4:1). திருச்சபை ஒருமைப்பாட்டின் மையமாக அமைந்திட, அதின் அங்கத்தினர்கள் அனைத்து மக்களிடமும் கனிவோடும், மனத்தாழ்மையோடும், பொறுமையோடிருந்து, அன்பினால் ஒருவரையொருவர் தாங்கிட வேண்டும். அதோடு அனைவருடனும் அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய அவி அருளப்பட்ட பெந்தேகோஸ்தே நாளில் அனைவரும் ஒருமைப்பட்டு ஒன்று கூடியிருந்தது போல இறைமக்களும் ஒன்றாயிருந்து, ஆவியாரின் ஆட்கொள்ளுதலைசெ சொந்தமாக்கி வாழ வேண்டும்.

அதோடு, தூய பவுலார் குறிப்பிடுகையில் இறைமக்கள் அனைவரும் இறையாளுகையில் பங்கு பெற வேண்டுமென்ற ஒரே எதிர்நோக்குடன் வாழ்வது போல, கிறிஸ்துவின் உடலாம். திருச்சபையும் ஒன்று, அதிலே பிளவுகள் அல்லது பிரிவினைகள் இருக்ககூடாது எனும் நிலையில் செயல்பட வேண்டும். திருச்சபையின் பற்றுறுதி அறிக்கையில் அறிக்கையிடுவது போல "ஒரே திருச்சபை" (One Catholic Church) பற்றுறுதியில் திருமுழுக்கு பெற்ற அனைவரும் நிலைத்திருக்க வேண்டும். அதோடு, கிறிஸ்துவின் சரீரம் ஒன்று, கிறிஸ்துவிலே திருச்சபை கொண்டுள்ள நம்பிக்கையும் ஒன்று. அந்நம்பிக்கையில் பெறுகின்ற திருமுழுக்கு ஒன்று, இதனை பெறுவதற்கு உந்துதல் தருகின்ற ஆவியாரும் ஒருவரே (எபே 4:4). என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஒரே கடவுள், ஒரே கிறிஸ்து, ஒரே ஆவியார், ஒரே நம்பிக்கை என்ற பற்றுறுதியில் பயணிக்கும் திருச்சபை, திருமுழுக்கும் ஒன்றே, அதனைப் பெறுகின்ற முறைகள் வேறுபட்டவை, திருமுழுக்கினால் பெறுகின்ற புதுவாழ்வு, இவ்வாழ்வினால் தொடர்ந்து கிறிஸ்துவை பிரதிபலித்து வாழும் வாழ்வுதான் முக்கியம் என்பதை உணர்ந்து செயல்படுதல் வேண்டும்.

இன்று இறைமக்கள் திருமுழுக்கு பெற்றபின் சிலுவைப் பாதையில் கிறிஸ்துவை பின்பற்றி, அவரோடு இணைந்து, ஒருமைப்பாட்டின் உறவிடமாம் கடவுளிலும் அவரது வார்த்தையிலும் நிலைத்திருந்து வாழ்வதற்கு பதிலாக தேவையற்ற விவாதங்களிலும், திருமுழுக்கின் முறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது திருமறைக்கு எதிரானது. ஆகவே நாம் பெற்றிருக்கின்ற ஒரே திருமுழுக்கு கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையோடும், எல்லாருக்கும் தந்தையாகவும், எல்லாருக்குள்ளும் இருக்கின்ற கடவுளோடும், தனது சிலுவை மரணத்தினால் உலகினை மீட்ட கிறிஸ்துவோடும் உள்ள நமது ஒருமைப்பாட்டினை உணர்த்துகிறது என்பதை ஏற்றுக் கொண்டு பற்றுறுதி வாழ்வில் சிறந்து வாழ்ந்திட வேண்டும். ஒரே உடல் ஒரே திருமுழுக்கு உணர்த்தும் சிந்தனைகள் நமது உள்ளங்களை தூய்மையாக்கி, சிலுவையினை வாழ்வாக்கி, இறையாளுகையின் மக்களாய் வாழ்ந்திட நம்மை தொடர்ந்து வழிநடத்துவதாக, ஆமென்.

அருள்திரு. A. **மகேர் ஷால் அஸ்பாஸ்**

23-01-2022

**திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் மூன்றாம் ஞாயிறு & ஒருமைப்பாட்டு ஞாயிறு**

# அன்பினால் ஒன்றிணைக்கப் பெற்றோம்

**UNITED IN LOVE**

இச 4:1-10 — எபே 3:1-7
திபா 30 — யோவா 15:11-17

**"நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை."** (யோவா 15:17)

ஒவ்வொரு ஆண்டும், ஒன்றிப்பு ஞாயிறு (Ecumenical Sunday) புதிய ஆண்டின் முதல் மாதம் ஜனுவரி 18 முதல் ஜனுவரி 25 வரையிலான நாட்கள் ஒன்றிப்பு வார இறைவேண்டல் (Week of prayer for christian unity) அல்லது ஒன்றிப்பை இறைவேண்டல் (Unity Octave) என ஆசரிக்கப்படுவது வழக்கம். முதன் முதலில் 1908 ஆம் ஆண்டு திருச்சபைகளின் ஒன்றிப்பை வலியுறுத்தி இறைவேண்டல் கூட்டமைப்பை உருவாக்கினார்கள். தற்போது உலகளாவிய திருச்சபை பிரிவுகள் ஒன்றிப்பு இறை வேண்டலுக்குச் சான்று பகர்கின்றார்கள். கத்தோலிக்க திருச்சபை Pontifical council for christian unity மற்றும் சீர்திருத்த திருச்சபையின் அகில உலக திருச்சபை மாமன்றத்தின் (world council of churches Commission on faith and order) பற்றுறுதி சூழுக்கள் ஒவ்வொரு ஆண்டும் இணைந்து உலகின் ஏதாவது ஒரு நாட்டை ஜெபத்தில் மையப்படுத்தி ஒன்றிப்பு இறைவேண்டல் ஏறெடுப்பது சிறப்பானது. 2022ஆம் ஆண்டின் ஒன்றிப்பு இறைவேண்டல் (மத் 2:2).

"விண்மீன் எழக்கண்டோம் அவரை வணங்க வந்திருக்கிறோம்" என்ற வசனத்தை மையமாகக் கொண்டு (We saw the star in the East) விண்மீன் எழக்கண்டோம் என்ற செம்பொருளுடன் ஒன்றிப்பு திருச்சபை குடும்பங்கள் இறைப்படைப்புடன் காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. மேலும் Northern Hemisphere என்ற நாட்டின் ஜெபம் மையப்படுத்தப்படுகிறது. இந்தியாவிலும், தேசிய திருச்சபைகளின் கூட்டமைப்பு (National Counlil of Churches in India) (Bishop's Conterence in India) இணைந்து, ஒன்றிப்பு ஞாயிறு வழிபாட்டை ஆசரிப்பது சிறப்பானது. தென்னிந்திய, வடஇந்திய, மார்த்தோமா திருச்சபைகளின் கூட்டமைப்பு (Communion of Churches in India) ஒன்றிப்பு ஞாயிறை (Unitel in Love) அன்பினால் ஒன்றிணைக்கப் பெற்றோம் என்ற செம்பொருளில் இறைவார்த்தைகளைத் தியானிப்பதும் இந்தியாவில் பெருகிவரும்

வன்முறை கலாச்சாரம், பிளவுகள், வேறுபாடுகள், நிறைந்த நீதியற்ற சமூக சூழலில், இறை ஒன்றிப்பின் இன்றியமையாதமையை அன்பினால் நிலைநாட்டுவதும் சிறப்பான முயற்சியாகும். அன்பு, தணிந்து குறைந்து போய் கொண்டிருக்கும் உலகத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மனிதர்களின் வாழ்வியல் பயணத்தில் அன்பு இன்றியமையாத பண்பாக, மாண்பாக உள்ளது. அன்பைக் கொடுப்பதிலும், பெற்றுக் கொள்வதிலும் தான் மனித வாழ்வு அர்த்தமுள்ளதாக, முழுமை பெறுகிறது. அன்பு குறைவதினால் மனிதர்களிடமும் இறை படைப்புகளிடமும் ஒன்றிப்பு சூழல் இல்லை.

புதிய ஏற்பாட்டின் நான்கு நற்செய்தி நூற்களும் அன்பை மையமாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும் அதில் தூய யோவான் நற்செய்தி நூலின் ஆசிரியர் அன்புக்குரிய சீடர் என்று அழைக்கப் பெறுகிறார். இந்நற்செய்தி நூலின் 15ஆம் அதிகாரம் 17ஆம் வசனத்தை மையமாகக்கொண்டு அன்பினால் ஒன்றிணைக்கப் பெற்றோம். (United in love) என்ற பொருளை நான்கு உட்பிரிவுகளுடன் இந்த நாளுக்குரிய திருமறை வசனங்களுடன் தியானிப்போம். அன்பு ஒரு மலர் நம்பிக்கையும் பற்றுறுதியும் அதன் தண்டு. மீட்பு முழு செடியாகும். செடிகளின் வேர்கள் வழியாக தண்ணீரைச் செடிகள் பெற்று உயிர்வாழ்வதுபோல இறை அருள், இறைவாழ்வு, இறை அன்பு போன்ற இறையியல் தகவுகளுடன் உயிருடன், உறவுடன் வாழவேண்டும். அப்போது தான் அன்பின் கூட்டமைப்பு தழைத்தோங்கும்.

அன்பு குறித்து திருவள்ளுவர் அன்புடைமை என்ற குறள் பாடல் எண். 71இல் "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர் புன் கண்ணீர் பூசல் தரும்" என்கிறார். இதனுடைய பொருள் உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியாது. அன்புக்குரியவரின் துன்பங்காணுமிடத்து, கண்ணீர்த்துளி வாயிலாக அது வெளிப்பட்டுவிடும். குறள் எண் 72இல் "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" இதனுடைய பொருள் அன்பு இல்லாதார், எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர், அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவர்

### 1. *அன்புக்கு முன்னுரிமை கொடுங்கள்* :
(Make Love a Priority)

"நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை. தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா 15:12,13). ஆவியின் கனிகள் ஒன்பதில் (கலா 5:22,23)

மிக முக்கிய கனியான அன்புக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு யோவான் நற்செய்தியாளர் வலியுறுத்துகிறார். இறை அன்பை, உபாகமம் 4:1-10 வரையிலான திருமறை பகுதிகளில், இறை அச்சத்துடன், வாழ்ந்து பின்வரும் தலைமுறையும், இறை அன்பை மறவாது "உங்கள் இருதயங்களில் காத்துக்கொள்ளுங்கள், உங்கள் வாழ்நாள் முழுமையும் நீங்கள் அவற்றை மறக்க வேண்டாம், உங்கள் பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் அவற்றைக் கூறுங்கள்." கசப்பான அனுபவங்கள் அடிமைநிலைப்பாடு, பல்வேறு கஷ்டங்கள் ஆகிய காரணங்களால் அன்பைப் பிறருக்குக் கொடுக்க இயலாத சூழலிலும், ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி ஒன்றாக இறைவனுக்குள் வாழ்ந்து அன்புக்கு முன்னுரிமை கொடுக்க இறைவன் விரும்புகிறார். அப்போது ஒன்றான சூழல் உருவாகும். ஆப்பிரிக்கா நாட்டில் இன வெறிக்கு எதிரான போராட்டத்தில் பங்குபெற்று கறுப்பு நிற மக்களின் வாழ்வுயர பாடுபட்டு 27 ஆண்டுகள் சிறைத்தண்டனைக்குட்படுத்தப்பட்டு விடுதலையாகும் தருணத்தில் நெல்சன் மண்டேலா அவர்கள் அன்புக்கு முன்னுரிமை கொடுக்கவும் தன் இன மக்களைக் கொடுமையாக நடத்தினவர்களை மன்னிக்க வலியுறுத்தி, கூறும்போது, விடுதலை சுதந்திரத்திற்கு வழிவகுக்கும். கதவை விட்டு வெளியே செல்லும் போது என்னிலுள்ள கசப்பு, வெறுப்பு என்னைவிட்டு வெளியேறவில்லை என்றால் நான் சிறையில் இருப்பதாக கருதுகிறேன் என்றார். As I walked out of the door toward the gate that woul lead to my freedom, I knew if I didn't Gave my bitterness and hatred behind, I had still be in prison) அன்புக்கு முன்னுரிமை கொடுக்கும்போது, கசப்பு, வெறுப்பு மறையும், மனிதநேயம் தழைக்கும்.

### 2. *அன்பின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளுங்கள்* :
(Understand the importance of love)

யோவா 15:14 "நான் கட்டளை இடுவதையெல்லாம் நீங்கள் செய்தால், நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள்" இறைவனின் நட்புறவு, அன்பு, கருணை மனிதர்களின் மீது, இறைபடைப்புகளிலும் முழுமையாக உள்ளது. அன்பின் முக்கியத்துவத்தைக் குறித்து உலகின் அனைத்து சமயங்களும் வலியுறுத்துகின்றன. இயேசு கிறிஸ்துவின் ஆழமான போதனைகள், இறையியல் தகவுகள் அன்பின் முக்கியத்துவத்தை அவருடைய வாழ்வு பணிகளுடன் வெளிப்படுத்துகிறது (யோவா 3:16; ரோ 5:8). அவர் தன் உயிரையும் கொடுத்து தம் அன்பை எடுத்துக் காட்டியுள்ளார் 1யோவா 4:8,16 இல் "அன்பில்லாதோர் கடவுளை அறிந்துக்கொள்ளவில்லை; ஏனெனில் கடவுள் அன்பாய் இருக்கிறார். கடவுள் நம்மிடம் கொண்டுள்ள அன்பை அறிந்துள்ளோம், அதை நம்புகிறோம். கடவுள் அன்பாய் இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவர்

கடவுளோடு இணைந்திருருக்கிறார் கடவுளும் அவரோடு இணைந்திருக்கிறார்.” இன்றைய அவசர உலகின் சூழலில், அன்பின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்பவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவு. நாம் அன்பாக வாழ்வதற்கு மறந்து விடுகிறோம். அன்பாக வாழ்வது கடிமையான ஒன்று அல்ல அன்பாக வாழ்ந்து, இறை சான்று பகரும்போது அன்பினால் ஏற்படும் ஆரோக்கியமான உறவுமுறைகளை ஒவ்வொரு நாளும் உணரமுடியும். எபேசியர் 3:1-21 வரையில் தூய பவுல் அடிகளார், கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள அன்பின் பொருட்டு கைதியாக, துன்பங்களை ஏற்றுக்கொண்டுள்ளேன் என்கிறார். துன்பமான நாட்கள் என்பது அனைவரின் வாழ்விலும் வந்து போகக்கூடியதே இது உலக சூழலில் வழக்கமான ஒன்று. இறைவனுக்காக அவர் பணிக்காக துன்புறுவோர் இறைவன் மீதுள்ள அன்பினால், பிறரையும் அன்பு செலுத்தி நட்புறவு பாராட்ட தூண்டுகிறது. கணவன், மனைவி, குழந்தைகள், இளையோர், வயது முதிர்ந்த பெற்றோர் அன்புடன் வாழ்வதற்கும் எபே 4:31,32; எபே 5:1-33; எபே 6:1-9 வரையிலும் அன்பின் முக்கியத்துவத்தை தூய பவுலடிகளார் குறிப்பிடுகிறார். தூய்மையான அன்பு ஆற்றல் மிகுந்தது. ஆகவே அன்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துக்கொண்டு இறை நட்பை நம்முடன் வாழ்பவர்களுடன், சமூகத்தில், திருச்பையில் ஏற்படுத்தி ஒன்றிப்புக்குச் சான்றாவோம்.

### 3. *அன்பின் தனித்துவமான இயல்பை வெளிப்படுத்துங்கள்* : (Embody the distinguishing nature of love)

யோவா 15:17 “நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்புகொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை.” தூய யோவான் நற்செய்தி நூலில் நான்குவிதமான அன்பைக்குறிப்பிட்டுள்ளார். அதில் பழைய ஏற்பாட்டின் பத்துகட்டளைகளை இரண்டே கட்டளையாக புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து செயல்படுத்தினார். யோவா 13:34 இல் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்கு கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். அன்பின் தனித்துவமான இயல்பை இயேசு கிறிஸ்து தன்னைப் பின்பற்றுபவர்களிடம் கொடுத்துள்ளார். அவ்வியல்பின்படி அன்பு செலுத்தும் போது அதை புரிந்துக்கொள்ள முடிகிறது.

கிழக்கு ஆப்பிரிக்காவில் அருட்பணிகளை நிறைவேற்றின அருட்பணியாளர் இரா கில்லெட் (Ira Gillett) என்பவர் தன் பணித்தள அனுபவத்தில் மிகவும் சிறப்பான நிகழ்வைப் பகிர்ந்தார். அப்பகுதி மக்கள் தங்கள் மருத்துவ தேவைகளுக்கு அருட்பணி மருத்துவர்கள் இருக்கும் மருத்துவமனைகளை அணுகினார்கள். இதற்காக வெகுதொலைவு

வரையிரயாணப்பட்டு மருத்துகளைப் பெற்று வந்தனர். இரா கில்லெட் அவர்கள் அப்பகுதிமக்களிடம் வினவிய போது உங்கள் இருப்பிடங்களில் தரமான மருத்துவ வசதிகள் உள்ளன ஏன் நீண்ட தொலைவு பயணம் மேற்கொள்கிறீர்கள்? அதற்கு அவர்கள் மருந்துகள் ஒரே மாதிரியாக இருக்கலாம் ஆனால் அதைக் கொடுக்கின்ற கரங்கள் தான் வேறுபட்டவை. மருத்துவ அருட்பணியாளர்களின் கரங்களில் பெறும் மருந்து அன்பினால் நிறைந்தது. சிறப்பானது என்றார்கள் (The medicines may be me same but me hands with love are dilterent) அன்பின் தனித்துவமே, அன்பின் இயல்பை வெளிப்படுத்துவது. இந்தியாவில் கல்கத்தாவில் தொழு நோயால் பாதிக்கப்பட்டோருக்கு அருட்பணியாற்றிய அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்ற அன்னை தெரசா அவர்களும் அன்பின் தனித்துவமான இயல்பை வெளிப்படுத்தியவர்களில் ஒருவராக எண்ணப்படுகின்றார் (லூக் 4:18,19). எசாயா இறைவாக்கினரின் கூற்றை இயேசுகிறிஸ்து அன்பின் தனித்துவமான இயல்பாகச் செயலாக்கம் செய்தார். லூக் 10:30-37 வரையில் சொல்லப்பட்ட நல்ல சமாரியன் உவமையும் மத் 25:35-40 வரையில் சொல்லப்பட்ட இறைவார்த்தைகள் படி அன்பின் செயலாக்கம் நம்முடைய தனித்துவமான இறைபணிகளில், இறை மக்களுடன் வாழும் சூழலில் வெளிப்படுத்தும் போது, நம் கரங்களும் நம் வாழ்வும் அன்பின் தனித்துவமான இயல்பை பிறர் உணர்ந்தும் கொள்ள செய்யும்.

### 4. *அன்பின் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துங்கள்* :

(Demonstrate the virtue of love)

யோவான் 15:16 “நீங்கள் கனிதரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன்” யோவா 15:8 இல் நீங்கள் மிகுந்த கனிதந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது. (யோவா 15:9) என் அன்பில் நிலைத்திருங்கள் (யோவா 15:10). என் அன்பில் நிலைத்திருப்பீர்கள் என்று யோவான் நற்செய்தி ஆசிரியர், அன்பின் நல்லொழுக்கம் கனிகளினால் வெளிப்படும் என்கிறார்.

குடும்ப உறவுகளில், திருச்சபை பற்றுறுதி உறவு நிலைகளில், சமூக கட்டமைப்புகளில் அன்பில்லாத சூழல் மேலோங்கி காணப்படுகிறது. 1யோவா 3:16-18 வரையில் கிறிஸ்து நமக்காக தம் உயிரைக்கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்துக் கொண்டோம் ஆகவே நாமும் நம் சகோதரர் சகோதரிகளுக்காக உயிரைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பிள்ளைகளே, நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம். 1யோவா 4:20 இல் கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக்கொண்டு தம்

சகோதரரிகளை வெறுப்போர் பொய்யர் தம் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது" நற்செய்தி நூலிலும், நிருப பகுதிகளிலும் அன்பின் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த தகுந்த வழிகாட்டுதல் தரப்பட்டுள்ளது.

நமது முன்னாள் ஜனாதிபதி Dr. A.P.J. அப்துல் கலாம் அவர்கள் அரசு முறை பயணமாக தமிழ்நாட்டில் உள்ள குன்னூரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். அப்போது அங்கு குன்னூர் இராணுவ மருத்துவமனையில் இந்திய முன்னாள் இராணுவ தளபதி ஃபீல்ட் மார்ஷல் மானெக்ஷா அவர்கள் மருத்துவ சிகிட்சை பெற்று வருவதை அறிந்து தன் நிகழ்ச்சிகளை மாற்றியமைத்து அவரைச் சந்தித்து உடல் நலம் விசாரித்தார். அன்பான புன் சிரிப்போடு எப்படி இருக்கிறீர்கள் என்ற வார்த்தை, இராணுவ தளபதி அவர்களை உற்சாகமூட்டியது. அன்பின் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த தருணம் கிடைக்கும் போது உடனே வெளிப்படுத்த வேண்டும். அப்துல்கலாம் அவர்கள் அன்புக்கு ஓர் இலக்கணம். அன்புக்காக ஏங்கி நிற்கும். வயது முதிர்ந்த பெற்றோர், விழி இழந்து, வாழ்விழந்து, தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருப்போரை அன்புடன் நலம் விசாரிப்பதே அருமருந்தாகும். அது தான் கனிகொடுக்கும் கனிகளால் அறியப்படுகிற அன்பின் வெளிப்பாடு (Bearfrurts).

புதிய ஆண்டு 2022, நம்குடும்பங்கள், திருச்சபை, வாழும் சமூகம், இயற்கை படைப்புகள், மாற்றுதிறன் படைத்தோர், மூன்றாம் பாலினத்தோர் ஒருவருக்கொருவர் அன்பினால் ஒன்றிணைக்க அன்புக்கு முன்னுரிமை கொடுத்து. அன்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துக்கொண்டு, அன்பின் தனித்துவமான இயல்புடன் அன்பின் நல்லொழுக்கத்தைக் கனிகொடுக்கும் அனுபவத்துடன் வெளிப்படுத்தி இறையரசின் முன்சுவையை ஒற்றுமையுடன் கட்டமைப்போம். (1 கொரி 13:13) நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன. இவற்றுள் அன்பே தலைசிறந்தது.

அருள்திரு. முனைவர் S. **டேவிட் ஜோசப் ராஜ்**

26-01-2022

## அனைவருக்கும் சமத்துவமும், நீதியும்

**EQUALITY AND JUSTICE TO ALL**

ஆமோ 5:18-27 திப 10:34-43
திபா 97 மத் 23:23-28

**“ நீதி வெள்ளமெனப் பொங்கி வருக ! நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக!”**
(ஆமோ 5:24)

உலக வரலாற்றில் மன்னர் ஆட்சி, சர்வாதிகார ஆட்சி, மக்களாட்சி என்று பல்வேறு விதமான ஆட்சி முறைகள் காணப்படுகின்றன. இதில் மக்களாட்சி முறையே சிறந்தது என்பதை இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் “மானுடம் கண்டுள்ள ஆட்சி முறைகளில் ஜனநாயக ஆட்சி முறையே குறைந்த தீமைகளை கொண்டுள்ளது” என்று குறிப்பிடுகிறார். 1950ஆம் ஆண்டு ஜனவரி-26 ஆம் நாள் புதிய அரசியலமைப்புச் சட்டங்களுடன் இந்தியா தன்னை ஒரு குடியரசு நாடாக அறிவித்தது. இதனால், உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு, குடியாட்சித் தத்துவத்தை செயல்படுத்தும் நாடு என்ற பெருமை இந்திய நாட்டிற்குக் கிடைத்தது. ஏறத்தாழ 350 ஆண்டுகள் அந்நிய ஆட்சியில் கட்டுண்டு கிடந்த ஒரு நாடு ஜனநாயகத்திற்கும், குடியாட்சித் தத்துவத்திற்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது என்றால் அது பெருமைப்பட வேண்டிய விஷயம் தான். ஜனநாயகம் என்பது மக்களால், மக்களுக்காக, மக்களின் ஆட்சி அமைப்பு. தேசத்தில் காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டம், தங்குவதற்கு வீடுகள் இல்லாது சாலையோரங்களிலும், நடைபாதைகளிலும் பலர் தங்கியிருக்கும் பரிதாபநிலை, சாலை விபத்துகள், நாளுக்கு நாள் பெருகிவரும் பயங்கரவாதம், தீவிரவாதம், அப்பாவி மக்களின் படுகொலைகள் போன்றவை, இந்திய ஜனநாயகம் முழுமையான வளர்ச்சி காண வேண்டி உள்ளதோ, நமது நாடு இன்னும் உண்மையான விடுதலையைப் பெறவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அதேசமயம் திருமறை காட்டும் ஜனநாயகம் என்பது அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்கப்பெறும் ஒரே தன்மை கொண்ட நீதியும், சமத்துவத்தையும் வலியுறுத்துவதாய் அமையப் பெற்றிருக்கிறது. அதை இக்காலத்தில் சுதந்தரித்துக் கொள்ள இந்தக் குடியரசு தினத்தில் நாம் செய்ய வேண்டியவைகள் என்ன? என்பதைத் திருமறையின் வெளிச்சத்தில் தியானிப்போம்.

## *1. நீதியின் ஒளி வீசச் செய்வோம்:* (ஆமோ 5:18-27)

ஆமோஸ் தீர்க்கதரிசியின் காலத்தில் இஸ்ரயேல் நாடு கடவுளைத் தேட மறந்து, திருவார்த்தைகளுக்குச் செவி கொடுக்காமல், அதை எள்ளி நகையாடி, அநீதியின் உறைவிடமாய் மாறி இருந்தது. இஸ்ரயேல் தேசமும், அதில் குடியுரிமை கொண்டிருந்த மக்களின் வாழ்வும், அந்நிய தேசத்தில் வாய்ப்புகள் மறுக்கப்பட்டு அடிமைத்தனத்தில் தவித்த தங்களை அரவணைத்த கடவுளின் அன்பை நினைவில் கொள்ளாமல், தங்கள் சொந்த தேசத்தின் ஏழை, எளியோரை அரவணைக்க முன்வராமல், அவர்களைத் துன்புறுத்தி, சுரண்டிய பின் துரத்தி விடுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தனர் இஸ்ரயேலின் செல்வந்தர்களும், தலைவர்களும். நீதி முற்றிலும் மறுக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்தில் அடிமைகளாய் வாழும் அவல நிலை இஸ்ரயேலின் ஏழை, எளியோருக்கு ஏற்பட்டது. கடவுளின் எச்சரிப்பின் வார்த்தைகளை சுமந்து வந்த தீர்க்கதரிசிகளைக் கண்டு எரிச்சல் கொண்டனர், அவர்களை துன்புறுத்தவும், அவமதிக்கவும் சற்றும் தயங்கவில்லை அன்றைய இஸ்ரயேல் தேசம். எனவே தான் ஆமோ 5:18-27 வரையிலான திருவசனங்களில் மனமாற்றத்திற்கான அழைப்பு கடவுளால் தரப்படுகிறது.

இத்தகைய எச்சரிப்பும், கடிந்து கொள்ளுதலுக்குப் பிறகும், லஞ்சம், பொய் வழக்கு, கொலை, கொள்ளை, பழி, அராஜகம், பேராசை, வெறியாட்டம் போன்ற அநீதியின் கூடாரத்தில் அடைக்கலம் கொண்டிருந்தனர் இஸ்ரயேல் மக்கள். இதன் விளைவாக, கடவுளின் கடும் கோபத்திற்கு ஆளாக நேர்ந்தது. எனவேதான் ஆமோ 5:24 நியாயம் தண்ணீரைப்போலவும், நீதிவற்றாத நதியைப்போலவும் புரண்டு வரக்கடவது" என்று கடவுளின் நீதியை குறித்து எடுத்துரைக்கிறது. பாதிக்கப்பட்டோருடன் நின்று நீதிக்கான பாதையை உருவாக்கி அதில் வழி நடப்போர் வழியாகத் தான் அடிமைத்தனச் சங்கிலிகள் உடைக்கப்படும் என்ற கருத்தை ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார் ஆமோஸ். ஆண்டவருடைய நாள் (ஆமோ 5:18) என்பது அசீரியப் படையெடுப்பினால் உடனே ஏற்படப்போகும் அழிவைக் குறிக்கிறது. "கடவுளின் நாள்" என்பது கடவுளைப் பற்றியோருக்கு மங்கலத் திருநாள், அதேசமயம் அவர் வார்த்தைகளைப் புறந்தள்ளியோருக்கு இருளின் நாள் என்றும் தெளிவை ஏற்படுத்துகிறார். இவை ஏழை, எளியோருக்கு ஆறுதலையும், விடுதலைக்கான நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. தங்களை நீதியாளர்களாகவும், சமூக நல்லிணக்கவாதிகளாகவும் வேடமிட்டுக் கொண்டிருந்தவர்கள் அசீரியாவுக்கு அடிமைகளாகக்

கொண்டு செல்லப்பட்டனர். அநீதியின் முழு மரம் போல் இருந்தவர்கள் ஆணிவேரோடு பிடுங்கி எறியப்பட்டு, அந்நிய மண்ணில் ஆதரவற்றவர்களாக ஆனார்கள்.

அன்றைய இஸ்ரயேலர், இன்று நமக்கு எச்சரிப்பின் பாடம். நம்முடைய சுயலாபத்திற்காக சமூக அந்தஸ்து உள்ளவர்களை முகஸ்துதிக்காக வாழ்த்துவதையும், வால் பிடிப்பதையும் விட்டுவிட்டு, தேவையில் இருப்பவர், உரிமைகள் மறுக்கப்படுவோர், ஏழை, எளியோருடன் நம்மை இணைத்துக் கொள்வோம். Martin Luther King Jr, நீதியைக் குறித்துச் சொல்லும்போது, True peace is not merely tension: it is the presence of justice என்கிறார். ஏழைகளைத் தூக்கிப் பிடிப்போரை எதிரிகளாய் பாவிக்கும் நாடு அநீதியானது. ஒடுக்கப்பட்டோருடன் உறவு பாராட்டுபவரை உதவாக்கரை என்று ஓரம் கட்டும் சமூகம் அக்கிரமம் நிறைந்தது. பயன் கருதா பாசத்தோடு கடவுள் மனுக்குலத்தை அரவணைப்பது போன்று, நாமும் ஏழை, எளியோரை அரவணைப்போம். அவர்களுக்கான நீதியை வழங்குவோம், நீதியின் ஒளி வீசச் செய்து ஒளிமயமான எதிர்கால உலகின் தீபங்களாகுவோம்.

***2. சமத்துவம் பாரில் பரவச் செய்வோம்:*** (திப 10:34-43)

திப 10:34-43 வரையிலான திருமறைப் பகுதி கொர்னேலியு இல்லத்தில் பேதுரு ஆற்றிய அருளுரையாகும். நற்செய்தி என்னும் இயேசு கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சார்ந்த மக்களுக்கானவர் அல்ல, மாறாக இவ்வுலகின் அனைத்து மக்களுக்குமான மீட்பர் என்ற தெளிவை ஏற்படுத்துகிறது (திப 10:34). நேர்மையுடனும், நீதி, நியாயத்துடனும் தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்பவர் கடவுளுக்கு ஏற்புடையவர் என்னும் தெளிவையும் ஏற்படுத்துகிறார் பேதுரு. இயேசுவின் பணி, சிலுவைப் பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், இயேசுவை குறித்த தீர்க்கதரிசன நிறைவேறுதல், அவரில் மானுடம் கொள்ளவேண்டிய நம்பிக்கையின் அவசியம் குறித்து எடுத்துரைக்கிறார். இதற்கான அடிப்படை அவசியம் அன்றைய காலத்தில் வாழ்ந்து வந்த செல்வந்தர், ஏழைகள், யூதக் கிறிஸ்தவர்கள், பிற இனத்துக் கிறிஸ்தவர்கள் இடையே நட்புறவு சிக்கல் இருந்து வந்தது. எனவே பிரிவினிகளைக் களைந்து, நல்லுறவை வளர்க்கும் அழைப்பை இயேசுவின் வாழ்வை மையமாகக் கொண்டு பேதுரு போதிக்கிறார். இந்நிகழ்வின் சிறப்பம்சம் என்னவென்றால், கொர்னேலியு பிற இனத்தவர், செல்வந்தர், கபடற்றிருந்தவர்.

பேதுரு மீனவராயிருந்து பின்னாளில் நற்செய்தி அறிவிக்க இயேசுவால் அழைப்பை பெற்றவர். ஆனால் கிறிஸ்தவ வரலாற்றில்

இவ்விருவரின் சந்திப்பும், நட்பும் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியது. இதற்கு காரணம் மீட்பின் வழியை அறிய கொர்னேலியுவுக்கு பேதுரு தேவைப்பட்டார். பிற இனத்தாரும் கடவுளின் திட்டத்தில் இடம் பெற்றுள்ளனர் என உணர பேதுருவுக்கு கொர்னேலியு தேவைப்பட்டார். கடவுள் மானிட வாழ்வில் எப்படி செயல்படுகிறார் என உணர நாமும் ஒருவருக்ககாருவர் தேவைப்படுகிறோம். சமத்துவத்தைக் குறித்து James Baldwin சொல்லும்போது, “Neither love nor terror makes one blind: indifference makes one blind” என்று குறிப்பிடுகிறார். கடவுளின் படைப்புகள் அனைத்தும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன. மற்றவற்றின் துணை இன்றி எதுவும் இவ்வையகத்தில் இயங்குவது இல்லை என்ற புரிதலோடு மத, இன, மொழி, கலாச்சார பாகுபாட்டால் நல்லுறவுகறள இழந்து விடாதபடி, அனைத்தும், அனைவரும் கடவுளின் சாயலை கொண்டிருக்கிறோம் என்ற புரிதல் கொண்டு இணைந்து, பகிர்ந்து வாழ்வோம். சமத்துவமும், நல்லிணக்கமும் மானிடப் பிரிவினருக்கு மட்டுமானது அன்று, அது கடவுளின் படைப்பான இயற்கைக்கும் பொருந்தும் என்ற தெளிவைப் பெற்று கடவுளின் படைப்புகள் அனைத்துடனும் இன்புற்று வாழ்வோம்.

### 3. இறையாட்சியின் தகவுகள் நம்மில் மலரச் செய்வோம்:

(மத் 23:23-28)

இயேசு கிறிஸ்துவின் போதனைகள் இறையாட்சியை மையப்படுத்தியே அமையப் பெற்றிருக்கின்றன. மலைப் பிரசங்கத்தில் நேர்மை, நீதி, சமத்துவம், அன்பு போன்ற நற்பண்புகளால் இறையாட்சியைச் சுதந்தரித்துக் கொள்ள முடியும் என இயேசு போதிக்கிறார். இயேசுவின் இத்தகைய போதனைகள் யூத சமுதாயத்தில் செல்வாக்குடன் செயல்பட்டு வந்த பரிசேயருக்கும், வேதபாரகருக்கும், சுயநலச் சிந்தனை கொண்டிருந்த சில தலைவர்களுக்கும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் இல்லை. இவர்கள் இயேசுவின் போதனைகளை அதிகம் எதிர்த்தவர்கள். இவர்கள் தங்களின் சுயநலமான போதனைகளால் மக்கள் மீது தங்கள் அதிகாரத்தைச் செலுத்தி வந்தனர். இயேசுவின் போதனைகள் இத்தகையோரின் முகத்திரைகளை அகற்றும் விதத்தில் அமையப் பெற்றிருந்தது. இதன் ஒரு பகுதியைத் தான் மத் 23:23-28 வரையிலான திருவசனங்கள் எடுத்துரைக்கின்றன. இவர்கள் கடவுள் அருளும் மகிழ்ச்சி வாழ்விற்கு என்று அழைக்கப்பட்டவர்கள். ஆனால், தங்கள் சுயநலம், வீண் பெருமைகளால் கேடுகளைப் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள். இறையாட்சியின் அடித்தளமான அன்பை மறந்து, தங்கள் குறுகிய சிந்தனை மற்றும் சட்டங்களால் மக்களுக்கு அநீதி ஏற்படுத்தினர், தங்கள் சுய பெருமைகளின் மீது கவனம்

செலுத்தி, மக்கள் துன்புறும் நிலையை ஏற்படுத்தினர். இத்தகைய தீயச்செயல்கள் கடவுளின் கடும் சினத்திற்குக் காரணமாயிற்று.

அன்றைய சமூக, சமயத் தலைவர்களின் நிலைப்பாடு இப்படி இருக்க, இயேசுவின் வாழ்வு சமூகத்தில் கடைநிலையில் விடுதலைக்காய்த் தவித்துக் கொண்டிருந்த மக்களை மையம் கொண்டிருந்தது. அவருடைய அணுகுமுறை அடிமைத்தன வாழ்வு வாழ்ந்த மக்களில் விடுதலையின் நம்பிக்கையை ஏற்படுத்தியது. பிறர் மீது அன்பு செலுத்துவதால் மகிழ்ச்சியான வாழ்வு அமையுமென்ற உண்மையை எடுத்துக் கூறியது. Allan F. Packer இறையாட்சி குறித்துச் சொல்லும்போது, Seeking the Kingdom of God leads to joy and happiness என்கிறார். இறையாட்சி என்பது நம்மில் அமையப் பெற்றிருக்கிறது, அது அன்றாட வாழ்வில் பிறரோடு எந்த நிலையில் நல்லுறவைப் பேணி வாழ்கிறோம் என்பதைப் பொறுத்தது என்ற தெளிவை இயேசுவின் போதனைகளும், வாழ்வும் எடுத்துக் கூறுகின்றன. இயேசுவின் வாழ்வு கைவிடப்பட்டோர், எளியோர், வாய்ப்புகள் மறுக்கப்பட்டோர், உரிமை இழந்தோர், கைம்பெண்கள், சமூகக் கட்டமைப்பின் கடைநிலையில் வாழ்ந்தவர்களைச் சார்ந்தே இருந்தது. இயேசுவைப் போன்று நம்முடைய வாழ்வும் அமையும் பட்சத்தில் இறையாட்சி நம்மில் மலரும்; நாமும் பிறர் வாழ்வில் நறுமணம் வீச முடியும்.

இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த போது சுயநலமற்ற கரிசனையை வெளிப்படுத்தினார், அதன் நிறைவே சிலுவைப் பாடுகள். இயேசுவின் தியாக வாழ்விற்குச் சான்றாக இருக்கும் திருமறையின் வெளிச்சத்தில் நடக்கும் நம்மில் நீதியின் ஒளி வீசட்டும்; சமத்துவம் பாரில் பரவட்டும்; இறையாட்சி நம்மில் மலரட்டும்.

திரு. **ஆ. ஜெனில் தாஸ்**

30-01-2022

**திருத்தோற்றத் திருநாளுக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு**

# ஆண்டவரைப் போற்றுங்கள் (இறைவழிபாடு)

**PRAISE THE LORD (WORSHIP)**

விப 9:1-7 திவெ 5:1-14
திபா 81 யோவா 2:13-22

**...விண்ணுலகு, மண்ணுலகு, கீழுலகு, கடல் எங்கும் இருந்த படைப்புகள் அனைத்தும், அவற்றில் இருந்த ஒவ்வொன்றும், "அரியணையில் வீற்றிருப்பவருக்கும், ஆட்டுக்குட்டிக்கும் புகழ்ச்சியும் மாண்பும் பெருமையும் ஆற்றலும் என்றென்றும் உரியன" என்று பாடக் கேட்டேன்** (திவெ 5:13).

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக, மனுவைப் படைத்தான் தனை வணங்க" என்று பாடினார் தக்கலை பீரப்பா அவர்கள். கடவுள் இந்த உலகைத் திட்டமிட்டுப் படைத்ததைத் திருமறை அழகாகப் பதிவு செய்கிறது. கடவுளின் படைப்பின் மகுடமாய் அமைந்தது மனிதரின் படைப்பு. அந்த மனிதரை, தம்மைப் போற்றும்படியாகவே படைத்தார் என்கிறது திருமறை.

ஆனால் உலகப் பற்று மனிதர்களைக் கடவுளை விட்டுத் தூரம் போகச் செய்கிறது. மேலும், ஆண்டவரைப் போற்றும் உன்னத வாய்ப்பினை இழக்கச் செய்கிறது. உலகின் எண்ணங்கள், கவலைகள், சூழல்கள் ஆண்டவரைப் போற்றவிடாமல் நம்மைத் தடை செய்கின்றன.

ஆனால், ஆண்டவரைப் போற்ற வேண்டும் என்பது நமக்குத் தரப்பட்டிருக்கிற விதிமுறை. அது கடவுள் தந்த நீதிநெறி என்று திருமறையில் காண்கிறோம் (திபா 81:4). அனைத்து உயிர்களும் ஆண்டவரைப் போற்றிப் புகழ வேண்டும் (திபா 150).

நம்முடைய ஆண்டவரைப் போற்றும்படியாகத் தெரிவு செய்யப்பட்ட நாம், அவரை எப்படித் தொழுது கொள்ள வேண்டும் என்பதனைத் திருமறைப் பகுதிகளின் வெளிச்சத்தில் சிந்திப்போம்.

## *1. அடிமைத்தனத்தைக் களைந்து போற்றுவோம்* :

கடவுள் ஒருபோதும் மனித அடிமைத்தனத்தை ஆதரிப்பவர் அல்லர்; மாறாக, விடுதலை வாழ்வை முன்வைப்பவர். இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் அடிமைத்தனத்தில் சிக்குண்டு தவித்தபோது, கடவுள் மோசேயைத் தெரிவுசெய்து அனுப்புகிறார். இஸ்ரயேல் மக்களை விடுவிக்கச் சொல்லும் இறைவர், அதற்குரிய காரணத்தையும் மோசே

வழியாக வெளிப்படுத்துகிறார். பார்வோனிடம் மோசே சென்று, இஸ்யேல் மக்களை விடுவிக்க வலியுறுத்தும் போது இஸ்ரயேல் மக்களின் விடுதலைக்குக் கடவுள் சொல்லும் காரணம், “என் மக்கள் என்னை வழிபடுவதற்காக விடுதலை செய்யப்பட வேண்டும்” என்பதாகும் (விப 9:1). விடுதலை சிந்தையோடு தான் கடவுளை உண்மையுடன் தொழுதுகொள்ள முடியும், போற்ற முடியும்.

இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கை அடிமைப்பணி செய்வதிலும், மரணத்தினின்று தங்கள் குடும்பத்தின் குழந்தைகளைக் காப்பதிலும் கவனம் செலுத்தும் போது, கடவுளை எப்படி உளமார தொழுதுகொள்ள முடியும்? எனவே, அடிமைத்தனத்தை களைந்து தம்மக்களை மீட்டெடுக்க இறைவர் சித்தம் கொள்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் காலத்திலும் இந்நிலை இருந்ததைக் காண இயலும். யூதரல்லாதோர் எருசலேம் கோவிலுக்குள் சென்று கடவுளைத் தொழுதுகொள்ள அனுமதி இல்லை. சமாரியப் பெண்ணுடனான இயேசு கிறிஸ்துவின் உரையாடல் வழியே இது வெளிப்படுவதை நாம் காண இயலும். இயேசு கிறிஸ்து, “கடவுளை எல்லா இடங்களிலும் வழிபட வேண்டும்” என்ற ஆவலை வெளிப்படுத்துகிறார் (யோவா 4:21).

நம்முடைய முன்னோர்களும் அடிமைத்தனத்தினாலும், சாதிய அடக்கு முறைகளாலும் பாடுபட்டவர்களாய், கடவுளைத் தொழுதுகொள்ள இயலாமல் தவித்த போது, அருள்பணியாளர்கள் வழியே கடவுள் விடுதலையை, மீட்பினைக் கொண்டு வந்தார். முழு உள்ளத்தோடு கடவுளைப் போற்ற உதவி செய்தார். இன்று, சாதி, இனத்தின் பெயரால் திருச்சபையில் பிளவுகள், பிரிவுகள் இருப்பது அடிமைத்தனத்தின் கூறுபாடுகளே. இந்த அடிமைத்தனம் மாறினால் மட்டுமே உண்மையாய்க் கடவுளை நாம் போற்ற முடியும். அடிமைத்தனங்களை முற்றிலும் களைவோம். “இறைவரைப் போற்றுவோம்”.

### *2. அவநம்பிக்கைகளை விடுத்துப் போற்றுவோம்* :

நம்மில் காணப்படுகிற நம்பிக்கையின்மையை விடுத்து, முழுமையான நம்பிக்கையோடு கடவுளைப் போற்றும்படியாக நாம் அழைக்கப்படுகின்றோம். “ஒரு சிறிய நம்பிக்கை நம் மனதை இறையாட்சிக்குக் கொண்டுசெல்லும். ஆனால், பெரிய நம்பிக்கை இறையாட்சியை நம் மனதினுள் கொண்டு வரும்” என்றார் டி.எல்.மூடி.

யோவான் கண்ட திருக்காட்சியில் வியத்தகு நிகழ்வினை நாம் காண முடியும். எசாயா இறைவாக்கினர் கண்ட காட்சி போலவே, சிங்காசனத்தில்

வீற்றிருக்கிற ஒருவரையும், எசேக்கியேல் கண்ட காட்சிப் போன்று உட்புறமும், வெளிப்புறமும் எழுதப்பட்ட சுருளேட்டையும் காட்சியாக காண்கிறார். இந்தச் சுருளேட்டை திறந்து படிக்க யாராலும் முடியவில்லை என்ற போது, யோவான் கண்ணீர் வடிக்கின்றார் (திவெ 5:4). அவருள் இருந்த அவநம்பிக்கையே இங்கே கண்ணீராக வெளிப்பட்டது.

மனுக்குலத்தின் நம்பிக்கை சிதறி விடுமே, அடிமைத்தனங்கள் முறியடிக்கப்படாத நுகமாக மாறி விடுமே என்ற அச்சம் அவரை ஆட்கொண்டது. ஆனால், மூப்பருள் ஒருவர் நம்பிக்கை நிறைந் வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார். “அழாதே, யூதா குலத்தின் சிங்கமும், தாவீதின் குலக்கொழுந்துமானவர் வெற்றி பெற்று விட்டார். அவர் அந்த ஏழு முத்திரைகளையும் உடைத்து ஏட்டைப் பிரித்து விடுவார்” என்று நம்பிக்கையோடு கூறுகிறார் (திவெ 5:5). அதன் பிறகு அங்கு நின்ற அனைத்து மூப்பர்களும், வானதூதர்களும் வாழ்த்தி, கடவுளைப் போற்ற ஆரம்பித்தார்கள். அவநம்பிக்கை உடையும் போது நாம் நம்பிக்கையோடு கடவுளைப் போற்ற முடியும்.

செங்கடலைக் கடந்து வந்த போது, இஸ்ரயேல் வாழ்த்திப் பாடிய பாடல் அவர்களது நம்பிக்கையினை சுமந்து நிற்கிறது (விப 15). மரியாவின் பாடல், ஒரு ஏழைப் பெண்ணின் நம்பிக்கையை பறைசாற்றும் ஊடகமாக உள்ளது (லூக் 1). நாமும் நம்மில் உள்ள அவநம்பிக்கைகளை விடுத்து, நம்பிக்கையோடு கடவுளை போற்றுவோம்.

### *3. அசுத்தங்களை அகற்றிப் போற்றுவோம்* :

இறைஇல்லம் தூய்மையானது. ஆலயங்களில் நாம் கடவுளைத் தொழுதுகொள்ளும் போது தூய்மையுடன் தொழுதுகொள்ள வேண்டும். கடவுளை நாம் தொடர்பு கொள்ளும் இடங்கள் எல்லாமே தூய்மையானது தான். எனவே தான் மோசேயோடு எரிகிற முட்செடி வழியே பேசும் போது காலணிகளை கழற்றும் படியாகக் கேட்டுக் கொள்ளப் படுகின்றார் (விப 3:5).

நற்செய்திப்பகுதி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, எருசலேம் கோவிலைத் தூய்மைப்படுத்திய நிகழ்வினைச் சுட்டிக்காட்டுகிறது. இயேசுகிறிஸ்து எருசலேம் கோவிலுக்குச் சென்ற போது அங்கிருந்த அசாதாரண சூழல் அவரைக் காயப்படுத்தியது. வியாபாரக்கூட்டம், ஆடுமாடுகளின் சத்தங்கள், நாணயங்களின் ஒலி என அந்த இடம் சந்தையினை நினைவுபடுத்தியது. இது இயேசு கிறிஸ்துவை ஒரு புதிய பார்வைக்கு அழைத்துச் சென்றது.

பொதுவாக மென்மையான போக்கைக் கடைப்பிடிப்பவர் இயேசு கிறிஸ்து. அவரது வார்த்தைகள் கடினமாய் சில தருணங்களில் வெளிப்பட்டாலும் அவர் கைநீட்டி வன்முறையில் இறங்குவதில்லை. ஆனால், இங்கோ இயேசு கிறிஸ்து ஒரு சாட்டை உண்டுபண்ணி அனைவரையும் விரட்டினார் என்று காண்கிறோம் (யோவா 2:15,16). ஆலயம் அசுத்தம் இன்றி தூய்மையுடன் இருக்க வேண்டும். கடவுளைத் தூய சிந்தையுடன், தூய்மையான சூழலில் போற்ற வேண்டும் என்பது அவரது விருப்பம்.

“கிறிஸ்து இவ்வுலகில் நடந்து கொண்ட முறை தூய்மைக்கு அளவுகோலாக நமக்கு முன் எப்பொழுதும் வைக்கப்பட்டிருக்க வேண்டும்” என R.C. சேப்ருமன் கூறுகிறார். நாமும் நம் உடலாகிய ஆலயத்தை கிறிஸ்தேசுவைப் போலவே தூய்மையாகப் பேணுவோம் என்றால் கடவுளை நாம் முழு உள்ளத்தோடு போற்ற முடியும்.

கடவுளைப் போற்றுவதற்காகவே நாம், இறைவரால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறோம். நம்மில் உள்ள தீமையான அடிமைத்தனங்களைக் களைவோம். அவநம்பிக்கைகளுக்கு விடைகொடுத்து நம்பிக்கைக்கு உயிர்கொடுப்போம். அசுத்தங்களைக் களைந்து ஆலயத்தையும் நம் உடலையும் தூய்மையாக பேணுவோம். ஆண்டவரை அகமகிழ்ந்து போற்றுவோம்.

அருள்திரு. M. **கிதியோன்**

06-02-2022

உயிர்ப்புக்கு முன்வரும் ஒன்பதாம் ஞாயிறு

# கிறிஸ்துவே வாழ்வின் முன்மாதிரி

## CHRIST THE PATTERN FOR LIFE

| | |
|---|---|
| விப 20:1-17 | எபி 3:1-14 |
| திபா 72:11-20 | லூக் 10:25-37 |

**"... கடவுளுக்கு நம்பிக்கைக்குரியவராக இருந்தார்"** (எபி 3:2).

வாழ்வு என்பது ஒரு பயணம். பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட தூரமே வாழ்வு, ஆனால் கிறிஸ்தவ நம்பிக்கையின்படி வாழ்வு என்பது இறப்போடு நின்றுவிடுவது அல்ல; அது உயிர்த்தெழுதலில் துளிர்த்து தொடர்ந்து செல்வது. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இதனை தெளிவுபடுத்துகிறது. கிறிஸ்தவ வாழ்வு இயேசுவின் அடித்தளத்தில் அமைத்து, அவரை பின்பற்றுவதில் முழுமையடைகிறது எனலாம். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவிக்கவும், நித்திய வாழ்வுக்கான வாசலை திறக்கவுமே இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் மனிதராக பிறந்து, நம்மைப் போல் வாழ்ந்து, பாடுபட்டு, மரணமடைந்து, உயிர்த்தெழுந்து பரமேறினார் என்ற கிறிஸ்தவ நம்பிக்கையைக் காட்டிலும், ஒரு மனிதராக நாம் எப்படி வாழ வேண்டும் என்கின்ற வாழ்வின் மாதிரியை காண்பிக்கும்படியாகவே இவ்வுலகத்திற்கு வந்தார் என்ற நம்பிக்கை இயேசு கிறிஸ்து கிறிஸ்தவத்திற்குரியவர் மட்டுமல்ல முழு மனுக்குலத்திற்கும் முன் மாதிரியானவர் என்பதை நாம் காண உதவி செய்யும். அப்படி இயேசு கிறிஸ்துவின் வாழ்வின் வழி நாம் கற்றுக் கொள்ள வேண்டிய முன் மாதிரிகள் என்ன என்பதை காணலாம்.

### *1. நம்பிக்கைக்குரியவராய் வாழ்தல்:* (எபி 3:14)

இயேசு எல்லாவற்றிற்கும் மேலானவர், அவரே முழுமையான, முடிவான வெளிப்பாட்டைத் தருகிறார். அவர் இறைவாக்கினர், வானதூதர், மோசே என்பவர்களை காட்டிலும் மேலானவர் என இயேசுவின் மேன்மையை விளக்கி காட்டும் எபிரேய ஆக்கியோன் இவற்றிற்கெல்லாம் அடிப்படையாகச் சுட்டிக்காட்டுவது கிறிஸ்து இயேசு தந்தையாம் கடவுளின் நம்பிக்கைக்குரிய பாத்திரமாக இருந்தார் என்பது தான்.

யூத சமயத்தில் இருந்து கிறிஸ்தவத்தை ஏற்று இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள், தாங்கள் பெற்றுக்கொண்ட நற்செய்தியை

யூத சமயத்திற்குரியதாக மட்டுப்படுத்தி மற்றவர்களிடம் இருந்து தங்களை வேறுபடுத்தி கொண்டு வாழும் நிலைக்கு ஆயத்தப்பட்ட வேளையில் எபிரேய ஆக்கியோன் இயேசு கிறிஸ்துவின் வாழ்வின் மாதிரியை அவர்களுக்கு எடுத்துக்காட்டி கடவுளின் நம்பிக்கைக்குரியவராய் வாழும் வாழ்வுக்கு அழைப்புக் கொடுக்கிறார். ஒவ்வொரு வீட்டையும் கட்டி எழுப்ப ஒருவர் இருப்பது போல, எல்லாவற்றையும் கட்டி எழுப்புகிறவர் ஒருவர் இருக்கிறார், அவர் கடவுளே (எபி 3:4). கடவுளின் மக்களாக இஸ்ரயேலர் என்னும் ஒரு சமூகத்தைக் கட்டி எழுப்பும் கருவியாக மோசே இருந்திருக்கலாம். ஆனால் இஸ்ரயேலரைத் தாண்டியும் கடவுளின் மக்களாக கட்டப்பட வேண்டிய பல சமூகங்கள் இவ்வுலகில் உண்டு. அதைக் கட்டுகிறவர் கடவுளே. அப்படிப்பட்ட அனைத்துலக மக்களின் வாழ்வையும் கட்டி எழுப்பும் கடவுளின் திட்டத்திற்கு நம்பிக்கைக்குரியவராய் வாழ்ந்தவர் இயேசு கிறிஸ்துவே, எனவே அவரைப் போல வாழ வேண்டும் என்கிற அழைப்பு யூத கிறிஸ்தவர்களுக்கு எபிரேயர் ஆக்கியோனால் கொடுக்கப்படுகிறது, இவ்வழைப்பு நமக்கும் கொடுக்கப்படுகிறது.

கடவுளின் நம்பிக்கைக்குரியவராய் வாழ்தல் என்பது சுயநலத்தை சார்ந்ததல்ல; ஒரு இனத்தையோ, சமயத்தையோ, திருச்சபைப் பிரிவையோ சார்ந்தது அல்ல. இயேசு கிறிஸ்துவின் வாழ்வு இதற்கு ஒரு சிறந்த முன்மாதிரி. இயேசு கிறிஸ்துவின் வாழ்வு யூதருக்கானது மட்டுமல்ல அனைத்துலக படைப்புகளுக்குமானது, அவரின் வாழ்வு வேறுபாடுகளையும், எல்லைகளையும் தாண்டி சென்றது. யூத சமயத்தை கடந்து யூதரல்லாதவரையும் அரவணைத்து, சமூகத்தில் மதிப்பு மிகுந்தவர்களாக கருதப்பட்டவர்களையும் தாண்டி விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்காக குரல் கொடுத்தது, சமயத்தின் ஆடம்பரங்களை களைந்து ஏழை எளியவர்களின் விடுதலைக்காக போராடியது. இயேசு கிறிஸ்துவின் இத்தகைய வாழ்வு, அவரைக் கடவுளின் நம்பிக்கைக்குரியவராய் உலகத்தில் வெளிக்காட்டியது, அவருடைய இவ்வாழ்வை பின்பற்றும் திருச்சபையாக நம்முடைய திருச்சபைகள் மாற வேண்டும். நம்பிக்கைக்குரியவராய் வாழ்பவர் வேறுபாடுகளையும், எல்லைகளையும் தாண்டிச் செல்லும் கடவுளின் திட்டத்திற்கு தன்னை இணைத்து கொள்வதின் வாழியாய் கிறிஸ்துவின் பங்காளியாய் மாற முடியும் (எபி 3:14). இயேசுவின் இவ்வாழ்வின் முன்மாதிரியைப் பின்பற்றுவதில் இருந்து விலகிச் செல்வது கடவுளை விட்டு விலகிச் செல்லும் வாழ்வுக்கு ஒப்பாகும். இதனையே எபி 3:12, நம்பிக்கைக் கொள்ளாத தீய உள்ளம், வாழும் கடவுளை விட்டு விலகும். இத்தகைய தீய உள்ளம் உங்களுள் எவருக்கும் இராதபடி பார்த்துக்கொள்ளுங்கள் என்கிறது.

இயேசுவை போல நம்பிக்கைக்குரியவராய், திருச்சபை அனைவரையும் வேறுபாடுகளின்றி ஏற்றுக் கொண்டு வாழ வேண்டும். சமயம், சாதியம் கடந்து விளிம்பு நிலை மக்களுக்காகவும், ஆடம்பர பண்டிகைகளை களைந்து ஏழை எளியவர்கள் விடுதலைக்காகவும் போராட வேண்டும்.

## *2. நிலைவாழ்வுக்கு வழிநடத்துபவராய் வாழ்தல்*

லூக்கா 10:25-37 வரை உள்ள வசனங்களில் காணப்படும் இயேசு கிறிஸ்துவுக்கும் திருசட்ட அறிஞர் ஒருவருக்கும் இடையே நடைபெறும் உரையாடல் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்? என்ற திருச்சட்ட அறிஞரின் வினாவோடு தொடங்கும் உரையாடல், நீயும் போய் அந்தபடி செய் என்ற இயேசு கிறிஸ்துவின் பதிலோடு முடிவடையும். இயேசு கிறிஸ்துவின் பதில் ஒரு உவமையின் வழியாக விளக்கப்படுவது இவ்வுரையாடலின் சிறப்பு. பலர் பல விதங்களில் இவ்வுரையாடலையும், உவமையையும் பொருள் கொள்ளுவர், சமாரியன் உவமையில் வரும் கதாபாத்திரங்களிலும், உருவகங்களிலும் இயேசு கிறிஸ்து எங்கு இருக்கிறார் என்பதை தேடுவதையும். விளக்குவதையும் காட்டிலும், இந்த உவமையை இயேசு கிறிஸ்து திருச்சட்ட அறிஞரின் வினாவுக்கான பதிலாகச் சொன்னார் என்பதோடு நிறுத்திக் கொண்டு பொருள் காண முயல்வது சிறந்தது. உவமையில் இயேசு கிறிஸ்து எங்கு என்பதைக் காட்டிலும், ஒட்டு மொத்த உடையாடலில் இயேசு யார் என்பதை காண முயல்வது இன்றிமையாதது. அவ்வாறு உற்று நோக்கும் போது வெளிப்படும் உண்மை இயேசு கிறிஸ்து நிலைவாழ்வுக்கு பிறரை வழிநடத்துபவராய் இருக்கிறார் என்பது தான்.

ஒரு மனிதர் மற்றொரு மனிதரை நிலைவாழ்வுக்கு வழிநடத்துவபராய் இருக்க வேண்டும் என்பது இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் வெளிப்படும் மாதிரி ஆகும். அந்த நிலைவாழ்வு அனைவருக்குமுரியது. ஆனால் திருச்சட்ட அறிஞரின் சிந்தனையோ இதற்கு எதிர்மறையாக இருந்தது. நிலைவாழ்வு என்பது யூதர்களுக்கு மட்டும் தான். இவ்வாழ்வும் மோசே வழியாக கடவுளால் அருளப்பட்ட திருச்சட்ட நூலின் வழியாக மட்டுமே பெற முடியும் என்பது யூத சமய சிந்தனை. இயேசு கிறிஸ்துவோ திருச்சட்ட நூல் யூதர்களுக்குரியது மட்டுமல்ல என்ற உண்மையை "உனக்கு அடுத்திருப்பவர் சமாரியர் அவர் மீதும் அன்பு கூர்வாயாக" என்று திருச்சட்ட நூலின் போதனையை சமாரியன் உவமையின் வழியாக வலியுறுத்தி, நிலைவாழ்வு அனைவருக்குமுரியது, எனவே பிறரையும் நிலைவாழ்வுக்கு நேராய்

நடத்துவதே சிறந்தது என்று பதில் அளித்தார். இயேசு கிறிஸ்துவின் வாழ்வு திருச்சட்ட அறிஞர் மட்டுமல்ல, அனைவரையும் நிலைவாழ்வுக்கு நேராய் வழிநடத்துவதாய் அமைந்தது.

எபிரேய ஆக்கியோன் இவ்வுண்மையை விடுதலை பயண நிகழ்வோடு தொடர்புபடுத்தி விளக்குகிறார். இளைப்பாற்றின் நாட்டிற்கு நேராய் இஸ்ரயேலரை வழிநடத்தும் விடுதலைப் பயணம் கடவுள் வரலாற்றில் அடிமைப்படுத்தப்படும், அடக்குமுறைகளுக்கு ஆளாக்கப்படும் மக்கள் யாராக இருந்தாலும் அவர்களை விடுவிப்பார் என்பதற்கான ஒரு அடையாளம். ஆனால் முதல் நூற்றாண்டு யூத கிறிஸ்தவர்களின் ஒரு பிரிவினர் கடவுளின் இவ்வன்பின் செயலை ஏற்க மறுத்தனர். எனவே விடுதலைப்பயண நிகழ்வை சுட்டிக்காட்டியும், கடவுளின் எல்லைகள் கடந்த அன்பின் செயல்பாட்டை இயேசு கிறிஸ்துவின் வாழ்வின் வழி விளக்கி காட்டியும் எபிரேய ஆக்கியோன் "நீங்கள் எவரும் கடின உள்ளத்தினர் ஆகாதவாறு வாழுங்கள்" (எபி 3:13) என்று அறிவுரை கூறுகிறார். திருச்சபை இவ்வுண்மையை புரிந்து செயல்பட வேண்டும். பிறரை நிலைவாழ்வுக்கு நேராய் வழிநடத்துவது திருச்சபையின் கடமை என்பது இயேசு கிறிஸ்துவின் வாழ்வு நமக்க கற்றுத்தரும் முன்மாதிரி ஆகும்.

திருச்சபையின் சட்டங்களை ஒழுங்காக கடைபிடித்து, காணிக்கைகள் கொடுத்து, பண்டிகைகளை கொண்டாடி திருச்சபையின் சிறந்த உறுப்பினராக இருப்பதைக் காட்டிலும், இயேசு கிறிஸ்துவின் வாழ்வின் முன்மாதிரியைப் பின்பற்றி கடவுளின் நம்பிக்கைக்குரிய பாத்திரமாய், பிறரை நிலைவாழ்வுக்கு வழிநடத்தும் திருச்சபையின் உறுப்பினராய் வாழ்வது சாலச் சிறந்தது. அவ்வாழ்வுக்கு நம்மை அர்ப்பணிப்போம்.

திரு. E. **ஐசக் பால்**

06-02-2022

கிறிஸ்தவப் பக்திமுயற்சி சங்க ஞாயிறு

# திறன் மிகு இளையோர்

**(SKILLED YOUTH)**

தானி 1:1-8 யாக் 1:19-27
திபா 127 மத் 19:16-25

**"இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள்."** (யாக் 1:22).

மனுக்குலத்தில், மனிதனின் வளர்ச்சியில் இளமைப் பருவம் என்பது கடவுளால் அருளப்பட்டிருக்கின்ற மாபெரும் அருட்கொடையாகும். முழுமையான ஆற்றலும், தாலந்துகளும் உள்ளடங்கிய ஓர் இணையற்ற பருவம் இளமைப் பருவமாகும். மகிழ்ச்சியோடு இருப்பதற்கும், படைத்தவரை நினைப்பதற்கும் அழைக்கப்படுகின்ற பருவம் இந்த இளமைப் பருவம். திருமறையை ஆழ்ந்து வாசிக்கும் போது, அதிலே இளையோர்க்கு ஒரு மிகப்பெரிய அறைகூவல் மாத்திரமல்ல, அழைப்பும் கொடுக்கப்பட்டிருப்பதை அறிந்து கொள்ள முடியும். இப்படிப்பட்ட இளமைப் பருவத்தில், வார்த்தையில் மட்டுமல்ல வாழ்விலும், சொல்லில் மட்டுமல்ல செயலிலும் திறன் மிகு இளையோராகத் திகழ, கடைப்பிடிக்க வேண்டியவற்றைக் குறித்துத் தியானிப்போம்.

### *1. கறை திரையற்ற வாழ்வு* : (தானி 1:8)

கி.மு. 605இல் யோயாக்கிமின் மேல் நெபுகத்னேசருக்குக் கடவுள் வெற்றியளித்த போது, அவர் தேவாலயத்திலிருந்த பாத்திரங்களையும், சில அரச குமாரர்களையும் தன்னோடு கொண்டு சென்றார். இதற்கு சில வருடங்களுக்கு முன்னதாக நினிவே அழிந்த காலத்திலிருந்தே பாபிலோனிய அரசு வேகமாக வளரத் தொடங்கியது. ஆனாலும் அரசாங்கத்தை நடத்த போதுமான கல்விமான்கள் அவர்களுக்குள் இல்லாமலிருந்தார்கள். அதனால் நல்ல அழகும், ஆரோக்கியமும், அறிவும் மிகுந்த வாலிபர்களைப் பாபிலோனுக்குக் கொண்டு சென்று, கல்தேயருடைய மொழியையும், கலாச்சாரத்தையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து, அரண்மனைச் சேவைக்கு அவர்களைப் பயன்படுத்த நெபுகத்னேசர் நினைத்தார். அதனால்தான் தானியேல் மற்றும் அவரது நண்பர்கள் பாபிலோனுக்குக் கொண்டுவரப்பட்டார்கள்.

தானியேல் எந்தச் சூழ்நிலையிலும், எந்தச் செயலினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தக்கூடாதென்று ஆரம்பத்திலேயே தீர்மானித்துவிட்டார். தன்னைக் கண்காணிக்கவோ, ஆலோசனை

சொல்லவோ பெற்றோர் உடனில்லாவிட்டாலும், சுயக்கட்டுப்பாட்டோடு தானியேல் செயல்பட்டதால், கடவுள் அவருக்கு சகல எழுத்திலும், ஞானத்தையும், அறிவையும், சாமர்த்தியத்தையும் கொடுத்தார்.

நல்லதானாலும், தீயதானாலும், வெற்றியானாலும், தோல்வியானாலும் அவைகளுக்கான விதைகள் விதைக்கப்படும் காலம் இளமைப்பருவம். வாலிப வயதுகளில் ஒருவர் எப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை முறையைத் தெரிந்து கொள்வாரோ அதற்கேற்பவே அவருடைய எதிர்காலத்தின் வெற்றியும், தோல்வியும் அமையும். தானியேலும் பாபிலோனில் எந்தச் செயலினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தாமல், கறைதிரையற்ற தூய வாழ்வு வாழத் தீர்மானித்து, அதிலே உறுதியாகச் செயல்பட்டதால், உயர்வான இடத்திலே கடவுளால் அமர்த்தப்பட்டார். இன்றைய இளையோரும் திறனுடையோராகக் காணப்பட கறைதிரையற்ற வாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். உயர்வான வாழ்வைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

### ***2. கடவுளின் வார்த்தையை ஏற்கும் வாழ்வு*** : (யாக் 1:21)

ஒருமுறை போதகர் ஒருவர் தன் திருச்சபையின் வாலிபர் ஒருவரிடம் ஓர் ஆன்மிகத் தினசரி தியான நூலை வாசிக்கக் கொடுத்த போது, இரண்டு மாதங்கள் கழித்துப் பெற்றுக் கொள்கிறேன் என்றார். காரணத்தைக் கேட்டபோது, தேர்வுக்காலங்களில் திருமறையோ அல்லது வேறெந்த புத்தகங்களையோ படிப்பதற்குத் தனக்கு நேரம் இருக்காது என்றார். “அப்படியென்றால் இந்த இரண்டு மாதமும் நீ சாப்பிடவும் மாட்டாயா?” என்று கேட்டார் போதகர். “சாப்பிடாமல் எப்படி வாழ முடியும்?” என்று கேட்டார் வாலிபர். “ஆண்டவர் தருகின்ற ஆத்தும ஆகாரமாகிய அவருடைய வார்த்தையைப் படிக்காமல் உன்னால் இரண்டு மாதங்கள் இருக்கமுடிகிறதே?” என்றார் போதகர்.

இன்று பலருக்கு திருமறை வாசிப்பு, ஆண்டவருடைய ஆலோசனைகள் எல்லாம் நேரம் கிடைத்தால் மட்டுமே. மனிதருக்கு ஆன்மிக உணவுதான் ஆண்டவருடைய வார்த்தைகள். அவைகளைத் தியானிப்பதால் ஆத்துமாவில் ஆன்மிகப் பலம் வரும்; மனதில் தெளிவு வரும். இதயத்தில் நல்ல குணங்கள் தோன்றும். குழப்பமான சூழ்நிலைகளில் நல்ல வழிகாட்டுதல்கள் தோன்றும்.

மனிதர் தங்களின் அறிவு, ஞானம், புத்தி ஆகியவற்றைக் கொண்டும் வெற்றிகளைக் காணமுடியும். ஆனால் ஆண்டவருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு, அவைகளை வாசித்து, தியானிக்கும் போது, அங்கே சரியான வெற்றியின் பாதைகள் காண்பிக்கப்படுகின்றன.

ஆண்டவருடைய வார்த்தைகளின் மூலமாக அவருடைய கூட்டுறவு, அவருடைய நோக்கம், அவருடைய திட்டம், அவருடைய வழிநடத்துதல்கள், அவருடைய அன்பு போன்றவைகளை நாம் சுவைக்க முடியும். ஏனென்றால், இறைவார்த்தைகளின் பின்னால் ஆண்டவர் இருக்கின்றார். அவைகளால் வெற்றி உண்டு. இன்றைய இளையோர் திறன்களை வளர்த்துக் கொள்ளுகின்ற அதே வேளையில், ஆண்டவருடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். வாழ்க்கையில் கடைப்பிடியுங்கள்; வெற்றியுள்ள வாழ்வு வாழுங்கள்.

### *3. கரிசனையோடு பகிரும் வாழ்வு* : (மத் 19:21)

இன்றைய உலகத்தில் திறன் கொண்ட வாலிபரின் ஆன்மிகம் எவ்வாறு இருக்க வேண்டுமென்றால், அது ஆண்டவருக்கென்று தங்களுடைய உடைமைகளைப் பகிர்ந்தளிக்கின்ற வாழ்வாக இருக்க வேண்டும். இந்தப் பகுதியில் சொல்லப்பட்டிருக்கின்ற செல்வரான இளைஞர் பற்றி மத்தேயு, மாற்கு, லூக்கா போன்ற மூன்று நற்செய்தியாளர்களுமே குறிப்பிடுகிறார்கள். எல்லாருமே இவரை இயேசுநாதரிடம் வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றவராகத்தான் குறிப்பிடுகின்றார்கள். அவரிடம் காணப்பட்ட சில நல்ல பண்புகள், செயல்கள் அவருக்குச் சாதகமாக இருந்தன. அதாவது, அவர் நல்லொழுக்கமுள்ளவராயும், பக்தியுள்ளவராயும், திறமையான எல்லாத் தகுதியும் மிகுந்தவராகவும் இருந்தார். இவைகளெல்லாம் இருந்தும் அவர் இயேசுநாதரைப் பின்பற்ற மறந்து தன் வழியே துக்கத்தோடு திரும்பிச் சென்றதாகத் திருமறை குறிப்பிடுகின்றது.

இதை ஆராய்ந்து பார்க்கும் போது, அவரிடத்தில் காணப்பட்ட ஒரு தவற்றை நம்மால் அறிந்து கொள்ள முடியும். அதை ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் நேர்மையற்றவராக இருந்தார். அவர் சரியான நபரிடம் வந்து, சரியான கேள்வியைக் கேட்டு, சரியான பதிலைப் பெற்றும், சரியான முடிவை எடுக்கவில்லை. ஏன் அவர் கடவுளிடத்திலும், தன்னிடத்திலும் நேர்மையில்லாதவராக இருந்தார்?. மத் 19:21 இல் இயேசு அந்த வாலிபரிடம் ".... நீ போய் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும்... பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" என்றார். இயேசுநாதரிடமிருந்து என்ன செய்ய கட்டளை பெற்றாரோ அதைச் செய்யத் தவறினார். செல்வரான இளைஞருக்குப் பகிர்ந்து அளிக்கின்ற வாழ்வை வாழ்வதற்கான அறைகூவலை ஆண்டவர் கொடுத்தார். அவருடைய பலவீனமான பகுதியான ஆஸ்தியில் சோதித்தார். அவர் தன் உடைமைகளைப் பகிர்ந்து கொடுக்க ஆயத்தமாக இல்லை. தன் ஆஸ்திகளை விடவும் ஆண்டவருக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவரை முதலிடத்தில் வைக்க விரும்பவில்லை.

இயேசுகிறிஸ்து தம்மைத் தேடிவரும் அனைவரையும் அவர்களுக்குரிய எல்லாவற்றையும் விற்று ஏழையர்க்குக் கொடுக்கச் சொல்வதில்லை. அவர் பகிர்ந்து வாழும் வாழ்வை நம்மில் எதிர்பார்க்கின்றார். 'உன்னைப் போல் பிறரை நேசி' என்கின்ற வாழ்வு, உடைமைகளைப் பகிர்ந்து, மகிழ்ந்து வாழும் வாழ்வாகும். அது ஆண்டவருக்குகென்றே வாழும் வாழ்வாகும். இதனைத் தான் ஆண்டவர் நம்மில் எதிர்பார்க்கின்றார். இப்படிப்பட்ட வாழ்வு வாழ்வது தான் திறன்கொண்ட இளையோருக்கு சிறந்த ஆன்மிக வாழ்வாக இருக்க முடியும்.

இளமைப் பருவம் ஆண்டவரால் அருளப்பட்டிருக்கின்ற அருட்கொடையாகும். இப்பருவத்தில் ஆண்டவருக்கு உகந்த வாழ்வு வாழ அழைக்கப்படுகின்றீர்கள். அதனால் திறனுடைய இளையோராக, தானியேலைப் போல கறைதிரையற்ற வாழ்க்கை வாழ உங்களை அர்ப்பணியுங்கள். வசனத்தை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் உங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள். ஆண்டவருடைய எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையில் பகிர்ந்து வாழுங்கள்.

அருள்திரு. R. **ரஞ்சித் சுதிர்**

**13-02-2022**

உயிர்ப்புக்கு முன்வரும் ஒன்பதாம் ஞாயிறு

# படைப்பில் கூட்டுச் சார்புடைமை

## THE INTER-DEPENDENCE IN CREATION

| | |
|---|---|
| தொநூ 2:1-15 | கொலோ 2:16-23 |
| திபா 104:24-35 | மத் 13:1-9 |

**"மண்ணுலகில் நிலவெளியின் எவ்விதப் புதரும் தோன்றியிருக்கவில்லை; வயல்வெளியின் எவ்விதச் செடியும் முளைத்திருக்கவில்லை; ஏனெனில், ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகின்மேல் இன்னும் மழை பெய்விக்கவில்லை; மண்ணைப் பண்படுத்த மானிடர் எவரும் இருக்கவில்லை."** (தொநூ 2:5).

உலகிலுள்ள அனைத்துமே கூட்டுசார்புடைய என்று பாடமாகத் தருவது படைப்பின் இரகசியம். வையே ஒருவரது படைப்பின் இரகசியம் படைப்பு என்பது நீர், நிலம், காற்று, வானம், மரம், மனிதர் என அனைத்தையும் உள்ளடக்கியது. படைப்பில் சிறியவை, பெரியவை, நன்மை, தீமை என அனைத்தையும் உள்ளடக்கிய முழுமையே படைப்பு. சிறியவை என நிராகரிப்பதும் பெரியவை என ஏற்றுக்கொள்வதும், தீமைகள் எனப் பட்டுப்போகச் செய்வதும் நன்மைகள் என வளரவிடுவதும் நல்லது என்று கண்ட படைப்பில் காயங்களாகிவிடும் சிறியது பெரியது என்றல்ல அனைத்துமே ஆச்சரியமான ஆண்டவரின் செயலே. மனிதர்-கடவுள்-படைப்பு என அனைத்தும் கூட்டுச் சார்புடன் வாழ்வதே படைப்பை நல்லது என்று கண்ட ஆண்டவருக்கு கொடுக்கும் மறுபதிலாகும்.

### 1. *பிரித்து-படைப்பை அழகுபடுத்தும் சார்பு* : தொநூ 1:4

படைப்பில் பிரிக்கப்பட்டவை

தொடக்கநூல் 1 : 4 - ஒளி, இருள், பகல், இரவு

தொடக்கநூல் 1 : 6 - நீரினின்று நீர்

தொடக்கநூல் 1 : 7 - வானத்திற்கு கீழுள்ள நீர் வானத்திற்கு மேலும்

தொடக்கநூல் 1 : 10 - நிலம்-கடல்

தொடக்கநூல் 1 : 15 - வானம்-பூமி

படைப்பைப் பிரித்தாலும் நல்லது என்று கடவுள் கண்டார். நல்லது என்று கூறும் வார்த்தை 1:4,10,12,18,21,25 ஆகிய சம இடங்களில் வருகின்றது. பிரிக்க வேண்டியவைகளைப் பிரித்து நல்லது என்று கண்டார். பிரிக்கப்படாதிருந்தால் படைப்பு நல்லதாக இருந்திருக்க முடியாது.

வெளிச்சம் அதன் பயனுக்காக ஒளிரவில்லை; தண்ணீர் தனக்காக வாழவில்லை; உலகைச் செழிக்கச் செய்கிறது. மரம் தனக்காக வளரவில்லை; மனிதனுக்கு பயன்தருகிறது. இருளை வெளிச்சமாக்கினால் இருளில் வாழும் உயிரினங்கள் எங்கே செல்லும். பகலை இருளாக்கினால் வெளிச்சத்தில் வளரும் உயிரினம் எங்கே போகும். இருளில் வாழ்பவைகளின் ஓய்வுக்குப் பகல் தேவைப் பகலில் வாழுபவைகளின் ஓய்வுக்கு பகல் தேவை. சார்புத்தன்மையே படைப்பை அழகுத் படுத்துகின்றது. தனிமைத்தன்மை படைப்பை அழிவுக்குட்படுத்துகின்றது. மரம் மண்ணில் சார்ந்திருப்பதால் வேர்உறுதிபடுகிறது. நீர் மரத்திற்கு உணவாவதால் மரம் பட்டுப்போகாது உயிர்வாழ்கின்றது. கடல்வளம், மண்வளம், கனிமவளம், நீர்வளம், நிலவளம் என அனைத்து வளங்களும் பிரிந்திருந்தாலும் சார்புடன் பயன்பட்டு முழுப் படைப்பும் அதிலும், இன்றைய உலகம் பிரிந்து பலநாடுகளாகச் செயல்பட்டாலும் நாடுகளிடையே வளங்களைப் பகிர்வதில் சார்புத்தன்மை தேவை. மனிதவாழ்வும் பணத்தினால், பணியினால் பிரிந்திருந்தாலும் பிறருடன் சார்புத்தன்மை தேவை. ஆபிரகாம் முதல் தம் அடியவர்கள் பலரைப் அடியவர்கள் பலரை பிரித்தெடுத்தார். பிரித்தல் தனிமைக்கல்ல; கடவுளின் சாட்சியை வெளிப்படுத்தி மனிதவாழ்வை அழகுப்படுத்துவதே.

## *2. இணைத்து-பங்காளிகளாக்கும் ஆண், பெண் சார்பு:*

(தொநூ 1:26)

இணைத்தல்

| | |
|---|---|
| இறைச்சாயலில் இணைத்தல் | - தொநூ 1:26 |
| ஆண், பெண் இணை | - தொநூ 1:27 |
| எலும்பும் எலும்பும் | - தொநூ 2:23 |
| கணவன், மனைவி | - தொநூ 2:24 |
| மனுஷன், மனுஷி | - தொநூ 2:23 |

மனிதரைப் படைப்பின் மகுடமாகப் படைத்தார்; தமது சாயலில் படைத்தார், மனித வாழ்வில் தனிமை அழகல்ல என்று கண்டதால் தகுதியான துணையாக ஏவாளை ஆதாமுக்கு ஏற்படுத்திச்சார்பு வாழ்வை நல்லதாகக் கண்டார். மனுஷன்-மனுஷி என்ற இருநிலையை இணைத்துச் சார்புடன் வாழ ஐக்கியப்படுத்தினார். படைப்பிலேயே பங்காளிகளாய்ச் சார்ந்து வாழ குடும்ப அமைப்பைக் கடவுள் ஏற்படுத்தினார். கணவன், மனைவி என்று குடும்ப சார்புக்கு மேல் மனிதன் மனுஷி என்று சார்பு நிலையும் தேவை. மனிதனின் பாவநிலை மனித சார்புநிலையைச் சிதைத்தது. எனவே இறைச்சாயலுடைய மனிதர் மனித சாயலில் பல முகமுடையவர்களாய் மாறினார். எனவே திருமறையின் பார்வையில் நெறிகெட்ட மனிதன் (2தெச 2:3) பழைய மனிதன், போலியாளின் மனிதன், மாயமான மனிதன் யோபு 11:11, மண்ணான மனிதன் திபா 10:18 மாயையான மனிதன், சூதுள்ள மனிதன் திபா 55:23, மிருககுணமுள்ள மனிதன் திபா 92:6 என மனிதரின்

பாவத்தன்மைகள் குறிக்கப்படுகின்றன. இந்தநிலைமாறி தயையுள்ள மனிதன் (நீமொ 11:17), நல்ல மனிதன் நீமொ 14:14, உண்மையான மனிதன் நீமொ 20:6, பக்தியுள்ள மனிதன் திபா 8:2 என்று பரிசுத்த மனிதனாக மாறும் போது, மனித. சார்புநிலை பரிசுத்த பங்காளியாக மாறும். தனிமனிதனது இணைப்பு, குடும்பம் என்ற நிலைக்கு அப்பால் பரந்த இணைப்பு, மனிதன் மனுஷி என்ற உறவின் இணைப்பு உருவாகும் போது உலகமே கணவன், மனைவி என்ற குடும்பக் கூட்டுறவாகச் சார்பு நிலைபெறும்.

### *3. ஆசீர்வதித்து-படைத்தவரில் ஆன்மிகச் சார்பு:*

(தொநூ 2:3)

படைப்பில் ஆசீர்வதிக்கப்பட்டவை

தொநூ 1:22 - உயிரினங்களை ஆசீர்வதித்தார்

தொநூ 1:28; 5:2 - மனிதரை ஆசீர்வதித்தார்

தொநூ 2:3 - ஏழாம் நாளை ஆசீர்வதித்தார்

படைப்பில் ஒழுங்குபடுத்தி ஓய்ந்திருந்த கடவுள் படைப்பினை அழகுபடுத்தி ஆசீர்வதித்தார். படைப்பின் செயல் படைத்தவரைத் தேட மனிதரை அழைக்கின்றது. மனிதரை இறைச்சாயலில் வளர்ப்பதும், முழுமைப்படுத்துவதும், முழுவை வாழ்வுக்குத் தயாரிப்பதும் மனிதன் கடவுளில் கொள்ளும் ஆன்மிகச் சார்பே ஆகும். படைத்த கடவுள் படைப்பினைப் பார்வையிடுகிறார். கடவுள் படைப்பில் சார்ந்திருப்பதை வெளிப்படுத்துகின்றது. படைப்பு ஆசீர்வதிக்கப்பட்ட படைப்புடன் மனிதர் சார்ந்திருக்க வேண்டும். ஆண்டுகொள்ள ஆசீர்வதித்தார் தொநூ 1:28; திபா 19:1 இல் வானம், ஆகாயவிரிவு ஆண்டவரை அறிவிக்கின்றது தொநூ 89:11 இல் வானமும் பூமியும் கடவுளுடையது. இயற்கையும் இறைவனோடு சார்ந்தே இருக்கின்றது. இந்தப் பிரதிபலிப்புடன் படைப்பை ஆன்மிக எண்ணமுடன் பாதுகாக்க வேண்டும். படைப்புடன் ஒன்றித்திருக்கும் மனிதர் கடவுளுடன் ஒன்றித்திருக்க ஓய்வுநாளையும் ஆசீர்வதித்தார்.

ஓய்வுநாள்

திபா 84:10 - ஆயிரம்நாளிலும் ஆசீர்வதிக்கப்பட்டநாள்

இச 5:15 - ஓய்வின்றி உழைத்ததை நினைவுகூரும்நாள் ஓய்வுநாள்

- ஓய்வின்றிக் காக்கும் ஆண்டவருக்காக ஓய்ந்திருக்கும் நாள் ஓய்வுநாள்
- ஆண்டவர் கொடுத்த நாளில் ஆண்டவருக்காக நம்மை கொடுக்கும் நாள் ஓய்வுநாள்

ஆசீர்வதித்த ஆண்டவரில் சார்ந்திருக்கும் ஆன்மிகமே மனிதரை இறைச்சாயலுடைய முழுமனிதராக மாற்றுகிறது.

சார்புநிலை சாய்ந்து போனவைகளை நிறுத்த உதவும். மனித உறவில், படைப்புடனுள்ள உறவில், கடவுளிடமுள்ள உறவில் சாய்விலிருந்து சரிசெய்ய சார்ந்து வாழும் கூட்டு வாழ்வுக்கு நம்மை ஒப்படைப்போம்.

அருள்திரு. I. **ரெஞ்சித் வேத குமார்**

13-02-2022



## நோய்மையில் நலம் பெறுதல்

### HEALING IN SICKNESS

விப 4:10-17 — 2கொரி 12:1-10

திபா 103:1-10 — யோவா 9:1-7

**"...இப்போதே போ! நானே உன் நாவில் இருப்பேன்; நீ பேச வேண்டியதை உனக்குக் கற்பிப்பேன்"** (விப 4:12).

Covid-19 - இன் ஆரம்பகாலகட்டம் உலக மக்கள் அனைவரும் அச்சத்துடன் காணப்பட்ட வேளையில், Covid Care Ward - இல் மகிழ்வுடன் நடனமாடி பிறரையும் மகிழ்வுறச் செய்த பெண்மணியின் செயல் ஊடகங்களின் வாயிலாக அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. நோய்மையிலும் அவர் நலமுடன் காணப்பட்டாரா? என்ற கேள்வி காண்போரின் உள்ளத்தில் தோன்றியது. நட்புறவுகளுடன் நாம் நலம் விசாரிக்கையிலே, நன்றாக இருக்கிறீர்களா? என்ற கேள்வி உடல் நலத்தை மட்டுமே கருத்தில் கொண்டது அல்ல. Encyclopedia Brittanica வில் நலமுடனிருத்தல் (Health) என்பதற்கு "health, in humans, the extent of an individual's continuing physical, emotional mental and social ability to cope with his or her environment" என விளக்கம் அளித்துள்ளது. ஆகவே நலமுடன் வாழ்வது என்பது உடல் அளவில் (Physical) மட்டுமல்ல, மனதளவில் (psychological) உணர்ச்சிகளில் (Emotional), ஆன்மீகத்தில் (Spiritual), சமூக அளவில் (Social), பொருளாதாரத்தில் (economical), அரசியலில் (Political) என ஒரு மனிதனுடன் இணைந்து காணப்படும் அனைத்து நிலைகளிலும் (holistic) நலமுடன் செயல்படுதல் ஆகும். இன்றைய பழைய ஏற்பாட்டின் திருமறைப் பகுதி விப 4:10-17 வரையிலான பகுதியை மையமாகக் கொண்டு நோய்மையில் நலம்பெறுதல் குறித்துத் தியானிப்போம்.

### 1. *நோய்மையில் நலம்பெறுதல் இறைத்திட்டத்தை வெளிப்படுத்துகிறது* : விப 4:11

(Healing in sickness reveals God's plan)

விடுதலைப்பயணம் 4:11 இல் மோசே தனக்கு திக்குவாய் காணப்படுவதினால் இஸ்ரயேல் மக்களின் தலைமைத்துவத்தை ஏற்க தயங்கும் வேளையில் இறைவன் மோசேயைப் பார்த்து மனிதர்க்கு வாயை அமைத்தவர் யார்? அவனை ஊமையாக அல்லது செவிடாக அல்லது பார்வையுள்ளவனாக அல்லது குருடனாக வைப்பவர் யார்? ஆண்டவராகிய நான் தானே அல்லவா! எனக் கேட்கும் கேள்வியிலிருந்து

நோய்மையில் நலம்பெறுதல் என்பது இறைத் திட்டமாகக் காணப்படுவதை நாம் புரிந்துகொள்ள இயலும். மனுக்குலத்தில் நோய் தன்மை உருவாவதற்கு காரணம் முதல் மனிதராகிய ஆதாம், ஏவாளின் பாவமாகவே வெளிப்படுகிறது. ஆனால், இறைவன் நோய்மையில் மனிதன் இருப்பதை விரும்பாமல் அச்சூழலிலும் நலம் பெற்று வாழ்வதை விரும்புகின்றார். 2கொரி 12:7-9 வரையிலான பகுதியில் பவுலுக்குக் காணப்பட்ட நோய்மை நீங்கும்படி மூன்றுமுறை வேண்டியதும் இறைவார்த்தை, என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்று தேற்றுவது, நோய்த்தன்மை மனுக்குல வாழ்வின் உண்மை நிலை எனவும் அந்நிலையில் இறை அருளால் வாழ்வதே நலம்பெறுதல் எனவும் தெளிவுபடுத்துகிறது. யோவா 9:2,3 பிறவியில் பார்வையற்ற மனிதனைக் குறித்து சீடர்கள் இயேசுவிடம் இவன் பார்வையின்றிப் பிறந்தது யார் செய்த பாவம்? இவன் செய்த பாவமோ? இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ? எனக் கேட்கையிலே, இயேசு, இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, கடவுளின் செயல் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான் என்றார். இந்நிகழ்வும் நோய்த் தன்மையில் நலமுடன் வாழ்வது இறைத் திட்டம் என்பதை நமக்கு உணர்த்துகின்றது.

### 2. ***நோய்மையில் நலம்பெறுதல் இறைப்பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது*** : விப 4:12

(Healing in sickness reveals God’s presence)

நோய்மையில் இறைவன் நம்மோடிருக்கிறார். துயர வேளையில் நம் துயரங்களில் பங்குபெறும் இறைவனையே திருமறை நமக்குக் காட்டுகின்றது. மோசேயிடம், நான் உன் வாயோடே இருப்பேன் என்ற வார்த்தை உன் நோய்மையிலும் நீ நலமுடன் வாழ நான் உடனிருப்பேன் என்பதையே கூறுகின்றது. நோய்மையின் மத்தியிலும் இறைப்பிரசன்னத்தை உணர்ந்து மகிழ்வுடன் வாழ்ந்த, Helen Keller தனது 19 ஆவது வயதில் புரியாத நோயின் தாக்கத்தால் பார்வையிழந்து, செவித்திறன் இழந்து, மூளை மற்றும் வயிற்றுச் செயல்பாடுகள் நலிவடைந்து காணப்பட்ட போதிலும் Anne Sullivan என்ற ஆசிரியரின் உதவியினால் உலகமே வியக்கும் வண்ணம் 12 புத்தகங்கள் எழுதினார். அதில் 1927இல் அவர் எழுதிய My Religion (Spiritual Autobiography) என்ற புத்தகத்தில் “Divine Pravidence is shown to be the government of God’s love and wisdom and the creation of uses! இறை அன்பின் வழிநடத்துதல் நோய்மையில் தன் வாழ்வில் காணப்பட்டதை மிகவும் அழகாக குறிப்பிடுகிறார். 2கொரி 12:9 இல் பலவீனத்தில் என்பலம் பூரணமாய் விளங்கும் என்ற வார்த்தை நோய்தன்மையில் நான் உன்னோடு இருப்பேன் என்ற வாக்குறுதியை அளித்து தொடர்ந்து உற்சாகத்துடன் வாழ தூண்டுகின்றது. யோவா 9:6 இல் இயேசு உமிழ்நீரினால் சேறுண்டாக்கி குருடனுடைய கண்களின் மேல்

பூசினார் என படிக்கின்றோம், அவர் நோய் தன்மையில் அவனோடிருந்து குணமளிக்கத்தக்கதாய் செயல்படுவதையும் காணலாம். தற்போது இறைவன் நமக்கு கொடுத்திருக்கும் மருத்துவமனைகளும், மருத்துவம் சார்ந்த தொழில் நுட்பங்களும் இறை பிரசன்னத்தையும், நோய்தன்மையில் இறைவன் நம்மோடிருக்கிறார் என்பதையுமே வெளிப்படுத்துகிறது.

### *3. நோய்மையில் நலம்பெறுதல் இறைவல்லமையை (ஆற்றலை) வெளிப்படுத்துகிறது* : விப 4:17

(Healing in Sickness reveals God's Power)

நோய்தன்மையில் நான் இருக்கிறேன் என்று மோசேயை உற்சாகப்படுத்தும் இறைவன் இந்த கோலையும் உன் கையிலே பிடித்துக்கொண்டு போ, இதனால் நீ அடையாளங்களைச் செய்வாய் என தனது வல்லமையை மோசேயின் வாழ்வின் இறுதிவரை வெளிப்படுத்தினார். இறை ஆற்றல் மனுகுலத்திற்கு இன்றியமையாதது, துவண்டு போகும் வேளை, உதவியற்ற வேளை, நோய்மையினால் தவித்திடும் வேளை இறை ஆற்றலினால் பெலனடைய செய்து இறைவன் மனுகுலத்தை அனுதினமும் வழிநடத்துகின்றார். உலக வரலாற்றில் இறைவன் ஆற்றலினால் துணிவுடன் நோய்தன்மையை மேற்கொண்ட மனிதர்கள் ஏராளம். Australian American Christian Evangelist என அழைக்கப்படும் Nicholas James Vujicic என்ற மனிதன் tetra ametia Syndrone என்ற நோயினால் தாக்கப்பட்டு இரண்டு கைகளையும், இரண்டு கால்களையும் இழந்தவர். ஆனால் இன்று அனேக நாடுகளுக்கு சென்று Motivational Speaker ஆகவும் இறைவார்த்தைகளை வல்லமையாக அறிவிப்பவராகவும் செயல்படுகின்றார். இறையாற்றலே தன்னை இவ்வண்ணம் செயல்பட செய்கின்றது என சான்று அளிக்கின்றார். 2 கொரி 12:10 இல் அந்தபடி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். என்ற வார்த்தை பவுலின் வாழ்வில் நோய்தன்மையில் இறையாற்றல் அவரை நலமுடன் வாழும் நிலையில் காணப்படுவதை கூறுகின்றது. யோவா 9:7 இல் பார்வையற்றவரிடம் நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என இயேசு கூறுகிறார். அப்படியே அவன் போய் பார்வையடைந்தான் என திருமறையில் காண்கின்றோம். ஆம் இறை ஆற்றல் அவனில் செயல்படுவதையும் பார்வையடைந்து நலமுடன் வாழ்ந்ததையும் புரிந்துகொள்ள இயலும்.

நோய்மையில் நலம் பெறுதல் இறை திட்டத்தை வெளிப்படுத்துகிறது எனவும், இறை பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது எனவும், இறையாற்றலை வெளிப்படுத்துகிறது எனவும் சிந்தித்தோம் நோய்தன்மையிலும் இறையருளால் நலமுடன் வாழ இறைவன் அருள்புரிவாராக. ஆமென்.

அருள்திரு. J. **டேனியல் ஜோசையா**

20-02-2022

உயிர்ப்புக்கு முன்வரும் எட்டாம் ஞாயிறு

# படைப்பின் சீர்கேடு

## THE CORRUPTION OF CREATION

எசா 5:1-13 கலா 1:5-10

திபா 8 லூக் 10:13-16

**"...நேர்மை தழைக்கும் என்று காத்திருந்தார்; ஆனால் தழைத்ததோ முறைப்பாடு"** (எசா 5:7(b).

மானுடத்தின் வீழ்ச்சியே படைப்பின் வீழ்ச்சி எனலாம். மானுடர் தாம் உருவாக்கிய தீமை உலகெங்கும் பரவி, தன்னையும் தாண்டி படைப்பனைத்தையும் பாதித்து வியாபித்து பரந்து விரிந்துள்ளது. சமய அடிப்படைவாதம், சமூக வகுப்புவாதம், அரசியல் பாசிசம் போன்றவை மனிதனால் உருவாக்கப்பட்டவையே. அமைப்புச் சார்ந்த பொருளாதார சுரண்டல், இயற்கை வளங்களை அழித்தல், சுயநல நோக்கோடு செயல்படும் பன்னாட்டு நிறுவனங்களால் சமூகத்தில் முதலாளித்துவ எண்ணங்கள் பெருக்கி விடப்பட்டுள்ளன. சமநீதி, அமைதி என்பன கேள்வியாக உள்ளன. வளர்ச்சியை நாடிநாடியே வீழ்ச்சியில் வீழ்ந்தோம். நோய்களின் பெருக்கம், இயற்கை பேரழிவு, வன்முறை, அரசே கட்டவிழ்த்து விடும் தீவிரவாதம் போன்றவை உலகம் முழுவதையும் அழிக்கின்றன.

இப்படிப்பட்ட வீழ்ச்சிக்கான காரணங்களையும், அதனின்று கடவுள் எவ்வாறு மீட்கிறார் என்பதையும் கலாத் 1:6-10 வரையுள்ள திருமறை பகுதியின் வழியே எண்ணுவோம்.

### *1. மனக்குழப்பம்* :

கலா 1:7 "...உங்கள் மனதைக் குழப்பி கிறிஸ்துவின்..." மனக்குழப்பத்திற்கு இரண்டு முக்கிய காரணிகள்

அவை (1) தெளிவின்மை

(2) நம்பிக்கையின்மை

தொநூ 3 இல் ஆதாம், ஏவாள் பாம்பின் வார்த்தையா? கடவுளின் வார்த்தையா? என்ற குழப்பத்தில் அவர்களுடைய முடிவு வீழ்ச்சிக்கு வழிவகை செய்தது.

கலாத்திய திருச்சபை மக்களின் மனக்குழப்பத்திற்கு காரணம்

(1) யூத கிறிஸ்தவர்கள் சட்டம் சார்ந்த நடைமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர் கலா 3:10f

(2) கிரேக்க கிறிஸ்தவர்கள் அறிவு நெறி கோட்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள் கலா 4:3; 4:8-11

எனவேதான் பவுலடியார் 3:1இல் புத்தியற்ற கலாத்தியரே! உங்களை மயக்கியவர் யார்? என வினவுகின்றார்.

புத்தியற்ற மயக்கமுற்ற நிலையில் உங்களை அழைத்த அவரைவிட்டு விட்டீர்கள் அதுவும் குறுகிய காலத்தில் கலா 1:7.

இப்பப்பட்ட சூழலில் தீர்மானம் எடுப்பதில் எதை எப்படி நம்புவது என்ற குழப்பம் ஏற்படுகின்றது. இதில் சுயநல தீர்மானம் தவறான தீர்மானமாக வீழ்ச்சிக்கு வித்தாகின்றது.

உறுதியான மனம் எதையும் தாங்கும். குழப்பமுள்ள மனம் எதையும் முறையாக செய்ய இயலாது.

குழப்பம், நம்பிக்கையின்மை, வலி, இழப்பு போன்றவை கொரோனா தொற்றினால் ஏற்பட்டவை. இவை இந்தியாவின் பொது நல அமைப்புகளில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது.

உங்களை பொறுத்த மட்டில் எனக்கு ஒரே குழப்பமாய் இருக்கிறது (4:20a)

## *2. மாறுபட்டதைக் கேட்டது:*

கலா 1:8,9 "...மாறுப்பட்ட ஒன்றை...யார் அறிவித்தாலும் அவர் சபிக்கப்படுக". இங்கு கிரேக்க கலாச்சாரம், மானுடவியல் சார்ந்து எதிர்வாதம் செய்கின்றார். ஓரிறை கோட்பாட்டினை வலியுறுத்துகின்றார். கலா 1:6 வேறு ஒரு நற்செய்தியை ஏற்றுக் கொண்டுவிட்டீர்களே! கலா 1:7 வேறு ஒரு நற்செய்தி இருக்கிறது என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் மாறுபட்ட ஒன்று என்பது, கலா1:7. நற்செய்தியை திரித்து கூறுவதே.

நற்செய்தி சாறு என்னவெனில்

(1) கலா 5:22,23 - ஆவியின் கனிகள்
(2) 5:26; 6:1 - கனிந்த உள்ளம்
(3) 6:6 - நலன்களில் பங்கு அளித்தல்
(4) 6:9-10 - நன்மை செய்தல்

இதனை தவிர்த்து விருத்தசேதனத்தை மையப்படுத்தி மாறுபாடானதை திரித்து கூறுகின்றனர்.

கலா 2:4 - திருட்டு தனமாய் நுழைந்த போலி...
உளவு பார்க்க வந்தவர்கள்
2:13 - வெளிவேடகாரர்கள்...

இவர்கள் மக்களை கட்டாயப்படுத்துகின்றனர் கலா 2:14

முதலாளித்துவமய மாக்கப்பட்ட சமய வாழ்வில், இறை மன்றாட்டும் தொழுகைகளும் வியாபாரமயமாக்கப்பட்டுள்ளன. எனவே மானுடம் தனிவுடைமையை கேட்கின்றது. சமய வாழ்வில் லாபம் ஒன்றையே மையப்படுத்தி மாறுபாடான செய்திகள் நற்செய்தியென கூறப்பட்டு நியாயப்படுத்தப்படுகின்றன. இவை சமய வாழ்வின்று சமூக வாழ்வுக்கு வரும் போது தீமையும் வீழ்ச்சியும் ஏற்பட்டு பார்க்கிறேன்?...."

இங்கு, கடவுளுடைய நல்லெண்ணமா? மனிதனுடைய நல்லெண்ணமா?

மனிதருக்கு உகந்தவரா? இறைவனுக்கு உகந்தவரா? தன்னுடைய வாழ்வை வெறும் மனித முயற்சியால் நிறைவு போகிறீர்களாக கலா 3:3.

(1) பவுலடியாரின் மனித முயற்சி :

(a) கலா 1:13 திருச்சபையை மிகவும் துன்புறுத்தி ஒழிக்க முயன்றேன். இங்கு வன்முறை அழிவும்

(b) கலா 1:14 மூதாதையர் வழிமரபில் ஆர்வமிக்கவனாக சிறந்து விளங்கினேன். எவ்வளவுதான் சிறப்பானாலும் தீய மரபுகளை பிடித்து தொங்கும் போது அடிப்படை வாக்குவாதம் போன்றவை முளைத்தெழும்பி படைப்பினை அழிக்க

### *3. பவுலடியாரில் இறைச்செயல்:*

(a) கலா 1:11 நான் அறிவித்த மனிதனிடமிருந்து வந்ததல்ல

(b) கலா 1:12 இயேசு கிறிஸ்து அருளிய வெளிப்பாடு எனவே தான் கலா 2:21 கடவுளின் அருள் பயனற்று போக மாட்டேன் எனக் கூறுகின்றார்.

கலா 2:2-6 செல்வாக்கு உள்ளவர்கள் 2:4 என குறிப்பிட்டு 4:16 உண்மையை சொன்னதால் பகைவன் என கேட்கின்றார்.

போலிகள் செல்வாக்கு பெறுவதற்கு திருட்டுதனமாய் நுழைய மனிதர்களின் நல்லெண்ணத்தை பெற விரும்பி, மனிதர்களுக்கு உகந்தவர்களாக வாழ விரும்புகின்றனர். சிலுவையின் பொருட்டு துன்புறாமல் இருக்க இப்படி செய்கின்றார்கள் கலா 6:12

இறுதியாக :

புதிய படைபபவாதே இன்றியமையாதது கலா 6:15b பவுலடியார் எல்லா பிரச்சனைகளையும் அலசி ஆராய்ந்து இறுதியாக புதிய படைப்பையே முக்கியமானதாக கூறுகின்றார். அதற்கான கடவுளின் செயல்பாட்டை கூறுகையில்,

(a) கடவுளின் அருள் - 1:6; 5:4; 1:15

(b) கிறிஸ்துவின் சிலுவை - 2:19; 6:14

(c) கிறிஸ்துவின் மீது நம்பிக்கை - 2:16; 3:26

(d) தூயாவியரின் துணையால் - 5:5; 5:16

கடவுள் தமது அருளினால் புதுப்படைப்பாக்குவதற்கு நம்மை அழைக்கின்றார். இந்த தெய்வீக அழைப்பிற்கும் செயல்பாட்டிற்கும் கிறிஸ்து கருவியாக இருக்கின்றார். அவரது செயல் சிலுவையே. சிலுவையில் அவரோடு இணைந்து வாழ்வதற்கு தூயாவி யார் துணை செய்கிறார்.

அருள்திரு. M. **கிங் தனேஷ் குமார்**

27-02-2022

உயிர்ப்புக்கு முன்வரும் ஏழாம் ஞாயிறு

# தவக்காலம்: ஒரு மீட்பின் காலம்

**LENT : A TIME OF REDEMPTION**

எசா 58:1-14 உரோ 2:1-13
திபா 6 யோவா 5:1-9

**“கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும் நோன்பு!”** (எசா 58:6).

சிறுவன் ஒருவன் இயற்கை எழில்மிகு கிராமப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்தான். சிறுவனது வீட்டின் அருகில் அழகிய நீரோடை ஓடிக் கொண்டிருந்தது. நீரோடையில் விளையாடுவது இச்சிறுவனின் பொழுதுபோக்கு. மரத்தால் செய்யப்பட்ட சிறிய படகு ஒன்றினை வைத்து நீரோடையில் விளையாடுவது அவனது வழக்கம். திடீரென ஒரு நாள் சிறுவனின் சிறிய மரப்படகு காணாமல்போனது. சிறுவனுக்கு ஒரே கவலை. மகனே, புதிய படகு ஒன்றை வாங்கித் தருகிறேன் எனக்கூறி சிறுவனின் தந்தை, தன் மகனை அமைதிப்படுத்தினார். மறுநாள் புதிய படகு வாங்க வேண்டுமென்று தந்தையும் சிறுவனுமாகக் கடைக்குச் சென்றனர். அங்கே, தான் பயன்படுத்திய, தன்னால் தவறவிடப்பட்ட அதேபடகு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது. சிறுவன் ஓடிச் சென்று கடைக்காரரிடம் அப்படகு தனக்குரியது எனவும், தன்னிடம் தரும்படியும் கேட்டான். கடைக்காரர் அப்படகிற்குரிய விலையைப் பெற்ற பின்பே சிறுவனிடம் அப்படகைக் கொடுத்தார். படகினைப் பெற்றதும் சிறுவனின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மீட்பு என்பது மேற்சொன்ன எடுத்துக்காட்டில் குறிப்பிட்டதைப் போன்று தனக்குரிய ஒருபொருள் மற்றொருவரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தபோது, அப்பொருளுக்கு ஈடாக, பணமோ அல்லது வேறொன்றையோ, கொடுத்துத் திரும்பப் பெற்றுக் கொள்வது எனலாம். தவக் காலத்தின் பல்வேறு பார்வைகளில் ஒன்று இது ஒரு மீட்பின்காலம் என்னும் சிந்தனையாகும். “மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்பிற்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” (மாற் 10:45) என்ற நற்செய்தியாளரின் வார்த்தையின் செழுமையை உணர்ந்து மீட்பின் காலமாக இத்தவக்காலம் அமைந்திட பின்வரும் சிந்தனைகளைச் சிந்தித்து நம்மை அர்ப்பணிப்போமாக.

### 1. மீட்பின்காலம் மனிதத் தேவைகளுடன் நம்மை ஒன்றுபடுத்தும் ஓர் அழைப்பு :

(Time of Redemption is a Call to Identify with Human Needs)

லெந்து என்னும் வசந்தகாலம் நம் ஆன்மிக வாழ்வில் துளிர்விடும் காலம் எனலாம். உலக மக்களின் மீட்பிற்காகச் சிலுவையில் அறையுண்ட இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் இவற்றை நன்கு புரிந்து கொண்டு நிறைவாழ்விற்கு நேராய் வரும்காலம். நோன்பு, இறைமன்றாட்டு, தானதர்மம் செய்தல் இவற்றை லெந்து நாட்களில் மூன்று தூண்களாகக் கருதி ஆன்மிகப் பயிற்சி செய்வது மரபு. இவற்றோடு எட்டாம் நூற்றாண்டு இறைவாக்குரையாளராகிய எசாயா குறிப்பிடும் நடைமுறை ஆன்மிகத்தைச் சார்ந்து நம் வாழ்வு மாற்றம் பெற வேண்டும் என்பதாகும்.

இஸ்ரயேல் மக்கள் தங்கள் சமய வழக்கத்தில் பல்வேறு சடங்காச்சாரங்களைக் கடைப்பிடித்தனர். குறிப்பாக, உணர்வு சார்ந்து பல்வேறு நிலைகளில் உபவாசம் அல்லது நோன்புகளை அமைத்துக் கொண்டனர். 1சாமு 31ஆம் அதிகாரத்தில் கில்போவா மலையில் பெலிஸ்தியருடனான போரில் இஸ்ரயேலர் தோல்வி கண்டனர். சவுலும், அவர் தம் புதல்வரும் கொல்லப்பட்டனர். இச்சூழலில், துக்கத்தின் அடையாளமாக நோன்பு இருந்தனர் (1சாமு 31:13). தாவீது உரியாவின் மனைவிமூலம் பெற்ற குழந்தை மடிந்தபோது, அக்குழந்தைக்காக உண்ணா நோன்புடன் மன்றாடினார் என 2சாமு 12:16இல் காண்கிறோம். ஆனால் எசாயா 58:3இல் நீங்கள் நோன்பிருக்கும் நாளில் உங்கள் ஆதாயத்தையே நாடுகிறீர்கள். உங்கள் வேலையாள்கள் அனைவரையும் ஒடுக்குகின்றீர்கள் எனக் குற்றம் சாட்டுகின்றார். இவ்வாறு பல நேரங்களில் இஸ்ரயேல் மக்களின் நோன்பு ஆன்மிக நிலையில் செயல் நோக்கமளிப்பதாய் அமையவில்லை (Their fasting was not spiritually motivated) எனவே எசாயா 58:6,7 வசனங்களில் இறைவன் விரும்பும் நோன்பு குறித்து பட்டியலிடுகின்றார். இந்த இறைவன் விரும்பும் நோன்பானது மனித அடிமைத்தனத்தை உடைப்பதாயும், மனித விடுதலையை உறுதிசெய்வதாயும், பசித்தவருக்கு உணவு தருவதாயும், பகிர்வை மையப்படுத்தி வாழ்வைக் கட்டுவதாயும் நடைமுறை ஆன்மிகத்தைக் கட்டியெழுப்புவதாயும் அமையும். அதாவது மனித மீட்பு தழுவிய நோன்பாய் அமைந்திடவேண்டும். இக்கருத்தினைச் சார்ந்தே மீக்கா 6:8இல்...நேர்மையானதைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் தொடர்புபடுத்திக் கூறுகின்றார். ஆமோஸ் இறைவாக்கினர் 5:21-24இல் வாழ்வோடு தொடர்பற்ற பலிகள், சடங்காச்சாரங்களைக் குறை கூறுகின்றார். எனவே நீதி வெள்ளமெனப் பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக (வ 24) எனத் திடமாக, நீதி தழுவிய மனித மீட்பை

வலியுறுத்தக் காண்கின்றோம். எனவே நமது நோன்பு நாள்கள் மனித நீதி தழுவியதாக அமையட்டும். போலியான, உணர்வினை மிகைப்படுத்தும் நோன்புகளில் ஈடுபடுவோரை "உங்கள் கைகளோ இரத்தக் கறையால் நிறைந்திருக்கின்றன" என்கிறார் எசாயா இறைவாக்கினர் (எசா 1:15b). மக்கள் வாழ்வோடு ஒன்றுபட்டுப் பணிபுரியாத நோன்பினைக் குறித்து இயேசுநாதரும் பலமாகத் திறனாய்வு செய்கின்றார் (மத் 6:16-18). அன்னை தெரசா அவர்கள், "நாம் எல்லோரும் பெரியவைகளைச் செய்ய முடியாது. ஆனால் நாம் சிறியவைகளைச் சிறந்த அன்புடன் செய்யமுடியும்" என்றார் (Not all of us can do great things. But we can do small things with great love). இத்தகைய அன்பு கலந்த மனித நேயமிக்க, மனிதத்துடன், ஒன்றுபட்டு வாழ்வுதரும் பணிகள் இந்நோன்பு காலங்களில் நடைபெறட்டும். இதுவே இறைவன் விரும்பும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருக்கும் நோன்பு எனலாம்.

### 2. *மீட்பின் காலம் என்பது ஓர் இரக்கத்தின் காலம்* :

(Time of Redemption is a Time of Compassion)

யோவான் 5:1-9 வரையுள்ள பகுதியில் எருசலேமிலுள்ள பெத்சதா என்ற குளத்தின் அருகே 38 ஆண்டுகளாக உடல் நலமற்றிருந்த ஒருவர் நலம் நாடித் தங்கியிருந்தார். இரக்கத்தின் இல்லம் என்ற அர்த்தம் கொண்ட பெத்சதாவில் உதவி செய்யும் நண்பரின்றித் தனித்து விடப்பட்டவராக இப்பிணியாளர் காணப்பட்டார். இயேசு இந்தப் பிணியாளியைக் கண்டு நலம்பெற விரும்புகிறீரா? எனக் கேட்கிறார். தேவையுடன் இருப்பவருடன் பேசி நல்லுறவு கொள்ளும் இயேசுவை இங்கு காண்கிறோம். ஓய்வுநாளைக்குறித்த மனிதநேயமற்ற சட்டங்கள் முதன்மைப்படுத்தப்பட்ட காலத்தில் மனிதரை மீட்கும் நோக்கில் இயேசு செயல்படுகின்றார். Church is looking for better methods, But Christ is looking for better men என்பதைப் போன்று, திருச்சபை நல்ல வழிமுறைகளைத் தேடுகின்றது. ஆனால், இயேசு நல்ல மனிதர்களைத் தேடுகின்றார் என்ற உண்மையை வலியுறுத்தும் வகையில் உறவுகளைக் கட்டியெழுப்பும் மீட்புப்பணியைச் செய்கின்றார். இயேசுவின் இரக்கம் இச்செயலினூடே வெளிப்படுகின்றது. Compassion is a basic of all morality என்பர். அதாவது எல்லா ஒழுக்கங்களுக்கும் அடிப்படை இரக்கம் என்பது இங்கு அழுத்தம் பெறுகின்றது. இயேசுவின் இரக்கத்துடன் கூடிய பணிகுறித்து மத் 14:14இல் "...பெருந்திரளான மக்களைக் கண்டு அவர்கள் மீது பரிவு கொண்டார் என்றும் மத் 13:32இல் "இயேசு தம் சீடரை வரவழைத்து," நான் இம்மக்கள் கூட்டத்தின் மீது பரிவு கொள்கிறேன் என்றும் விவிலியத்தில் குறிப்பிடக் காண்கிறோம். இரக்கமுள்ள மனிதர்கள் எப்போதும் துன்புறுபவருடன் துன்புற ஆயத்தமாயிருப்பர். இத்தகைய மனநிலையை இயேசுவின்

இரக்கத்தில் நாம் காண முடியும். மக்களின் மீட்பிற்காகச் சிலுவைப் பாடுகளுக்கு கிறிஸ்து தம்மை அர்ப்பணித்ததும் இந்த இரக்கத்தின் பின்னணியமே எனலாம். எனவே வில்லியம் என்பவர் கூறும்போது "நமது மீட்பரின் பாடுகள் நிறைவு பெறலாம், அவரது இரக்கம் நிறைவுபெறவில்லை" என்கிறார் (Though our Saviour's passion is over, his compassion is not). இந்த உண்மையை நன்குணர்ந்து நாமும் இந்த நோன்புக் காலங்களில் இரக்கத்தின் பணியினைத் தொடர்வோமாக. நல்ல சமாரியரின் மாதிரியைப் பின்பற்றுவோமாக! ஆல்பிரட் சுவைட்சர் என்ற அருள்பணியர், "மனித வாழ்வின் நோக்கம் சேவை செய்வதும், இரக்கம் காண்பிப்பதும் மற்றும் மற்றவர்களுக்கு உதவ விரும்புவதும்" என்கிறார் (The purpose of human life is to serve, and to show compassion and the will to help others). இக்கூற்று நோன்புக் கால இரக்கப்பணிகள் தொடர நம்மைத் துரிதப்படுத்துகின்றன.

19ஆம் நூற்றாண்டின் மத்தியப்பகுதி, கவாய் தீவுகள் கூட்டத்தின் ஒரு பகுதி மொலாக்காய் என்ற ஒரு சிறுதீவு. இப்பகுதியில் தொழுநோயாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். தொழுநோயாளர் களுக்குப் போதிய மருத்துவ வசதி இல்லை. அவர்களுக்குப் பாதுகாப்பான வீடுகள் மற்றும் போதிய தண்ணீர் வசதியும் இல்லை. வாழ்விழந்த நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர். கத்தோலிக்கத் திருச்சபைக் குருவானவர் Father டேமியன் பெல்ஜியத்திலிருந்து 1873ஆம் ஆண்டு அனுப்பப்பட்டார். பலர் இவரைத் தடுத்தபோதும் தன் தீர்மானத்தில் உறுதியாயிருந்த டேமியன் மொலாக்காய்த் தீவு வந்தடைந்தார். வாழ்வில் நம்பிக்கையின்றி நடைபிணங்களாக, வியாதியின் கொடுமையால் உடலெல்லாம் புண்களாக, சீழ் வடிந்த நிலையில் வாழ்ந்த தொழுநோயாளர்களுக்கு வாழ்வில் நம்பிக்கை கொடுத்தார். வீதியில் அலைந்த மக்களுக்கு வீடுகள், மருத்துவமனைகள் கட்டிக்கொடுத்தார். தொழுநோயாளர்களுக்கு இயேசுவின் இரக்கப்பண்பால் பணி செய்த டேமியனுக்குத் தொழுநோய் பற்றிக் கொண்டது. நோயின் கொடூரம் அவரைத்தாக்க 12 ஆண்டுகளாக, தான் அன்பு பாராட்டி வந்த மக்களை விட்டு ஆண்டவருக்குள் நித்திரையில் ஆழ்ந்தார். இரக்கத்துடன் பணி செய்த நண்பரை மக்கள் இழந்தனர். Be the living expression of God's kindness, kindness in your face, kindness in your eyes, kindness in your smile என அன்னை தெரசா அவர்கள் குறிப்பிட்டது டேமியனின் வாழ்வின் மாதிரியாகும். இந்த நோன்புக்காலத்தில் மக்களுடன் ஒன்றுபட்டு, இரக்கத்துடன் சேவை செய்து இறைவனுக்கு உகந்த உபவாசம் செய்ய நம்மை அர்ப்பணிப்போமாக.

அருள்திரு. W. **ஸ்டேன்லி ஜோண்ஸ்**

02-03-2022

சாம்பல் புதன்

# சிலுவை : பிறர்பொருட்டுத் துன்புற ஓர் அழைப்பு

**CROSS : A CALL TO VICARIOUS SUFFERING**

1அர 17:12-24 பிலி 2:1-11

திபா 102 மாற் 8:31-38

**“என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்”** (மாற் 8:34).

துன்புறுதல் என்பது மனித வாழ்வின் ஒரு பகுதி. இதை மாற்ற இயலாது. துன்பங்களைத் துணிவுடன் எதிர் கொள்பவர்கள் வாழ்வில் உயர்வடைகிறார்கள். துன்பங்கள் மனிதருக்கு மிகுந்த பட்டறிவைக் கொடுக்கிறது. சொந்த வாழ்வில் துன்பங்களை அனுபவிக்காத எந்த ஒரு மனிதரும் பிறர் வாழ்விலிருக்கும் துன்பங்களை அறிவதும் அதற்காகத் தம்மை அர்ப்பணிப்பதும் இயலாத ஒன்று. இயேசு, சிலுவைப் பாடுகள் வாயிலாக உலகின் அனைத்து மக்களுக்கும் ஒரு புது வாழ்க்கை முறையைக் காண்பிக்கிறார். அந்த வாழ்வுமுறை தன்னலம் சார்ந்ததாக இல்லாமல் பொதுநலம் சார்ந்ததாக, அனைத்து மக்களையும் தன்னைப் போல அன்பு பாராட்டும் ஒரு புது மாற்றத்தைச் சமுதாயத்தில் உருவாக்கிற்று. எனவே சிலுவை பிறருக்காகத் துன்புறும் ஓர் அடையாளமாக மாறிற்று. நாம் நமக்காக மாத்திரம் வாழும்போது நமது வாழ்க்கை நம்மோடு முடிந்துவிடும். பிறருக்காக நாம் வாழும் வாழ்க்கை தலைமுறைகள் தாண்டி நிலை பெற்றிருக்கும்.

மாற் 8:34 இல் “தம் சிலுவை” என்று குறிப்பிடுகிறார். இயேசு, சிலுவையைப் பிறர் பொருட்டுத் துன்புறும் அடையாளமாக மாற்றினதால் நமக்கு ஆண்டவர் ஒருமைப்படுத்தி கூறுகின்ற “தம் சிலுவை” என்பது தன்னலம் சார்ந்தது அல்ல. மாறாக ஆண்டவர் நமக்குச் சொல்லும் சிலுவை பொதுநலம் சார்ந்தது. அது பிறருக்காகத் துன்புற ஆண்டவர் அழைக்கும் அழைப்பு. பிறருக்காகத் துன்புறுதல் என்பது பதிலாளாகத் துன்புறுதல் என்பதைக் குறிக்கும். நான் நிற்க வேண்டிய இடத்தில் எனக்குப் பதிலாக இயேசு நின்றார். இன்னொருவர் நிற்க வேண்டிய இடத்தில் நான் நிற்கும்படி அழைப்பு விடுக்கிறார்.

வாழ்வில் கிறிஸ்துவுக்காக நாம் பெற்றுக்கொள்ளும் துன்பங்கள் நம்மை மென்மேலும் பற்றுறுதியில் வளரவும் அன்பில் நிலைத்திருக்கவும் செய்யும். எனவே, இந்தத் துன்பங்களை மையமாகக் கொண்டு உருவான சமுதாயம் புது மாற்றம் பெற்றது. திப 4:32; 2:4 ஆகிய மறைநூலின் பகுதிகள்

தொடக்கக் காலத் திருச்சபையினர் பொதுநலம் சார்ந்து அனைத்தையும் பொதுவாக அனுபவித்தார்கள். இதனால் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களும், ஏழைகள், கைம்பெண்கள் போன்றோரும் இயல்பாக வாழ வழிவகுத்தது. ஆனால் இன்று நாம் வாழும் சமுதாயம் முற்றிலும் மாறுபட்டது. சுயநலம் சார்ந்து கட்டமைக்கப்பபட்டிருக்கிறது. Amazon நிறுவன உரிமையாளர் ஜெஃப் பெஸொஸ் (Jeff Bezos) தன்னிடம் பணிசெய்வோரின் உணவு இடைவேளை நேரத்தில் தனக்கு ஏற்படும் உற்பத்தி இழப்பைச் சரிசெய்ய உணவூட்டும் ரோபோக்களைப் பயன்படுத்தினார். வேலையாள் வேலை செய்யவேண்டும். ரோபோக்கள் உணவூட்டும். இப்படியாக மற்றவர்களின் சிறுசிறு மகிழ்ச்சியைக் கூடத் தனக்குப் பணமாக்க நினைக்கும் இந்தச் சமுதாயத்தில் பிறருக்காகத் துன்புறுவது ஆண்டவர் நமக்குத் தந்திருக்கும் மிகப்பெரிய சவால் நிறைந்த அழைப்பாகவே உள்ளது.

### *1. துன்பங்களை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளுதல்* :

(மாற் 8:31)

"மானிட மகன் பலவாறு துன்பப்படவும்...உதறித் தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும்..."

ஆண்டவர் தமக்கு உரியவர்களுக்கு அழைப்பு விடுக்கும் போது துன்பங்கள், உதறி தள்ளப்படுதல், மரணம் இவைகளைக் கண்டு அச்சம் கொள்பவர்களாகவோ விலகி நிற்பவர்களாகவோ அழைக்கவில்லை. அவர்கள் துன்பங்களை மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்பவர்களாக இருக்க வேண்டும் எனவே கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஆன்மிகப் பக்குவம் (Spiritual Maturity) அடைய அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார். துன்பங்கள் தேவையானவை, அவற்றை நிச்சயமாகவே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஆண்டவர் அதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார்.

1அர. 17:12-24 வரையுள்ள பகுதியில் எலியா தீர்க்கர், ஏழைக் கைம்பெண் செல்வச் செழிப்பாக வாழ்வதை விட அறவழியில் ஆண்டவருக்காகத் துன்புற்று வாழ்வதை விரும்பினார்கள். எனவே, வறுமை, பசி, கொலைமிரட்டல், நம்பிக்கை இழக்கும் சூழல் இவற்றை முழுமனத்தோடு மனப்பூர்வமாய் ஏற்றுக் கொண்டார்கள். 2கொரி 4:10 "அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்லுகிறோம்" என்ற பவுலின் வார்த்தை பிறர்பொருட்டுத் துன்புற அழைக்கிறது. நாம் பயமற்றவர்களாக முழுமனதாய் நம் சிலுவையை எடுப்போம். ஆண்டவரைப் பின் தொடர்வோம்.

## *2. விண்ணகத்திற்கு ஏற்றவைகளைச் சிந்தித்தல்* :

"நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்" (மாற் 8:33)

ஆண்டவர் பேதுருவிடம் கூறும்போது மண்ணுலக வாழ்விற்கு முற்றிலும் மாறுபட்ட சிந்தையைக் கூறுகிறார். உலகத்திற்கு ஏற்றவராக அல்ல; விண்ணகத்துக்கு ஏற்றவராக இருக்கும்படி அழைக்கிறார். உலக ஆசையைத், துறந்து தன்னை ஒடுக்கி, நல்ல சுடர் விட்டு பிரகாசமாக எரிந்து தன்னை வெறுமையாக்கும்படியாக நம்மை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பதே அதன் நோக்கம்.

பவுல் பிலிப்பிச் சபைக்கு எழுதும் போது (பிலி 2:1-11) உலகத்தின் பெருமைகள், பிரிவினைகள் அனைத்தும் வீண் என்பதையே கூறுகிறார். அவை அனைத்தையும் துறந்து கிறிஸ்துவுக்காக வாழும்போது (பிலி 9,10,11) அவர் நம்மை மேன்மைப்படுத்துகிறார். கிறிஸ்து அந்த மகிமையைப் பெற்றுக்கொண்டார். விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் போற்றுகின்ற மேன்மையான நாமத்தைச் சொந்தமாக்கினார். நாமும் கிறிஸ்துவின் மாதிரியைச் சொந்தமாக்கிக்கொள்ள, அந்த மகிமையில் பிரவேசிக்க வேண்டும் என அழைக்கிறார்.

திரு. J.K. **ஜெனிபர்**

06-03-2022



# மீட்புப் பணியில் பெண்கள்

**WOMEN IN SALVIFIC WORK**

நீத 5:1-7 உரோ 16:1-16
திபா 79 லூக் 23:26-31

**"தெபோரா! நீ எழும்பும் வரை, இஸ்ரயேலின் தாயாகத் தோன்றும்வரை, இஸ்ரயேலின் சிற்றூர்கள் வாழ்விழந்து கிடந்தன"** (நீத 5:7).

மீட்புப் பணி என்பதை விடுவிக்கும் பணி, தப்புவிக்கும் பணி, காப்பாற்றும் பணி எனக் கூறலாம். தியானப்பகுதியான நீத 5:1-7 வசனங்களில் இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரின் பார்வைக்குப் பொல்லாப்பானவைகளைச் செய்தபடியால் கானானிய அரசன் யாபின் மற்றும் அவன் சேனாதிபதி சீசரா என்பவர்களால் அடிமைப்படுத்தப்பட்டு இருபது வருடங்கள் ஒடுக்கப்பட்டார்கள். பின் ஆண்டவரை நோக்கி முறையிட்ட போது ஆண்டவர் தெபோரா பாராக், யாவேல் என்பவர்கள் மூலம் இஸ்ரயேலர் கானானியரைப் போரில் வெற்றி பெறச் செய்ததை நினைத்துப் பாடிய துதிப் பாடலாகும். இந்நிகழ்வு நீதித்தலைவர்கள் 4 ஆம் அதிகாரத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. தெபோரா, யாவேல் என்ற இரு பெண்களால் நிறைவேற்றப்பட்ட மீட்பு பணி இன்றைய பெண்களுக்கு எவ்விதம் மாதிரியாய் விளங்குகிறது. என்பதனை ஆராய்வோம்.

## *1. தாயாக எழும்பிய தெபோரா:*

இலப்பிதோத்தின் மனைவி என்று அறிமுகப்படுத்தப்படும் இவர், தான் வாழ்ந்த காலத்தில் நீதித்தலைவராகவும் இறைவாக்கினராகவும் செல்வாக்கு நிறைந்த பெண்ணாகவும் விளங்கினார். தன்னிடம் நியாயம் கேட்க வந்தவர்களுக்குத் தாயைப் போன்று போதனை செய்து ஆண்டவருக்கு நேராக மனந்திரும்பச் செய்தபடியால் மக்கள் மனப்பூர்வமாய்த் தங்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கவும் (நீத 5:2) கொடுமையான ஒடுக்குதலினிமித்தம் ஆண்டவரிடத்தில் முறையிடவும் செய்தார்கள் (நீத 4:3.4). தெபோரா என்ற பெயரின் பொருள் 'தேனீ' என்பதாகும். பெயருக்கேற்றவாறு தன் மக்களுக்கு இனிமையாகவும், பகைவர்களுக்கு கொட்டி விரட்டும் தேனீயாகவும் விளங்கினார். இவருடைய நாட்களில் இஸ்ரயேல் மக்களிடம் காணப்பட்ட மூன்று முக்கியமான நடைமுறைகள் இன்றும் புதிய இஸ்ரயேலர் என்றழைக்கப்படுகின்ற கிறிஸ்தவர்கள் மத்தியிலும் காணப்படுகின்றன.

அன்று தெபோரா செயல்பட்டதால் கானானியரின் அடிமைத்தனம் நீங்கி இஸ்ரயேலர் மீட்படைந்தது போல, உலகம், மாமிசம், பிசாசு இவைகளுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் கிறிஸ்தவம் மீட்பு பெறும் என்பதில் சந்தேகமில்லை.

**தெபோரா தாயாக எழும்புமளவும் இஸ்ரயேலின் சிற்றூர்கள் வாழ்விழந்து கிடந்தன** (நீத 5:7). ஏனெனில் இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வந்தார்கள் (நீத 4:1). இயேசு கிறிஸ்துவின் விலைமதியாத இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களாகிய நாமும் ஆண்டவரின் பார்வைக்குப் பொல்லாப்பானவைகளைச் செய்கிறோம். வாழ்வில், வாயின் வார்த்தைகளில், வர்த்தகத்தில், உழைப்பில், உயர்வுகளில் உண்மையில்லை. போட்டிகள், பொறாமைகள், சண்டைகள், வழக்குகள், வாது, பிரச்சனைகளுக்கு மேல் பிரச்சனை; காரணம் பொறுமையில்லை. பரிகாசம், மனமேட்டிமை, வாக்குவாதம், வஞ்சகம், வதந்திகள். காரணம் தாழ்மையில்லை. "நீங்கள் தூயவராயிருங்கள்; ஏனெனில் நான் தூயவன்" (1பேது 1:16) என்ற இறைவார்த்தையை நினைவில் கொள்ளாது அசுத்தத்திற்கும் தீய, பாவப்பழக்கவழக்கங்களுக்கும் தங்களை அடிமையாக்கியுள்ளனர்.

**வேற்றுத் தெய்வங்களைத் தேர்ந்துகொண்டனர்** (நீத 5:8). "என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது" என்கிற முதலாம் கட்டளையை இஸ்ரயேல் மக்கள் மறந்து மனம்போன போக்கில் பிற இனத்தவர்களின் தெய்வங்களையும் விக்கிரங்களையும் வணங்கியும், பணிந்துகொண்டும், ஆராதனை செய்தும் சடங்காச்சாரங்களைப் பின்பற்றியும் வந்தனர். அதைப்போலவே கிறிஸ்தவர்கள் மண்ணாசை, பொருளாசை, பதவிஆசை, பண ஆசை ஆகிய விக்கிரகங்களுக்கு அடிமைகளான நிலையை இன்று காணமுடிகிறது. மேலும் நம்மை மீட்ட இயேசு கிறிஸ்துவின் திருப்பெயருடைய மாட்சிக்காக வாழாது, நாம் பெற்றுக்கொண்ட கல்வி, பொருளாதர வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றால் பெற்றுக்கொண்ட வசதிகளையும் வாய்ப்புகளையும் வேற்றுத் தெய்வங்களைப் போன்ற சுயம் சார்ந்த சிற்றின்பங்களுக்கும், பெயருக்கும், புகழுக்கும், பதவிவெறிக்கும் பேராசைக்கும் அடிமைகளாகிப்போன அவலநிலை ஏற்பட்டுள்ளது.

**வாயில்களில் போர் வந்துற்றது.** இஸ்ரயேலின் நாற்பதாயிரம் பேர்களுள் எவரிடம் கேடயமோ ஈட்டியோ இருந்தது? (நீத 5:8). கிறிஸ்தவர்களின் வீடுகளிலும் குழப்பங்கள், சண்டைகள், கீழ்ப்படிய

மறுக்கின்ற, பிடிவாத குணமுடைய பிள்ளைகள், முறையற்ற திருமணங்கள், மணமுறிவுகள், சோம்பல், சுத்தம், சுகாதரமற்ற வாழ்க்கை முறைகள், வியாதிகள், விரோதங்கள், வீண் பிரயாசங்கள்; காவல் நிலையம், நீதிமன்றம் என அலைச்சல்கள், அதிக செலவு, ஆடம்பரம், அலங்கரிப்பு அதனால் கடன் பிரச்சனை ஆகமொத்தம் அமைதியின்மை ஏற்படுகிறது. போர்புரிய கேடயமும் ஈட்டியும் இல்லாதிருந்தது போலப் பிரச்சனைகளுக்குக் காரணமான பிசாசின் தந்திரங்களோடு எதிர்ந்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி கடவுளின் சர்வாயுதவர்க்கங்களாகிய உண்மை, நீதி, சமாதானம், கேடயமாகிய நம்பிக்கை, போர்வாளாகிய கடவுளின் வார்த்தை குடும்பங்களில் இல்லை.

தெபோரா என்ற தேனீ அடிமைச் சூழ்நிலையில் ஆண்டவர் இஸ்ரயேலுக்கு நீதியைச் சரிக்கட்டும்படியாக இஸ்ரயேலர் தங்களை மனப்பூர்வமாய் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்க, (நீத 5:2) தாயைப்போன்று போதனை செய்து வழிநடத்தினார். அதைப்போலவே பெண்கள் ஒவ்வொருவரும் தேனிலும் மதுரமான இயேசுவின் திருப்பெயர் மகிமைப்படும்படியாகக் குடும்பங்களிலும், ஆண்டவருக்குச் சித்தமானால் திருச்சபைகளிலும், சமுதாயத்திலும் தெபோராக்களாக எழும்ப வேண்டும். ஆண்டவர் சொல்லிய வார்த்தைகளை நினைவுபடுத்தி பாராக்கைப் போருக்கு அழைத்துச் சென்றதைப் போன்று பிள்ளைகளுக்குத் திருமறை வசனங்களைச் சொல்லிக்கொடுத்து, ஆண்டவர்பேரில் பற்றுறுதியை வளர்க்கவேண்டும். உலகம், மாமிசம், பிசாசு ஆகியவற்றின் சோதனைகளுக்கு அடிமைப்பட்டுப் போகா வண்ணம் திருமறை வசனங்களைக் கொண்டு மேற்கொள்ளும் தைரியத்தையும், துன்ப, துயர சவால் நிறைந்த வேளைகளில் ஜெபித்து வெற்றி பெறும் வழக்கங்களையும் கற்றுத்தர வேண்டும்.

### *2. பெண்களுக்குள் பேறுபெற்ற யாவேல்*: (நீத 5:24)

யாவேல் என்னும் பெண்மணி தன் கூடாரவாசலில் நின்று கொண்டிருந்தார். 900 இரும்பு ரதங்களோடு போருக்குச் சென்ற சீசரா என்னும் சேனாதிபதியும் அவன் படைகளும் ஆண்டவரால் கலங்கடிக்கப்பட்டதால் இரதத்தை விட்டிறங்கி கால்நடையாய் யாவேலின் கூடாரத்தில் பதுங்க வந்தடைந்தார். வந்தவரை ‘உள்ளே வாரும்’ என்று வரவேற்று அழைத்துச் சென்று தண்ணீர் கேட்டவருக்குத் துருத்தியிலிருந்து பால் ஊற்றிக்கொடுத்து, நித்திரை செய்ய நினைத்தவரைப் போர்வையால் மூடினார். அவர் மெய்மறந்து நித்திரை செய்தார். சற்றும் தாமதியாமல் யாருடைய உதவியையும் நாடாமல், தன் கைகளில் கூடார ஆணியையும்

சுத்தியலையும் எடுத்து வந்து அவருடைய நெற்றியில் ஓங்கி அறைந்தார். ஆணி உருவிப்போய் தரையில் புதைந்தது. அவர் மரித்துப் போனார். சீசராவை துரத்தி வந்த பாராக் ஆண்டவர் இஸ்ரயேலுக்கு யாவேல் மூலம் மீட்பைக் கட்டளையிட்டார் என்பதனைக் கண்டார். வீரர்கள் போரில் தோல்வியடைந்தாலும் வீரமரணமடைவதையே விரும்புவர். படைத்தலைவரான சீசரா ஒரு சாதாரண கூடாரவாசியான பெண்மணியால் சாதாரணமான ஆனால் பலமான வீட்டு உபயோகத்திற்கான கருவிகளால் வெற்றிகொள்ளப்பட்டார்.

சீசரா பொல்லாதவன் (நீத 5:28,30). யாவேலின் கூடாரம் வந்து சேர்ந்தவர், வரவேற்பறையிலே இருந்திருக்கலாம். ஆனால் அவர் படுக்கையறைக்குச் சென்றுவிட்டார். யாவோல் அவரை வீழ்த்தியிராவிட்டால், அவர் கணவர் வீடுதிரும்பிய பின் அவரைச் சந்தேகித்துத் தள்ளிவிட்டிருப்பார். அல்லது சீசராவைப் பின்தொடர்ந்த பாராக் அவரோடு சண்டையிட்டு அவருடைய கூடாரத்தைப் போர்க்களமாக மாற்றியிருப்பார். ஆனால் யாவேல் முந்திக்கொண்டார். தன் கூடாரத்தையும், குடும்பத்தையும், வாழ்க்கையையும், தன் நாட்டையும் அழிவினின்று மீட்டுக் கொண்டார்.

இன்று நம் இல்லங்களுக்கு சீசரா போன்ற தொலைக்காட்சிகள், தொழில் நுட்பச் சாதனங்கள் பதுங்க இடம் தேடியும், பகட்டான ஆரவாரத் தோற்றங்களுடன் தவிர்க்க இயலாததாய் வந்து விடுகின்றன. அறிவியல் முன்னேற்றம், தொழில் நுட்ப வளர்ச்சி, துரித உணவுகள், கணினி, இணையப் பயன்பாடு, இணையதள விளையாட்டுகள் நவநாகரிக மோகம் ஆகியவற்றிற்கு அடிமைகளாகிவிடும் குடும்ப அங்கத்தினர், குறிப்பாக இளையோர்கள். காரணம் யாதெனில் வரவேற்பறையில், கற்கும் அறையில், பணியாற்றும் அறையில் இருக்கவேண்டிய இச்சாதனங்கள் நம் படுக்கையறைக்கே வந்து நிரந்தரமாக இடம் பிடித்துக் கொண்டன. பொழுது போக்கு முழுநேரத்தையும் ஆக்கிரமித்துக்கொண்டது. இதன் விளைவுகள்-விளையாட்டு விளையாட்டு என பல விபரீதங்கள்; கல்வியில், பணியில் கவனக்குறைவு; விபச்சாரம், கள்ளக்காதல், மணமுறிவுகள், ஏமாற்றுவதும் ஏமாற்றப்படுவதுமான செயல்கள், திருப்பணியில் ஆலயத் தொழுகையில், ஜெபத்தில் பங்கேற்கும் வாஞ்சை குன்றிப்போய் மாதிரியாய் வாழ வேண்டியவர்கள் மாயைகளுக்கு அடிமையாகிவிட்ட அவலம்.

யாவேல் என்ற பெயருக்குக் ‘காட்டாடு’ என்று பொருள், காட்டாடுகளில் ஒருவகை ஆடுகள் மலைப்பாங்கான பகுதிகளில் வாழும்

வரையாடுகள். இவை சிங்கம், புலி, ஓநாய் போன்ற விலங்குகளின் பிடியில் சிக்காமல் செங்குத்தான பாறையிலும் கால் தடுமாறாமல் வேகமாக ஓடக்கூடியவை. இத்தகைய வரையாடுகள் போன்று கிறிஸ்தவப் பெண்கள் கிறிஸ்துவாகிய கன்மலையில் விசுவாச வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் போது சோதனையான வேளைகளிலும் தடுமாறாமல் வெற்றி நடைபோடலாம். கூடாரம் காற்றில் அசையாமல் நிற்க கூடார ஆணிகளில் கட்டப்படுகிறது. அதுபோல நம் குடும்பங்கள் பிரச்சனைகளால் அல்லலுற்று ஆடி அசைந்து விடாமலிருக்க பெண்கள் ஜெபத்தில் உறுதியாய்த் தரித்திருக்க வேண்டும். சுத்தியல் அல்லது சம்மட்டி ஆண்டவருடைய வார்த்தையாகிய திருமறையைக் குறிப்பிடுகிறது (எரே 23:29). நம் குடும்பங்கள் சத்தியத்தில் நிலைத்து வாழ திருமறை வசனங்கள் வாழ்வின் ஆதாரமாய் ஆலோசனையாய் அமைய வேண்டும். வேதவாசிப்பு, ஜெபம் ஆகியன தவறாமல் காலையும், இரவும் குடும்பங்களில் இடம்பெற வேண்டும். தூய்மையாய் வாழ யாவேல் கையிலெடுத்த ஆணியைப் போன்று உறுதியான தீர்மானங்கள் எடுக்கவேண்டும். தவறானவற்றை சிறிதளவும் அனுமதிக்கக் கூடாது.

விடுதலை என்ற பெயரில் கட்டுபர்பாடற்ற வாழ்க்கை முறையை இளையோர் நாடுகின்றனர். குடும்பத்தலைவியராக, தாய்மாராக பெண்கள் உண்பதில், உடுத்துவதில் உறவுகளைத் தெரிந்தெடுப்பதில் கவனம் செலுத்துவது மிக அவசியம். இயேசுநாதர் மீட்பின் சின்னமாம் சிலுவையைச் சுமந்த வண்ணம் கொல்கொதாவுக்கு நேராய் செல்கின்ற வழியில் அவருக்குபின் சென்ற பெண்களை நோக்கி “எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்” என்ற வார்த்தைகள் என்றும் நம் காதுகளில் தொனித்துக்கொண்டே இருக்கட்டும்.

பேரா. முனைவர் ***பெலிசியா செல்லையா***
பேராயரம்மா

| 06-03-2022 | தவக்கால முதலாம் ஞாயிறு & உயிர்ப்புக்கு முன்வரும் ஆறாம் ஞாயிறு |
|---|---|

# ஒதுக்கப்பட்டோரோடும், ஓரங்கட்டப்பட்டவரோடும் இருத்தல்

## BEING WITH OUTCASTS AND MARGINALIZED

எஸ் 4:1-17 திப 15:12-21
திபா 43 மாற் 1:40-45

**இயேசு அவர்மீது பரிவு கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம், "நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!" என்றார்** (மாற் 1:41).

மானுடர் தமக்குள் இடைவெளிக்கோட்டை ஏற்படுத்தும் காரணிகளாக பொருளாதார நிலை, கல்வி, பதவி, சாதி போன்றவை உருவேற்றப்பெற்றுள்ளன. இவற்றின் அடிப்படையில் வகைப்படுத்திக் கொள்வதால் மேற்குறிப்பிட்ட காரணிகளில் குறைநிலையிலுள்ளோர் ஒதுக்கப்பட்டோராக (புறக்கணிக்கப்பட்டோராக) சமூகத்தின் விளிம்பு நிலைக்கு தள்ளப்படுகின்றனர். "கடவுள் ஆள்பார்த்து செயல்படுவதில்லை" என பேதுரு சசன்றுரைத்தார் (திபா.10:34). அவர் அனைவரையும் சமநிலையில் அங்கீகரிக்கிறார். லேவியர் 19ஆம் அதிகாரத்தில் மோசேயின் வழியாக இஸ்ரயேல் மக்கள் நீதி நெறி தவறாமல், சிறியோர் பெரியோர் என பாராமல் நீதி வழங்கிடவும் (வ.15), உன் மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூருவாயாக (வ.18) எனவும் ஆலோசனை வழங்குகிறார். ஒதுக்கப்பட்டோரோடும், ஓரங்கட்டப்பட்டவரோடும் இணைந்திருக்க கடவுள் நமக்குத் தரும் வழிகாட்டுதல்களை இன்றைய திருமறைபகுதிகள் சார்ந்து தியானிப்போம்.

### *1. அழியவும் துணிந்திடும் அன்புறவு:*

சட்டத்திற்கு புறம்பே எனினும் நான் மன்னரிடம் செல்வேன்! அழிவதாயின் அழிகின்றேன் (எஸ் 4:16)

தன்னை வணங்காத மொர்தைகாயை பழி வாங்கும் நேரத்தில் ஆமான் ஏற்படுத்திய சதித்திட்டம் அரசி எஸ்தரின் இனமான யூதர் அனைவரும் அழிக்கப்படுவதற்கான சட்டமாய் அகஸ்வேர் மன்னரின் ஆளுகைக்குட்பட்ட அனைத்து நாடுகளிலும் அறிவிக்கப்பட்டது. செய்தியறிந்த மொர்தெகாய் சாக்கு உடை அணிந்து, சாம்பல் பூசிக் கொண்டு நகரின் மையத்தில் ஓலமிட்டார்; யூதர் அனைவரும் மிகுந்த கவலைக்குள்ளாயினர். தகவல் எஸ்தருக்கு எட்டியது. அரசரின் அழைப்பின்றி எவரும் அவரும் அணுக மடியாது. எனினும், கடவுளின்

இரக்கத்தை நாடி அனைத்து யூதர்களும், எஸ்தரும் அவரது செவிலியரும் நோன்பிருந்து மன்றாடினர். சட்டத்தை மீறி அரசரை அணுகிய அரசி எஸ்தர் அரசரிடம் செல்ல அங்கீகாரம் பெற்றனர். பக்குவமான முறையில் தனது கோரிக்கையினை அரசரிடம் பகிர்ந்து தம் மக்களை அழிவினின்று காப்பாற்றினார்.

உரிய காரணமின்றி அழிக்கப்படும் நிலையில் ஒதுக்கப்பட்ட யூதர்களின் விடுதலைக்குக் காரணமாக அமைந்தது அரசி எஸ்தரின் சவால் மிகுந்த செயல்திட்டமே எனில் மிகையன்றி. சுயநலம் தவிர்த்து தம் மக்களின் நலம் பேணுவதற்காக மிகத்தீவிரமாய் செயல்பட்ட எஸ்தர் முதலில் கடவுளின் அருளை நாடுகின்றார்; தொடர்ந்து மனித விடுதலை செயலை எதிர்நோக்கினார். ஒதுக்கப்பட்டோரோடும், ஓரங்கட்டப்பட்டோரோடும் தம்மை அடையாளப்படுத்தும் கடவுள் அரசரின் தயை எஸ்தருக்கு கிடைக்கச் செய்தார்.

உலக வார்க்கை நிலை அடத்தடுத்த கட்டங்களுக்கு உயர்ந்திடும்போது அனைத்து நன்மைகளுக்கும் ஆதாரமான கடவுள் நம் வாழ்விலிருந்து ஓரங்கட்டப்பட்டவராக்கப்படும் நிலையினை உணர்வோம். தங்களை ஒதுக்கப்பட்டோராக்கி, உணர்வெல்லாம் 'என் பிள்ளைகள் நலனே முதன்மை' என உழைத்துக் கரைந்துபோன பெற்றோரை ஒதுக்கப்பட்டோராக்கும் ஐயங்களும் நம்மிடையே உண்டன்றோ. வாழ்வின் பாதுகாப்பான இடத்தில் அடைக்கலமாகிவிட்ட நாம் புறக்கணிக்கப்பட்டோருக்கு புறமுதுகு காட்டுகிறோம். எளியோர் பக்கம் நியாயம் இருப்பினும், வலியோர் பக்கமாக அதை சிரமப்பட்டு வளைக்கிறோம். அது தவறென கடவுள் எச்சரிக்கிறார் (ஆமோ 5:12). எஸ்தரின் உள்ளம் அநீதியாய் அழிக்கப்படவிருந்த தம் மக்களுக்காய் துடியாய் துடித்தது. தாம் அழிந்து போகவும் ஆயத்தமாகும் துணிச்சல் அவரிடம் வலுப்பெற்றது. அநீதி அழிந்து, நிலைநிறுத்தப்பெறும் வரையிலும் எஸ்தர் ஓய்ந்திருக்கவில்லை. எளியோர் பக்கம் நீதி நிலைநிறுத்தப்பட கடவுளின் துணையுடன் உழைப்போம்.

### *2. அனைவரையும் அங்கீகரித்திடும் சமநிலை:*

... கடவுளிடம் திரும்பும் பிற இனத்தாருக்கு நாம் தொல்லை கொடுக்கலாகாது (திபா 15:19)

யூதேயாவிலிருந்து வந்த சிலரது செய்தி விருத்தசேதனம் செய்யாவிடில் மீட்பில்லை என்பதாக அமைந்திருந்தது. ஆகவே அவர்களுக்கும், பவுல் பர்னபாவுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. எனவே, பவுல் பர்னபாவும், வேறு சிலரும் எருசலேம் வந்து அது பற்றி

விவாதித்தனர். அப்பொழுது கிறிஸ்துவில் பற்றுறுதி கொண்ட பிற இனத்தவர் விருத்தசேதனம் செய்ய வேண்டுமெனவும், மோசே வழியாக வழங்கப்பட்ட சட்டத்தை கடைபிடிக்க வேண்டுமெனவும் பரிசேயரிலிருந்து ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்ட சிலர் கூறினார் (திபா 15:5). இது பற்றிய விவாதத்துக்குப்பின் பேதுரு, கடவுள் நமக்கும் அவர்களுக்குமிடையே எந்த வேறுபாடும் காட்டவில்லை; ஆண்டவர் இயேசுவின் அருளால் நம்மைப் போன்றே அவர்களும் மீட்பு பெறுகிறார்கள் என உறுதியான கூறினார் (திபா 15:9-11).

இதற்குபின் இயேசுவின் சகோதரராக அறியப்பட்ட யாக்கோபு கடவுள் பிற இனத்தாரிடமிருந்து தமக்கென மக்களைத் தெரிந்து கொள்ள அவர்களைத் தேடி வந்தது பற்றி சீமோன் கூறியதையும், இறைவாக்கினர் வழியான செய்தியாக வேற்று இனத்தவர் அனைவரும் ஆண்டவரைத் தேடுவர் என்பதையும் மேற்கோள் காட்டி, கடவுளிடம் திரும்பும் பிற இனத்தவருக்கு தொல்லை கொடுக்ககூடாது என தெளிவாக பேசிளனார் (திப 15:13-19). எனினும் அவர்கள் கடவுள் விடாதபடி சிலைகளுக்கு படைக்கப்பட்டு உணவை உண்ணுதல், பரத்தமை போன்ற தீமைகளிலிருந்து விலக அறிவுறுத்துகிறார் (திப 15:20,21).

தூய பவுலார் கலாத்தியருக்கு எழுதிய கடிதத்தில் யூதர் - கிரேக்கர், அடிமைகள் - உரிமைகுடிமக்கள், ஆண் - பெண் என்னும் வேறுபாடுகள் கிறிஸ்து இயேசுவிடம் இணைந்துள்ளோருக்கு இல்லை என்கிறார் (கலா 3:28). தற்கால திருச்சபை விசுவாசிகளுக்குள் பல்வேறு காரணிகளால் வேறுபாடுகள் ஏற்படுத்தப்படுகின்றன. சமூக செல்வாக்கும், பொருளாதார செழுமையும் உள்ளவர்கள் தங்களை திருச்சபைக்குள் உயர்ந்தவர்களாகவும், சிறந்தவர்களாகவும் கருதிக் கொண்டு, அவை இல்லாதவர்களுக்கு இடமில்லையென எண்ணங்கொள்ளுதல் முறையல்ல. மேலும், திருச்சபைக்குள் நடமாடும் தீமைக்குள் ஒன்று விளிம்பு நிலை மக்களுடன் தங்களை அடையாளப்படுத்தவாராகக் கூறி விளம்பரமும், சுயலாபமும் தேடுதலாகும். தர்மம் செய்யும் போது தம்பட்டம் அடிக்காதவர்களென்றும், வலங்கை செய்வதை இடங்கைக்கு தெரியக்கூடாதென்றும் (மத் 6:2,3) கூறிய இயேசுநாதரின் அறிவுரைக்கு முற்றிலும் முரண்பட்ட நிலையன்றோ இது. இந்நிலை மாறி சமநலப்பார்வை பரிசேய மனநிலை துறந்து ஆயக்காரர் போல் நம்மைத் தாழ்த்த வேண்டும்.

### *3. அரவணைத்து ஏற்றிடும் இறையருள்:*

இயேசு அவர் மீது பரிவுக் கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு ...... (மாற் 1:41a)

தொழுநோய் பாதித்தவர் கிழிந்த ஆடையணிந்து, வாரப்படாத தலையுடன் தீட்டு, தீட்டு என குரலெழுப்பிச் செல்ல வேண்டும். பாளையத்துக்கு வெளியே தனியாக குடியிருக்க வேண்டும் (லேவி 13:45,46). மற்றவர்களுடன் தொடர்பின்றி தனிமையாக்கப்பட்ட நிலையில் உடல் வலியுடனும், மனவலியுடனும் வாழும் தொழுநோயிற்றோர் சமூகத்தின் விளிம்பு நிலையில் புறக்கணிக்கப்பட்டோராயிருந்தனர். அவர்களது அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்படுவதும் கேள்விக்குறியாகவே இருந்தது.

இங்கு தொழுநோயாளியொருவர் இயேசுவிடம் வந்து பேசுகிறார், முழந்தாளிட்டு வேண்டுகிறார். இவர் பிறரது அருகில் செல்லவோ பேசவோ அனுமதி மறுக்கப்பட்டவர். அசுத்தமானவர் என அருவருக்கப்பட்டவர். இயேசு அவரிடம் நெரங்கிச் சென்று தம் கரங்களால் அவரைத் தொட்டார். இயேசுவின் உள்ளத்திலிருந்து பரிவும், பாசமும் பொங்கி வழிந்தத. காரணம், அம்மனிதரின் உடைந்த உள்ளத்தின் உணர்வுகைளை அவர் புரிந்து கொண்டார். எனது நோயை நீக்க உம்மால் முடியும் (மாற் 1:40) என இயேசுவின் இறையாற்றலை இனங்கண்டு அறிக்கையிடும் அம்மனிதரின் பற்றுறுதியை அங்கீகரித்தார் இயேசு. அஸ்தமித்துக் கொண்டிருந்த அம்மனிதரின் வார்வில் புதிய விடியல் பிறந்தது.

கடும் நோய்களாலும், வறுமையினாலும், சின்ன பிற காரணங்களாலும் விளிம்புக்குத் துரத்தப்பட்ட மக்களின் மனங்களைப் புரிந்து கொள்ளும் உள்ளம் நமக்குத் தேவையன்பதை இயேசு தம் செயலில் உணர்த்துகிறார். தர்சமமான நிலையிலோ, நம்மைவிட உயர்ந்தநிலையிலோ இருப்போரிடம் மட்டும் உறவு கொண்டாடும் நிலை தவிர்தது இயேசுவின் மனநிலையுடன் துயயம் மக்கள் சாய்ந்திடும் பக்குவம் நமக்கு அவசியமென்பதை இயேசு தம் செயலால் கற்றுத் தருகிறார். “விளி கேட்டால் கதவு திறக்க வேண்டியிருக்கும்” என்றெண்ணி விளிம்பு நிலை மக்களின் விழிகளையே தவிர்த்திடும் நம் நிலையினை உணர்வோம்.

லியோ டால்ஸ்டாய் என்ற புகழ்பெற்ற கதாசிரியர், வீதியில் நடந்துகொண்டிருந்த போது, வழியில் ஏழையொருவன் இரு கரங்களையும் நீட்டி பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். வீதியில் சென்று கொண்டிருந்தோர் அவன் டால்ஸ்டாய் அவரைக் கடந்து சென்றபோது அவரிடமும் அவன் பிச்சை கேட்டான். அவர் நின்று அவனை திரும்பிப் பார்த்து, “அருமைத் தம்பி உனக்கு கொடுக்க தற்சமயம் என்னிடம் பணமில்லையே என வருந்துகிறேன்” என்று கூறினார். அதற்கு அவன் அவரைப் பார்த்து, ஐயா, நீங்கள் எனக்குப் பன்மடங்கு உதவி செய்து

விட்டீர்கள். நான் பிச்சை கேட்டபோது சிலர் திரும்பிக்கூட பார்க்காமல் சென்றனர். சிலர் காசுகளை வீசியெறிந்து சென்றனர். நீங்கள் என் மனம் குளிரும்படி "அருமைத்தம்பி" என்றழைத்தீர்களே, அதுவே எனக்குச் செய்த உதவி என்று சொன்னான். ஒதுக்கப்பட்டோரும், ஓரங்கட்டப்பட்டோரும் தங்களுக்குப் பணம் அவசியமென்றாலும் தாங்கள் மனிதர்களாக அங்கீகரிக்கப்படுவதை பெரும் பாக்கியமாக எண்ணுகின்றனர்.கடவுள் புறக்கணிக்கப்பட்டோர் பக்கமாய் செயல்படுகிறார். எனவே, அவர்களை வஞ்சிப்பதும் வழக்கில் அநீதி செய்வதும் ஏற்புடையதல்ல (நீமொ 22:22,23).

நமது கடந்தகால வரலாற்றை திரும்பிபார்ப்போம். ஒடுக்கப்பட்டோராகவும், உரிமைகள் மறுக்கப்பட்டோராகவும் இருந்த நம் முன்னோர் நற்செய்தியில் பெற்ற நன்மைகளே கல்வியும், சமூக உயர்நிலைகளும், பொருளாதார வளர்ச்சியும் என்பதை சிந்தித்து செயல்படுவோம். கொரோனா பெருந்தொற்று சூழலில் இடைவெளி கடைபிடிக்க அரசு அறிவுறுத்தியபோது, மனித மக்களிடையேயும் பெரிய இடைவெளியை உருவாக்கிக் கொண்டது வருந்தத்தக்கதாகும். நம்முடன் வாழும் மக்களுடன் இசைந்து வாழ்வோம். நமது மனங்களை விசாலமாக்கி விளிம்புநிலை மக்களை அரவணைத்து அங்கீகரிப்போம்.

அருள்திரு. R. **ஹென்ஸ்லின் நேசராஜ்**

13-03-2022

**தவக்காலம் இரண்டாம் ஞாயிறு &**
**உயிர்ப்புக்கு முன்வரும் ஐந்தாம் ஞாயிறு**

# பாவச் சுமையிலிருந்து விடுவித்தல்

## RELEASING FROM THE BURDEN OF SIN

2சாமு 12:1-14 திப 8:9-25
திபா 32 மாற் 2:1-12

**"..... மகனே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன"** (மாற் 2:5).

திருமறைக்கு அடுத்தபடியாக அதிக மொழிகளில் அச்சிடப்பட்டுள்ள புத்தகம், ஜாண் பன்யன் எழுதிய 'மோட்சப் பிரயாணம்' என்னும் காவியம் ஆகும். மோட்சப்பிரயாணியின் முதுகில் மூட்டையொன்று இறுகக் கட்டப்பட்டிருக்கும். நற்செய்தியாளர் ஒருவரிடம் அழுதுகொண்டே, ஐயா என் முதுகில் மூட்டையாகக் கட்டப்பட்டிருக்கிற என் பாவச்சுமை என்னை நரகத்துக்குக் கொண்டுபோய் விடுமாமே எனக் கவலையுடன் கூறினான். நற்செய்தியாளர், வரும் கோபத்துக்குத் தப்பித்துக் கொள்ள வழியொன்றைக் காட்டினார். இடுக்கமான வாசல் வழியாகப் பயணித்துச் சென்றடையும் நித்திய வாழ்வுக்கான வழி அதுவாகும். போகும் வழியில் மரத்தாலான சிலுவையும் அதன் அருகே காலியான கல்லறையும் காணப்பட்டது. கிறிஸ்தியான் (மோட்சப்பயணி) சிலுவையின் அருகில் வந்தவுடன் அவன் முதுகிலிருந்த சுமை அறுந்து கீழே விழுந்தது. உருண்டு அந்தத் திறந்திருந்த கல்லறையில் சென்று மறைந்தது. அதன் பின் அவன் அந்தச் சுமையை உணரவே இல்லை. "அவரது பாடுகளால் எனக்கு விடுதலை கிடைத்தது, "அவரது மரணத்தில் எனக்கு வாழ்வு இசைந்தது" எனக் கூறிகொண்டே முதுகுச் சுமை (பாவச் சுமை) இல்லாதவனாகத் தன் பயணத்தைத் தொடர்ந்து மோட்ச வாசலை அடைந்தான்.

"பாவம் என்பது ஒரு பெருஞ்சுமையே; பாவம் என்ற சொல்லுக்கு குறிதவறுதல் எனப் பொருள் கொள்ளப்படுகிறது." பாவமில்லாதவர் எவருமில்லை என்கிறது திருமறை. சட்டத்தை மீறுவது பாவம் (1யோவா 3:4). பாவச் சுமையிலிருந்து மனிதரை மீட்கவே இயேசு கிறிஸ்து வந்தார். (1யோவா 3:5, மத் 1:21). இயேசு அருளும் விடுதலை தான் உண்மையானது (யோவா 8:36).

### *1. இச்சை எனும் சுமை* : (2சாமு 12:13)

"நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்து விட்டேன்" - தாவீது "ஆணட்வரும் உனது பாவத்தை நீக்கிவிட்டார்" – நாத்தான்.

தீய நோக்கம் பாவம் என்கிறது திருமறை (நீமொ 24:9). பாவம் செய்கிற ஆத்துமா சாகும் என எச்சரிக்கிறார் எசேக்கியா தீர்க்கர் (18:20). மனிதர் ஒவ்வொருவரும் தம் சொந்த தீய நாட்டத்தினாலே (இச்சை) சோதிக்கப்படுகின்றனர். அது அவர்களைக் கவர்ந்து மயக்கி தன்வயப்படுத்துகிறது. பின்னர் தீய நாட்டம் கருக்கொண்டு பாவத்தைப் பெற்றெடுக்கிறது. பாவம் முழு வளர்ச்சியடைந்து சாவை விளைவிக்கிறது (யாக் 1:14,15). இஸ்ரயேலின் சிறந்த அரசராகவும், இறைவருக்குப் பிரியமானவராகவும் வாழ முயன்ற தாவீதை இச்சை எனும் பாவம் எளிதாக வீழ்ச்சியடையச் செய்தது. இதனைப் பின்னணியமாகக் கொண்ட 32ஆவது திருப்பாடலில், எவரது குற்றம் மன்னிக்கப்பட்டதோ, எவரது பாவம் மறைக்கப்பட்டதோ அவர் பேறு பெற்றவர் என்பதுடன் என் பாவத்தை அறிக்கையிடாதவரை நாள் முழுவதும் நான் கதறி அழுததால் என் எலும்புகள் கழன்று போயின, என் வலிமை வறண்டு போயிற்று (திபா 32:1-5). என் பாவத்தை உம்மிடம் அறிக்கையிட்டேன், நீரும் என் நெறிகேட்டையும் பாவத்தையும் போக்கினீர் என்கிறார். நாத்தான் தீர்க்கரால் தன் தவறு சுட்டிக்காட்டப்பட்டவுடன் உணர்வடைந்து, பாவச் சுமை அகல பரிகாரம் தேடினார் (திபா 51). தன் குற்றப் பழிகளை மூடி மறைப்பவரின் வாழ்க்கை வளம் பெறாது. அவற்றை ஒப்புக் கொண்டு, விட்டு விடுகிறவர் இரக்கம் பெறுவார் (நீமொ 28:13, 1யோவா 1:8-10). இறைமக்களாகிய நாமும் ஊனியல்பின் செயல்களைச் செய்து (கலா 5:19-21) இறையாட்சியின் உரிமைப்பேற்றை இழந்து விடாதிருப்போம்.

### ***2. இவ்வுலக ஆசை எனும் சுமை*** : (திப 8:20)

“கடவுளது கொடையைப் பணம் கொடுத்து வாங்க எண்ணியதால் நீயும் உன் பணத்தோடு நாசமாய்ப்போ....”

உலகியல் வாழ்வுக்குப் பணமும், பொருளும் அவசியமானதே, ஆயினும் பணம் சம்பாதிக்கவும், பொருள் சேர்க்கவுமே வாழ்வது தவறானது. எவ்வகைப் பேராசைக்கும் இடம் கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள். மிகுதியான உடைமையைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்திடாது என்கிறார் அருள் நாதர் இயேசு (லூக் 12:15). உலகின் மீதும், அதிலுள்ளவை மீதும் அன்பு செலுத்தாதீர்கள். அவ்வாறு அன்பு செலுத்துவோரிடம் தந்தையின் அன்பு இராது, உலகம் மறைந்து போகிறது. அதன் தீய நாட்டங்களும் மறைந்து போகின்றன. ஆனால் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர் என்றும் நிலைத்திருப்பார் (1யோவா 2:15-17).

முதல் தலைமுறை கிறிஸ்தவர்களுக்கு யூதச் சமயத்தாலும், உரோமை அரசாலும் துன்பம் ஏற்பட்ட போது சிதறிய மக்கள் தாங்கள்

சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்து வந்தார். பிலிப்பு சமாரியா நகர் சென்று அங்குள்ள மக்களுக்கு மெசியாவைப் பற்றி அறிவித்தார். அருள் செய்தியைக் கேட்டவர்களும் ஒரு மனத்தோடு அவருக்குச் செவி சாய்த்தனர். அந்நகரில் பெரும் மகிழ்ச்சி உண்டாயிற்று. மாயவித்தைக்காரன் சீமோன் மனமாற்றமடைந்து திருமுழுக்கு பெற்று பிலிப்புவுடன் கூடவே இருந்தான். பேதுருவும் யோவானும் பிலிப்புவுடன் இணைந்து திருப்பணி செய்தனர். அதுபோன்று தானும், யார் மீது கைவைத்தாலும் தூய ஆவியை பெற்றுக் கொள்ள அதிகாரம் கொடுங்கள் எனக் கேட்டு, அதற்காகப் பணம் கொடுக்க முன்வந்தான். ஆகவே அவனது பண ஆசை அவனோடு நாசமாய்ப் போகட்டும் என பேதுரு எச்சரிக்கை விடுத்ததுடன், நீ கசப்பு நிறைந்த உள்ளத்தினராய்த் தீவினைக்கு அடிமையாயிருப்பதை நான் காண்கிறேன். நீ மனம் மாறி ஆண்டவரிடம் மன்றாடு - மன்னிக்கப்படலாம் (8:20-23) என அறிவுரை கூறினார். பண ஆசையே அனைத்துத் தீமைகளுக்கும் ஆணிவேர். அந்த ஆசையால் சிலர் விசுவாசத்தினின்று பிறந்திருந்து பல வேதனைகளை தாங்களாகவே தங்கள் மேல் வருவித்துக் கொள்கிறார்கள் (1திமொ 6:10), பேராசையுடையோர் கடவுளின் அரசில் உரிமைப் பேறு அடையார் (1கொரி 6:10, எபே 5:5).

### *3. உடல்/ உள நோய் எனும் சுமை:*

"மகனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" (மாற் 2:5).

மனிதரின் பாவத்துக்கும் வியாதிக்கும் நெருங்கியத் தொடர்பு உண்டு. பாவம் மனிதரை பலவீனப்படுத்துகிறது. இன்றைய உளவியலாளர்கள் பாவத்திற்கும் உடல் நோய்க்கும் உள்ள தொடர்பை உறுதிப்படுத்தியுள்ளார்கள். நற்செய்திப்பகுதியில், முடக்கு வாதமுற்ற ஒருவரை இயேசுவிடம் நால்வர் சுமந்து வந்தனர். அவரிடம் "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்று இயேசு கூறியவுடன், அவர் தம் நோய் நீங்கி, நலமாகித் தன் படுக்கையைத் தூக்கிக் கொண்டு நடந்ததாக பதிவுச் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவரது பாவத்திற்கும் நோய்க்கும் தொடர்பு இருக்கிறது எனும் உண்மைத் தகவலை இயேசுவும் சுட்டிக் காட்டுகிறார்.

இயேசு முடக்குவாதமுற்றவரைப் பார்த்த மாத்திரத்தில் அவரது வியாதியின் காரணத்தைப் புரிந்து கொண்டு முதலாவது அவரது வியாதிக்கு அடிப்படைக் காரணமான பாவத்தை மன்னித்தார் (2:5). காரணம், பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் மானிடமகனுக்கு மட்டுமே உள்ளது (2:10). பாவம் செய்யும் எவரும் பாவத்துக்கு அடிமை எனவும் குமாரன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலேயே விடுதலை

பெற்றவர்களாயிருப்பீர்கள் என இயேசு உறுதிபட கூறினார் (யோவா 8:34-37). பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத் 11:28) என்றழைக்கிறார் இயேசு. பாவிகளை மீட்கவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார் (1திமொ 1:15) இக்கூற்று உண்மையானது. எல்லாராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கது. அந்தப் பாவிகளுள் முதன்மையான பாவி நான் எனும் பவுலடியாரின் மனநிலையுடன், “நான் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்து விட்டேன்” (2சாமு 12:13) எனும் தாவீதின் விசுவாசத் துணிவுடன் இயேசுவின் இரத்தம் எல்லா பாவங்களினின்றும் நம்மைத் தூய்மைப்படுத்தும் (1யோவா 1:7) எனும் வசன அடிப்படை அறிவுடனும், அனுதினமும் ஆண்டவருக்கு அஞ்சி உடல் ஆசை, உலக ஆசை, உடல் நோய் போன்ற சுமைகள் நீங்கி சுகமாய் வாழ முயலுவோம்.

அருள்திரு. D. **ஜாண் ஜெப தாஸ்**

20-03-2022

தவக்கால மூன்றாம் ஞாயிறு &
உயிர்ப்புக்கு முன்வரும் நான்காம் ஞாயிறு

# எல்லைகளைக் கடந்து இறைநம்பிக்கையை ஒப்புக்கொள்ளல்

## ACKNOWLEDGING FAITH BEYOND BOUNDARIES

எசா 44:28-45 | திப 10:24-33
திபா 125 | மத் 15:21-28

**"யாரையும் தீட்டுள்ளவர் என்றோ, தூய்மையற்றவர் என்றோ சொல்லக்கூடாது எனக் கடவுள் எனக்குக் காட்டினார்"** (திப 10:28).

கடவுள் எல்லையற்றவர். சமயப் பாரம்பரிய எல்கைகளுக்குள் கடவுளை அடக்கிவிட முடியாது. அப்படியானால் உண்மையான, இறைநம்பிக்கை மனித பாரம்பரிய வரைமுறைகளை கடந்ததாக இருக்க வேண்டும். உன்னத கடவுளோ மனிதர் கையால் கட்டிய இல்லங்களில் குடியிருப்பதில்லை (திப 7:48). அத்தேனே பட்டணத்தில் பவுல் மார்ஸ் மேடையில் ஓர் பல்சமய நம்பிக்கையுள்ளோர் நடுவில் நின்று தன் உரையாடலை ஆரம்பிக்கும் போது உலகையும் அதிலுள்ள அனைத்தையும் படைத்த கடவுள் விண்ணுக்கும், மண்ணுக்கும் ஆண்டவர். மனிதர் கையால் கட்டிய திருக்கோவில்களில் அவர் குடியிருப்பதில்லை (திப 17:24) என்றார்.

சமாரியப் பெண்ணோடு உரையாடும் ஏசு, யூதர்கள் எருசலேமில் தாய் கடவுளை தொழுது கொள்ள வேண்டும் என்று கூறும் பாரம்பரிய வரைமுறைகளை உடைத்து எருசலேமிலும் கெரிசீம் மலையிலும் மாத்திரமல்ல, எங்கும் கடவுளை தொழும் காலம் வரும் என்கிறார். (யோவா 4:21-24) Covid - 19 பெரும்தொற்று காலம், கடவுளை எங்கும், எல்லா நதட்களிலும் தொழலாம் என்ற உண்மையை நமக்கு உணர்த்தியது.

நாம் வாழும் இப்பூமியில் மனிதர்கள் தங்களுக்கென எல்லைகளை சிந்தனைகளிலும், சமூகத்திலும் கட்டுகின்றனர். நாடுகள் தங்களுக்கென எல்லைகளையும், சுவர்களையும் எழுப்புகின்றன. சீன பெருஞ்சுவர் மற்றும் எபர்லின் சுவர் இதற்கு வராலாற்று உதாரணங்கள். தற்போது அமெரிக்கா ஐக்கிய நாடு தன் எல்லை சுவரை மெக்சிகோ எல்லைகளில் கட்டி பிறர் தங்கள் நாட்டில் நுழையாதபடி தடுக்கிறது. இன, மொழி கலாச்சார, சமய அடிப்படையில் எல்கைகளை கட்டி எழுப்புகிறோம். இன்று சமய அடிப்படைவாதம் (Religious Fundamentalism) எல்லை கடந்த இறைநம்பிக்கைக்கு வரும் சவாலாகவே இருக்கிறது. திறந்த உலகில் திறந்த திருச்சபை எனும் செம்பொருளை இவ்வாண்டின் கருப்பொருளாக

கொண்டிருக்கும் நாம் எல்கைகள் கடந்த விசவாசத்தை நமதாக்க அழைக்கப்படுகிறோம்.

### *1. "பிறர்" என்ற எல்கையைக் கடக்கும் கடவுள்*

சைரசு மன்னனை பற்றி கடவுள் கூறும் போது அவன் நான் நியமித்த ஆயன்; என் விருப்பத்தை நிறைவேற்றுவான் என்கிறார் (ஏசா 44:28) பின்னும் நான் அவனை திருப்பொழிவு செய்துள்ளேன் என்கிறார் (எசா. 45:1). சைரசு ஓர் பெர்சிய மன்னன் சின்ன ஆசியாவிலுள்ள பல நாடுகளை கைப்பற்றி ஏறத்தாழ கி.மு 593 -ல் பாபிலோனைக் கைப்பற்றுகிறான். சைரசு யூதன் அல்லா போதும் அவனைக்கொண்டு கடவுள் தன் திட்டத்தையும், நோக்கத்தையும் செயல்படுத்துகிறார்.

பாபிலோனில் சிறைப்பட்டிருந்த யூதர்களை இவன் விடுவித்து, அவர்களை எருசலேமுக்கு திரும்ப அனுமதிப்பதோடு ஆலயத்தை மறுபடியும் கட்ட வேண்டிய எல்லா உதவிகளையும் செய்கிறான். ஆசியாவிலுள்ள மிகப் பழமையான திருச்சபைகளில் ஒன்றான நாகர்கோயில் கற்கோயிலை (Home Church) அருட்பணியாளர்கள் கட்டும்போது திருவாங்கூர் மகாராஜா மரம், கற்கள் மற்றும் மதிப்பு மிக்க நன்கொடைகள் கொடுத்து உதவினார் என்பது வரலாறு நமக்கு கற்றுத் தரும் பாடம். அந்த எல்லை தாண்டி உறவு இன்று எங்கே?

கானானியப் பெண்ணுடனான இயேசுவின் உரையாடல் இருவரையும் எல்லை தாண்டிய உறவுக்கும், சிந்தனை மாற்றத்திற்கும் அழைத்துச் சென்றது (மத். 25:21-28). இன்று ஒருவரின் சமய நம்பிக்கைகளும், பாரம்பரியங்களும், மாற்று சமய நண்பர்களை "பிறர்" என்று கருதி எல்லை கடந்த இறைநம்பிக்கையை உணரவும் வலுப்படுத்தவும் மறுக்கின்றனர். ஆனால் கடவுள் சைரசு என்ற அரசனை என் ஆயன், நான் திருப்பொழிவு செய்தவன் என்கிறார்.

### *2. "தீட்டு" என்ற எல்கையைக் கடக்கும் கடவுள்*

திருத்தூதர் பணிகள் 10 -ம் அதிகாரம் பேதுருவும், ரோம நூற்றுவார் தலைவர் கொர்னேலியுவும் சந்தித்து கொண்டதையும், பேதுருவின் "தீட்டு" குறித்த சிந்தனை மாற்றத்தையும் கூறுகிறது. பேதுரு ஓர் யூதன் (கலா. 2:14). யூதர்களுக்குத்தான் மேசியா என்ற கொள்கை உண்டு (மாற்கு 8:29). பேதுருவின் ஊழிய தரிசனத்தையும், எல்கைகளையும் விரிவுபடுத்த கடவுள் அவரை மெய்மறந்த நிலைக்குள்ளாகி வானம் திறந்திருப்பதையும் பெரிய கப்பற்பாய் போன்ற விரிப்பு இறங்குவதையும் காட்டினார். அதில் யூதர்களுக்கு தீட்டான, ஊர்வன, பறப்பன, நடப்பன

இருந்தது. இவை தீட்டு என்று சொன்ன பேதுருவை, இவற்றை சாப்பாடு என்று கூறுவதின் வழியாய், பேதுருவின் "தீட்டு" குறித்த சிந்தனையில் ஓர் மாற்றத்தை ஆண்டவர் உருவாக்குகிறார் (திபா. 10:28, 34,35).

இந்தியாவின் சமய, சமூக கலாச்சாரத்தில் "தீட்டு," "தீட்டற்றது" (Purity and Pollusion) என்பது அடிப்படைக் கட்டமைப்பாக உள்ளது. இதன் அடிப்படையில் எழுந்த தீண்டாமை சட்டபூர்வமாக தடுக்கப்பட்டாலும் இன்னும் சமூகத்திலும் சிந்தனைகளிலும் தீண்டாமை புரையோடிக்கிடக்கிறது. இன்றும் தமிழகத்தில் சில கிராமங்களில் இரட்டை குவளை முறை, ஜதிக்கு ஒரு சுடுகாடு, கல்லறைத் தோட்டம் இருப்பது தீண்டாமை எனும் பாவச் செயலுக்கு உதாரணங்களாகும். இத்தீட்டுக் கலாச்சாரம் யூத சமயத்திலும் இருந்ததை தூய பவுலாரின் கடிதங்களில் விருத்தசேதனம் மற்றும் திருமுழுக்கு குறித்த விவாதங்களில் காணலாம்.

இயேசு தன் ஊழிய நாட்களில் ஏழைகள், பாவிகள், பெண்கள், புறக்கணிக்கப்பட்டோர், பழுதுபட்டோர் மற்றும் புற இனத்தார் என கருதப்பட்ட மக்களிடம் எல்லை கடந்த உறவு கொண்டு அவர்களும் இறையரசுக்குரியோர் என்றார். இவை "தீட்டு," மற்றும் "பிறர்" என்ற எல்லைகளை உடைத்து சமூகத்தை மறுகட்டமைப்பு செய்வதாக அமைந்தது. நாமும் நமது திருச்சபைகளும் எல்லை தாண்டிய இறை நம்பிக்கையில் பயணிப்போம்.

அருள்திரு. முனைவர் O. **டென்சிங்**

| 27-03-2022 | தவக்கால நான்காம் ஞாயிறு & உயிர்ப்புக்கு முன்வரும் மூன்றாம் ஞாயிறு |
|---|---|

# ஒடுக்குகிற கட்டமைப்புகளை மாற்றுருவாக்கம் செய்தல்

## TRANSFORMING THE OPPRESSIVE STRUCTURES

| | |
|---|---|
| நாகூ 1:1-15 | திப 4:32-37 |
| திபா 113 | லூக் 13:10-17 |

**"... அம்மா உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்....."** (லூக் 13:12)

ஒடுக்குதலும், அடிமைத்தனமும் சமுதாயத்தில் பலநிலைகளில் காணப்படுகின்றன. இந்நிலை நேற்று இன்று அல்ல, உலகத் தோற்றம் முதலே இப்படிப்பட்ட சிந்தனைகளும் செயல்களும் பல நிலைகளில் காணப்படுகின்றன. சீரான சிறப்பான வாழ்வுக்குக் கட்டமைப்பும் ஒழுங்கு நெறிகளும் அவசியம். ஆனால், அந்த கட்டமைப்புகளே ஒடுக்கதலையும் ஏற்படுமானால் நிச்சயம் மாற்றுருவாக்கம் அவசியம். திப 17:9 இல் "தாவீதரசன் இவ்வாறு ஜெபிக்கின்றார். என்னை ஒடுக்குகிற துன்மார்க்கருக்கு..." ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பணி, விடுதலைப் பணியாகவே காணப்பட்டது. பேதுரு தனது செய்தியில் அதனை குறிப்பிட்டு, "நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்; தேவன் அவருடனே கூட இருந்தபடியனரிலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்டவரையும் குணமாக்குகிறவரவயும் சுற்றித்திரிந்தார்" (அப் 10:38). இயேசுநாதர் வார்ந்த காலத்தில் பெண்கள், பிள்ளைகள் மற்றும் அடிமைகள் இகழப்பட்டார்கள், ஓரம்கட்டப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டார்கள்.

சமுதாயத்திலும் சமயத்திலும் பயனற்ற பாரம்பரியங்களும் கட்டமைப்புகளும் ஒடுக்கதலையையும் அடிமைத்தனத்தையும் ஏற்படுத்தும் போது, அவற்றை உடைத்தெறிந்து மாற்றுருவாக்கம் தந்து மக்களை விடுதலையோடும், சகோதரத்துவத்தோடும், சமநிலையோடும் வாழ செய்வதே இயேசு கிறிஸ்துவின் திருப்பணியாய் அமைந்திருந்தது. கொடக்கப்பட்டுள்ள திருமறை பகுதிகளிலிருந்து மாற்றுருவாக்கத்திற்கான ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் பெறுவது தேவ ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரகடனப்படுத்தவும் பிரசித்தப்படுத்தவும் ஏற்புடையதாய் அமையும்.

## 1. கடவுளுக்கு எதிரான திட்டமும், தீய ஆலோசனைகளும் களையப்பட வேண்டும்: (நாகூ 1:11)

நாகூம் தீர்க்கர் நினிவே தேசத்திற்கு விரோதமான கர்த்தருடைய வார்த்தைகளை வெளிப்படுத்தினார். நினிவேயில் வாழ்ந்து வந்த அசிரியர்கள், யுத்தத்தில் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட மக்களை மிகக் கொடூரமாக நடத்தியதாக அறியப்பட்டார்கள். ஒரு நகரத்தை எதிர்த்துப் போரிட்ட பின்பு நூற்றுக்கணக்கான மக்களை கருணையின்றி கொன்றுவிட்டு, மீதியான மக்களைத் தங்களது ராஜ்யத்தில் பல பகுதிகளுக்கு அனுப்பி வைத்தனர்; நாடு கடத்தப்படும் போது நடத்தி செல்லும்போதுள்ள கொடுமைகளினனல் மேலும் பலர் மரிப்பார்கள். நினிவே 'இரத்தப்பழிகளின் நகரம்' என்று அழைக்கப்பட்டது. அந்த அளவிற்கு பொல்லாத செயல்களும் ஒடுக்குதலும் நினிவே நகரத்தின் அசீரியர்கள் மத்தியில் காணப்பட்டது. அசீரியர்கள் தாங்கள் வென்ற தேசங்கள் அல்லது நகரங்களின் தலைவர்களை இரக்கமின்றி துன்புறுத்துவது மட்டுமல்லாது கொன்றும் விடுவார்கள்.

நாகூம் இந்த கொடிய செயல்களை சுட்டிக் காண்பித்து தீர்க்கதரிசனம் உரைப்பதற்கு ஒரு ஆண்டிற்கு முன்பாக யோனா தீர்க்கன் அனுப்பப்பட்டார், ஜனங்கள் தங்கள் பாவங்களுக்காக துக்கித்து மனந்திரும்பினார்கள் ஆனால் மீண்டும் தங்களது கொடிய வழிக்கே திரும்பினார்கள்.

ஒடுக்குகிற கட்டமைப்புகள் மாற்றுருவாக்கம் அடைய வேண்டுமானால், பொல்லாத நினைவுகளும் ஆலோசனையும் அகற்றப்பட வேண்டும். மனிதநேயமற்ற சிந்தனைகளும் செயல்களும் சகமனிதர்களின் உணர்வுகளை புரியாமல் அவர்கள் வேதனைப்படுத்தவும் அடிமைப்படுத்தவும் செய்து விடுகின்றது. நியாயப்பிரமாணங்களையும் கற்பனைகளையும் இரத்தின சுருக்கமாக இரண்டு கற்பனைகளாக கொடுத்தனர். மத் 22:34-40இல் நியாயசாஸ்திரியின் கேள்விக்கு பிரதான கற்பனைக்கு ஒப்பான இரண்டாம் கற்பனையாக ?

## 2. ஒருமனமும் ஒற்றுமையும் நிலைக்க வேண்டும்: (திப 4:32)

அப்போஸ்தலருடைய காலத்தில் விசுவாசிகளுக்குள் ஒருமனமும் ஒற்றுமையும் காணப்பட்டது. சகலத்தையும் பொதுவாகவே வைத்து வாழ்ந்து வந்தனர். சுயநல சிந்தனைகளுக்கும் தன்னல விருப்பங்களுக்கும் இடம் கொடுக்காது. பொதுநல சிந்தனையோடு வாழ்ந்தனர். 'பகிர்தல்' விசுவாசிகளுக்குள் ஒன்றரக் கலந்து குணமாக வெளிப்பட்டது. 'பதுக்குதல்'

கூடாது என்பது போதனையாக பகிரப்பட்டது. பகிர்தலை தவிர்த்து பதுக்க துணிந்த அனனியா சப்பிராள் தம்பதியர் பரிசுத்த ஆவிக்கு விரோதமாக பொய் சொல்லி ஜீவித்து போன நிகழ்வு திப 5:1-11ல் எச்சரிப்பாக சொல்லப்பட்டுள்ளது. திப 5:11 இன் படி "சபையாரெல்லாருக்கும் இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று." கற்பனைக்கு விரோதமாய் செயல்பட ஜனங்கள் பயந்து நடுங்கினார்கள். ஒரு மனமும் ஒற்றுமையும் பகிர்தலும் மறைகின்ற போது பொய்யும் புரட்டும் திருட்டும் பொறாமையும் ஆணவமும் கூடிக் கலந்து வளர்ந்து நம்மை பிசாசின் அடிமைகளாக மாற்றிவிடும். பொய்யும் மெய்யும் கூடி வாழ முடியாது. அப்படியே இரண்டும் கூடிக் கலந்து இருக்கும் போது அவர்கள் மனிதர்களாகவும் இருக்க முடியாது. காரணம், அது பிசாசின் குணம்.

யோவா 8:44 இல் "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சையின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலை பாதகனுமாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்பதில்லை; அவன் பொய்யும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்." ஆதி திருச்சபையில் ஒடுக்குகிற கட்டமைப்புகள் இன்றி மக்கள் ஒரே இருதயமும் ஒரே மனமுள்ளவர்களுமாயிருந்தார்கள்.

சகோதரர் எமில் ஜெபசிங் அற்புதமான வரிகளை தனது பாடலில் எழுதியுள்ளார்.

விசுவாசிகள் எனும் கூட்டம் உண்டு
அன்பு ஒன்றே அவர் நடுவில் உண்டு
ஒருமனம் ஒற்றுமை அங்கு உண்டு
என்று சொல்லும் நாட்கள் இன்று வேண்டும்

இனிவரும் நாட்களில் நமது கடன்
வெகு அதிகம் வியசுவாசிகளே
நம்மிடை உள்ள ஐக்கியமே
வெற்றியும் தோல்வியும் அதிகமே

இந்த உலகத்தின் கடைசி நாட்களில் வைக்கப்பட்டுள்ள நாம், நமது கடமை ஒருமனமுள்ள ஒற்றுமையுள்ள பகிரும் சிந்தனையுள்ள விசுவாச கூட்டத்தினை ஆயத்தம் செய்வதே என்ற சிந்தையோடு செயல்படுவோம். ஒடுக்குகிற கட்டமைப்புகள் மாற்றுருவாக்கம் பெறும்.

### *3. பெலவீனப்படுத்தும் ஆவி துரத்தப்பட வேண்டும்*:

(லூக் 13:11)

கட்டுண்டவர்களை விடுவிப்பதே இயேசுவின் பணியாக காணப்பட்டது. ஜெபஆலயத்தில் போதகம் பண்ணிக் கொண்டிருந்த பெண்மணியைக் காண்கிறார். அந்த பெண்மணி நிமிரக் கூடாதபடி கட்டப்பட்டிருந்தாள். இன்றும் சமூக வாழ்விலும் கிறிஸ்தவ ஓட்டத்திலும் பலர் உலகம் சார்ந்த சிந்தனைகளால் கட்டப்பட்டவர்களாய் எவ்வளவேனும் நிமிரக் கூடாதபடி அடிமைத்தனத்திலே காணப்படுகின்றனர். லூக் 13:12 இல் இயேசுவின் வார்த்தை “ஸ்திரியே, உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்” மாபெரும் விடுதலையை அந்த பெண்மணிக்கு கொடுத்தது. தாவீது அரசன் சங் 107:20 இல் கூறுவது போன்று “அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்.” 18 வருட பெலவீனத்தின் கட்டு இயேசுவின் வார்த்தையின் வல்லமையினால் மறைந்து போனது. மட்டுமல்ல லூக் 13:13 இல் இயேசு அவள் மேல் தமது கைகளை வைத்தார்; உடனே, அவள் நிமிர்ந்து, தேவனை மகிமைப்படுத்தினாள். இன்றும் பலர் இயேசுவின் வார்த்தையின் வல்லமைக்காய் அவரது தொடுதலின் வல்லமைக்காய் ஆவலோடு காத்து நிற்கின்றனர்.

நமது வாழ்வின் ஒடுக்குதலிலிருந்து கட்டுகளிலிருந்து விடுதலை பெற பெலவீனப்படுத்துகிற ஆவி துரத்தப்பட இயேசுவின் தொடுதலுக்காய் அவரது வல்லமையுள்ள வார்த்தைக்காய் அவரையே நோக்கிப் பார்க்க வேண்டும்.

நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்து விடுதலைப் பணி செய்த ஆண்டவர் இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி பொல்லாத நினைவுகளையும் துராலோசனைகளையும் களைவோம், ஒரு மனமும் ஒற்றுமையும் நிலைக்க செய்வோம், பெலவீனப்படுத்தும் ஆவிகளை துரத்தியடிப்போம். விடுதலை பணியில் இறைமகன் இயேசுவோடு இணைந்து பயணிப்போம். ஆமென்.

அருள்திரு. P. **சேம் பிளசிங்**

03-04-2022

**தவக்கால ஐந்தாம் ஞாயிறு,**
**உயிர்ப்புக்கு முன்வரும் இரண்டாம் ஞாயிறு &**
**பாடுகளின் ஞாயிறு**

## சிலுவையும் சீடத்துவத்திற்கு ஒரு புதிய முன்மாதிரியும்

**CROSS AND A NEW PARADIGM TO DISCIPLESHIP**

தொநூ 26:12-33 — 2கொரி 11:21-31
திபா 92 — மாற் 10:46-52

**"...அவர் மீண்டும் பார்வை பெற்று, அவரைப் பின்பற்றி அவருடன் வழிநடந்தார்"**
(மாற் 10:52b).

சிலுவை மாற்றுருவாக்கத்தின் அடையாளம். சிலுவை அவமானத்தை பிரதிபலிக்கும் கருவியாகத் தோன்றி, வாழ்வியல் ஆன்மிகத்தின் அடிப்படையாகப் பரிணமித்தது என்பதே சிலுவை இறையியல் (Theology of the cross).

சிலுவைச் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், அடிமைகள் குற்றவாளிகள் தவிர எந்த ரோமானிய குடியுரிமை பெற்றவரும் சிலுவையில் அறையப்படவில்லை. ஒடுக்கப்பட்டவரை மேலும் அவமானப்படுத்தும் ஒரு கொலைக் கருவியாகவே சிலுவை பயணித்துப் பிரபலமானது. சமுதாயத்தின் மேட்டுக்குடி மக்களுக்கு சிலுவை வழி தண்டனை வழங்கப்படவில்லை என்பது சிலுவை வரலாறு. சிலுவை மாற்றுருவாக்கத்தின் கிரியா ஊக்கியாகவும் நம்பிக்கையின் அடையாளமாகவும். (Symbol of hope) இன்று பிரதிபலிக்கிறது. காரணம் இயேசு தம்மை சர்வாங்க தகன பலியாக ஒப்படைத்து சிலுவையிலிருந்து இறைத்திட்டம் நிறைவேற்றினார். எனவே தான் சிலுவையற்ற ஒரு சீடத்துவத்தை முன்னெடுத்துச் செல்ல இயலாது.

Y.M.C.A. கூடுகை ஒன்று இலங்கை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம் அது. வாலிபன் ஒருவன் மாலை வேளையில் சற்று ஓய்வுக்காகக் கடற்கரையில் காலாற நடந்து செல்கிறார். அங்கு அவர் கண்ட காட்சி அவருடைய ஆன்மிகத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அதாவது தமிழ் இலங்கை இளைஞர்கள் சிலர் கடற்கரை மணலில் முழங்காலில் நின்று இறைவேண்டல் ஏறெடுத்த காட்சி தான் அது. இந்தியாவிலிருந்து Y.M.C.A. கூடுகைக்காக சென்றிருந்த அந்த வாலிபன், அவர்களின் ஜெபதொனி, வார்த்தைகள் இன்னும் அதிகமாக வாலிபனை அசைத்தது. ஆம், அவர்கள் இலங்கையிலிருந்து தமிழ்நாடு, தஞ்சாவூருக்கு அனுப்பியிருந்த மிஷனரிக்காகத்தான் இந்தக் கண்ணீரின்

ஜெபம், ஆத்தும பாரம். இந்த அனுபவத் தாக்கம்தான் இந்திய மிஷனரி சங்கம் ஆரம்பிக்க வித்திட்டது. வேதநாயகம் சாமுவேல் அசரியா என்ற அந்த வாலிபனின் வாழ்வியல் அனுபவம் தான் ஒரு முன் மாதிரியாகவும் சீடத்துவத்தின் பிரதிபலிப்பாகவும் சிலுவை இறையியல் அனுபவத்தோடு பரவி படர்ந்தது.

இறைப்பணியில், சமூகப் பணியில், தனிநபர் வாழ்வில் இடுக்கண்கள் நிறைந்திருக்கும் சூழல்கள் தவிர்க்க இயலாது. எதுவும் எளிதாக நடந்து விடாது. துரைத்தனங்களும் சூழ்ச்சிகளும், தடைகளும் வாழ்வில் குறுக்கிடும் போது, சிலுவை வழி இயேசு கற்பித்த செயலூக்கமும், சீடத்துவ முன் மாதிரியும் நம்மை இயங்கச் செய்கிறது.

சிலுவையும் சீடத்துவ முன்மாதிரியையும் பிரகடனப்படுத்தும் சில சிந்தனை பகிர்வுகளைத் திருமறையின் திருத்தடங்களோடு சிந்திக்கலாம்.

### *1. துரத்தப்பட்டாலும் துவண்டுவிடாதிருப்பதே சிலுவைச் சீடத்துவம்:* (தொநூ 26:11)

வாழ்வில் சோதனைகளும், சோர்புகளும், வேதனைகளும், சவால்களும் மாறி மாறி மானிடத்தைச் சந்திக்கும் இந்தச் சூழலில் இறைவா, உமதண்டையில் இன்னும் நெருங்கிச் சேர்வதே ஆவல் இந்தப் பூமியில் என்ற அனுபவத்தை உள்வாங்கிக் கொள்வதே சிலுவை வழி சீடத்துவத்தின் முன்மாதிரி ஆகும். தொடக்கநூல் 26-ம் அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள செய்தி ஒரு சிறந்த எடுத்துக்காட்டு எனலாம். ஈசாக்கின் வாழ்வில் பொறாமை கொள்ளும் பெலிஸ்தியர், ஈசாக்குக்குச் சொந்தமான துறவுகளை மண்ணினால் மூடிப் போடுகின்றனர். அபிமலேக்கு, ஈசாக்கிடம் எங்கள் எல்லையை விட்டு போய்விடும் என்கிறார். ஈசாக்கு வேறு இடம் செல்கிறார். செல்லும் இடம் எல்லாம் துரத்தப்படுகிறார் ஏசேக்கு, சித்னா எனும் துரவுகளிலிருந்து துரத்தப்படுகிறார். Meakness is not weakness என்ற வாழ்வு முறை அதாவது ஆவியில் எளிமையுள்ளவர் பாக்கியவான்கள் என்ற இயேசுவின் மலைப்பொழிவின் அடையாளத்தை ஈசாக்கின் வாழ்வியல் வடிவில் காணமுடிகிறது. எதிர்த்து நிற்க துணிவிருந்தும், துரத்தப்படுதலுக்கு ஈசாக்கினர் தங்களை ஒப்புக் கொடுத்தார்கள்.

பட்டயம் அல்ல, பண்பான வாழ்க்கை முறை தான் இறையரசின் நோக்கம் என்பதை இயேசு பேதுருவுக்கு கற்றுக் கொடுக்கிறார் (மத் 26:36; யோவா 18:10). பேதுரு சிறைச்சாலையில் இருக்கும் நேரத்தில், சபையார் கூடி இறைவேண்டல் செய்தனர் (திப 12:6). சிறைச்சாலை திறவுண்டது. துன்பச்சூழலில் துவண்டுவிடாமல் பற்றுறுதியோடு பயணிப்பது தான் சிலுவைச் சீடத்துவ முன்மாதிரி.

### 2. தடைகளைத் தாண்டிப் பயணிப்பதே சிலுவைச் சீடத்துவம்: (மாற் 10:46-52)

பர்த்திமேயுவின் அனுபவம் ஒரு இன்றியமையாத இறையியல் அனுபவத்தைக் கற்றுத் தருகிறது. பேச்சுரிமை, சுயமரியாதை மக்களோடு மக்களாக வாழ வாஞ்சிக்கும் சமூக நீதி அத்தனையும் மறுக்கப்படும் மனிதராக பர்த்திமேயு "அதட்டப்படுகிறார்." வாழ்வின் கடைநிலையில் இருக்கும் ஒருவர் கடைநிலையிலே தொடரட்டும் என்ற மனப்போக்கு இங்கு பிரதிபலிக்கிறது.

நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்து, இறை நோக்கத்தை நிறைவாக்கம் செய்த அருள்நாதர் இயேசுவின் அனுதினப் பயணத்தை, பணிகளைப் புரிந்து கொள்ளாத ஒரு கூட்டம், மனிதம் சார்ந்து சிந்திக்க மறுப்பவர்கள். இந்த சிந்தனை குறித்த விழிப்புணர்வு இன்றைய திருச்சபைக்கு மிகவும் அவசியம்.

பர்த்திமேயு இந்தத் தடைகளினால் சோர்பு அடைந்து தனது முயற்சிகளிலிருந்து பின் வாங்கவில்லை. முயற்சியின் வீரியத்தை அதிகப்படுத்தினார். "இயேசுவே, தாவீதின் குமாரனே..." இந்த வார்த்தைகள் வெறும் உணர்வு பிரதிபலிப்புகள் அல்ல. தனது ஒற்றை வார்த்தையில் தாவீது அரசர் மாற்றுத்திறனாளிகளை உதாசீனப்படுத்திய நிகழ்வினைச் சான்றுபடுத்தி, இயேசுவே, தாவீதின் குமாரனே ... என்ற அழைப்பின் வழியே இயேசுவைச் சமுதாயத்தில் சான்று பகருகிறார். தாவீதின் வழி வந்த அருள்நாதர் இயேசு அனைவரையும் கூட்டிச் சேர்க்கும் மீட்பர், விடுதலையாளர் என்று தடைகளைத் தாண்டி அறிக்கையிடுகிறார்.

இயேசு கடந்து சென்று விட வேண்டும். இயேசு பர்த்திமேயுவை கவனித்துவிடக் கூடாது என்ற கூட்டத்தினர் அதட்டினர். ஆனால் ஒரு ஏக்க குரல் மனிதபலத்தைத் தாண்டி அத்தனை தடைகளையும் தகர்த்து விட்டது. இந்த ஏக்கம், ஆர்வம் தான் சிலுவைச் சீடத்துவம்.

வாழ்க்கைப் பயணத்தில் சமூக அநீதிகளைப் பார்த்து "சரி போகட்டும்" நான் என்ன செய்ய முடியும் என்று புறமுதுகு காட்டாமல், பர்த்திமேயு கற்றுத்தரும் வாழ்க்கைப் பாடத்தை வாழ்வியல் ஆக்குவோம்.

### 3. தடம் மாறாமல் தடம் பதிப்பதே சிலுவைச் சீடத்துவம்: (2கொரி 11:21-31)

பவுலடியாரின் வாழ்க்கைப் பயணம் பல்வேறு நெருக்கடிகள் நிறைந்தது. பவுலாரின் கடினப்பாடுகளின் பட்டியல் மிக நீட்சியுடையது. அதிகமாய் அடிபட்டவர்; அதிகமாய் காவலில் வைக்கப்பட்டவர் (23); யூதர்களால் ஒன்று குறைய 40 அடியாக 5 தரம் அடிக்கப்பட்டவர் (24);

மூன்று தரம் மிலாறுகளால் அடிக்கப்பட்டவர் (25); ஒரு தடவை கல்லெறியப்பட்டவர் (25). மேலும் கள்ளரால் வந்த மோசங்களினாலும், சொந்த ஜனங்களால் வந்த மோசங்களாலும், பட்டணங்களில் உண்டான மோசங்களினாலும், வனாந்திரத்தில் உண்டான மோசங்களினாலும், சமூகத்தில் உண்டான மோசங்களினாலும், கள்ளச் சகோதரரிடத்தில் உண்டான மோசங்களினாலும் (26) தடம் மாறவில்லை. மன மடிவினால் சோர்பு ஏற்பட்டு எலியாவைப் போல் பின்வாங்கவில்லை. பேதுருவைப் போல் மறுதலிக்கவில்லை.

இயேசுவின் பணிகளுக்குத் தடை ஏற்படுத்த புறப்பட்ட சவுல் என்ற இந்த பவுல் (Greek name, nor name changed) இயேசுவால் தடுத்து நிறுத்தப்பட்ட பின்னர் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தடம்மாறாமல் தடம் பதித்த பவுலடியாரின் ஒவ்வொரு நிகழ்வுகளும் நமக்குக் கற்றுத் தரும் வாழ்க்கைப் பாடம் தான் சிலுவைச் சீடத்துவம்.

உபத்திரவங்களும், பிரயாசங்களும் இறைமக்களின் பற்றுறுதியை அசைத்துப் பார்க்க முற்படும்போது தடுமாற்றம் இல்லாமல், தடம் மாறாமல், பயணிப்பதே சிலுவைச் சீடத்துவம்.

வில்லியம் திண்டேல் திருமறையை மொழிபெயர்ப்பு செய்து இறைமக்கள் இறைவார்த்தைக்கு சொந்தங்கள் என்ற பரப்புரைக்கு கத்தோலிக்கத் திருச்சபை தடைகள் தந்தது. வேத புரட்டர் எனக் குற்றம் சாட்டியது. தண்டனை கொடுத்து தடை செய்ய முற்பட்டனர். இரும்புச் சங்கிலியால் வில்லியம் திண்டேலின் கழுத்தைக் கட்டி இறுக்கும் போது அவர் கதறவில்லை. இறைவா, அதிகாரம் வகிப்போரின் கண்களைத் திறந்தருளும் என்று வேண்டினார். தடம் மாறாமல் தடம் பதிப்பதுவே சிலுவைச் சீடத்துவம்.

அருள்திரு. முனைவர் R. **பிரின்ஸ் வேதமாணிக்கம்**

10-04-2022

குருத்தோலை ஞாயிறு

# ஓசன்னா: ஆண்டவரே எம்மை மீட்டருளும்

**HOSANNA: LORD SAVE US**

செக் 9:1-12 | 1திமொ 4:6-16
திபா 118:19-29 | லூக் 19:29-40

**"ஆண்டவரே! மீட்டருளும்!"** (திபா 118:25).

இறைமக்களின் ஆன்மீக மையம் என அறியப்படும் எருசலேம் பட்டணம் திடீரென்று பெரிய பரபரப்பைக் கண்டது. பஸ்கா என்னப்படும் புளிப்பில்லாத அப்ப பண்டிகையைக் கொண்டாடும் அவ்விடுதலை நாளிலே இலட்சியவாதியாகிய இயேசு மீட்பு என்னும் இலக்கினை மையப்படுத்தி புரட்சி பேரணியாக எருசலேமிற்குள் வருகிற காட்சி வரலாற்றில் சிறப்பான ஒரு அழுத்தத்தை கொடுத்த நிகழ்வாகும். நெடுநாள் காத்திருப்புக்கும், கடின உழைப்பிற்கும் பிறகு மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட பேரணி ஆகும். இந்த இலட்சிய பேரணிதான் இயேசுவின் கல்வாரி பாதையின் முதல்நிலை. இலட்சிய பேரணி கல்வாரியில்தான் முடியும் என்பதைக் கழுதையின் மேலிருந்தவர் அறிவார். இப்பேரணியில் எருசலேமின் சாதாரண மக்கள், பெண்கள், மாற்றுதிறனாளிகள் ஆர்வத்தோடு பங்கெடுத்தனர். இப்பெரும்திரளான மக்களின் பெருந்தொனி எருசலேம் பட்டணத்தை அதிரவைத்தது. பெருந்தொனியாய் தொனித்த வார்த்தை தான் "ஓசன்னா" தாவீதின் மகனுக்கு ஓசன்னா! ஆண்டவரின் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! உன்னதத்தில் ஓசன்னா! என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள் (மத் 21:9). நான்கு நற்செய்தியாளர்களும் இந்நிகழ்வினை குறிப்பிட்டிருப்பது (மத் 21:1-11; மாற் 11:1-11; லூக் 19:29-44; யோவா 12:12-19) பேரணியின் ஆழத்தை கூர்மைபடுத்துவனவாகவே அமைந்திருக்கின்றது.

மத் 21:9-ல் தாவீதின் மகனுக்கு ஓசன்னா என்றும்
மத் 21:9-ல் உன்னதத்தில் ஓசன்னா என்றும்
மாற் 11:9,10-ல் உன்னதத்தில் ஓசன்னா என்றும்

யோவா 12:13-ல் ஓசன்னா என்றும் குறிப்பிடபட்டுள்ளது. பேரணியில் பங்குபெற்ற மக்கள் குருத்தோலை கையில் பிடித்துக்கொண்டு முழக்கமிட்ட 'ஓசன்னா' என்னும் வார்த்தையின் பொருள் "இப்பொழுதே விடுவித்தருளும்" (Save now) என்பதாகும். பேராபத்தில் அகப்பட்டுக் கொண்ட ஒரு மனிதன் விடுதலைக்காய் உதவி வேண்டி எழுப்பும்

அபாயக்குரல் ஓசன்னா ஓசன்னா என்ற இந்த சொல்லாமல் திபா 118:25 லிருந்து வருகிறது. அதாவது “ஆண்டவரே மீட்டருளும்! ஆண்டவரே வெற்றி தாரும்” எனது பொருள். இஸ்ரவேலர்கள் வழக்கத்தின்படி இரண்டு பண்டிகைகளுக்கு மட்டும் தான் “ஓசன்னா” என்ற முழக்கமிட்டு பேரணியாக செல்வர் ஒன்று கூடாரப் பண்டிகை, இது விவசாயிகளின் பண்டிகை அல்லது சேர்ப்பின் பண்டிகை ஆகும். இரண்டாவது, “வரனுக்கர்” என்னும் அர்ப்பணிப்பின் பண்டிகை, இப்பண்டிகையின் போதும் ஓசன்னா என்ற குரல் எழுப்புவார்கள். மக்கள் ஆர்ப்பபிப்போடு எழுப்பிய குரல் கூடார பண்டிகையின் பொழுது யூதமத ஆசாரியர்கள் ஆறு நாட்களில் ஆறு முறையும், ஏழாம் நாளில் ஏழுமுறைகளும் பீடத்தை சுற்றி வந்து பாடுவது வழக்கம். ஆசாரியர்கள் இந்த போற்றுதலை பாடும்பொழுது மக்கள் குருத்தோலைகளை அசைத்து மகிழுவார்கள்.

உழைப்பின் அடையாளமும் தாழ்மையின் அடையாளமும் அமைதியின் அடையாளமுமாகிய தான் தெரிந்து கொண்ட கழுதையை பயணிக்க தெரிந்து கொண்ட இயேசு கிறிஸ்து அதன் மேல் அமர்ந்து எருசலேம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தார். பேரணியில் வருபவர்கள் இறைவாக்குரைக்கப்பட்டபடி யூதரல்லாத எளிய மக்களுக்கு நீதி வழங்குபவர்; பிற இனத்தவருக்கு ஒளியானவர்; பார்வை இழந்தோரின் கண்களைத் திறக்கிறவர், கைதிகளின் தளைகளை அறுக்கிறவர், இருப்போரை சிறையினின்று மீட்கிறவர் (ஏசா 42:6,7) நிச்சயமாகவே தங்களை மீட்கும் மீட்பர் என்று மக்கள் மகிழ்ச்சியோடும் ஆர்ப்பரிப்போடும் பங்குபெற்றனர். இப்படிப்பட்ட நம்பிக்கையினால் பெரும்திரள் கூட்டத்தார் உரத்த குரலில் ஓசன்னா என முழங்கினார்கள். இயல்பாக பேரணியில் பயன்படுத்தப்படும் சொற்கள் அதன் நோக்கத்தை தொடர்புபடுத்தும் ஆழமான சொற்களாகும். ஆகவே குருத்தோலைகளுடன் பேரணியில் பங்கெடுத்தவர்கள் எழுப்பிய “ஓசன்னா” ஆண்டவரே எம்மை மீட்டருளும் என்ற குரலின் ஆழத்தை புரிந்து கொள்வது இக்குருத்தோலை திருநாளை பொருள் உள்ளதாக மாற்றும்.

### *1. அடக்குமுறையிலிருந்து மீட்டருளும்* :

உரோமை ஆட்சியாளர்கள் ஆதிக்க உணர்வுடன் கூடிய ஆட்சி முறையையே விரும்பினர். இத்தகைய ஆட்சிமுறை ஒரு சிலரின் கையில் அதிகாரம், பெரும்பாலானவர்களை பொருளாதாரத்தில் சுரய்டிடுதல், இவையனைத்தையும் சமயம் என்கிற போர்வையில் நியாயப்படுத்துதல் என்பதனை அடிப்படையாகக் கொண்ட ஆதிக்க உணர்வுடைய ஆட்சிமுறையாகும். எருசலேமிலிருந்த திருக்கோவில் ஆட்சி

அமைப்பினை நோக்குகையில் உயர்குடிமக்களோடு இணைந்து தலைமைக்குருவை தலைமையாக கொண்ட ஆதிக்க உணர்வுடன் கூடிய நிர்வாக அமைப்பாகவும். உரோமை ஆட்சியாளர்களோடு கரங்கோர்த்து செயல்படுகிற அமைப்பாகவும் தான் இருந்தது. இவர்களைத் தான் மாற்கு நற்செய்தியாளர் தலைமை குருக்கள், மூப்பர்கள், மறைநூல் அறிஞர்கள் என்று குறிப்பிடுகின்றார். இவர்கள் திருக்கோவிலில் அதிக வரிச்சுமை விதித்ததின் நிமித்தமாக பெற்ற செல்வத்தினால் உரோமை பேரரச ஆளுகைக்கு தங்களின் செல்வதிரட்சியிலிருந்து கப்பம் கட்ட கூடியவர்களாகவும் சமய அடக்குமுறையின் வாயிலாக யூதர்களை அமைதிப்படுத்துகிறவர்களாகவும் செயல்பட்டனர். எருசலேம் நகரம் முழுவதும் அரசியல் அதிகாரங்களின் மையமாக விளங்கியது. இதுவே மக்களின் பிரச்சனைகளுக்கு காரணமாகவும், இயேசுகிறிஸ்துவின் இறையரசு அமைவதற்குத் தடைகளின் மையமாகவும் இருந்தது.

உரோமை ஆட்சியாளர்கள் தங்களுக்கு எதிராக எவரும் ஆட்சியாளராக இருப்பதை ஒரு போதும் விரும்பினதில்லை. அப்படி எழும்பினால் மரணம் தான் அவர்களுக்கு தண்டனை. அப்படியிருந்தும் ஓர் புரட்சியாளரை போல உரோமை ஆட்சியாளர்களை அச்சுறுத்தும் வகையில் இயேசுகிறிஸ்து செயல்பட்டார். எப்பொழுதெல்லாம் அடக்குமுறை உச்சமடைகிறதோ அப்பொழுதெல்லாம் புரட்சி சமுதாயத்தை புரட்டிபோடும். உரோம பேரரசின் அடக்குமுறையினால் ஏற்பட்ட பிரச்சனைகள், நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள், அமைதிகேடுகள் ஏராளம், எனவே “எங்களை இப்பொழுதே மீட்டருளும்” என்று பொருள்படும் “ஓசன்னா என புரட்சி குரலெழுப்பினார்கள். விக்டர் ஹியூகோ என்பவர் “சர்வாதிகாரம் இயல்பாகும்போது புரட்சி அடிப்படை உரிமையாகிறது” என கூறுகிறார். இயேசு கிறிஸ்து கழுதையின் மேல் அமர்ந்து எருசலேமில் பயணமாக வந்தாலும் அவர் ஒரு புரட்சியாளராகவே வலம் வந்தார். ஏனெனில் புரட்சிக்குரிய அத்தனைப் பண்புகளும் அவரது எருசலேம் நுழைவில் வெளிப்படுகிறது. அடக்குமுறையாளர்களாகிய யூதர்கள், உரோமையர்கள் மற்றும் தலைமைகுருக்கள் தேவா பயத்தை சுய நலத்திற்காக, சுய லாபத்திற்காக பயன்படுத்தியதால் அவர்கள் மீது கோபக்கனை கொள்கிறார். ஒரு புரட்சி தீபமாக தேவாலயத்தையும் சமுதாயத்தையும் சுத்திகரித்தார் அது ஒரு ஆயுதமில்லாத ஆயுத புரட்சி, அகிம்சையின் புரட்சி, அன்பின் புரட்சி, மீட்பின் புரட்சி ஆகும்.

மீட்பருளும் இலட்சியத்தோடு வருகிற ஆண்டவர் பூவுலக அரசர்கள் ஏற்படுத்தும் அடக்குமுறையினையும் அநீதியான ஆட்சியையும் அகற்றி மீட்டருள்வார் என்ற நம்பிக்கையோடு “ஓசன்னா” என உரக்க

முழங்கினார்கள். அனைவரும் ஒவ்வொரு முறையும் விழாக்களை கொண்டாடும் தருணங்களிலும் எழும்பும் குரல் போல ஆண்டவரே! மீட்டருளும்! ஆண்டவரே வெற்றிதாரும்! ஆண்டவரின் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்! (திபா 118:25,26) என்ற மக்களின் ஆர்ப்பரிப்பு அடக்குமுறைக்கு எதிரானகுரல் ஆகும். மேலும் யூதேயாவை அடக்கி ஆளும் ஆட்சிகள் கட்டுக்குள் கொண்டுவரப்படும்; முடியடிக்கப்படும், வருங்கால அரசனின் ஆட்சி நிலைநாட்டப்படும். அதன்வழியாக ஏற்படுத்தப்படும் ஏழை எளியோர் மற்றும் அடிமைப்பட்டு கிடப்போருக்கான மீட்பு நிரந்தரமாகும், ஆகவே செக்கரியா இறைவாக்குரைத்து "மகளே சீயோன்! மகிழ்ந்து களிகூரு மகளே எருசலேமே! ஆர்ப்பரி" (செகரி 9:9) என அழைப்பு விடுக்கும் போதே மெசியாவாகிய வருங்கால அரசனின் பண்பு நலன்களை சொல்கிறார். "இதோ! உன் அரசர் உன்னிடம் வருகிறார் அவர் நீதியுள்ளவர், வெற்றி வேந்தர் எளிமையுள்ளவர்; கழுதையின் மேல் கழுதைக் குட்டியாகிய மறியின்மேல் ஏறிவருகிறார்" (9:9). இங்கு "வெற்றி வேந்தர்" என்பதற்கான எபிரேய சொல் "மீட்பர்" என்பதை குறிப்பதாகும். எனவே உன்னிடத்தில் வருகிற அரசர் அடக்குமுறையிலிருந்து மீட்டருளுவார் என்று உறுதியாய் உரைத்தார். அதோடு "சிறைபட்டிருக்கும் உன்னைச் சார்ந்தோரை நீரற்ற படுகுழியிலிருந்து விடுவிப்பேன்" (செக் 9:11) என்றும், கடவுளாகிய ஆண்டவர் தம் மக்களாகிய அவர்களை ஆயர் தம் மந்தையை மீட்பது போல மீட்டருளுவார் (9:16) என்று நம்பிக்கையூட்டினார். அப்படியே "ஓசன்னா" என்று குரலெழுப்பும் இறைமக்களாகிய அனைவரையும் உலகின் பல்வேறு அடக்குமுறைகளிலிருந்து மீட்டருளுவார்.

### *2. அடிப்படைவாதத்திலிருந்து மீட்டருளும்* :

மக்களின் "ஓசன்னா" இப்பொழுதே விடுவித்தருளும் என்ற குரலுக்கு முதல் காரணம் அடிப்படை வாதிகளான தலைமைக்குருக்களும் மறைநூல் அறிஞர்களும் ஆவார்களும். இவர்கள் எருசலேமில் வாழ்ந்து கொண்டு கடவுளை மக்களுக்கு அருகில் கொண்டுவருவதாகச் சொல்லி மக்களை தாங்கொண்ணா நெருக்கடியில் தள்ளினர். ஹலகா (Halakah-to walk, to follow) என்ற தனிமனித நடைமுறை வாழ்வில் பின்பற்ற வேண்டிய 613 வகையான துணை சட்டங்களை கடைபிடிக்க வலியுறுத்தி இதை பின்பற்றினாலொழிய கடவுளிடம் சேரமுடியாது என்ற மன நெருக்கடியில் மக்களை தள்ளினார்கள். ஆனால் அடிப்படைவாதிகளாகிய சமயதலைவர்கள் சிறிதேனும் கடைபிடிக்கவில்லை. இப்படிப்பட்டவர்களை குறித்து ஆண்டவர் குறிப்பிடும் போது சமத்தற்கரிய பழுவான சுமைகளைக்

கட்டி மக்களின் தோளில் அவர்கள் வைக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் விரலால் தொட்டு ஆசைக்காட்ட கூட முன்வரமாட்டார்கள் (மத் 23:4). எருசலேமின் அடிப்படைவாதிகளின் செயல்பாடுகளை குறித்து அங்கலாப்படைந்த கிறிஸ்து, சம நம்பிக்கையையும், பாரம்பரியத்தையும், கடவுளின் பிள்ளைகள் என்ற பெயரையும் காப்பாற்றுவதாக சொல்லிக் கொண்டு வெளிவேடமாய் தோன்றும் சமய அடிப்படைவாத மக்கள் கண்டிக்கப்படுகிறதையும் சபிக்கப்படுகிறதையும் லூக் 19:42-44-ல் படிக்கமுடிகிறது. அத்துடன் இவர்கள் பட்டுப்போன மரம் போல் செயல்இழந்து போவார்கள் என இயேசு அடிப்படைவாத நெருக்கடியில் இருந்த மக்களின் “ஓசன்னா” மன்றாட்டுக்கு பதில் தருகிறார்.

“ஓசன்னா” என்ற புரட்சி வார்த்தையையும் குழந்தைகளின் ஆர்ப்பரிப்பையும் கண்ட அடிப்படைவாதிகள் கோபமடைந்தனர் (மத் 21:15). மட்டுமல்லாமல் இயேசுகிறிஸ்து பேரணியாக எருசலேம் நோக்கி வந்து கொண்டிருந்த போது திரண்டிருந்த சீடர் அனைவரும் தாங்கள் கண்ட எல்லாவல்ல செயல்களுக்காகவும் உரத்த குரலில் மகிழ்ச்சியோடு கடவுளை புகழத் தொடங்கினார் “ஆண்டவர் பெயரால் அரசராய் வருகிறவர் போற்றப் பெறுக! விண்ணுலகத்தில் அமைதியும் மாட்சியும் உண்டாகுக” என்றனர் லூக் 19:38). அப்பொழுது கூட்டத்தில் இருந்த அடிப்படைவாதிகளாகிய பரிசேயர்களுள் சிலர் அவரை நோக்கி, போதகரே, உம் சீடர்களை கடிந்துகொள்ளும் என்றார்(லூக் 19:39). மேலும் கோவிலுக்குள் நுழையக்கூடாது (2 சாமு 5:6-8) என விதிக்கப்பட்ட சமூக கட்டுபாடினால் எருசலேம் ஆலயத்திற்கு வெளியேஇருந்த மக்கள் கழுதையில் பவனியாக வந்த இயேசு கிறிஸ்துவை பார்த்து “ஓசன்னா” என முழங்கின போது அடிப்படைவாத கட்டுபாடுகளை அகற்றி மாற்றுதிறனாளிகளையும் ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றார். இச்செயல் வழியாக தாவீதால் தகுதியை இழந்த மக்கள், தாவீதின் மைந்தனே என அழைத்து “ஓசன்னா” எனப்பாடியபோது அடிப்படைவாதத்திலிருந்து மீட்கப்பட்டனர் என்பதை தெளிவாக அறியமுடிகிறது. அடிப்படைவாதத்தினால் புறக்கணிக்கப்பட்டும் அரவணைப்பு இன்றியும் அங்கீகாரம் இழந்தும் துன்புற்றுக்கொண்டிருந்த மக்கள் அரசனாக பவனிவந்த ஆண்டவரை பார்த்து உரத்தசத்தமாய் எம்மை மீட்டருளும் என்று அபயமிட்டது போலவே இந்நாட்களிலும் இப்படிப்பட்ட குரலெழுப்பி கொண்டிருப்போருக்கு கடவுள் மீட்டருளுவார். திருச்சபைகளிலும் அடிப்படைவாதிகள் கடவுளை உண்மையாய் புகழகூடியவர்களை அதட்டுகிறார்கள் மற்றும் உரிய அங்கீகாரம் வழங்காமல் புறக்கணித்தும் வருவது இறை மக்களை புண்படுத்தும் செயல் ஆகும்.

### *3. அதிதீவிரமாய் வந்து மீட்டருளும்* :

"ஓசன்னா" இப்பொழுதே விடுவித்தருளும் என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் அபாயகுரல் ஆகும் (It's a cry of the oppressed people). உரோம ஆதிக்கவர்க்கத்தினால் அவர்களது அடக்குமுறையினால் அடிப்படை உரிமை இழந்து அங்கீகாரம் இழந்து அமைதி இழந்து தவித்த ஏழை கலிலேயா மக்களின் வேட்கையும் இதர ஒடுக்கப்பட்ட புறக்கணிக்கபட்ட மக்களின் உன் எண்ணமும் இப்போதே மீட்டருளும் என்பதாகும்.. கூடார பண்டிகையின் காலத்தில் குருத்தோலைகளை அசைக்க மட்டும் அதிகாரம் பெற்ற மக்கள் இப்பொழுது ஆசாரியர்களின் அறிவிப்பாகிய "ஓசன்னா" என்று முழங்குகிறார்கள் என்பது இறைமக்கள் இதன் வழியாக ஆசாரிய தன்மையை பெற்றிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சி இருந்தாலும், ஆண்டவர் பேரணியாக வந்தபோது அவர்களது உடனடி தேவையை அறிந்து அவர்களை மீட்டருள முன்வந்தார். கன்னிமரியின் கருவறையிலிருந்து கல்வாரி சிலுவை வரை மீட்பின் செயலை நிறைவேற்றி வந்தவர், மக்களின் பெருந்தொனியை கேட்ட உடனே அவர் பிரச்சனைகளின் தொடக்கம் எங்கே இருந்தது என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டு எருசலேம் சென்று கோவிலிலி நுழைந்து அனைத்தையும் சுற்றிப்பார்த்தார் (மாற் 11:11). பின்பு "இப்பொழுதே விடுவிப்பும்" என்ற மக்களின் பிரச்சனைகளிலிருந்து விடுவிக்க தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்ள மீண்டும் பெத்தானியாவுக்கு புறப்பட்டுச் சென்றார். அதிதீவிரமாக மீட்டருள புரட்சிகரமாக செயல்பட்டார்.

குருத்தோலைகளை கையில் பிடித்த நிகழ்வு 200 ஆண்டுகளுக்கு முன்பாக இஸ்ராயேலிலிருந்து கிரேக்கர்களை மக்கபெய புரட்சியின் வழியாக துரத்தியடித்ததும் பெற்ற வெற்றியினை நினைவுச் சின்னமாக இருப்பதையும், மேலாடைகளை கழுதையின் மேல் போர்த்தி இயேசுவை அமர செய்த நிகழ்வு அரசமுறை வரவேற்பினையும் அதுவும் இந்நிகழ்வு உரோமை ஆட்சியாளர்கள் ஆண்டானியா கோட்டைக் கோபுரத்திலிருந்து பார்வையிடும் இடத்தில் நிகழ்ந்ததையும் நோக்குகையில், தீவிரமாய் மக்களை மீட்க வரும் மேசியா என்பவரை தெளிவாக காட்டுகிறது. எபேசுவுக்கு தாம் மீங்ணடும் வரப்போவதில்லை என உணர்ந்த தூயபவுல், தாம் ஆயராக நியமித்த திமொத்தேயுவுக்கு கூறும்போது இயேசுவின் நல்ல தொண்டாக வாழ அவநம்பிக்கையை வளர்க்கும் தவறான போதனைகளை எதிர்க்குமாறும் "வாழும் கடவுளே எல்லாருக்கும் சிறப்பாக நம்பிக்கை கொண்டோருக்கும் மீட்பர்" (1தீமோ 4:10) என்று தைரியபடுத்தினார். வாழும் கடவுள் அவரை நம்பிக்கையிருப்பவர்களை தீவிரமாய் வந்து மீட்டருள்வார். யோவானுக்கு அருளபெற்ற

திருவெளிபாட்டில் யாராலும் எண்ணிக்கையிட முடியாத பெரும் திரளான மக்களை கண்டேன். ஆவர்கள் எல்லா நாட்டையும், குலத்தையும் மக்களினத்தையும் மொழியையும் சார்ந்தவர்கள், அரியணைக்கும் ஆட்டுகுட்டிக்கும் முன்பாக நின்று கொண்டிருந்தார்கள். வெண்மையான தொங்கலாடை அணிந்தவர்களாய்க் கையில் குருத்தோலைகளை பிடித்திருந்தார்கள். அவர்கள் அரியணையில் வீற்றிருக்கும் எங்கள் கடவுளிடமிருந்தும் ஆட்டுக்குட்டியிடமிருந்துமே மீட்புவருகிறது என்று உரத்த குரலில் பாடினார்கள். (திவெ 7:9,10) என்பது போல இந்நாளில் “ஓசன்னா” என்ற நம் குரலை கேட்கும் கடவுள் தாமே அதிசீக்கிரமாய் வந்து நம்மை மீட்டருள்வார். உலக பொது எதிரியாகிய கொரோனா தொற்றின் ஆதிக்கம், உலக மக்கள் வாழ்வை சீர்கெடுக்கும் அநியாயங்கள், உள்ளத்தின் அமைதியை கெடுக்கும் அசுத்தமான வாழ்க்கை முறைகள் போன்றவற்றிலிருந்து அதிதீவிரமாய் மீட்பருள கடவுளிடம் வேண்டிக்கொள்வதோடு இறைமக்களாகிய நாம் நமது பொறுப்புகளையும் உணர்ந்து செயல்படுவோம். “மனிதத்தை காயப்படுத்தும் எல்கையின் காரணிகளாக அரசியல் பொருளாதாரம் சமயம் விளங்குகின்றன. இவற்றுக்கு எதிராக யாரெல்லாம் குரல் கொடுத்த மக்களின் விடுதலைக்காக போராடுகிறார்களோ அவர்களோடு இணைந்து அவர்களின் கருத்தியலோடு இணைந்து போராடுவதே கிறிஸ்தவம் ஆகும்” என்ற பேராயர் ஆஸ்கர் ரொமரோ அவர்களின் ஆலோசனைபடி மக்களை மீட்டருள மிக தீவிரமாய் செயல்படவேண்டிய பொறுப்பு திருச்சபைக்கு உண்டு என்பதையும் உணரவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் பணியின் நோக்கம் மானுட மக்களின் மீட்பு ஆகும். இப்பேரணியின் மையமும் மீட்பு தான் ஒரு குடும்பத்தையோ ஒருகுலத்தையோ மீட்டருள அல்ல, மாறாக முழு மனுக்குலத்தையும் அடக்குமுறையினாலும் அடிப்படைவாதங்களினாலும் அங்கீகாரம் இழந்து நம்பிக்கை இழந்தவர்களாய் வாழ்ந்தவர்களை மீட்டருள இயேசு எருசலேமிற்குப் பேரணியாக வந்தார். பல்வேறு விதமான ஆதிக்க சக்தியினால் பாதிக்கப்படுகின்ற மக்களை, சமுதாயத்தை விடுவிக்கும் ஆற்றல் ஆண்டவருக்கு உண்டு. ஆனால் திருச்சபையாகிய நாம் இயேசுகிறிஸ்துவின் விருப்பம் நிறைவேறிட செயல்பட்டு அடக்குமுறையில் அடிப்படைவாதங்களில் அகப்பட்டிருக்கும் மக்களை அதிதீவிரமாக மீட்புக்கு நேராக நடத்தவேண்டிய காலமிது. ஏனெனில் இயேசுகிறிஸ்துவினால் தொடங்கிவிடப்பட்ட செயல்களை தொடர்ந்து செய்திட வேண்டிய பொறுப்பு இறை மக்களுக்கு உண்டு.

அருள்திரு. G.S. ***அஸ்வின் ஜெய்சிங்***

11-04-2022

# எதிர்பார்ப்பில் ஏமாற்றம்

மத் 21:18-22

**வழியோரத்தில் ஓர் அத்திமரத்தை அவர் கண்டு அதன் அருகில் சென்றார். அதில் இலைகளைத்தவிர வேறு எதையும் அவர் காணாமல், "இனி நீ கனி கொடுக்கவே மாட்டாய்" என்று அதைப் பார்த்துக் கூறினார். உடனே அந்த அத்திமரம் பட்டுப்போயிற்று** (மத் 21:19).

இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கு முன்புள்ள நாட்களின் நிகழ்வுகள் மிக முக்கியமானவை. அந்நாட்களைத் திருச்சபை தூயவாரமாக அனுசரித்து வருகின்றது. பொதுவாக எந்த ஒரு நிகழ்விற்கும் ஒரு உடனடிக் காரணம் காணப்படும். வரலாற்றில் 1939 முதல் 1945 வரை நடைபெற்ற இரண்டாம் உலகப்போர் தீவிரமடைய உடனடிக்காரணம் அமெரிக்காவின் கப்பற்படை தளமான Pearl harbour மீது ஜப்பான் நடத்திய தாக்குதல் ஆகும். அதுபோல எருசலேம் ஆலயச் சுத்திகரிப்பு ஆண்டவரின் சிலுவை மரணத்திற்கு உடனடிக் காரணமாக அமைந்துவிட்டது. ஆலயச் சீர்திருத்தலுக்குப் பின் நகரத்திலிருந்து பெத்தானியா சென்று இரவில் ஓய்வெடுத்த ஆண்டவர், அடுத்தநாள் காலையிலே மீண்டும் எருசலேமுக்குத் திரும்புகிறார். போகிற வழியிலே அவருக்கு பசி ஏற்படுகிறது. பசியாற்ற வழியருகே நின்ற அத்திமரத்தினைக் கண்டு, அருகே சென்ற ஆண்டவர் அதில் கனியில்லாததை கண்டு அத்திமரத்தைச் சபிக்கிறார். உடனே அத்திமரம் பட்டுப்போகிறது.

திருமறையில் மத்தேயு, மாற்கு நற்செய்தி நூற்களில் இந்நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது. ஜெபிக்கும் குணமுடைய ஆண்டவர் சபிக்கும் குணம் கொண்டதற்கு காரணம் என்ன? வழியருகே நின்ற அத்திமரம் நமக்கு உணர்த்தும் உண்மை என்ன? தியானிப்போம்.

## *1. வீண்போன எதிர்பார்ப்பு* : (மத் 21:19a)

வழியோரத்தில் ஓர் அத்தி மரத்தை அவர் கண்டு அதன் அருகில் சென்றார். அதில் இலைகளைத்தவிர வேறு எதையும் அவர் காணாமல்...

பசியோடிருந்த ஆண்டவர் வழியருகே ஒரு அத்திமரத்தை பார்க்கிறார். அத்திமரம் ஆண்டவருக்கு எதிர்பார்ப்பை ஏற்படுத்துகிறது. ஆண்டவருக்கு ஏற்பட்ட எதிர்பார்ப்பு நியாயமானதுதான். ஏனெனில் கடும்பசியின் மத்தியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அத்திமரத்தைப்

பார்க்கிறார். அதுமட்டுமல்ல அத்திப்பழ வீடு என்றழைக்கப்பட்ட பெத்தானியாவின் வழியோரத்தில்தான் இயேசு அத்திமரத்தினைப் பார்க்கிறார். மேலும் இலைகளுள்ள அத்திமரம் நிச்சயம் கனிகொடுக்கும் என்கிற எதிர்பார்ப்போடு அத்திமரத்தைப் பார்க்கிறார். அது கனிகொடுக்க வாழ இல்லையென்றாலும் இலைகள் படர்ந்திருந்த தோற்றத்தைக் கண்டு கனி இருக்குமென்கிற எதிர்பார்ப்போடு ஆண்டவர் அத்திமரத்தின் அருகே வருகிறார். ஆனால் அத்தனை எதிர்பார்ப்புகளும் வீண் போகின்றன. அத்திமரம் எதிர்பார்ப்பைக் கொடுத்து, ஆண்டவரின் எதிர்பார்ப்புகளை வீணடிக்கிறது. எப்படி? "இலைகளைத் தவிர வேறு எதையும் அவர் காணாமல்" என்று சொல்லப்பட்டுள்ளது.

அந்த அத்திமரம் அநேகருடைய எதிர்பார்ப்புகளை வீணடித்திருக்கிறது. படர்ந்திருந்த இலைகளைக் கண்டு நம்பி அத்திமரத்தின் அருகே சென்றோர் அநேகர். ஏழைகள், வழிப்போக்கர், களைப்படைந்தோர், பசியோடிருந்தோர் என்று அநேகருக்கு ஒரு மாய எதிர்பார்பைக் கொடுத்து அனைவருடைய எதிர்பார்ப்புகளையும் வீண்போகச் செய்திருக்கிறது. கடைசியில் நாடி வந்த ஆண்டவரை ஏமாற்றியது.

இன்று இவ்வுலகில் போலியான வாக்குறுதிகளைக் கொடுத்து வாழ்வோர் அனேகர் உண்டு. கிறிஸ்தவராக, கிறிஸ்துவின் மணவாட்டியாகிய திருச்சபையாக நாம் மாயப் பிம்பத்தை வெளிக்காட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம் தோற்றம் கண்டு எதிர்பார்ப்போடு வருகிறவர்களை ஏமாற்றுகிறோம். பசியோடிருப்போர், ஒடுக்கப்பட்டோர், தேவையோடிருப்போரின் எதிர்பார்ப்புகளை நிவிர்த்தி செய்கிறதாய் ஆன்மிக வாழ்வாய் நம்வாழ்வு அமையவில்லை.

லூக் 13:6-9 இல் சொல்லப்பட்டிருக்கிற உவமையில் அத்திமரத்தில் கனியை எதிர்பார்த்து வந்து ஏமாற்றமடைந்தது போல, இங்கே கனியற்ற அத்திமரம் ஆண்டவரின் எதிர்பார்ப்புகளை ஏமாற்றியது.

***2. வீணாய்ப் போன அத்திமரம்*** : (மத் 21:19b)

"இனி நீ கனி கொடுக்கவே மாட்டாய்" என்று அதைப்பார்த்துக் கூறினார். உடனே அந்த அத்தி மரம் பட்டுப்போயிற்று

ஆண்டவர் இயேசுகிறிஸ்து போலித்தனமான அடையாளத்துடன் ஏமாற்றிய அத்திமரத்தின் மீது கடுங்கோபம் கொள்கிறார், எச்சரிக்கிறார், சபிக்கிறார். ஆண்டவருடைய கோபம் நியாயமானதுதான். அத்திமரத்தின் போலியான தோற்றம் அனேகருடைய எதிர்பார்ப்புகளையெல்லாம் உடைத்துப்போட்டிருக்கிறது. ஆகவே எதிர்பார்ப்புகளில் ஏமாற்றம் தந்த அத்திமரம் வீணாய்ப் போனது.

ஆண்டவர் இயேசுகிறிஸ்து போலி எதிர்பார்ப்பைக் கொடுத்து ஏமாற்றமடைய செய்கிற வாழ்வை விரும்பவில்லை. ஆகவேதான் மத்தேயு 23:28இல் நீங்களும் மனிதருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள். உள்ளத்திலோ மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள் என்று எச்சரிக்கிறார்.

எதிர்பார்ப்பை வீண்போகச் செய்கிறவர்களுடைய வாழ்வு கனியற்றுப் போகும் என்கிற உண்மையை எச்சரிக்கையாய் நமக்குத் தருகிறார். நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் என்பது ஆண்டவர் நமக்குத் தருகின்ற எச்சரிப்பு.

இன்றைய திருச்சபை, வீண் எதிர்பார்ப்புகளை மட்டும் கொடுக்கிறதாக அல்ல, எதிர்பார்ப்பில் ஏமாற்றமளிக்கிறதாகவும் அல்ல, மாறாக அவரது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகிறவர்களாகக் கனிகொடுத்து வாழவே ஆண்டவர் விரும்புகிறார். வழியருகே நின்ற அத்திமரமும், ஆண்டவரின் கோபமும் இதை நமக்கு உணர்த்துகின்றன. கீர்த்தனை 241 இல் அருள்திரு. பரமானந்தம் பாடுகிற பாடலின் வரிகளான, “காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில் கண்ணீர் விடுவாயே ஞாலத்தில் பரனுனை நாட்டின நோக்கத்தைச் சீலமாய் நினைத்தவர் மூலம் பிழைத்திடுவாய்” என்பதன் அடிப்படையில் நம்மைச் சீர்படுத்தி இறையாசி பெறுவோம்.

திரு. S.G. ***சிபி***

12-04-2022

# கேள்விக்குப் பதிலுரைக்கும் ஆண்டவர்

மத் 22:15-40

**"...நீர் என்ன நினைக்கிறீர் என எங்களுக்குச் சொல்லும்" என்று அவர்கள் கேட்டார்கள்** (மத் 22:17b).

தூயவாரத்தின் மூன்றாம் நாளில் கேள்விக்குப் பதிலுரைக்கும் ஆண்டவர் என்ற தலைப்பில் தியானம் மேற்கொள்வோம். இயேசுவின் திருப்பணி எளிமையாகவும், ஆடம்பரமில்லாமலும் நடைபெற்றது. அவரால் கவரப்பட்ட மக்கள் ஏராளம். அதை எருசலேம் பவனியிலும், தொடர்ந்து அவர் செல்லுமிடங்களிலும் கூடும் மக்களைப் பார்க்கும் போதும் புரிகிறது. இந்த மக்கள் கூட்டத்தை மையப்படுத்தியே இயேசுவுக்கு எதிர்ப்புகள் வந்தன. அன்றைய சமயத் தலைவர்கள் வழியாக அவரை அதிகார மையத்திற்குள் கொண்டு வந்து குற்றவாளியாக மாற்ற விழைந்தனர். இதற்கு நீர் என்ன நினைக்கிறீர்? என எங்களுக்குச் சொல்லும் (மத் 22:17b) என்று கேட்டு அவரது பதிலை வைத்து அவரை அகப்படுத்த முயன்றனர். ஆனால் ஆண்டவரோ அவர்களது போலித்தனத்தை அவர்களுக்கு உணர்த்தினார். ஆண்டவரின் பதில் எவ்வாறு அமைந்திருந்தது என்பது குறித்துத் தியானிப்போமாக.

### *1. சமூக நீதியைக் கடைப்பிடிக்கப் பதிலுரைக்கும் ஆண்டவர்*: (மத் 22:21)

சமூகத்தில் வாழும்போது சமூக நீதிக் கடமைகளை ஒவ்வொரு குடிமகனும் நிறைவேற்றுவது அன்றும், இன்றும் காணப்படும் சட்டமாகும். இயேசுவைக் குற்றவாளியாக மாற்ற, சமூகக் கடமையை மீறியவராகக் காட்ட நயமாக இயேசுவிடம் ஏரோதியர் என்ற பிரிவினர் கேட்ட கேள்வி, சீசருக்கு வரி செலுத்துவது முறையா, இல்லையா? (மத் 22:17). ஏனென்றால் வரிகள் மக்களுக்குச் சுமையாகத் தெரிந்த சூழலில் வரி கொடுக்க வேண்டும் என இயேசு கூறினால், மக்களை இயேசுவிடமிருந்து பிரித்து இயேசுவைத் தனிமைப்படுத்தலாம். மாறாக சீசருக்கு வரி கொடுக்கக் கூடாது என்றால் அரசுக்கு எதிராக கலகம் செய்கிறவர் எனக் குற்றம் சாட்டி தண்டிக்கலாம். ஆகவே தங்கள் விருப்பம்.

நிறைவேறும் என எண்ணி கேள்வி கேட்கிறார்கள். இயேசுவோ மிகுந்த கவனமாகவும் ஞானமாகவும் பதிலுரைக்கிறார். இறையாட்சியை மக்களிடையே நிறுவ வந்த இயேசு அதற்கிசைய பதிலளிக்க முற்படுகிறார். வ. 19,20-இல் வரி கொடுக்கும் நாணயத்தைக் கொண்டு வந்து காண்பிக்கக்கூறி இதில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும், எழுத்தும்

யாருடையவை எனக் கேட்கிறார். அது சீசருடையவை எனக் கூறியபோது சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும், கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள் என்றார். ஏற்கெனவே மத் 17:27-இல் வரி செலுத்துவது சம்பந்தமாக சீடர் பேதுருவிடம் எனக்காகவும் உனக்காகவும் வரியாக வெள்ளிப்பணத்தைக் கொடு என்று கூறி வரி செலுத்துவதில் சமூக நீதியைக் கடைப்பிடித்தவர், இங்கும் மக்களிடம் வரி செலுத்துவதில் சமூக நீதியை தவறவிடக் கூடாது என வலியுறுத்துகிறார். இன்று அரசை ஏமாற்றி வரி ஏய்ப்பு செய்பவர்களுக்கு, அதனால் குற்றவாளிகளாக நிற்போருக்கு இயேசுவின் இச்செயல் இறையாட்சிப் பாதையில் புதிய பாடமாகிறது.

இயேசு சீசருக்கு உரியதை அவருக்குக் கொடுங்கள் என்று கூறி முடிக்கவில்லை. தொடர்ந்து கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்குக் கொடுங்கள் என்கிறார். நாணயத்தில் இருப்பது சீசரின் உருவம். அதைச் சீசருக்குக் கொடுங்கள், ஆனால் நாணயத்தைக் காட்டும் நீங்கள் கடவுளின் சாயலை அணிந்தவர்கள் (தொநூ 1:27). ஆகவே உங்களைக் கடவுளுக்குக் கொடுங்கள் என்கிறார். நீர் என்ன நினைக்கிறீர்? என்று கேட்டோருக்கு, நீங்கள் கடவுளின் மக்களாய் உங்களை அவருக்குக் கொடுக்க வேண்டும் என்று பதிலுரைக்கிறார்.

### *2. சமய நம்பிக்கையில் தெளிவடைய பதிலுரைக்கும் ஆண்டவர்:* (மத் 22:30)

நீர் என்ன நினைக்கிறீர் என்ற பொதுவான கேள்வியின்படி சமய அமைப்பில் அங்கம் வகிக்கும் சதுசேயர், தங்கள் நம்பிக்கையின்படி இக்கேள்வியை எழுப்புகின்றனர். வ.28-இல் அப்படியானால் உயிர்த்தெழும்போது அவர் அந்த எழுவருள் யாருக்கு மனைவியாக இருப்பார் என்று கேட்டனர். காரணம், சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லை எனச் சாதிப்பவர்கள். இயேசு உயிர்த்தெழுதல் உண்டு எனப் போதிக்கிறவர். அப்படியானால் இவர் உயிர்த்தெழுந்த பிறகு யாருக்கு மனைவியாக இருப்பார். இயேசுவின் பதில் வ. 29இல் உங்களுக்கு மறைநூலும் தெரியாது. கடவுளின் வல்லமையும் தெரியாது. எனவே தவறான கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள் என்கிறார். காரணம் சமயவாதிகளாக சதுசேயர் தங்களைக் காட்டிக் கொண்டாலும் உலகின் உறவுகளைச் சுற்றித் தான் நிற்கிறார்களே தவிர, கடவுளின் வார்த்தையிலும், வல்லமையிலும் அவர்கள் இன்னும் நம்பிக்கை கொள்ளவில்லை. எனவே அவர்கள் சமய நம்பிக்கையில் தெளிவடையவே இவ்வாறு இப்பதிலுரைக்கிறார். இன்னும் உலகியல் சிந்தனை மற்றும் அறிவியல் சிந்தனைகளை மையப்படுத்தி பலர் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு நேராகச் சமயம் சார்ந்து கேள்விகள் எழுப்புவது

உண்டு. அதற்கு பதில் இல்லை. உயிர்த்தெழுதலின் வாழ்வு உலகியல் போக்கின்படி அமைவது இல்லை. அது புதிய இயல்பு பெற்ற புதிய வாழ்வு. எனவே அந்த வாழ்வைப் பெற வ. 31-இன்படி கடவுள் உங்களுக்கு உரைத்துள்ளதை உணர்ந்து உயிர்த்தெழுதலின் வாழ்வை பெறத் தெளிவடையுங்கள் என்பதே நீர் என்ன நினைக்கிறீர் என்பதற்கு இயேசுவின் பதிலுரையாகும்.

### *3. சட்டங்களின் முதன்மையை வலியுறுத்திப் பதிலுரைக்கும் ஆண்டவர்:* (மத் 22:40)

யூத முறையில் 613 சட்ட விதிகள் உள்ளன. இக்கேள்வியை எழுப்பும் திருச்சட்ட அறிஞர் இதை அறியாதிருக்க வாய்ப்பில்லை. மேலும் ஷம்மாய், ஹில்லேல் போன்ற பிரிவினர் அடிக்கடி இச்சட்டங்களைப் பற்றி விவாதிப்பதும் உண்டு. இந்நிலையில் தான் இறையாட்சியைப் பற்றி போதிக்கும் இயேசுவிடம் அந்தக் கேள்வியை எழுப்புகிறார். எழுதப்பட்டும், விவாதிக்கப்பட்டும் வரும் 613 சட்டங்களும் அன்பு என்ற வார்த்தையில் நிறைவு பெறுகிறது. ஆகவே கடவுளிடம் அன்பு செய். சக மனிதரிடம் அன்பு செய். இதனால் அனைத்துச் சட்டங்களும் நிறைவேற்றப்படும் என்கிறார் இயேசு கிறிஸ்து முற்காலங்களில் பய உணர்வினால் மனிதர் கடவுளைத் தேடினர். பயம் மாறும் போது கடவுளைத் தேடுவதில் தொய்வு ஏற்படும். ஆனால் இங்கு கடவுளைத் தேட மனிதர் அன்பை மையப்படுத்த வேண்டும். அதனால் நிரந்தர உறவைத் தொடர முடியும் என்கிறார். அதோடு சக மனிதரிடம் அன்பு பாராட்ட வேண்டும். காரணம் அங்கு தான் கடவுளை நாம் சந்திக்க முடியும். 1யோவா 4:12-இல் கடவுளை எவரும் என்றுமே கண்டதில்லை. நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டுள்ளோமென்றால் கடவுள் நம்மோடு இணைந்திருப்பார். அவரது அன்பு நம்மில் நிறைவு பெறும். ஆக சட்டங்களின் முதன்மை பற்றி நீர் என்ன நினைக்கிறீர் என்று கேட்டவருக்கு, அன்பு தான் சட்டத்தின் முதன்மை எனப் பதிலுரைக்கிறார்.

ஆண்டவரின் எண்ணமும், விருப்பமும் நம்மைக் கடவுளுக்குக் கொடுப்பதும், உயிர்த்தெழுதலின் வாழ்வுக்காகச் செயல்படுவதும், அன்பினால் சட்டங்களை நிறைவேற்றுவதும் ஆகும். இவைகளை நம்மில் கடைப்பிடிக்க முன்வருவோம்.

அருள்திரு. Y. ***ஜெயசிங்***

# நற்செயலின் நறுமணம்

மத் 26:6-13

**"ஏன் இந்தப் பெண்ணுக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள்? அவர் எனக்குச் செய்தது முறையான செயலே"** (மத் 26:10).

பூந்தோட்டங்களில் பூக்கள் மலரும் போது வீசும் வாசனை எல்லோரையும் மகிழ்விப்பதாய் அமைகிறது. ரீங்காரமிடும் வண்டுகளும், தேனீக்களும் வாசனை மிகுந்த இப்பூக்களிலிருந்து தேனைப் பருகுவதற்காக நாடி வருகின்றன. இவ்விதமாய் நறுமணம் நற்செயலோடு தொடர்புபடுத்தப்படுகிறது.

பாஸ்கா விழா வர ஆறு நாளைக்கு முன்னே பெத்தானியாவில் நடைபெற்ற "நறுமணத் தைலம் பூசும் நிகழ்வு" எல்லா நற்செய்தி நூற்களிலும் சொல்லப்பட்டுள்ளது. பெத்தானியாவில் நடைபெற்ற நிகழ்வு இது. ஒலிவ மலையின் சரிவுகளில் எருசலேமுக்குக் கிழக்காக சுமார் மூன்று கி.மீ. தூரத்தில் இக்கிராமம் இருக்கிறது.

ஒரு பெண் விலையேறப்பெற்ற நறுமணத் தைலமுள்ள படிகச் சிமிழைக் கொண்டு வந்து அதை இயேசுவின் தலையில் ஊற்றினார் (மத் 26:7).

இச்செயல் சீடர்களின் விமர்சனத்தையும் இயேசுவின் பாராட்டையும் பெற்றது. இந்த நற்செய்தி உலகத்தில் எங்கெல்லாம் அறிவிக்கப்படுமோ அங்கே இவர் செய்ததும் எடுத்துக் கூறப்படும்; இவரும் நினைவுகூரப்படுவார் என்று இயேசு குறிப்பிட்டார் (மத் 26:13). ஆகவே இப்பெண் வழி நாம் கற்றுக்கொள்ளும் பாடங்களைச் சுருக்கமாகச் சிந்திப்போம்.

### *1. அன்பின் அடையாளச் செயல்* : (மத் 26:7)

இந்தத் தைலம் முந்நூறு பணத்துக்கு அதிகமான விலைபெறும் வாசனைத் திரவியம். ஒரு பணம் என்பது ஒரு வேலைக்காரரின் ஒரு நாள் கூலி ஆகும். அப்படியானால் இந்தத் தைலத்தின் மதிப்பு ஏறக்குறைய ஒருவரின் ஓராண்டு கூலிக்குச் சமம். ஓராண்டு முழுவதும் சேமிக்கப்பட்ட ஒருவரின் சம்பளம் விரயம் செய்யப்பட்டிருக்கிறது என்கிற விமர்சனம் முன்வைக்கப்படுகிறது.

ஆனால் இச்செயல் அதிக அன்பு செய்வதற்கான அடையாளச் செயல் (லூக் 7:43). எவனுக்கு அதிகமாய் மன்னிக்கப்படுகிறதோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்றார். ஆண்டவருக்கு அதிகமாய்

கடன்பட்டதினிமித்தம் அவரில் அதிகமாய் அன்புகூருவதற்கான அடையாளச் செயலே இச்செயல். அன்பை பணத்தால் அளவீடு செய்தல் இயலாது. ஆயினும் விலையேறப்பெற்ற பொருட்கள் அன்பை வெளிப்படுத்துவதற்கு அடையாளமாக உபயோகப் படுத்தப்பட முடியும்.

நம்முடைய ஆத்துமா விலையேறப்பெற்றது. நாம் ஆண்டவரிடத்தில் அதிக அன்பு செய்வதன் மூலம் தான் விலையேறப்பெற்ற ஆத்துமாவை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுக்க முடியும். இதற்கு அடையாளமாக சிறிதும் பெரிதுமான எதைச் செய்தாலும் அது ஆண்டவரிடத்தில் நாம் செலுத்தும் அன்பிற்கு ஈடாகாது. அன்பு மிகப்பெரியது. அதை வெளிப்படுத்த நாம் செய்யும் அன்பின் செயல்களின் அளவை மதிப்பீடு செய்வது பொருத்தமானது ஆகாது.

### *2. நற்கிரியையின் அடையாளச் செயல்* :

நற்கிரியை என்பது முதிர்ச்சியான இனிமைதரும் செயல் (கொலோ1:10) இல் பயன்தரும் நற்செயல்கள் அனைத்து செய்ய வேண்டும் என்ற செய்தி தரப்படுகிறது. மத் 5:16 இல் மனிதர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு விண்ணகத்திலுள்ள உங்கள் தந்தையை மகிமைப்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நளதம் என்னும் வெள்ளைக்கல் பரணியை உடைத்து இயேசுவின் சிரசின் மேல் ஊற்றிய பெண்மணியின் செயலை இயேசு நற்கிரியை என அங்கீகரித்து இருக்கின்றார் (மத். 26:10). சீஷர்கள் இச்செயலை விமர்சனம் செய்தனர். வீண்செலவு என்று கொச்சைப்படுத்தினர். இந்தத் தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்றுத் தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றார்கள் (மத் 26:9). தரித்திரருக்கு உதவிசெய்யும் நற்கிரியையை இயேசு புறம் தள்ளவில்லை; அதை அங்கீகரித்தார். இயேசு அநேக நற்கிரியைகளைக் காண்பித்திருக்கிறார். (யோவா 10:32) அவைகளில் தரித்திரருக்கு உதவி செய்வது அடங்கும்.

இப்பெண்மணி செய்த நற்கிரியையின் அடையாளத்தை இயேசு இவ்விதமாய் விளக்குகிறார். இவர் இந்தத் தைலத்தை என் உடல்மீது ஊற்றி எனது அடக்கத்திற்கு ஆயத்தம் செய்தார். இப்பெண்மணியின் செயல் தரிசனப்பார்வையோடு கூடிய நற்கிரியை. இதைவிட்டு விடல் ஆகாது. இவைகளையும் செய்யவேண்டும். அவைகளையும் விட்டுவிடாதிருக்க வேண்டும்.

பாவத்துக்கு அடக்கம் பண்ணப்பட்டு புது வாழ்வு துளிர்க்கும் செயலை இயேசுகிறிஸ்துவின் மரணம் உயிர்த்தெழுதல் மூலமாய் அடையாளப்படுத்தும் இப்பெண்மணியின் செயல் நற்கிரியையே, இதை அங்கீகரித்து எபே 2:10 இல் சொல்லப்பட்டிருக்கிறபடி நற்கிரியை செய்வதற்கு நாம் கிறிஸ்துவுக்குள் படைக்கப்பட்டிருக்கிறோம் என நினைந்து வாழ்வோம்.

அருள்திரு. M. **ஜோஸ் குமார்**

14-04-2022

வியாகுல வியாழன்

# நன்றித் திருவிருந்து : துன்புறும் மானிடத்தோடு ஒன்றிப்பு

**EUCHARIST : COMMUNION OF SUFFERING HUMANITY**

விப 12:1-7 | 1கொரி 11:23-34
திபா 116 | மாற் 14:17-25

**...கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்தார்** (மாற் 14:23).

இயேசு கிறிஸ்துவின் 3½ வருட திருப்பணித் திருப்பயணத்தின் நிறைவாக நடைபெறும் திருப்பந்தி, திருவுறவின் நன்றி அடையாளமாகிறது (Farewell Feast). இந்நிகழ்வுக்குத் தொடக்கக் காலத் திருச்சபை முக்கியத்துவம் கொடுத்தது. ஆகவே இதையே இறைமாட்சியாகவும், இறைப்புகழ் பரப்புதலின் அடையாளமாகவும் இறைமக்கள் உடமையாக்கிக் கொண்டனர். அவ்வாறாக, வாழ்வோடு ஒன்றிணைவு பெற்ற திருவிருந்தில் (The Eucharist) உயிர்மூச்சுக்காக, உணவுக்காக, அருட்கொடைகளுக்காக, சிறப்பாக, கிறிஸ்துவில் பெற்றுக் கொண்ட மீட்பு, உயிர்த்தெழுதல் வெற்றியின் மகிழ்வு, இறை எழுந்தருளுதலின் (பிரசன்னத்தின்) உறுதி எனும் இவைகளுக்காக நன்றி ஏறெடுக்கப்பட்டது (எபி 13:15). இதன் முதற்பேறானவர் இயேசு கிறிஸ்துவே (மாற் 14:22). இந்தப் பந்தியில் இணையும் போது நாமும் கிறிஸ்துவுக்குள்ளாகவும், அவரது பிரசன்னத்திற்குள்ளாகவும், அவரது திருவருகைக்காகவும் திருநிலைப் படுத்தப்பெறும் அனுபவத்திற்குள்ளாகவும் அங்கீகரிக்கப்படுகிறோம். கிறிஸ்துவின் திருப்பந்தியை நன்றி செலுத்தும் ஆன்மிக அனுபவமாக இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் குறிப்பிட்ட புனித இக்னேசியஸ், "சாவாமைக்குரிய மருந்து" (Medicine of immortality) என அழுத்தம் கொடுத்தார். இவ்வாறு துன்புறும் மானிடத்தோடு ஒன்றிணையும் அடையாளமாகும் திருப்பந்தி தரும் உண்மைகளை ஆய்ந்தறிவோம்.

### *1. நினைவுகளோடு ஒன்றிக்கும் விருந்து* : (விப 12:1-7)

இஸ்ரயேலரின் துன்பங்களோடும், துயரங்களோடும் ஒன்றிணைந்த கடவுள், அவர்களது விடுதலையின் அடையாளமாக வழங்கும் உன்னதச் செயலே "பாஸ்கா", அதாவது கடந்து போதல் என்பதாகும். நெருக்கத்திற்கும், ஒடுக்குதலுக்கும் உள்ளான மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நல்வாழ்வின் அடையாளமாகப் பாஸ்கா அமைந்தது. மட்டுமென்று பாஸ்காவை முறைப்படுத்த வேண்டிய நியமமும்

வழங்கப்பட்டது. இவ்வாறு விடுதலையின் மகிழ்வுடன் நினைவுறுத்தப்பட்ட பாஸ்காவின் முழுக்கொண்டாட்டமாகிறார் கிறிஸ்து. தம்மைப் பழுதற்ற செம்மறியாகக் கொடுப்பதின் வாயிலாக மீட்பின் மேன்மையை மானிடம் அனுபவிக்க வாயிலாகிறார். ஆகவே தான் சீடர்களை விருந்துக்கு அழைத்து தம்மையே விருந்தாகக் கொடுத்து தியாகத்தின் அடையாளமாகிறார் (எபி 8:3, 9:28, 10:19). இனியொரு பாஸ்கா தேவையில்லை என்பதையும் நினைவூட்டுகிறார் (எபி 9:26). அடிக்கப்படுவதற்கு இழுத்துச் செல்லும் ஆட்டுக்குட்டியாகக் (எசா 53:7) கையளித்தவர் காரணமின்றி அடக்குமுறைகளுக்கும் அநீதச் செயல்களுக்குள்ளும் தள்ளப்பட்டு வாயைத் திறக்க முடியா நிலையில் துன்ப வலிகளுக்குட்படுத்தப்பட்ட மானிடத்தின் சார்பாளாகிறார். ஆகவே தான், “எனது உடல், எனது இரத்தம்” எனப் பிரிக்கமுடியா உறவின் பிணைப்பாளராகி அவரது உடைக்கப்பட்ட உடலோடும், பிழிந்தெடுக்கப்பட்ட உதிரத்தோடும் நாமும் இணைந்து உயிராற்றலைப் பெற தகுதிப்படுத்துகிறார். மட்டுமன்று திருவுறவாளரான கிறிஸ்து நமது காயங்களால் காயமேற்று, அவரது காயங்களால் நம்மைக் குணப்படுத்துகிறார். இந்த உண்மை நினைவாகும் போது நமது சுமைகள் இலகுவாகும் என்பது ஆழமான நம்பிக்கையாகும். அந்நம்பிக்கையே ஆன்மிகத் திறவுக் கோலாகிறது.

அந்த விசுவாச ஒப்படைப்பில் தான் திருப்பந்தியில் பங்கேற்கும் போது, “ஆண்டவரே உமது மரணத்தை நினைவு கூர்கிறோம், உமது உயிர்த்தெழுதலை அறிக்கையிடுகிறோம், நீர் திரும்பி வரக் காத்திருக்கிறோம்” என்கிறோம். ஆண்டவரின் காட்டிக் கொடுக்கப்படுதல், அலைக்கழிக்கப்படுதல், அவமரியாதை செய்யப்படுதல், அடிக்கப்படுதல் எனப் பயணித்த பாதைகளெல்லாம் மானிடத் துன்ப வலிகளின் பாதையே. இதை உறுதிப்படுத்தும் நிலையிலே திருப்பந்தியை என் நினைவாகச் செய்யுங்கள் எனக் கட்டளையும் வழங்கினார் (1கொரி 11:24,25). விலைமதிப்பற்ற பெரும் பேற்றை, தம் உடலால், உதிரத்தால் வழங்கிய மீட்பரின் தழும்புகளோடு மானிட வலிகளில் பங்கேற்பதே நம்மை அவரோடு ஒன்றிணைக்கும் என்பதை உணர்ந்து நம்மை ஒப்படைப்போம்.

### *2. நிலைவாழ்வுக்குரிய உடன்படிக்கையாகும் விருந்து* :

(1கொரி 11:23-34, மாற் 14:17-25)

திருப்பந்தி கிறிஸ்துவின் திருச்செயலை நினைவுப்படுத்தி நமது பற்றுமையின் ஒப்புயர்வற்ற வரலாற்று நிகழ்வோடு ஒன்றிணைந்து செயல்பட உந்தும் ஆற்றலாகிறது. மேலும் இந்தத் திருவுறவு புத்தாக்கத்தையும், புதிய பார்வையையும், புதிய நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. அந்தத் தாக்கத்தால்தான் தொடக்கக் காலத் திருச்சபையார் அனைத்தையும்

பொதுவாக வைத்திருந்தனர் (திப 2:44). மட்டுமன்று பகைமையின் நடுச்சுவரை உடைக்கும் ஊடகமாக (எபே 2:14), வாழ்வுக்கு வழியான மன மாற்றமாக, கிறிஸ்துவின் அன்பை விட்டுப் பிரிக்க முடியா நிகழ்வாக உறுதியுடன் (உரோ 8:38, பிலி 1:23) நிற்கும் திடன் பெற்றோராக அர்ப்பணித்தனர். ஆகவே தான் திருப்பந்தித் திருவுறவை உடன்படிக்கை என முக்கியத்துவப்படுத்தினார் (1கொரி 11:25) பவுலார்.

உடன்படிக்கை என்பது உள்ளன்போடு உரிமைப்பேற்றின் உறவோடு உறுதியாகும் உன்னதரின் உறுதி வாக்காகும். தெய்வீகமும், மனிதமும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட அருள் அடையாளமாகும். இயேசு கிறிஸ்துவும் தம்முடைய உதிரத்தாலான புதிய உடன்படிக்கை எனக் குறிப்பிடுகிறார் (மாற் 14:24).

விடுதலைப்பயணத்தின் தொடக்கக்கால நிகழ்வில் உடன்படிக்கையானது பலியிடப்பட்ட விலங்கின் இரத்தத்தால் முத்திரையிடப்பட்டது. அந்த இரத்தத்தில் ஒரு பகுதி கலங்களில் விடப்பட்டது. மறுபகுதியோ பலிபீடத்தின்மேல் மோசே தெளித்தார். ஆனாலும் நாளடைவில் இஸ்ரயேலர் இந்த உடன்படிக்கை நியமங்களிலிருந்து தவறியதால் உள்ளத்தில் பதிக்கப்பட்டது (எரே 31:33). இதுவும் நிரந்தரமின்மையை ஏற்படுத்தியதால் தமது இரத்தத்தால் இயேசு உடன்படிக்கையை உறுதிப்படுத்துகிறார் (மாற் 14:24). ஏனெனில் இஸ்ரயேலரின் எண்ணங்களில் உடலின் உயிர் குருதியில் உள்ளது (லேவி 17:11) என்பது பதிந்திருந்த நிலையில் தமது உடலையும், உதிரத்தையும் கொடுத்து மீட்பைப் பற்றிய நம்பிக்கையை முத்திரையிடுகிறார். இந்த உடன்படிக்கையால் உலகத்திலிருந்து உன்னதத்துக்குரிய (நிலைவாழ்வுக்கு) அழைப்பாக உறுதிப்படுத்துகிறார். அதற்காகவே தமது உயிரை குற்ற நீக்கப் பலியாகத் தந்தார் (எசா 53:10). இந்தத் தியாகச் சுயப்படையலை நமக்காகத் தந்தவர், சுமைகளைச் சுமைகளாகப் பாராமல், நம்பிக்கையின் நங்கூர அடையாளமாக ஏற்று அவரது திருத் தூயகத்துக்குள் நுழைய நாம் தகுதி பெற விரும்புகிறார்.

நன்றித் திருப்பந்தியில் கிறிஸ்துவின் திருச்சிலுவை காட்டும் தடயத்தில் நம்மை உற்று நோக்குவோம். உயிர் மூச்சுக்காக ஏங்கும் மக்கள் எழுப்பும் கேள்வியான “இறைவா எங்கேயிருக்கிறீர்?” என்ற வலிகளின் பதிலாக நம்மோடு இருக்கிறார் என்பதை நமது அடையாளத்தோடு பறைசாற்றிடுவோம். அந்த உணர்வின் விடியலோடு திருப்பந்திக்கு ஆயத்தமாகி திருமேசை முன் முழந்தாளிடுவோம். விண்ணரசைப் பற்றிய இந்நற்செய்தியை உலகமெங்கும் அறிவிப்போம்.

அருள்திரு. முனைவர். **முத்துசுவாமி கிறிஸ்துதாஸ்**

15-04-2022



# சிலுவை: மீட்பின் நிறைவேறுதல்

## CROSS: ACCOMPLISHMENT OF SALVATION

விப 14:15-22 எபி 13:8-17

திபா 22 யோவா 19:23-30

**"... இயேசுவும், தம் சொந்த இரத்தத்தால் மக்களைத் தூயவராக்க நகரவாயிலுக்கு வெளியே துன்புற்றார்"** (எபி 13:12).

கடவுள் அன்புள்ளவர், அவர் நமக்கு தந்தையாகவும், தாயாகவும் இருக்கிறார். நாம் இருக்கும் இடத்தில் நம்மை தேடி வருகிறார். நம்மை இருக்கும் நிலையில் ஏற்றுக்கொள்ளுகிறார், நம்மோடு உறவுகொள்ளுகிறார். கடவுளைப் பற்றிய அடிப்படை உண்மைகளைக் கொண்டு அவர் மீட்புக்காகச் செய்யும் பணிகளைத் திருமறை எடுத்துக் கூறுகிறது. அவர் மீட்பின் கடவுள் என்றே அறியப்படுகிறார் (திபா 25:5)

கடவுளின் மீட்புதான் கிறிஸ்தவ நற்செய்தியின் மையம் ஆகும். மீட்பு என்பது விரிவான பொருளுடையது. அது பல்வேறு செயல்பாடுகளை உள்ளடக்கியது. இறைவன் தம் மக்களை விடுதலை செய்யும், தூய்மையாக்கும், நிறைவாழ்வளிக்கும் செயல்களை மீட்பின் செயல்கள் எனலாம் (விப 14:13, 19:5). மீட்பு என்பது எபிரேய மொழியில் யாஷஹ் (Yesha) என்னும் சொல்லால் அறியப்படுகிறது. இதற்கு முழுமையாதல் தடையின்றி வளர்தல் ஆகிய பொருள்கள் உள்ளன. அதாவது சுதந்திரமான வாழ்வு, நிறைவான வாழ்வு இவற்றை இச்சொல் சுட்டிக்காட்டுகின்றது. யாஷஹ் என்னும் சொல்லிலிருந்துதான் யோசுவா என்னும் பெயர்ச்சொல் வருகிறது. யோசுவா என்பதற்கு மீட்பர் என்று பொருள். யோசுவா என்னும் எபிரேயச் சொல் கிரேக்க மொழியில் இயேசு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கும் மீட்பர் என்றே பொருள். (மத் 1:21)

உலகில் பாவம் தோன்றியதன் காரணமாக ஏற்பட்ட வீழச்சியை மாற்ற கடவுள் தம் மக்களை மீட்கும் பணியில் பெரும் ஆற்றலோடு செயல்படுகின்றார். வரலாற்றில் கடவுள் தம் மக்களை மீட்பதற்கு காலங்களுக்கேற்ப தலைவர்கள், நீதித் தலைவர்கள், அரசர்கள், இறைவாக்கினர் போன்றோரை ஏற்படுத்தினார். நிறைவாக மீட்புக் பணியில் முழுமைக்காணவும், உலகத்தை தம்மோடு ஒப்புரவாக்குவதற்கும் கடவுள் தம் திருமைந்தராகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பினார்.

(கலா 4:4-5) அவர் வழியாக இந்த உலகில் மீட்பினைக் கடவுள் முழுமையாக அறிமுகம் செய்தார். இயேசுவின் வாழ்வு முழுவதிலும் அவரது மீட்புப் பணி வெளிப்பட்டது. அவர் எப்படி சிலுவையில் மீட்புப் பணியை நிறைவேற்றினார் என்பதை திருவிவிலியம் சார்ந்து சிந்திப்போம்.

### *1. சிலுவையில் தம்மையே பலியாக்கி மீட்பை நிறைவேற்றினார்:*

பழைய ஏற்பாட்டில் பலியிடும் முறையானது கடவுளை வழிபடக் கூடிய முக்கிய வழியாக எடுத்துக் கூறப்படுகிறது. பாவக் கழுவாய் நிறைவேற்றும் நாளானது யூத மதத்திற்கு மிகவும் முக்கியமான நாளாகும். அந்நாளில் ஓர் ஆட்டுக்கிடாய் மேல் பாவத் தண்டனை சுமத்தப்பட்டு, அனைத்து மக்களின் பாவங்களைச் சுமந்த வண்ணம் பாலை நிலத்திற்குள் விரட்டப்பட்டு, அங்கே அது பலியாக்கப்பட்டு, அதன் உடல் சுட்டெரிக்கப்படும். இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் விலங்குகளைப் பலியாக செலுத்திப் பாவபரிகாரத்தை தேடிக்கொள்வார்கள், சமாதானம் அடைவார்கள்.

ஆண்டுதோறும் செலுத்தப்படும் இந்த பலிகளால் மக்களை நிறைவுள்ளவர்களாக்க முடியவில்லை. அப்படி இருந்திருந்தால் அவர்கள் தூய்மையடைந்திருப்பார்கள். இந்த பலிகள் ஆண்டுதோறும் செலுத்தப்படுவது அவர்கள் பாவங்களை நீக்கவில்லை என்பதையே நினைவுபடுத்துகின்றது. (எபி 10:1-3,11)

அதனால் தான் விலங்குகளுக்கு பதிலாக இயேசு தம்மை மீட்கும் பொருளாக்கி தம் உயிரையே கொடுத்தார். பாவிகளை பாவத்திலிருந்து மீட்பதற்கு இயேசு தாமே மீட்கும் பொருளாகி விட்டார். எபிரேய திருமடல் ஆக்கியோன் இதனை பலி என்று விளக்குகிறார். (எபி 9:12)

பழைய ஏற்பாட்டு பலிகளால் இறைவனோடு முழுமையான உறவினை ஏற்படுத்த முடியவில்லை. இயேசுவோ தம்மையே பலியாக கையளித்து மனிதரை பாவத்தில் இருந்து விடுவித்து இறை-மனித உறவை வலுப்படுத்தினார். இயேசுவின் கையளிப்பு அவர் மனிதர் மீது கொண்டுள்ள நிறைவான அன்பின் வெளிப்பாடு ஆகும். இயேசுகிறிஸ்து பலியாகி, ரத்தம் சிந்தி நமக்கான "வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் புதியதொரு வழியை" திறந்து வைத்தார் (எபி 10:20)

பாவ மன்னிப்பிற்காக பலியாக்கப்பட்ட விலங்குகள் ஆலயத்தின் தூயப்பகுதிக்கும், பாளையத்திற்கும் வெளியே எரிக்கப்படுவது போல மக்களுடைய மீட்பிற்காக உண்மையான பாவப் பரிகாரப் பலிப்பொருளான

கிறிஸ்து நகரவாயிலுக்கு வெளியே சிலுவையில் பலியானார். இயேசுவின் சிலுவை பலி எல்லாவித பலிகளுக்கும் முடிவுகட்டி பலிகளை நிறைவுபெறச் செய்தது. நாமும் தூயவர்களாக்கப்பட்டிருக்கிறோம்.

### *2. சிலுவையில் தம் பாடுகளின் வாயிலாக மீட்பை நிறைவேற்றினார்:*

இயேசுவின் வாழ்விலிருந்து அவர் பாடுகளை நாம் பிரித்துவிட்டால் அவருடைய தியாகங்களும், கடவுள் நம்மீது கொண்ட அன்பும் பொருளற்றதாய் போய்விடும். கடவுள் நம்மீது கொண்ட அன்பின் வெளிப்பாடுதான் இயேசு கிறிஸ்துவின் பாடுகளும், சிலுவை மரணமும் (1யோவா 4:9).

இயேசு, தாம் மீட்பர்-மெசியா என்று சொன்னதால் சிலுவையில் அறையும் படி தீர்ப்புப் பெற்றார். அவரை துன்புறுத்தி, முள்முடிசூட்டி, சிவப்பு அங்கி அணிவித்து ஏளனம் செய்தனர். கிறிஸ்துவின் பாடுகளும் சிலுவையும் கடந்து போன ஒரு நிகழ்வல்ல. அது என்றென்றும் நடக்கும் தொடர் நிகழ்வே. ஏனெனில் அவர் சகோதரர் சகோதரிகளான மிகச் சிறியோர் தொடர்ந்து துன்புறும்போது அவரும் இணைந்து துன்புறுகிறார்.

“No pain, no gain” என்பது ஒரு ஆங்கிலப் பழமொழி, “வலியில்லாமல் வாழ்வில்லை” என்பது அதன் பொருள். வலிகளாலேயே ஒவ்வொருவருடைய வாழ்வும் கட்டமைக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்து நாம் எல்லோரும் வாழ்வு பெறும் பொருட்டு நம் வலிகளை தமதாக்கிக் கொண்டு பாடுகளின் வழியாக சிலுவையில் மீட்பின் பணியை நிறைவேற்றினார். (1பேது 2:24).

மீட்பு எக்காலத்திற்கும் பொதுவானது. ஏனெனில் நமது மீட்பு எதிர்காலத்திலேயே நிறைவு பெறுகிறது. இறுதிவரை மன உறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர் என்று இயேசு கூறுகிறார் (மத் 10:22). உங்கள் மீட்பு நிறைவேறப் பயத்துடனும், நடுக்கத்துடனும் உழைத்துக் கொண்டிருங்கள் என்கிறார் தூய பவுல் (பிலி 2:12) மீட்பு முழுமை பெறும் போது தனி மனிதர் மட்டுமன்று முழுப்படைப்புமே வேதனையிலிருந்து விடுதலை பெற்று முழுநிலையடையும். நாமும் உள்ளம், உடல் அனைத்திலும் முழுமை நிலை பெற்று வாழ்வோம்.

திரு. **M. பிரிஸ்டன் வினோ**

16-04-2022



# புதுவாழ்வுக்கான எதிர்நோக்கு

## HOPE FOR THE NEW LIFE

தானி 12:1-4 | 1பேது 4:12-19
திபா 4 | யோவா 19:38-42

**"...ஆண்டவரை நம்புங்கள்"** (திபா 4:5).

அமெரிக்காவைச் சார்ந்த பிரபல எழுத்தாளர் ஓ. ஹென்றி என்பவர் எழுதிய "The Last Leaf" (கடைசி இலை) என்ற சிறுகதையிலே Johnsy என்ற பெண் நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தார். நோயின் தாக்கம் காரணமாக அவர் நம்பிக்கையில்லாமல் "நான் இன்னும் ஒரு சில நாள்களில் இறந்து விடுவேன்" என்று நம்பிக்கை இழந்து காணப்பட்டார். ஆனால், உடனிருந்த அவரின் தோழியோ நம்பிக்கை நிறைந்த வார்த்தைகளைச் சொல்லி அவரைத் தேற்றிக்கொண்டே இருந்தார். இதற்கிடையில் அவர் படுத்திருந்த படுக்கைக்கு அருகிலிருந்த ஜன்னல் வழியாக ஒருநாள் வெளியே பார்த்த பொழுது, ஒரு செடி நன்றாக இருக்கக் கண்டார். சிலநாட்களிலே நன்றாக இருந்த அந்தச் செடி ஏனோ திடீரென்று பட்டுப்போய், ஓர் இலையைத் தவிர மற்ற எல்லா இலைகளும் அதிலிருந்து உதிர்ந்து போயிருந்தன. இதை அவர் தன் தோழியிடம் சுட்டிக்காட்டி, "இந்தச் செடியைப் போன்றவள் தான் நானும். இந்தச் செடியில் ஓர் இலையைத் தவிர, மற்ற எல்லா இலைகளும் உதிர்ந்துவிட்டன. நாளைக்கு, எஞ்சியிருக்கும் இந்த இலையும் உதிர்ந்துவிடும், அப்பொழுது இந்த இலையைப் போன்று நானும் உதிர்ந்து விடுவேன்" என்றார். அன்றிரவு கடைசி இலை உதிரும்பொழுது தானும் இறந்துவிடுவதாக நினைத்துக்கொண்டு படுத்திருந்தார். மறுநாள் காலையில் அவர் ஜன்னல் வழியாகச் செடியைப் பார்த்த பொழுது, அந்தச் செடியில் இருந்த கடைசி இலை உதிராமல் அப்படியே இருந்தது. அவருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. 'உதிராமல் இருக்கும் இந்த இலையைப் போன்று நானும் உயிரோடு இருப்பேன்' என்று அவர் தனக்குள் சொல்லிக்கொண்டார். இதற்குப் பிறகு அவர் தனக்குக் கொடுக்கப்பட்ட சிகிட்சையை நம்பிக்கையோடு பெற்று, விரைவில் நலமடைந்தார். ஆம், நமக்கும் புதுவாழ்வுக்கான நம்பிக்கை இருந்தால், அவ்வாழ்வு நம்மில் துளிர்விடும்.

புனித சனி என்பது புதிய விடியலுக்காய்க் காத்திருக்கும் அமைதியின் நாளாகும். மேலும், சிலுவை மரணம் என்ற கொடிய வேதனைக்குப் பின், உயிர்ப்பு என்ற மகிமையின் நிலைக்கு முன் உள்ள முக்கியமான நாள். புனித வெள்ளியன்று நிகழ்ந்து முடிந்த சிலுவைப்பாடுகளுக்கும், வர இருக்கின்ற உயிர்ப்பின் மகிமைக்கும் இடையே உள்ள ஓர் அமைதியின் நாள். ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மரணம் சீடர்களின் வாழ்வில் உறவு நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புகளை இழந்த நிலையை உருவாக்கியது. அவர்கள் உயிர்ப்பு என்ற ஒன்று இருப்பதை அறியவில்லை. புனித வெள்ளியிலிருந்து, ஞாயிற்றை எதிர் நோக்கி அவர்களால் நகரமுடியவில்லை. எனவே அவர்கள் கல்லறை நோக்கிச் செல்கின்றார்கள். புனித சனி, துன்பத்தின் இடத்தில் மகிழ்ச்சியை வைக்கும் நாள் அல்ல. அது துன்பத்தையே மகிழ்ச்சியாய் மாற்றிக்கொள்ளும் நாள், நம்பிக்கை இழக்கும் நேரத்தில் நம்பிக்கை உருவாகும் நாள், வாழ்க்கை முடியும் இடத்தில் புதிய வாழ்வு தொடங்கும் நாள். யோவான் 12:24இல் இயேசு, "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" என்கிறார்.

ஆண்டவரின் வெற்றி, சாவு இல்லாமல் இல்லை. சாவுக்குள்தான் அவரின் வெற்றி இருக்கிறது. அவரின் வெற்றி மனுக்குல மக்களின் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்தி, ஒரு புதிய வாழ்வுக்கான எதிர்நோக்கினை ஏற்படுத்துகின்றது. ஆண்டவர் தருகின்ற இந்தப் புதிய வாழ்வு எப்படிப்பட்டது என்பதைக் குறித்துத் தியானிப்போம்.

### *1. அடிமைத்தனத்திலிருந்து விடுதலை வாழ்வு* :

அக்காலத்தில் உன் இனத்தார்க்குத் தலைமைக் காவலரான மிக்கேல் எழும்புவார். மக்களினம் தோன்றியது முதல் அக்காலம் வரை இருந்திராத துன்பக் காலம் வரும். அக்காலத்தில் உன் இனத்தார் விடுவிக்கப்படுவர். நூலில் யார் யார் பெயர் எழுதப்பட்டுள்ளதோ. அவர்கள் அனைவரும் மீட்கப்படுவார்கள் (தானியேல் 12:1).

நான்காம் அந்தியோக்கஸ் ஆட்சி காலத்திலே யூத மக்கள் துன்பங்களை அனுபவித்து வந்தார்கள். அதிகாரத்தினாலும். அடக்குமுறையினாலும், கொடுமையினாலும், அவரின் ஆணவத்தினாலும் மக்கள் நம்பிக்கை இழந்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இந்தக் காலம் யூதருடைய வாழ்வில் துன்பக்காலமாகக் கருதப்பட்டது. யூதர்களுடைய வாழ்வில் இது அடிமைத்தனம் போன்ற கடினமான நாட்களாக

இருந்தாலும் கடவுள் தானியேல் வழியாக அவர்களுக்கு நம்பிக்கையூட்டுகின்றார். எப்படியென்றால், துன்பநாள்கள் தொடர்ந்து வரும். அப்பொழுது மிக்கேல் யூதருடைய உதவிக்கு நிற்பார். இந்த மிக்கேல் யூத மக்களுக்காகக் கடவுளால் அனுப்பப்பட்டவர் (தானி 10:13, 12:1, திவெ 12:7). மிகாவேல் என்றால் 'மிக்கா ஏல்', அதாவது, கடவுளுக்கு நிகர் யார்? என்பது பொருள்.

அந்தியோக்களின் ஆட்சியில் முடிவு உண்டு. அதாவது, "உன் இனத்தார் விடுவிக்கப்படுவர்". இந்த விடுதலையின் வாக்குறுதி யூத மக்கள் அனைவருக்கும் உரியதல்ல. மாறாக, கடவுளைத் தங்கள் மெசியாவாக நம்பி, உண்மையாகவே இறைவரிடம் திரும்பும்போது அவர்களது பெயர்கள் புத்தகத்தில் எழுதப்படும். அப்படி பெயரெழுதப்பட்டவர்கள் மீட்கப்படுவார்கள் என்கிறார். புதிய விடியல் வாழ்வைத் தரும் கடவுள் மீது நம்பிக்கை வைப்போம். பாவ அடிமைத்தனங்கள், அந்நிய நாட்டின் அடிமைத்தனங்கள் மற்றும் உரிமை இல்லாத நிலைகளை மாற்றி விடுதலை தந்தவர் தொடர்ந்து விடுதலை வாழ்வை நமக்குத் தருவார். 1பேதுரு 4:3இல் "பிற இனத்தினர் செய்ய விரும்புவதையெல்லாம் நீங்கள் கடந்த காலத்தில் செய்து வந்தது போதும். அப்பொழுது நீங்கள் காமவெறி, இச்சை, மதுமயக்கம். களியாட்டம், குடிவெறி, வெறுப்புக்குரிய சிலைவழிபாடு ஆகியவற்றில் காலத்தைக் கழித்தீர்கள்" என்கிறார். இன்றும் நாம் இத்தகைய அடிமைத்தனங்களிலே அடிமைகளாய் இருக்கின்றோம். விடுதலையை பெற்றுக்கொள்ள ஆண்டவரிடம் நம்மை அர்ப்பணிப்போம். அவர் விடுதலை தந்து நடத்துவார்.

### *2. துன்பங்களிலிருந்து மகிழ்ச்சியின் வாழ்வு* :

திருத்தூதுவராகிய பேதுரு தனது திருமுகத்திலே கிறிஸ்துவுக்காக துன்பப்படும் கிறிஸ்தவர்களுக்கு நம்பிக்கையூட்டுகின்றார். "...துன்பத் தீயில் நீங்கள் சோதிக்கப்படும்போது, ஏதோ எதிர்பாராதது நேர்ந்துவிட்டதென வியக்காதீர்கள்". "மாறாக, கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணைப் பங்கு கொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள். அப்பொழுது கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள்" (1 பேது 4:12,13) என்கிறார். நாம் இந்தப் பாடுகளின் வழியே மகிழ்ச்சியாயிருக்க வலியுறுத்துகின்றார். எப்படியென்றால், நீங்கள் இந்தத் வாழ்வில் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தாலும், இந்த துன்பங்கள் நிரந்தரமல்ல. உங்களுக்கு உண்டாகும் துன்பங்களை குறித்து நீங்கள் ஆச்சரியம் அடைய வேண்டாம். ஏனென்றால் கிறிஸ்துவும் அநியாயமாக துன்பம் அனுபவித்தார். அவருடைய துன்பங்களுக்கு நாம் பங்காளிகளானபடியால் மகிழ்ச்சியின் வாழ்வு நமக்கு கிடைக்கிறது.

தங்கத்திலுள்ள அழுக்குகளை நீக்கும்படி தங்கம் தீயினால் புடமிடப்படுகிறது போல, விசுவாசமும் சுத்திகரிக்கப்படுகிறது. வேதனை, சோதனை என்னும் தீயினால் சோதிக்கப்பட்டபின் அது மிகுந்த உறுதியாகவும் தூய்மையாகவும் மாறிவிடுகிறது. மெழுகு உருகுவதால் தான் ஒளி கிடைக்கிறது. கல் உளி கொண்டு அடிபடுவதால் தான் சிற்பமாக மாறுகிறது. விதை மடிவதால் தான் செடி வளர்கிறது. ஒவ்வொரு புது வாழ்வுக்கும் துன்பங்கள் அடித்தளமாக இருப்பதை அறிகின்றோம். இந்தத் துன்பங்களின் முடிவிலே மகிழ்ச்சி உண்டு. யாக்கோபு 1:12இல் சோனையைச் சகிக்கிற மனிதர் பேறுபெற்றோர். அவர்கள் உத்தமரென்று விளங்கினபின்பு ஆண்டவர் அன்புகூருகிறவர்களுக்கு வாக்களித்த வெற்றிவாகையைப் பெறுவர்". கிறிஸ்து நம்மைத் துன்பங்களிலிருந்து மீட்டெடுத்து மகிழ்ச்சியின் வாழ்விற்கு நேராக நடத்துகிறார்.

### *3. நிலையில்லா வாழ்விலிருந்து நிறைவான வாழ்வு* :

(யோவா 19:41,42)

கல்லறை என்பது மனிதனின் வாழ்க்கையில் முடிந்து போன அனுபவம். கல்லறை என்பது மனித வாழ்வின் இறுதி. இந்த இறுதி என்ற எண்ணத்தை இயேசுவின் கல்லறை உடைக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் கல்லறையானது புது வாழ்வின் விடியலுக்கான தொடக்கம். இங்கிருந்து தான் முடிவில்லா வாழ்வு தொடங்குகின்றது. கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்கின்றபோது முடிந்துவிட்டது என்ற நிலையிலிருந்து முடியவில்லை என்ற அனுபவம் பிறக்கின்றது. கல்லறையால் கூட அடைத்து வைக்க முடியவில்லை. கல்லறை மனித வாழ்வின் முடிவு என்ற எண்ணத்தை தகர்த்து ஒரு புதிய வாழ்வுக்கான எதிர்நோக்கு என்பதை இயேசுவின் மீது நாம் நம்பிக்கை வைக்கும்போது நம்மால் உணர்ந்து கொள்ள முடியும். இன்று இவர் மீது நம்பிக்கை வைக்கும் அனைவருக்கும் வாழ்வு உண்டு, உயிர்ப்பு உண்டு. "உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கைகொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான் 11:25) என்னும் நம்பிக்கை வார்த்தைகளால் மரணத்திற்கு முடிவு கட்டுகிறார். வாழ்க்கையிலே மரணம் நம்மை சந்தித்தாலும் கல்லறைக்கு பிறகும் ஒரு வாழ்க்கை உண்டு என்பதை இயேசுவின் உயிர்ப்பு நமக்கு உணர்த்துகிறது.

கல்லறையால் நம்முடைய வாழ்க்கை முடக்கப்படும் போது நமக்காகக் கல்லறையை உடைத்து புதுவாழ்வை வழங்குகிற இயேசு நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையில் முன்னேறுவோம். இயேசு கிறிஸ்து தரும் புது வாழ்வு அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகவும், துன்பத்தில் இருந்து மகிழ்ச்சியாகவும், நிலையில்லா வாழ்விலிருந்து நிறை வாழ்வாகவும் அமையட்டும்.

திரு. P.C. ***பெரின் பாப்பி***

17-04-2022

## உயிர்ப்பு: எல்லையற்ற மாற்றுருவாக்கத்தைக் கொண்டாடுதல்
## RESURRECTION: CELEBRATING BOUNDLESS TRANSFORMATION

| | |
|---|---|
| 2சாமு 22:1-20 | 1கொரி 15:20-28 |
| திபா 16 | மாற் 16:1-11 |

**"திகிலுறவேண்டாம்; சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்து இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிருடன் எழுப்பப்பட்டார் "** (மாற் 16:6).

ஜமைக்கா நாட்டுப் பெண்மணியின் கண்புருவம், வாயின் உதடு, கைவிரல், பாதம் போன்றவை தொழுநோயால் அரிக்கப்பட்டிருந்தன. நோயின் அகோரத்தால் வலியும் வேதனையும் அப்பெண்மணியைப் பாதித்துக் கொண்டிருந்த நேரத்தில், ஒருநாள் அந்நாட்டுப் பேராயர் புல்ஃடன் ஷீன் அவளைச் சந்திக்க நேர்ந்தது. இந்தக் கடினமான நேரத்திலும் மிகுந்த மகிழ்ச்சியோடு உன்னால் எப்படி இருக்கமுடிகிறது? எனப் பேராயர் பெண்மணியிடம் கேட்டார். அதற்கு அவர், "நான் இறந்தபிறகு இயேசு என்னை நிச்சயம் உயிர்த்தெழ வைப்பார். அப்போது மாட்சிமை நிறைந்த புதிய உடலை எனக்குத் தருவார் என்ற நம்பிக்கையே இப்போதைய மகிழ்ச்சிக்குக் காரணம்" எனப் பதிலளித்தார். உயிர்ப்பின் மீதுள்ள நம்பிக்கை கடின உடல்வலியையும் கடந்து எல்லையற்ற கொண்டாட்டத்திற்கு வித்திட்டதை இந்நிகழ்ச்சிவழி உணரலாம். உயிர்ப்பு கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிநாதம். இது வெறுமையல்ல, மாறாக வாழ்வின் முழுமை. பழைய பாவ வாழ்வில் வாழ்வதல்ல, மாறாக புதிய இயல்பில், புதிய தெளிவில், புதிய படைப்பில் வாழக்கிடைக்கும் ஒரு வாய்ப்பு. இயேசுகிறிஸ்துவின் உயிர்ப்பு இவற்றையே நமக்குப் பாடமாக்கியது. யோவான் 20:1-18 வரையுள்ள மறைப்பகுதியின் அடிப்படையில் கொண்டாடப்பட வேண்டிய உயிர்ப்பின் மாற்றுருவாக்கத்தின் விளைவுகளை இவண் காண்போம்.

***1. புதிய தெளிவு:*** (New Clarity (or) Realisation)

> மரியா அவரைத் தோட்டக்காரர் என்று நினைத்து அவரிடம், "ஐயா, நீர் அவரைத் தூக்கிக் கொண்டு போயிருந்தால் எங்கே" வைத்தீர் எனச் சொல்லும். இயேசு அவரிடம், "மரியா" என்றார். மரியா திரும்பிப்பார்த்து, "ரபூனி" என்றார் (யோவா 20:15,16).

ஒருமுறை அமெரிக்காக எழுத்தாளர் வின்சென்ட் பீலே (Vincent Peale) என்பவரிடம் இளைஞர் ஒருவர், தாங்கள் எழுதிய புத்தகத்தைப்

படித்தேன். அதில் நேர்மறை எண்ணங்களைப்பற்றி எழுதியிருக்கிறீர்கள். நேர்மறை எண்ணத்திற்கும் எதிர்மறை எண்ணத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடு என்ன? என்று கேட்டார். மதுபோதையில் கேட்ட அந்த இளைஞனிடம் "வித்தியாசத்தை நான் கூறுகிறேன். ஆனால், அதைக் கேட்பதற்கு நீ தெளிவாக இருக்கவேண்டும்" என எழுத்தாளர் பதிலளித்தார். அதற்கு அந்த இளைஞர், 'நான் தெளிவாக இருந்திருந்தால் இப்படியெல்லாம் கேட்டிருக்கமாட்டேன்' எனப் பதில் கூறினான். சரியாகப் படிப்பதற்கும், பார்ப்பதற்கும், பதில் கூறுவதற்கும், கேட்பதற்கும் தெளிவாக இருத்தல் வேண்டும். இதற்காகத்தான், தேசியகவி சுப்பிரமணி பாரதியார் "தெளிமைபெற்ற மதியினால் வா வா" எனப் பாடினார். இதற்கு ஒருபடிமேலே சென்று, "எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என வள்ளுவர் எழுதி வைத்தார். மூளையைக் கொண்டு சிந்திப்பது அறிவு; மனதைக்கொண்டு சிந்திப்பது தெளிவு; இதன் உச்சமே ஞானம். தெளிவு என்பதன் பொருள் புலப்பாடு, (தெளிவெனப்படுவது புலப்பாடே தண்டியலங்காரம் 16) துவக்கம், விளக்கம், பிரகாசம்...(clarity, sleekness. essence, mature, knowledge...). குழப்பமடையும் நேரத்தில் சுயசிந்தனையைக் கொண்டு எடுக்கும் முயற்சியின் பலனே தெளிவு.

அனைத்து நற்செய்தி நூற்களும் தரும் தகவலின்படி இயேசுவின் உடலை அடக்கம் செய்து முடித்த அடுத்த மணிநேரத்திலிருந்து ஓய்வுநாள் தொடங்கிற்று. அதனால் அவரது உடலுக்கு நறுமணப்பொருட்கள் பூசமுடியவில்லை. இதைப் புரிந்த பெண்கள் நறுமணப் பொருட்களை ஆயத்தம் செய்து ஓய்வு நாள் முடிவதற்குக் காத்திருந்தனர். ஓய்வுநாள் முடிந்ததும், அதிகாலையில் மகதலேனா மரியாவும் மற்ற பெண்களும் ஆயத்தம் செய்துவைத்திருந்த நறுமணப்பொருட்களை இயேசுவின் உடலில் பூசவேண்டும் என்ற ஆர்வத்தில் வந்தனர் (மாற் 1:1,2; லூக் 24:1). கல்லறையில் இயேசுவின் உடல் இல்லாததைக் கண்டு அழுகின்றனர். "யாரோ இயேசுவின் உடலை திருடிச் சென்றிருப்பார் என நினைத்து மகதலேனா மரியா குழப்பிப்போய் தெளிவற்று நின்றார். மூன்றரை ஆண்டுகள் ஆண்டவரோடிருந்தும், அவர் உயிர்த்தெழுந்திருப்பார் என்ற எண்ணம் அவரிடம் தோன்றவில்லை. அருகே நின்ற இயேசுவைத் தோட்டக்காரர் என எண்ணுமளவிற்குக் குழப்பத்தில் ஆழ்ந்துபோனார். மரியா தெளிவற்றிருக்கிறார் என முன்னறிந்த இயேசு, அவரைப் பார்த்து, மரியா என அழைத்ததும், அவரது அழைப்பின் குரலில், அழைத்தவர் ஆண்டவர்தான் என நொடிப் பொழுதில் தெளிவடைந்து 'ரபூனி' எனப் பதிலாகக் கூறினார். இயேசுவின் உடலைப் பார்க்க வந்த மகதலேனா மரியா உயிர்த்தெழுந்த இயேசுவைப் பார்த்தார். குழப்பம் மாறி

தெளிவடைந்து மாற்றுரு பெற்றவரானார். உண்மைதான், இயேசுவின் உயிர்ப்பின் நற்செய்தி கிடைக்கும் இடத்தில் குழப்பம் நீங்கி புதிய தெளிவு உண்டாகும். வாழ்வில் குழப்பத்தோடு இருந்த சாது சுந்தர் சிங் இயேசுவின் தரிசனத்தின் பின் மாற்றம்பெற்று இந்திய இரத்தசாட்சியானார்.

***2. புதிய உறவு:*** (New Relationship)

"நான் என் தந்தையிடம் இன்னும் செல்லவில்லை. நீ என் சகோதர்களிடம் போய்...சொல்" (யோவா 20:17). மகிழ்வான வாழ்விற்கும் மாண்புமிக்க வாழ்விற்கும் உறவே முதன்மையானது. மனிதன் பிறக்கும்போதே தாய்-தந்தை, தாத்தா-பாட்டி, மாமா-மாமி என்னும் உறவுகளோடே பிறக்கிறான். நல்ல உறவுகளை உருவாக்கும் மனிதனே வல்லமையான மனிதன். காரணம், இன்பத்தில் அவனோடு இன்புறவும் துன்பத்தில் அவனைத் தாங்கிப் பிடிக்கவும் உறவுகள் உதவுகின்றன. Martin Buber என்னும் தத்துவவியலாளர், "வாழ்வே உறவுதான். அது எப்படியெனில், நூறிலிருந்து ஒன்றை அழித்துவிட்டால் பதிலாகப் பூஜியம் கிடைப்பது போல் வாழ்விலிருந்து உறவை நீக்கிவிட்டால் மிஞ்சுவது சூன்யம் தான்" என்கிறார். உறவு எனப்படுவது மிகப்பெரியத் தொடர்புச் சொல். ஆண்டவர் இயேசுகிறிஸ்து தம் பணிவாழ்வில் உறவின் அர்த்தத்தைப் புரியவைத்துக்கொண்டேயிருந்தார் எனலாம்.

இயேசு வெளிப்படுத்திய உறவுகளின் படிநிலை முன்னேற்றத்திற்கான சில எடுத்துக்காட்டுகளாக சீடர்-குரு உறவு (யோவா 1:37-45); மைந்தை-மேய்ப்பன் உறவு (யோவா 10:1-11); செடி-கொடி உறவு (யோவா 15:1-10); எஜமான்-வேலைக்காரர் உறவு (யோவா 15:15); தாய்-மகன் உறவு (யோவா 19:26-29) எனக் கூறலாம். யோவா 20:17-இன் படி இயேசு உயிர்த்தெழுந்தபின் "நீ என் சகோதரர்களிடம்" என்று பயன்படுத்திய சொற்றொடரின் படி, இனி "சீடர்கள் என் சகோதரர்கள்" என இயேசு கூறினார். சீடர்கள் கொடி, ஆடு, வேலைக்காரர் என்றிருந்த நிலை உயிர்ப்பிற்குபின் சகோதரர்கள் என்ற மாற்றத்திற்கு வருவதே உயிர்ப்பின் மாபெரும் புதிய உறவின் மாற்றுருவாக்கம். ஆண்டவரே சீடர்களைச் சகோதரர்கள் என ஏற்றுகொண்டதைப் புரியும் நாம் அடுத்திருப்போரை, எளியவர்களை, இல்லாதவர்களை, புறம்பே தள்ளப்பட்டவர்களை, வலிமைகுன்றியவர்களை, குரல்வளை நெரிக்கப்பட்டவர்களை, முகவரியற்றவர்களை, நோயால் புறம்பாக்கப்பட்டவர்களை, சாதீயத்தால் ஒருக்கப்பட்டவர்களை நம் சகோதர சகோதரிகளாக ஏற்று அவர்களைக் குறைகூறாமல், கோபப்படாமல், அவர்களின் நற்பணிகளைப் பாராட்டி, அவர்கள் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்டு, சிறுசிறு உதவிகளைச் செய்து உறவை வளர்ப்போம். அப்பொழுதே உயிர்ப்பு தரும் மாற்றுருவாக்கத்தின் புதிய உறவு ஆரம்பமாகும்.

### *3. புதிய பொறுப்பு:* (New Responsibility)

மகதலேனா மரியாள் சீடர்களிடம் சென்று, “நான் ஆண்டவரைக் கண்டேன்” என்றார் (யோவா 20:18).

நாம் அனைவரும் தொடர் ஓட்டப்போட்டிகளை (Relay Race) தொலைக்காட்சியிலோ அல்லது நேரடியாகவோ பார்த்திருப்போம். ஒருகுறிப்பிட்ட தூரம் ஓடும் ஒருவீரர் பின்பு தன்னிடம் உள்ள குச்சியை இன்னொருவரிடம் கொடுப்பார். அவரும் தொடர்ந்து ஓடி அடுத்த வீரரிடம் குச்சியைக் கொடுப்பார். இந்த ஓட்டம் தொடர் ஓட்டமாக இருக்கும். அதேபோல கிறிஸ்து, தம் உயிர்ப்புச் செய்தியை தம் சகோதரர்களாகிய சீடர்களிடம் அறிவிக்கும் பொறுப்பை மகதலேனா மரியாவிடம் ஒப்படைக்கிறார். ஒருவர் தன்னிடம் ஒப்படைத்த பணியை நிறைவேற்றும் கடமையுணர்வே பொறுப்பு ஆகும். பொறுப்பு என்பது தங்கள் செயல்களைப்பற்றி சிந்திப்பதும் தங்களிடம் தரப்படும் பணிப்பொறுப்பை செயல்படுத்துவதுமாகும். இது கடமையையும் விளைவுகளையும் உணர்ந்து செயல்பட வேண்டிய ஒன்று. ஆண்டவர் இயேசுகிறிஸ்து தாம் உயிர்த்த செய்தியை அறிவிக்க, முதலில் மகதலேனா மரியாவுக்குத் தரப்பட்டதை விருப்போடு ஏற்றுச் செயல்பட சென்றார் (யோவா 20:18). இந்த அறிவிப்பில் நிகழ்ந்த தொடர் நிகழ்வென்னவெனில், ஆண்டவர் மரியாவிடம் அறிவித்தார். மரியா இயேசுவின் சகோதரர்களாகிய சீடர்களிடம் அறிவித்தார். சீடர்கள் முதல் கிறிஸ்தவர்களுக்கு அறிவித்தனர். கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களல்லாதோருக்கு அறிவித்தனர். அதன் விளைவே 18ஆம் நூற்றாண்டில் உதயமான மிசனெறி அமைப்புகள் (CMS, LMS, SPG, etc). இந்தத் தொடர் நிகழ்வு இன்றளவும் பரந்து விரிந்து கொண்டே செயல்படுகிறது. சமூகத்தில் அடையாளம் மறுக்கப்பட்ட இயேசு காலத்துப் பெண்களில் ஒருவரான மகதலேனா மரியாவிடம் உயிர்ப்பின் செய்தியை அறிவிக்கும் பொறுப்பை ஒப்படைத்ததே இதற்குக் காரணம். முதன்முதலில் இந்தப் பொறுப்பை ஒரு பெண்மணிக்குத் தந்ததே இதன் உச்சம். அதுவே புதிய பொறுப்பின் மாற்றுருவாக்கம். இதைத் தொடங்கிவைத்ததும் நம் ஆண்டவர் இயேசுவே. இந்த மாற்றுருவாக்கத்தின் விலையே இன்று உலகின் பல உயர் பொறுப்புகளில் பெண்கள் வருவதற்கான அடித்தளமாக அமைந்தது. உயிர்ப்பின் மாற்றுருவாக்கத்தைக் கொண்டாடும் நாம் நமது இல்லத்தில், திருச்சபையில், சமூகத்தில் பெண்களுக்குப் பொறுப்பு வழங்குவோம். இவ்வாண்டு உயிர்ப்பின் மாற்றுருவாக்கத்தால் புதிய தெளிவும் புதிய உறவும் புதிய பொறுப்பும் நம்மில் உருவாகட்டும்.

அருள்திரு. அறிவர் S. **வில்சன்**

24-04-2022

உயிர்ப்புக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு

## உயிர்த்த ஆண்டவரால் பேராற்றல்படுத்தப்பெறுதல்
## EMPOWERED BY THE RISEN LORD

| | |
|---|---|
| தொநூ 28:10-22 | திப 20:7-12 |
| திபா 29 | யோவா 20:11-18 |

**"..... ஏனம்மா அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?"** (யோவா 20:15)

இவ்வுகில் பலர் உடல், உள்ள அளவில் பலவீனர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஆற்றல்படுத்துவது, பேராற்றல்படுத்துவது நம்முடைய கடமை. Power என்றால் ஆற்றல். Empower என்றால் பேராற்றல். Empowerment என்றால் பேராற்றல்படுத்தப்பெறுதல். பொதுவாக, பெண்கள் பலவீனமானவர்கள் (1பேதுரு 3:7), மனவலிமையில்லாதவர்கள், எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்கள் (2திமொ 3:7) போன்ற கருத்துகளை அதிகமாக வலியுறுத்தும் பலர், பெண்களின் பலத்தை அறிவதில்லை. மேலும் பெண்களைக் குறித்துச் சொல்லுகையில் அவர்கள் ஒருநிலையியில்லாதவர்கள், அச்சப்படுபவர்கள், ஐயப்படுபவர்கள் என்று பல நிலைகளில் பலவீனமானவர்களாக சித்திரிக்கப்பட்டு, சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களை இயேசு கிறிஸ்து பேராற்றல்படுத்துகிறார். நாம் விரும்பும் எதிர்காலத்தை உருவாக்க பெண்களைப் பேராற்றல்படுத்துவது மிக முக்கியம் என்றார் அமர்த்தியா சென் (Empowering women is key to building a future we want). அச்சத்திலே, அழுகையிலே, அறியாமையிலே இருந்த மரியாவை ஆண்டவர் எப்படி பேராற்றல்படுத்துகிறார் என்பதை யோவா 20:11-18 வரையுள்ள வசனங்களை அடிப்படையாகக் கொண்டு சிந்திப்போம்.

### *1. தெரிந்தும் தெரியாதிருந்தவரைத் தெரிந்துகொள்ளும் படியாய்ப் பேராற்றல்படுத்தும் ஆண்டவர் :* (யோவா 20:2,13)

பொதுவாக, மனிதர்களாகிய நாம் இந்த உலகிலே அநேக காரியங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். மிகப்பிரபலமான மனிதர்களை (V.I.P.) நமக்குத் தெரியும் என்று சொல்லுவதிலே பெருமிதம் அடைகிறோம். ஆனால், சில நேரங்களில் நன்கு அறிமுகமானவர்களிடம் கூடத் தெரியாதவர்களைப் போல நடந்து கொள்கிறோம். விடியும் என்ற நம்பிக்கையுடன் விரைந்து செயல்பட்ட மரியாளுக்கு (யோவா 20:1), இயேசு

கிறிஸ்து உயிர்த்தெழுவார் என்று நன்கு தெரிந்திருந்தும், அவர் உயிர்த்தெழுந்த பிறகும் அவர் அவரைத் தெரிந்து கொள்ளவில்லை. தெரியாமலிருப்பது தவறல்ல. தெரிந்திருந்தும் தெரியாது என்று சொல்லுவது துணிகரம். விடியலுக்காகக் காத்திருக்கும் காவலரைப் போல (திப 130:6), நீரோடையை ஆர்வமாக நாடும் கலைமானைப் போல (திப 42:1), இயேசுவின் அடக்கம்பண்ணப்பட்ட உடலை ஆர்வமாகத் தேடி அலைகிறார் (யோவா 20:13). இயேசு கிறிஸ்துவின் உடல் அடக்கம் செய்யப்பட்டதைத் தன் சொந்த கண்களால் கண்ட மரியா அவரது உடலைக் காணாமல் பதட்டப்படுகிறார். புரட்டப்பட்ட கல், திறக்கப்பட்ட கல்லறை, ஒதுக்கி வைக்கப்பட்ட துணிகள் இவை அனைத்தையும் கண்ட மரியா அவரை யாரோ எடுத்துக்கொண்டு, திருடிச் சென்றுவிட்டார்கள் என நினைத்து நிலைகுலைந்து நிற்கிறார் (யோவான் 20:2). அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை (வ 2), அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை (வ 13) என்று சொல்லுவது ஆச்சரியத்தைத் தருகிறது. தெரிந்திருந்தும் தெரியாமல் இருக்கும் மரியா ஓர் ஆச்சரியக்குறியா? அல்லது கேள்விக்குறியா? ஏனெனில், இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படும்போது, சிலுவையின் அருகே நின்று கொண்டிருந்தார் (யோவா 19:25). அவளிடமிருந்து இயேசு ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார் (லூக் 8:2). அநேகம் பெண்கள் தூரத்திலே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள் (மத் 27:55). அவர்களில் மரியாவும் ஒருவர். இயேசுவுக்குப் பேதுரு படகைக் கொடுத்தார் (லூக் 5:13) யோசேப்பு கல்லறையைக் கொடுத்தார் (லூக் 23:53). இவரோ தன்னுடைய உடைமைகளை, ஆஸ்திகளைக் கொடுத்து இயேசுவோடு ஊழியம் செய்தார் (லூக் 8:3). வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்த பின்பு மகதலேனா மரியாவுக்கு முதல் தரிசனமானார் (மாற் 16:9). யாருக்கும் கிடைக்காத மிகச் சிறப்பான வாய்ப்பு இது (First experience is the best experience). உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்ட முதல் சாட்சி. மரியாவுக்கு எல்லாம் தெரியும். ஆனால் அவர் தெரியாது என்று சொல்வது வியப்பைத் தருகிறது. பரீட்சையைக் கண்டு நடுங்கும் மாணவி படபடப்பின் காரணமாகத் தெரிந்த விடையைக் கூட எழுத முடியாமல் திகைப்பில் தடுமாறுவது போல மரியாளின் நிலை இருக்கிறது. யோவா 20:2இல் எங்களுக்குத் தெரியாது என்று பன்மையில் சொன்ன அவர் இப்போது எனக்குத் தெரியாது (யோவா 20:13) என்று சொல்வது, அவர் இயேசுவின் சரீரத்தைக் காணவில்லை என்று உறுதி செய்கிறாளே தவிர உயிர்த்தெழுந்தார் என்று உறுதி செய்யவில்லை. உயிர்த்தெழுந்தார் என்று

திடமாய்ச் செயல்பட வேண்டியவர் தெளிவில்லாமல், தெரியாமல் தேர்ச்சி பெற்றார். இயேசுவோடு இருந்த பேதுரு அவரோடு உண்டு, உறங்கி, ஊழியம் செய்து அவருக்கு என்னவெல்லாம் நேரிடும் என்பதை நன்கறிந்த அவர் மூன்று முறை இவர் யாரென்று எனக்கு தெரியாது எனச் சொல்லுகிறார் (மத் 26:70-74). நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது (மத் 26:70), அறியேன் (மத் 26:72), அந்த மனுஷனை நான் அறியேன் என்று சொல்லி சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினார் (மத் 26:74) இப்படித் தெரிந்தும் பயத்திலே தெரியாமலிருந்த அநேகரை இயேசு பேராற்றல்படுத்துகிறார்.

## *2. புரிந்தும் புரியாதிருந்தவரைப் புரிந்துகொள்ளும் படியாய்ப் பேராற்றல்படுத்தும் ஆண்டவர்:* (யோவா 20:9)

தெரிந்து கொள்ளுவதற்குப் பேராற்றல்படுத்தும் ஆண்டவர் புரிந்து கொள்ளுவதற்கும் பேராற்றல்படுத்துகிறார் ஒரு விஷயத்தை பற்றி தெரிந்து கொள்ளுதல் என்பது வேறு. தெரிந்திருக்கும் விஷயத்தைப் புரிந்து கொள்ளுதல் என்பது வேறு. கண்ணில் படுவது தெரிதல். மனதில் உள்வாங்குவது புரிதல். ஒரு வி யத்தை புரிந்து கொள்ளுதல் என்பது தெரிந்து கொள்ளுதலின் அடுத்த படிநிலை. எடுத்துக்காட்டாக, ஒரு சிறுவனிடம் சூரியனைத் தெரியுமா என்றால் அவனது விடை தெரியும் அல்லது தெரியாது என்பதாகத்தான் இருக்கும். ஆனால், புரிந்து கொள்ளுதலில் பலவித பதில்கள் வர வாய்ப்பு உண்டு. சிறுவனிடம் சூரியனைப் பற்றி என்னவெல்லாம் தெரியும் என்றால், அவன் சொல்லும் பதிலிலிருந்து, அவன் எந்த அளவிற்கு சூரியனைப் பற்றி புரிந்து கொண்டிருக்கிறான் என்பது தெரியவரும். உதாரணத்திற்கு,

1. சூரியன் ஒரு நெருப்புக்கோளம் என்றால். அது சரியாகப் புரிந்து கொள்ளுதல்.
2. எதனால் அந்த நெருப்பு என்பது தெரியாது என்றால் அது புரியாதிருத்தல்.
3. சூரியன் உதிக்கும் போது சிவப்பாக இருக்கும். ஆனால் ஏன் என்று தெரியாது என்றால் அரை குறையாகப் புரிந்து கொள்ளுதல்.

புரிதல் இல்லையென்றால் உறவில் விரிசல் தானாகவே வந்துவிடுகிறது. இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்து கொள்ளவில்லை (யோவா 20:9). இயேசு, தாம் வாழ்ந்த போது, தாம் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவேன் என்பதை பல முறை சீடர்களுக்கும் சொல்லி இருந்தார். ஆனால், ,சீடர்களோ, மரியாவோ அதைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. மரியாவின் பக்குவப்படாத மனம் பிரச்சினைகளில் சிக்கித்

தவித்த போது புத்தி தடுமாறுகிறது. வேதனை, விரக்தி என எல்லா உணர்ச்சிகளும் அவரை ஆட்டிப்படைக்கின்றன. சீடர்கள் அவரை புரிந்து கொள்ளவில்லை என அவர் நினைத்தது எவ்வளவு பெரிய தவறு. அவர் தான் சீடர்களைப் புரிந்து கொள்ளமுடியாத நிலையில் இருந்தார். புரிந்து செயல்பட வேண்டியவர் புலம்பி நிற்கிறார். இயேசுவை நன்றாக அறிந்த இந்த மரியா ஆண்டவரைத் தோட்டக்காரன் என்று தவறாகப் புரிந்து கொள்ளுகிறார் (யோவா 20:15). புரிந்து கொள்ளுதல் என்பது Understanding. தவறாகப் புரிந்து கொள்ளுதல் என்பது Misunderstanding. சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றால் அங்குத் தவறான புரிந்து கொள்ளுதலுக்கு வழிவகுக்கிறது. உயிர்தெழுந்தவரைப் புரிந்தும் புரியாதவரை ஆற்றல்படுத்தும் ஆண்டவர் அவருக்குப் பல புரியாத புதிர்களை புரிய வைத்தார்.

இந்த உலகத்தில் பெற்றோர் பிள்ளைகள் என இணைந்து வாழ்ந்து கொண்டிருந்தாலும் குடும்பங்களில் இன்னும் புரிந்து கொள்ளாத நிலைமையே நீடிக்கிறது. பல நேரங்களில் தவறான புரிந்து கொள்ளுதலுக்கு அது வழி நடத்துகிறது. அது தான் தலைமுறை இடைவெளி (Generation gap). புரிதல் இருக்கும் இடத்தில் பிரிவிற்கு இடமே இல்லை புரிதலில் தான் அன்புப் பூ அழகாய் மலர்கிறது. மறைநூல் ஆதாரங்களைக் கொடுத்திருந்தும் அதைச் சரியாய்ப் புரிந்துகொள்ளாத நிலைமையில் ஆண்டவர் அவரோடு நேரடியாகப் பேசி பேராற்றல் படுத்துகிறார்.

### *3. அறிந்தும் அறியாதிருந்தவரை அறிவிக்கப் பேராற்றல் படுத்தும் ஆண்டவர்:* (யோவா 20:14,17)

தெரிந்தும் தெரியாத, புரிந்தும் புரியாத மரியா இப்போது அறிந்தும் அறியாதவராக இருக்கிறார். இரண்டு தூதர்கள் அவரை நோக்கி அம்மா ஏன் அழுகிறீர்? என்றார்கள் (யோவா 20:13). அதற்கு அவர் என் ஆண்டவரை எடுத்துக் கொண்டுபோய் விட்டார்கள் என்கிறார். இயேசு நிற்கிறதை கண்டும் அவரை இயேசு என்று அறியாத அவல நிலை (யோவா 20:14). மாடு தன் எஜமானனையும் கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும் இஸ்ரயேலோ அறிவில்லாமலும் என் மக்கள் உணர்வில்லாமலும் இருக்கிறார்கள் (ஏசா 1:3). ஆகாயத்திலுள்ள நாரை முதலாய் தன் வேளையை அறியும் காட்டுப்புறாவும் கொக்கும் தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும் என் மக்களோ ஆணடவரின் நியாயத்தை அறியார்கள் (எரே 8:7) எனத் தீர்க்கதரிசிகள் புலம்புகிறார்கள். ஏனெனில், மிருகங்கள் பறவைகள் தங்கள் படைப்பாளரை அறியும் போது மனிதர்கள் ஆண்டவரைஅறிந்து

கொள்ளாமல் இருப்பது வேதனையை அளிக்கிறது. அருகிருந்தும் உடனிருப்பவரை யார் என்று அறியாமல் மரியா அழுகிறார். முதலில், மரியார் இயேசுவை அடையாளம் காணவில்லை. ஆனால் அவரைத் தோட்டக்காரர் எனத் தவறாக எண்ணினார். ஆண்டவரை அறிந்து அறிவாளியாய்ச் செயல்பட வேண்டியவர் அஞ்சி நிற்கிறார். அன்னியோன்யமாயிருந்த இயேசுவை அந்நியர் போல நடத்துகிறார். அவர் ஏன் அவரை அடையாளம் காணவில்லை? என்று சொல்லப்படவில்லை. ஒருவேளை அவர் உயிர்த்தெழுந்த இயேசுவை எதிர்பார்க்காமல் இருந்திருக்கலாம். மரியாளுடைய கண்கள் இன்னும் இயேசுவை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ஆனால் அவருடைய காதுகளுக்கு அவர் பெயரைக் கூப்பிடுவது தெரிந்தது. பொதுவாக, கண் பார்ப்பதில்லை, கண் மூலமாக மனம் பார்க்கிறது. காது கேட்பதில்லை, காது மூலமாக மனம் கேட்கிறது. எந்தவொரு தாக்கமும் உடல் மூலமாக மனதை அடைந்தால்தான் அதற்கு புதுப்புது அனுபவங்களும் மாற்றங்களும் ஏற்படும். இயேசு தமது ஆடுகளைப் பெயர் சொல்லி அழைக்கும் நல்ல மேய்ப்பர். அவர் ஒவ்வொருவரையும் அறிவார், அவர்களும் அவரை அறிவார்கள் (யோவா 10:3-5,14,27). அறிந்திருந்தும் அஞ்சியவரை ஆண்டவர் அவரது பெயர் சொல்லி அழைத்து ஆற்றல்படுத்துகிறார். கண்ணதாசன் இறைவனை அறிகின்ற அனுபவத்தை பின்வரும் வரிகளில் விளக்குகிறார்,

அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!
அனுபவித்தேதான் அறிவது வாழ்வெனில்
ஆண்டவனே, நீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் கொஞ்சம் அருகினில் வந்து
அனுபவம் என்பதே நான்தான் என்றார்.

செம்மண்ணும் சாணமும் கலங்கிய நிலையில் உள்ள பாத்திரத்தில் கிடக்கும் நாணயத்தை நம்மால் பார்க்க இயலுமா? நாம் நாணயத்தைப் பார்க்க வேண்டுமென்றால் பாத்திரத்தில் உள்ள தண்ணீர் கலங்கிய நிலையில் இருக்கக்கூடாது. அத்துடன் தண்ணீரும் அலைகளின்றி இருக்கவேண்டும். அது போலவே இறைவனைத் தரிசிக்க ஆயத்தமான உள்ளமும், அமைதியான சூழலுமே உதவி செய்ய முடியும். தெரிந்து புரிந்து கொண்ட விஷயங்கள் மரியாவின் மனதில் இப்போது நன்கு பதிந்தது. இவ்வுலகின் உடல் சார்ந்த அனுபவங்களை, உணர்வுகளாய் நாம் அடுத்த நிலைக்குக் கொண்டு செல்லும் போது மட்டுமே அவைகள் உயிரின் மேம்படுதலுக்கு

உதவுகிறது. எனவே அனுபவம் (experience) முக்கியம். ஒருவன் பசி என்பதை தெரிதலுக்கும், உணர்ந்து தெரிதலுக்கும் வேறுபாடு உள்ளது. உணர்ந்து தெரிந்தவன் பிறர் பசித்திருக்கும் போது உதவ முற்படுவான். வெறும் தெரிலோடு நின்றுவிட்டவனிடம் இந்த உந்துதல் இருக்காது. தெரிதலால் பெற்ற அறிவையும் அனுபவத்தால் பெற்ற அறிவையும் அதன் அடுத்த நிலையாக உணர்ந்து தெளிதலுக்கு கொண்டுபோகும்போது மட்டுமே உயிரின் மேம்படல் நடக்கிறது. புரிந்து கொண்டும் அறியாமலிருப்பது அறியாமையே. முதலில் தெரியாமல், அறியாமல் சீடர்களிடம் இயேசுவின் உடலைக் காணவில்லை என அறிவிக்க ஓடின மரியா (யோவா 20:2) இப்போது உயிர்த்தெழுந்த இயேசுவைத் தரிசித்து, உரையாடி, தெரிந்து, புரிந்து, அறிந்து நற்செய்தி அறிவிக்க ஓடுகிறார் (யோவா 20:18). எப்படிப்பட்ட பேராற்றல் இது! முதலில் அறியாமையின் ஓட்டம் இப்போது அறிந்த உண்மையை அறிவிக்க ஓட்டம். ஆண்டவர் அவரைப் பேராற்றல்படுத்தியதின் விளைவே இது. யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற திருமூலரின் வார்த்தைகளுக்கிணங்க, தான் பெற்ற தெளிவை மற்றவர்களுக்கும் பறைசாற்றினார். அதனால் தான் அவர் திருத்தூதுவர்களுக்கெல்லாம் திருத்தூதுவர் (Apostle of the apostles) என்று அழைக்கப்பட்டார். தெரிந்து புரிந்து அறிந்த மரியா நற்செய்தியை அறிவிக்க விரைந்ததுபோல, நம் சான்று பின்வரும் பாடலைப் போல அமைந்திருக்கட்டும்.

அழைப்பின் குரல் கேட்டேன்-என்
ஆண்டவர் என உணர்ந்தேன்
அருகினில் தயங்கி நடை பயின்றேன்
பின்னே வா என முன் சென்றார்

அறிவில் குறைந்தவன் நான் அன்றோ
அதைத் தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன்
அறிந்தவர் செருக்கினை அகற்றிடவே!

எனவே, தெரிந்து, புரிந்து, அறிந்து உயிர்த்தெழுந்த ஆண்டவரின் நற்செய்தியை அறிவிக்க நம்மை அவர் பேராற்றல்படுத்துவாராக!

முனைவர் **சோபனா கின்சன் பெல்**

01-05-2022

உயிர்ப்புக்குப் பின்வரும் இரண்டாம் ஞாயிறு

# உயிர்த்த ஆண்டவரோடு திருமறையை மீள்படித்தல்
## RE - READING THE SCRIPTURE WITH THE RISEN LORD

| | |
|---|---|
| 2 குறி 34:29-33 | திப 8:26-40 |
| திபா 19:7-14 | லூக் 24:13-27 |

**“மேலும் மோசே முதல் இறைவாக்கினர் வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார்”** (லூக் 24:27).

படித்தல் என்பது ஒரு கலை. பள்ளியில் பாடங்களைத் திரும்பத் திரும்பப் படிக்கிறோம். இதனால் அறிவு வளருகிறது. பின் பிற பாடங்களோடு ஒப்பிட்டுப் படிக்கிறோம். இதனால் அறிவு விசாலமாகிறது. மீண்டும் படித்து தேர்வு எழுதுகிறோம். இதனால் அறிவு நிரூபணமாகிறது. படித்தல் என்னும் கலையில் மீள்படித்தல் அல்லது திரும்பப் படித்தல் என்பது இக்காலகட்டங்களில் பிரபலமாகி வருகிறது. கிறிஸ்தவர்களாகிய நமக்கு திருமறையைப் படித்தல் என்பது புதிதான ஒன்றுமல்ல. நான் திருமறையை நூறு முறைக்கும் மேல் படித்துவிட்டேன் என்று சொல்லும் பலரை நாம் காணமுடியும். ஒரு குறிப்பிட்ட சூழலில் சொல்லப்பட்ட வார்த்தைகள், இன்றைய சூழலில் புரிந்து கொள்வதற்கு மீள்படித்தல் அவசியமாகிறது.

திருமறை பல்வேறு கண்ணோட்டங்களில் படிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பெண்ணியப் பார்வையில் திருமறையைப் படித்தல், தலித் மக்கள் பார்வையில் படித்தல் போன்ற மீள்படிக்கும் நுணுக்கங்கள் திருமறையை அவர்களுடைய வாழ்வியலுக்குப் பொருத்தமுடைய தாக்குகிறது. லூக் 24:13-27 வரையுள்ள வசனங்கள் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை அறிய இயலாத நிலையிலிருந்த எம்மாவு சீடர்களுடன் உயிர்த்த ஆண்டவர் அவர்கள் அறிந்த திருமறையை மீண்டும் நினைவூட்டி உயிர்த்தெழுதலை உணரச் செய்த நிலையை அறிவிக்கிறது. திருமறை எல்லாக் காலத்திற்கும் உரியது. உயிர்த்த ஆண்டவருடன் திருமறையை நாம் மீள்படிக்கும்போது திருமறை நம் வாழ்வின் அனுபவமாகிறது. நற்செய்திப் பகுதியின் அடிப்படையில், உயிர்த்த ஆண்டவருடன் திருமறையை நாம் மீள்படிக்கும்போது நாம் பெற்றுக்கொள்ளும் அனுபவங்களைச் சிந்திப்பது நம்முடைய ஆன்மிகத்திற்கு நன்மை பயக்கும்.

## *1. கடிந்து எச்சரிக்கிறது :*

இயேசு அவர்களை நோக்கி: அறிவிலிகளே! இறைவாக்கினர் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே எனக் கூறினார் (லூக். 24:25).

திருமறை நம்மை நமக்குக் காட்டும் கண்ணாடி. நம் வாழ்க்கைச் சூழலில் திருமறையை மீள்படிக்கும்போது எச்சரிக்கப்படுகிறோம், கடிந்துகொள்ளப்படுகிறோம், உணர்த்தப்படுகிறோம். திருப்பாடகர் தாவீது ஆண்டவரின் திருச்சட்டங்களால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன் என்கிறார் (திபா 19:11). இயேசு கிறிஸ்துவிடம் ஒரு பெண்ணைக் கொண்டு வந்து இப்பெண் கல்லெறிந்து கொல்லப்படவேண்டியவர். நீர்என்ன சொல்லுகிறீர்? என்று கேட்டபோது, இயேசு குனிந்து தனது விரலினால் தரையில் எழுதினார். வேத அறிஞர்கள் இந்தப் பகுதியை விளக்கும் போது அவர் தரையிலே எழுதியதைப் பார்த்தவர்கள், அவர்கள் தம் பாவங்களை எழுதியிருக்கக் கண்டார்கள் என்று விளக்குகிறார்கள். அவர்கள் திரும்பவும் அவரை விடாமல் கேட்டுக்கொண்டிருந்ததால், அவர் நிமிர்ந்து பார்த்து உங்களுக்குள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மீது கல்லெறியட்டும் என்று கூறினார். அதைக் கேட்ட அனைவரும் மனச்சாட்சியில் கடிந்து கொள்ளப்பட்டுத் திரும்பிச் சென்று விட்டார்கள் (யோவான் 8:9). இறைவார்த்தைகள் நமது தவறுகளை உணர்த்தி, நம்மைக் கடிந்து எச்சரிக்கிறது. சீடர்கள் இயேசு கிறிஸ்து மரித்து உயிருடன் எழுந்திருக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தும் அதனை நினைவில் கொள்ளாதவர்களாய், நம்ப இயலாதவர்களாய் இருந்தார்கள். மத் 28:62, 63-ல் இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்து அடக்கம் செய்யப்பட்ட பின்பு தலைமைக்கொரு மற்றும் பரிசேயர் பிலாத்துவினிடத்தில் வந்து இயேசுவின் கல்லறைக்குக் காவல் வைக்கவேண்டும் என்று கேட்டனர். ஏனெனில், மூன்று நாளைக்குப் பின் நான் எழுந்திருப்பேன் என்பதை நினைவூட்டினர். இயேசுவின் எதிராளிகளுமாயிருந்த தலைமைக் குருவும் பரிசேயரும் இயேசுவின் உயிர்தெழுதலைக் குறித்துக் கொண்டிருந்த ஞாபகம் இயேசு கிறிஸ்துவின் சீடர்களுக்கு இல்லாதிருந்தது. எனவே, இயேசு அவர்களை அறிவிலிகளே! மந்த உள்ளத்தினரே! என்று கடிந்து கொள்ளுவதைக் காணமுடிகிறது. 2குறி 34:14-யைத் தொடர்ந்துள்ள வசனங்களில் எருசலேம் தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டபோது திருச்சட்டநூல் கண்டெடுக்கப்பட்டதையும் அப்புத்தகத்திலுள்ளவைகளை அரசனாகிய யோசியாவுக்கு முன்பதாக வாசித்து காட்டப்பட்டபோது அரசன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு தங்கள் வாழ்வின் அவல

நிலையையை உணர்ந்ததையும் காணமுடிகிறது. திருமறை நம் தவறுகளை உணர்த்தி, கடிந்து எச்சரிக்கிறது. உணர்வடைந்து, வாழ்வு பெற அழைக்கப்படுகிறோம். அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியை கடினப்படுத்துகிறவன் சகாயமின்றி சடுதியில் நாசமடைவான் (நீமொ. 29:1)

### *2. கடினமானவைகளை விளக்குகிறது:*

மோசேமுதல் இறைவாக்கினர்வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார் (லூக் 24:27).

திருமறையை நாம் மீள் படிக்கும்போது நம்மால் புரிந்துகொள்ள இயலாத, கடினமான காரியங்களை நம்மால் விளங்கிக்கொள்ளமுடியும். திருமறையை விளக்க சிறந்த நூல் திருமறையே. திருமறையை புரிந்துகொள்ளும்படியாய் நாம் பல விளக்கவுரைகளைப் பயன்படுத்தினாலும் திருமறையை திருமறை வசனங்களைக் கொண்டே விளங்கிக்கொள்வது சிறப்பானது. திருமறையைப் படிக்க, ஆராயப் பயன்படுத்தப்படும் பல்வேறு முறைகளில் ஒன்று Inductive Study Method ஆகும். அதாவது, திருமறை வாசனங்களை மீண்டும் மீண்டும் படிப்பதன் மூலம் அந்த வசனங்கள் கூறும் உண்மைச் செய்தியை விளங்கிக்கொள்வதே இம் முறையின் சிறப்பு. எசா 34:16 இவ்விதமாக கூறுகிறது, ஆண்டவரின் புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும். நம்மால் விளங்கிக்கொள்ள முடியாத நிலையில் கடினமானவைகளை விளக்கும்படியாய் கடவுள் துணையை தருவார். உயிர்த்த ஆண்டவர் எம்மாவூர் சீடர்களுக்கு விளக்கிக் கூறுகிறார் (லூக் 24:13-35). திப 8:26-40 வசனங்களில், எத்தியோப்பிய அரசி கந்தகியின் மந்திரியும் நிதி அமைச்சருமான எத்தியோப்பியன் எசாயா இறைவாக்கினர் நூலைவாசிக்க, கர்த்தருடைய தூதனால் அவரிடம் அனுப்பப்பட்ட பிலிப்பு, நீர் வாசிப்பதன் கருத்து உமக்கு புரிகிறதா? என்று கேட்க, ஒருவன் எனக்கு விளக்கிக் கூறாவிட்டால் எனக்கு எப்படித் தெரியும் என மந்திரி கூற, பிலிப்பு அவருக்கு விளக்கிக் கூறுகிறார்.

### *3. கடமையைச் செய்யத் தூண்டுகிறது:*

அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். அவர்கள் வழியில் நிகழ்ந்தவற்றையும் அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கும்போது அவரைக் கண்டுணர்ந்து கொண்டதையும் அங்கிருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார்கள் (லூக் 24:33-35).

திருமறையை நாம் மீள் படிக்கும்போது நம்முடைய கடமையைச்செய்ய தூண்டப்படுகிறோம். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் குறித்து திருமறையில் செல்லப்பட்டிருப்பதை, இயேசுவின் மூலம் அறிந்துகொண்ட எம்மாவுர் சீடர்கள் எருசலேமுக்குத் திரும்பிச் சென்றனர். எருசலேமில் இயேசுவின் உடலைக்காணவில்லை, அவருக்கு என்ன நடந்ததோ என்று அறியாமல் அங்கலாய்த்துக்கொண்டிருந்த இயேசுவின் சீடர்களிடமும் மற்றவர்களிடமும் இயேசு உயிர்த்தெழுந்து விட்டார் என்ற செய்தியை அறிவிக்க வேண்டும் என்ற கடமையுணர்வு அவர்களை உந்தித்தள்ளியது. எருசலேமிலும் உலகெங்கும் இயேசுவை உயிர்த்தெழுந்த ஆண்டவராய் அறிவிக்கவும், பாடுகளைச் சந்திக்கவும், சிலுவை சுமக்கவும் இயேசுவுக்காய் திருப்பணியாற்றுவதே தங்கள் கடமை என உணர்ந்து முன்னேற சீடர்களால் முடிந்தது. திப 8:36-38 வசனங்களில், எத்தியோப்பிய அரசி கந்தகியின் மந்திரியும் நிதி அமைச்சருமான எத்தியோப்பியன் எசாயா தீர்க்கதரிசனப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளை பிலிப்புவால் அறிந்துகொண்ட போது திருமுழுக்கு பெற்றுக்கொண்டார். 2 குறி 34:14-யைத் தொடர்ந்துள்ள வசனங்களில் எருசலேம் தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டபோது திருச்சட்டநூல் கண்டெடுக்கப்பட்டது. அப்புத்தகத்திலுள்ளவைகளை அரசனாகிய யோசியா வாசிக்கக் கேட்டபோது அரசன் தன் கடமையை உணர்ந்து திருச்சட்டங்களை மக்களுக்கு அறிவித்து, ஆண்டவருடன் உடன்படிக்கை செய்துகொண்டதோடல்லாமல் நாட்டில் உள்ள விக்கிரகங்களை அகற்றி தேசத்தைத் தூய்மைபடுத்தினார். திருமறையை நாம் மீள்படிக்கும்போது, கடிந்துஎச்சரிக்கப்படுகிறோம், உணர்த்தப்படுகிறோம், கடினமானவைகளை விளங்கிக்கொள்ளுகிறோம், புரிந்துகொள்ளுகிறோம், கடமையைச்செய்ய தூண்டப்படுகிறோம், உந்தப்படுகிறோம். திருமறையை மீள் படிக்கும் அனுபவம் நம்மில் வளரட்டும்.

அருள்திரு. M. **இம்மானுவேல் கின்சன் பெல்**

01-05-2022

**உலக உழைப்பாளர் நாள்**

# தச்சனாகிய யோசேப்பு

**JOSEPH THE CARPENTER**

தொநூ 1:26-2:3 | 2தெச 3:6-15
திபா 15 | யோவா 5:1-10

**"..... உங்களுள் எவருக்கும் சுமையாய் இராதபடி, இராப்பகலாய்ப் பாடுபட்டு உழைத்தோம்"** (2தெச 3:8).

உலகப் புகழ்பெற்ற விஞ்சானிகளில் ஒருவர் தாமஸ் ஆல்வா எடிசன். இவர் தம் ஆய்வுகூடத்திலேயே அதிக மணிநேரம் செலவழித்தார். ஒருநாள் ஆய்வு கூடத்துக்கு வருகிறார் அவரின் ஆய்வுகூடம் பற்றி எரிகிறது. தம் உழைப்பு எல்லாம் பற்றி எரிகிறதே என்று கொஞ்சம் கூட பதறாத எடிசன் மனைவியை அழைத்து வந்து காட்டுகிறார். வாழ்நாளில் இப்படி ஒரு நெருப்பை பார்க்கவில்லையே பார் என்கிறார், மனைவியோ பதற்றத்துடன் "என்னங்க உங்கள் கண்டுபிடிப்புகள் நெருப்பால் அழிகிறதே." அதற்கு அவர் எரிந்து முடிந்த ஆய்வு கூடத்தில் சாம்பலுக்குள் இடையே கருகி போகாமல் இருந்த தம் நிழல் படத்தை எடுத்து மனைவியிடம் காட்டி விட்டு பார்த்தாயா, "இந்த நெருப்பு என்னை அழிக்க முயிவில்லை" என்றாராம். எடிசனை இயற்கை தடுத்தது, சூழல் தடுத்தது. ஆனால் இவரின் கடின உழைப்பை யாரும் தடுக்க முடியவில்லை...., எந்த சமூகம் தூக்கி எறிந்ததோ அவர்கள் முன் தம் உழைப்பால் உயர்ந்து காட்டினார்... இவ்வாறு உழைப்பால் உயர்ந்த உன்னதமான மனிதர் புதிய ஏற்பாட்டு யோசேப்பு. தச்சு தொழிலை செய்து தம் குடும்பத்தை சிறப்பாக நடந்து, இயேசு கிறிஸ்துவை இந்த உலகிற்கு தருகிறார்.

இவ்வுலகில் விலைமதிக்க முடியாத பெரிய சொத்து உழைப்பு. உழைப்பு மகிழ்ச்சிக்கு தந்தை. வாழ்வின் வெற்றி சுற்றுப்புற காரணிகளால் அல்ல, மாறாக நம்முடைய கடினமான உழைப்பினால் தீர்மானிக்கப்படுகிறது. வாழ்வில் வெற்றி பெற வேண்டும் என்றால், நல்ல நிலைமைக்கு உயர வேண்டும் என்றால் கடின உழைப்பு அவசியம். வெற்றி இனிப்பானது. அதன் ரகசியம் வியர்வையாகம். வாழ்வில் உயர்ந்தவர்களின் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் அனைவரும் சாதாரண நிலையில் இருந்து தம் கடின உழைப்பினால் முன்னுக்கு வந்தவர்கள். புனித பிரான்சிஸ் என்பவர் 20 மொழிகளில் கற்று

உரையாற்றினாராம். ஸ்பெயின் நாட்டை சார்ந்த டாப்லோ சாராகெட் என்பவர் வயலின் வாசிப்பதில் கெட்டிக்காரர். ஒருமுறை இவர் வியன்னாவில் நடைபெற இருந்த பெரிய நிகழ்ச்சிக்கு வயலின் வாசிக்க ஒப்புக் கொண்டார். இந்நிகழ்வில் வயலின் வாசிப்பவர்கள் மட்டுமே கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சி நடைபெற்றது. டாப்லோ சாராகெட்-ன் திறமையைப் பார்த்து வியந்தனர். அவரிடம் இந்த நிலமைக்கு வர நீங்கள் என்ன செய்தார்கள். எனக் கேட்டப் பொழுது ஒரு நாளுக்கு 14 மணி நேரம் வீதம், 45 ஆண்டுகள் உழைத்தது என்றாராம். திருமறையில் நாம் வேர்வை சிந்தி, உணவை உண்ண வேண்டும் (ஆதி 3:19), கைகளினால் நலமான வேலை செய்ய வேண்டும் (எபே 4:28) என்றும், ஆறு நாட்கள் வேலை செய்ய வேண்டும் (லேவி 23:3) என்றும் உழைப்பை குறித்து கூறப்படுகின்றது. நாம் எவ்வாறு உழைத்து செயல்பட வேண்டும் என்பதற்கு பவுலடியார் தரும் மூன்று ஆலோசனையை சிந்தனை செய்வோம்.

***1. இலவசமாய் உண்ணக் கூடாது:*** (2கொரி 3:8)

ஒரே வார்த்தையால் உருவாக்கக் கூடிய இறைவன் 6 நாட்கள் உழைத்து உருவாக்குகின்றனர். பவுலடியாரும் தம் கடினமான ஊழியத்தின் மத்தியிலும் கஷ்டப்பட்டு உழைத்து, அதன் வருமானத்தை சாப்பாட்டுக்காக பயன்படுத்துகின்றார். முகலய பேரரசின் ஔரங்கசிப் என்ற மன்னர் நாட்டையே ஆண்டாலும் தம்முடைய கை தொழில் உள்ள வருமானத்தை கொண்டு தமக்கான செலவை பூர்த்தி செய்தாராம். நாமும் உழைத்து வாழ வேண்டும். நம்முடைய வியர்வை தரையில் சிந்த உழைப்பது ஆசீர்வாதமானது. துவக்கப் பெற்றோர்கள் இலவசமாய் கிடைத்த பழத்தினால் நன்மையை அல்ல சாபத்தை பெற்றார்கள். யாக்கோபும் உழைக்காமல் கிடைத்த உணவினால் எதிர்ப்பை சம்பாதித்தான். எனவே நாமும் இலவசத்தை வேறுருத்து உழைத்து வாழுவோம்.

***2. பாரமாய் இருந்து உண்ணக் கூடாது:*** (2தெச 3:8)

"ஒருவனுக்கும் பாரமாய் இராதபடிக்கு"

சமூக சேவையால் புகழ்பெற்ற அன்னை தெரசாவிற்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. அதற்கான விமான டிக்கெட் எல்லாம் கொடுக்கப்பட்டது. ஆனால் அன்னை தெரசாவோ, இலவசமாய் விமானத்தில் பயணிப்பதை விரும்பவில்லை. எனவே அந்த விமானத்தில் கழிவறையை சத்தம் செய்ய வாருங்கள் என்று கேட்டு கொண்டார்களாம். ஒருமுறை காரைகுடி வந்த காந்தி ஒரு இல்லத்தில் தங்கி விட்டு செல்லும்போது அந்த வீட்டின் கழிப்பறையை சுத்தம் செய்து விட்டு சென்றாராம். ஆம், தாங்கள் யாருக்கும் பாரமாய் இருந்துவிடக் கூடாது எந்த நிலையினாலாவது பயனையே கொடுக்க வேண்டும் என்று இவர்கள் நினைத்தார்கள். ஆனால் இன்றைய மனதன் எலியைப் போல பிறர்

உழைப்பை சுரண்டுகிறான். மூட்டைப் பூச்சிப் போல் ரகசியமாய் உழைப்பை திருடுகிறான். கரையான் போல் பிறர் பொறுப்பினை நாசப்படுத்துகிறான். அப்படியென்றால் நாம் எப்படி இருக்க வேண்டும். நகோமி போல் இருக்க வேண்டும். வயதான காலத்தில் கூட தம் மருமக்களுக்கு பாரமாய் இராதபடிக்கு தம் உழைப்பில் நம்பிக்கை வைத்து, மருமக்களை போக சொல்கிறார். நாமும் யாருக்கும் பாரமாய் இருக்கக் கூடாது. அதுதான் சிறந்த வாழ்க்கை. நம்முடைய சகல பிராபாரத்தினாலும் பலன் உண்டு (மத் 14:23).

### *3. வேலைசெய்யாமல் உண்ணக் கூடாது:* (2தெச 3:10)

"ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடக் கூடாது"

இயேசு கிறிஸ்துவின் தந்தை (மத் 1:19) யும் குடும்பத்தை வேலை செய்து நடத்தினார். அவரின் வேலை தச்சுத்தொழில். இயேசு கிறிஸ்துவும் தச்சு தொழில் செய்பவரே. ஒவ்வொருவரும் வேலைசெய்து அதன் வருமானத்தில் உண்ண வேண்டும். 'தாலந்து உவமையில், வேலை செய்யாத, ஒரு தாலந்த பெற்றவனை எஜமான் சபிக்கின்றார்.' பவுலடியாரும் கூடாரத் தொழில் செய்து உண்ணுகிறார். ஆறு நாட்கள் வேலை செய்த பின்னரே ஆண்டவரும் ஓய்ந்தார். எனவே தான் ஆண்டவர் நம்முடைய உணவு வியர்வையினால் பெறப்பட வேண்டும் (ஆதி 3:19) என்கிறார். ஆனால் இன்று பலர் குறுக்கு வழியில் முன்னேற நினைக்கின்றனர். தேனியிடம் ஒரு பறவை ஓய்வில்லாத கடின உழைப்பின் மூலம் தேனை தயாரிக்கிறோம் ஆனால் மனிதன் அந்த தேனை உன்னிடம் இருந்து திருடிவிடுகிறான். அதற்காக வருந்தவில்லையா? அதற்கு தேனி இல்லை, ஏனெனில் மனிதன் என்னிடமிருந்து தேனை மட்டும் தான் திருட முடியும். தேனை உண்டாக்கும் உழைப்பை என்னிடமிருந்து திருட முடியாது என்றார்.

பட்டத்தின் உயரம் நூல் அளவுக்கே. மனிதனின் உயரம் உழைப்பின் அளவிற்கே. அடிமை போல் உழைப்பவன் அரசனைப் போல் உயருவான். இயேசு கிறிஸ்துவும் தச்சுத் தொழில் செய்து உயர்ந்தவர் தான். நாமும் எந்த வேலையில் இருந்தாலும் வெட்கப்படாமல் சந்தோஷமாய் செய்து வேலைகளை நிறைவேற்றுவோம். எறும்புகள் ஒரு கடின உழைப்பாளி. தாம் உறங்காமல் உழைக்கும் எனவே, மழைக்காலங்களில் அது எங்கும் செல்லாமல் கூட்டுக்குள்ளே இருந்தே சாப்பிடுமாம். எனவே உழைப்பை விடாதீர்கள். உழைப்பு இறைவன் தருகின்ற ஆசீர்வாதம். படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்தபோதுதான் நலம் பெற்றான் என்பது சான்று (யோவே 5:1-10). எனவே உழைத்து வாழ்வோம்.

அருள்திரு. P. **இராஜா ஸ்டாலின்**

08-05-2022



## உயிர்த்த ஆண்டவரால் அதிகாரப்படுத்தப்பெறுதல்

**COMMISSIONING BY THE RISEN LORD**

எரே 9:1-10 — 1திமொ 4:6-16

திபா 47 — யோவா 20:19-23

...**"உங்களுக்கு அமைதி உரித்தாகுக"** (யோவா 20:19).

உயிர்த்தெழுந்த ஆண்டவர் தாம் தொடங்கிய திருப்பணியைச் சீடரிடம் ஒப்படைக்கும் உன்னத நிகழ்வை யோவா 20:19-23 வரையுள்ள பகுதியில் படிக்கின்றோம். Commissioning என்கிற ஆங்கில வார்த்தை அதிகாரமளித்தல், கட்டளை கொடுத்தல், பொறுப்பளித்தல் போன்ற பொருள்களில் திருமறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மானிட வரலாற்றில் மாபெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தது. பவுலடிகளார் கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றும் நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும் (1கொரி 15:14) என்கிறார். கிறிஸ்துவினுடைய உயிர்தெழுதலை அநேகர் நிகழ்வு என்பார்கள், புல்ட்மான் போன்ற இறையியலாளர்கள் உயிர்தெழுதலை ஓர் அனுபவம் என்கின்றனர். இந்த உயிர்தெழுதலின் அனுபவம் சீடர்களின் வாழ்வில் பல ஆன்மிகத் தாக்கங்களை ஏற்படுத்தியது. சோர்வுற்றிருந்த சீடர்கள் உயிர்த்தெழுந்த ஆண்டவரால் அதிகாரப்படுத்தப்படுகின்றனர். என்னென்ன நிலைகளில் அதிகாரப்படுத்தல் பெற்றனர் என்பதனைச் சிந்திப்போம்.

### *1. அமைதி அருளி அதிகாரப்படுத்துகிறார்*

இயேசு கிறிஸ்துவின் மரணத்தினாலே தடுமாற்றம் அடைந்திருந்த சீடர்களைச் சந்தித்த உயிர்த்தெழுந்த ஆண்டவர் "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்றார் (யோவா 20:21). கலக்கமுற்றிருந்த சீடர்கள் புதிய ஆற்றல் பெற்றனர், மேலும் தாம் எவ்வாறு அமைதி ஏற்படுத்த தந்தையால் அனுப்பப்பட்டாரோ அவ்வண்ணமே சீடர்களையும் அமைதி ஏற்படுத்த அனுப்புவதாகக் கூறுகிறார் (யோவா 20:21). சீடர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரம் நமக்கும் அருளப்பட்டிருக்கிறது. நாம் வாழுகின்ற இந்த உலகில், பெருகிவரும் வன்முறைச் சூழலில் அமைதி ஏற்படுத்தும் கருவிகளாக வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

தூய பிரான்சிஸ் அசிசி அவர்களின் எளிய மன்றாட்டு நம்மை சிந்திக்கத் தூண்டுகிறது,

இறைவா, என்னை உமது அமைதியின் கருவியாக்கும்,
எங்கு பகைமை நிறைந்துள்ளதோ அங்கு அன்பையும்,
எங்கு கயமை நிறைந்துள்ளதோ அங்கு மன்னிப்பையும்,
எங்கு ஐயம் நிறைந்துள்ளதோ அங்கு விசுவாசத்தையும்,
எங்கு அவ நம்பிக்கை நிறைந்துள்ளதோ அங்கு நம்பிக்கையும்,
எங்கு இருள் சூழ்ந்துள்ளதோ அங்கு ஒளியையும்,
எங்கு மனக்கவலை உள்ளதோ அங்கு மகிழ்வையையும்
விதைத்திட எனக்கு அருள்புரியும்.
இம்மன்றாட்டு நம் வாழ்வில் செயல்வடிவம் பெறட்டும்.

## *2. அச்சம் அகற்றி அதிகாரப்படுத்துகிறார்*

ஆண்டவர் இயேசுவைக் கைது செய்து, துன்புறுத்தி, சிலுவையில் அறைந்து அவரது மரணத்திற்குக் காரணமான தங்களுக்கும் துன்பம் தரக்கூடும் என அச்சம் கொண்ட சீடர்கள் வீட்டுக்குள்ளேயே அடைப்பட்டுக்கிடந்தனர். (யோவா 20:19) உயிர்தெழுந்த ஆண்டவர் கதவுகள் அடைக்கப்பட்ட வீட்டுக்குள் சென்று வாழ்த்தியது மட்டுமின்றி, தம் கைகளையும், விலாவையும் அவர்களிடம் காட்டினார். கலக்கமுற்றிருந்த சீடர்கள் பயம் அகன்று மகிழ்ச்சி கொண்டார்கள் (யோவா 20:20, மத் 28:5,10, மாற் 16:6).

அமெரிக்க அதிபராக ஆபிரகாம் லிங்கன் பொறுப்பேற்ற தொடக்கத்தில் உள்நாட்டுக் கலகம் அடிக்கடி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு நாள் காலை அலுவலகத்திற்குச் சென்ற லிங்கன் சில மணி நேரங்களில் வாடிய முகத்துடன் வீட்டிற்குத் திரும்பி வந்தார். ஏதோ கடினமானவைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார் என்பதனைப் புரிந்து கொண்ட அவரது துணைவியார் அவர் அமர்ந்திருந்த இடத்தின் அருகே திருமறையை எடுத்து வைத்தார். மனைவியின் திட்டத்தைப் புரிந்துகொண்ட லிங்கன் திருமறையை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார். ஓரிரு மணி நேரங்களில் மறுபடியும் புறப்பட்டு முகமலர்ச்சியுடன் அலுவலகம் சென்றார். இதனைக் கவனித்த அவரது துணைவியார் எந்தப் பகுதியை படித்தார் எனத் தேடினார். அது யோபு 19:25 என்பதனைப் புரிந்துகொண்டார். ஆம் "என் மீட்பர் உயிரோடிருக்கிறார்" என்ற வார்த்தை அவருக்குப் புது பெலனைத் தந்தது, பயப்படாதிருங்கள் என்று சீடர்களுக்கு நம்பிக்கையூட்டிய உயிர்த்தெழுந்த ஆண்டவர் நம் அச்சத்தை மாற்றுகிறார்.

### *3. ஆவியை அளித்து அதிகாரப்படுத்துகிறார்*

இயேசு கிறிஸ்து தம் தொடர்பணிக்காகச் சீடர்களை ஆற்றல்படுத்துகையில், அவர்கள் மேல் ஊதி என்ற சொல்லாடலை பதிவு செய்கிறார் யோவான் நற்செய்தியாளர் (யோவா 20:22). இச்சொல் இயல்பாகவே தொடக்க நூலை (தொநூ 2:7) திரும்பிப் பார்க்க நம்மைத் தூண்டுகின்றது. தொடக்கத்தில் படைப்பாளராம் கடவுள் உலகின் உருவாக்கத்தின் முழுமைக்கு ஆவியை ஊதினார். இவ்விடம் மீட்பராம் ஆண்டவர் படைப்பின் மறுவுருவாக்கத்திற்கு தூய ஆவியை ஊதுகின்றார். திருமுழுக்கு யோவானின் திருக்காட்சியும் (மத் 3:11) இங்கு நிறைவேறுகிறது. தூய ஆவியை மட்டுமல்ல, தம் அதிகாரத்தையும் மீண்டும் ஆண்டவர் பகிர்கிறார். இது அருட்பணிக்குச் சீடர்களை திருநிலைப்படுத்தும் நிகழ்வாக நம் கண்முன் விரிகின்றது. மேலும் மானிட மகனாய், துன்புறும் மக்களின் சார்பாளாராய்த் தமக்குத் தந்தையால் அளிக்கப்பட்ட (மாற் 2:10) மன்னிக்கும் அதிகாரத்தைச் சீடர்களுக்கு அளித்து அவர்களின் திருப்பணிக்கு ஆயத்தப்படுத்துகின்றார். ஆம் அவர்களின் பாதையும் ஆண்டவரைப் போன்றே பாடுகள் நிறைந்ததாய் இருக்கும் என்பதையும், அவர்களின் மரணமும் குருதிச் சான்றாய் இருக்கும் என்பதையும் அடையாளப்படுத்துகின்றார். எனினும், தூய ஆவியைத் துணையாய்ப் பெற்றவர்கள் கடவுளின் பக்கம் நின்று நடுதீர்க்கும் அதிகாரத்தைப் பெறுவர் என்ற நம்பிக்கையையும் அளிக்கின்றார். பிறரின் வாழ்விற்காய்த் துன்பத்தை அனுபவிக்க துணிந்தவர்களிடம் வாழ்விற்கான அருளிச் செய்தார். தூய ஆவியாரைப் பெற்றவர்களாகிய நாமும் பிறர் வாழ்வுக்காகத் துன்பத்தை ஏற்கவும், சகிக்கவும் தயங்கக்கூடாது,

உயிர்த்தெழுந்த ஆண்டவர் அருளிய அமைதியைப் பெற்று, அச்சம் அகன்று, தூய ஆவியாரின் ஆற்றல் பெற்று வாழ கடவுள் அருள்புரிவாராக.

அருள்திரு. V. **ஜாண்சன் கில்பர்ட்**

15-05-2022

உயிர்ப்புக்குப் பின்வரும் நான்காம் ஞாயிறு

# கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் : உண்மை

**BELIEVING IN CHRIST : THE TRUTH**

விப 34:1-9 | எபே 4:7-16
திபா 119:89-96 | யோவா 17:6-19

**"ஏனெனில் நீர் என்னிடம் சொன்னவற்றையே.... என்பதையும் நம்பினார்கள்."** (யோவா 17:8).

உண்மை என்ற சொல்லின் எபிரேய வார்த்தை 'emet' என்பதாகும். இவ்வார்த்தையில் வரும் மூன்று எழுத்துகளும் எபிரேய வரிசையில் காணப்படும் Alef என்ற முதல் எழுத்தும் Mem என்ற நடு எழுத்தும் மற்றும் Tav என்ற கடைசி எழுத்தும் இணைந்து வந்து 'உண்மை' என்ற பொருளை தருகின்றன. உண்மை என்பதற்கு 'Aletheia' என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. உண்மை என்பது யூதர்களால் உயர்வாக கருதப்பட்டது. ரபிமார்கள் உண்மைக்கு பயன்படுத்திய கூற்று Truth is the seal of Holy one (உண்மை கடவுளின் முத்திரை). கடவுள் உண்மையுள்ளவர், எங்கெல்லாம் உண்மை இருக்கிறதோ அங்கெல்லாம் கடவுள் இருக்கிறார் என்று கருதினார். மானிட வாழ்வின் ஆதாரமும் அடித்தளமும் உண்மையே. உண்மையில்லையேல் குடும்பமும் வீழ்ச்சியடையும், நாடும் அழியும். இயேசு நாதர் சொல்லும்போது நானே வழி, வாய்மை, வாழ்வு என்றார். உண்மையின் உரைகல் இயேசுவே. அவரது வாழ்வு உண்மை நிறைந்ததாயிருந்ததுடன் அவரது வார்த்தைகள் உண்மையை வெளிப்படுத்தின. பிலாத்துவிடம் இயேசு கைகள் கட்டப்பட்டவராக விசாரணைக்கு நிறுத்தப்பட்டபோது பிலாத்து கேட்ட கேள்வி உண்மை என்பது என்ன? (யோவா 18:30) அப்போது இயேசுவே உண்மை என்பதை அவன் அறியாததால் நீதியைத் தவறினான், தானும் அழிந்தான். உண்மையின் உருவாகிய கிறிஸ்துவை அறிந்துகொள்வதும் அவரை அணிந்து கொள்வதும் அனுபவமாக்குவதுமே கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்வதாகும். இதனை மூன்று குறிப்புகள் வழியாகச் சிந்தனை செய்வோம்.

## *1. அருளப்பட்ட திருவார்த்தையில் நம்பிக்கை:*

"ஏனெனில் நீர் என்னிடம் சொன்னவற்றையே நான் அவர்களிடமும் சொன்னேன்." (யோவா 17:8).

திருவார்த்தை கடவுளிடமிருந்து அருளப்பட்டது ஆகும். அந்த வார்த்தையின் தொடக்கம் கடவுளே. அந்த வார்த்தையினை தந்தையிடம் கற்று மனுக்குலத்திற்கு தந்திருக்கிறார் கிறிஸ்து. இந்த வார்த்தை ஆற்றலும் அதிகாரமும் உடையதாயிருந்தது. தொடக்கநூலில் படிக்கும்போது 'தோன்றுக' என்ற கடவுளின் வார்த்தை இருள் நீக்கி ஒளியை உருவாக்கிற்று. அந்த வார்த்தை தீமைகளை அகற்றும் ஆற்றல் உடையதாயிருந்தது. திருப்பாடல் 29:4 - கர்த்தரின் குரல் வலிமையும், மாட்சியுமிக்கது என படிக்கிறோம். கடவுளிடம் பெற்ற வார்த்தை கிறிஸ்துவில் வெளிப்பட்டது. இரையாதே என்றபோது கடல் அமைதியாயிற்று. லாசருவே வெளியே வா என்ற போது மரணக்கட்டுகளிலிருந்தவர் விடுதலை பெற்று உயிருடன் கல்லறையிலிருந்து வெளியே வந்தார் (யோவா 11:43-44) சுத்தமாகு என்ற போது தொழுநோயாளி குணமடைந்தார், அந்த வார்த்தை கடவுளின் வலிமையை உலகில் வெளிப்படுத்தியது. கடவுளிடமிருந்து பெற்ற வார்த்தை கிறிஸ்துவாக மனுக்குலத்திற்கு தரப்பட்டிருக்கிறது. அதை பெற்ற அருட்பணியாளர்கள் நற்செய்தியாக இந்திய மண்ணில் கிறிஸ்துவை தந்து கல்வியினால் சமூகத்தில் ஒளியேற்றினார். அதனால் அறியாமை என்ற இருள் நீக்கப்பட்டது, அடிமைதனம் என்ற கொடிய நிலை அகற்றப்பட்டது.

### *2. அனுப்பப்பட்ட திருமைந்தர் கிறிஸ்துவில் நம்பிக்கை:*

(யோவா 17:8b) "நான் உம்மிடத்திலிருந்து வந்தேன்.... என்பதனையும் நம்பினார்கள். திருமைந்தராகிய கிறிஸ்து மானிட மீட்புக்காய் அனுப்பப்பட்டவர். இறையரசையும், இறையாட்சியையும் குறித்து பிரசங்கிக்கவும் இறையரசை இவ்வுலகில் கட்டவும் அனுப்பட்டவர்." (லூக் 4:43). யோவான் சொல்லுகிறபோது கடவுளால் அனுப்பப் பெற்றவர் கடவுளின் வார்த்தைகளை பேசுகிறார் (யோ 3:34). கடவுளை அவரது நற்பண்புகளை இவ்வுலகுக்கு காண்பிக்கவும் அனுப்பட்டவர். கடவுள் தாம் இரக்கமும், பரிவும் மிக்கவர் என்பதையும் தம் மக்களிடம் பேரன்புமிக்கவர் என்பதையும் சீனாய் மலையில் மோசேக்கு வெளிப்படுத்தினார் (விப 34:6-7). சீனாய் மலையில் கடவுள் மோசேயிடம் உடைந்துபோன கற்பலகைக்கு பதிலாக புதிதாக தம் வார்த்தைகள் அடங்கிய கற்பலகைகளை கொடுத்தார். இது கடவுள் தம் மக்கள்மேல் கொண்ட கரிசனையினை வெளிப்படுத்துகிறது. அப்படியே அனுப்பப்பட்ட திருமைந்தர் கிறிஸ்துவும் கடவுளின் தன்மையினை உலகில் வெளிப்படுத்தினார். தன்னை தேடி வந்த மக்களுக்கு வாழ்வு தந்தார். மக்கள் மேல் பரிவு காட்டினார். இயேசு நாதர்

சொல்கிறபோது, “ஆண்டவருடைய ஆவியர் என்மேல் உள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தி, சிறைப்பட்டோருக்கு விடுதலை, பார்வையற்றோருக்கு பார்வை, ஒடுக்கப்பட்டோரை விடுவிக்க என்னை அனுப்பியுள்ளார்” (லூக் 4:18). இப்பகுதியில் தான் அனுப்பட்டட நோக்கத்தை தெளிவுப்படுத்துவதுடன், தமது சீடரை திருப்பணிக்கு அனுப்பும்போது நான் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள் (மத். 28:20) என்றார். இந்த அழைப்பைப் பெற்ற அருள்பணியாளர் அருள்திரு. மீட் ஐயர் அடிமைகளுக்கு கல்வி மறுக்கப்பட்டிருந்தபோது மிஷன் பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்த ஆசிரியர்களை உற்சாகப்படுத்தி அடிமை பிள்ளைகளை பள்ளிக்கு அழைத்து வர செய்து கல்வி தந்து கடவுளின் பரிவை அவர்களுக்கு வெளிப்படுத்தி கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ள செய்தார். கிறிஸ்துவில் வெளிப்பட்ட இரக்கத்தால் அடிமைகளுக்கு வாழ்வு தந்தார். எனவே கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட கடவுள் அன்பும் இரக்கமும் உள்ளவர், அவரில் நம்பிக்கை கொள்வோம்.

### *3. ஆதரித்து மாற்றம் அருளும் கிறிஸ்துவில் நம்பிக்கை:*

(யோவா17:17) “உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பண மாக்கியருளும். உமது வார்த்தையே உண்மை.”

மாற்றம் என்பது மானிட வாழ்விற்கு ஒரு வளர்ச்சி நிலை. வார்த்தையாம் கிறிஸ்து மனித மனங்களை மட்டுமின்றி வாழ்வின் முழு பகுதியையும் மாற்றுகிறார். பவுல் எபேசு திருச்சபைக்கு எழுதுகிறபோது தலையாகிய கிறிஸ்துவை போன்று நாம் எல்லாவற்றிலும் வளர வேண்டும் என்கிறார். இங்கு கிறிஸ்துவை தலையாக கொள்வதால் ஏற்படும் வளர்ச்சி அல்லது மாற்றம் ஆகும். மோசேயின் நாள்களில் உடைக்கப்பட்ட கற்பலகைக்கு பதில் புதிய கற்பலகைகளை கடவுள் தந்தார் என்பது இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் கடவுள் எதிர்பார்த்த மாற்றம் அல்லது வார்த்தையின் வழியாக நிகழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பை தான் அறிவிக்கிறது. ஆதி. 12:1-5ல் ஆபிரகாமுக்கு கடவுள் தந்த அழைப்பு நான் காண்பிக்கும் தேசத்திற்கு போ என்பது பல தெய்வ வணக்க சூழலிலிருந்து வெளியே அழைத்து வந்த வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதை இலக்காய் கொண்டிருந்தது.

இஸ்ரயேல் மக்கள் தங்கள் வாழ்வில் மாற்றமடையவும் உயர்வதற்கும் சொல்லப்பட்ட கடவுளின் ஆலோசனை என்பது, உன் கடவுளாகிய ஆண்டவரின் குரலுக்கு செவிகொடு. அப்போது கடவுள்

உயர்த்துவார் என்பதாகும் (இணைசட்டம் 28:1-2). இங்கு இறைவார்த்தையில் நம்பிக்கை கொண்டால் மட்டுமே செவிகொடுக்க இயலும். தமஸ்கு சாலையில் கிறிஸ்துவின் குரலை கேட்ட சவுல் தன்னை அர்ப்பணித்தார். அவரது வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது (அப் 9:1-8). நாத்தான் தீர்க்கர் வழியாக கடவுளின் வார்த்தையை கேட்டு உணர்வடைந்த தாவீதின் வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது. இன்று உன் வீட்டில் தங்க வேண்டும் என்ற கிறிஸ்துவின் வார்த்தையை கேட்ட சகேயு மாற்றமடைந்தார் (லூக் 19:1-10). கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவின் வார்த்தையின்படி நடந்தால் இந்தியாஎன்றோ கிறிஸ்தவ நாடாக மாறியிருக்கும் என்கிறார் காந்தியடிகள்.

கடவுளின் வார்த்தையிலும் கிறிஸ்துவில் வெளிப்பட்ட இறைவரிலும் நம்பிக்கை கொண்டு அவரை அறிந்து கொண்டு, அணிந்து கொண்டு அவரை வாழ்வின் அனுபவமாக்கி, வாழ்வில் மாற்றத்தை சுதந்தரித்து முன்னேறுவோம். இன்றும் நாம் வாழும் சூழலில் சவால்கள், தீமைகள் பெருகி நமது நம்பிக்கையை கேள்வியாக்க துடிக்கும்போது நமது நம்பிக்கை கிறிஸ்துவிலும், இறைவார்த்தையிலும் உறுதியாயிருக்கட்டும்.

அருள்திரு. Y. **லாறன்ஸ்**

22-05-2022

உயிர்ப்புக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு

# கிறிஸ்துவின் சிந்தையோடு அருட்பணி

## MISSION WITH CHRIST'S SPIRIT

2அர 2:9-16 | திப 7:54-60
திபா 105:1-11 | மத் 28:16-20

**"…. இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" என்று கூறினார்** (மத் 28:20b).

1970-க்கு முன்பு வரை அருட்பணி என்பது திருச்சபையின் அருட்பணி இயக்கத்தின் வரலாறாகத்தான் பார்க்கப்பட்டது. அதிகமும் அருட்தொண்டர்களின் வரலாறாகவே அருட்பணி காண்பிக்கப்பட்டது. திருச்சபைகளைப் பொறுத்து அருட்பணி மாறுதலடைந்தது. ஒரு கத்தோலிக்க திருச்சபைக்கு ஒருவரை கத்தோலிக்கராக்குவதே அருட்பணியாக இருந்தது. ஆங்கிலிக்கன் திருச்சபைக்கு ஒருவரை ஆங்கிலிக்கனாக்குவது அருட்பணி. (இன்றும் பெந்தேகோஸ்தே திருச்சபைகளில் அதுதான் நடக்கிறது.) தங்களில் ஒருவராக மற்றொருவரை மாற்றுவதே அருட்பணி சிந்தையாக இருந்தது.

கிறிஸ்துவின் அருட்பணி திருச்சபையின் எல்லைகளுக் குள்ளானதோ திருப்பணி திட்டங்களுக்குள்ளானதோ அல்ல. அது கடவுளுடையது! மனிதர்களின் வாழ்வு கலாச்சாரம், பண்பாடு இவைகளோடு ஒன்றித்தது. David J Bosch சொல்கிறார், "அருட்பணி இருக்கிறது ஏனென்றால் கடவுள் மனிதரை அன்புகூருகின்றார்." ஆகவே மனிதரை கிறிஸ்துவுக்காக மனமாற்றமோ, மதமாற்றமோ செய்வதோடு அருட்பணியை சுருக்கிவிட முடியாது (Stan Nussbaum), சுவிசேஷத்தை அறிவிப்பதையும் அருட்பணிக்கு வரையறையாக்கிட முடியாது (Evangelization is mission but mission is not mercly evangelization-David Bosch) படவுளின் அருட்பணியாக இவ்வுலகில் வந்த கிறிஸ்துவின் சிந்தை இவைகளையும் தாண்டியது.

தூய மத்தேயு 20:10-20 வரையுள்ள பகுதியில் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து தாம் ஏற்கெனவே சொல்லியபடியே (மத்தேயு 26:32) தனது பதினொரு சீடர்களையும் சந்திக்க யூதர்களும் புறஜாதிகளும் கலந்து வாழும் பாலஸ்தீன எல்லைக்குள்ளான கலிலேயாவில் உள்ள ஒரு மலைக்கு வருகிறார் இங்கு அவர்களுக்கு கொடுத்த கட்டளையை ஆங்கிலத்தில் 'Great Commission' என்று அழைக்கிறார்கள். இப்பகுதிதான்

இன்று கிறிஸ்துவின் அருட்பணி சிந்தையை நாம் அறிந்துகொள்ளும்படி தரப்பட்ட திருவிவிலிய பகுதி. திருவிவிலியத்தில் எங்கும் இப்பகுதி ‘இயேசுநாதரின் சிறந்த கட்டளை’ என்று சொல்லப்படவில்லை. யார் இச்சொல்லை முதலில் பயன்படுத்தினார்கள் என்பதும் தெரியவில்லை. ஆனால் (மத் 28:16-20) இப்பகுதிக்கு இதனை உபதலைப்பாக முதலில் கொடுத்தவர் Justinian Von Welz. பின் நாட்களில்ஹட்சன் டெய்லர் இதனை பிரபலப்படுத்தினார் என்று ஒரு குறிப்பு கூறுகிறது.

இப்பகுதி பிற்சேர்க்கை என்பவர்களும் (Herneck) உண்டு. அதே வேனை இப்பகுதிதான் மத்தேயு நற்செய்தியாளரின் இறையியல் நாதம், அருட்பணி முழக்கம் (Theological Progammme) என்று கூறுபவர்களும் (I. Blank) உண்டு. இப்பகுதியில் இயேசுநாதர் கூறும் (வச 19) போங்கள், சீடராக்குங்கள், திருமுழுக்குக் கொடுங்கள், கற்பியுங்கள் போன்ற வினைச்சொற்ளை அப்படியே வார்த்தைகளாக எடுத்து செயல்படுத்தினால் அருட்பணி என்பது செயல்திட்டம் சார்ந்ததாக அமைந்துவிடும், அடிப்படையில் இயேசுநாதரின் அருட்பணி பணித்திட்டம் சார்ந்தது அல்ல. மாறாக அருட்பணி என்பது அவரின் இயல்பு, தன்மை (It is not an activity rather attribute of God) அவர் வெளிப்படுத்தும் அருட்பணி சிந்தை கற்றுக்கொடுத்து வருவது அல்ல (Missionary Vision is caught not taught) மாறாக கடவுளால் பிடிக்கப்படுவது, உள்ளான அனுபவர் அது (உதாரணம்: அன்னை தெரசா). அந்த அனுபவர் தனது சீடர்களுக்கும் ஏற்படும் படியாக இவைகளை கட்டளையாக அல்ல ஊக்குவிக்கும் வார்த்தைகளாக (word of encouragement) கூறுகிறார்.

ஆண்டவரின் அருட்பணியாக இவ்வுலகில் அனுப்பப்பட்ட அருள்நாதருக்கு ஒரு நோக்கமுண்டு, அவரது அருட்பணியின் ஆரம்பத்திலேயே அது தெளிவாக வெளிப்பட்டது. திருமுழுக்குநர் யோவானிடம் திருமுழுக்கு பெற்று, பாலைநிலத்தில் சோதிக்கப்பட்டு, பின் கலிலேயாவில் அருட்பணியை ஆரம்பித்தபோது முதன் முதலில் விண்ணரசு பற்றிய நற்செய்தியைத்தான் பறைசாற்றினார் என்று தூய மத் 4:23, லூக் 9 கூறுகிறது. பானையில் இருப்பதுதான் அகப்பையில் வரும் என்பார்கள். அதுபோல இயேசுநாதுரன் உள்ளக்கிடக்கை ‘இறையரசு’ அதனை இவ்வுலகில் உருவாக்கிட தூண்டும் முயற்சிதான் அவரது அருட்பணிகால அற்புதங்களும், போதனைகளும், இறப்பும், உயிர்ப்பும் எல்லாம். அம்முயற்சியின் தொடர்ச்சியாகவே உயிர்த்தெழுந்து விண்ணேறுமுன்னே இங்கு சீடர்களுக்கு கொடுக்கப்பட்ட அழைப்பு. இதனை Beyerhaus என்கிற இறையியலாளர் கூறும்போது, அருட்பணியின்

நோக்கம் இறையரசினை முழுமையாக ஆரம்பிப்பதுவே (mission goal is the full inaguration of God's reign) என்கிறார்.

கிறிஸ்துவின் அருட்பணி நோக்கம் இவ்வுலகில் இறையரசை உருவாக்குவது. விண்ணேறும் முன்பாக சீடர்களுடனான அவரது வார்த்தைகள் அச்சிந்தையிலிருந்து வெளிப்பட்டவையே. எனவே இறையரசைப் பற்றிய பார்வையோடு அருள்நாதரின் இவ்வார்த்தைகளை தியானிக்கும்போது கிறிஸ்துவின் சிந்தையோடு அவரது அருட்பணியில் இணைந்து பயணிக்க நமக்கு உதவியாயிருக்கும். அருள்நாதரின் மூன்று அருட்பணி சிந்தைகளை இப்பகுதியிலிருந்து நாம் இன்று தியானம் செய்வோம்.

***1. வாழ்ந்து காட்டுவது அருட்பணி*** : (மத் 28:19)

"....எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்..."

இதுவரை உங்களோடு இணைந்து இவ்வுலகில் விண்ணரசு உருவாக்கத்தில் ஈடுபட்ட நான் உங்களை விட்டு விண்ணகத்திற்கு செல்கிறேன். இனி இப்பணியை நீங்கள் ஒவ்வொருவரும் தொடர வேண்டும் என்று இவ்வுலகில் இறையரசு உருவாக்கத்தில் தமது சீடர்களிடம் வெளிப்பட வேண்டிய வாழ்க்கை முறையை 19-ம் வசனத்தில் அவர்களிடம் கூறுகிறார்,

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்." வாழ்கவே அருட்பணி அவ்வாழ்வு எப்படி இருக்க வேண்டும் என்பதை சீடர்களுக்குச் சொல்லும்போது மத்தேயு பயன்படுத்தும் கிரேக்க வார்த்தை 'poreuthentes' பொருள் எல்லைகளை தாண்டிச் செல்லுவது. இறையரசு உருவாக்கத்தில் ஈடுபடப்போகிற நீங்கள் உங்கள் சமூக, இன, கலாச்சார, துருவ எல்லைகளைத் தாண்டிச் சென்று எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் என்று தமது சீடர்களுக்கு அழைப்பு கொடுக்கிறார்.

Dietrich Bonhoeffer கூறுகிறார், எல்லா சீடர்களும் குருவை (ஈயேசுவை) தான் பின்தொடர்வார்கள். ஆனால் எல்லா சீடர்களும் ஒரே ஐக்கியத்தை சேர்ந்தவர்கள் அல்ல. (Every disciple follows the master but never every disciple is a member of the fellowship at all). இதனை வாழ்வின் காலத்திலே காட்டியவர் அவர். எல்லைகளை தாண்டி, ஐக்கியங்களை கடந்து வாழ்ந்து காட்டியவர். சமாரியர்களின் எல்லைகளுக்குச் செல்வதோ (யோவா 4) சமூகத்தால் ஒதுக்கப்பட்ட ஆயக்காரர்களின் இல்லங்களுக்குச் செல்வதோ (லூக் 19) புற பெண்களோடும் (சீரோபொனீக்கேயா), பாவிகள்

என அடையாளப்படுத்தப்பட்டோரோடும் (மாற் 14) உரையாடுவதையும் சாதாரணமாக தனது வாழ்வில் கொண்டவர் தனது சீடர்களையும் அவ்வித வாழ்வுக்கு பழக்குவிக்கிறார்.

தமிழ் நாட்டில் சென்ற ஆண்டில் புதிய ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்து சமூக நீதி அதிகமாக பேசப்படுகிறது. கல்வியில், வேலை வாய்ப்பில் சமூக நீதி பின்பற்றப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாக வெளிப்படுகிறது. ஒரே இனம் கல்வி வேலை வாய்ப்பில் அதிகம் வளருவது சமூக நீதிக்கு எதிரானது என்ற அம்பேத்காரின் வார்த்தைகள் முன்னிறுத்தப்படுகின்றன. இந்த சமூக நீதி அஸ்திபாரத்தை அன்றே தனது அரசின் அஸ்திபாரமாக தன் சீடர்களுக்கு கற்றுக்கொடுத்தவர் அருள்நாதர் இயேசு கிறிஸ்து. அவரது ஆட்சியில், அரசில் பேதங்கள் இல்லை.

அதேவேளை கர்நாடகாவில் கொப்பல் மாவட்டத்திலுள்ள மியூபூரா-வில் அமைந்துள்ள (ஆஞ்சநேயர்) புற நம்பிக்கை கோயிலில் பிறந்தநாள் பிரார்த்தனைக்கு தகப்பன் சந்துருவுடன் சென்ற 4 வயது தலித் குழந்தை (வெளியிலிருந்து வழிபடவே அனுமதி) தனக்கிருந்த அனுமதியை தெரியாதபடி எதிர்பாராதவிதமாக கோயிலுக்குள் ஓடியது ஒன்றுமறியாத அந்த பிஞ்சு. தலித் குழந்தை கோயிலுக்குள் சென்றதால் கோயில் தீட்டுப்பட்டுவிட்டது என்று அர்ச்சகர்கள் ஊர் பஞ்சாயத்தில் முறையிட குழந்தையின் தகப்பனுக்கு 25000/- ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாக செய்திதாளில் செய்தி வந்தது (இந்து திசை, செப்டம்பர் 22, 2021). இந்த 21-ம் நூற்றாண்டிலும் என்னென்ன கொடுமைகள் நடந்துகொண்டிருக்கிறது.

Klaus சொல்கிறார், இயேசு இதுவரை இவ்வுலகில் எவரும் பார்த்திராத கடவுளின் தெளிவான உருவமும் அவரது அருட்பணியுமாகும். ஏனென்றால், அவர் அருட்பணியை தமது வார்த்தைகளால் செய்கிறவரல்ல; அவர் அருட்பணியை தனக்குள்ளிருந்து, தனது அனுதின வாழ்வின் வழி பேசுகிறவர். (He speaks from within himself, from within hs daily life). நமது வாழ்விலிருந்து அருட்பணி தொடங்க வேண்டும் என்று தன்னை உதாரணமாக முன்னிறுத்தி தனது சீடர்களுக்கு கட்டளையிடுகிறார்.

இயேசு கிறிஸ்துவின் சீடராவது எளிதானது அல்ல, அவரது பாடுகளினூடான மரணத்திலும், உயிர்த்தழுதலில் பங்கெடுப்பது தான் சீடத்துவம். அப்படியான பாடுகளின் வழியான சீடத்துவத்தில் மரணம் மட்டும் நிலைத்து நின்று வாழ்ந்து காட்டிய ஆதி திருச்சபையின் ஏழு அப்போஸ்தலரில் ஒருவரான ஸ்தேவான் (தி.பணி 7:54-60) நமக்கு முன்மாதிரியாய் நிற்கிறார். மரணம் மட்டும் எவரையும் வெறுக்காதிருந்தார்

(வச 60) இறையரசின் பிள்ளைகளாய் எவரையும் ஒதுக்காமல், வெறுக்காமல் வாழ்ந்து காட்டுங்கள் என இன்று நம்மையும் அழைக்கிறார்.

**2. *வாழச் செய்வது அருட்பணி*** : (மத் 28:20)

"நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்."

எல்லைகளைத் தாண்டி எல்லோரையும் ஏற்றுக்கொண்டு இறையரசின் உருவாக்கத்தில் என்னைப் போல வாழ்ந்து காட்டுங்கள் என அருட்பணி அழைப்பு கொடுத்த இயேசு நாதர், அதே சீடர்களிடம் நீங்கள் யார் யாரிடம் இந்த நற்செய்தியை கொண்டுச் செல்கிறீர்களோ அவர்களும் இறையரசில் பங்குபெற அவர்களுக்கும் கற்பியுங்கள் என அழைப்பு கொடுக்கிறார்.

இறையரசின் அனுபவத்தில் நாம் வாழ்வதோடு முடிந்துபோவதல்ல, நமது வாழ்வு பிறரையும் அவ்வாழ்வில் பங்கடைய செய்வது / வாழச் செய்வதே அருட்பணி. இயேசு நாதர் தனது வாழ்வை மாத்திரம் இறையாட்சிக்கு தகுதியுள்ளதாக அமைத்து ஓய்ந்துவிடவில்லை. அனைவரும் அவ்வரசின் வாழ்வை பெற போதித்துக் கொண்டே இருந்தார். David J Bosch சொல்கிறார், "திருச்சபை உலகில் உள்ளோர் அனைவர் மீதும் அன்புகூரவும், சேவை புரியவும், போதிக்கவும், கற்பிக்கவும், சுகப்படுத்தவும், விடுதலைப்படுத்தவும் அனுப்பப்பட்டுள்ளது." அதுவே, அதன் அருட்பணி. எப்படியாயினும் இறையரசின் சந்தோஷத்தை வீழ்ந்து கிடப்போரும், எங்குமுள்ள ஜனங்களும் பெற்றிடச் செய்ய வேண்டும். இதுவே அருட்பணியின் அடிப்படை.

தூய மத்தேயு 28:16-20 வரையான பகுதியைப்பற்றி John Scott குறிப்பிடும்போது, "இயேசு நாதரின் இறையரசு கட்டுமானத்திற்கான அவ்வழைப்பு சமூக மற்றும் சுவிசேஷ பொறுப்புகளை கொண்டுள்ளது" என்கிறார். (Actually Great Commission was includes both social as well as evangelical Responsibility). மற்றுள்ளோரையும் இவ்வரசின் ஆளுகைக்குள் வாழச் செய்ய வேண்டும் என்கிற சமூக கடமை நமக்கிருக்கிறது. ஒருவரும் விடுபடக்கூடாது.

2அரசர்கள் 2-ம் அதிகாரத்தில் (வச 19) தீர்க்கர் எலியா விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமுன் அவரது சீடராகிய எலிசாவோடு கேட்கிறார், "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்" எலிசாவும் வாஞ்சையோடு கேட்டார், "உமது ஆவி என் மீது இருமடங்காக இருப்பதாக" என்று, அது கடினமானது என்றாலும் அதை பெற்றுக்கொள்வதற்கான வழியை காண்பித்து, தன்னைவிட இரு மடங்கு

ஆற்றலை எலிசா பெற்றி உதவினார். தனது வல்லமை தன்னோடு முடிந்து போகட்டும் என எண்ணாமல் எலிசா ஆண்டவருக்காய் இரு மடங்கு வல்லமையுடன் வாழ வழி செய்தார்.

நான் மட்டும் வாழ்ந்தால் போதும், பிறர் வாழக்கூடாது என எண்ணும் உலகில் அருள்நாதரின் சிந்தை அனைவரையும் இறையரசில் வாழச் செய்வதே, அதுவே அருட்பணி என்பதை இயேசு சீடர்களுக்கு கற்றுக் கொடுக்கிறார். அப்படியே நம்மோடு வாழ்வோரை வாழச் செய்யுங்கள் என்று நமக்கும் அழைப்பு தருகிறார்.

### 3. *வாழ்கிறார் என நம்பிக்கை கொடுப்பது அருட்பணி* :

(மத் 28:20)

“....இதோ உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்...”

இயேசு கிறிஸ்து தமது மரணத்துக்குப் பின் தாம் சொன்னபடி உயிர்த்தெழுந்தவராக கலிலேயாவின் மலையில் தனது சீடர்களுக்கு காட்சி தந்தபோது எல்லா சீடர்களும் ஒரே மனநிலையில் இல்லை (வச 17). சிலர் நம்பிக்கையோடு அவரைப் பணிந்தார்கள். சிலரோ ஐயப்பட்டார்கள், நம்பிக்கை இழந்து கலக்கமுற்றிருந்தார்கள். அவர்களோடு தன்னை வெளிப்படுத்திய இயேசு நாதர் ஒரு உறுதியை அவர்களுக்குக் கொடுக்கிறார். எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன். விண்ணகம் சென்றாலும் தூயாவியராக உங்களுடன் வாழ்கிறேன்.

வாழ்வில் நம்பிக்கை கொடுப்பது மிக முக்கியமானது. வாழ்வின் மீது நம்பிக்கை இழப்போர் எடுக்கும் முடிவு தற்கொலை. ஒவ்வொரு ஆண்டும் NEET தேர்வினால் வாழ்வில் நம்பிக்கை இழக்கும் பிள்ளைகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். சென்ற ஆண்டிலும் மூன்று பிள்ளைகள் மாய்ந்து போனார்கள். கடன் பாரங்களினால் வாழ்வில் நம்பிக்கை இழப்போர் தங்களை மாய்த்துக் கொள்கிறார்கள். ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மோடிருக்கிறார், அவர் நம்மோடிருக்கும்போது அவர் நமக்கு சிறந்ததையே தருவார் என்கிற நம்பிக்கையை நம்பிக்கை இழந்து நிற்கும் மனுக்குலத்திற்கு கொடுப்பதே அவரது அருட்பணி. அச்சிந்தையே கலிலேயா மலையில் வெளிப்பட்டது.

ஒரு ராஜா தன் குடிகளுக்கு சிறந்த நன்மையை செய்ய எப்போதும் விரும்புவது போல, நம்மோடிருந்து அவரது அரசில் நம்மை ஆளுகிறவருக்கு நமது நலமும், நன்மைகளும் முக்கியமானது. அவர் நமக்கு சிறந்ததையே செய்வார். இந்த நம்பிக்கையை இவ்வுலகின் ஒவ்வொருவருக்கும் கொடுப்பது அருட்பணி.

Amit Thomas கூறுகிறார், “இயேசு ஒவ்வொருபசியில் வாடும் மனிதனோடும், உரிமைகள் பறிபோன பெண்ணோடும, பட்டினில் இருக்கும் குழந்தையோடும், நொறுங்கிப் போனவர்களோடும் இருக்கிறார், ஒவ்வொருவரோடும் வாழ்கிறார்.” இந்த நம்பிக்கையைக் கொடுத்து இன்று இம்மண்ணில் இறையரசு உருவாக்கத்தில் முன் நிற்க வேண்டிய திருச்சபை (நாம்) அருட்பணி பாதையை விட்டு தவறி நிற்பது ஏமாற்றம் தருகிறது.

சென்ற ஆண்டில் (2021) ஒரு குறிப்பிட்ட திருச்சபையில் மிகவும் ஏழ்மையில் தகப்பனை இழந்து தாயுடன் வாழ்ந்துவந்த 22 வயது ஒரே மகன் எதிர்பாராத மின்சார விபத்தில் வேலைக்கு சென்ற இடத்தில் மரித்துப் போனான். திருச்சபை அக்கோர விபத்தை பார்த்து பதறியது, துடித்தது. ஆனால் அந்த மகனின் சரீரத்தை நல்லடக்கம் செய்ய வேறு இடம் இல்லாததால் கொஞ்சம் இடம் கேட்டபோது திருச்சபை 40000/-, 60000/- என்று பேரம் பேசியதாம், வழி இல்லாத அக்குடும்பத்தினருக்கு அருகில் வசித்த இன்னொரு மனிதர் தனது நிலத்தை மகனை அடக்கம் செய்வதற்காக கொடுத்தார். நாமும் நமது சபைகளும் இதற்கு சளைத்தவர்கள் அல்ல. இழப்புகளின் நடுவிலும் அவர் நம்மோடிருக்கிறார், நம்மோடு வாழ்கிறார் என்று ஆறுதலும், நம்பிக்கையும் கொடுக்க வேண்டிய திருச்சபை ஏமாற்றமளித்து நிற்கிறது. இன்றைய திருச்சபைகள் அருள்நாதரின் அருட்பணி பாதையை விட்டு தடம்புரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது. மறுபடியும் அருட்பணி பாதைக்கு வர ஆண்டவர் அழைக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் சிந்தை போல எல்லைகளை தாண்டி எல்லோரையும் ஏற்றுக்கொள்கிறவர்களாக வாழ்ந்துகாட்டி, அனைவரையும் நம்மைப்போல இறையரசின் அனுபவங்களில் வாழச் செய்து, அவரது விண்ணரசில் நம்மை ஆளுகிறவர் எச்சூழலிலும் அவர் நம்மோடு வாழ்கிறார். நமக்கு சிறந்ததையே தருவார் என்னும் நம்பிக்கைக் கொடுத்து இறையரசின் பிள்ளைகளாக / சீடர்களாக நாமும் வாழ்வோம் பிறரையும் வாழச் செய்வோம். அவரது அருட்பணியின் ஆசிகளை ஆண்டவர் நம்மனைவருக்கும் தருவார். ஆமென்.

அருள்திரு. J. **ஹெரால்டு அனித்**

29-05-2022

உயிர்ப்புக்குப் பின்வரும் ஆறாம் ஞாயிறு

## தூய ஆவியாரால் நடத்தப்பெறுதல்

**LEAD BY THE HOLY SPIRIT**

விப 36:1-7 உரோ 8:12-17

திபா 107:1-22 யோவா 14:25-31

**"என் பெயரால் தந்தை அனுப்பப் போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார்; நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்"** (யோவா 14:26).

கிறிஸ்தவப்பற்றுதியில் மூவொரு இறைத்தன்மையின் ஒரு அங்கமாக பார்க்கப்படும் தூய ஆவியார் படைப்பின் தொடக்கம் முதலே செயலாற்றி வருபவர் (தொநூ 1:2). தூய ஆவியார் எபிரேயத்தில் ரூவஹ் (Ruah) என்றும், கிரேக்கத்தில் ப்நியூமா (Pneuma) என்றும் அழைக்கப்படுகிறார். திருமறையில் பல பெயர்கள் தூய ஆவியாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. கடவுளின் ஆவி, ஆண்டவரின் ஆவி, கிறிஸ்துவின் ஆவி, தேற்றரவாளர், துணையாளர் என்பவைகளாகும். அந்த ஒவ்வொரு பெயரும் தூய ஆவியாரின் தன்மைகளையும் செயல்களையும் வெளிப்படுத்துகிறது.

திருமறை வரலாற்றில் தூய ஆவியாரின் செயல்களை அவ்வப்போது காண்கிறோம். யோசேப்பின் வரலாற்றிலும், இஸ்ரயேலரின் விடுதலை வரலாற்றிலும், நீதித்தலைவர்கள் காலத்தில் அவர்களது செயல்பாடுகளிலும், தொடக்கக்கால அரசர்களான சவுல், தாவீது போன்றவர்களின் வாழ்விலும், இறைவாக்கினர் வழியாகவும், தூய ஆவியார் செயல்பட்டார். இயேசு கிறிஸ்துவின் விண்ணேற்றத்திற்குப்பின்பு தூய ஆவியாரின் நிரந்தரமான வழிநடத்துதலை திருச்சபையிலும், பக்தர்களின் வாழ்விலும், உலக வரலாற்றிலும் கண்டு கொண்டிருக்கிறோம். திருமறையும் தூய ஆவியரால் நடத்தப்பட்டே எழுதப்பட்டதாகும் (2திமொ 3:16). திருமறைப் பின்னணியத்தில் தூய ஆவியாரால் நடத்தப்பெறுதலைப் பற்றி தியானிப்போம்.

### *1. தூயஆவியார் திருப்பணி செய்யத் தூண்டுகிறார்* :

(விப 36:1)

திருப்பணி என்பது கடவுளுக்கு நாம் செய்யும் பணி. அது நற்செய்தி அறிவிக்கும் பணிமாத்திரமல்ல, அதோடு தொடர்புடைய பல

பணிகளை கடவுளின் திருப்பெயரின் மாட்சிக்காக செய்வதே ஆகும். அந்தியோகியத் திருச்சபையில் நோன்பிருந்து ஆண்டவரை வழிபடும் போது தூய ஆவியார் அவர்களிடம் பர்னபாவையும் சவுலையும் ஒரு தனிப்பட்ட பணிக்காக நான் அழைத்திருக்கிறேன். அந்தப் பணிக்காக அவர்களை ஒதுக்கி வையுங்கள் என்று கூறினார் (திப 13:2). பவுலடியார் 1கொரி 12:5,6 வசனங்களில் திருத்தொண்டுகளும் பலவகையுண்டு; ஆனால் ஆண்டவர் ஒருவரே. செயல்பாடுகள் பலவகையுண்டு; ஆனால் கடவுள் ஒருவரே. அவரே எல்லாரிடமும் எல்லாவற்றையும் செயல்படுத்துபவர் என்று கூறியிருக்கிறார்.

விப 36:1-7 வரையுள்ள பகுதியில் மோசே இஸ்ரயேல் மக்களிடம் ஆசரிப்புக் கூடார பணிக்காக அழைப்பு விடுத்தபோது அழைப்பைக் கேட்ட மக்கள் உள்ளார்வம் உடையோர் உள்ளுணர்வால் உந்தப்பெற்றோர் அனைவரும் முன்வந்து சந்திப்புக் கூடார வேலைக்காகவும் அதிலுள்ள அனைத்து திருப்பணிகளுக்காகவும் திருவுடைகளுக்காகவும் ஆண்டவருக்குக் காணிக்கை கொடுத்தனர் (விப 35:21). உள்ளார்வமும் திறனும் உடைய பெண்கள் அனைவரும் வெள்ளாட்டு உரோமத்தால் நெய்தார்கள் (விப 35:26). பெட்சலேலும் ஓகோலியாபுரம் மேலும் தூய அமைப்பு வேலையனைத்தையும் பெற்றிருந்த கலைஞர் யாவரும் ஆண்டவர் கட்டளையிட்டபடி வேலை செய்யட்டும் என்று மோசே மக்களிடம் கூறினார் (விப 36:1). அவர்கள் அனைவரும் ஆவியாரால் நடத்தப்பட்டு திருப்பணிக்கடுத்த பல்வேறு பணிகளைச் செய்யும்படி இறங்கினார்கள்.

இயேசு கிறிஸ்துவும் தூய ஆவியாரால் அருள்பொழிவு பெற்று பல்வேறு திருப்பணிகளைச் செய்தார். இதை நாம் லூக் 4:18,29 இல் சொல்லப்பட்ட இயேசுவின் நாசரேத் ஊர் அறிக்கையில் படிக்கிறோம். மேலும் பவுலடியார் 1கொரி 12:12 இல் உடல் ஒன்றே; உறுப்புகள் பல, உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பது போல கிறிஸ்துவும் இருக்கிறார். அவ்வாறே தூய ஆவியரால் நடத்தப்படுவர்களும் இருப்பார்கள். அவர்கள் சரீரமாகிய திருச்சபையில் பல்வேறு பணிகளை ஒற்றுமையுடன் செய்வார்கள். மேலும் 1கொரி 12:28-30 வரையுள்ள பகுதியில் திருச்சபையில் எல்லாரும் திருத்தூதுவர்கள் அல்லர், போதகர்களும் அல்லர், வல்ல செயல் செய்பவர்களாயும் அல்லர், ஒவ்வொருவரும் தூய ஆவியாரால் உள்ளார்வம் பெற்று தங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கொடைகளின் அடிப்படையில் திருப்பணி களுக்குக்கடுத்த செயல்களைச் செய்ய வேண்டும் என்று பவுல் கூறுகிறார்.

ஜாண் டி ராக்பெல்லர் தனது 33 ஆவது வயதில் உலகிலேயே பெரிய செல்வந்தர் ஆனார். உலகின் முதல்பெரும் பணக்காரராகத் திகழ்ந்த அவர் 53 ஆவது வயதில் கொடிய வியாதியால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், இவர் ஒரு ஆண்டிற்கு மேல் உயிர் பிழைப்பது கடினம் என்று கூறி விட்டார்கள். இதனால் அவர் பல இரவுகள் தூக்கமில்லாமல் இருந்தார். பால், பிஸ்கட் மட்டுமே உணவாகச் சாப்பிட்டு வாழ்ந்தார். இந்தச் சூழலில் ஒரு நாள் தூய ஆவியார் உள்ளத்தில் பேசினார். திருப்பணி செய்ய உந்தப்பட்டார். தான் கோடி கோடியாக சம்பாதித்த பணத்தில் சிறிதளவு கூட நான் மரிக்கும் போது கொண்டு போக முடியாதே, எனவே அதை இறைப்பணிக்காகச் செலவிடத் தீர்மானித்தார். தன் பணத்தில் பல ஆலயங்கள் எழுப்பினார். ராக்பெல்லர் பவுண்டேசன் என்ற மருத்துவ ஆராய்ச்சி மையத்தை நிறுவினார். இவற்றையெல்லாம் கண்டபோது அவரது உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பினது. படிப்படியாக உடல் ஆரோக்கியமும் பெற்றார். ஆவியாரால் திருப்பணி செய்யத் தூண்டுதல் பெற்ற அவர் 98 வயது வரை திருப்பணிசெய்து மரித்தார்.

### *2. தூயஆவியார் தீச்செயல்கள் செய்யாது காக்கிறார்* :

(உரோ 8:13)

நாம் தீமைகள் நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நன்மைகள் செய்ய வேண்டும் என்ற விருப்பம் உண்டு, ஆனால் நாம் விரும்பாத தீமையைச் செய்கிறோம். இப்படிப்பட்ட போராட்டம் பவுலின் வாழ்க்கையில் காணப்பட்டது. அந்த அனுபவத்தை உரோ 7:14-20 வசனங்களில் கூறுகிறார். நாம் விரும்பாத தீச்செயல்கள் செய்வதற்குக் காரணம் நம்மில் குடிக்கொண்டிருக்கிற பாவமே என்கிறார். பாவத்தின் ஆளுகைக்குக் கீழிருந்த மனிதர் இயேசுவின் பலியாகுதலில் வைக்கும் விசுவாசத்தால் விடுவிக்கப்படுகின்றனர். புத்திர சுவிகாரத்திற்கு உட்பட்டு தூய ஆவியாரால் நடத்தப்படுகின்றனர். இயேசு தூய ஆவியாரின் செயல்கள் குறித்து யோவா 16:8-13 வரையுள்ள வசனங்களில் குறிப்பிடும் போது, தூய ஆவியார் பாவம், நீதி, தீர்ப்பு ஆகியவற்றைப் பற்றி உலகின் பார்வையைத் தவறு என்று சொல்லி உண்மை வழியில் நடத்துவார். அதனால் தீய வழியினின்று காக்கப்படுவீர்கள் என்றார்.

மேலும் பவுல் உரோ 8:12-17 வரையுள்ள பகுதியில் தூய ஆவியார் அருளும் வாழ்வை பற்றி குறிப்பிடும்போது, தூய ஆவியார் உடலில் உள்ள தீச்செயல்களைச் சாகடித்து, அப்பா, தந்தையே என்று அழைக்கும் உரிமையோடு வாழ வழி நடத்துகிறார்.

தூய ஆவியால் நடத்தப்படுகிறவர்கள் புத்திரசுவிகாரத்தின் ஆவியை பெற்று கடவுளின் பிள்ளைகளாக வாழ்கிறார்கள். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே. தூய ஆவியானவர் அதற்கு நம்முடைய ஆவியுடனே சாட்சி கொடுக்கிறார். கலா 5:16-25 வரையுள்ள பகுதியில் பவுல் கூறும்போது, தூய ஆவியின் தூண்டுதலுக்கேற்ப வாழுங்கள். அப்போது ஊனியல்பின் இச்சைகளை நிறைவேற்ற மாட்டீர்கள் என்றும் தூய ஆவியின் கனியைப் பெற்று வாழ்வீர்கள் என்றும் கூறுகிறார். கிறிஸ்துவினுடையவர்கள் ஊனியல்புகளையும் அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் சாகடித்து தூய ஆவியரால் நடத்தப்பட்டவர்களாக வாழ வேண்டும் என்றும் பவுல் ஆலோசனை கூறுகிறார்.

மெதடிஸ்ட் சபை போதகர் ஜாண் வெஸ்லி ஒரு நாள் இரவு தன் அறையில் தூங்கிக் கொண்டிருந்த போது திருடன் ஒருவன் அவரது அறைக்குள் வந்து அவரிடமிருந்த கொஞ்சம் பணத்தையும் கிறிஸ்தவப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்த பெட்டியையும் திருடி எடுத்துச் செல்லும் போது ஜாண் வெஸ்லி விழித்துக் கொண்டார். திருடனை “நண்பனே” என்று கூப்பிட்டார். உடனே திருடன் நின்றான். இன்னும் எதாவது தேவைப்படுகிறது என்றால் எனக்குச் சொல், அதையும் உனக்குத் தருகிறேன் என்று கூறிவிட்டு, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி உன்னைச் சுத்திகரிக்கும் என்ற நற்செய்தியையும் கூறினார். திருடன் இந்த வார்த்தையால் உள்ளத்தில் உணர்த்தப்பட்டான். தன்னடைய திருட்டுச் செயலிலிருந்து விடுபட மன்றாடினான். அவன் தூய ஆவியாரின் துணையோடு தீச்செயல்களிலிருந்து விடுபட்டு நல்ல மனிதனாக வாழ்ந்து ஜாண் வெஸ்லியின் உதவி ஊழியராகச் செயல்பட்டார். ஆம் தூய ஆவியார் தீச்செயல் செய்யாது காக்கிறார்.

### *3. தூயஆவியார் துணையாளராய் இருந்து நடத்துகிறார்* :

(யோவா 14:26)

என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார். நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்.

இந்த உலகத்தில் நாம் இறைமக்களாக இறுதிவரை நிலைத்து நிற்க தூய ஆவியார் நமக்குத் துணையாயிருக்கிறார். இயேசு கிறிஸ்து தூய ஆவியாரைக் குறித்து யோவா 14:16 இல் “உங்களோடு என்றும் இருக்கும் படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம்

கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார்'' என்று கூறினார். தந்தை மைந்தர் இருவரின் செயல்பாடுகளும் ஆதிக்கச் சக்திகளுக்கும், அதிகாரவர்க்கத்துக்கும், அடிமைப்படுத்தும் அமைப்புகளுக்கும் எதிராகவே இருந்தது. தூய ஆவியார் அதற்கு உறுதுணையாக இருந்து நடத்தினார். இதன் அடிப்படையில் தந்தை, மைந்தரைச் சரியாகப் புரிந்து கொண்டு இறையாட்சியை இம்மண்ணில் நிலைப்படுத்த தூய ஆவியார் போதித்து தம்முடையவர்களுக்கும் ஆற்றல் அளித்து வழி நடத்துகிறார். அவ்வாறே திப 8:29 தூய ஆவியார் பிலிப்புவை எத்தியோப்பிய அரசியின் நிதியமைச்சருக்கு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்க வழிநடத்தினார். அவர் இயேசு கிறிஸ்துவை இறைமகன் என நம்பி ஏற்றுக்கொண்டு திருமுழுக்கு பெற்றார். யோவா 14:30,31 இன்படி இந்த உலகில் தீய ஆற்றலை மையப்படுத்தும் தலைமையை, அதிகாரத்தை எதிர்த்துப் போராடி அழிக்க தூய ஆவியார் தந்தையின் பிரதிநிதியாக வந்த கிறிஸ்துவின் பிரதிநிதியாக நம்மை கிறிஸ்துவின் பணி செய்ய நடத்துகிறார். அதற்காக நம்மை ஆற்றல்படுத்துகிறவரும் கற்பித்து வழி நடத்துகிறவரும் தூய ஆவியானவரே. அவரே நம்மை சகல உண்மை வழிகளுக்குள்ளும் நடத்துகிறார்.

இங்கிலாந்திலுள்ள மிகச்சிறந்த கவிஞரான கௌபர் என்பவர் வாழ்க்கையில் வெறுப்படைந்தவராய் வாழ்ந்து வந்தார். ஒருநாள் லண்டன் பாலத்திற்குச் சென்று தன் உயிரை மாய்த்துக்கொள்ளலாம் என முடிவெடுத்தார். அதற்காக வாகனம் ஒன்றில் ஏறி உட்கார்ந்தார். லண்டன் பாலத்திற்குச் செல்லும்படி வாகன ஓட்டியிடம் கூறினார். வழக்கத்திற்கு மாறாக அன்று மூடுபனி அதிகமாக இருந்தது. வாகன ஓட்டி அந்த மூடுபனியில் வண்டியை ஓட்டி லண்டன் பாலம் சென்றடைய முடியாமல் சுமார் 2 மணிநேரம் போராடினார். இறுதியில் கவிஞர் கௌபர் வாகன ஓட்டியிடம் என்னை வீட்டிலாவது சேர்த்து விடு என்றார். அவரை வாகன ஓட்டி வீட்டில் சேர்த்து விட்டார். அப்போது வாகன ஓட்டியிடம் கவிஞர் கௌபர் "நான் இந்த நிமிடம் வரை உயிரோடு இருப்பது கடவுள் செய்த மிகப்பெரிய அதிசயம்'' என்று கூறினார். நான் தற்கொலை செய்வதற்காகவே லண்டன் பாலத்திற்குச் சென்றேன். ஆனால் மூடுபனியால் கடவுள் என்னைத் தடுத்து உயிரை மாய்க்காமல் காத்தார். என்னைப் புதிய மனிதனாக மாற்றியிருக்கிறார். இப்போது தூய ஆவியார் என் துணையாளராக இருக்கிறார் என்றார். நாம் தூய ஆவியாரால் நடத்தப்படும் போது திருப்பணி செய்யத் தூண்டுகிறார். தீயச் செயல்கள் செய்யாது காக்கிறார். துணையாளராக இருந்து நடத்துகிறார். அந்த ஆவியாரின் ஆளுகைக்கு நம்மை அர்ப்பணம் செய்வோம்.

அருள்திரு. M.P. **விஜயகுமார்**

05-06-2022

**பெந்தக்கோஸ்து விழா & DMPB ஞாயிறு**

## வாரும் தூய ஆவியாரே, எம்மை விடுவித்தருளும்

**COME HOLY SPIRIT, SET US FREE**

எசா 61:1-11 | திப 2:1-13

திபா 107:31-43 | லூக் 4:16-21

**"அந்த ஒலியைக் கேட்டுக் கூடிய திரளான மக்களுள் ஒவ்வொருவரும் தம் சொந்த மொழிகளில் அவர்கள் பேசக்கேட்டுக் குழப்பமடைந்தனர்"** (திப 2:6).

பாஸ்கா விழாவிற்குப் பின் ஐந்தாம் நாளில் கொண்டாடப்பட்ட இவ்விழா கிரேக்க மொழியில் பெந்தக்கோஸ்து என அழைக்கப்பட்டது. பாஸ்கா என்றால் "கடந்து செல்லுதல்" எனப் பொருள்படும். இவ்விழாவின் பொருள் வேளாண்மை சார்ந்ததாகவும், பின்னர் இஸ்ரயேலர் வரலாற்றில் அவர்களோடு "யாவே" செய்த உடன்படிக்கையை நினைவுகூரும் விழாவாகவும் மாறியது. இறுதியாக, அது தூய ஆவியாரை அருட்கொடையாக இம்மண்ணில் பெற்ற புதிய தொடக்க விழாவாகும். ஐம்பதாம் நாளில் கடவுளின் அருள்செயல்களை அயல் மொழிகளில் பேசியதும் ஒரு மனதுடன் ஒரே குழுவாய் மன்றாடியதும் ஆவியாரின் செயல்களாகும். இச்செயல் வழி மனித குலம் அனைத்தையும் தன்னுள் ஏற்கும் பொது இயல்புடையது என்பதன் அடையாளமாயிற்று.

நாம் பெந்தக்கோஸ்து ஞாயிறாக ஆசரிப்பது பழைய ஏற்பாட்டு விழாவின் அடிப்படையாக அல்ல; மாறாக, தூய ஆவியாரின் பெந்தக்கோஸ்து நாளில் அருளப்பட்டு திருச்சபையின் (தோன்றிய) பிறப்பு நாளாக ஆசரிக்கப்படுவதாகும். இந்நன்நாளின் நமது மன்றாட்டே தூய ஆவியாரே, எம்மை விடுவித்தருளும் என்பதாகும். பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியாரால் அருளப்பட்ட விடுதலை வாழ்வு இன்றைய சமுதாயத்திலும் மானிடருக்கு அருளப்பட்டு நம்பிக்கையிலும் சத்தியத்திலும் நடக்க தூய ஆவியார் அருள்புரிவாராக.

### *1. வேற்றுமையில் ஒன்றிப்பு நல்கும் தூய ஆவியார்* :

"பெந்தக்கோஸ்து என்னும் நாள் வந்த போது அவர்கள் எல்லாரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள்" (திப 2:1)

வேறுபட்ட மனிதர்கள் ஒரு மனதுடன் ஒரே இடத்தில் ஒன்றுபட்டு கூடி வந்த போது தூய ஆவியார் அருளப்பட்டார் (திப 2:4). ஒன்றுபட்ட வாழ்வு தூய ஆவியாரால் அருளப்பட சபை கூடிவருதல் நிகழ்ந்தது. ஆண்டவரும் தாம் மீட்டுக்கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்துக்கொண்டார் (திப 2:47). அவர்கள் நாள்தோறும் ஒரே மனதுடன் சபையில் தவறாது கூடி வந்தார்கள் (திப 2:46). கிறிஸ்துவில் நம்பிக்கை

கொண்டோர் ஒன்றாகவே இருந்தனர். உடமைகளைப் பொதுவாகக் கொண்டனர். ஒவ்வொருவர் தேவைக்கு ஏற்பப் பகிர்ந்தும் கொண்டனர். ஆதித் திருச்சபையின் நிழலில் இன்றைய திருச்சபையை ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் எவ்வளவு தடம் புரண்டு வாழ்கிறோம் என்பது தெரியும். தூய ஆவியாரால் நடத்தப்படும் திருச்பைகளில் ஏன் ஒற்றுமை இல்லாமல் காணப்படுகிறது? பொதுமையின்றி சுய நலம் போணுதலே காரணமாயிற்று. இதனால் திருச்சபை தனது சான்றையிழந்து நிற்கிறது. இதற்கு யார் காரணம்? என அலசி ஆய்ந்து பார்ப்பது நல்லது.

பவுல் கொரிந்துச் சபைக்கு இயேசு கிறிஸ்துவின் பெயரால் ஆலோசனை கூறும்போது, உங்களுக்குள் பிளவுகள் வேண்டாம். ஒத்தக்கருத்துடையோராய் இருங்கள். பிரிவினைகளைத் தவிர்த்து ஒரே மனமும் ஒரே நோக்கமும் கொண்டிருங்கள் (1 கொரி 1:10). கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள். இருப்பினும் ஏன் பிரிவினைகள்? நாம் தூய ஆவியாரால் இயக்கப்பட ஒப்புக் கொடுத்தால் பிரிவினை இராது. விடுதலையின் சுவாசத்தை உணர இயலும். வேற்றுமையில் ஒற்றுமையினைக் காப்போம். திருச்சபையைக் கட்டி எழுப்புவோம்.

### *2. வேற்றுமொழிகள் வழி விடுதலை நல்கும் தூய ஆவியார் :*

“கூடிய திரளான மக்களுள் ஒவ்வொருவரும் தம் சொந்த மொழிகளில் அவர்கள் பேசக்கேட்டுக் குழப்பமடைந்தனர்.” எல்லோரும் மலைத்துப்போய் இதோ பேசுகின்ற இவர்கள் அனைவரும் கலிலேயர் அல்லவா? அவ்வாறிருக்க நம்முடைய தாய்மொழிகளில் இவர்கள் பேசுவதை நாம் ஒவ்வொருவரும் கேட்பதெப்படி? என வியந்தனர். (திப 2:6-8)

தூய ஆவியாரால் நிறைவைப் பெற்ற மக்கள் ஆவியார் தந்தருளிய வரங்களின்படியே வேற்று மொழிகளில் கடவுளின் மகத்துவங்களைப் பேசினர். இதனைக் கேட்ட மக்கள் தங்களின் தாய் மொழிகளில் கலிலேயர் பேசுவதைக் கேட்டுக் கலங்கி வியப்பில் மூழ்கினர். நடப்பதைக் குறித்த தெளிவற்ற நிலையில் தங்கள் மனம் போல் சிந்திக்கவும் பேசவும் தொடங்கினர். மட்டுமன்று, அவர்கள் இனிய மதுவால் மதியிழந்து பேசுகிறார்கள் எனக் கிண்டல் செய்தனர். இதனைக் கேட்ட பேதுரு, தூய ஆவியாரால் நிரப்பப்பட்டு தேவ மகத்துவங்களை குறித்து வெளிப்படையாகச் சான்று பகிர்கின்றனர். யோவேல் தீர்க்கரின் கூற்றின் நிறைவேறுதலாகும். இறுதி நாட்களில் மாந்தர் யாவர் மேலும் கடவுளின் ஆவியர் பொழியப்படும் அவர்கள் இறை வாக்குரைப்பார்கள். கதிரவன் இருண்டு போகும் நிலவு இரத்தமாய் மாறும். இந்நிலையில் கடவுளின் திருப்பெயசை்ர சொல்லி வேண்டுவோர் மீட்பை பெறுவர். தூயவரை

பாதாளத்தில் விட்டார். இதனால் மகிழ்வு நிறை வாழ்வு நல்குவோர் வேற்று மொழியை கேட்டோர் மீட்பின் மகிழ்வை கொண்டாடிய நாள் இது. இன்று அவ்வித நிலை பேற்றில் கொண்டாட்டம் அமைந்துள்ளதா? சிந்திப்போம். மீட்பு பெற்றோர் ஒன்று கூடும் திருநாளாய் நம்மை நாம் அர்ப்பணம் செய்வோம். இறையரசு மலரட்டும்.

### *3. வேற்று வாழ்வினின்று விடுதலை நல்கும் தூய ஆவியார் :*

"நெறி கெட்ட இந்த தலை முறையிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்". அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்கள் திருமுழுக்குப் பெற்றார்கள். அன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் அவர்களோடு சேர்க்கப்பட்டனர். (திப 2:40,41)

நெறி கெட்ட தலைமுறையினர் எனப் பேதுரு குறிப்பிட்டவர்கள் தேவனுக்குப் பிரியமற்ற வாழ்வு கொண்டவர்கள். இயேசு குறிப்பிடும்போது விபச்சாரச் சந்ததியார் எனக் குறிப்பிடுகிறார். வணங்காக் கழுத்து கொண்டவர்கள். முழுக்கு முனிவர் யோவான் விரியன் பாம்புக் குட்டிகள் என குறிப்பிடுவது மட்டுமன்று வரும் கோபத்திற்கு தப்பித்துக்கொள்ள ஆலோசனையாக ஆயக்கரரை, குறிக்கப்பட்டதற்கு அதிகம் வாங்காதே, போர் சேவருக்கு, இடுக்கண் இழைக்காதே, பொய்யாய்க் குற்றம் சாட்டாதே, லஞ்சம் வாங்காதே என்கிறார். பவுலார் குறிப்பிடும் போது (உரோ 8:1) மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினை தீர்ப்பில்லை (உரோ 8:2) ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே என்கிறார் யாக்கோபு தனது நிருபத்தில் குறிப்பிடும்போது, ஒவ்வொருவரும் தம் சொந்தத் தீய நாட்டத்தினாலே சோதிக்கப்படுகின்றனர். அது அவர்களை கவர்ந்து மயக்கித் தன் வயப்படுத்துகிறது (யாக் 1:5) பின்னர் தீய நாட்டம் கருக்கொண்டு பாவத்தை பெற்றெடுக்கிறது. பாவம் முழு வளர்ச்சியடைந்து சாவை விளைவிக்கிறது. எனவே ஏமாந்து போக வேண்டாம் என எச்சரிக்கிறார். மாம்ச சிந்தைக்குரிய வாழ்வு ஆக்கினை தீர்ப்புக்குரியது. மாம்சத்திற்குரிய வாழ்வால் நெறியுள்ள வாழ்வு வாழ இயலாது. நன்மையாக வாழ நினைத்தாலும் வாழ இயலாதவாறு வாழ்வின் பாவம் செயல்படுகிறது. ஆண்டவரின் ஆவியார் இருக்குமிடத்தில் விடுதலை உண்டு, தாவீது அரசர் பாவம் செய்தபோது நாத்தான் தீர்க்கர் வாயிலாக எச்சரிக்க, தாவீது பாவத்தை அறிக்கையிட்டு திருந்தி வாழ்வில் (திபா 51:11) உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும் தூய ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும் என்கிறார். நாமும் நமது வாழ்வை, சிலுவை நிழலில் ஆராய்ந்து பார்த்து வேற்று வாழ்வை களைந்து ஆவியானவர் தரும் விடுதலை வாழ்வை சுதந்தரிப்போமாக.

அருள்திரு. V. **டேவிட் றாபி ஜேக்கப்**

05-06-2022

# ஆண்டவருக்கு அஞ்சுவதே ஞானத்தின் தொடக்கம்

**FEAR OF THE LORD AS THE BEGINNING OF WISDOM**

1அர 3:3-14 1யோவா 5:13-21
திபா 14 லூக் 10:21-24

**"...ஞானமும் பகுத்தறிவும் நிறைந்த உள்ளத்தை உனக்கு வழங்குகிறேன்."**
(1அர 3:13).

கடவுள் ஞானம் அருளுகிறார். அவருக்குப் பயந்து வாழ்வதே ஞானம் பெற்றுக் கொள்வதின் தொடக்கம் எனத் திருமறை கற்றுத்தருகிறது. "ஞானத்தை அளிப்பவர் ஆண்டவரே. அறிவிற்கும் விவேகத்திற்கும் ஊற்றானவர் அவரே" (நீமொ 2:6). கிறிஸ்தவ நம்பிக்கையும், விஞ்ஞானமும் முரண்பட்டவை அல்ல. விஞ்ஞானச் சிந்தனையற்ற இறைநம்பிக்கையும், இறைநம்பிக்கை சாராத அறிவியலும் பயனற்றவை. விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை இறைநம்பிக்கை சார்ந்து பயன்படுத்தாவிடில் அது மானிடத்தை அழித்துவிடும்.

'கற்றவருக்குச் செல்லுமிடம் எல்லாம் சிறப்பு! கற்றகல்வியே உற்ற துணை' என்பர். கற்றலில் கேட்டல் நன்று. இதைத் திருவள்ளுவர் "செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என்கிறார். இதைத் திருமறை "காதுள்ளவன் கேட்கக் கடவன்" என்கிறது. இவ்வளவு சிறப்புமிக்க கல்வியை நாம் எப்படிப் பெற்றோம்? கல்வி கற்க வசதியில்லாத, வசதியிருந்தாலும் உரிமையில்லாத ஒரு காலம் இருந்தது. கடவுள் நம் அருட்பணியாளர்கள் வழியாக நமக்குத் தந்த கல்வியே நமது வாழ்க்கைத் தரத்தை உயத்தியது (1யோவா 5:14). "நாம் கேட்பது கடவுளுடைய திருவுளத்திற்கு ஏற்ப அமைந்திருப்பின் அவர் நமக்குச் செவி சாய்க்கிறார்." திருமறையில் சாலமோன் அரசர் ஆண்டவரிடம் கேட்ட விண்ணப்பம் ஆண்டவரின் திருவுளத்திற்கு ஏற்றதாக இருந்தது.

### *1. இறைஞானத்தைக் கேட்போம்* : (1அர 3:9)

இளம் வயதில் அரசராகத் திருப்பொழிவு செய்யப்பட்டவர் சாலமோன். தன் பணியை திறம்படச் செய்வதற்கு இறைவனால் தரப்படும் ஞானம் தேவை என்பதை உணர்ந்து கொண்டார். மக்களுக்கு நீதி செய்யவும், நன்மை தீமை எது? என ஆராய்ந்து அறியவும் ஞானத்தைக் கேட்டார் (யாக் 1:5). "ஞானத்தில் குறைவுள்ளவர், நிரம்ப ஞானம் படைத்தவரும் கேட்கிற அனைவருக்கும் அளிக்கிறவராயுமிருக்கிற ஆண்டவரிடம் கேட்கக்கடவன்" என்கிறார்.

கல்வி, வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் கொடுக்கும் அமைப்பு. மாற்றத்தை உருவாக்கும் சக்தியைக் கொண்ட வலுவான கருவி, விடுதலைக்கு வித்திடும் ஓர் ஆயுதம். கத்தி முனையை விடப் பேனாவின் முனை மிகக் கூர்மையானது என்பர். அந்தப் பேனாவிலிருந்து வெளிவரும் சக்திவாய்ந்த கருத்துகளை உருவாக்க அடித்தளமிடுவது கல்வி. இந்த ஞானத்தைக் கடவுளிடம் நாம் கேட்கவேண்டும்.

நீமொ 3:5 இல் "முழு மனத்தோடு ஆண்டவரை நம்பு. உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மனிதன் தன் சுய புத்தியால் எதையும் சாதித்து விட இயலாது. இறைவனைச் சாராத ஞானம் அழிவுக்குரியது எனப் பவுல் எச்சரிக்கிறார் (1கொரி 1:19,20).

நீதி 1:7இல் "ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம். ஞானத்தையும் நற்பயிற்சியையும் மூடரே அவமதிப்பர்." 'எல்லாம் தெரியும் என்ற குழப்பத்தோடு இருக்காதே. எதுவும் தெரியாதென்ற தெளிவோடு இரு' என்றார் விவேகானந்தர். சாலமோனைப் போல இறைவனிடம் ஞானம் நிறைந்த உள்ளத்தைக் கேட்போம். 'நாம் அவரிடம் கேட்டவற்றைப் பெறுவோம் என்னும் உறுதி நமக்கு உண்டு' (1யோவா 5:15).

**2. *இறைஞானத்தைப் பெறுவோம்*** : (1அர 3:13)

இறைவன் சாலமோனின் மன்றாட்டை அங்கீகரித்து, அவர் விரும்பியபடியே ஞானத்தை வழங்கிச் சிறப்பித்தார். அவரது ஞானத்திற்கு இணையானவர்கள் இதுவரை பூமியில் இருந்ததுமில்லை, இனி எழும்புவதுமில்லை என்றார். 1அர 3:16-28இல் ஒரு பிள்ளைக்கு இரண்டு தாய்மார் உரிமை கோரிய போது நீதி செய்த நிகழ்வு அவரது அறிவுத் திறனைக் காட்டுகிறது.

இங்கு சாலமோனுக்கு ஞானமும், உணர்வும் (பகுத்தறிவும்) உள்ள உள்ளத்தை இறைவன் கொடுத்தார்.

'ஞானம்' வழி காட்டலைத் தர, 'பகுத்தறிவு' நாம் தவறான பாதையில் செல்லாமல் நம்மைத் தடுக்கும். இறைவனிடமிருந்து ஞானத்தைப் பெறும் நாம் அதற்குரிய பண்பை வெளிப்படுத்த வேண்டும். யாக் 3:17இல் "விண்ணிலிருந்து வரும் ஞானத்தின் தலையாய பண்பு அதன் தூய்மையாகும். மேலும் அது அமைதியை நாடும். பொறுமை கொள்ளும். இணங்கிப் போகும் தன்மையுடையது. இரக்கமும் நற்செயல்களும் நிறைந்தது. நடுநிலை தவறாது. வெளிவேடமற்றது."

கல்விக் கூடங்கள் புத்தகக் கல்வியைக் கற்றுக் கொடுப்பதுடன், வாழ்க்கைக் கல்வியையும் பயிற்றுவிக்க வேண்டும். வகுப்பறைகளில் வாழ்வின் எதார்த்தங்களை மாணவர்கள் அறிய உதவிட வேண்டும். தரமான கல்வி பிள்ளைகளைப் பிறருக்குச் சேவை செய்து

இறைத்திட்டத்தை நிறைவேற்றுபவர்களாய் மாற்ற உதவ வேண்டும். "Go out to serve our country and countrymen" என்று ஒரு கல்வி நிறுவனத்தில் பலகை வைக்கப்பட்டிருந்தது. கல்வியின் நோக்கம் அதுவே. பிறருக்கு நாம் கற்ற கல்வியால் பயன் உண்டாக வேண்டும். 'மக்களிடம் செல், மக்களுடன் வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள்' என்றார் அறிஞர் அண்ணா. "உன்னை நீ ஒரு ஞானி என்று எண்ணிக் கொள்ளாதே. ஆண்டவருக்கு அஞ்சி தீமையை அறவே விலக்கு" (நீமொ 3:7). இறைவன் தரும் ஞானத்தைப்பெற்று, பிறர் பயனடைய நாம் வாழ்வோம்.

***3. இறைஞானத்தின் பயனை அனுபவிப்போம்*** : (1அர 3:13)

சாலமோனுக்குத் தரிசனம் தந்த இறைவர், நீ விரும்புவதைக் கேள் என்றபோது 'ஞானம் தாரும்' என்றார். சரியானதைச் சரியான நேரத்தில் கேட்டதைக் கண்ட கடவுள், அவருக்கு ஞானத்தோடு அவர் கேட்காத பொருளாதாரம், நீடித்த ஆயுள், புகழ் அனைத்தையும் தந்தார். ஆம்! இறை நன்மைகள் நம்மை நிரப்பும் போது அனைத்தும் ஆசீர்வாதமாக அமையும்.

இறைஞானம் வரும்போது, இவ்வுலகின் அனைத்து நன்மைகளும் அத்துடன் இணைந்து இலவசமாகத் தரப்படுகிறது. இத்தகைய சிறப்பான இறைஞானம் அருளும் ஆண்டவரை நோக்கிப் பார்த்து, அவர் அருளும் ஞானத்தால் நிறைந்து புதிய கல்வி ஆண்டில் முன்னேறிச் சொல்வோம்.

"வெற்றி என்பது உன் நிழல்போல, நீ அதைத் தேடிப் போக வேண்டியதில்லை. நீ வெளிச்சத்தை நோக்கி நடக்கும் போது, அது உன்னுடன் வரும்" என்றார் அப்துல்கலாம். ஞானத்திற்கு ஆரம்பம் இறைவனுக்குப் பயப்படுதல் என்பதை அறிந்து, உணர்ந்து அதை வேண்டி, அதை அடைந்து, அதன் பலனையும் அனுபவிப்போம். முதலாவது கடவுளின் அரசையும், அவருடைய நீதியையும் தேடுவோம். அப்பொழுது அனைத்தும் நமக்குத் தரப்படும்.

அருள்திரு. T. **டேவிட் கிளேட்சன்**

12-06-2022

**பெந்தேக்கோஸ்துக்குப் பின்வரும் முதலாம் ஞாயிறு & மும்மை ஞாயிறு**

# மும்மை (திரித்துவம்) : அன்பின் சமூகம்

**TRINITY : COMMUNITY OF LOVE**

| | |
|---|---|
| தொநூ 18:1-15 | 2கொரி 13:5-14 |
| திபா 97 | மாற் 1:1-11 |

**..."என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்"** (மாற் 1:11).

கலைகள் என்பன பல உள்ளன. அதில் 'ஒபேரா' என்னும் நடனக்கலை உலகப் புகழ்பெற்ற சிறந்த கலை ஆகும். இந்த ஒபேரா என்கிற நடனத்தில் உலகப்புகழ் பெற்ற கலைஞர் என்கிற பட்டத்திற்கு உரிமையுடையவர், எர்னஸ்டைன் ஸ்கூமென் (Ernestine Schuman) ஆவார். அவரது கலையுலகின் வருவாயை வைத்துக்கொண்டு உலகில் வாழ்வதற்கான வாழ்வாதாரங்கள் இல்லாமையால் பல கடினப்பாடுகளுக்கு உள்ளானார். வாழ்வதற்குரிய பொருளாதாரம் இல்லாமையால் தமது வாழ்வையே முடித்து விடலாம் என்ற முடிவுக்கு வந்தார். இச்சூழலில் ஒரு நாள் இரவுப்பொழுது தமது நான்கு குழந்தைகளுடன், ஓடும் தொடர்வண்டியிலிருந்து குதித்து தற்கொலை செய்து விடலாம் என்ற முடிவில் ஒரு தொடர்வண்டி நிலையத்தில் தம் பிள்ளைகளோடு அமர்ந்திருந்தார். அப்போது எர்னஸ்டைன் ஸ்கூமெனின் மகள்களில் ஒருவர், "அம்மா நான் மிகவும் அன்பு செய்கிறேன்" என்று கூறினார். இக்கட்டான சூழலில் மகளின் குரல் கடவுளின் குரல் போல் அவருக்குக் கேட்டது. உடனே தமது தற்கொலை எண்ணத்தை மாற்றிக் கொண்டு வாழத் தொடங்கினார். பல கடினப்பாடுகளுடன் வாழ்ந்து, கடுமையான போராட்டத்திற்குப் பின்பு அவர் உலகப் புகழ்பெற்ற ஒபேரா நடனக்கலைஞர் ஆனார். எர்னஸ்டைன் ஸ்கூமென் அடிக்கடி கூறும் வார்த்தை இதுதான், அன்றைக்கு மட்டும் கடவுள் என் மகள் வழியாக நான் உன்னை மிகவும் அன்பு செய்கிறேன் என்று சொல்லவில்லை என்றால் என்றைக்கோ தற்கொலை செய்திருப்பேன். கடவுள் எர்னஸ்டைன் ஸ்கூமெனை மட்டுமல்ல, இந்த உலகில் வாழும் அனைத்து மக்களையும் அன்பு செய்கிறார். மூவொரு இறைவர் அன்பின் சமுதாயத்தை மண்ணுலகில் உருவாக்குவதையே தமது முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு மானிடர் வழியாகச் செயல்படுத்துகிறார்.

உலகில் வாழும் நாம் உண்மைகளை இருவகைப்படுத்துகிறோம். அறிவியல் உண்மை, மறையுண்மை. அறிவியல் உண்மை என்பது இயற்கையில் உறைந்திருக்கும் உண்மைகளையும் விதிகளையும் மானிடர் தமது முயற்சியால், அறிவால் வெளிக்கொண்டு வருவதாகும்.

எடுத்துக்காட்டு: புவிஈர்ப்பு விசை. எந்தப் பொருளை நாம் மேலே தூக்கிப்போட்டாலும் அது நிச்சயமாக கீழே விழுகிறது. புவிக்கு ஈர்ப்பு விசை உண்டு. இது மானுடம் தமது அறிவால், ஆராய்ச்சியால் கண்டுபிடித்த உண்மை. உலகில் பல அறிவியல் உண்மைகள் உள்ளன. இவைகளை அறிந்து புரிந்து கொள்ள முடியும். மறையுண்மை என்பது மறைநூல், சமயநெறிகள் வழியாக நமக்கு வெளிப்படுத்தப்பட்டன. இவைகளை எளிதில் அறிந்து புரிந்து கொள்ள முடியாது. ஆனால் பற்றுறுதிக் கண்களோடு மறையுண்மைகளை நாம் அறிய முயலும்போது அர்த்தமுள்ளதாகிறது.

மும்மை அல்லது திரித்துவம் என்பது மறைபொருள். இந்த மும்மை அல்லது திரித்துவம் என்ற வார்த்தை விவிலியத்தில் இடம்பெறவில்லை. ஆனால் நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் இதைக் குறித்து தெளிவுபடுத்த விளக்கங்களும் விவாதங்களும் நடைபெற்றுள்ளன. கடவுள் ஒருவராக இருந்தாலும் தந்தை, மகன், தூய ஆவியார் என மூவொருவராயிருக்கிறார் என்பதைத் திரித்துவம் என்கிறோம். மூன்று கடவுள்கள் அல்ல; மாறாக ஒரே கடவுள் என்கிறோம். அதாவது கடவுள் ஒருவராகவும் மூன்று ஆட்தன்மைகள் மூலமாக அவரது குணங்களில் வெளிப்படுகின்றார். மூவொரு கடவுள் அமைதியில் உறைபவராக, நமக்கு அப்பாற்பட்டவராக இருக்கிறார். மனுக்குலத்தோடு கலந்து மானுடத்தை மீட்பவராக, நம் அருகில் இருக்கிறார். நமக்குள் வாழ்பவராகவும் இருக்கிறார். கடவுள் நமக்குத் தூரத்திலும், நமக்கு அருகிலும் நமக்குள்ளும் எங்ஙனம் நிறைந்திருக்கிறார். திரித்துவம் ஆள்வகையில் தந்தை, மகன், தூய ஆவியார் தனித்தனியாக இருந்தாலும் கடவுள் தன்மையில் ஒன்றாக இருக்கிறார். மூவொரு இறைவர் என்பது திரித்துவத்தின் மிகவும் முக்கியமான கருத்தியல் சிந்தனை எனலாம்.

'Splangitzomai' என்ற கிரேக்க வார்த்தைக்கு, It is an expression of love which comes from the womb, அதாவது அடிவயிற்றில் இருந்து எழும் அன்பு என்பதாகும். மூவொரு இறைவரின் செயல்பாடு என்பது அன்பின் சமூகம் உருபெறச் செய்தலே எனலாம். இறைவரின் மூவொரு தன்மை குறித்து விவிலியம் தரும் விளக்கம் என்னவெனில், "யாதொரு வேறுபாடும் இன்றி, ஒரே அன்புறவு, ஒரே ஞானம், ஒரே திருவுளம், ஒரே வல்லமை, ஒரே கடவுள் தன்மை என்பதாகும். மூவொரு கடவுள் என்பதை மனதில் கொண்டு மும்மை: அன்பின் சமூகம் என்ற பொருளில் சிந்திப்போம்.

### *1. தந்தையாகிய கடவுள்:*

கடவுள் மாறாதவர், அவர் மானுடத்தின் மீது கொண்டுள்ள நோக்கமும் காட்சியும் ஒருபோதும் மாறுவது இல்லை. இழந்துபோன மானுடத்தை மீட்டெடுத்து மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதிலும்,

குணங்களில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்துவதிலும், உண்மையை உருவாக்குவதிலும், நியாயத்தை செயல்படுத்துவதிலும் தந்தையாகிய கடவுள் மாற்றமில்லாமல் படைப்பின் வழியாகச் செயல்படுகிறார். மானுடம் தவறு செய்தாலும் தந்தையின் மனம் மக்கள் மீது இரக்கம் கொண்டுள்ளதாக இருக்கிறது. பிள்ளைகளுக்கு ஒன்றும் ஏற்படக்கூடாது எனத் தம் மக்கள் மீது கரிசனை கொள்ளும் கடவுளாயிருக்கிறார் (2சாமு 18:33).

இஸ்ரயேலர் பாவ நிலைகளில் இறைவருக்குத் தூரமாகப் பயணித்தாலும், அவர்களின் அடிமைத்தனத்தின கூக்குரலில், தந்தையின் இரக்கம் அடிமைத்தன ஒடுக்குதலில் இருந்த மக்கள் கூட்டத்திற்கு சாதகமாகவே இருந்தது (நீத 2:18). மானுடத்தின் நெறி தவறிய வாழ்வு இறைவரின் வழிகாட்டுதலுக்கு உட்படாமல் வாழ்வில் பாதிப்புகளைச் சந்தித்தனர். ஆனாலும் தந்தையாகிய கடவுள் அன்பின் சமுதாயத்தை உருவாக்க மானிட வாழ்வின் நல்வாழ்வுக்கான செயல்களில் தம்மை முன்நிறுத்திக் கொண்டார் (திபா 104:8-9; எரே 5:22). மேலும், சமுதாயத்தில் அநீதிகளும், தவறான செயல்களும் அதிகரித்த போதும் தந்தையாம் கடவுள் பேரன்பும் உண்மையும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும், நிறைவாழ்வும் ஒன்றையொன்று முத்தமிட வேண்டும் என்னும் கருத்துடையவராகச் செயல்படுகிறார் (திபா 85:10). அநீதிகள் நிகழும் இடங்களிலும், மானிடம் தவறும் இடங்களிலும் நீதியை நிறைவேற்ற குரல் எழுப்பும் இறைவராக, விவிலியம் தந்தையாம் கடவுளை வெளிப்படுத்துகிறது. தொநூ 3:9இல் ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் கூப்பிட்டு “நீ எங்கே இருக்கிறாய்?”. தொநூ 4:9இல் ஆண்டவர் காயீனிடம், “உன் சகோதரன் ஆபேல் எங்கே?”. 1அர 19:13இல் “எலியா, நீ இங்கே என்ன செய்கிறாய்?” என அநீதிகள் ஏற்ப்படும் போதும், உறவுகளில் விரிசல் ஏற்படும் போதும், வாழ்க்கைப் பயணத்தில் பாதை தடுமாறும்போதும் தந்தையாம் கடவுளின் குரல் மேலோங்கி ஒலிக்கிறது, அன்பின் சமுதாயத்தைக் மறுகட்டுமானம் செய்ய முனைகிறது.

### *2. மகனாகிய கடவுள்* :

மகன் தந்தையின் மகனாக, கடவுள் மற்றும் மானிடத் தன்மையோடு மனுமக்கள் வாழ்வில் இறையவர் திருவுளத்தை நிறைவேற்றும் இறைமகனாக இயேசு கிறிஸ்துவின் செயல் அமைந்துள்ளது (மத் 3:17, 8:20, யோவா 4:32). எப்போதும் தம்முடைய செயலிலும், தந்தையை முன்நிறுத்தி அவரால் பணிக்கப்பட்ட பணிவிடைகளை நிறைவேற்றுகின்ற பணிவிடையாளராகச் சித்திரிக்கப்படுகிறார். அகவே திருமுழுக்கு நேரத்தில்

இறைமகன் என்கிற இந்த அதிகாரப்படுத்துதல் வெளிப்பட்டிருப்பதைப் பார்க்கலாம் (என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்). தந்தையை முன்நிறுத்தி திருப்பணிக்குரியவைகளை வெளிப்படுத்தினார், திருப்பணிகளைச் செய்தார், திருப்பணிக்காக வாழ்வினைத் தந்தார். அலகையை வென்றெடுப்பதிலும் இவருடைய பங்களிப்பு கடவுளின் அதிகாரத்தை உள்ளடக்கிய பங்களிப்பாக அமைந்தது. இவருடைய செயல்கள் அனைத்தும் பொதுத்தன்மை கொண்டதாகவும், சமுதாயத்தில் வேறுபாடுகள் இல்லாமல் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் ஒன்றாகவும் இருந்தது. மட்டுமின்றிச் சமுதாயத்தில் குரல் எழுப்ப இயலாத மானுடத்தின் குரலாகவும், புறக்கணிக்கப்பட்டோரையும், ஒடுக்கப்பட்டோரையும் அரவணைப்பவராகச் செயல்பட்டு தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி அன்பின் சமுதாயத்தை உருவாக்கும் தந்தையின் மகனாகச் செயல்பட்டது மறுக்கமுடியாத ஒன்றாகும். யூதச் சமயமும், சமுதாயமும் கொண்டிருந்த புரிதல்களையும், பாரம்பரியக் கட்டுகளையும், பழக்கவழக்கங்களையும் பொருட்டாகக் கொள்ளாமல், யூதர்கள் கடுமையாகக் கடைப்பிடித்து வந்த ஓய்வுநாள் மரபுகளைப் பொருட்படுத்தாமல் வாழ்விழந்த மானிடருக்கு நன்மை செய்பவராக (நலம் அருள்பவராக) தமக்குக் கிடைக்கப் பெற்ற வாய்ப்புகளைப் பயன்படுத்தினார் (மத் 9:36, 8:20, யோவா 9:16). தந்தையாகிய கடவுளுக்கு மகனாகிய கடவுள் குறைந்தவரல்லர் சமமாகப் பார்க்கப்பட வேண்டியவர் என்பதை விவிலியப் பகுதிகள் சுட்டிக்காட்டுகின்றன. தூய பவுலார் கொரிந்து திருச்சபை இறைமக்களுக்குச் சொல்லும்போது திருச்சபை அன்பின் சமுதாயமாகச் செயல்பட்டு மகிழ்வாக வாழ, வாழ்க்கை முறையைச் சரி செய்யவும், அறிவுரைகளுக்குச் செவிகொடுத்து, ஒற்றுமையுடனும், அமைதியுடனும் வாழும் போது அன்பும், அமைதியும் அருளும் ஆண்டவர் உடனிருப்பார் என்கிறார் (2கொரி 13:1). பவுலாரின் அறிவுரை நட்புறவில் நிலைத்திருந்து அன்பின் சமுதாயத்தை உருவாக்க உதவி செய்கிறது. நமக்குள் வாழும் கடவுள் நட்புறவின் அடித்தளம். எனவே அவரது அன்புறவில் நிலைத்திருந்து அன்பின் சமுதாயமாக வாழ்வது இறைமக்களாகிய நம் அனைவரது கடமை.

### *3. தூய ஆவியாராகிய கடவுள்* :

தூய ஆவியாராகிய கடவுளைக் குறிக்கும் கிரேக்க வார்த்தைகளில் ஒன்று Parakletos என்பதாகும். இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் தூய ஆவியார் துணையாளராக (யோவா 14:16), உண்மையை

வெளிப்படுத்துபவராக (யோவா 15:26), பரிந்து பேசுகிறவராக (உரோ 8:26) குறிப்பிடப்பட்டுள்ளார். இப்படிப்பட்ட பெயர்களில் தூய ஆவியாராகிய கடவுள் தமது செயல்பாடுகளை மக்களில் நிறைவேற்றி வருகிறார்.

தொநூ 18 : 27-33இல் பற்றுறுதியாளர்களின் தந்தை ஆபிரகாம் இறைவரிடம் உரையாடுகிறார். சோதோம் நகர் மக்கள் அழிவிலிருந்து மீட்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் ஆபிரகாம் வாதிடுகிறார். இறுதியில் நேர்மையாளர் ஒருவரும் இல்லை என்று சொல்லும் போது உரையாடல் நிறைவு பெறுகிறது. இறைவர் பார்வையில் நீதியர் ஒருவரும் இல்லை. தூய பவுலார், உரோ 3:10 இல் "நேர்மையாளரே இல்லை ஒருவர்கூட இல்லை" என்பதாகச் சொல்லி உரோ 8:26 இல் தூய ஆவியாராகிய கடவுள் நமது வலுவற்ற நிலையில் நமக்குள்ளாக நின்று நமக்காக வாதிடுபவராக செயல்படுகிறார் என்கிறார். உறுதிபட்டுள்ளது. நீதியற்ற உலகில் நீதியை நிலைநிறுத்தும் பணியில் தூய ஆவியாராகிய கடவுளின் இடைபடுதல் மானுடத்தைத் தூயவர்களாக்கவும், தூய்மையான சமுதாயத்தில் நீதியராக்கவும் இறைவரிடம் மானிடருக்காய்ப் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார்.

தூய ஆவியார் நன்மை - தீமையைத் தெளிவுபடுத்துவதிலும், தீமைகளைக் கண்டித்து உணர்த்துவதிலும், நேர்வழியைக் கண்டடையச் செய்வதிலும், நன்மை செய்வதிலும் தம்மை வெளிப்படுத்துகிறார். கடவுளின் அன்பு தூயாவியார் வழியாக நம் மீது பொழியப்படுகிறது (உரோ 5:5). தூய ஆவியார் அறிவு, நட்புறவு, நீதி, தோழமை போன்றவற்றை அருளுகிறார். தூய ஆவியாரில் நாம் வாழும் போது அவர் அருளும் கனியான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் ஆகியவற்றை நாம் பெற்று, அவரை உள்ளில் உணர முடியும். ஆவியின் கனியால் மலரும் அன்பு, சமுதாயத்தில் பரவ (செயல்பட) நம்மை அர்ப்பணிப்போம்.

தந்தை மகன் தூய ஆவியார் மூவரும் ஒரே அன்பில் இணைந்து ஒன்றித்திருப்பது போல, இறைமக்களாகிய நாம் அனைவரும் அன்பின் சமூகமாக உறவில் ஒன்றித்து வாழ இறைவர் அழைப்பு விடுக்கிறார். தந்தையின் அன்பு, கிறிஸ்துவின் கீழ்ப்படிதல், தூய ஆவியாரின் வழிநடத்துதல் நாம் அனைவரையும் அன்பின் சமுதாயத்தில் வாழ இயக்குகிறது, ஆற்றல்படுத்துகிறது. இதனை ஒவ்வொரு நாளும் உணர்ந்திட வேண்டும். இறைவர் விரும்பும் அன்பின் சமுதாயத்தைக் கட்டுவோம்.

அருள்திரு. S. ***அருள் ஜெபசிங்***

12-06-2022

# கடவுளின் படைப்பைப் பேணி வளர்த்தல்

**NURTURING GOD'S CREATION**

தொநூ 1:28-31 திவெ 22:1-5
திபா 104:1-23 லூக் 12:22-31

**"...மானிடர் வேலைக்குப் புறப்பட்டுச் செல்கின்றனர்; அவர்கள் மாலை வரை உழைக்கின்றனர்"** (திபா 104:23).

சீனாவில் சமீபத்தில் (ஜூலை 2021) கொட்டித்தீர்த்த பெருமழை. உலக நாடுகளில் வானியலாளர்களை தீவிரமாக சிந்திக்க வைத்திருக்கிறது. 300 நாட்களில் பெய்ய வேண்டிய மழை மூன்றே நாட்களில் கொட்டித் தீர்த்ததே இதற்கு காரணம். இதன் விளைவு ஒரு கோடிக்கும் மேலான மக்கள் பாதிக்கப்பட்டு மிகப்பெரிய பொருளியல் சேதத்தையும் ஏற்படுத்தியது. இதற்கான காரணத்தை ஆராய்ந்த சர்வதேச ஆய்வாளர்கள் இரண்டு காரணங்களைச் சுட்டிக் காட்டுகிறார்கள். முதலாவதாக சீனாவில் அதிக அளவில் கட்டப்பட்டிருக்கும் அணைகள். இவைகள் ஆறு குளங்களை இணைக்கும் நீர்வழிப்பாதைகளின் இயல்பானப் போக்கை மாற்றிவிட்டன. அவற்றின் திறனை வெகுவாகக் குறைத்துவிட்டன. இரண்டாவதாக பருவநிலை மாற்றமும் புவி வெப்பமயமாகுதலும் உலகின் பல இடங்களில் பெய்யும் மாமழைக்கு காரணமாக அமைகின்றன. ஆய்வாளர்கள் இதனை எச்சரிப்பாகவே குறிப்பிடுகிறார்கள்.

இமயம் முதல் குமரி வரை இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் 2015 முதல் இந்நாள்வரை இயல்புக்கு மாறாக நடைபெற்றிருக்கிற இயற்கைப் பேரழிவுகள் ஏராளம். பெரும் மழை, நிலச்சரிவுகள், வெள்ளப்பெருக்கு (சென்னை 2015), கொடுமையான புயல்கள், கடும் வெப்பம் இவைகள் அனைத்தும் நம்மை எச்சரித்துக் கொண்டே இருக்கின்றன. அதிகரித்து வரும் காற்று மாசு காரணமாக 40 சதவீத இந்தியர்களின் ஆயுள்காலம் ஒன்பது ஆண்டுகளுக்கு மேல் குறைய வாய்ப்பு உள்ளது என்று சிக்காகோ பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.வாகனங்கள் வெளியிடும் புகை, வைக்கோல் எரித்தல், தொழிற்சாலைக் கழிவுகள், மின் உற்பத்தியால் ஏற்படும் கழிவுகள் இவைகளால் காற்றின் மாசு அதிகரித்துக் கொண்டே போகின்றன. 2000ம் ஆண்டிற்கு பிறகு இதன் பாதிப்பு நான்கு மடங்கு

அதிகரித்திருக்கிறது. உலகிலேயே அதிகம் காற்று மாசடைந்த நடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது.

நாம் வாழும் இந்த உலகம் அனைத்து வளங்களையும் இயற்கைச் சூழல்களையும் உண்டாக்கிய கடவுள் தந்த மாபெரும் அருட்கொடை. அதைப் பேணி வளர்ப்பதும், பாதுகாப்பதும் நம்மேல் விழுந்த கடமை. இறைவன் தந்த பொறுப்பு. அதை எப்படி பேணி பாதுகாப்பது, ஏன் பேணி காக்கப்பட வேண்டும் என்பதெல்லாம் நமக்கு முன் இருக்கிய சவால்கள். இன்றைய தியானத்திற்காக தரப்பட்டிருக்கிற திருமறைப்பாடங்கள் சார்ந்து ஏன் படைப்புகள் பேணி வளர்க்கப்பட வேண்டும் என்பதனை கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

***1. கடவுளின் கட்டளை*** : (தொநூ 2:15)

அனைத்து படைப்புகளையும் படைத்து அவை நல்லது என்று கண்ட ஆண்டவர், முதல் மனித குடும்பத்தைப் படைத்து ஏதேன் தோட்டத்தில் அவர்களைக் கொண்டு வந்து தோட்டத்தைப் பண்படுத்திப் பாதுகாக்கும் பொறுப்பினைக் கொடுத்தார் (தொநூ 2:15). பற்றுறுதி வாழ்வில் நாம் முழுமை காண்பதற்கு இறைவனின் கட்டளைக்கு கீழ்ப்படிதல் மிகுந்த அவசியமானது. நாம் பற்றுறுதியை அறிக்கையிடும்போது, "வானத்தையும், பூமியையும் காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற கடவுளை நம்புகிறோம்" என்று நம்பிக்கையுடன் அறிக்கை செய்கிறோம்.

தொடக்கநூல் முதல் அதிகாரம் படைப்பின் வரலாற்றை நமக்கு வரிசைப்படுத்தி தெளிவாக்குகிறது. அனைத்தையும் வரிசைக்கிரமமாய் படைத்த கடவுள் மனிதனை இறுதியாய் படைத்தார். படைத்த படைப்புகள் அனைத்தையும் மிக நல்லது என்று கண்டார் (1:31). ஆனால் மனுக்குலம் இன்று இயல்புக்கு அப்பால் அளவுகடந்த நிலையில் இயற்கையை, பூமியை சேதப்படுத்தும் செயல்களில் ஈடுபட்டுக்கொண்டே செல்கின்றது. இது கடவுளின் கட்டளைகளை மீறும் செயல் என்பதை அறிந்தும் துணிச்சலுடன் சிதைவுகளை ஏற்படுத்துவதின் விளைவு மனித வாழ்வின் அச்சமூட்டும் நிகழ்வுகள் ஒவ்வொரு நாளும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

வாழ்கின்ற சூழலை, சூழியலை அழிப்பதன் மூலம் நாகரீக சமூகத்தின் அடிப்படையை நாம் அழித்துக்கொண்டேயிருக்கிறோம். இதன் வழி வருங்கால வழிமரபினரின் எதிர்காலம் பணயம் வைக்கப்படுகிறது. போர் குற்றங்களும் இனப்படுகொலைகளும் எப்படி கருத்தில் கொள்ளப்படுகிறதோ அதற்கு இணையாக சூழியல் குற்றங்களும் கருத்தில்

கொள்ளப்பட வேண்டுவது அவசியமானது. சுற்றுச்சூழல் பாதிப்பு என்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் அதை ஒரு குற்றமாக அறிவித்தால் மட்டுமே சூழியல் சீர்கேடு பற்றிய நமது பார்வை மாற்றம்பெறும்.

ஜூன் 2021இல் சர்வதேச சட்ட வரைவு வெளியிடப்பட்டது. அது சூழியல் படுகொலலையை ஐந்தாவது சர்வதேச குற்றமாக அறிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த சட்ட திருத்தம் நடைமுறைக்கு வரும் பட்சத்தில் சூழியல் சீர்கேடுகள் ஒரு குற்றமாகக் கருதப்படும். கடவுளின் கட்டளைகளை மீறுவது குற்றம், பாவம் என்ற உண்மை இன்று 'உலக சட்ட வரைவுகள்' இவைகளின்படி உணர்த்துகின்றன.

### *2. படைப்புகள் ஒன்றையொன்று சார்ந்து வாழ்பவை* :

(தொநூ 1:28-31)

கடவுளின் படைப்பில் ஒவ்வொரு படைப்புகளும் தனித்துவம் பெற்றவைகளாக இருக்கின்றன. கடவுள் இந்த உலகை நேர்த்தியாக படைத்திருக்கிறார். ஒவ்வொரு படைப்புகளும் வாழ்வதற்கு நிலம், நீர், காற்று நிச்சயம் தேவையானது. உயிர் வாழ்வதற்கு தேவையான உணவினை இவைகளிலிருந்தே பெற்றுக் கொள்கின்றன. கடவுளின் படைப்பின் ஒழுங்கு தொடக்கநூல் முதல் அதிகாரத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நிலத்திலும், நீரிலும் வாழும் அனைத்து உயிரினங்களும் மரம், செடி, கொடி என அனைத்து படைப்புகளும் ஒன்றையொன்று சார்ந்து வாழ்பவை.

கடவுள் மனிதனை தம்முடைய சாயலாகப் படைத்து (தொநூ 1:27), பலுகி பெருகி பூமியை நிரப்புங்கள் என்று கூறி அவர்களை ஆசீர்வதித்தார் (1:28). பூமியின் மேல் எங்கும் விதை தரும் அனைத்துவித புல்பூண்டுகளையும், கனிமரங்களையும் மனுக்குலத்துக்குக் கொடுத்து இவைகள் உங்களும் உணவாயிருக்கட்டும் என்றார் (1:29). பூமியிலுள்ள அனைத்து மிருகங்களுக்கும் ஆகாயத்து பறவைகளுக்கும், ஊரும் பிராணிகள் அனைத்திற்கும் அனைத்து பசுமையான புல்பூண்டு வகைகளையும் உணவாகக் கொடுத்தார் (1:30). படைப்புகளின் சார்புத் தன்மை இங்கே தெளிவாகச் சொல்லப்படுகிறது. மனிதனும் ஏனைய உயிரனங்களும் உணவுச் சங்கிலி சூழல்களுக்குள்ளேயே வாழ்கின்றன. தாவரங்கள் கார்பண்டை ஆக்சைடை உள்வாங்கி நாம் சுவாசிக்க நல்ல ஆக்சிஜனை தருகின்றது.

உயிரினங்களுக்குத் தேவையான உணவு, உடை, வாழ்விடம் என பல நிலைகளில் தாவரங்கள் பயன்படுகின்றன. பறவைகள், பூச்சிகள், இந்த உலகம் இயங்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. மனிதர் உண்ணும் உணவில் உற்பத்தியில் 30% பங்கு தேனீக்களுக்கு உண்டு என்பது

ஆய்வின் முடிவாக இருக்கிறது. மகரந்த சேர்க்கை வழியாக பூக்களிடமிருந்து காய் கனிகள் உருவாக வழிவகுத்து மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உணவுக்கு உதவியாயிருக்கிறது.

பொருளாதார வளர்ச்சி மற்றும் நவீனமயமாக்கல் போன்றவைகளை முன்வைத்து நாம் செய்யும் செயல்கள் இன்று இயற்கையின் நியதிகள் நசுக்கப்படுவதற்கு காரணமாகின்றன. குறிப்பாக பூச்சி மருந்து, களைக்கொல்லி மருந்து போன்றவைகளின் பயன்பாட்டில் பல உயிரினங்கள் காணாமல் போய்விடுகின்றன. அவைகளில் தேனீக்களும் அடங்குகின்றன. ஒன்றின் அழிவு, சங்கிலித் தொடர் போல் பல உயிரினங்கள் அழிவதற்கு ஏதுவாகிவிடுகின்றன. காரணம் படைப்புகள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து வாழ்பவை. அனைத்தையும் பேணுவது நம் கடமையே.

### *3. படைப்புகள் கடவுளை மாட்சிப்படுத்துபவை:*

(சங் 104:1-23)

கடவுளின் நோக்கத்தை வெளிப்படுத்தி அவர் வார்த்தைக்கு கீழ்ப்படுவதின் வழி அனைத்துப் படைப்புகளும் ஆண்டவரை மாட்சிமைப் படுத்துகின்றன. சூரியன் பூமிக்கு ஒளிகொடுக்கிறது. பூமி தன்னைத்தானே சுற்றி, சூரியனையும் சற்றி கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுகிறது. கடல் தன் எல்லையை மீறாமல் எண்ணிறந்த உயிரினங்களை உள்ளடக்கி இயங்கிக் கொண்டிருக்கிறது. சந்திரன் விண்மீன்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட பாதையிலிருந்து விலகிச் செல்வதில்லை. மரம், செடி, கொடிகள், பூ, காய், கனி கொடுப்பதற்கு தவறுவதில்லை. பறவைகள் ஏனைய அனைத்து உயிரினங்களும் கடவுளின் எதிர்பார்ப்பை நிறைவெற்றுவதில் முடங்கிப் போவதில்லை. இவைகள் செயல்படுவது இயல்பாய் நமக்குத் தோன்றினாலும், ஒவ்வொன்றும் தாம் படைக்கப்பட்டதின் நோக்கமறிந்து, தவறாமல் காத்து கடவுளை மாட்சிப்படுத்திக் கொண்டே இருக்கின்றன.

“வானங்கள் இறைவனின் மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன; வான்வெளி அவர்தம் வேலைப்பாடுகளை விவரிக்கின்றது” (திபா 19:1). இறைசாயலில் படைக்கப்பட்ட மனிதனும் தான் படைக்கப்பட்டதின் நோக்கத்தை (படைப்புகளைப் பண்படுத்தி பாதுகாப்பது) நிறைவேற்றுவதின் வழி கடவுளை மாட்சிமைப்படுத்த வேண்டுவது கட்டாயமானது. ஆனால் மனிதனின் திருப்தியற்ற, பேராசை கொண்ட வாழ்வுமுறை வாழும் பூமியை இன்று அழிவுக்கு நேராக இழுத்துச் செல்கிறது. அனைவருக்குமான பூமி அனைவராலும் பேணி காக்கப்பட வேண்டியது. ஆனால் இலாப நோக்கோடு சுயநலத்தை பிரதானமாக்கி சுரண்டப்படுகிறது, அபகரித்து

பாழ்படுத்தி அழிக்கப்படுகிறது. எகிப்தின் அடிமை வாழ்விலிருந்து விடுதலை பெற்ற இஸ்ரவேல் மக்கள் பாலை பயணம் செய்த 10 ஆண்டுகள் ஆண்டவரால் உணவளிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டனர். மன்னாவை உணவாகக் கொடுத்தவர்; அதை தினமும் தேவைக்கு ஏற்றார்போல் சேகரித்து எடுத்து உண்பதற்கு கட்டளைக் கொடுத்தார். குறைவாய் சேகரித்தவர்களுக்கு குறைவும் இல்லை அதிகமாய் சேகரித்தவர்களுக்கு மிஞ்சிப் போகவும் இல்லை. ஆனால் சிலரோ அதைப் பதுக்கியும் ஒளித்தும் வைத்தனர் அவைகளோ கெட்டுப்போய் நாற்றமெடுத்தது. மோசே அவர்களைக் கடிந்து கொண்டார் (யாத் 16:15-20).

உலகின் அனைத்துப் படைப்புகளும் ஏதோ ஒரு வகையில் நமக்குப் பாடங்களாகின்றன. இறையியல் சிந்தனையாளர், தாமஸ் அக்குவினாஸ்; "இயற்கையைப் படிப்பதின் வழியே இறைவனை அறிந்து கொள்ளலாம்" என்கிறார். பிரான்சிஸ் அசிசி, "படைப்புகள் அனைத்தும் இறைவனைப் பிரதிபலிக்கும் கண்ணாடி" என்கிறார். தன்னலமற்று இயற்கையை பேணுவதே நாம் ஆண்டவரை மாட்சிமைப்படுத்தும் வழி, என்பதை உணர்ந்து செயல்பட அர்ப்பணிப்போம். கடவுள் விரும்பும் உலகமாய், அவர் படைத்த அற்புதமான தோற்றத்தில் இன்று நாம் வாழும் பூமி இல்லை. மனிதனால் உலகின் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் இயல்பான உலகை, இயற்கை வளம் நிறைந்த பூமியை, இறைவனின் அனைத்து படைப்புகளையும் சீர்குலைத்திருக்கிறது வெளிப்படையான உண்மை. ஆண்டவரின் எச்சரிப்பு பல வழிகளில் மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. நோவா காலத்து மக்கள் எச்சரிப்பை அலட்சியப்படுத்தி, தங்களுக்கு வரவிருந்த ஆபத்தை உணராதிருந்தார்கள். கடவுளால் படைக்கப்பட்ட படைப்புகளைப் பேணிப் பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொரு மனிதருடைய கரத்திலும் தரப்பட்டிருக்கிறது. திருச்சபையாக இதன் பங்களிப்பு கவனம் பெற வேண்டும். உலகத் திருச்சபைகளுள் தென்னிநிதியத் திருச்சபை இன்று படைப்புகளைப் பேணுவதற்கும், சுற்றுச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் அதிகம் கவனம் செலுத்தி வருகிறது. கடவுள் நல்லது என்று கண்ட படைப்புகளை அவரின் கட்டளைகளை ஏற்று பண்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் நம்மையும் அர்ப்பணிப்போம். இன்று இயற்கை மீது நாம் கொள்ளும் அக்கறையே வரும் தலைமுறை இப்புவியை பயன்படுத்த உதவி செய்யும். ஆண்டவர் நம்மை பயன்படுத்துவாராக.

அருள்திரு. J. **வின்செண்ட் றாபர்ட்**

19-06-2022

# வழிபாட்டில் இறைவெளிப்பாடு

**REVELATION OF GOD IN WORSHIP**

| | |
|---|---|
| 1அர 8:22-30 | திவெ 14:1-7 |
| திபா 148 | மாற் 3:1-6 |

**"கடவுளுக்கு அஞ்சுங்கள்; அவரைப்போற்றிப் புகழுங்கள்... மண், கடல், நீரூற்றுகள் ஆகியவற்றைப் படைத்தவரை வணங்குங்கள்."** (திவெ 14:7).

கடற்கரைக்கு சுற்றுலா செல்பவர்களில் கடலின் அழகை ரசிக்க, கடற்காற்றை அனுபவிக்க செல்வபர் சிலர், கடல் அலையில் மட்டும் கால் நனைத்து இன்பம் காண்பவர் சிலர், மணலில் சில மணித்துளிகள் உட்கார்ந்து உரையாடி பொழுதுபோக்கி திரும்பி வருபவர் சிலர். சிலர் கொஞ்சமாக கடல் அலையில் விளையாடி மகிழ்வர். ஆனால் சிலரோ கடலில் இறங்கி கடல் நீரில் மூழ்கி ஆனந்மாக ஆசை தீர குளித்து மகிழ்வர்.

ஆலயத்தொழுகைகளில் கலந்து கொள்ளும் மக்களிலும் இப்படிபட்டவர்கள் உண்டு. ஓய்வுநாளில் ஆலய ஆராதனைக்கு சென்று கடமையை மட்டும் நிறைவேற்றி விந்தது போல திரும்பி செல்வோர் உண்டு. என்ன செய்தி, என்ன அறிவிப்பு, என கேட்டு குறை சொல்ல செய்திகள் கிடைக்குமா என பார்க்க செல்லும் கிறிஸ்தவர்களும் உண்டு. பாடலுக்காகவே தொழுகைகளில் கலந்துகொள்ள செல்வோர் உண்டு. செய்தி மட்டும் கேட்க செல்வோர் உண்டு. பொறுப்பு, பதவி இலைகளை தக்க வைக்க தொழுகைக்கு சென்று கடமையை நிறைவேற்றுவோரும் உண்டு. ஆனால் சிலரோ இறைதொழுகையில் இரண்டற கலந்து, பக்தியாய், பரிசுத்தமாய் செயல்பட்டு இறைவனைப் பணிந்து செயல்படுவர். மன்றாட்டு வேளைகளில் உள்ளப் பூர்வமாக மன்றாடி, இறைவார்த்தைகளை கேட்டு பரவசமடைந்து, பாடல்களை பாடி இறைதரிசனம் பெற்று ஆன்ம திருப்தியோடு இல்லங்களுக்கு கடந்து செல்வோர் உண்டு.

ஆன்மீக வாழ்வின் உயிர்நாடி வழிபாடு (Worship) இறைவெளிப்பாடு என்பது கடவுளிடமிருந்து மனிதனுக்கு வருவது. மனிதனால் புரிந்துகொள்ள முடியாதவற்றை இறைவனே வெளிப்படுத்தி காட்டும் செயலே வெளிப்பாடு. இதனை கிரேக்கத்தில் Appocolupsis என்பர் இதன் பொருள் திரைவிலக்கி காட்டுதல் என்று பொருள்படும். இறைதொழுகையில் இறைவெளிப்பாடு எப்படி மனிதனுக்கு வெளிப்படுத்தப்படுகிறது என்பதை சிந்திப்போம்.

**1. உரையாடல் வழி வரும் இறைவெளிப்பாடு** : (1அர 8:24,25)

எருசலேம் கோவில் மங்கல படைப்பு வேளையில் சாலமோன் ஏறெடுத்த மன்றாட்டு இப்பகுதியில் கூறப்பட்டுள்ளது. இந்த மன்றாட்டு உரையாடல் நடையில் மிக அழகாக கூறப்பட்டுள்ளது. கடவுளிடத்தில் மன்றாடும் சாலமோன் சில உண்மைகளை நினைப்பூட்டி உரையாடுகிறார். எனது தகடபபனானேன்; எனவே தாவீதுக்கு நீர் சொன்னதை நிறைவேற்றும் என்று நினைப்பூட்டி மன்றாடினான். உம்மை மன்றாட்டு இறைவனோடு உரையாடும் அனுபவம். உண்மையான உரையாடலில் உறவுகள் வலுப்படும். புதிய செயல்களை, செய்ய உந்துதல் கிடைக்கும். இறைவனை பற்றிய புதிய புரிந்து கொள்ளுதல் கிடைக்கும். அவையே இறைவனைபற்றிய வெளிப்பாடுகளை அறிய காரணமாய் அமையும். இந்த உரையாடல் சார்ந்த மன்றாட்டும் இறைவெளிப்பாட்டை தெளிவாக உணர்த்துகிறது.

8:23 - ஆண்டவரே...உமக்கு ஒப்பான தேவன் இல்லை.

8:23 - உத்தமமான அடியாருக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காத்து வருகிற ஆண்டவர்.

8:24 - வாக்குதத்தத்தைக் காத்தருளுபவர்.

8:24 - வாக்குதத்தத்தைத் தமது கரத்தினால் நிறைவேற்றுபவர்.

8:28 - ஆண்டவரின் சந்நிதியில் செய்யும் மன்றாட்டை, விண்ணப்பத்தைக் கேட்பவர்.

8:28 - மன்றாட்டையும் விண்ணப்பத்தையும் தம் திருவுளத்தில் கொண்டருளுபவர்.

8:29 - ஆலயத்தின்மேல் தமது கண்களை இரவும் பகலும் திறந்து பார்ப்பவர்.

8:30 - ஜெபத்தைக் கேட்பவர், மன்னிப்பவர்.

நாள்தோறும் இறைவனிடம் மன்றாடி, இறைவனை தொழுது இறைவெளிப்பாட்டை பெற்று ஆண்டவரோடு உரையாடி உண்மை ஆன்மீக வாழ்வு வாழ முற்படுவோம்.

**2. அருஞ்செயல்கள் வழி வரும் இறைவெளிப்பாடு** :

(மாற்கு 3:4)

கிறிஸ்து செய்த அருஞ்செயல்கள் பல நற்செய்தி நூல்களில் உண்டு. அவைகளில் பல அன்றைய மருத்துவ துறையால் சரிப்படுத்த முடியாத சரீரம் சார்ந்த நோய்கள். எ.கா. தொழுநோய், சூம்பின கை போன்றவை. இப்பகுதியில் நோயை குணமாக்குவது கிறிஸ்துவுக்கு லேசான காரியமாக

இருந்தது. ஆனால் ஓய்வு நாளில் குணமளிப்பது தொடர்பாக யூதர்களின் சூம்பிபோன மனதை குணபடுத்துவது கடினமான காரியமாக இருந்தது. ஓய்வு நாளில் அருஞ்செயல் விடுதலைபணி செய்யக்கூடாது என்பதே பரிசேயர், யூதர் பலரின் மனநிலையாக இருந்தது. கிறிஸ்துவின் பேரில் குற்றம் காட்டுவதற்கே தொழுகையில் இவர்கள் பங்கு கொண்டிருந்தார்கள். உண்மையில் தொழுகை என்பது நன்மை செய்வாற்கு நம்மை உந்தி தள்ளுகிற அனுபவமாக இருக்க வேண்டும் என்பதே கிறிஸ்துவின் விருப்பம். எனவே யூதர்களின் இருதய கடினத்தையும் மீறி தன்னை அருஞ்செயல்கள் மூலமாக ஆண்டவர் வெளிப்படுத்தினார். இந்த பகுதிகளின் ஊடாக ஆண்டவர் தம்மை வெளிப்படுத்திய தன்மை வித்தியாசமானது.

1. மாற்றுத்திறனுடையோரும் இறை ஆலயத்தில் இறைதொழுகைக்குப் பங்குள்ளவர்கள்.
2. சபைக்குழு வெளியே இருப்போரும் தமது அருஞ்செயலுக்கு பங்குள்ளவர்கள். (லேவி 21:17 மாற்றுத்திறனாளி கடவுளின் அப்பத்தை செலுத்தும்படி சேரலாகாது) யோவா 10:16.
3. நன்மை செய்வதே தமது வருகையின், திருப்பணியின் நோக்கம்.
4. ஓய்வுநாள் நன்மை செய்வதற்கான நாள். நன்மை செய்வதற்குத் திட்டமிடுகிற நாள்.
5. மாற்றுத்திறன் படைத்தோரும் மனித சமூகத்தில் மாண்புடன் வாழ தகுதி படைத்தவர்களே.
6. கிறிஸ்து இருதய கடினம் உள்ளோருக்கு எதிரானவர். அவர்கள் மேல் தமது விசனத்தையும், கோபத்தையும் வெளிப்படுத்த தயங்காதவர்.

இன்று மருத்துவத்துறை மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளது. மருத்துவ துணையோடு இணைந்தும் இறைவனின் விடுதலைப் பணியை செய்யவேண்டும். இறைத்தொழுகைகளில் இறைவெளிப்பாடு பெறும் திருச்சபை உலகின் எல்லா தீமைகளிலிருந்தும் மக்களை விடுதலை செய்யும் கருவிகளாக இருக்க வேண்டும் என்பதே இறைவனின் எதிர்பார்ப்பு.

***3. தரிசனம் வழியாக வரும் இறைவெளிப்பாடு*** : (திவெ 14:5)

பக்தியாளர்களின் பெரிய எதிர்பார்ப்பு என்ன? வாழ்வின் முடிவில் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பு நிற்க வேண்டும். நித்திய வாழ்வின் பலனை அடைய வேண்டும். தேவ சத்தத்தை அருகிலிருந்து கேட்கும் வாக்கியம் பெற வேண்டும் என்றும் அழியாத வாழ்வு பெற வேண்டும். ஆட்டுக்குட்டியானவரோடு நித்திய ஆளுகையில் பங்கடைய வேண்டும்.

தரிசனநூல் (வெளிபடுத்தல்) அதற்கான தரிசனம்மிக்க வாழ்வு வேண்டும் என வெளிப்படுத்துகிறது. கறைபடாத வாழ்வு, கற்புள்ள வாழ்வு, ஆட்டுக்குட்டியானவர் (கிறிஸ்து) பின்பற்றுகிற வாழ்வு, மீட்டுக்கொள்ளப்பட்ட வாழ்வு, கபடமில்லா வாழ்வு, வாழ வேண்டும் என வெளி 14:4,5 ஆகியவர்களில் காண்கிறோம். உண்மையில் இறைதொழுகைகள் தரிசனங்களை உள்வாங்கிக் கொள்ளவும், தரிசனங்களை உறுதிபடுத்தவும் நம்மை தூண்டுகிற அனுபவங்கள். ஆட்டுக்குட்டியானவர் முன்பாக திரளான அனுபவங்கள். ஆட்டுக்குட்டியானவர் முன்பாக திரளான கூட்டம். புதுப்பாடல்கள் பாடப்படுகிறது. மீட்டுக்கொள்ளபட்டவர்களால் சிறப்பு தொழுகை நடைபெறுகிறது. அதில் யாரை தொழுதுகொள்ள வேண்டும் என்ற உண்மை வெளிப்படுத்தப்படுகிறது. படைப்பாளராம் கடவுளை தொழுதுகொள்ளுங்கள். அவருக்கு பயந்து அவரையே மகிமைப்படுத்துங்கள் என்ற கட்டளை கொடுக்கப்படுகிறது.

திருச்சபை இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்ட மக்கள் இயக்கம். கிறிஸ்துவின் வெளிப்பாட்டை பெற்ற திருச்சபை புதிய மானிடத்தின் சின்னமாக விளங்க வேண்டும் என்பதே இறைவனின் எதிர்பார்ப்பு திருச்சபை தன் பயணத்தில் பல மேடு பள்ளங்களை தாண்டி வந்துள்ளது. பல குறைபாடுகள் இருந்த போதும் வழிபாடுகளை திருச்சபை விட்டுவிடவில்லை. தொழுகைகளின் தொடர்ச்சியில் இறைவெளிப்பாடுகளை பெற்று ஆண்டவரின் திருப்பணியில் தோள்கொடுக்க திருச்சபை கடமைப்பட்டுள்ளது.

அருள்திரு. S. **கிறிஸ்டோபர் ஏசுமணி**

26-06-2022

# சீடர்களை உருவாக்குங்கள்
**MAKE DISCIPLES**

1அர 19:11-21 உரோ 16:3-16
திபா 34:11-22 யோவா 1:35-42

**அவர் போய் முதலில் தம் சகோதரரான சீமோனைப் பார்த்து, "மெசியாவைக் கண்டோம்" என்றார்** (யோவா 1:41)

சீடர் என்ற வார்த்தை ஆங்கில வார்த்தையாகிய disciple மற்றும் இலத்தீன் சொல்லாகிய discipulus என்ற மூலச் சொல்லிலிருந்து உருவானதாகும். இதனுடைய பொருள் "ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு கற்றுக்கொள்ளுவதற்காக ஒருவரை பின்தொடர்வதாகும்" (One who follows another for the purpose of learning). மேலும் சீடருடன் தொடர்புடைய disciple (கட்டுப்பாடு) என்ற சொல்லும் மிக முக்கிய இடம் பெறுகிறது. சீடத்துவம் என்பது ஒரு வாழ்க்கை முறை. தனி நபர், சமயம், சமூகம், குழு ஆகியவற்றின் கொள்கையை ஏற்று அதனுடைய கருத்தியல், போதனைகள், செயல்களை உள் வாங்கிக் கொண்டு கீழ்ப்படிந்து, கட்டுப்பட்டு, அப்படியே பின்பற்றி நடத்தல் ஆகும். இதன் உண்மையான பொருள் தலைவருடைய போதனைகளை பின்பற்றி நடப்போர் சீடர் ஆவர். குரு-சீடர் உறவு நிலை, இயேசு கிறிஸ்து தலைமை குரு, அவரைப் பின்பற்றும் சீடர்கள் சிறப்பானவர்கள் என்பதன் வெளிப்பாடு ஆகும். ஆகவே சீடராக்குதல், சீடராக்குங்கள், சீடர்களை உருவாக்குதல், கிறிஸ்துவின் சீடராக அவரை பின்பற்றுவதுடன் நின்று விடுவது அல்ல. பிறரையும் அவரது சீடர்களாக மாற்றி, கிறிஸ்துவின் தன்மைகளுடன் வாழ்வதற்கான ஓர் படிநிலை. மேலும் இறையரசில் பங்கேற்பதற்கான முயற்சியின் இறையியல் தகவுகள் சீடத்துவத்தில் வெளிப்படுகின்றன. சீடர்களை உருவாக்குங்கள் என்ற செம்பொருளில் சீடராதலின் தன்மைகளையும் நோக்கத்தையும் இத்திருமறைப் பகுதிகளின் வழியாகத் தியானிப்போம்.

## *1. சீடத்துவத்தின் நோக்கம்* (The Purpose of Discipleship)

யோவான் 1:38-இல் "இயேசு திரும்பிப் பார்த்து, அவர்கள் தம்மைப் பின் தொடர்வதை கண்டு, "என்ன தேடுகிறீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டார். அவர்கள், "ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" என்று கேட்டார்கள்.

யோவான் நற்செய்தி நூலின் முதல் அதிகாரத்தில் எழுப்பப்பட்டுள்ள (1) என்ன தேடுகிறீர்கள்? (2) நீர் எங்கே தங்கியிருக்கிறீர்? என்ற இரண்டு கேள்விகளும் சீடத்துவத்தின் நோக்கத்தைப் பிரதிபலிக்கும் கேள்விகளாகும். இயேசு கிறிஸ்து தமது ஊழியப் பாதையில் தேடுகிறவர்கள் பெற்றுக்கொள்வார்கள் என போதித்தார். சீடத்துவம் வெறும் வார்த்தையுடன் நின்றுவிடாது. தேடும் போது தான் முழுமை பெறுகிறது. சீடர்கள் இறைநீதி மற்றும் இறையன்பை தேடினார்கள். மத் 7:7-இல் "... தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள்" என்று இயேசு கிறிஸ்து தேடலின் பலனைக் குறிப்பிடுகிறார்.

மத் 28:5-இல் வானதூதர் இயேசு கிறிஸ்துவின் கல்லறையைப் பார்க்கச் சென்ற பெண்களிடம் "...நீங்கள் அஞ்சாதீர்கள்: சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக்குத் தெரியும்" என்கிறார். இவர்கள் உலகத் தேடலில் ஏமாற்றம் அடைந்தனர். இன்றும் மரித்துப்போன, உயிரற்ற உறவற்றவற்றில் கிறிஸ்துவைத் தேட முயற்சித்தால் தோல்வி தான். சீடர்களாய் உருவாக உயிர்பெற்று எழுந்த இயேசு கிறிஸ்துவில் தேட முயற்சித்தால் மிகுந்த பலன் உண்டு. உயிர்த்த கிறிஸ்து நம்முடன் தங்கியிருக்கின்றார். அவர் நம்முடன் இருப்பதை உறுதி செய்ய நம் வாழ்வு, குடும்பம், திருச்சபை, சமூகம் அவர் தங்கும் இருப்பிடமாக்கப்பட வேண்டும். அவர் எங்கும் நிறைந்திருக்கிறார். யோவா 1:39-இல் இயேசு அவர்களிடம் "... வந்து பாருங்கள்; என்றார். அவர்களும் சென்று ... அவரோடு தங்கியிருந்தார்கள்." கிறிஸ்துவுடன் இருத்தலும், அவருக்காகச் செயல்படுதலுமே சீடத்துவத்தின் முதன்மையான நோக்கமாகும்.

### *2. துன்பத்தை ஏற்கும் சீடர்கள்*

யோவான் 1:36 ... இதோ! "கடவுளின் ஆட்டுக்குட்டி."

திருமுழுக்கு யோவான் ஒப்பற்ற ஊழியராக விளங்கினார். இவர் தாயின் கருவிலேயே தேர்ந்து கொள்ளப்பட்டு 'யோவான்' என்று பிறப்பதற்கு முன்பே பெயரிடப்பட்டவர். இருளிலும், இறப்பின் பிடியிலும் இருப்போருக்கு ஒளி தர விடியலாக வரவிருப்பவரை முன்னறிவிக்கப் பிறந்தவர் (லூக் 1:79). யோவான் இறைவன் மாட்சியுறுவதற்காக கடினமாக உழைத்தவர். ஆண்டவர் இயேசுவும் அவர் வழியாக மாட்சியுற்றார்.

இன்றைய நற்செய்தியில் திருமுழுக்கு யோவான் "... இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப்போக்குபவர்" (யோவா 1:29) என்று இயேசு கிறிஸ்துவைத் தன் சீடர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். இந்த அறிமுகமானது அவர்களுக்குள் இருக்கின்ற கடவுளுக்கான தேடல் உணர்வைத் தொடங்கி

வைக்கிறது. ஆகவே அவர்கள் இருவரும் பாவத்தைப் போக்கும் ஆட்டுக்குட்டியானவரை பின் தொடர்ந்தனர்.

“நீரே மெசியா, வாழும் கடவுளின் மகன்” என்று சான்று பகர்ந்து கடவுளின் எண்ணத்தோடு ஒத்துப் போய் கற்பாறையாகத் திகழ்ந்த பேதுரு (மத் 16:13-20) தடைக்கல்லாகத் தடுமாறிப் போகிறார். பாடுகள் பட வேண்டும், கொல்லப்பட வேண்டும் என்று தம் எருசலேம் பயணத்தைப் பற்றி இயேசு பேசியபோது பேதுரு, “வேண்டவே வேண்டாம்” என்று தடையாக நிற்கிறார். கடவுளுடைய எண்ணங்களைப் பற்றி நினைத்தவர் மனிதருடைய பாடுகளை பற்றி சிந்தித்து துன்பத்தை ஏற்கத் தயங்குகிறார் (மத் 16:21-27). ஆகையால் இயேசு கிறிஸ்து மத் 16:23 இல் “. . . என் கண்முன் நில்லாதே சாத்தானே, நீ எனக்குத் தடையாய் இருக்கிறாய்; ஏனெனில் நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய் என்றார்.”

செபதேயுவின் மகன்களான யோவான், யாக்கோபிடம் இயேசு கிறிஸ்து, “என் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா?” என்ற கேள்வியைக் கேட்கிறார் (மத் 20:22). தந்தையின் திருவிருப்பத்தை நிறைவேற்றத் துன்புறும் ஊழியராகிய இயேசு கிறிஸ்து தம் பாடுகளை பேதுருவுக்கு மூன்று முறை முன்னறிவிக்கிறார். முதலாவதாக, இயேசு தாம் எருசலேமுக்குப் போய் துன்பம் ஏற்று கொலை செய்யப்படுவார் என்பதாகவும் (மத் 16:21), இரண்டாவதாக, பாடுகளின் பாதையில் அவரது கனிவான பார்வை (லூக் 22:63), மூன்றாவதாக, என்னை அன்பு செய்கிறாயா? (யோவா 21:15-19) என்பதாகும். இது பேதுருவில் கிரியை செய்ததால் இயேசுவைப் போல மரணமடைய தகுதியில்லை என்று சொல்லி கூடுதலாகவே தலை கீழாக சிலுவையில் தொங்கி மரணத்தைத் தழுவினார்.

உலகின் பாவத்தை ஏற்று நாம் துன்பங்கள் வழியாக வாழ்வு பெற சிலுவைப் பாடுகளை கிறிஸ்து ஏற்று பழுதற்றப் பலியாகத் தம்மை ஒப்படைத்து நம்மை மீட்டார். இயேசுவைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு இயேசுவை பின்பற்றி வர வேண்டும் (மத் 16:24, மாற் 8:34, லூக் 9:23). தொடக்கத் திருச்சபையினரும் கடவுளுக்காகவும், உடன் விசுவாசக் கூட்டத்தாருக்காகவும் பாடுபட்டு உழைத்தனர். துன்பங்களை ஏற்று உண்மைச் சீடர்களாகச் சான்று பகர்ந்து வாழ்ந்தனர். பலர் இரத்தசாட்சிகளாக மாண்டு உயிர் துறந்தனர் (உரோ 16:6,12) மத்தேயு 10:38-இல்

“தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர்” என்கிறார் கிறிஸ்து.

### *3. சீடராக்கும் பங்காளர்கள்*

யோவான் 1:40,41 “யோவான் சொன்னதைக் கேட்டு இயேசுவைப் பின் தொடர்ந்த இருவருள் அந்திரேயா ஒருவர். அவர் சீமோன் பேதுருவின் சகோதரர். அவர் போய் முதலில் தம் சகோதரரான சீமோனைப் பார்த்து, “மெசியாவைக் கண்டோம்” என்றார்.”

அந்திரேயா தான் அழைக்கப்பட்ட முதல் திருத்தூதர் இயேசுவை முதன் முதல் மெசியா என்று அடையாளம் கண்டு கொண்டவர் இவரே. இவர், இயேசுவோடு தங்கிய பின், அவரைத் தன் சகோதரனாகிய சீமோனுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். இவருக்குப் பின் தான் இவருடைய சகோதரர் பேதுர இயேசுவை மெசியா என்று அடையாளம் கண்டு கொண்டார் (லூக் 9:18-21). கடவுளைப் பிறருக்கு அறிமுகப்படுத்தும் மாபெரும் பொறுப்பு நமக்கு உண்டு என்ற செய்தியைத் திருமுழுக்கு யோவான் மற்றும் அந்திரேயா நமக்கு எடுத்துரைக்கின்றனர். கிறிஸ்துவை அறிந்தவர்கள், அனுபவித்தவர்கள் அதைப் பிறருக்கு அறிவிக்காமல் இருக்க முடியாது. “. . . நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது” (திப 4:20) என்று திருத்தூதர்கள் கூறுவது நினைவுகூரத்தக்கது. கிறிஸ்துவின் அன்பை, போதனைகளைப் பின்பற்றுவோர் பிறரிடம் அறிவித்து அவர்களை கிறிஸ்துவின் சீடர்களாக மாற்றுவதே உண்மையான இறைப் பங்காளர்களின் கடமையாகும்.

திருச்சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்கப் போகின்றவரை, இயேசுவின் சீடராக (யோவான் நற்செய்தியின்படி) கொண்டு வந்து சேர்த்தவர் அந்திரேயா. இவர் ஆண்டவருக்கும், மனிதருக்கும் நெருக்கமாக இருந்தார். எனவே தான் கிறிஸ்துவின் மீது ஆழமான நம்பிக்கை கொண்டவராக, மக்களோடு நன்கு பழகியவராக, கிரேக்கர்கள் இயேசுவைக் காண விரும்பிய போது இயேசுவிடம் எடுத்துச் சொல்லி அவர்களும் இறையனுபவம் பெற உதவ முடிந்தது. இவருடைய சீடத்துவப் பணி சீமோனை இயேசுவிடம் கொண்டு சேர்ப்பதில் ஆரம்பித்து, கிரேக்கர்களைக் கொணர்வதில் வேரூன்றி, பாலஸ்தீனம், அக்காயா, கிரீஸ் எனப் பரந்து விரிந்தது. கி.பி. 60 இல் நீரோவின் கொடுங்கோலாட்சியில் ஆங்கில X வடிவ சிலுவையில் அறையப்பட்டு மரணத்தோடு போராடுகிற அந்த நிலையிலும் இரண்டு மூன்று நாட்களுக்குத் தம்மை சந்திக்க வந்த

மக்களுக்கு இயேசுவை நற்செய்தியாக அறிவிக்க முடிந்தது. இது உண்மையான சீடத்துவமன்றோ!

மத் 28:19,20 இல் கிறிஸ்து தாம் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள் என்றார். சீடராக்கும் பணி தொடர்பணி. இதன் வெளிப்பாடு தொடக்க திருச்சபைச் சீடர்கள் முதன் முதல் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர் (திப 11:26). எலியா இறைவாக்கினரால் சீடத்துவ இறைப்பணிக்கு எலிசா அழைப்பு பெற்றுக்கொண்டு உண்மையாக இறைப்பணியாற்றினார் (1 அர 19:11-21).

சீடத்துவத்தின் நோக்கத்தைப் புரிந்து, துன்பத்தை, பாடுகளை ஏற்று சான்று பகர்ந்து உண்மையான சீடத்துவப் பங்காளர்களாகி இறையரசுக்கு உரியவர்களாவோம்.

அருள்திரு. **K. எட்வின் ஜாண் தேவகுமார்**

03-07-2022

பொறுப்பாண்மை ஞாயிறு

# இழப்பை ஒரு பொருட்டாகக் கருதாமல் கொடுத்தல்

**GIVING WITHOUT COUNTING THE COST**

தொநூ 13:8-18 2கொரி 8:1-15
திபா 15 மாற் 14:3-11

**"...அவர்கள் வறுமையில் மூழ்கி இருந்தாலும் வள்ளன்மையோடு வாரி வழங்கினார்கள்"** (2கொரி 8:2).

Our society values how much a person has. God values how much a person gives. நாம் எவ்வளவு வைத்திருக்கிறோம் என்பதைச் சமூகம் மதிப்பீடு செய்கிறது. நாம் எவ்வளவு கொடுக்கின்றோம் என்று கடவுள் மதிப்பீடு செய்கின்றார். இந்த வரிகள் ஒசோலா மெக் கார்ற்றி (Oseola Mc Carty) என்ற அமெரிக்கப் பெண்மணியின் வாழ்க்கைக் குறிப்பில் எழுதப்பட்டுள்ளது. தந்தை யாரென அறியாத இப்பெண் தனது தாயார் மற்றும் பாட்டியால் வளர்க்கப்பபெற்றார். குடும்ப வறுமை காரணமாக 6 ஆம் வகுப்பு வரை கல்விகற்றுப் பின்னர் வீட்டு வேலைக்குச் சென்றார். கறுப்பு இனப் பெண்மணி என்பதால் பல இன்னல்களுக்குள்ளானார். ஆனால் 60 ஆண்டுகளாக வீட்டு வேலை மட்டுமே செய்து பெரும் நிதியைச் சேமித்து வைத்திருந்தார். தன்னைப்போன்று வறுமையால் கல்வி கற்க முடியாத மாணவர்களுக்கு உதவவேண்டும் என்ற முனைப்புடன் 1995 ஆம் ஆண்டு 15,0000 டாலர் பணத்தை எதற்கு மிசிசிபி பல்கலைக்கழகத்திற்கு (University of Southern Missisipi) மாணவர்களின் கல்வி உதவித்தொகைக்காக வழங்கினார். இன்றும் இந்தக் கல்வி உதவித் தொகையினால் பயன்பெறும் மாணவர்கள் அனேகர். அமெரிக்க மக்களாலும், அரசாலும் மிகவும் பாராட்டப்பட்ட இப்பெண், கொடுத்தலுக்கு பெரும் உதாரணமாகத் திகழ்கின்றார். கடவுளைக் கொடுத்தலின் ஆதாரமாகவும் (யோபு 1:21) கொடுத்தலின் முழுமையாகவும் (யோவா 3:16) திருமறை சுட்டிக்காட்டுகின்றது. இழத்தலின் உச்சம் கொடுத்தல் என்பதற்கு ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கை, சிலுவை மரணம் ஓர் உதாரணம். நாம் வாழும் காலகட்டத்தில் இழப்பை ஒரு பொருட்டாக எண்ணாமல் எவ்வாறு கொடுக்கலாம், அதனால் என்னென்ன நன்மைகளை அடையலாம் என்பதை சிந்திப்போம்.

***1. முன்னுரிமையை விட்டுக்கொடுத்தல்***: (தொநூ 13:8-18)

தொநூ 13:8இல் "வாக்குவாதம்" என்ற சொல்லிற்கு எபிரெயத்தில் "மேரிபா" (Meribah) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தை "ரிப்" (rib) என்ற மூல வார்த்தையிலிருந்து வருகின்றது. இதன் பொருள் என்னவென்றால் வாக்குவாதம் அல்லது சண்டை (Strife or Contention) என்பதாகும். மேரிபாவுக்கும் கொடுத்தலுக்கும் ஒரு தொடர்பு உள்ளது. மோசேயின் காலகட்டத்தில் ஒருமுறை மக்கள் தண்ணீரின்றி மோசேயுடன் வாடககுவாதத்தில் ஈடுபட்டனர். அந்த இடத்திற்கு மேரிபா என்று பெயரிடப்பட்டது. அங்கு கடவுள் மக்கள் வாக்குவாதம் செய்யாமல் அமைதியாய் பயணிக்க தண்ணீரை தாராளமாய் கொடுத்தார். (எண் 20:11) Nrsv மொழிபெயர்ப்பில் "Water came out aboundantly" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு வாக்குவாதத்திற்குப் பின்னர் கடவுள் ஒரு பெயரியகொடுத்தலை நிறைவேற்றுகின்றார்

தொநூ 13:7-9 வசனங்களில், வாக்கு வாதங்களைத் தொடர்ந்து ஆபிரகாம் ஒரு பெரிய கொடுத்தலை நிறைவேற்றுகின்றார். அது அவரது முன்னுரிமையை விட்டுக்கொடுக்கின்ற செயலாகக் காண்ப்பட்டது. இங்கு ஆபிரகாமின் அடிப்படை நோக்கம் தனது மேய்ப்பருக்கும் லோத்தின் மேய்ப்பருக்கும் சமாதானம் ஏற்பட வேண்டும். என்பதே எனவே லோத்திடம் "நாடு முழுவதும் உன் கண்முன் இருக்கின்றது அல்லவா?" என்கிறார் (தொநூ 13:9). இங்கு சமாதானம் ஏற்படவேண்டும் என்பதற்காக ஆபிரகாம் தனது முன்னுரிமையை விட்டுக்கொடுப்பதைக் காணமுடியும். அதனால் ஏற்பட்டும் இழப்பை ஒரு பொருட்டாக எண்ணவில்லை.

ஆபிரகாம் தனது முன்னுரிமையை விட்டுக்கொடுப்பதில் தலைசிறந்த முன்னுதாரணமாக நிகழ்கின்றார். கடவுள் ஆபிரகாமிடம் மூன்று முன்னுரிமைகளை விடச் சொல்கிறார் (தொநூ 12:1)

உன் நாட்டிலிருந்தும் (Country)

உன் இனத்தவரிடத்திலிருந்தும் (Clan)

உன் தந்தை வீட்டிலிருந்தும் (Father's house)

இந்த மூன்றுமே ஆபிரகாமுக்கு முன்னுரிமை பெற்றவை. ஆனால் கடவுளின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து அவற்றை விட்டுக்கொடுக்கின்றார். செல்வங்களுக்கெல்லாம் செல்வமாகிய அவருடைய ஒரே மகளான பலியிடச் சொன்னார் கடவுள். தன் மகள் தனது முன்னுரிமைக்கு அடையாளம். ஆனால் அவனையும் விட்டுக்கொடுக்க துணிவு கொள்கின்றார். இவ்வாறு இழப்பை ஒரு பொருட்டாக எண்ணாமல் முன்னுரிமையை விட்டுக்கொடுத்த ஆபிரகாம் கடவுளிடமிருந்து எல்லா

ஆசிகளையும் பெற்றுக்கொண்டார். எனவே சகோதர உறவுகள் வலுபெறவும் சமாதானம் பெருகவும் இறையாசி நம்மில் தங்கவும், இழப்பை ஒரு பொருட்டாக எண்ணாமல் முன்னுரிமையை விட்டுக்கொடுத்த ஆபிரகாமைப்போல நாமும் விட்டுக்கொடுத்து வாழ கடவுள் நம்மை அழைக்கின்றார்.

## *2. வறுமையிலும் வள்ளன்மையோடு கொடுத்தல்:*

(2கொரி 8:1-15)

மாசிதோனியா என்ற சொல்லுக்கும், மாசிதோனியாவின் நிலப்பரப்பிற்கும், மாசிதோனியாவில் வாழ்ந்த மக்களுக்குப் ஒரு ஒற்றுமை உண்டு. அது என்னவெனில்

(i) மாசிதோனியா என்ற கிரேக்க சொல் “உயர்ந்தவைகள்” (tauones) என்பதைக் குறிப்பிடும் சொல்.

(ii) மாசிதோனியா நிலப்பரப்பில் அதிகமாக “உயர்ந்த மலைகள்” காணப்படும்.

(iii) மாசிதோனியாவிலுள்ள மக்கள் “உயர்ந்த உள்ளம்” படைத்தவர்கள்.

இந்த மாசிதோனியா மக்களைப் பவுல் கொரிந்து சபைக்கு உயர்வாகக் கூற காரணம் என்னவெனில் அவர்கள் தங்களால் இயன்ற அளவுக்குத் தாங்களாகவே கொடுத்தார்கள். ஏன் அளவுக்கு மீறியே கொடுத்தார்கள் (2கொரி 8:3).

மாசிதோனியாவிலுள்ள ஒரு உயர்ந்த உள்ளம் கொண்ட மனிதன் பவுலை அந்த மக்களுக்கு நற்செய்தி அறிவிக்க அழைப்பது போன்ற கனவு ஒன்றை பவுல் காண்கின்றார் (கிப 16:9-10) அந்த அழைப்பினிமித்தம் பவுல் மூன்று சபைகளை மாசிதோனியாவில் நிறுவினார். பிறப்பு தெசலோக்கேயா, பெராயா மூன்று கடிதங்களை பின்னர் எழுதினார். அவை, பிலிப்பியர், 1 மற்றும் 2தெசலோனிக்கர் ஆகும். பவுல் நிறுவிய இந்தச் சபைகளின் மக்கள் கொடுப்பதில் எத்தகையோர் என்பதை பவுல் இந்த பகுதியில் விளக்குகின்றார்.

வறுமையில் மூழ்கி இருந்தாலும் வள்ளன்மையோடு வாரி வழங்கினார்கள் (2கொரி 8:2)

அளவுக்கு மீறியே கொடுத்தார்கள் (3)

தங்களை முதன்மையாக ஆண்டவருக்கு அர்ப்பணித்தார்கள் (5)

தாய்த் திருச்சபையாகிய எருசலேம் திருச்சபையில் வறுமையால் வாடிய ஏழைகளுக்கு நிதி திரட்டிய பவுலிடம் தங்களது, “இறைமக்களுக்கான அறப்பணியின் பங்கை” (2கொரி 8:4) ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மாசிதோனியாவிலுள்ள மக்கள் வேண்டினர்.

சாதாரணமாக நிதி திரட்டுபவர்கள் தாம் நிதி வேண்டி கெஞ்சவேண்டியது சூழல் ஏற்படும். ஆனால் இங்கு நிதி கொடுப்பவர்கள் தங்களது நிதியைப் பெற்றுக்கொள்ளுமாறு நிதி கேட்போரிடம் கெஞ்சுவது வியப்பளிக்கின்றது. அத்தகைய உயர்ந்த மனமுடைய இந்த மக்கள் கொடுத்த சூழல் மிகவும் முக்கியமானது. "கடுமையாகச் சோதிக்கப்பட்டபோதும்" (great trial) வறுமையில் மூழ்கி இருந்தாலும்" (deep poverty) என்ற சொற்றொடர்கள் அவர்கள் கொடுத்த சூழலைக் காட்டுகின்றது. எப்படி இந்தச் சூழலிலும் இவர்களால் இந்த அளவிற்குத் தாராளமாய் கொடுக்க முடிந்தது, அதன் காரணமென்ன என்று பார்த்தால் 5ஆம் வசனத்தில் "தங்களை முதன்மையாக ஆண்டவருக்கு அர்ப்பணித்தார்கள்" என்று காண முடியும். எனவே முதலாவது கடவுளுக்கு நம்மை கையளிக்கும் போது கடவுளின் இயல்புகள் நம்மில் குடிகொள்கின்றன. அந்த இயல்புகள் தான் நம்மைக் கொடுப்பதற்குக் கொடுக்கத் தூண்டுபவையாக அமைகின்றன. எனவே வறுமையிலும் வள்ளன்மையோடு கொடுத்த மாசிதோனியா திருச்சபைகளைப் போல நாமும் கொடுக்க கடவுள் நம்மை அழைக்கின்றார்.

### *3. மதிப்புமிக்கதைக் கொடுத்தல்:*

மதிப்புமிக்கதை கொடுத்தல் என்பது வெறும் பொருளையும், பணத்தையும் கொடுப்பதோடு நின்றுவிடுவதல்ல. நம் நேரத்தை பிறருக்காக செலவிடுதல், பிறருடைய வாழ்வுமீது கரிசனை கொள்ளுதல், பிறர் துன்பத்திலும், பிறரது பிணியின் போதும் அவரோடு நிற்றல் போன்றவைகளும் மதிப்புமிக்கவைகளே ஆண்டவர் இயேசுகிறிஸ்துவுக்கும் பெத்தானியாவுக்கும் அதிக தொடர்பு உண்டு. பெத்தானியா என்னுமிடம் எருசலேமிலிருந்து 32 கிமீ தொலைவில் ஒலிவமலையில் அமைந்திருக்கும் ஒரு கிராமமாகும். ஆண்டவர் இயேசு இங்கு லாசருவை உயிரோடு எழுப்பினார். சகோதரனை இழந்த அந்த குடும்பத்தோடு தனது மதிப்புமிக்க நேரத்தைச் செலவிட்டார். அவர்களது கவலைகளை அகற்றினார். அதைப்போன்று சீயோன் என்ற தொழுநோயாளியின் இல்லத்தில் அவர் தனது மதிப்புமிக்க நேரத்தைச் செயலிட்டார். பொதுவாக யூதப் பாரம்பரியத்தில் தொழுநோயாளியின் இல்லத்திற்கு யாரும் செல்வது இல்லை ஆனால் இயேசு தனது நேரத்தை இவரது இல்லத்தில் செல்லிடுகின்றார்.

இந்தத் திருமறைப்பகுதியில் சீமோனின் இல்லத்தில் ஆண்டவர் இயேசுகிறிஸ்து சீடர்களுடன் இருக்கும் வேளையில் ஒரு பெண் விலையுயர்ந்த தைலத்தை இயேசுவின் தலையில் ஊற்றினார். ஆண்டவர்

இயேசு "என் அடக்கத்திற்காக இவர் முன்னதாகவே என் உடலுக்கு தைலம் பூசிவிட்டார்" (மாற் 14:8) என்று அப்பெண்ணை பார்த்து முறுமுறுத்தவர்களிடம் கூறினார். இங்கு அனைவரும் முறுமுறுக்க இயேசு இப்பெண்ணை பாராட்ட காரணம் ஒன்றுதான். இப்பெண் ஆண்டவர் இயேசு தனது மதிப்பு மிக்க உயிரை இந்த உலகினை மீட்டதற்காக கொடுக்க ஆயத்தமாக உள்ளார் என்பதை உணர்ந்தார் எனவே தன்னிடம் காணப்பட்ட மதிப்புமிக்க தைலத்தை அவருக்கு ஊற்றினார். இந்தச் செயல் உலகெங்கும் எடுத்துக்கூறப்படும் என்றும், இப்பெண் நினைவு கூரப்படுவாள் என்று இயேசு கூறினார். எனவே இறைமகன் இயேசுவை போன்று மதிப்புமிக்கவற்றை, நேரத்தை, உழைப்பை மனித மேம்பாட்டிற்காக நாமும் கொடுக்க அழைக்கப்பட்டுகின்றோம். அதைப்போன்று இப்பெண்ணை போன்று நம்மால் இயன்றதை விலைமதிப்புமிக்கதை கடவுளுக்கும் கொடுத்து ஆண்டவரின் பாராட்டைப் பெறுவோம்.

திருச்சபை ஒரு கொடுக்கும் சமூகமாக வாழ கடவுள் நம்மை கிறிஸ்து இயேசுவின் வழியாக அழைத்திருக்கின்றார். எனவே ஆபிரகாமைப் போன்று முன்னுரிமைகளை விட்டுக்கொடுப்பவர்களாகவும், மாசிதோனியா சபைகளைப்போன்று வள்ளள்மையோடு கொடுப்பவர்களாகவும், இயேசுவைப்போன்று, இயேசுவால் பாராட்டப்பட்ட இப்பெண்ணை போன்று மதிப்புமிக்கதையும் கொடுப்பவர்களாக இந்தச் சமுகத்திற்கு சான்று பகர கடவுள் துணைசெய்வாராக.

திரு. Y. **சுஜின் ராஜ்**

10-07-2022



# இறையியல் கல்வி : நம்பிக்கைக்குரியவர்களை உருவாக்குதல்

## THEOLOGICAL EDUCATION : MAKING OF THE FAITHFUL

யோசு 4:1-9 1திமொ 6:11-16
திபா 1 மத் 13:1-9

**"விசுவாச வாழ்வு என்னும் போராட்டத்தில் ஈடுபடு..."** (1திமொ 6 :12).

ஜோனத்தான் கான் என்ற கிறிஸ்தவ இறைப்பணியாளர் எழுதிய "The Mystery of the Shemitah" என்ற நூலில் "ஒரு பெரிய ஆன்மிக பொருளாதார அசைவும் சரிவும் வருகிறது. மானுடம் இப்போது சரிவின் விளிம்பில் நிற்கிறது." (Humanity is at the verge of a spiritual and economic shaking and collapse) என்கிறார். வளர்ந்து வரும் ஊழல்கள், போராட்டங்கள் மற்றும் வழக்குகளை திருச்சபை சந்தித்துக் கொண்டிருக்கிறது. ஒரு நபர் தான் நினைத்ததை சரி என்று முடிவு செய்து பின்னர் அது எவ்வளவு பைத்தியமானது என்றும் பேரழிவை ஏற்படுத்தும் என்றும் தெரிந்தும் தன் முடிவில் உறுதியாக ஒட்டிக்கொள்பவர் தீர்க்கமான வலிமையானவராக கருதப்படுகிறது. ஒரு காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சோரன் கியர்க்ககார்டு என்ற டேனிஸ் மெய்யியலாளர் ஏமாறுவதற்கு இரு வழிகள் உள்ளன. ஒன்று உண்மை இல்லாததை நம்புவது, மற்றொன்று உண்மை என்பதை ஏற்க மறுப்பது என்கிறார். (There are two ways to be fooled. One is to believe what is not true, the other is to refuse to accept what is true) இன்று சரிவின் விளிம்பில் நிற்பதற்கும், ஏமாற்றப்பட்டவர்களாக வாழ்வதற்கும் காரணம் கிறிஸ்தவ மக்களிடம் தெளிவான விவிலியம் சார்ந்த இறையியல் சென்றடையவில்லை என்பதுதான். மூளைச் சார்ந்த இறையியல் கல்வி (Cerebral theological education), தொழில் முறை இறையியல் கல்வி (professional), தொலைநோக்குப்பார்வை (vision) இல்லாத, தனிநபர் (personal), திருப்பணி (ministerial), இறையியல் (theological), உருவாக்கம் பெற அழைப்பும் அர்ப்பணிப்பும் இல்லாத இறையியல் கல்விதான் காரணம் என்றும் திருச்சபைகளில் சரிவின் விளிம்பில் நிற்கும் மக்களை இக்கல்வி எப்படி மீட்க முடியும் என்ற வினாக்களும் திருச்சபை மக்களிடம் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. மலிவு கல்லூரிகளின் பெருக்கம் மற்றும் கல்லூரிகள் கல்லறை தோட்டங்களாகி வருகிறது (Seminaries are Cemetries), என்ற கடின குற்றச்சாட்டுகளின் நடுவில் தற்கால அருளுரை செம்மல் ஜான் ஸ்டாட்டன் முன்னோக்கியப் பார்வையாகிய இறையியல் கல்வி

என்பது அறிஞர் புனிதர்களை (Scholar Saints) உருவாக்குதல் என்ற சிந்தனையை நாம் மீண்டும் உள் வாங்குதல் அவசியம். இறையியல் கல்வி தரும் 3 உருவாக்கங்கள் யாவை ?

***1. பற்றுறுதி உருவாக்கம்*** : (Faith Formation)

யோர்தான் ஆற்றங்கரையில் பன்னிரு பேரின் பற்றுறுதி உருவாக்கம் நடைபெறுவதை யோசுவா நூல் 4-வது பிரிவு தெளிவுப்படுத்துகிறது. ஒரு பற்றுறுதி பற்றாக்குறை போராட்டம் யோசுவாவின் தலைமைத்துவத்தில் நடைபெறுகிறது, யோர்தானை எப்படி கடந்து செல்வது ? செங்கடலைத் தாண்ட மோசே பயன்படுத்திய கோல் யோர்தானை பிளக்க ஏன் பயன்படவில்லை ? உடன்படிக்கைப் பேழையை எவ்வாறு தூக்கிச் செல்வது ? ஆனால் கடவுள்ஒரே நிலையில்தான் செயல்படுவார் என்ற நம்பிக்கை மாற்றம் பெறவேண்டும். குருக்களின் பாதங்கள் தண்ணீரில் பட வேண்டும் என்பது செயல்முறை இறையியல் கல்வி. கடினங்களை துணிச்சலுடன் எதிர்கொள்வது பற்றுறுதி உருவாக்கம். இப்பற்றுறுதி உருவாக்கத்தல் கடவுளைப் பற்றிய புரிந்து கொள்ளுதல் மாற்றம் உருவாகும். கடவுளை நாம் கட்டுப்படுத்தி நம் கட்டளைகளை செயல்படுத்துபவராக அல்லாமல் கடவுளின் மாற்று செயல்பாடுகளை உணர்ந்து கொள்ள முடியும். செங்கடலில் கடவுளின் செயல்பாடு வேறு. யோர்தானில் கடவுளின் செயல் வேறு என்ற கல்வியை பெறுகிறீர்கள். மேலும் இறையியல் கல்வி தடம் பதித்துச் செல்ல வேண்டும். மக்கள் யோர்தானை கடந்து சென்றபின் நினைவு கல்குவியல் அமைக்கப்படுகிறது. தலைமுறைகள் நினைவுக் கற்களைப் பற்றி பேசுவார்கள். இறையியல் கல்வி குருக்களுக்கான கல்வி அல்ல. அது அனைத்து மக்களுக்கும் உரியது. கடவுளின் வார்த்தையை அடித்தளமாக்கி வேர் விட்டு வளரும் திருச்சபையாக மாற இறைமக்கள் இறையியல் கல்வி பெறுதல் அவசியம்.

பால் தீலிக் என்னும் இறையியலாளர் தன் “அடித்தளங்களை அசைத்தல்” என்ற நூலில் (Shaking of Foundations) பற்றுறுதி ஒருவாக்கத்திற்கு இரு அடிப்படை காரணிகளை குறிப்பிடுகிறார். ஒன்று, இதுவரை நாம் வைத்திருக்கிற இறையியல் அடித்தளத்தை அசைத்துப பார்க்க வேண்டும். (we need to shake our theological foundation) இரண்டாவது, புதிய சிந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார். (accept now things) இத்தகைய புதிய பற்றுறுதி சிந்தனைகளைப் பெற்றுக்கொள்ளும் திருச்சபை அசைவு பெறும். இறையியல் சார்ந்த பற்றுறுதி நெருக்கடி திருச்சபைகளில் உருவாக வேண்டும். பேராயர்

ஆஸ்கார் ரொமேரோ “நெருக்கடியை தூண்டாத ஒரு திருச்சபை, பிரச்சனைகளை தீர்க்கும் நற்செய்தியை அறிவிக்காத திருச்சபை தோலுக்கு கீழே செல்லாத கடவுளின் வார்த்தை, சமூகத்தின் உண்மை பாவத்தை தொடாத கடவுளின் வார்த்தை எப்படி நற்செய்தியாக முடியும்?” என்கிறார்.

## *2. பண்பு உருவாக்கம்* : (Character Formation)

தீமொத்தேயுவுக்கு பவுல் எழுதும் போது (4:11) தப்பி ஓடு, நீதி, இறைபற்று, நம்பிக்கை, மன உறுதி, பணிவு தேடு, பற்றுறுதி போராட்டத்தில் ஈடுபடு என்று பண்பு உருவாக்கத்தைப் பற்றியும், திருப்பணியில் இத்தகைய பண்புகளுடன் செயல்படு என்று அறிவுரை வழங்குகிறார். மாற்றுருவாக்கும் இறையியல் கல்வி ஒழுங்குபடுத்துபவர்களை ஒழுங்குபடுத்துகிறது (Discipling the disciplers). இறையியல் கல்வி அறிஞர் பண்பாளர்களை உருவாக்கும் ஒரு நோக்கத்திற்கான கல்வி (Scholarship with a purpose). இதே அறிவுரையை தீத்துவுக்கும் எழுதுகிறார். திருச்சபையில் ஏற்பட்ட பிளவுகள், பிரிவினைகளும், சான்று இல்லாத போதனைகளும் மாற்றுப் போதனைகளும் வளர்ந்து வந்த சூழலில் திருப்பணியாளரின் பண்புகள் எடுத்துக்காட்டாக அமைய வேண்டும் என்று பவுல் விரும்புகின்றார். இன்று முறையற்ற போட்டிகள் திருச்சபையின் அடித்தளத்தை அழித்துக் கொண்டிருக்கிறது. தன்னல அகங்காரம் திருப்பணியாளர்களிடமும், திருச்சபையையும் இறைப்பணியாளர்களை புறக்கணிக்கும் சூழல்களும், பெருகி வரும் வழக்குகளும் திருச்சபையை சான்றிழக்கச் செய்யும் இக்காலத்தில் பண்பு உருவாக்கம் மிகவும் அவசியம். அழைப்பும் அர்ப்பணிப்பும் இன்றி பக்க வழியாய் இறைப்பணிக்கு வேலைச்செய்ய வரும் வேலையாட்கள் திருச்சபைப் பொறுப்புகளில் நுழைந்து விடுவதால் இறையியல் கல்வி திருச்சபைகளில் இறைமக்களிடம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அடிப்படைஇறையியல் கல்வி திருச்சபை பொறுப்பாளர்களுக்கும், ஓய்வுநாள்பள்ளி ஆசிரியர்களுக்கும் அவசியம். இறையியல் கல்வி ஒரு முழுமையான இறையடியாரை, திருச்சபைக்கும் சமூகத்திற்கும் பயனுள்ள மனிதரை உருவாக்குகிறது. இறையியல் கல்வி ஒரு ஆன்மீக அனுபவம். நாளைய திருச்சபைக்கு வித்திட்டு, உரமிட்டு நீர் விட்டு வளர்க்கும் பணிக்கு அழைப்பு பெற்றவர்களை பண்பு உருவாக்கம் செய்கிறது இறையியல் கல்வி. பண்பு உருவாக்கத்திற்கான ஆற்றல் மிகுந்த கருவி இறையியல் கல்வி. பிரேசில் நாட்டு கல்வியாளர் “ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி முறை” (Pedagogy of the Oppressed) என்ற நூலில் Conscientisation அல்லது உணர்வூக்கம் என்ற சொல்லை

உருவாக்கினார். இறையியல் கல்வி உணர்வூக்கம் தரும், ஆற்றல் படுத்தி பண்பு உருவாக்கம் செய்யும், சமூகத்திலும் திருச்சபையிலும் மாற்றங்களை ஏற்படுத்தும்.

### 3. பணி உருவாக்கம் : (Work Formation)

நற்செய்திப்பகுதி மத்தேயு 13-வது பிரிவு ஒரு பணியாளரின் கடின உழைப்பையும் ஆனால் கவனக்குறைவைப் பற்றியும் தெளிவுப்படுத்துகிறது. இந்த உவமையில் ஒரு பணியாளர் எப்படிப்பட்ட மக்களிடம் பணி செய்ய வேண்டும் என்பதை இயேசு தெளிவுப்படுத்துகிறார். இறையாட்சியை குறித்த இறைவார்த்தையை கேட்டாலம் புரிந்துகொள்ளாதவர்கள், இறை வார்த்தையை ஏற்றுக்கொண்டாலும் அதனை செயல்வடிவம் கொடுக்க மனமற்றவர்கள், உலகக் கவலை, செல்வ மாயைக்கு இடம் கொடுத்து இறைவார்த்தையை மறுதலிக்கிறவர்கள், மேலும் இறைவார்த்தையை புரிந்து கொள்கிறவர்கள் - இவர்களிடையே இறைவார்த்தைச் சொல்லும் இறைப்பணி கடினமானது.

சவால் நிறைந்த இறைப்பணிக்கு இறையியல் கல்வி அவசியம். இறைப்பணித்தளங்கள் வழியோரங்களாக, பாறைகளாக, முள் செடிகளாகவும் அமையும் போது நல்ல நிலம் என்று தேடித்திரியாமல் நல்ல நிலங்களாக அவைகளை மாற்றிவிதைக்க வேண்டிய பணி உருவாக்கத்தை இறையியல் கல்வி தருகிறது. இக்கால இறைப்பணியாளர்கள் காணாமல் போன ஆடுகளை தேடி கண்டுபிடிக்காமல் காசுகளை தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்ற பழிச்சொல் மக்களிடையே பேசப்படுகிறது. ஆயர் இல்லங்களில் தங்கி பணி செய்யாமல் பணி செய்கிறவர்களின் பணி வழியோரங்களிலும் பாறைகளிலும் முள்செடிகளிடையே விழுந்து பயனற்று போகிறது. எவ்வித நிலமாக இருந்தாலும் அதனை பண்படுத்தி பணி செய்வதற்கு இறையியல் கல்வி உதவிச் செய்கிறது. இறைப்பணி தியாகப்பணி - கடினமான பணி - அபாயகரமானப்பணி ஆனால் அவசியமான பணி. இறைப்பணி என்பது பிலேயாம்களின் போதனைகளும் நிக்கொலோயரின் போதனைகளும் திருச்சபைகளுக்குள்ளே நுழையவிடாமல் தடுக்கும் காவலர் பணி; மனந்திரும்பினால் வாழ்வு என்றும் மனந்திரும்பாவிட்டால் அழிவு என்றும் சொல்லும் இறைவாக்கு திருப்பணி; இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை மக்களுக்கு காட்டும் பணி; கடவுளின் சினத்திலிருந்து மக்களை காப்பாற்றும் பணி; மக்களை ஒருங்கிணைத்து சமூகு நீதி - அமைதிக்கு நேராக திருச்சபையை வழிநடத்தும் பணி; மக்களை விடுதலைக்கு நேராக

வழிநடத்தும் தீர்க்கத்தரிசன திருப்பணி; இறையியல் கல்வி இத்தகைய பணி உருவாக்கம் செய்கிறது.

இயேசுவிடம் மூன்றரை ஆண்டுகள் நேர்முக செயல்பாட்டு இறையியலைக் கற்ற சீடர்கள் எவ்வாறு உருவாக்கம் பெற்றார்கள் என்றும் கல்வி அறிவு குறைந்தாலும் தெளிவான இறையியலை கற்று நற்செய்தி நூல்களை எழுதினார்கள். துணிச்சலுடன் பணி செய்தார்கள், திருச்சபைகளை உருவாக்கினார்கள், நிறைவாக குருதிச் சான்றுகளாக தங்கள் வாழ்வை அர்ப்பணித்தார்கள் என்று வரலாறு கூறுகிறது.

பேதுரு தலைகீழாக சிலுவையில் அறையபபட்டார்,
அந்திரேயா X வடிவ சிலுவையில் அறையப்பட்டார்.
தோமா ஈட்டியால் குத்தப்பட்டு கொல்லப்பட்டார்.
மத்தேயு வாளால் வெட்டி கொல்லப்பட்டார்.
மாற்கு தெருவில் நாயைப் போன்று இழுத்துச் செல்லப்பட்டார்.
பெரிய யாக்கோபின் தலை துண்டிக்கப்பட்டது.
லூக்காவை துக்கிலிட்டு கொல்லப்பட்டார்.
யோவானை நாடு கடத்தி கொல்லப்பட்டார்.
பர்தலமேயுவின் தோல் உரிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.
சின்ன யாக்கோபு தடியால் அடித்து கொல்லப்பட்டார்.

இவர்களெல்லாரும் பற்றுறுதி, பண்பு, பணி உருவாக்கம் பெற்றவர்கள். இறுதிவரை நிலைநின்று கிறிஸ்து எங்கள் வாழ்வு, சாவு எங்கள் ஆதாயம் என்று வாழ்ந்து பணி செய்தவர்கள்.

பற்றுறுதி, பண்பு, பணி உருவாக்கம் பெறாத இறையியல் கல்வி பயனற்றது. எனவே, இறையியல் கல்வி பெறுவோம் - உருவாக்கம் பெறுவோம். ஆமென்.

அருள்திரு. முனைவர் M. ***பீட்டர் சிங்***

17-07-2022

## இறைமக்கள் : கிறிஸ்துவின் மந்தை

**PEOPLE OF GOD : FLOCK OF CHRIST**

தொநூ 35:1-15 திப 16:11-15
திபா 95 யோவா 10:1-6

**"தம்முடைய சொந்த ஆடுகள் அனைத்தையும் வெளியே ஓட்டி வந்த பின் அவர் அவற்றிற்கு முன் செல்வார். ஆடுகளும் அவரைப் பின்தொடரும். ஏனெனில் அவரது குரல் அவற்றுக்குத் தெரியும்"** (யோவா 10:4).

திருமறையில் இறைமக்களுக்குப் பல பதங்களும், உருவகங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறைமக்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பெயர்களில் மிகமிக முக்கியமானது கிறிஸ்துவின் மந்தை என்பதாகும் கடவுளுக்கும் இஸ்ரயேல் மக்களுக்குமான உறவு என்பது ஆயர், ஆடுகள் போன்றதாகும். திருப்பாடலாசிரியர் தாவீது ஆண்டவரை ஆயர் என்று திருப்பாடல்கள் 23இல் குறிப்பிடுகின்றார். திருமறையைப்படிக்கும் போது இந்த உருவகம் முற்பிதாக்களின் நாடோடி சமூகம் துவங்கி திருமறை முழுவதும் பரவிக்கிடப்பதை எண் 27:17; திபா 23, 80, 95, 100; எசா 40; எரே 31; எசே 34 ஆகியவற்றில் காணமுடியும். அலெக்ஸாண்டர் மெக்வாரின் என்ற இறையியலாளர் ஆயருக்கும் ஆடுகளுக்குமான உறவு என்பது உயிரோடு கலந்த உறவு மற்றும் நெருக்கம் என்கின்றார். எசாயா 40:11 இல் ஆயரைக் குறித்து ஒன்று சேர்ப்பவர், தூக்கிச் சுமப்பவர் கவனத்துடன் நடத்துபவர் ஆகிய பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிறிஸ்துவை ஆயராகக் கொண்டு செயல்பட நாம் அழைக்கப்பட்டபடியால் மந்தைக்குள் இசைவு இனிமை, இணைவு காணப்பட வேண்டும். யோவான் நற்செய்தியாளர் குறிப்பிடும்போது இக்கொட்டிலைக் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும். அவையும் எனது குரலுக்குச் செவி சாய்க்கும். அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும். இங்கு இயேசுகிறிஸ்துவின் இதய விருப்பம் என்பது திருச்சபை எல்லோரையும் இந்த மந்தைக்குள் கொண்டுவர வேண்டும் என்பதை வெளிப்படுத்துகின்றார்.

ஒரு குறிப்பிட்ட மென்பொருள் நிறுவனத்தில் காலை வேளையில் அறிவிப்பு பலகையில் ஒரு முக்கிய அறிவிப்பு எழுதப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தில் பணிக்கு வந்த எல்லோருக்கும் அது அதிர்ச்சி தரும் அறிவிப்பாக இருந்தது. காரணம் என்னவென்றால், இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இங்கு பணியாற்றிய நபர் மரித்துப் போய்விட்டார். அவருடைய சடலம் ஒரு குறிப்பிட்ட அறையில் சவப்பெட்டியில் வைக்கப்பட்டுள்ளது என்று அறிவிப்பு எழுதப்பட்டிருந்தது. அந்த

அறிவிப்பைப் படித்த அனைவரும் அந்த நபர் யார்? என்கின்ற அதிர்ச்சியில் நின்றனர். அந்த நிறுவனத்தில் பணியாற்றும் உயர் அதிகாரி முதல் இடைநிலைப் பணியாளர் வரை அந்த அறைக்குள் சென்று அந்தப் பெட்டியை ஒவ்வொருவராய் உற்றுநோக்கி விட்டு, பேச அறியாதவர்களாய் மலைத்துப் போய் நின்றார்கள். காரணம் என்ன தெரியுமா? அந்தச் சவப்பெட்டியின் உள்ளே முகம் பார்க்கும் கண்ணாடி பொருத்தப்பட்டிருந்தது. யார் எல்லாம் அந்த நபரைப் பார்க்க முற்பட்டனரோ அந்த நபரே கண்ணாடியில் தெரிந்தனர். அப்போது தான் அனைவரும் புரிந்துகொண்டனர். இங்குப் பணியாற்றும் நாம் அளைவருமே ஏதோ ஒரு நிலையில் இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்திருக்கிறோம் என்பதை உணர்ந்தார்களாம். இறைமந்தையில் இடம்பெறுகிற நாம் எப்படி இருக்கிறோம் என்பதை உணரவேண்டும். கிறிஸ்துவின் மந்தையில் காணப்படும் நாம் இறைவருடைய இதயத்திற்கு ஏற்றவராக இருக்கவேண்டுமே தவிர இறையரசின் தகவுகளுக்குத் தடையாக அமைந்துவிடக் கூடாது. கிறிஸ்துவின் மந்தை எப்படி இருக்க வேண்டும்? என்பதைத் தியானிப்போம்.

### *1. ஆயரை அறிந்திருக்கும் மந்தை* :

பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரயேல் மக்களுடைய வாழ்க்கையில் நன்கு அறிமுகமான ஒரு உருவகம் ஆயர் மந்தை ஆகும். யோவான் நற்செய்தியாளர் (யோவா 10:15) "நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக என்னுடைய உயிரையே கொடுக்கிறேன்" என்கிறார். இங்கு ஆயருக்குத் தன் ஆடுகளைத் தெரியும். அதுபோலவே ஆடுகளுக்கும் தன் ஆயரைத் தெரியும் என்பது வெளிப்படுத்தப்படுகிறது. அறிதல் என்ற சொல்லுக்கு எபிரேயத்தில் "யாதா" என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது இதனுடைய பொருள் ஆயருக்கும் ஆடுகளுக்கும் இடையேயான உறவை வெளிப்படுத்துகிறது. இதற்கு இணையான கிரேக்கச் சொல்லுக்கு 'ஞானம்', 'அறிவு' ஆகிய பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அறிந்திருத்தல் என்ற சொல்லுக்குள் பல்வேறு பரிமாணங்கள் பரவிக் கிடக்கிறன்றன. துன்பம், இன்பம், வேதனை, இல்லாமை, இயலாமை, இழப்பு, சோகம், கடினம் என அடுக்கிக் கொண்டே செல்லலாம். A.W. டோஸர் என்ற இறையியலாளர் குறிப்பிடும் போது, "ஆடுகளுக்குப் பாதுகாப்பான ஒரே இடம். அவைகள் ஆயரோடு இருப்பதில் தான் உள்ளது" என்கிறார்.

முற்பிதாக்களில் ஒருவராகிய யாக்கோபுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கடியின் மத்தியில் தனிமையாய் உயிருக்குத் தப்பி ஓட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இரவுப் பொழுதில் தனிமையாய்த் தங்கியிருந்த இடத்தில் கடவுளின் தரிசனம் கனவின் வழியாய் வெளிப்பட்டது. தொநூ 28:6இல் யாக்கோபு தூக்கம் தெளிந்து

உண்மையாகவே ஆண்டவர் இவ்விடத்தில் இருக்கிறார். நானோ இதை அறிந்திருக்கிறேன் என்றான். பல ஆண்டுகளுக்குப் பின் தனிமையாகச் சென்ற யாக்கோபு ஓர் இனத்தோடு வந்தபோது அறிந்திருக்கிற ஆண்டவரை அவரோடு இருக்கிற அனைவருக்கும் அறிமுகப்படுத்த ஆண்டவர் அழைப்பதைக் காணமுடியும்.

கொல்லிமலை மிஷனெரி என்று அழைக்கப்படுபவர் மிஷனெரி ஜெசிமன் பிராண்டு ஆவார். இவர் தொழுநோய்களுக்கு அறுவை சிகிச்சை முறையைக் கண்டுபிடித்த உலகப் பிரசித்தி பெற்ற மருத்துவ மேதையும், வேலூர் CMC மருத்துவமனையின் முன்னாள் இயக்குனருமான Dr. பால் பிராண்டின் தந்தையுமாவார். தமிழ் மொழியைக் கற்று கொல்லிமலையில் தன்னை ஊழியத்திற்கு, அர்ப்பணித்த ஜெசிமனுக்குப் பிடித்த பாடல் நெய்யூரை உடன்பிறப்புகளை இழந்து அநாதையாய், தனிமையாய் தள்ளப்பட்டு இருக்கும்போது ஆண்டவரே என்னை அறிந்திருக்கிறார் என்று உணர்ந்து உரிமையோடு பாடின பாடல் கீர். 290 “தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ” என்ற பாடலையே எப்பொழுதும் ஜெசிமன் பிராண்ட் பாடுவதாம் ஜெசிமன் பிராண்ட் தனது 43 வது வயதில் கொல்லிமலையில் விஷக்காச்சலில் மரித்துப் போனார். அவரது அடக்க ஆராதனையில் கலந்து கொண்ட கொல்லிமலைவாழ் மக்கள் இணைந்து இந்தப் பாடலையே பாடினார்களாம். நம்மை அறிந்த ஆயர் அருள்நாதராகிய இயேசு கிறிஸ்து என்பதை மறந்துவிடக் கூடாது.

### *2. ஆயரின் குரல் கேட்கும் மந்தை* :

ஆடுகளை வைத்திருக்கும் ஆயர்கள் ஒன்றிணைந்து தொழுவத்தை ஓர் இடத்தில் அமைத்திருப்பார்கள். காலைவேளையில் ஒவ்வொரு ஆயரும் தொழுவத்தின் வாசல் முன்பாக வந்து நின்று தன்னடைய ஆடுகளை அழைப்பார். ஆயருடைய ஆடுகள் அவரையும் அவர் குரலையும் அறிந்திருக்கிறபடியால் ஆயருடைய குரலுக்குச் செவிசாய்க்கும். ஆயர் ஒவ்வொன்றையும் பெயர் சொல்லி அழைக்கிறவராக இருக்கிறார் (யோவா 10:3) அவருக்கே காவலர் வாயிலைத் திறந்து விடுவார். கேட்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள எபிரெயச் சொல் “ஷெமா”, கிரேக்க சொல் “அதிவோ” என்பதாகும். இங்கு நல்லாயராம் இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதைக் குறிப்பிடுகிறது. கேட்பதும் கீழ்படிவதும் இணைந்து வருவதை இங்குக் காணமுடியும். கேட்பது வெறும் கேட்பது மட்டுமல்ல அதைச் செய்வதும் ஆகும். தொநூ 35ஐ படிக்கும் போது யாக்கோபு ஓர் இனத்தின் அடையாளமாக நிறுத்தப்படுகிறார். தன்னோடு இருக்கும் மக்களைப் பார்த்து சொல்லும் வார்த்தை (தொநூ 35:2,3). யாக்கோபு தம் வீட்டாரையும் அவரோடிருந்த அனைவரையும் நோக்கி உங்களிடத்திலுள்ள வேற்றுத் தெய்வங்களின் சிலைகளை அகற்றிவிட்டு உங்களைத் தூய்மைப்படுத்தி உங்கள் உடைகளை மாற்றி கொண்டு

வாருங்கள் பெத்தேலுக்குச் செல்வோம் என்றார். கிறிஸ்துவின் மந்தையும் ஒரு தூய நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை உணரவேண்டும். முறையற்ற பழமைவாதச் சிந்தனைகளைக் கைவிட்டுவிட்டு ஆயரின் குரலுக்குக் கீழ்ப்படியக் கடமைப்பட்டிருக்க வேண்டும். ஆண்டவருக்குக் கீழ்ப்படிகிற யாக்கோபுவுக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் கடவுள் வழங்கிய ஆசீர்வாதம் (தொநூ 35:11) கடவுள் அவரை நோக்கி "நானே எல்லாம் வல்ல இறைவன். நீ பலுகிப் பெருக்கக்கடவாய். ஓரினமும் மக்களினங்களின் கூட்டமும் உன்னிடமிருந்து தோன்றும் அரசர்களும் உன் வழிமரபில் உதிப்பார்கள்" என்றார். ஆயரின் குரலுக்குச் செவிசாய்க்கும் மந்தை அமைதியையும், பாதுகாப்பையும், வளர்ச்சியையும் பெறும்.

### *3. ஆயரைப் பின்பற்றும் மந்தை* :

ஆயனை அறிந்து அவர் வார்த்தைகளைக் கேட்கும் ஆடுகள் அவரையே பின்பற்றவேண்டும். கிறிஸ்தவம் என்பது ஒருசமயம் அல்ல; அது ஓர் அனுபவமாகும். இயேசு கிறிஸ்துவுக்கு ரசிகர்கள் தேவைப்படவில்லை. அவர் அதை விரும்பவும் இல்லை. இயேசுவின் விருப்பம் என்பது அவரைப்போல வாழ அவரைப் பின்பற்ற திருச்சபையை எதிர்பார்க்கிறார். கிறிஸ்தவ வாழ்வின் அச்சாரமே இயேசுவைப் பின்பற்றுவதில் தான் உள்ளது (யோவா 12:26). ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னைப்பின்பற்றக் கடவன். நான் எங்கே இருக்கிறேனோ. அங்கே என் ஊழியகாரனும் இருப்பான். பொதுவாக ஆயர்கள் ஆடுகளுக்கு முன்பாகக் கடந்து சொல்வர். ஆடுகள் ஆயரைப் பின்தொடரும். எந்த இடத்தில் வளமை, என்ன பாதிப்பு, என்ன பாதகம் உண்டு என்பதை ஆயர்கள் அறிந்து வைத்திருப்பர். தம் சிலுவை சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்க முடியாது என்கிறார் (லூக் 14:27). பின்பற்றுதல் என்ற வார்த்தைக்கு எபிரேயத்தில் "அஹார்" என்றும் கிரேக்கத்தில் "அக்கலுத்தயோ" என்ற பதமும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த வார்த்தைக்கு பொருள் என்பது பின்பற்றுதலுக்குப் பின்வரும் இன்ப துன்பங்களைக் குறிக்கின்றது. நல்லாயராம் இயேசுகிறிஸ்து இடம் மறுக்கப்பட்ட உரிமை மறுக்கப்பட்ட குடும்பத்தில் பிறந்தார். கவர்ச்சியை விரும்பாத ஆயர், அதிகார வர்க்கத்தோடு இணையாத ஆயர், பெயர் பிரபலமாக வேண்டும் என்று ஒருபோதும் நினைக்காத ஆயர், கட்டுண்டவர்களை விடுதலையாக்கவேண்டும் என்று செயல்பட்ட ஆயர், நசல் கொண்டதைத் தோள்மேல் சுமக்கும் ஆயர், ஏழைகள், இல்லாதோர், புறம்தள்ளப்பட்டோர், விளிம்புநிலையில் வாழ்பவரோடு தம்மை அடையாளப்படுத்தும் ஆயர், உண்மை, நீதி, நியாயம், அன்பு, அமைதி,

மண்ணில் மலரவேண்டும் என்று விரும்பும் ஆயர், பிறர்வாழ்வதற்காகக் தம் உயிரையே சிலுவையில் கொடுத்த ஆயர். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, அகிலம் முழுவதும் அவரின் திருச்சபையின் மந்தையில் இணையவேண்டும் என்று விரும்புகிறார். திப 16:1-6இல் பவுல், சீலாவுடன் திமொத்தி சொல்லும்போது நகர் நகராகச் சென்று வாழ்வுதரும் கடவுளைப் பின்பற்றுமாறு அறைகூவல் தந்தார். இவ்வாறு திருச்சபைகள் நம்பிக்கையில் உறுதிபெற்று நாளுக்குநாள் எண்ணிக்கையில் பெருகி வந்தது.

ஒரு குறிப்பிட்ட தீவிற்கு மிஷனரி ஒருவர் ஆண்டவரின் மந்தையில் அங்கு வாழும் மக்களை இணைப்பதற்காகக் கடந்து சென்றார். அவர் செல்லுவதற்காகப் படகைப் பயன்படுத்தினார். ஒரு குறிப்பிட்ட மரத்தில் அந்தப் படகைக் கட்டி வைத்திருந்தார். அந்தத் தீவில் வாழும் மக்களைப் பார்த்து நீங்கள் ஆண்டவரைப் பின்பற்ற வேண்டும் என்கிற வார்த்தையைச் சொன்னபோது அங்கு வாழும் மக்கள் இந்த மிஷனரியை அடித்துக் கொல்ல முற்பட்டனர். படகை நோக்கி ஓட ஆரம்பித்தார். அந்தத் தீவில் வாழும் எல்லோரும் இவர் தப்பி சென்றுவிடுவார் என்று வேகமாக ஓடி அவரை அடித்துக் கொல்லவேண்டும் என்று பின் தொடர்ந்தார்கள். இந்த மிஷனெரி கட்டப்பட்டிருந்த படகை உடைக்க ஆரம்பித்தார். எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. இவர் தப்பித்துச் சென்றுவிடுவார் என்று நினைத்தோம். ஆனால் தப்பிப்பதற்குச் சாதகமாக இருந்த படகை உடைக்கிறாரே என்று பேசினார்கள். அப்பொழுது அந்த மிஷனெரி சொன்னார், நான் வாழ்வதற்காக தன் உயிரையே கொடுத்தவர் அருள்நாதராகிய இயேசுகிறிஸ்து என்று சொன்னார். அந்தத் தீவில் வாழும் அனைவரும் ஆண்டவரின் மந்தையில் இணைந்தார்களாம்.

இந்த மந்தையின் தொடர்ச்சிதான் திருச்சபை என்பதை மறந்துவிடாதிருங்கள், மந்தையைக் கெடுக்கிற போலிக் கவர்ச்சி திருடர்களை, ஓநாய்களை அடையாளம் காண விழிப்பும் விவேகமும் அவசியமானது. நல்ல ஆயராம் இயேசு கிறிஸ்துவை அறிந்து குரல்கேட்டு பின்பற்றும் மந்தையாக மாறுவோம். இறையரசை மண்ணில் மலரச் செய்வோம்.

அருள்திரு. D. **டார்வின் வினோ**

24-07-2022

## அருள்பொழிவுத் திருப்பணி : கிறிஸ்துவின் நறுமணம்

**ORDAINED MINISTRY : FRAGRANCE OF CHRIST**

| | |
|---|---|
| விப 29:1-9 | எபே 5:1-14 |
| திபா 99 | லூக் 10:1-11 |

**"கிறிஸ்து உங்களுக்காகத் தம்மை நறுமணம் வீசும் பலியும் காணிக்கையுமாகக் கடவுளிடம் ஒப்படைத்து உங்களிடம் அன்புகூர்ந்தது போல, நீங்களும் அன்பு கொண்டு வாழுங்கள்"** (எபே 5:2).

'Ordination' என்னும் ஆங்கிலச்சொல் 'Order' என்பதிலிருந்து பிறந்தது. இந்தச் சொல்லின் பொருள், "திருச்சபையின் திருப்பணியினை ஒழுங்குபடுத்தும் அலுவலுக்கென்று மக்களை ஏற்படுத்துவது என்பதாகும்". அழைப்பு பெற்றோரின் திரள் கூட்டமாய் (Called out Community) இருக்கின்ற திருச்சபை விடுதலை பெற்ற அமைப்பு ஆகும். இவ்வமைப்பிற்குள் அழைப்பும், தெரிவுமே ஒழுங்குமுறையைக் கொண்டு வருவதற்கான அடிப்படையாக இருக்கிறது. ஒழுங்குப்படுத்தப்பட்ட திருப்பணியின் அடித்தளமாகவும், ஆணிவேராகவும் திருச்சபை இருக்கிறது எனலாம். "நம் வாழ்வை நிலைப்படுத்த நமக்கு வெளிச்சமும், சூரிய ஒளியும், உணவும் நீரும் அவசியத் தேவைகள். அதனினும் மேலாகத் திருச்சபை உலகில் நிலைத்திருப்பதற்கு அருள்பொழிவு பெற்ற திருப்பணி மிகவும் அவசியம்" என்கிறார் இறையியலாளர் கால்வின். "அருள்பொழிவு என்பது திருச்சபை நற்செய்திக்கு உண்மையுள்ளதாக இருக்கச் செய்வது இதன் முக்கிய கூறு" என்கிறார் இறையியலாளர் தாமஸ் அக்குவினாஸ். ஆக, அருள்பொழிவுத் திருப்பணி, கடவுளால் பணிக்கப்பட்ட ஓர் உன்னதமான பணி. எபி 5:4-இன் படி "யாரும் இம்மதிப்புக்குரிய பணியைத் தாமே தேர்ந்து கொள்வதில்லை. ஆரோனுக்கு வந்தது போன்று கடவுளிடமிருந்தே அழைப்பு வர வேண்டும்" எனத் திருமறை வலியுறுத்துகிறது. இந்த உன்னதமான திருப்பணி எப்போது அன்பின் பணியாகவும், பணிவிடையின் உன்னதமாகவும் செய்யப்படுகின்றதோ அப்போது கிறிஸ்துவின் நறுமணத்தை மானிடம் நுகர முடியும்.

### *1. அன்பின் வாசனையாகிய அருள்பொழிவுத் திருப்பணி* :

(எபே 5:2)

ஆண்டவர் ஆயன் இல்லாத ஆடுகளைப் போல சிதறுண்டு வாழ்ந்து வந்த மக்கள் மீது அதிகமாய் அன்பு கொண்டார். இம்மக்களோடு

தம்மை ஒன்றித்த இயேசு, அவர்கள் வாழ்வு வளம் பெறும் பொருட்டுத் தேடிச் சென்றார், தொட்டார், குணப்படுத்தினார், உரையாடினார், அவர்களுக்கு வேண்டிய விடுதலை வாழ்வைக் கொடுத்தார். நாசரேத்தூர் அறிக்கையிலும் (லூக் 4:18,19) தமது திருப்பணியின் நோக்கத்தை தெளிவுபட பறைசாற்றி நின்றார் இறைமகன் இயேசு. இவைகளெல்லாம், மனுக்குலத்தின் மீது அவர் வைத்திருந்த அன்பின் வெளிப்பாடு ஆகும்.

கிரேக்க மொழியில் அன்பைக் குறிக்க நான்கு சொற்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று எப்பிதூமியா (epithumia). இது ஆசையைக் குறிக்கிறது (லூக் 22:15). இன்னொரு சொல், எரோஸ் (eros). மனவெழுச்சி மேலிட வேறொருவருக்காகத் தன் தேவைகளையும், தன் நினைவுகளையுமே இது மையமாகக் கொண்டுள்ளது. மற்றொரு சொல் பிலியா (philia). நண்பர்களுக்கிடையேயான அன்பிற்கு இச்சொல் வழங்கப்படுகிறது. நிறைவாக வழங்கப்படுகின்ற சொல் அகப்பே (agape). புதிய ஏற்பாட்டு வழக்கில் அகப்பே, தம் மைந்தரை மனுக்குலத்திற்காகக் கொடுத்ததினால் கடவுள் காண்பிக்கும் அன்பைக் குறிக்கிறது. இது தியாகம் நிறைந்த அன்பு ஆகும். அதாவது யாதொன்றையும் எதிர்பார்க்காத ஒன்று. வாங்கிக் கொள்ளவோ, வைத்துக் கொள்ளவோ, அது வகை தேடாமல், கொடுக்கவே முன் வருகிறது. அதுதான் இயேசு சிலுவையில் தம்மைத் தியாகப் பலியாகக் கொடுத்த அன்பு. கடவுள் தம் ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்திற்கு ஈந்தளித்த அன்பே “அகப்பே” ஆகும் (யோவா 3:16).

மனுக்குலம் வாழ்வதற்காக, உயிரைக் கொடுத்த கிறிஸ்துவின் அன்பு விலையேறப்பெற்றது. இதைத்தான் யோவான் தனது முதல் திருமுகத்தில், “கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்து கொண்டோம். ஆகவே, நாமும் நம் சகோதரர் சகோதரிகளுக்காக உயிரைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்” (1யோவா 3:16) என்கிறார். பவுலார், கிறிஸ்துவின் இந்தஅன்பைக் குறித்துச் சொல்லும் போது, தம்மை நறுமணம் வீசும் பலியும் காணிக்கையுமாகக் கடவுளிடம் ஒப்படைத்து, நம்மிடம் ஒருவரோடொருவர் அன்பின் வாசனையாகிய திருப்பணியை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

கொலை குற்றம் புரிந்த ஒருவனுக்குத் தூக்குத் தண்டனை நியமிக்கப்பட்டிருந்தது. தூக்குபோட வேண்டிய நேரத்தில் அதற்கான மணி அடிக்கப்பட்டது. ஆனால் பலமுறை அடிக்கப்பட்டும் அதற்கான மணியோசை கேட்கவில்லை. நேரம் கடந்து விட்டபடியால் தூக்குதண்டனை நிறுத்தப்பட்டது. அந்த மனிதன் விடுதலையாக்கப்

பட்டான். மணி அடிக்காததின் காரணத்தைக் கண்டறிய பணியில் இருந்தவர் கோபுரத்தின் மேல் ஏறிச் சென்றார். அங்கே கண்ட காட்சி அனைவருடைய இதயத்தையும் நொறுக்குவதாய் அமைந்தது. விடுதலையாக்கப்பட்ட மனிதனுடைய தாயார் ஓசை எழுப்பும் மணியின் நாக்கை தனது கைகளில் பிடித்தபடி இரத்தம் வழிந்தோடிய நிலையில் மயங்கிக் கிடந்தார். தன் மகன் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகத் தன் உயிரையே கொடுக்கத் துணிந்தார்.

நானே நல்ல ஆயர் (யோவா 10:11) என்று சொல்லும் இயேசு கிறிஸ்து தம்முயிர் கொடுத்து நம்மைக் காக்கும் அன்பின் ஆயராக இருக்கின்றார். ஆயர் அருட்பொழிவில் அளிக்கப்படும் ஸ்டோல் (Stole), பேராயர் பேரருட்பொழிவில் அளிக்கப்படும் மேய்ப்பனின் கோல் ஆகியவை கரிசனையுடன் கூடிய அன்பின் சின்னங்களாக இருக்கின்றன. ஆடுகளை நன்கு அறிந்திருந்தும், மந்தையாகிய மக்களின் தேவையைப் புரிந்திருந்தும், வாழ்வுக்கு நேராகப் பாதுகாப்பான முறையில் வழிநடத்துகின்ற விதத்தில் அன்பு செலுத்துவதும், ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுக்க ஆயத்தமாயிருப்பதுமே அருள்பொழிவு திருப்பணியின் உண்மையான கடமையாகும்.

### *2. பணிவிடையின் நறுமணமாகிய அருள்பொழிவுத் திருப்பணி* : (லூக் 10:2,3)

ஒருவர் தனக்காக அருள்பொழிவு பெறுவதல்ல; மாறாக மக்களுக்கு தொண்டாற்றவே என்னும் சிந்தனையை முதற்கண் மனதில் நிறுத்த வேண்டும். புதிய ஏற்பாட்டில் டயக்கோனியோ எனும் கிரேக்கச் சொல் வினைச் சொல்லாக 38 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழில் இச்சொல் ஊழியஞ் செய், பணிவிடை செய் எனப்படுகிறது. கிறிஸ்தவத் திருப்பணிவிடைக்கு அடிப்படை கிறிஸ்துவின் பணி ஆகும். ஏனெனில் மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார் (மாற் 10:45). இந்த அடிப்படையில்தான் லூக்கா நற்செய்தி நூலில் பணிவிடைக்கு மாதிரியாய் உலகில் அவர்களை இருவர் இருவராக அனுப்பி வைத்ததைக் காண்கின்றோம்.

இன்று இச்சீரிய திருப்பணியை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு திருச்சபைக்கு உண்டு. இதைத்தான் பேதுரு இறையடியவர் அனைவருமே, தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர்; அவரது உரிமைச் சொத்தான மக்கள் (1பேது 2:9) எனக் குறிப்பிடுகிறார். இவ்வசனத்திற்கு வலுச்சேர்க்கும் வண்ணமாக

திருச்சபையின் சீர்திருத்த செம்மலான மார்ட்டின் லூத்தர் “பற்றுறுதியாளர்களின் குருத்துவம்” (Priesthood of All Believers ) என்னும் கருத்தை அழுத்தமாகத் தெரிவித்தார். ஒரு குறிப்பிட்ட கோத்திரம் அல்லது குலத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே குருத்துவப்பணிக்குத் தகுதியுடையோர் என பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டதாலும், இஸ்ரயேல் மக்கள் அனைவரும் இப்பணி செய்ய அழைக்கப்பட்டவர்கள் என்பதையும் (விப 19:6, எசா 61:6) திருமறை வலியுறுத்துகின்றது. இவ்வழைப்பு இனிமேல் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமானதன்று, மாறாக, கடவுளால் அழைக்கப்பட்ட மக்கள் திரள் (திருச்சபை) அனைவரும் கடவுளோடு நேரடித் தொடர்பு கொள்ள இயேசு, அவர்தம் இரத்தம் சிந்தி நமக்கெனப் புதியதொரு வழியைத் திறந்து வைத்தார் (எபி 10:19,20).

புதிய இஸ்ரயேலரான கிறிஸ்துவின் சபையார் புறவினத்தவருக்கு ஓர் அரசகுருக்களின் கூட்டமாயிருத்தல் வேண்டும். இதைத்தான் பவுலார் “... நான் கடவுளின் அருளைப் பெற்றவன் என்பதால் தான் அவ்வாறு எழுதினேன். அந்த அருள்தான் என்னைப் பிற இனத்தாருக்குப் பணிசெய்ய கிறிஸ்து இயேசுவின் ஊழியனாக்கிற்று. பிற இனத்தார் தூய ஆவியால் அர்ப்பணிக்கப்பட்ட, கடவுளுக்கு உகந்த காணிக்கையாகும்படி அவர்களுக்குக் கடவுளின் நற்செய்தியை அறிவிப்பதே என் குருத்துவப் பணி” எனக் கடவுள் தமக்கு அருளிய வாய்ப்பைக் குறித்துக் குறிப்பிடுகின்றார் (உரோ 15:15,16).

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மனிதர்களுள் ஒருவர் ஆல்பர்ட் சுவிட்சர் (Albert Schweitzer). ஜெர்மனியைச் சார்ந்த இவர் எழுதிய பல புத்தகங்கள் சர்வதேச அளவில் பெயரையும் புகழையும் அவருக்கு தேடிக் கொடுத்தது. தனது 32-ஆம் வயதில் தன்னைப் பற்றி அதிகமாய்ச் சிந்திக்க ஆரம்பித்தார். தனக்கு ஞானம் கொடுத்த ஆண்டவருக்கும், தன்னை உயர்த்திய சமுதாயத்துக்கும் நான் எதுவும் செய்யவில்லை என உணர்ந்தார். அப்போதுதான் இருண்ட கண்டம் என்ற பெயருக்கு சொந்தமான ஆப்பிரிக்க நாட்டைக் குறித்து அதிகமாக கேள்விப்பட்டார். போதிய மருத்துவர்களின்றி அங்குள்ள மக்கள் அவதிப்பட்டுக் கொண்டிருந்ததைக் கேள்விப்பட்ட அவர், பல பதவியும், பணமும் தேடி வந்த நிலையில் அனைத்தையும் உதறித்தள்ளிவிட்டு அம்மக்களுக்கு மருத்துவ அருள்பணியாளராகப் பணிவிடை செய்ய தன்னை அர்ப்பணித்தார். ஏற்கனவே தேவியல், தத்துவம் மற்றும் இசைத் துறையில் முறையே மூன்று முனைவர் பட்டங்களைப் பெற்றிருந்தும், மருத்துவத் துறையிலும் பயின்று மருத்துவரானார். ஆப்பிரிக்கா சென்ற

அவர், மருத்துவமனை ஒன்றை நிறுவி, ஏழை எளிய மக்களோடு தன்னை இணைத்துக் கொண்டு மருத்துவப் பணிவிடைகளை மிகவும் எளிய முறையில் செய்து வந்தார். ஏன் பணம், பதவி, புகழ் அனைத்தும் இருந்தும், தனது வாழ்வின் கடைசி மூச்சுள்ள வரை ஆப்பிரிக்க மண்ணிலே, மக்கள் சேவையே கடவுளின் சேவை என்னும் நிலையில் மக்களின் வாழ்விற்காகப் பணிவிடைகள் பல புரிந்து 1965-ஆம் ஆண்டு, தனது 90-ஆவது வயதில் மறுமைக்குள் நுழைந்தார். அவர் ஆப்பிரிக்க மண்ணில் ஆற்றிய மருத்துவப் பணிவிடை இன்றும் நறுமணம் வீசுகின்றது.

பணிவிடைக்குக் கிறிஸ்து மாதிரியாய் இருக்கின்றார். எனவேதான் சீடர்களையும் பணிவிடை செய்வதற்கென்றே உலகில் அனுப்பி வைக்கின்றார். “இவ்வாறு பாடுபட்டு உழைத்து நலிவுற்றோர்க்குத் துணை நிற்க வேண்டுமென்று அனைத்திலும் உங்களுக்கு வழி காட்டினேன். அதோடு பெற்றுக் கொள்வதை விட கொடுத்தலே பேறுடைமை என்று ஆண்டவர் இயேசு கூறியதை நினைவு கூருங்கள்” (திப 20:35) என்று பவுல் ஆலோசனை வழங்குகின்றார். தங்கள் நடுவில் பணிவிடைக்காரரைப் போல் இருந்தவராகிய (லூக் 22:27) இயேசுவை நன்கு அறிந்த பேதுருவும், அது போன்ற ஆலோசனையை அருளுகின்றார் (1பேது 5:2).

அருள்பொழிவுத் திருப்பணி மதிப்புமிக்க, மாட்சிமையான பணி. தியாகம் நிறைந்த அன்பின் வெளிப்பாடாயும், மக்களின் நலன் சார்ந்த பணிவிடையின் நறுமணமாகவும் செய்யப்படுகின்ற போது கிறிஸ்துவின் நறுமணத்தை இவ்வுன்னதமான திருப்பணியின் வழியாகச் சமூகமும், திருச்சபையும் நுகரும். இறைமக்கள் அனைவரும் இத்திருப்பணியில் கடவுளின் உடன் பங்காளர்கள் என்னும் நிலையில் தங்களை அர்ப்பணித்துச் செயல்பட வேண்டும்.

அருள்திரு. E. **ஸ்டான்லி ராஜ்**

31-07-2022

# திருமணம் : அன்பின் நீடித்த வாழ்வு

**MARRIAGE : LASTING LIFE OF LOVE**

| | |
|---|---|
| தொநூ 29:1-20 | எபி 13:1-6 |
| திபா 128 | மத் 19:3-9 |

**"திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள்"** (எபி 13:4).

திருமணம் ஆதியில் ஆண்டவரால் ஆரம்பிக்கப்பட்ட ஆசீர்வதிக்கப்பட்ட சமூக ஏற்பாடு. அருள்நாதர் இயேசுகிறிஸ்து திருமணத்தை மேலும் புனிதப்படுத்தினார், ஆகவே தான் கானாவூர் கல்யாணத்தில் பங்கேற்றுத் தனது முதல் புதுமையை அங்கே செய்தார். கிறிஸ்தவ விசுவாசிகள் திருமணத்தில் இணையும் போது அவர்களது குடும்பம் கிறிஸ்தவக் குடும்பமாக, திருக்குடும்பமாக, திரித்துவக் கடவுளின் குடும்பமாகிறது. திருமண வாழ்வு தெவிட்டாத இன்ப வாழ்க்கையாக நின்று நிலவ வேண்டுமானால் "அன்பு" அடித்தளமாயிருக்க வேண்டும். குடும்பத்தில் இவ்வன்பு கடவுளின் அன்பைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. இயேசுகிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் இடையே நிலவும் அன்பு போன்றது திருமண உறவு. இல்லற வாழ்வில் நீடித்த மகிழ்ச்சிக்கு கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு எல்லாவற்றிலும் ஒன்றிணைந்து வாழ்வதில்தான் கிடைக்கும். ஏன் திருமணத்தை உயர்வாக மதிக்க வேண்டும்?

திருமணம் ஆண்டவரால் ஏற்படுத்தபட்ட உடன்படிக்கை திருமணத்தில் கணவன் மனைவி ஆகிய இருவரையும் ஒன்றாக இணைக்கிறவர் ஆண்டவரே. இதற்கு ஆண்டவரே சாட்சி இடுகிறார். 'கணவன் தன் தாய்தந்தையை விட்டு தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பார், இருவரும் ஓர் உடலாய் இருப்பார்கள்' (தொநூ 2:24). தன் இளவயதின் மனைவிக்கு நம்பிக்கை துரோகம் செய்யக்கூடாது. மணமுறிவை வெறுக்கிறேன் என்று படைகளின் ஆண்டவர் சொல்கிறார், (மல்கியா 2:14,15). தூய்மையான சந்ததியை உருவாக்க ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு (1கொரி 7:14). ஏனெனில் நீங்கள் உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் தூய மக்களினம் (இச 142:2). பொய்யர்கள் திருமணத்தைத் தடைசெய்கிறார்கள் (gay and lesbian) (1திமொ 4:3). திருமணம் இறைவனின் திருத்திட்டம், ஆகவே நாம் திருமணத்தை உயர்வாக மதிக்க வேண்டும்.

திருமணம் அன்பின் நீடித்த வாழ்வுக்கு அடித்தளமாக எபிரேய ஆக்கியோன் மூன்று படிநிலைகளை முன்வைக்கிறார்.

***1. மணவறை மாசுறாமல் இருக்க வேண்டு*** : எபி 13:4

(Marriage bed be kept undefiled)

திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள், மணவறைப் படுக்கை மாசுறாமல் இருக்கட்டும். காமுகரும், விபச்சாரத்தில் ஈடுபடுவோரும் கடவுளின் தீர்ப்புக்கு ஆளாவர். மணவறையை மாசுபடுத்துவோர், விபச்சாரத்தில் ஈடுபடுவோர், தகாத பால் உறவு கொள்வோர் இறையாட்சிக்கு தூரமானோர் (1கொரி 6:9). கூடா ஒழுக்கத்தில் ஈடுபடுவோர், ஒழுக்கக் கேடாக நடப்போர் கிறிஸ்துவுக்கும் கடவுளுக்குமுரிய அரசில் உரிமைப்பேறு அடையமாட்டார்கள் (எபே. 5:5). விபசாரக்காரர் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (திவெ 21:8). மட்டுமல்ல, மணவறை தூய்மையானது. எனவே "வேசித்தனமிராதபடி கூடி வாழுங்கள். மணவாழ்க்கைக்குரிய உரிமையை உறவை ஒருவருக்கொருவர் மறுக்காதீர்கள்" (1கொரி 7:1-5). எனவே, கூடா ஒழுக்கத் இறையரசுக்கு நம்மை அன்னியமாக்குகிறது. கூடும் ஒழுக்கம் அன்பின் நீடித்த வாழ்வுக்கு வழிவகுக்கிறது.

***2. பண ஆசை கூடாது*** : எபி 13:5

(To be free from love of money)

பண ஆசைக்கு விலகி வாழுங்கள், உள்ளதே போதுமென்றிமங்கள். பண ஆசை எல்லா;த் தீமைக்கும் வேர்/ இன்றைய சமூகம் இருப்பவற்றில் திருப்தி காணாமல் பேராசை மிக்க சமூகமாக மாறிவிட்டது. பண ஆசை மனிதனைக் கேட்டிலும் அழிவிலும் ஆழ்த்துபவை (1திமொ 6:9). "நிலையில்லா செல்வத்தில் நம்பிக்கை வைக்காமல், நிறை வாழ்வைத் தரும் ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்' என்றார் (1திமொ 6:17). பவுல் அப்போஸ்தலர், பேராசை கொண்டோரிடம் சேரக்கூடாது (2திமொ 3:2). எல்லச் சூழலிலும் மனநிறைவோடிருக்க வேண்டும் (பிலி 4:11). அனனியா சப்பீரா தம்பதியரின் பேராசை அழிவைக் கொடுத்தது. ஆகவே குடும்ப உறவில், பொறுப்பில், பணத்தில் போராசை கொள்ளாமல் இருப்பவற்றில் திருப்தியாக வாழ்வதே நீடித்த வாழ்வுக்கு வழிவகுக்கும்.

கல்விக் கூடங்கள் புத்தகக் கல்வியைக் கற்றுக் கொடுப்பதுடன், வாழ்க்கைக் கல்வியையும் பயிற்றுவிக்க வேண்டும். வகுப்பறைகளில் வாழ்வின் எதார்த்தங்களை மாணவர்கள் அறிய உதவிட வேண்டும். தரமான கல்வி பிள்ளைகளைப் பிறருக்குச் சேவை செய்து இறைத்திட்டத்தை நிறைவேற்றுபவர்களாய் மாற்ற உதவ வேண்டும். “Go out to serve our country and countrymen” என்று ஒரு கல்வி நிறுவனத்தில் பலகை வைக்கப்பட்டிருந்தது. கல்வியின் நோக்கம் அதுவே. பிறருக்கு நாம் கற்ற கல்வியால் பயன் உண்டாக வேண்டும். ‘மக்களிடம் செல், மக்களுடன் வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள்’ என்றார் அறிஞர் அண்ணா. “உன்னை நீ ஒரு ஞானி என்று எண்ணிக் கொள்ளாதே. ஆண்டவருக்கு அஞ்சி தீமையை அறவே விலக்கு” (நீமொ 3:7). இறைவன் தரும் ஞானத்தைப்பெற்று, பிறர் பயனடைய நாம் வாழ்வோம்.

### ***3. அன்னியரை உபசரிக்க மறவாதீர்கள்*** : எபி 13:2

(Do not neglect to show hospitality strangers)

அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தங்களை அறியாமலே வானதூதர்களை மகிழ்ச்சிபடுத்தியதுண்டு. இன்று குடும்பங்கள் நான் எனது என்ற குறுகிய வட்டத்தை போட்டு உதவவோ உபசரிப்பதற்கோ முன்வருவதில்லை குடும்பம் உறவுகளின் சங்கமம். ஆபிரகாம் சாராள் தம்பதியினர் தேவதூதர்களை உபசரித்து இறை அருளைப் பெற்றுக் கொண்டார்கள் (தொநூ 18:13). கிதியோன் தேவதூதரை உபசரித்ததால் கோழை, பராக்கிரமசாலியாய் மீதியானியர்களை வீழ்த்தினார் (நீத 6:20,21). மனோவா தம்பதியினர் தேவதூதரை உபசரித்ததால் இஸ்ரயேலரை விடுவிக்கும்படி சிம்சோன் என்ற நியாயாதிபதியை கடவுள் எழுப்பினார் (நீத 13) யோபு பக்தர் வழிபோக்கனுக்கு வாயிலை திறந்துவிட்டேன் (யோபு 31:3) என்கிறார். வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிடமுள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். விருந்தோம்பலில் கருத்தாயிருங்கள் (உரோ 12:13). அருள்நாதர் இயேசு கிறிஸ்து இந்தச் சிறியரில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்.

ஓர் அழகான குடும்பம், கடை வைத்து மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஒரு நாள் வீட்டின் தலைவருக்கு தலைவலி வரவே சற்று முன்னதாக வீட்டிற்கு வந்தார். அப்பொழுது வீட்டிலிருந்து வாலிபன் வெளியே சென்றான். இதை பார்த்த குடும்பத்தலைவர் தன் மனைவி தனக்குத் துரோகம் செய்துவிட்டார் என எண்ணினார். சந்தேகம் வந்தது;

எப்படியாவது தனது மனைவியைத் தீர்த்துக் கட்ட வேண்டுமென்று எண்ணினான். ஆனால் உடல் களைப்பு அயர்ந்த நித்திரையை ஏற்படுத்திற்று. காலையில் மனைவி நன்றாக உடுத்தி காபியோடு தன் கணவரை எழுப்பினார். என்ன என்று கேட்க, இன்று உங்கள் பிறந்தநாள். ஆகவே நான் அண்மையில் உள்ள தையல்காரரிடம் ஆடை தைக்கக் கொடுத்தேன். அவன் நேற்று நான்கு மணிக்குக் கொண்டு வந்தான். இதோ அந்த ஆடை. அதுவரையிலும் தன் மனைவியிடம் சந்தேகப்பட்ட மனிதர் தன் மனைவி தன்மீது எவ்வளவு அன்பு வைத்துள்ளார் என்பதைப் புரிந்துகொண்டான். ஆம்! சந்தேகம் என்ற அரக்கனைத் துரத்தி படுக்கை மாசுறாமல், பண ஆசைக்கு விலகி அன்னியரை உபசரித்து வாழும்போது அன்பின் நீடித்த வாழ்வை ஆண்டவர் தருகிறார். அவர், நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன், உன்னைவிட்டு விலகமாட்டேன் என்கிறார்.

அருள்திரு. அறிவர் J. **றசல் ஐசக்**

07-08-2022

## அருட்பணி: எல்லா இடங்களிலிருந்தும் எல்லா இடங்களுக்கும்
**MISSION: FROM EVERYWHERE TO EVERY WHERE**

1அர 17:1-16 கலா 2:1-10
திபா 107:1-15 மத் 13:47-52

**"...யூதரல்லாதோர்க்கு நாங்களும் நற்செய்தி அறிவிக்க வேண்டும்."** (கலா 2:9)

அருட்பணி என்னும் பதத்தின் அர்த்தம் 'ஒரு குறிப்பிட்ட பணியை செய்ய நியமிக்கப்படுதலும் அனுப்பப்படுதலும் ஆகும்'. கிறிஸ்தவ அருட்பணி என்பது கிறஸ்தவ நம்பிக்கையை பறைசாற்ற நியமிக்கபடுதலும், அனுப்பப்படுதலுமே அகும். இவ்வருட்பணி இயேசு கிறிஸ்து சீடருக்கு கொடுத்த கடைசி கட்டளையினை (Great Commission) மையப்படுத்தி அமைகின்றது. ...நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள் (மத் 28:19,20).

அருட்பணி கடவுளின் எண்ணத்தை பிரதிபலிப்பாய் அமைதல் வேண்டும். இயேசு பிலாத்துவுக்கு முன் நிற்கும் போது தன் பணியினை இவ்வாறு விளக்குகிறார், "...உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன்; இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்" (யோவா 18:37).

அருட்பணி எல்லா இடங்களிலிருந்தும், எல்லா இடங்களுக்கும் என்னும் சிந்தனை உலகளாவிய கிறிஸ்துவின் அருட்பணிக்கு அடித்தளம் அமைக்கிறது. எல்லைகளை கடந்து அருட்பணி செய்வதும், எல்லைகளுக்கு அப்பால் இருப்பவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய நம் உடைமைகளை பகிர்வதும் உலகளாவிய அருட்பணிவிடைகள். எரேமியா தீர்க்கருக்கு ஆண்டவர் கொடுத்த அழைப்பு, "...யாரிடமெல்லாம் உன்னை அனுப்புகிறேனோ அவர்களிடம் செல்; எவற்றை எல்லாம் சொல்லக் கட்டளை இடுகிறேனோ அவற்றைச் சொல்." (எரே 1:7). பவுலுக்கும் பர்னபாவுக்கும் ஆண்டவர் கொடுத்த அழைப்பு, "...உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை வேற்றினத்தார்க்கு ஒளியாக ஏற்படுத்துவேன்" (திப 13:47). தூய ஆவியரின் வருகையை

குறித்த வாக்குறுதியும் "...உலகின் கடையெல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள். (திப 1:8). ஏனெனில் ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் எவரும் மீட்புப் பெறுவர்." (உரோ. 10:13).

இந்திய கிறிஸ்தவ அருட்பணியை குறித்த விமர்சனங்களுள் ஒன்று கிறிஸ்தவ அருட்பணி மேற்கிலிருந்து தோன்றியது என்பதும், மேற்கத்திய கலாச்சாரத்தை தழுவியது என்பதுமே. இக்கண்ணோட்டத்தை முற்றிலும் வேறுபடுத்தியிருக்கும் சிந்தனை அருட்பணி எவ்விடத்திலிருந்தும் எல்லா இடத்திற்கும். யோவானுக்கு கொடுக்கப்பட்ட வெளிப்பாட்டில் எல்லா காலத்திற்குமுரிய நற்செய்தி நாடு, குலம், மொழி, மக்களினம் ஆகிய அனைவருக்கும் உரியது என உரைக்கப்பட்டிருக்கிறது (திவெ 14:6). இறையரசில் எல்லா நாட்டையும், குலத்தையும், மக்களினத்தையும், மொழியையும் சார்ந்தவர்கள் இணைவார்கள் என்பதும் (திவெ 7:9), அவர்கள் அனைவரும் அடிக்கப்பட்ட கிறிஸ்துவின் உதிரத்தாலே விடுதலையானவர்கள் என்பதும் யோவானின் திருவெளிப்பாடு (திவெ 5:9). எனவே அனைத்து மக்களினத்தவருக்கான விடுதலை அருட்பணியில் உறுதிபடுத்தப்பட வேண்டும்.

### 1. *அந்நியரை ஆற்றுப்படுத்தும் அருட்பணி (அருட்பணி சிதறிச்செல்லல்):* (Mission of Diaspora)

"அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வான தூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியதுண்டு" (எபி 13:2). எபிரேய ஆக்கியோன் ஆபிரகாமை மறைமுகமாக எடுத்துக்காட்டுகிறார். 1அர 17:10-16 வரையுள்ள பகுதியில் இஸ்ரவேலில் பஞ்சம் ஏற்பட்டபோது எலியா தீர்க்கர் சாரிபாத் ஊரிலிருந்த கைம்பெண்ணால் உணவுபெற்றார். இப்பகுதியில் பஞ்சத்திற்கிடையில் கடவுளின் கரிசனை, துன்பத்திற்கிடையே எலியாவின் அருட்பணி, மற்றும் அந்நியரை உபசரித்த கைம்பெண் ஆகியவை அருட்பணி கூறுகளாய் விளங்குகின்றது.

சாரிபாத் என்னும் ஊர் சீதோன் நாட்டின் வடக்கு பகுதியில் இஸ்ரவேலின் அரசமைப்பு எல்கைக்கு வெளியே இருக்கும் சிறிய பட்டணம். அரசன் ஆகாப்பின் மனைவி யேசபேலின் தந்தை ஏத்பாகால் சீதோனியரின் அரசன். தீர்க்கர் எலியாவுக்கு ஆதரவு கொடுத்திருக்கும் கைம்பெண் புறஇன பெண் மட்டுமல்ல, தன் கொடிய எதிரியின் மக்கள். யேசபேல் பாகால் வழிபாட்டை இஸ்ரவேலில் புகுத்த முனைந்தாள், ஆனால் ஆண்டவரோ தமது ஆற்றலை சீதோனியரிடம் வெளிப்படுத்தினார்.

லூக்கா 4:25-27 வசனங்களில் இயேசு இந்நிகழ்வை குறிப்பிட்டு, புறஇனத்தவரை குறித்த கடவுளின் எதிர்பார்ப்புக்கு அழுத்தம் கொடுத்து, தமது வருகையும் புறஇனத்தவரை உள்ளடக்குவதே என்னும் உண்மையினை கற்றுக்கொடுத்து, தீர்க்கருக்கு தம் சொந்த மண்ணில் மதிப்பு இல்லை, ஆகவே அருட்பணி எல்லைகள் கடந்து பயணிக்க வேண்டும் எனவும் இயேசு போதிக்கிறார். "எனக்கு பிறன் யார்?" என்னும் கேள்விக்கு இயேசு கொடுத்த பதிலும் "பிறன்" என்பவர் அண்டை வீட்டார் அல்ல, அந்நிய தேசத்தவர் அல்லது அந்நிய இனத்தவர். யூதருக்கு பிறன் சமாரியனே.

இந்தியாவில் அருட்பணிசெய்த வெளிநாட்டு அருட்பணி யாளர்களின் அருட்பணிகளை 'புலம்பெயர் அருட்பணி' (Diasporic Mission) என அழைப்பர். ஒருவர் தன் பிறப்பிடத்தை விட்டு வேறு இடத்தில் தங்கி அருட்பணி செய்வதே இதன் பொருள். தற்காலத்தில் அருட்பணியின் வடிவங்கள் ஒன்றோடொன்று முரண்பட்டதாய் பிரிந்து காணப்படுகிறது. ஆத்தும விடுதலையா? அல்லது சமூக நற்செய்தியா?. ஆலயம் அமைப்பதா? அல்லது மக்கள் தொண்டு செய்வதா? தொலைநோக்கு பணிதிட்டமா? அல்லது பதவிக்கால சமாளிப்பா? இவைகளுக்கு விடைகாண்பது அரிது. ஆனால் புலம் பெயர் அருட்பணி ஒரு முழுமையின் பணி (Holistic Mission), அதாவது நற்செய்தியாற்றுவதும், சமூக பொறுப்புணர்ச்சியுடன் செயலாற்றுவதுமே இதன் முக்கிய நோக்கம். எலியா தீர்க்கர் மூலம் கடவுள் சாரிபாத் ஊர் விதவையின் பசியினையும் போக்கினார், யாவே மேல் பற்றுகொள்ளவும் செய்தார்.

## 2. ஆகாதோரை அடையாளப்படுத்தும் அருட்பணி *(பலமைய்ய அருட்பணி):* (Polycentric Mission)

வணிக உலகமயமாதலும் மற்றும் அரசியல் உலகமயமாதலும் கிறிஸ்தவ அருட்பணியோடு துணை நின்றது என்பது மறுக்க இயலாத ஒன்று. போர்துகீசிரியரின் வணிக பயணத்தின் ஆதரவில் ரோமன் கத்தோலிக்க திருச்சபை இந்தியாவில் தோன்றியது. கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிக மற்றும் அரசியல் நகர்வுகளின் காலத்தில் சீர்திருத்த திருச்சபை இந்தியாவில் அருட்பணி செய்தது. இவ்வருட்பணியின் தாக்கங்கள் வியத்தகு மாற்றத்தை இந்தியாவில் ஏற்படுத்தியது எனினும், அருட்பணியின் தலைமைத்துவம் சீர்திருத்த திருச்சபைகள் ஐரோப்பிய நாடுகளை மையப்படுத்தியும், ரோமன் கத்தோலிக்க திருச்சபை ரோமை மையப்படுத்தியும் இருக்கிறது என்பது இன்னமும் விவாத பொருளாய் இருந்துகொண்டு வருகிறது. இதற்கு மாற்று பலமத்திய அருட்பணி.

கிறிஸ்தவ அருட்பணியின் முதன்மை நோக்கம் நீதிமான்களை உருவாக்குவதும், பொல்லாதவர்களின் மனதை மாற்றுவதும், இயலாதபோது அவர்கள் கையிலிருந்து நீதிமான்களை காப்பதுமே. மத் 13:47-50 ஆகிய வசனங்களில் இயேசு போதித்த பரலோக ராஜ்யத்தின் உவமையில் கடலில் போடப்பட்டு சகலவித மீன்களையும் வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பான ராஜ்யம், மற்றும் கலந்து கிடக்கும் மீன்களிலிருந்து பொல்லாங்கனை பிரிக்கும் தேவதூதர்களின் பணியும் முக்கியம் பெறுகிறது. ஒரு ராஜ்யத்தை உருவாக்கும் பணியில் பல தேவதூதர்கள் இணைந்து அதிகாரமிக்கவர்களாய் செயல்படுகிறார்கள். ஒரு ராஜ்யத்தை உருவாக்கும் பணியில் இன்று பல திருச்சபைகள், பல அருட்பணியாளர்கள், பல இயக்கங்கள் தனித்தனி தலைமைதுவத்தோடு நிறைவேற்றுகிறது. அருட்பணி எல்லா இடங்களிலுமிருந்தும் உருவெடுத்து இருக்கிறது.

அப்போஸ்தலர் பவுலின் நாட்களில் யூத கிறிஸ்தவம் புறஇன கிறிஸ்தவம் வழிபாடுகளிலும், அருட்பணியிலும் ஒன்றோடொன்று முரண்பட்டுக்கொண்டே இருந்தது. விருத்தசேதனம், நியாயப்பிரமாணம் ஆகிய பழைய நியமங்களும், ஞானஸ்நானம், இரெட்சிப்பு, அருட்பணி, பணிவிடை என்னும் புதிய திருச்சபை நியமங்களும் விவாதப்பொருளாய் காணப்பட்டது. இந்நிகழ்வுகளை பவுல் வேதனையுடன் பகிர்கின்றார், உங்கள் கடவுளின் பெயர் பிற இனத்தாரிடையே இகழப்படுகின்றது. (உரோ 2:24). இதன் காரணம் ஒற்றை மையத்தை நோக்கிய நகர்வுகள். பவுலார் இவர்களை பக்க வழியாய் நுழைந்த கள்ளச் சகோதரர் என சாடுகிறார் (கலா 2:4). அருட்பணியால் திருச்சபைகள் உருவாவது குறைந்து பதவி கிடைக்காததால் புது திருச்சபையை தோன்றுகிறது. புதிய விசுவாசிகளை உருவாக்கும் திருச்சபைகள் குறைந்து, கவர்ச்சி காட்டி பிற திருச்சபை விசுவாசிகளை தங்கள் பக்கம் இழுக்கும் திருச்சபைகள் பெருகிவிட்டது. பலமத்திய அருட்பணி திருச்பைகள் மக்களின் கலாச்சாரத்தோடு இணைந்து பயணிப்பவை. சமூக அமைப்போடு ஒன்றித்திருப்பவை. இதன் ஒரே குறிக்கோள் நீதிமான்களையும், பொல்லாதவர்களையும் இயேசுவின் போதனைகளை கொண்டு வேறுபிரிப்பதே. இத்தகு அருட்பணியே எவ்விடத்திலிருந்தும், எல்லா இடத்திற்குமான அருட்பணியாகும்.

திரு. I. **ஜாண் றோஜின் ஜேக்கப்**

14-08-2022

## திருமுழுக்கு : விண்ணிலிருந்து பிறத்தல்

**BAPTISM : BORN FROM ABOVE**

| | |
|---|---|
| தொநூ 8:1-14 | கொலோ 3:1-11 |
| திபா 25 | யோவா 3:1-8 |

**“….. நீங்கள் பழைய மனித இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்துவிட்டு புதிய மனித இயல்பை அணிந்திருக்கிறீர்கள்”** (கொலோ 3:9,10).

இறைமக்களை கிறிஸ்துவுடனும், திருச்சபை எனும் கூட்டுறவிலும் இணைக்க ஏற்படுத்தப்பெற்றிருக்கும் திருவருட்சாதனம் “திருமுழுக்கு” ஆகும். ஒருவரின் வாழ்வைப் புத்தாக்கம் செய்ய கடவுள் வழங்கும் பேரருளை வெளிப்படுத்தும் அடையாளமாக இது அமைந்துள்ளது. திருமுழுக்கு பெறுகின்றவர் விண்ணவராம் கிறிஸ்துவுடன் இணைகின்ற அனுபவத்தைப் பெறுவதுடன் புதிய மனிதராக பிறக்கும் உயர்ந்த பேற்றினையும் பெற்றுக் கொள்கிறார். எனவே, இந்த அருட்செயலை “விண்ணிலிருந்து பிறத்தல்” என்று சிறப்புறக் கூறுவது மிகவும் பொருத்தமானதாகும். திருமுழுக்கு எங்ஙனம் விண்ணிலிருந்து பிறக்கும் அனுபவத்தை நமக்குத் தருகிறது என்பதைத் தொடர்ந்து சிந்தனை செய்யலாம்.

***1. பழைய இயல்புக்கு இறத்தல்*** : “.... பழைய மனித இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்துவிட்டு,” (கொலோ 3:9)

விண்ணிலிருந்து பிறந்தோராய் நாம் புதிய வாழ்வில் நுழைய வேண்டுமெனில் கிறிஸ்துவுடன் இறந்து அடக்கம் செய்யப்படும் நிலையை அடைதல் வேண்டும். இத்தகையை ஆன்மிக நிலையைத் திருமுழுக்கு வழங்குகிறது என்று கொலோசையர் திருமுகத்தின் ஆசிரியர் குறிப்பிடுகிறார். “நீங்கள் திருமுழுக்குப் பெற்ற போது அவரோடு அடக்கம் செய்யப்பட்டீர்கள்......” (கொலோ 2:12) என்பதே அவர் கூறும் செய்தியாகும். “நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம்” என்று திருத்தூதுவர் பவுல் குறிப்பிடுகின்றார் (உரோ 6:4).

திருமுழுக்கு வழியாகக் கிறிஸ்துவுடன் நாம் இறந்துவிட்டதால், நம் வாழ்வு அவருடன் இணைந்து விடுகிறது (கொலோ 3:3). எனவே, கடவுளின் சினத்தை வருவிக்கின்ற பழைய பாவ இயல்புகளையெல்லாம் ஒழித்து

விடுதல் வேண்டும் (கொலோ 3:5,8,9). “ஒழித்து விடுதல்” என்பதைக் குறிக்க பயன்படுத்தப்பெற்றுள்ள கிரேக்கச்சொல் ‘நெக்ரோசிஸ்’ ஆகும்.இதன் பொருள் “இறந்து போகச் செய்தல்” என்பதாகும். “நாம் இனிமேல் பாவத்துக்கு அடிமைகளாய் இராதபடி, நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது.......”. (உரோ 6:6) என்பது பவுலடியார் கூறும் செய்தி. எனவே திருமுழுக்கு வழியாகக் கிறிஸ்துவுடன் இணைந்துவிட்ட அனுபவத்தைப் பெறுவோர் தீயச்செயல்களை முழுமையாக விட்டுவிடுதல் வேண்டும்.

ஆண்டவர் இயேசு தம் பாடுகளையும், சிலுவை மரணத்தையும் குறிப்பிட “திருமுழுக்கு” எனற அடையாளச் சொல்லையே பயன்படுத்தினார் (லூக் 12:50). சிலுவையும் திருமுழுக்கும் நெருங்கியத் தொடர்புடையன. திருமுழுக்கில் ஏற்படும் வாழ்வு மாற்றத்திற்கான முதன்மையான அடித்தளம் சிலுவை வழியாக வெளிப்பட்ட கிறிஸ்துவின் அன்பிலும், அவரது இறப்பிலும் உயிர்த்தெழுதலிலும் உள்ளது என்பதை உணர்தல் வேண்டும். எனவே தான், தொடக்ககால கிறிஸ்தவர்கள் ஆலயங்களில் அமைத்திருந்த திருமுழுக்குத் தொட்டிகளில் சில, சிலுவை வடிவில் இருந்தன. இது கிறிஸ்துவின் தியாக அன்பை உணர்த்துவதுடன், திருமுழுக்குப் பெறுபவர் கிறிஸ்துவுடன் சிலுவையில் மரித்து பின் உயிர்த்தெழுகின்ற அனுபவத்தைப் பெறுகின்றார் என்பதையும் அடையாளப்படுத்துகிறது. இது, திருமுழுக்குப் பெற்றுக்கொள்ளும் ஒரு நாள் அனுபவத்துடன் நின்று விடுவதில்லை. கிறிஸ்தவ வாழ்வு பாவத்திற்கு அனுதினமும் இறந்து கிறிஸ்துவில் உயிர்த்தெழுகின்ற வாழ்வு ஆகும். கிறிஸ்து அன்பின் வெளிப்பாடாகத் தம்மையே சிலுவையில் பலியாக ஈந்தார். எனவே “இறத்தல்” என்பது முழுமையான அர்ப்பணத்தையும் குறிக்கிறது.

திருமறையின் மீட்பு நிகழ்வுகளில் சொல்லப்பட்டுள்ள “தண்ணீரும்” ஓர் அடையாளமாகவே புரிந்து கொள்ளப்படுகின்றது. “வெள்ளப்பெருக்கு” மற்றும் “செங்கடல்” நிகழ்வுகளில் தண்ணீர் “அழிவு” மற்றும் “இறப்புடன்” தொடர்புடையது என்பதை வெளிப்படுத்துகின்றது. தீமை நிறைந்த உலகை அழிக்க தண்ணீரை நியாயத்தீர்ப்பின் கருவியாக கடவுள் பயன்படுத்தினார். அவ்வண்ணமே பழைய தீமை நிறைந்த வாழ்வை அழித்துத் தூய்மையாக்கும் அடையாளமாகவும் தண்ணீர் விளங்குகின்றது. இவ்வாறு திருமுழுக்கு உணர்த்தும் ஆன்மிக உண்மைகள், புதிதாகப் பிறக்கும் உயரிய நிலையை அடைய, பழைய இயல்புக்கு இறக்க வேண்டிய அவசியத்தை அழகுறக் கற்றுத் தருகின்றன.

## 2. புதிய இயல்புடன் பிறத்தல் :

"புதிய மனித இயல்பை அணிந்திருக்கிறீர்கள்...." (கொலோ 3:10)

திருமுழுக்கு எனும் திருவருட்சாதனம் வழியாகக் கடவுளின் அளவில்லா அருளைப் பெறுகின்றவர், புதிய பண்பு நலன்களுடன் புதிதாகப் பிறக்கும் பேற்றினைப் பெறுகின்றார். மேலும், கடவுளின் திருச்சாயல் வாழ்வில் ஜொலிக்கும் விதத்தில் நாள்தோறும் புத்தாக்கம் அடைகின்றார்.

திருமுழுக்கில் கிறிஸ்துவுடன் அடக்கம் செய்யப் பெறுவதால், பழைய இயல்புக்கு இறப்பது மட்டுமல்ல, அவரோடு கூட உயிர்பெற்று எழும் பேரருளும் கிடைக்கின்றது (கொலோ 2:12). தூய ஆவியாரின் ஆற்றலால் கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார். அதே ஆற்றல் திருமுழுக்குப் பெறுவோருக்கும் வழங்கப்படுகிறது. அவர்களின் வாழ்வு கிறிஸ்துவுடன் இணைந்திருப்பதால், அவர்கள் எண்ணங்கள் விண்ணகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ஏனெனில், கிறிஸ்து விண்ணகத்தில் உள்ளார். எனவே, உலகப் போக்கிலான பாவங்களில் நாட்டம் கொள்வதிலிருந்து விடுபட்டு, மேலுலகு சார்ந்த உயர்ந்த பண்பு நலன்களை நாட வேண்டும். இதை, "விண்ணிலிருந்து பிறத்தல்" எனலாம்.

ஆண்டவர் இயேசு திருமுழுக்குப் பெற்றவுடன் வானம் திறக்கப்பட்டதையும், கடவுளின் ஆவியார் புறாவைப் போல இறங்கி வருவதையும் கணடார் "என் அன்பார்ந்த மைந்தர் இவரே" என்ற குரலும் வானத்தில் ஒலித்தது (மத் 3:16,17). மாட்சிமை நிறைந்த இந்நிகழ்விற்குப் பின்னர், ஆண்டவர் இயேசு தம் தந்தையாகிய கடவுளின் அருளுடனும் தூய ஆவியாரின் ஆற்றலுடனும் தமது திருப்பணியைத் தொடங்கினார். திருமுழுக்குப் பெற்றுக் கொண்ட நிலையில் கடவுள் தம் திருமைந்தரை அடையாளம் காட்டிய அருள் செயல் மிகவும் சிறப்புடையதாகும். அவ்வாறே, திருமுழுக்கு பெற்றுக் கொள்வோர் அனைவரும் கடவுளின் பிள்ளைகளாகும் பெரும் பேற்றினைப் பெற்றுக் கொள்கின்றனர். எலன்.பு.ஒயிட் என்பவர் திருமுழுக்கு நிகழ்வின் போது விண்ணகத்தில் கதவு ஒன்று திறக்கப்படுகிறது என்றும் திருமுழுக்குப் பெறுவோர் கடவுளின் குடும்பத்தில் பிள்ளைகளாக இணைந்து விடுகின்றனர் என்றும் குறிப்பிடுகின்றார்.

உரோமைக் கலாச்சாரத்தில் ஒரு குடும்பத்தில் தத்தெடுக்கப்படுபவர் ஒரு புதிய மனிதராகவே கருதப்படுவார். முந்தையை குடும்பத்தில் உள்ள அனைத்து உரிமைகளையும் இழந்து விடுவார். ஏதேனும் கடன் வாங்கியிருந்தால் அது தள்ளுபடியாகிவிடும். குற்றம் செய்திருந்தால், அது சார்ந்த தண்டனைகளும் விலக்கப்படும். தத்தெடுக்கப்பட்ட புதிய

குடும்பத்தில் சொத்துரிமை உட்பட அனைத்து உரிமைகளையும் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறே, கடவுளின் திருமைந்தர் இயேசுவுடன் நாமும் கடவுளின் பிள்ளைகளாக இணையும்போது, நமது பழைய அடிமைத்தனங்கள், குற்றங்கள் அனைத்தும் அகன்று புதிய விடுதலை வாழ்வையும் புதிய இயல்புகளையும் பெற்றுக்கொள்ள முடிகிறது. இந்தச் சிறந்த வாழ்வை "விண்ணிலிருந்து பிறத்தல்" என்று கூறலாம். நிக்கதேமிடம் ஆண்டவர் இயேசு உரையாடும்போது, ".... மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது...." என்று கூறி புதிய இயல்புடன் வாழ வேண்டியதின் சிறப்பை எடுத்துரைத்தார் (யோவா 3:3). "மறுபடியும்" என்பதைக் குறிப்பிடும் கிரேக்கச் சொல் "அனோதன்" என்பதாகும். இந்தச் சொல்லை "மேலிருந்து" என்றும் பொருள் கொள்ளலாம். கடவுளின் அருளால் விளையும் முழுமையான மன மாற்றத்தையும், அவரது பிள்ளையாக மாறும் பாக்கியத்தையும் ஆண்டவர் இங்கு உருவகச் செய்தியாகக் குறிப்பிடுகிறார். வெள்ளப்பெருக்கிற்குப் பின்னர் நோவா பறக்கவிட்ட புறா, தீமைகள் மறந்து தூய்மை வாழ்வு தொடங்குவதற்கான அடையாளமாக விளங்குகிறது (தொநூ 10:11). இவ்வாறு, திருமுழுக்கு கூறும் அடையாளச் செய்திகளும், அவை கற்றுத் தரும் ஆன்மிகத் தெளிவுகளும் வாழ்விற்கு அறைகூவலாக அமைகின்றன. நம் வாழ்வு நாள்தோறும் புதுப்பிக்கப் பெறவும், இறைச்சாயல் நம்மில் பிரதிபலிக்கவும் கடவுள் தரும் உள்ளார்ந்த பேரருளைப் பயன்படுத்தி அவரது பிள்ளைகளாக வாழ்வைத் தொடர்வோம்.

அருள்திரு. R. **ஜெகதீஸ்லால் ரெகு**

15-08-2022

**இந்திய விடுதலைத் திருநாள்**

## முடிவெடுப்பதில் பங்கேற்பு
## PARTICIPATORY DECISION MAKING

| | |
|---|---|
| விப 18:13-27 | திப 15:22-29 |
| திபா 2 | லூக் 20:20-26 |

**"...போதகரே, நீர் சொல்வதும் கற்பிப்பதும் சரியே. நீர் ஆள் பார்த்துச் செயல்படாதவர்; கடவுளின் நெறியை உண்மைக்கு ஏற்பக் கற்பிப்பவர்"** (லூக் 20:21)

15 ஆகஸ்ட் 1947 அன்று இந்தியா ஆங்கிலேயர் ஆட்சிப்பிடியிலிருந்து விடுதலையடைந்துசுதந்திர நாடாக மாறியது. பல்லாயிரக்கணக்கான மக்கள் போராடி, சிறை சென்று, உடல் நலம் குன்றி, உயிரீந்து இந்தியத் திருநாட்டின் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தனர். ஒரு குறிப்பிட்ட சாரார் மட்டும் தான் இதில் பங்கேற்றனர் என்றில்லாமல் அனைத்து சாதி, சமய மக்களும் தங்கள் அடையாளங்களைக் கடந்து வெகுவாய்த் தங்களுடைய பங்களிப்பினை அளித்திருந்தார்கள். ஆங்கிலேயருடைய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றிருந்தாலும், பல நிலைகளில் வேறு வகையான ஆதிக்கச் சக்திகளின்கீழ் தான் இன்றளவும் ஏழை, எளிய, சிறுபான்மை மக்கள் ஒடுக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். விடுதலை பெற்று விட்டோம் என்று நின்றுவிடாமல், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மனிதருக்கும் விடுதலை உறுதி செய்யப்பட வேண்டும் என்கிற தொலைநோக்கோடு நம்முடைய பயணத்தை தொடர்வதும். முக்கியமான முடிவுகள் எட்டப்படும் பொழுது நாம் ஒதுங்கிக்கொள்ளாமலும், ஓரங்கட்டப்படாமலும், பங்களிப்பைச் செலுத்துவதில் முனைப்பு காட்டுவது அவசியம்.

முடியாட்சி தவிர்த்து குடியாட்சி நடைபெற வேண்டும் என்பதே ஜனநாயகத்தின் நோக்கம். ஆனால் இன்று பெரும்பான்வாதமும், ஒற்றை மையக் கோட்பாடும் நம் நாட்டிற்கு பெரும் அச்சுறுத்தலாகவும், இந்திய இறையாண்மைக்கு எதிராகவும் உள்ளன. சிறுபான்மையினருக்கும், இன்றைய திருச்சபைக்கும் பெரும் சவாலாக அமைந்துள்ளது. பிறர் நலம் கருதாது தனது காரியம் நிறைவேறினால் போதும், தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் நல்ல கல்வி, வேலை வாய்ப்பு, வருமானம், வாழ்வு எனக் கிறிஸ்தவர்கள் சுயநலமாக வாழும் இச்சூழலில், திருச்சபையானது தனக்குக் கிடைக்கின்ற எந்த ஒரு வாய்ப்பையும் தவறவிடாமல் பயன்படுத்திக் கொள்ளவும், ஆயத்தத்துடன் செயல்படவும், அதிகாரத்தில்

பங்கெடுத்து இறைநீதியை வெளிப்படுத்தவும் அழைப்பு பெற்றுள்ளது. திருமறைப்பகுதிகள் சார்ந்து கடவுள் நமக்குக் காட்டும் கடமைகள் குறித்துத் தியானிப்போம்.

### *1. ஆலோசனை கொடுங்கள்:*

இந்திய மக்களாகிய நம் அனைவருக்கும் கருத்துச் சுதந்திரம் உண்டு. நம்முடைய கருத்துரிமையை இந்திய அரசியலமைப்பு சட்டமும் உறுதி செய்கிறது. நம் கருத்துகளை ஏற்ற வேளையில், ஏற்ற இடங்களில் நாம் வெளிகொணர்வது சிறப்புக்குரியதாய் அமையும். நீதிமொழிகளின் ஆக்கியோன் இதைக்குறித்துச் சொல்லும்போது தக்க வேளையில் சொன்ன சொல் வெள்ளித் தட்டில் வைத்த பொற்கனிக்குச் சமம் (நீமொ 25:11) என்கிறார். இந்திய நாட்டில் கிறிஸ்தவர்கள் சமயத்தின் அடிப்படையில் சிறுபான்மையினராக, அந்நியராகக் கருதப்பட்டாலும். நலமானதை முன்னிறுத்தி கருத்துகளை முன்வைப்பது, ஆலோசனை கொடுப்பது நமது கடமை. இஸ்ரயேல் மக்களை, மோசே நடத்தி விசாரணை செய்து, சரியான நீதி வழங்கினார். மக்கள் தூரமான இடங்களில் இருந்து வந்து, காலை முதல் மாலை வரை மோசேயைச்சுற்றிலும் நின்று, காத்திருந்து நீதி பெற்றுச்சென்னர். இதைக் கண்ட மோசேயின் மாமனாகிய இத்திரோ நீர் செயல்படுகிற முறை சரியல்ல. நீரும் உம்மோடுள்ள இந்த மக்களும் களைத்துப் போவார்கள். இதை உம்மால் தாங்க முடியாது, தனி ஆளாக இப்பணியை உம்மால் செய்யவியலாது (விப18:17,18) என மோசேக்கும், மக்களுக்கும் இந்த நீதி விசாரணை முறையினால் ஏற்படுகின்ற பாதிப்புகளை மோசேயிடம் சுட்டிக் காட்டுகிறார். மோசே கடவுளிடம் மக்களின் பதிலாளாகச் செயல்படவும், நல்ல பண்புடையவரை ஆயிரமவர், நூற்றுவர், ஐம்பதின்மர், பதின்மர் குழுக்களின் தலைவர்களாக நியமித்து மக்களுக்கு நீதி செய்யவும் ஆலோசனை கொடுக்கிறார். இத்திரோவின் இந்த ஆலோசனையை மோசே செயல்படுத்துகிறார், அது நல்ல பலன் அளித்தது. மோசே ஒரு சிறந்த தலைவராக இருந்த போதும், இத்திரோவின் ஆலோசனை அங்கே அவருக்கு உதவியாக அமைகிறது. மக்கள் கடினப்பாடுகளின்றி, விரைவாக நீதியைப் பெற்றுக்கொள்ள, விடுதலையடைய இத்திரோவின் ஆலோசனை உதவியாக அமைந்தது. அதே போன்று நம்முடைய நல் ஆலோசனைகளும் பலரை விடுதலை வாழ்விற்கு நேராக வழிநடத்தும் என்பதை உணர்ந்து, பிறர்க்கு நல் ஆலோசனை கொடுக்க அழைக்கப்படுகிறோம்.

### *2. ஆள்களை அனுப்புங்கள்:*

ஆலோசனை சரியான நிலையில் கொடுக்கப்பட வேண்டுமெனில், நம்முடைய பங்களிப்பு விடுதலை வாழ்விற்கு உதவியாக இருக்க வேண்டுமெனில், அதற்கு சரியான ஆயத்தத்தோடு கூடிய செயல்பாடு

அவசியம். நாம் தெரிவிக்க விரும்பும் ஆலோசனைகளை, நாம் செய்ய விழைகின்ற உதவிகளை நாமாகவோ, அல்லது அடுத்திருப்பவர் மூலமாகவோ செய்வது சாலச் சிறந்தது.

திருத்தூதர் பணிகள் 15ஆம் அத்தியாயம் ஒரு குழப்பமான சூழலை விவரிக்கின்றது. புற இனத்தவர் மீட்படைவதற்கு விருத்தசேதனம் கட்டாயம் என்னும் பாரத்தை, சுமையை, கருத்தியலை சிலர் முன்வைத்து மக்கள் மத்தியில் கலகத்தை ஏற்படுத்துகின்றனர். எருசலேம் சங்கம் கூடி இதைக்குறித்து விவாவதித்து ஒரு முடிவை எட்டுகிறது. இந்தத் தீர்மானம் பிறஇனத்தவர்களுக்குச் சென்று சேரும்படி தங்களுள் யூதாவையும், சீலாவையும் தெரிவு செய்து ஒரு கடிதத்தை எழுதி அவர்கள் கையில் கொடுத்து அனுப்பினார்கள் (திப 15:23). அந்தக் கடிதத்தில் எருசலேம் சங்கத்தினர் குறிப்பிடுகின்ற முக்கியமான அம்சங்களில் ஒன்று, அங்கு முன் இருந்தவர்கள் ஏற்படுத்திய குழப்பத்தை, கலக்கத்தை மாற்ற யூதாவும், சீலாவும் அனுப்பப்படுகிறார்கள் என்பதாகும். இவர்கள் எத்தகையோர் என்றால் இயேசு கிறிஸ்துவுக்காகத் தங்கள் உயிரையும் கொடுக்கத் துணிந்தவர்கள் (திப 15:26).

கடிதத்தின் சாரம்சமும், யூதா, சீலாவின் வருகையும் அந்தியோக்கியா மக்களுக்கு ஊக்கத்தையும், மகிழ்ச்சியையும் கொடுத்தது. இறைவாக்கினராய் இருந்த யூதாவும், சீலாவும் அங்கு இருந்த நாட்களில் அம்மக்களுக்கு ஊக்கம் கொடுத்து உற்சாகப்படுத்துகின்றனர். முடிவெடுப்பதில் எருசலேம் சங்கத்தினரோடு உடன் இருந்த யூதாவும், சீலாவும், எட்டப்பட்ட முடிவினை செயல்படுத்தி முடிக்கும் வரை தங்களுடைய பங்களிப்பைக் கொடுத்தனர். தாங்கள் அனுப்பப்பட்ட நோக்கத்தினின்று சற்றும் தவறாமல், தங்களுக்கு நியமிக்கப்பட்ட பணியை நேர்த்தியாய், நெறி தவறாது நிறைவேற்றி மீண்டும் தங்களை அனுப்பியவர்களிடம் செல்கின்றனர். இன்றும் கலக்கத்தில், குழப்பத்தில் காணப்படும் மக்கள் மத்தியிலும், அதிகாரங்கள் மத்தியிலும் நோக்கம் தவறாது, நெறி தவறாது, நேர்த்தியாக செயல்படக்கூடிய தலைவர்களை உருவாக்கி அனுப்புவது திருச்சபையின் தலையாய கடமையாக இருக்கிறது.

### *3. ஆண்டவரை அண்டுங்கள்:*

ஆண்டவர் துணையின்றி நாம் எந்த ஒரு செயலையும் செய்து விட முடியாது. ஒருவேளை நாம் ஆலோசனை கொடுக்கலாம், ஆள்களை அனுப்பலாம் ஆனால் ஒரு செயல் நமக்குக்கைக்கூடி வர வேண்டுமெனில் ஆண்டவருடைய அனுக்கிரகம் தேவை. ஆண்டவர் நமக்கு உதவி செய்ய

வேண்டுமெனில் நாம் அவரைச் சார்ந்து இருப்பது அவசியம். அகஸ்வேரு மன்னர் ஆட்சிக்காலத்தில், ஆமான் யூர்களை அழிக்க திட்டம் தீட்டிய பொழுது, எஸ்தரை அரசரிடம் அனுப்ப வேண்டுமென்கிற ஆலோசனை மொர்தக்காய் வழியாய் வருகிறது. ஆனால் அது எளிதல்ல, அதனுடைய முடிவு பரிதாபம் என்பதை அறிந்த எஸ்தர் கடவுளுடைய உதவியை நாட முற்படுகிறார். கடவுளைக் கிட்டிச் சேரும் முயற்சியில் எஸ்தர் மொர்தக்காயிடம் கூறுவது சூசானில் காணப்படும் அனைத்து யூதரையும் ஒன்று சேர்ப்பீராக! எனக்காக நோன்பிருந்து, மூன்றுநாள் இரவு பகல் உண்ணாமலும், குடியாமலும் இருப்பீராக! நானும் என் செவிலியரும் அவ்வாறே நோன்பிருப்போம் (எஸ் 4:16) என்கிறார். அதனுடைய தொடர் நிகழ்வினை நாம் உற்று நோக்கும் பொழுது, எஸ்தருக்கு அரசருடைய கண்களில் தயவு கிடைக்கிறது. செருக்குற்று ஒரு இனத்தையே அழிக்க முற்பட்ட ஆமானுடைய சதி திட்டம் முறியடிக்கப்பட்டு, யூத மக்கள் காப்பாற்றப்பட அரசி எஸ்தர் அகஸ்வேரு மன்னருடைய முடிவுகளில் தலையீடு செய்து, முறையீடு செய்து தம் மக்களைக் காப்பாற்றுகிறார். எஸ்தர் இத்தகைய நிலையில் சிறப்பாகச் செயல்பட, அரசருடைய கண்களில் தயவு கிடைக்க ஆண்டவரை அண்டுகிறார் என்பதை நாம் உணர்தல் வேண்டும். ஒருவேளை எஸ்தரைப் போன்ற சிறப்பு அதிகாரம் எல்லாரிடத்திலும் இல்லாமல் இருக்கலாம் ஆனால் அங்கிருந்த யூத மக்கள் எப்படி விடுதலைக்காக, அதற்காக முயற்சி எடுக்கும் தலைவர்களுக்காக ஆண்டவரை நாடினார்களோ, அதே போன்று நாமும் செயல்பட அழைக்கப்படுகிறோம்.

இன்றும் இக்கட்டான சூழல்களில் வைக்கப்படும் போது, எதுவும் செய்ய முடியாது என்ற நிலையில் தள்ளப்படும் போது, நம்முடைய குரல்கள் கேட்கப்படாது என்கிற நிலையில் காணப்பட்டாலும், நாம் ஆண்டவரை அண்டும் பொழுது, அவர் பாதைகளை ஏற்படுத்துவார். நம்மை ஒதுக்க, அழிக்க முற்படுகிற மக்கள் மத்தியில் நாம் விடுதலை அடைய, மகிழ்ச்சியான வாழ் பெற நாமே முடிவு எடுக்கக்கூடிய வாய்ப்புகளை நமக்கு ஏற்படுத்தித் தருவார்.

இயேசு கிறிஸ்துவின் வாழ்வை நாம் உற்று நோக்கும் பொழுது. சீசருக்கு வரி செலுத்துதலில் ஒரு முடிவினை இயேசு கிறிஸ்துவின் வழியாய் அறிய வேண்டுமெனவும், அதனுடாய் அவரைக் குற்றப்படுத்திட வேண்டுமெனவும் ஒரு கூட்டம் இயேசு கிறிஸ்துவிடம் வந்தது. அவருடைய பேச்சில், பாகுபாடற்ற நிலைப்பாட்டைக் கண்டு, குற்றம் சாற்ற முடியாமல் வியப்புற்றனர். போதகரே, நீர் சொல்வதும் கற்பிப்பதும் சரியே. நீர் ஆள்

பார்த்துச் செயல்படாதவர், கடவுளின் நெறியை உண்மைக்கு ஏற்பக் கற்பிப்பவர் (லூக் 20:21) என்று இயேசுகிறிஸ்துவை குறித்து சாட்சி கொடுக்கின்றனர். நாமும் பொது வாழ்வில் செயல்பட வாய்ப்பு கிடைக்கும் பொழுது, நடுநிலையாளராக, நேர்மையாக, உண்மையாக நம்முடைய கடமையைச் செய்வது நல்ல சாட்சியுள்ள வாழ்விற்கு நேராய் நம்மை வழிநடத்தும்.

"இவ்வமயம் நீ மௌனமாய் வாளாவிருப்பின், விடுதலையும் பாதுகாப்பும் யூதருக்குப் பிறிதொரு இடத்தினின்று தோன்றும். ஆனால் நீயும் உன் தந்தையின் வீட்டாரும் அழிவீர். யார் அறிவார்? ஒருவேளை இதுபோன்ற நேரத்திற்கெனவே நீ அரசியாகி உள்ளாய் போலும்! (எஸ் 4:14) என்கிற எஸ்தருக்கான மொர்தக்காயின் எச்சரிப்பு எப்பொழுதும் நம் காதுகளில் ஒலிக்கட்டும். அத்தகைய நிலையில் கடினமான சூழலானாலும் பயப்படாமல், துணிவுடன், கவனமுடன் முடிவெடுப்பதில் பங்கேற்கும் வண்ணம் ஆலோசனை கொடுப்போம், ஆள்களை அனுப்புவோம், ஆண்டவரை அண்டுவோம்.

திரு. **அ. கிளாட்ஸ்டன் ரூப ராஜ்**

21-08-2022

## திருவிருந்தாகிய திருவருட்சாதனம்

**SACRAMENT OF HOLY COMMUNION**

விப 12:1-14 | 1கொரி 10:14-22
திபா 42 | லூக் 22:7-20

**"....இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார்.** (லூக் 22:19).

கிறிஸ்தவ வரலாற்றிலே திருவிருந்தும், திருச்சபையும் பிரிக்க முடியாத பந்தமாக இருக்கின்றன. இறையியலாளர் Zizioulas கூறுகின்றபோது "நற்கருணைக்குள்ளாகவும் நற்கருணையின் மூலமாகவும் திருச்சபை இருக்கின்றது" என்கிறார் (Church is in the Eucharist and through Eucharist). இதனைத் தூய நற்கருணை, ஆண்டவரின் இரவுணவு (Lord's Supper), அப்பம் பிடுதல் (Breaking of Bread), நன்றித் திருவிருந்து (Eucharist), எனப் பல பெயர்களில் அழைக்கின்றனர். பெயர்கள் பலவிருந்தாலும் இந்நிகழ்வுக்கு ஆதாரமாக அமைவது இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணமும், மரணத்திற்கு முந்தைய நாளில் அப்பத்தையும் திராட்சரசத்தையும் தமது உடலாக, குருதியாக கருதி நினைவுகூர்ந்து உண்ணவேண்டும் என்று அவர் கொடுத்த கட்டளையும் ஆகும். இதனை முதலாவது, பவுலடிகளால் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்திலும் (1 (கொரி 11:23-26) அதனைத் தொடர்ந்து நற்செய்தி நூற்களும் தங்கள் இறையியலை முன்னிறுத்தி இதனை விளக்குகின்றன. லூக்காநற்செய்திநூல், நற்கருணையையும் (Eucharist) இறுதி விருந்தையும் (Last Supper) வேறுபடுத்திக் காட்டுவதாக இறையியலாளர்கள் கருதுகின்றனர். இறுதி விருந்து என்பது, நாசரேத்து ஊர் இயேசுவோடுள்ள பொதுவான யூத விருந்து, நற்கருணையை பொறுத்தமட்டில் ஆண்டவராகிய இயேசுவோடுள்ள விருந்து என்று இறையியலாளர் La Verdiere கூறுகின்றார். இறுதி விருந்து என்பது பாடுகளுக்கு முந்தைய விருந்து (Pre-Passion Meal), அதே சமயம் நற்கருணை என்பது உயிர்த்தெழுதலுக்குப் பிந்தைய நிகழ்வு (Post-Resurrection Event) என்கிறார்.

லூக்கா நற்செய்தி நூலைப் பொறுத்தமட்டில், இரவுணவுக்கு முன்பாக இயேசுவோடுள்ள ஏழு விருந்துகள் கூறப்பட்டுள்ளன. அதில் மூன்று அவருடைய கலிலேய ஊழியத்திலும் (லூக் 5:27-39; 7:36-50; 9:10-17) வேறு

நான்கு கலிலேயா முதல் எருசலேமுக்கு இடைப்பட்ட பயணத்திலும் (10:38-42; 11:39-54; 14:1-24; 19:1-10) நிகழ்ந்தவைகளாக அமைகின்றது இந்த ஒவ்வொரு விருந்தும் நற்கருணையின் சாராம்சத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. சில தொடக்க விருந்துகள் கிறிஸ்தவ வாழ்வுக்கு அடிப்படையான மனமாற்றத்தினை (Metanoia) வலியுறுத்துவதாகவும் இறுதியில் உள்ள விருந்துகள் கிறிஸ்துவுக்குள்ளாக அமைகின்ற மீட்பை எடுத்துக் கூறுவதாகவும் அமைகின்றன. இப்படிப் பல விருந்துகள் இருந்தாலும், நற்கருணை சிறப்பான விருந்து. இதிலே கிறிஸ்து ஒரே நேரத்திலே விருந்தை தருபவராகவும் (Host), விருந்தாகவும் (Feast), இருக்கிறார். தாமஸ் அக்குவினாஸ் கூறுகின்றபோது, ஆயர் தன் மந்தைக்கு உணவளிப்பது போலக் கிறிஸ்து தன் சொந்த உடலாலும் இரத்தத்தாலும் தன் பற்றாளர்களுக்கு ஆன்மிக உணவளிக்கிறார் என்கிறார். திருமறைப் பகுதிகளைச் சார்ந்து திருவிருந்து நமக்குத் தருகின்ற அழைப்பினைத் தியானிப்போம்.

### *1. திருவிருந்து : நினைவுகூர்தலுக்கான அழைப்பு* :

(Eucharist : Call for Commemoration)

"...என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" லூக் 22:19

விழாக்கள், கொண்டாட்டங்கள் மற்றும் திருப்பலிகள் நினைவுகூர்தலின் அடையாளமாக அமைகின்றன. சில தருணங்களில் விழாக்களைக் கொண்டாட மறக்கின்றபோது வரலாறுகள் மறக்கப்படுகின்றன. இதனால் புதிய தலைமுறையின் ஆன்மிக வாழ்வில் தெளிவற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இளைய தலைமுறையினர் வரலாற்று உண்மைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக இறைவன் இஸ்ரயேல் மக்களிடம் பாஸ்காவைக் கொண்டாட அழைப்பு விடுக்கின்றார். அடிமைத்தன வாழ்விலிருந்து இறைவன் இஸ்ரயேல் மக்களை விடுதலைசெய்து சுதந்திர நாட்டிற்கு அழைத்து வந்தார் என்ற விடுதலையின் வாழ்வினை வரும் தலைமுறையினர் நினைவு கூரவேண்டும் என்பதில் இறைவன் ஆவல் கொள்கின்றார். இந்தக் கட்டளைகளைக் கடவுள் மோசே மற்றும் ஆரோன் மூலம் வழங்கியதை பழைய ஏற்பாட்டுப் பாட விடுதலைப் பயணம் 12:1-14 வரையுள்ள வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. எவ்வாறு இதனை செயல்படுத்த வேண்டும் என்பாற்குத் தலைமுறையாக தலைமுறையாகப் பின்பற்ற வேண்டும் என்பதனைச் சட்டமாகக் கொடுப்பதைக் காண முடிகின்றது.

யூதர்கள் பாஸ்காவைக் கொண்டாடுகின்ற அந்த இரவிலே இயேசு நாதர் திருவிருந்தை ஏற்படுத்தினபடியால், இஸ்ரயேல் மக்களுக்குக் கடவுள் கொடுத்த விடுதலை முழு மனுக்குலத்திற்குக் கிறிஸ்து விடுதலையை முன்னறிவிப்பதாக அமைகின்றது. எவ்வாறாயினும் சிலருடைய வாதம்,

இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் இருந்து கடந்து செல்வதற்கு முன்பாகத் தம்மை நினைவுகூரும்படி ஒரு அடையாளத்தை விட்டுச் செல்ல விரும்பினார். திருவிருந்தே அந்த அடையாளமாக அமைந்தது என்கின்றனர். தூய பவுலடிகளாரும் அவருடைய மரணத்தை நினைவுகூர்ந்து அறிவிப்பதற்காக அவருடைய வருகை மட்டும் இது செயல்படுத்தப்படவேண்டும் என்கிறார் (1கொரி 12:26). ஆகவே தான், எல்லாத் திருவிருந்துத் தொழுகைகளிலும் இயேசுநாதர் சீடர்களோடு பந்தி அமர்ந்து கூறின அத்தனை கூற்றுகளும் மீண்டும் படிக்கப்படுகின்றது. நற்கருணை நினைவுகூர்தலின் அழைப்பு என்று சிந்திக்கின்றபோது அவருடைய மரணத்தை வார்த்தையிலே நினைவுகூர்கின்றவர்களாக அல்ல, மாறாகச் செயல்களிலே வெளிப்படுத்த அழைக்கப்படுகின்றோம். கிறிஸ்து தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற, மனுக்குலம் மீட்படைய தன்னுடைய சரீரத்தை உடைக்க முன்வந்ததைப் போன்று விண்ணுலகத் திட்டங்கள் நிறைவேற மானிடர் விடுதலை அடைய நம்மை உடைக்க முன்வர வேண்டும் என்கின்ற அழைப்பினைத் தருவதுதான் திருவிருந்து ஆகும்.

## *2. திருவிருந்து : புதிய உடன்படிக்கைக்கான அழைப்பு*

(Eucharist : Call for New Covenant)

"...இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை" என்றார் (லூக் 22:20). இந்தப் புதிய உடன்படிக்கையின் சத்தியம் நமக்கு புதிய ஏற்பாட்டின் நான்கு பகுதிகளின் (லூக் 22:20; 1 கொரி 11:25; மத் 26:28; மாற் 14:24) வழியாக அறியப்படுகின்றது. இந்தப் புதிய உடன்படிக்கை கிறிஸ்துவோடு நம்மை இணைத்து அவரில் நிலைத்திருக்க செய்கின்றது.

கொரிந்தியர் திருமுகத்தைப் பொறுத்தமட்டில், புதிதாகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் விசுவாசச் சறுக்கல்களை சந்திக்கின்றபோது புதிய உடன்படிக்கையின் இரத்தத்தை மேற்கோள்காட்டி புதிய வாழ்வுக்கு நேராக பவுல் வழிநடத்துகின்றார் (1கொரி 8:9-11). கொரிந்திய பற்றாளர்களுக்கு இருந்த கேள்விகள் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட உட்கொள்ளலாமா? அந்நிய தெய்வ விழாக்களின் பந்தியில் அமரலாமா? முற்காலங்களில் கொரிந்து மக்களைப் பொறுத்தமட்டில், விழாக்காலங்களில் விலங்குகள் பலியிடப்படுகின்றபோது தான் சந்தைகளில் மாம்சம் அதிகமாகக் கிடைத்தது. அதை வாங்கி உட்கொண்டனர். சில கோயில்களில், பலியிட்ட அந்த விலங்கையே விருந்தாகப் பரிமாறினர். இந்த விழாக்கள், விருந்துகள் மற்றும் விளையாட்டுகள் அந்நாட்களின் கலாச்சார வாழ்வினைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது. புதிய கிறிஸ்தவர்களுக்கு அவர்கள் பழைய வாழ்வுக்கு

அவர்களை இழுப்பதாக அமைகிந்தது. இந்தச் செய்கைகளை சிலர் நியாயப்படுத்தியும் வந்தனர். அவர்களுக்கு பவுல் மிகுந்த எச்சரிக்கை விடுக்கின்றார். தன்னை நிற்கிறவரென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன் (1கொரி 10:12) என்கிறார். கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைச் சிந்தி புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றபோது நீங்கள் ஆண்டவருடைய போஜனப்பந்திக்கும், பேய்களின் போஜனப் பந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாது என்று அறிவுரை கூறுகின்றார். நம்முடைய வாழ்வின் பயணத்திலும் பழைய மனிதனுக்குரிய சிற்றின்பங்கள் நம்மைத் தூண்டுகின்றபோது, ஒவ்வொரு திருவிருந்துத் தொழுகையும் கிறிஸ்து தம்முடைய உதிரத்தினால் உடன்படிக்கை செய்திருக்கிறாரென்று உடன்படிக்கையின் மக்களாய் வாழ நமக்கு அழைப்பினை விடுக்கின்றது.

### *3. திருவிருந்து : புதிய சமூகத்திற்கான அழைப்பு* :

(Eucharist : Call for New Community)

அப்பம் ஒன்றே, ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம், ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்கு கொள்கிறோம்.. (1கொரி 10:17)

இதனைத் தான் புனித அகஸ்டின் கூறுகின்றபோது, கிறிஸ்துவின் சரீரத்தை உட்கொள்கின்றபடியால் கிறிஸ்துவின் சரீரமாக மாறுகின்றோம் (we eat the body of Christ to become the body of Christ). கொரிந்தில் இருந்த கிறிஸ்தவ சமுதாயம் பல பிரிவினைகளோடு காணப்பட்டது. சிலர் பவுலைச் சார்ந்தவர் என்றும் சிலர் அப்பல்லோவைச் சார்ந்தவர் என்றும், வேறுசிலர் பேதுருவைச் சார்ந்தவர் என்றும், கிறிஸ்துவைச் சார்ந்தவர் என்றும் பிரிந்திருந்தனர். அதுபோலவே சிலர் விசுவாசத்திலே தேறினவர்கள் என்றும் மற்றவர்கள் பெலவீனமானவர்கள் என்றும், அடிமைகள் சுயாதீனர்கள் என்றும் ஏழை பணக்காரர் போன்ற பிரிவினைகளும் காணப்பட்டன (1கொரி 11:17-34). இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்கின்றவண்ணமாகத் திருவிருந்து அனைவரும் இணைந்திருக்கின்ற சமுதாயற்திற்கான அழைப்பினைத் தருவதாக துய பவுல் வலியுறுத்துகின்றார்.

பல்வேறு வேற்றுமைகள் காணப்பட்டாலும் இந்த ஐக்கியப் பந்தியில் சேருவதின் விழியாக, ஒரே சரீரமாக, சமூதாயமாக இணைக்கப்படுகின்றோம். ஆகவே திருவிருந்து கிறிஸ்துவுக்குள்ளாகப் பல்வேறு பின்னணியங்களோடு வாழுகின்ற மக்களை ஐக்கியப்படுத்துகின்ற (Common-Union (koinonia) என்பது தெளிவாகின்றது. இந்தப் புதிய சமுதாயம் அன்பினை மையப்படுத்துவதாக அமைகின்றது. அதனால் தான் போப் ஜாண் பால் அவர்கள் கூறுகின்றபோது, The Sense of Eucha-

rist mystery leads us to love for our neighbours, to love for every human beings) திருவிருந்தின் அயலாரை நேசிக்கவும் எல்லா மனிதர்களை நேசிக்கவும் வழிநடத்துகின்றது மறைபொருள் என்கின்றார். திருவிருந்தின் மூலமாக ஐக்கியப்படுகின்ற அன்பின் சமுதாயம் பகிர்ந்து கொடுக்கின்ற சமுதாயமாக இருக்க வேண்டும் என்று இறையிலாளர்கள் வலியுறுத்துகின்றனர். குறிப்பாக, Daniel Migiliore கூறுகின்றபோது, (There is an intrinsic connection between representative participation in the Lord's supper and commitment to a a fairer distribution of the goods of the earth to all its people) பொறுப்பாக திருவிருந்தில் பங்கு பெறுவதற்கும் பூமியின் வளங்களை சரியான முறையில் எல்லா மனிதர்களுக்கு பங்கிடுவதில் உள்ள அர்ப்பணிப்புக்கும் மிகுந்த தொடர்பு உண்டு என்கின்றார். ஆகவே ஒவ்வொரு திருவிருந்து தொழுகையும் பிரிவினையும் பகையுணர்வும் களையப்பட்டு அன்பின் சமுதாயமாகப் பூமியின் வளங்கள் அனைத்தும் சமமாகப் பங்கிடப்பட வேண்டும் என்ற அழைப்பினைத் தருகின்றது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

நினைவுகூர்தலின் அடையாளமாகவும், புதிய உடன்படிக்கை மற்றும் புதிய சமுதாயத்தின் அழைப்பாகவும் இருக்கின்ற திருவிருந்தை சுமார் 2000 ஆண்டுகளுக்கு மேலாகத் திருச்சபை கொண்டாடி வருகின்றது. ஒருகாலத்தில் திருச்சபைகளில் மட்டும் கொண்டாடப்பட்ட திருவிருந்து தொடர்ந்து சிறைச்சாலைகளிலும், மருத்துவமனைகளிலும், போராட்ட காலங்களில் வீதிகளிலும் கொண்டாடப்படுகின்றது. இப்படி மக்கள் பேராவலோடு இந்தப் பந்தியில் பங்குபெற்றாலும், நமக்கு முன்பாகச் சவால் நிறைந்த கேள்விகள் பல உள்ளன. ஒரே உடலாக அனைவரையும் இணைக்கின்ற திருவிருந்தினால் பாரம்பரியங்கள் என்ற பெயரில் திருச்சபைகள் ஏன் பிரிந்திருக்க வேண்டும்? ஒரே பந்தியில் ஐக்கியப்பட்டு விட்டு, தன் சொந்த குடும்ப மக்களுக்கும் விரோதமாகச் செயல்படுவது முறையானதா?

அருள்திரு. T. **ஜெபின்**

28-08-2022

## கடவுளும் பல்சமயப் பற்றுறுதியாளர்களும்

**GOD AND PEOPLE OF ALL FAITHS**

ஆமோ 9:1-12 உரோ 2:17-29

திபா 66 யோவா. 10:14-18

**"இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகுளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும். அவையும் எனது குரலுக்குச் செவிசாய்க்கும். அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் எனும் நிலை ஏற்படும் "** (யோவா 10:16).

பல சமயங்களை பின்பற்றுகின்ற நாட்டில் நாம் வாழ்கிறோம். இச்சமயங்கள் மனித எண்ணங்களிலும், கலாச்சார பின்னணியிலும் இணைந்து உருவான நம்பிக்கையின் வெளிப்பாடாகும். ஆனால் சமய அடிப்படைவாத கொள்கையினால் மனுக்குலம் கடவுளின் முழுமையான வழிகாட்டுதலை புரிந்து கொள்ள இயலாமல் பிரிவினை கேட்டுபாடுகள், பிளவுகள், சண்டைகள் போன்றவைகளை நமது சமுதாயத்திலும், அரசியல், பொருளாதாரம் போன்றவற்றில் காண முடிகிறது. ஆகவே அவைகளை கடந்து கடவுளின் அன்பையும், மனுக்குலத்தின் வாழ்வையும் புரிந்து கொள்ள கடவுளின் நமக்கு அழைப்பு விடுக்கிறார்.

"ஒரே மந்தை - ஒரே ஆயர்" என்கிற வசனம், இயேசு கிறிஸ்து இங்கு பயன்படுத்துவதின் நோக்கம், பிரித்தெடுக்கப்பட்ட யூதர்களின் மன தெளிவின்னையும், பெருமையையும் திருச்சட்டங்களை கற்றுக் கொண்டவர்களின் அறியாமையையும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் சுகபோக வாழ்வையும் தெளிவுப்படுத்துகிறார். மேலும் தாங்கள் கற்றுகொண்டவைகளை நினைவில் கொள்வது ஏனைய மக்களை அற்பமாக எண்ணும் நிலைமைக்கு தள்ளப்பட்டனர்.

ஆகவே இயேசுவின் செய்தி கடவுளின் அன்பை வெளிப்படுத்த தியாக பாடு மரணம், உயிர்ப்பு போன்றவைகளால் அமைந்திருப்பதையும், இறைச்சாயலில் படைக்கப்பட்ட மனுக்குலம் எவ்வாறு பல் சமய நோக்கில் கடவுளின் திட்டங்களை புரிந்து கொண்டு வாழ வேண்டும் என்பதை கொடுக்கப்பட்ட திருவிவிலிய பாடத்தின் வாயிலாக சிந்தனை செய்வோம்.

### *1. கடவுள் அனைவரையும் அன்பு செய்து ஏற்றுக் கொள்பவர்* : (ஆமோ 9:1-12)

இஸ்ரயேலர் ஆண்டவர் தங்களோடிருக்கிறார், யாவையும் செய்து முடிக்கிறார் என்ற பெருமையான எண்ணத்தால் பிறரை நெருக்கி, சிறுமைப்படுத்தி, துணிகர பாவ செயலில் ஈடுபட்டனர். ஆகவே ஆமோஸ், அவர்களின் அடிமைத்தன வாழ்வையும், கடவுள் பார்வோனின் பலம்

பொருந்திய கைகளிலிருந்து விடுவித்து இரட்சித்ததையும் நினைவுப்படுத்துகின்றார். மட்டுமல்ல "இஸ்ரயேல் மக்களே, நீங்கள் எனக்கு எத்தியோப்பியரைப் போன்றவர்கள் தானே?" இஸ்ரயேல் மக்களை எகிப்து நாட்டினின்றும், பெலிஸ்தியரைக் கப்தோரிலிருந்தும், சீரியரை கீரிலிருந்தும் நான் அழைத்து வரவில்லையா? என்கிறார் ஆண்டவர் (ஆமோ 9:7).

இஸ்ரயேலரை கடவுள் எப்படி நேசிக்கிறாரோ அதைபோலவே அனைவரையும் அன்பாக நேசிக்கிறார் என்பதை ஆமோஸ் மக்களுக்கு தெளிவுப்படுத்துகிறார். கடவுள் அனைவருக்கும் பொதுவானவர், அனைத்து நம்பிக்கை மக்களுக்கும் பொதுவானவர். அவரிடத்தில் வேறுபாடு இல்லை என்பதை உணர்த்துகிறார். ஆமோஸ் இஸ்ரயேல் மக்களின் தவறான மனநிலை எண்ணத்தை புரிந்து கொண்டு, கடவுளின் ஆற்றலால் வாழ்வு பெற்ற நீங்கள் எளியவர்களை ஒடுக்கி (ஆமோ 2:6-8), உங்கள் சொந்த காரியங்களை மட்டுமே நினைத்து கொண்டிருப்பது ஆண்டவருடைய பார்வைக்கு அருவருப்பானது என தெளிவுப்படுத்துகிறார்.

இந்த சமுதாயத்தில் வாழும் நாமும், எப்படி நம்மை அடையாளப்படுத்தி கொள்கிறோம், வாழ்க்கையை எவ்வாறு அமைத்து கொண்டிருக்கிறோம் என்பதை சிந்திக்க வேண்டியது மிகவும் அவசியம் மேலும் உயர்ந்த தன்மைகளை நம் வாழ்வில் உறவுகள் மூலம் வெளிப்படுத்த கடவுள் விரும்புகிறார்.

### *2. கடவுள் சமய வாழ்வின் மாய்மாலத்தை விரும்பாதவர்* :

(உரோ 2:17-29)

தூய பவுலார் ரோமாபுரியில் வாழ்ந்த யூதர்களுக்கு சமாதியான கடவுளின் எதிர்பார்ப்பை வெளிப்படுத்துகிறார். திருச்சட்டங்களை கற்றுக் கொண்ட நீங்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற ஒழுங்குகளையும் கைக்கொள்ளுங்கள் என்றும் யூத கிறிஸ்தவர்கள் பிற இனத்துக் கிறிஸ்தவர்களோடு இருந்த உறவுகளை மேம்படுத்தவும் அழைப்பு விடுக்கின்றார். உதாரணமாக, விருத்தசேதனம் ஒரு மனிதனை நீதிமானாக்குவதில்லை. புறம்பான சமயச் சடங்குகளை கடைபிடித்து வாழ்வது ஒருவனை யூதனாக மாற்றுவதில்லை. உள்ளத்தில் செய்யப்படும் மாற்றமே உண்மையான விருத்தசேதனம் (உரோ 2:28,29) ஆகும்.

ரோமாபுரியில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் ஏனையை மக்களை அற்பமாய் நடத்தும் செயல்களை மிகவும் உண்மையாக எதிர்க்கிறார். அனைவரையும் கடவுள் நேசிக்கிறார் என்பதை கிறிஸ்துவின் பாடு, மரணம் வாயிலாக நினைவுப்படுத்துகிறார். கிறிஸ்துவினால் பெற்றுக் கொண்ட அங்கீகாரம் அனைவரையும் அதாவது கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட எல்லோரும் சபையிலும், சமுதாயத்திலும் ஒருவரையொருவர் உள்ளான

அன்போடு இருதயத்திலிருந்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

இன்றும் கிறிஸ்துவின் சமாதானத்தை அனுபவித்து வருகிற நாம் பிறருக்கு அவைகளை வாழ்வில், செயலில் வெளிப்படுத்த வேண்டும். நம்முடைய குடும்பங்கள் அதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதை இதயங்களில் உணர வேண்டும். அர்பணிக்க வேண்டும். பல் சமய சூழலில் வாழும் நாம் வெறும் பாரம்பரியர்கள் மட்டுமே சர்ந்திராமல் உள்ளத்திலிருந்து ஒளி பெற்று அனுபவ ரீதியாக பிறரையும் ஏற்று அரவணைக்க கடவுள் அழைக்கிறார்.

### *3. கடவுளின் நற்செய்தி எல்லோரையும் அரவணைப்பது* :

(யோவா 10:14-18)

நல்ல ஆயன் (Shephered) என்கிற உருவகம் பழைய ஏற்பாட்டின் காலத்தில் நாட்டின் தலைவர்களுக்கு (or) அரசர்களுக்கு கொடுக்கப்பட்டது (எரே 2:8-23; 25:34-36; 50:8, எசேக் 34). ஆயன் அனைத்தும் ஆடுகளையும் அறிந்து கொள்வார். மேலும் எதிர்பார்க்கப்பட்ட மேசியாவிற்கு இந்த சொல் விடுதலையாளராக உபயோகப்படுத்தப்பட்டது (மீகா 5:1-4). இயேசு இச்சொல்லை பயன்படுத்தி ஆயனின் பாரம்பரியத்தின் உண்மையை வெளிப்படுத்துகிறார். நல்ல ஆயனால் உண்டான மீட்பை அனுபவிக்கின்ற நீங்கள் மட்டுமல்ல வேறு ஆடுகளையும் ஆயனின் அன்பை உணர்ந்து கொள்ள வேண்டும். ஆயனின் தொனி எவ்விடத்திலெல்லாம் ஒலிக்கின்றதோ அவ்விடமனைத்தும் மீட்டு, விடுதலையுண்டு என்று அறிவிக்கிறார்.

கிறிஸ்துவின் நற்செய்தியை புரிந்து சமூகத்தை கிறிஸ்துவோடு இணைத்து சீரமைக்கவும், உடன் பங்காளியாயிருக்கவும் கடவுள் விரும்புகிறார். கடவுள் உலகிற்கு தன்னை வெளிப்படுத்தி மனுக்குலத்தை அன்பு செய்ததுபோல், இன்றைய காலகட்டத்தில் அடிப்படைவாதம், பிரிவினைவாதம் என்கிற சித்தாந்தங்களை கிறிஸ்துவால் உயிர்பொற்றிருக்கும். திருச்சபை அவைகளை வாழ்வில் வெளிப்படுத்த வேண்டும். பல் சமய சூழல் மக்களோடு வாழும் நாம், அனைவருக்கும் ஒளியாகவும், உதவியாகவும் வாழ அழைக்கப்படுகிறோம். கிறிஸ்துவில் வெளிப்பட்ட விடுதலையின் வாழ்வை சமூகம் உணர்ந்து கொள்ள நம் சமய வாழ்வை புரனமைப்போம்.

அருள்திரு. R. **ராஜபக்தசிங்**

04-09-2022

# கல்வி : திருச்சபையின் திருப்பணி

## EDUCATION AS A MINISTRY OF THE CHURCH

| | |
|---|---|
| நெகே 8:1-8 | திப 18:24-28 |
| திபா 119:41-48 | மத் 5:1-12 |

**"அவர் திருவாய் மலர்ந்து கற்பித்தவை"** (மத் 5:2)

கல்வி மனித வாழ்வில் மிகவும் முக்கியமானது. கல்வி மனிதவாழ்வை மாற்றம் செய்யும் வலிமைமிக்கது. William Dereslewlez என்ற புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளர் இவ்விதம் கூறுகிறார். "கல்வியினுடைய முக்கிய நோக்கம் வாழ்வில் வளர்வை உருவாக்குவது அல்ல, பண்பட்ட மனதை உருவாக்குவது. ஒரு சீனப் பழமொழி இவ்விதம் சொல்கிறது, கல்வியறிவு இல்லாத குழந்தை இறக்கை இல்லாத பறவைக்கு சமம்". தென்னாப்பிரிக்காவின் ஜனாதிபதியாகிய நெல்சன் மண்டேலா கல்வியை பற்றி இவ்விதம் விளக்குகிறார், "உலகத்தில் மாற்றத்தை உருவாக்கும் மிகப்பெரிய ஆயுதம் கல்வியாகும். கிரேக்க தத்துவ மேதையாகிய அரிஸ்டாட்டில் கூறும் போது "கல்வியின் வேர் கசக்கும், ஆனால் கல்வியின் கனியோ இனிக்கும்" என்கிறார். இத்தகைய சிறப்பு மிக்க பணியினை இயேசு கிறிஸ்து செய்தார். இயேசு கிறிஸ்துவின் பணியினை மூன்று நிலைகளில் பிரித்து பார்க்கலாம். (1) கற்றுக்கொடுக்கும் பணி, (2) போதிக்கும் பணி, (3) குணமாக்கும் பணி என்பன. திருப்பணிவிடையின் முதற் பகுதியாகிய மலைப்பொழிவில் முதன் முதலில் கற்றுக்கொடுக்கும் பணிவிடையினை நிறைவேற்றுகிறார் (மத் 5:2). இயேசு கிறிஸ்து கற்றுக் கொடுக்கும் பணிவிடையை நிறைவேற்றும் போது கல்வியை கற்போர் தெளிவுடன் கற்க வேண்டும் புரிந்துகொள்ள வேண்டும் என்ற சிந்தனை உடையவராக செயல்பட்டார். இதற்காக இயேசுகிறிஸ்து அதிகமாக உவமைகளை (மத் 13:34,35; மத் 13) பயன்படுத்தினார். கற்றுக்கொள்வோர் எளிதில் புரிந்து கொள்ளும் விதமாக ஒப்புமைகளை பயன்படுத்தினார். உதாரணமாக, அன்றாட வாழ்வை குறித்து அதிகமாக கவலை கொண்ட சீடர்களை பார்த்து ஆகாயத்து பறவைகள், காட்டு புஷ்பங்களை கவனித்து பாருங்கள் என்கிறார் (மத் 6:26). இயேசு கிறிஸ்து உருவக அணியையும் அதிகமாக பயன்படுத்தினார். உதாரணமாக நீங்கள் பூமிக்கு உப்பாக இருக்கிறீர்கள் (மத் 5:13). இத்தகைய சிறப்புமிக்க பணிவிடையை மேலைநாட்டு அருட்பணியாளர்கள் தொடர்ந்து நிறைவேற்றினார்கள்.

எனவே கல்விப் பணியினை திருச்சபையின் பொறுப்பான பணியாய் செய்து நிறைவேற்ற நாம் அழைக்கப்படுகிறோம். கல்விப்பணியின் சிறப்புகளை குறித்து பின்வரும் பகுதியில் தெளிவுடன் காண்கிறோம்.

## 1. கண்ணியமான வாழ்வுக்காய்க் கட்டளையைப் கற்பிக்கும் பணியாளர் : (நெகே 8:8)

கட்டளை மனித வாழ்வினுடைய விளக்கு. விளக்கு பிரகாசிக்கும் போது காரிருள் அகன்றுவிடும். அதைப்போன்று கட்டனை மனித வாழ்வில் செயல்படும் போது காரிருள் போன்ற தேவையற்ற பண்புகள் விலகிவிடும். இஸ்ரயேல் மக்கள் சிறையிருப்புக்கு பின்பு சுயநலம் சார்ந்து கடவுளின் பார்வையில் கண்ணியம் அற்ற வாழ்வு வாழத் தொடங்கினார். இதனைப் பார்த்து கோபமடைந்த எஸ்றா என்ற இறைப்பணியாளர் தோராவை எடுத்து படிக்கத் தொடங்கினார். கட்டளைகளை படிக்க கேட்ட இஸ்ரவேல் மக்கள் தங்கள் இதயத்தில் உணர்வடையத் தொடங்கினர் (நெகே 8:10). உணர்வடையும் இதயம் மனிதனை கண்ணியமாக வாழத்தூண்டும் இத்தகைய ஆற்றல் கட்டளைக்கு உள்ளபடியால் தான் எபிரேய மக்களுக்கு கட்டளைகளை தலைமுறை தலைமுறையாக கற்றுக்கொடுக்கும்படி கட்டளையிடுகிறார். சங்கீதம் 119:104இல் உமது கற்பனைகளால் உணர்வடைகிறேன் என்கிறார். கட்டளை மனிதனை உணர்வுள்ளவனாக மாற்றுகிறபடியால் கடவுள் மோசே வழியாக இஸ்ரயேல் மக்களுக்கு கற்றுக் கொடுக்கிறார் (இணை 6:6-9).

இவ்வுண்மை ஒருபுறம் இருக்க ரோ 3:21-25-28 ஆகிய வசனங்கள் நேர் எதிர்மறையான கருத்து ஒன்றை பதிவு செய்கிறது. திருச்சட்டம் சார்ந்த செயல்களால் கடவுளுக்கு ஏற்புடையவர்களாக மாற முடியாது என்கிறது. இதனை நாம் எப்படி புரிந்து கொள்வது என்ற கேள்வி எழும்புகிறது.

இயேசு மற்றும் பவுல் வாழ்ந்த காலத்தில் மக்கள் கட்டளைகளை கடைப்பிடிப்பது இப்படித்தான் இருந்தது. கட்டளைகளை கடைபிடிப்பதால் கடவுளின் ஏற்புடையவர்களாக மாறிவிடலாம் என்று கூறியது உண்மைதான். இங்கு இறைவன் விரும்பியது கட்டளைகளின் எழுத்துக்களை அல்ல, மாறாக கட்டளைகள் கற்று தரும் மனித நேயத்தை கடைபிடிக்க வேண்டும் என்பதே. ஆனால் பரிசேயர்களோ மனித நேயத்தை மறந்து கட்டளைகளின் வார்த்தைகளை பிடித்து கொண்டு அதையே நம்பினர். கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவை நம்புவதை விட கடவுளின் கட்டளையாகிய விருத்தசேதனம் செய்து கொண்டால் போதும் என்று என்னும் யூதர்களின் மூடத்தனத்தை பவுலடியார் படம்

பிடித்து காட்டுகிறார். எனவே மனித நேயத்தை மையகப்படுத்திய கடவுளின் கட்டளை மனித வாழ்வினை கண்ணியமான வாழ்வாக மாற்றுகிறது.

## *2. கடவுளின் இயல்பு நிலையைக் கற்றுக்கொடுக்கும் கல்வியாளர்*: (திப 18:28)

இயேசுநாதரின் இயல்பு நிலைகளை குறித்து பல்வேறு ஐயப்பாடுகள் தொடக்கக்கால திருச்சபையில் எழுந்தது. யூதர்களை பொறுத்த மட்டில் இயேசு கிறிஸ்து இடறுதலுக்குரிய கல்லாகவே காணப்பட்டார். இயேசுகிறிஸ்து எண்ணற்ற அற்புதங்களின் வழியாக தன்னுடைய தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்தின பின்பும் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை இச 21:23 இன்படி “தொங்கவிடப்பட்டவன் சபிக்கப்பட்டவன்” என்ற நியாயப் பிரமாணத்தை முன்னிலைப்படுத்தி இயேசு கிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை. கிரேக்கர்கள் இயேசுவை கிறிஸ்துவின் இயல்பு நிலையை முட்டாள் தனமான செயலாக கருதினார்கள். “மனிதர்களின் அன்றாட வாழ்வில் செயல்படுகிறார்” என்ற சிந்தனை “கடவுளுக்கே இழிவானது ஆகும்” என் புளூ டார்க் கூறுவதாக “வில்லியம் பார்க்ளே” குறிப்பிடுகிறார்.

இத்தகைய பின்னணியத்தில் தான் இயேசுகிறிஸ்துவின் இயல்பு நிலையை குறித்து அப்பல்லோ எபேசு பட்டணத்திற்கு கற்றுக்கொடுப்பதனை திப 18:28 இல் காணலாம். எபேசு பட்டணம் என்பது ஆசியா மாகாணத்தின் தலைநகரம் ஆகும். இப்பட்டணம் சின்ன ஆசியாவின் வியாபர இடமாகக் கருதப்பட்டது. இப்பட்டணத்திற்கு என்று தனிப்பட்ட வழக்கு மன்றமும் பேரவையும் இருந்தது. இப்பட்டணத்தில் தான் கல்வியறிவில் மிகவும் சிறப்பாய் தேர்ச்சிப்பெற்ற கல்வியாளர் அப்பல்லோ (திப 8:24) என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் திருமுழுக்கு முனிவர் யோவானால் திருமுழுக்கு பெற்றவர். இவர் இயேசுவே கிறிஸ்து என்று மிக தெளிவாய் அறிக்கை செய்தார். இவரது அறிக்கையானது அநேகரை சாட்சிகளாக மாற்றியது. உதாரணமாக ஆக்கில்லா பிறிஸ்கில்லா இயேசு கிறிஸ்துவின் இயல்பை தெளிவாக அறிக்கை செய்வது தான் கற்றுக் கொண்டவர்களின் மிகச்சிறப்பான கடமை. இயேசு கிறிஸ்து பணிவிடை செய்த காலத்தில் இயேசு கிறிஸ்துவின் இயல்பு நிலையை குறித்து பல்வேறு அறிக்கைகள் வெளியாயின. பெயல்செபூலின் தலைவன் என்றனர் ஒரு கூட்டத்தவர் (லூக் 11:15). ஒரு சிலர் யோவான் ஸ்நாபகன் என்றனர். ஒரு சிலர் எலியா என்றனர். ஒரு சிலர் எரேமியா

என்றனர். ஒரு சிலர் தீர்க்கதரிசி என்றனர். ஆனால் எம்மாவூருக்கு சென்ற சீடர்கள் இயேசு கிறிஸ்துவிடம் கற்றுக்கொண்ட போது "இயேசு உயிர்த்தெழுந்தவர் என்று அறிக்கை செய்தனர்" (லூக் 24:34). எனவே இயேசு கிறிஸ்துவின் இயல்பு நிலையை அறிக்கை செய்வது தான் கல்வியாளரின் பணிவிடை.

இயேசு கிறிஸ்துவின் இயல்பு தன்மையை அறிக்கை செய்வதற்க்காய் துன்புறுத்தப்பட்டபோது "உங்களால் என்னை கொல்ல முடியும்". ஆனால் என்னை மனம் தளர செய்ய முடியாது என்று அறிக்கை செய்து கி.பி. 165 இல் உயிர் விட்டவர் தான் ஜஸ்டின் மார்ட்டியர். இவர் சமாரியாவின் நியாஹேலிசில் கி.பி. 100 இல் பிறந்தவர். கிரேக்க தத்துவத்தை கற்று தேர்ந்தார். கி.பி. 133 இல் வயதான கிறிஸ்தவரிடம் கிடைத்த தொடர்பால் இவர் கிறிஸ்தவரானார்.

திருமறையைக் கற்பிப்பதில் தனிக்கவனம் செலுத்தினார். திருமறை சத்தியங்களை கடைபிப்பதில் விசுவாசிகள் தளர்ந்து விடக்கூடாது என்பதில் தெளிவாய் இருந்தார். இதன் விளைவாக கி.பி. 165 இல் சக்கரவர்த்தியால் கொலை செய்யப்பட்டார். கடவுளின் இயல்பை குறித்து கூறினதற்காய் கொலை செய்யப்பபட்ட ஜஸ்டின் மார்ட்டியர் நாம் அனைவருக்கும் ஒரு முன்மாதிரி ஆவார்.

### *3. கடவுளின் அரசின் சிலாக்கியத்தைக் கற்றுக்கொடுக்கும் இயேசு கிறிஸ்து* : (மத் 5:2)

இயேசு கிறிஸ்து கற்றுக் கொண்டவர் என்ற உண்மையினை லூக் 2:52 வழியாய் நாம் அறிந்து கொள்ளலாம். அவர் கற்றுக் கொண்டதை தன்னை பின்பற்றி வந்த பற்றாளர்களுக்கு மிகத் தெளிவாக கற்றுக் கொடுக்கிறார். கடவுளின் அரசு என்பது கடவுள் ஆட்சி செய்ய மக்கள் செயலிழந்து வெறும் குடிமக்களாக மட்டும் இருப்பார் என்பது பொருளல்ல. கடவுளின் அரசாட்சி என்பது மக்களோடு பகிர்ந்து கொள்ளப்படும் அரசாட்சி ஆகும். கடவுள் மக்களிடையே கூடாரமடித்து தங்கும் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது தான் கடவுளுடைய அரசாட்சியின் தன்மை. மக்கள் அனைவரும் கடவுளை அறியும் அறிவினால் நிறைந்து ஒருவன் மற்றொருவனை பார்த்து கடவுளை அறிந்து கொள் என்று சொல்ல தேவையில்லாத நிலையை வெளிப்படுத்தும் அரசு தான் கடவுளின் அரசு (எரே 31:34).

இத்தகைய சிறப்பு மிக்க அரசாட்சியில் அங்கத்துவம் பெற தனிமனித வாழ்வு ஆயத்தம் முதற்கொண்டு சமூக, சமய வாழ்வு ஆயத்தம்

வரை முதன்மைபடுத்தப்பட்டுள்ளது. தனிமனித வாழ்வின் ஆயத்தமாய் துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் (மத் 3:4) என்ற சொற்றொடரில் இருந்து துவங்குகிறது. துயரப்படுகிறவர்கள் என்பவர்கள் இதயம் உடைக்கப்பட்டவர்களை நொறுங்குண்டவர்களை குறிக்கிறது. மனிதர்கள் தங்கள் பாவத்தையும், தீயக்குணத்தையும் உணர்ந்து உள்ளம் உடைக்கப்பட்டு துன்புறுதல் கடவுளுடைய அரசின் முதல் படிநிலையாக புரிந்து கொள்ளலாம். மேலும் இதயத்தில் தூய்மை (5:8) என்ற சிந்தனையையும் இத்தோடு இணைத்து புரிந்து கொள்ளலாம். தனி மனித வாழ்வின் திருப்பம் சமூகத்தையும், சமயத்தையும், புணரமைக்கிறது என்பதனை புரிந்து கொள்ளலாம். சமூக வாழ்வின் தெளிவு என்பது கடவுளுடைய அரசின் நுழைவதற்கு இன்னொரு படிநிலையாக புரிந்து கொள்ளலாம். சமூகத்தில் கட்டவிழ்த்து விடப்படும் அநிதியான அனுபவங்களுக்கு எதிராய் குரல் கொடுப்பதே கடவுளிடைய அரசின் பிரதிநிதியின் பணிவிடை. சமூக அமைப்பு முறைகள் அநேகரை தரித்திராக மாற்றுகிறது. அநீதியானது சமய நம்பிக்கைகளாலும், சமுதாய பழக்கங்களாலும், பண்பாட்டு தகவுகளாலும் தக்க வைக்கப்படுகிறது. அப்போது அமைதியாய் இராதபடி துணிச்சலுடன் இறை நீதிக்கு அடுத்த செயலில் இறங்குவதே சமூக மாற்றத்தை வெளிப்படுத்துகிறது. உதாரணமாய் இயேசு கிறிஸ்துவின் செயலே இதற்கு சான்றாகும் மத் 12:9-21 இல் முடிய உள்ள நிகழ்வுகளின் வழியாய் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது. இறைவனுடைய அரசு என்பது தனிமனித வாழ்வையும், சமூக, சமய வாழ்வையும் சார்ந்தது. இத்தகைய நிலையில் செயல்படுபவர்களே பேறுபெற்றவர்கள். எனவே தான் இயேசு கிறிஸ்து மலைப்பொழிவில் கடவுளுடைய அரசின் ரகசியத்தை தெளிவாக விளக்கி சொல்கிறார்.

கற்றுக்கொள்ளுதல் என்பது ஏட்டளவில் நின்றுவிடாதபடிக்கு செயல் வடிவம் பெறுதல் வேண்டும் கற்று கொடுக்கும் திருப்பணிவிடையை நிறைவேற்றும் திருச்சபையானது மனிதனை கண்ணியமாக வாழவைக்கும் கடவுளின் கட்டளைகளை கற்றுக்கொடுப்பதிலும், கடவுளுடைய இயல்பு நிலையை கற்றுக்கொடுப்பதிலும், கடவுளுடைய அரசின் சிலாக்கியங்களை கற்றுக் கொடுப்பதிலும் துணிச்சலுடன் செயல்பட வேண்டும்.

அருள்திரு. P.G. **ஜெயின் குமார்**

11-09-2022

## பெண்களின் திருப்பணியை நினைவுகூர்தலும் கொண்டாடுதலும்

**REMEMBERING AND CELEBRATING WOMEN'S MINISTRY**

நீத 4:4-16 பிலி 4:1-7
திபா 132 லூக் 8:1-3

**"...இவர்கள் தங்கள் உடைமைகளைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்து வந்தார்கள்."** (லூக் 8:3b)

பழைய, புதிய ஏற்பாட்டில் இறைப் பணியில் பெண்களின் பங்களிப்பு சிறப்பானது. மிகவும் பாராட்டிற்குரியது, நினைவுகூரபட வேண்டியது, கொண்டாடி மகிழ வேண்டியதாகும். பழைய ஏற்பாட்டில் மிரியாம், தெபோராள், எஸ்தர், ரூத் போன்ற பெண்களும் புதிய ஏற்பாட்டில் இயேசுவின் தாய் மரியாள், மகதேலானா மரியாள், பிரிஸ்கில்லாள், சமாரியாப்பெண், தொற்காள், லீதியாள் போன்ற பெண்களும் இறைப்பணியை சிறப்பாக செய்தனர். அருள்நாதர் இயேசு கிறிஸ்து இப்பூவுலகில் அருள்பணி செய்தபோது அவரது திருப்பணியை ஆஸ்திகளால் செய்தவர்கள் பெண்களே! (லூக் 8:1-3). பெண்கள் இயேசுவால் அடையாளப்படுத்தப்பட்டனர், அங்கீகரிக்கப்பட்டனர். எருசலேம் தொழுகை கூடத்தில் காணிக்கை பெட்டியினருகே உட்கார்ந்து காணிக்கை செலுத்தியவர்களை உற்று கவனிக்கின்றார். இரண்டு காசுகளை காணிக்கையாக படைத்த ஏழை கைம்பெண்ணை வெகுவாய் பாராட்டினார். அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் கல்லறைக்கு அதிகாலையில் இருட்டோடே சென்ற பெருமைக்குரியவர்கள் பெண்களே. ஆண்டவரின் அருட்பணிக்கு தங்களை அர்ப்பணம் செய்தவர்கள் பெண்கள். இறைவேண்டல், ஈகை, நற்செய்தியை நவின்றல் போன்றவற்றிற்கு அடித்தளம் அமைத்தவர்கள் பெண்களே. புதிய ஏற்பாட்டில் இயேசுவின் தாய் மரியாள், மகதலேனா மரியாள், பிரிஸ்கில்லாள், சமாரியாப் பெண், லீதியாள், தொற்காள் போன்ற பெண்களும் இறைப்பணியை சிறப்பாய் செய்தனர். ஆண்களைப் போன்று இறைபணியை பெண்களும் செய்திருப்பதை திருமறை தெள்ளத் தெளிவாக கோடிட்டுக் காட்டுகிறது.

இச்சிறப்பு தொழுகையில் சிறப்பாக நினைவு கூரப்படுகின்ற தெபோராள் குறித்து சிந்திப்போம். இஸ்ரவேல் மக்களின் வாழ்வில் இராஜாக்கள், இறைவாக்கினர்கள் இல்லாத காலத்தில் கடவுளின் பார்வைக்கு பொல்லாப்பானவற்றை செய்து கடவுளுக்கு கோபமூட்டினர். கடவுள் அவர்களை யாபீன் என்றும் கானானியருடைய ராஜாவின் கையில் அடிமைகளாக ஒப்புக் கொடுத்தார். அவன் சேனாதிபதி "சிசெரா". அவனுக்கு 900 இரும்புத் தேர்கள் இருந்தன. அவன் இருபது ஆண்டுகள்

இஸ்ரவேலரை ஒடுக்கினான். அச்சமயத்தில் இஸ்ரவேலருக்கு இறைவாக்கினராய் இருந்தவர் தான் இலிப்பிதோத்தின் மனைவி "தெபோரா". தெபோரா என்றால் "தேனீ என்றும் பெண்கள் வேதாகம விளக்கவுரையில்" Woman of fire தெபோரா ஒரு "நெருப்பு" என்றும் கூறப்பட்டுள்ளது.

**1. தெபோரா ஒரு சிறப்பான இறைவாக்கினர்** : (நீத 4:4)

இவர் ஒரு குடும்பத் தலைவி. இவர் வாழ்க்கை சமய சமூக அரசியல் சூழலில் சிறந்த பங்களிப்பை கொடுத்தார். இறைவாக்காக (நீத 4:6,7) நப்தலியில் இருந்த கெதேசில் வாழ்ந்த அபினொவாமின் மகன் பாரத்தை ஆளனுப்பிக் கூப்பிட்டு, இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் கட்டளையிடுகிறார், நீ போய் நப்தலி, செபிலோன் மக்களைத் தாபோர் மலையில் ஒன்று கூட்டி, அவர்களில் பத்தாயிரம் பேரை சேர்த்துக் கொள்ளும், யாபினின் படைத்தலைவன் சீசராவையும், அவன் தேர்களையும், படையையும் கீசோன் ஆற்றின் அருகே இடித்து வந்து 2ம் கையில் கொடுப்பேன் என்று இறைவாக்குரைத்தார். பாராக் அதற்கு பதிலாக நீர் என்னுடன் வந்தால் மட்டுமே செல்வேன். வராவிட்டால் நான் செல்ல மாட்டேன் என்றார். தெபோரா நான் உறுதியாக வருவேன். நீர் செல்லும் வழி உமக்குப் பெருமை தராது என்று திட்டவட்டமாக கூறினார். தெபோராளின் இறைவாக்குபடி ஆண்டவர் சீசராவை, 'யாவேல்' என்ற பெண்ணிடம் ஒப்பு கொடுத்தார். யாவேலின் கூடாரத்திற்குள் வந்து தஞ்சம் புகுந்த சிசராவை ஏற்று கொண்டாள். தண்ணீர் கேட்டவனுக்கு பாலை குடிக்க கொடுத்தாள். சிசெரா தூங்கிக் கொண்டிருந்த போது எபேரின் மனைவி யாவேல் கூடார முளை ஒன்றையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு, ஓசைப் படாமல் அவனிடம் வந்து அவன் நெற்றிப் பொட்டில் முளை தரையில் இரங்கும் வரை அடிக்க அவன் மடிந்தான். பழைய ஏற்பாட்டின் இறைவாக்கினர்களின் இறைவாக்கு உண்மையுள்ளதாய் இருந்தது. (2அரச 5:10-14) எலியா தீர்க்கனிடம் தொழுநோயிலிருந்து விடுதலை பெற வந்த சீரிய படைத்தலைவன் நாகமானிடம் யோர்தானில் ஏழுமுறை மூழ்கினால் உடல் நலம் பெறும் என்றார். நாகமான் மூழ்கி எழுந்தவுடன் சிறுபிள்ளையின் உடல் போன்று தொழுநோயிலிருந்து விடுதலை பெற்றார்.

**2. தெபோரா இராணுவத் தளபதி, நியாயாதிபதி** : (நீத 4:9-14)

பாராக் என்றால் "thunderbolt" என்று பொருள். அவனிடம் தெபோராள் நானும் போருக்கு வருகிறேன் என்று புறப்பட்டாள். நப்தலி, செபுலோன் மக்களை தாபோர் மலையில் ஒன்று சேர்த்து அவர்களிடமிருந்து பத்தாயிரம் பேரை சேர்த்துக் கொள்ள ஆலோசனை கொடுக்கிறாள். பத்தாயிரம் பேர் அணிவகுந்து செல்ல தெபோராள்

அவர்களுடன் சென்றாள் (நீத 4:14). தெபோராள் பாராக்கிடம் எழுந்திரும் இந்நாளில் ஆண்டவர் சீசராவை உம்மிடம் ஒப்படைப்பார் என்று தைரியம் கொடுக்கிறாள். பாராக் தாபோர் மலையிலிருந்து பத்தாயிரம் பேரோடு இறங்கிய போது ஆண்டவர் சிசராவையும் அவன் தேர்களையும் படைமுழுவதையும் வாள் முனையில் பாராக்கின் முன்னால் சிதறடித்தார். சிசெராவின் படைமுழுவதும் வாள் முனைக்கு இரையாயிற்று. தெபோராளின் இராணுவ ஆலோசனைகள் பாராக், யுத்தத்தை முன்னின்று நடத்த காரணமாயிற்று. கோத்திரங்கள் பிரிந்து போன சூழலில் தெபோராள் என்ற பெண் இறைவாக்கினர் எழும்பியதால் பாராக் தைரியத்துடனும், துணிச்சலுடனும் யுத்தத்தை நடத்தினார். போர்கள முனையிலே தங்கள் உயிரையும் துச்சமாக துணிந்து நிற்கும் மக்களை தெபோராள் தட்டி எழுப்பினாள் (நீத 5:18). தெபோராளின் எழுச்சி யாகேல் போன்ற பெண்களையும் துணிந்து எழும்ப வழிகாட்டியது. மனிதர்கள் மட்டுமல்ல இயற்கையின் தத்துவங்களும் தெபோராளுக்கு ஆதரவாக எழும்பின. (நீத 5:20). வானத்திலிருந்து விண்மீன்கள் போரிட்டன. தங்கள் பாதையிலிருந்து சிசராவுடன் போரிட்டன. நீத 5ல் சிசராவை அழித்து தெபோராளும், பாராக்கும் வெற்றிபாடல் பாடி கொண்டாடி மகிழ்ந்தனர். இன்று நம்முடைய இராணுவத்தில் பெண்கள் சேர்க்கப்பட்டு சிறப்பாக பணி செய்கின்றனர். போர் பயிற்சி கல்லூரிகளிலும் பெண்கள் சேர்க்கப்பட்டனர்.

### *3. இஸ்ரயேல் சமூகத்திற்குத் தாயாகச் செயல்பட்டார்* :

(நீத 5:7,8)

வாழ்விழந்து கிடந்த இஸ்ரயேலின் சிற்றூர்கள் வாழ்வு பெற்றன. சமூக பணியை சிறப்பாக தெபோராள் செய்தாள். நெடுஞ்சாலைகள் வெறுமையாகி கிடந்தன. பயணிகள் சுற்றுப் பாதையில் பயணம் செய்தார். எங்கும் யுத்த சத்தம். யுத்தம் வாசல் வரைக்கும் வந்த சூழலில் தெபோராள் மக்கள் அமைதியாக வாழும் நல்ல சூழலை உருவாக்கினாள். அமைதியின் கருவியாய் ஆண்டவர் பயன்படுத்தினார். இஸ்ரவேலில் பாழாய் போன நகரங்கள், கட்டி எழுப்புவதற்காக தெபோராள் தாயாக எழும்பினாள் (நீத 14:1). ஞானமுள்ள பெண்கள் தம் இல்லத்தைக் கட்டியெழுப்புகின்றனர். அறிவாற்றலோடு தம் கைகளைக் கொண்டே அதை அழித்து விடுகின்றனர்.

ஞானத்தோடு தெபோராள் செயல்பட்டதினால் தன் குடும்பத்தை, சமூகத்தை, இஸ்ரவேலை கட்டி எழுப்பும் சிற்பியாய் செயல்பட்டாள். கலங்கரை விளக்காய் இருளில் மூடிக் கிடந்த இஸ்ரவேலரை அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுத்து திருமறையில் அழியா இடம் பெற்ற தெபோராளைப் போல நம் பணி அமைய ஆண்டவர் அருள்புரிவாயாக.

அருள்திருமதி. **சார்லெட் சௌந்தரராஜன்**

18-09-2022 **தென்னிந்தியத் திருச்சபை பவளவிழா ஞாயிறு**

# பணிவிடையில் ஒன்றிப்பு
## UNITY IN SERVICE

| | |
|---|---|
| விப 4:27-31 | 1கொரி 3:1-15 |
| திபா 28 | யோவா 17:9-23 |

**“எல்லாரும் ஒன்றாயிருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக!”** (யோவா 17:21).

உலக திருச்சபை வரலாற்றில் தென்னிந்தியத் திருச்சபை உருவாக்கம் என்பது மிகவும் முக்கியமானதாகும். 1947ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ஆம் நாள் தென்னிந்தியத் திருச்சபை ஐக்கியம் சென்னையிலுள்ள புனித ஜார்ஜ் கதீட்ரல் ஆலயத்தில் உதயமானது. அந்தத் தொழுகையில் 9 ஆயர்கள் பேராயர்களாக நியமனம் பெற்றனர். அவர்களில் ஒருவர் தென்திருவிதாங்கூர் பேராயர் A.H. லெக் அவர்கள் ஆவார். உலகத் திருச்சபையின் வரலாற்றில் இது மிகவும் முக்கியமான மைல்கல். உலகத் திருச்சபைத் தலைவர்கள் இதனை இரண்டாம் பெந்தக்கோஸ்து திருநாள் என்றே அழைக்கின்றனர். அவ்வளவு முக்கியத்துவம் பெற்ற இந்தத் திருச்சபைத் திருநாளில் அனைவரும் ஒன்றாய் இணைந்து கொண்டாட அழைக்கப்பட்டுள்ளோம். 1கொரி 12:20இல், “எனவே தான் பல உறுப்புகளை உடையதாய் இருந்தாலும் உடல் ஒன்றே எனப் படிக்கிறோம்” கொய்னோனியா (Koinonia) எனும் கிரேக்கச் சொல்லிற்கு “ஐக்கியமாய்ச் செயல்படுதல்” என்று பொருள். அதுபோல டயகோனியா (Diakonia) என்றால் பணிவிடை செய்தல் என்று பொருள். நீங்கள் உலகமெங்கும் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்று உயிருடன் எழுந்த கிறிஸ்து கூறியதின்படியே இறைப்பணிவிடையை இணைந்து துணிவுடன் நிறைவேற்றுவது நமது கடமை என்பதை உணர்வோம்.

அமெரிக்கா நாட்டு மக்களில், மிகவும் சிறப்பாக, கறுப்பின மக்களின் விடுதலைக்காகத் துணிவுடன் இணைந்து போராடியவரும் அனைவரையும் ஒன்றிணைக்க முயன்றவருமான போராளி மார்ட்டின் லூதர் கிங் என்பவர் குறிப்பிடும்போது “இருள் இருளை விரட்ட முடியாது. வெளிச்சத்தால் மட்டுமே இருளைப் போக்கிட இயலும்; வெறுப்பு வெறுப்பினை வீசி எறிய முடியாது. ஐக்கியத்துடன் கூடிய அன்பால் மட்டுமே வெறுப்பினை அகற்றிட முடியும்” [Darkness cannot drive out darkness, Only light can do that. Hate cannot drive out hate, only love and unity can do it] என்கிறார். ஒன்றிணைந்து, ஒற்றுமையுடன் நிறைவேற்றப்படும்

பணிவிடையே அருட்பணி. அன்பைத் தாருங்கள், நண்பராயிருங்கள் என்று பேராயர் V.S. அசரியா கூறுகிறார். பேராயர். லெஸ்லி நியுபிகின் கூறும்போது, “சான்று பகர்தலும் ஒன்றிணைந்து பணி செய்தலுமே தான் மூவொரு கடவுளில் வெளிப்படும் ஒன்றிப்பு” என்கிறார். பிளேட்டோ கூறுகையில் “உண்மைச் செயலுக்காய் ஒன்றிப்பது நன்று” என்கிறார். தென்னிந்தியத் திருச்சபையின் உருவாக்க நாளில் யோவா 17:9-23 வரையுள்ள திருவசனங்களை அடிப்படையாகக் கொண்டு தியானிப்போம்.

***1. பாதுகாக்கும் பணிவிடை வழி ஒன்றிப்பு*** : (யோவா 17:12)

இயேசுவின் குருத்துவ இறைவேண்டலில் தம்மை மாட்சிப்படுத்துமாறு தம் தந்தையிடம் வேண்டியவர், தமக்காக அல்லாமல் தமது சீடருக்காகவே அதிகமாக வேண்டுதல் செய்கிறார். சீடர்களைப் பணிவிடைக்காய் அழைத்தவர் இறைவேண்டல் வழி ஆயத்தம் செய்கிறார். தம் உடன் பணிவிடையில் பங்கேற்றவர்கள் மேலும் துணிவுடன் இவ்வுலகில் தமது பணியைத் தொடர்ந்திடவும் இறைமக்களின் ஆன்மிகத்தை ஊன்றக் கட்டிடும் பங்காளர்களாய் மாறிடவும் வேண்டுதல் புரிகின்றார். பாதுகாக்கும் பணிவிடை என்பது மனுக்குலம் மட்டுமல்ல படைப்பனைத்தையும் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகிறார். M.M. தாமஸ் என்ற இறையியலாளர் கூறுகையில், “ஒருமைப்பாடு என்பது சமயத்தின் அடிப்படையில் அல்ல. உலகச் சுற்றுசூழலின் அடிப்படையில் அமைந்து உள்ளது” என்கிறார். படைப்பனைத்தும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். உரோ 8:9-22இல் பவுலார், படைப்பனைத்தும் மீட்பு பெற வேதனை அடைந்து கொண்டிருக்கிறது என்கிறார். இதிலிருந்து இந்த உலகின் (Cosmos) மீதும் இறைவார்த்தையின் மீதும் இயேசுநாதர் கொண்டிருந்த நம்பிக்கையின் உறுதிப்பாட்டை அறியலாம்.

சவால் நிறைந்த உலகில் ஏற்படும் எல்லா நெருக்கடிகளையும் இறைவேண்டல் மூலமாகவே எதிர்கொள்ளும்படி துணிவு ஏற்பட வேண்டி இயேசு வேண்டுதல் செய்கின்றார். நான் அவர்களோடு இருந்தபோது நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்து வந்தேன் என்கிறார். விட்டாஸ் என்னும் பிரேசில் நாட்டு இறையியலாளர் “அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பதுதான் பாதுகாக்கும் பணிவிடை” என்கிறார். இயேசுவின் பணிவிடை முழுக்க முழுக்க மக்கள் வாழ்வு சார்ந்தும், தேவைகளை நிறைவேற்றுவதும், உரிமைகளை நிலைநாட்டுவதும் துன்புறுவோரின் சார்பில் நின்று பாதுகாப்பு தருவதுமே ஆகும். ஆகவே அநீதிக்கு எதிராகக் குரல்கொடுக்கும் துணிச்சல் சீடர்களுக்கு ஏற்பட வேண்டும் என்றும் இயேசு வேண்டுதல் செய்கின்றார். இயேசு தம் சீடர்கள் தமது சார்பில் நின்று இந்த உலகில் நற்பணி செய்திட வேண்டும். இவ்வுலகில் வாழும் அனைவரையும் பாதுகாக்கும் கருவிகளாய் இயங்கிட உம்

ஆற்றலால் வழி நடத்தும் என்று இயேசு கரிசனையுடன் சீடர்களைத் தம் தந்தையின் பாதுகாப்பில் ஒப்படைத்து "தந்தையே தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருள வேண்டும் என்றே வேண்டுகிறேன்" என்றார் (யோவா 17:15). சீடர்கள் தீயோனின் வழியில் விழவும் கூடாது. அதுபோல மக்களையும் பாதுகாக்கும் பணியாளர்களாயும் ஒன்றிப்பின் பணிவிடையில் உறுதிப்பட்டிடவும், உறுதிப்படுத்திடவும் அழைக்கிறார். இயேசுவின் இந்த வேண்டுதல் தாம் பிரியும் வேளை வந்தது என்றும் சீடர்கள் தம்மோடும் தந்தையோடும் ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்றும் தமது பணியைத் தொடர்ந்து செய்யவும் கூறுகிறார்.

***2. பண்படுத்தும் பணிவிடை வழி ஒன்றிப்பு*** : (யோவா 17:17)

சீடர்கள் என்றால் கற்றுக்கொள்பவர், கைக்கொள்பவர், மாணவர், கடைப்பிடிப்பவர் எனப் பல பொருள்கள் உள்ளன. இயேசுவின் சீடர்கள் என்பவர்கள் இறைவார்த்தைகளை நேரடியாகப் பெற்றவர்கள்; உண்மையை உணர்ந்து கற்றவர்கள். இயேசு செய்த அற்புதங்கள் மற்றும் அருஞ்செயல்களை நேரடியாகக் கண்டு கற்றார்கள். மேலும் இயேசுவின் பணி ஒடுக்கப்பட்டோர் நடுவில் தான் இருந்தது. துன்புறும் சூழலில் தேவையில் உள்ளவர்கள் சார்பில் நின்று உண்மையை அனுபவ வழியில் கற்றுச் செயல்பட்டனர். கலிலேயாவில் சீடர்கள் கற்றனர். பாவ்லோ பிரையரே கூறுகையில் ஒடுக்கப்படும் சூழலில் தான் உண்மையைக் கற்க முடியும் என்கிறார். அனுபவ வழியில் கற்றது பண்புள்ள பணிவிடைக்கு ஆயத்தம் செய்கிறது.

இயேசுவின் வார்த்தையை அவரிடம் பெற்ற சீடர்கள் அந்த உண்மையை உலகத்திற்கு எடுத்துக் கூறும் உண்மை நற்செய்தியாளராய்ச் செயல்பட்டிட விரும்பினர். ஜப்பான் நாட்டு இறையியலாளர் கொசுக்கே கொயாமா (Kosuke Koyama) கூறும்போது, உலகம் அனைத்திலும் நம்பிக்கை இழந்த மக்கள் நம்பிக்கையைப் பெறுவதே ஒன்றிப்பு என்கிறார். நற்செய்தி என்பது மக்களின் வாழ்வில் நம்பிக்கை என்னும் நல்ஒளியை ஏற்றுவதே. நற்செய்தி அறிவிக்க தம் தந்தையால் பணிக்கப்பட்ட இயேசு, தூய ஆவியாரின் ஆற்றலால் உலகுக்கு அனுப்பப்பட்டு இறைப்பணி செய்தார். அதுபோல தம் சீடர்களும் இறைவார்த்தையை உண்மையோடு இந்த உலகில் அறிவிக்கின்ற கருவிகளாய்ச் செயல்பட வேண்டி இயேசு தம் தந்தையிடம் வேண்டுகிறார். உண்மையினால் தம் சீடர்களை அர்ப்பணமாக்கியருள வேண்டுதல் செய்கிறார். இயேசு உண்மையைப் போதித்தார். தமது வாழ்வின் மூலமாய் வாழ்ந்தும் காட்டினார். ஆனால் அவருக்கு இந்த உலகில் கிடைத்த பரிசு துன்பம்தான். தம் சீடர்களும் துன்பத்தின் மத்தியிலும் உண்மைப் பணியராய் நின்று பணி செய்யவும்

இவ்வுலகின் மக்களைப் பண்படுத்துவதோடு பண்பாளர்களாய் மாற்றிடவும் பணிவிடை வழியாய் ஒற்றுமையை ஏற்படுத்திடவும் இயேசு விரும்புகின்றார். இயேசு உண்மையைத் தம் சீடருக்குக் கற்றுக் கொடுத்தார். அதுபோல நாமும் அவரது சார்பில் நின்று பண்படுத்தும் பணிவிடை செய்வோம்.

***3. பங்களிக்கும் பணிவிடை வழி ஒன்றிப்பு*** : (யோவா 17:21)

பங்களிக்கும் பணிவிடை என்பது ஒருவர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியில் எவ்வளவு ஈடுபாட்டுடன் ஒன்றித்துச் செயல்படுகிறார் என்பது தான் இதில் முக்கியம் பெறுகிறது. இயேசுவின் காலத்தில் சீடரிடையே ஒற்றுமை சீர்குலைந்திருந்தது. சீடர்கள் என்பவர்கள் நற்செய்தி பணிக்காய்த் தங்களையே அர்ப்பணித்தவர்கள். அவர்கள் ஒன்றித்து நின்று ஒற்றுமையுடன் செயல்பட்டால் மட்டுமே பணிவிடையை முழுமையாய் ஈடுபாட்டுடன் ஆற்றிட இயலும். சீடர்களிடையே ஒற்றுமை இயலாத சூழலில் திருப்பணியில் தொய்வையும் தோல்வியையுமே பெற்றிட முடியும். எனவே தான் சீடர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் தங்களுடைய பங்களிக்கும் பணிவிடையில் முழுமையாய் ஈடுபட வேண்டியும் இயேசு வேண்டுதல் செய்கிறார் (யோவா 17:21-23).

இயேசு தம் தந்தையுடன் ஒன்றித்து இருந்ததால்தான் இறைத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற முடிந்தது. எனவே தான் எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக (யோவா 17:21) என்று இயேசு வேண்டுதல் செய்தார். கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்ட அனைவரும் அவரது பங்காளராய் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். வேறுபாடுகளைக் களைந்து இணைந்து ஒன்றாய் வாழ்வோம் (கலா 3:27,28). கடவுளோடு நம்மை இணைத்துக் கொள்வதும், பிறரை ஏற்றுக் கொள்வதும் பங்களிப்பின் பணிவிடையே. சீடர்களின் பங்களிக்கும் பணிவிடை முழுமையாய் இருக்க வேண்டியே யோவா 17:21இல், “நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக” என வேண்டினார். நாமும் இயேசுவின் சீடர்கள் சார்பில் நின்று, இன்றைய சூழலில் நம்மைக் கிறிஸ்துவின் கரங்களில் ஒப்புக்கொடுத்து பணிவிடையால் இறைவிருப்பம் நிறைவேற்ற முயலுவோம்; இறையரசினை இணைந்து கட்டுவோம்.

திரு. S.S. **ஆல்பின் டேவிட்ராஜ்**

21-09-2022

உலக அமைதி நாள்

# வன்முறைச் சூழலில் அமைதி

## PEACE IN THE CONTEXT OF VIOLENCE

1 சாமு 24:1-12 | உரோ 12:14-21
திபா 52 | மத் 5:38-48

**"...உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களை துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்"** (மத் 5:44).

உலகெங்கிலும் வேகமாக பரவி வரும் வன்முறை கலாச்சார சூழலில் அமைதி எனும் தலைப்பு மிகவும் இன்றியமையானதாகும். வன்முறை என்றால் என்ன? ஒருவரோ பலரோ இணைந்து மற்றொருவருக்கோ பலருக்கோ எதிராக காயம், அச்சுறுத்தல், மரணம், உளவியல் பாதிப்புக்களை ஏற்படுத்த பலத்தை பயன்படுத்துவது ஆகும். வன்முறை வகைகளாக உடல், இனம், மொழி, கலாச்சாரம், வகுப்பு வாதம், சமயம், பாலினம், இயற்கை எனப் பிரிக்கலாம். பொதுவாக வன்முறையை தனிநபர் அல்லது கூட்டு குழு வன்முறை என பகுக்கலாம். வன்முறையினால் ஏற்படும் பாதிப்புகள் குறுகிய காலத்திற்கு அல்லது நீண்ட காலத்திற்கு தொடர்ந்து கொண்டேயிருக்கும். ஏனெனில் வன்முறை வன்முறைக்கு தீர்வாகாது.

இயேசுவானவர் சமாதானத்தின் பிரபு என்றும் அமைதியை தருவதற்கு வந்தார் என்றும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மத்.5:38-48 வசனங்களில் தமது காலத்தில் காணப்பட்ட வன்முறைச் சூழல்களை ஆராய்ந்து, அச்சூழலில் எவ்விதம் அமைதியை ஏற்படுத்துவது என்பதை விளக்கிக் கூறுகிறார். குறிப்பாக மத்.5:38 -ல் குறிப்பிடப்பட்டுள்ள "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" என்னும் "பதிலுக்குப் பதில்" கலாச்சார நடைமுறைகளை மறுசீராய்வு செய்து, மத். 5:44 -ல் கூறப்பட்டுள்ள "உங்கள் பகைவர்களையும் நேசியுங்கள்" என்ற நிலைக்கு அழைத்துச் செல்கிறார்.

"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" என்னும் "பதிலுக்குப் பதில்" கலாச்சாரத்தின் துவக்கம் எங்கிருக்கிறது என்றால் லேவி. 24:20, யாத்.21:24, உபா.19:21. மோசேயால் எழுதப்பட்ட இந்த கட்டளைகள்

நீதித்துறையினருக்காக எழுதப்பட்டது. நீதிவழங்குபவர்கள் சற்றும் மாறாமல், குறையாமல் நீதிவழங்கவேண்டுமென்பதே இதன் நோக்கம். தவறு செய்தவர்கள் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அதற்கேற்ற தண்டனை பெறுவதே நீதி. யோசிபஸ் எனும் முதல் நூற்றாண்டு வரலாற்று ஆசிரியரும் இதை வலியுறுத்தினார். முறையான குற்ற விசாரணை மற்றும்உரிய தண்டனை ஆகியவற்றை நடைமுறைப்படுத்த உதவிய மோசேயின் நிதிச் சட்டங்களை இயேசு களையவில்லை. மாறாக, அச்சட்டங்களைத் திரித்து தமக்கு சாதகமாக்கிய யூத தலைவர்களையும் அதனால் மக்கள் அடைந்த துயரையும் களைய முயற்சித்தார். சதுசேயர் எனும் பிரிவினர் பதிலுக்குப் பதில் எனும் சட்டத்தைப் பரப்பினர். குறிப்பாக தனிநபர் பழிவாங்குதல் மற்றும் பணத்திற்கு தண்டனையை ஈடுசெய்தனர். அதாவது, ஒருவர் தனக்கு தவறாக தோன்றிய காரணத்திற்காக மற்றொருவரைத் தண்டிக்கலாமென கூறினார். யூதா நீதியரசர்கள் சிலவேளைகளில் ஜீவனைத் தவிர ஒருவரது உடல் உறுப்பு சேதமடையும் போது அதற்கு ஈடாக ஒரு குறிப்பிட்ட தொகையை அபராதமாக செலுத்தலாமென கூறினார். மேலும், ஒரவரை பழிவாங்க வேண்டுமென்றே குற்றம் இழைத்து விட்டு அதற்கு ஈடாக பணத்தைக் கொடுத்தும் வந்தனர். அதனால் தவறு செய்தவர்கள் என குற்றம் சாட்டப்பட்டவர்கள் அரசு சட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டு முறையாக நீதி விசாரணை செய்யப்பட்டு நீதி வழங்கும் முறை மதிப்பிழந்து காணப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் முறையிடும் வாய்ப்பு மறுக்கப்பட்டு, நிரபராதிகளும் தண்டிக்கப்பட்டனர். மக்களே தண்டனையை நிறைவேற்றலாம் எனும் வன்முறை கலாச்சாரம் பரவிக் காணப்பட்டது. செல்வந்தர்கள் பணத்தைக் கொடுத்து, தண்டனையிலிருந்து தப்பித்து வந்தனர். இத்தகைய அநீதியான “பழிக்குப் பழி” எனும் வன்முறை கலதச்சாரத்தை இயேசு எதிர்த்தார்.

இந்தியா போன்ற நாடுகளில் இத்தகைய நிகழ்வு பெருகி வருகிறது. சந்தேகத்தின் பேரில் குற்றம் செய்தார்கள் என நிரூபிக்கப்படாமலேயே தண்டனை அநுபவிப்பதும், நீதிமன்றங்களுக்கு வெளியே ஜனங்களை ஒருவருக்கொருவர் தண்டனை நிறைவேற்றுவதும் அபாயகரமான செயல்கள் நடந்தேறுகிறது. இயேசுவின் இந்த மறுபரிசீலனை, ஜெரோம் கூற்றுப்படி, ஒரு கண்ணை இழந்தவர் இன்னொருவர் கண்ணை இழக்கச் செய்வதற்காக அல்ல. மாறாக, இருகண்களையும் பாதுகாப்பிற்காக பரவிவரும் தனிநபர் மற்றும் குழு வன்முறை கலாச்சாரத்தை இயேசுவின் வழியில் எவ்விதம் மேற்கொள்வது என்பதைக் குறித்துச் சிந்திக்கலாம்.

## *1. பழிவாங்குதல் தவிர்ப்போம், வன்முறை தவிர்ப்போம் :*

மத். 5:38-42

பழிவாங்குதல் வன்முறைக்கு வழிவகுக்கும். இயேசுவானவர் பழிவாங்கும் வன்முறைகளை தவிர்க்க நான்கு வழிமுறைகளைக் கூறினார்.

முதலாவது, ஒருவர் உங்களது வலுது கன்னத்தில் அறைந்தால், அவருக்கு மறு கன்னத்தைக் காட்டுங்கள் (மத். 5:39). ஒருவர் தனது நண்பரைச் சோதிக்க அவரது வலது கன்னத்தில் அறைந்து விட்டு, இந்த வசனத்தை மேற்கோள் காட்டினார். அவரும் வலியைத் தாங்கிக் கொண்டு பொறுமையாக தனது மறு கன்னத்தையும் காட்டினார். மகிழ்ச்சியடைந்த அந்த நபர் நண்பனின் மறு கன்னத்திலும் அறைந்தார். அப்போது அந்த நண்பன், விவிலியத்தில் கூறப்பட்டுள்ள முறை முடிந்தது என்று கூறி அடித்த நபருக்கு தன்னால் இயன்ற மட்டும் வலுவாக பதிலுக்கு அடித்து பழியைத் தீர்த்தார். இயேசு இங்கு கலாச்சார வன்முறையை தடுத்து நிறுத்த முயற்சித்தார். யூத கலாச்சாரப்படி வலது கன்னத்தின் பின்புறத்தால் ஒருவரின் வலது கன்னத்தில் அடிப்பது உடல் வலியைவிட அவமானத்தை ஏற்படுத்தவதை நோக்கமாகக் கொண்டதாகும். யூதர்களின் பொய்மொழிக் கட்டமான மெஷினாலும், “கைகளின் பின் புறத்தில் தண்டிப்பதும் மிகப்பெரிய அவமானம், அபராதம் கட்ட வேண்டிய செயல்” என்று கூறப்பட்டுள்ளது. இயேசு இத்தகைய வன்முறையை அல்லது அவமதித்ததை பொறுமையுடன் சகித்துக் கொள்வதின் மூலம் அமைதியை நிலைநாட்டலாம் என்றார். ஆயினும் அத்தகைய அவமானத்தை அளித்தவர் மனம் மாறுவதற்கும் அது காரணமாக அமையும் என்றும் பொருள்படும். மகாத்மா காந்தி மற்றும் மார்ட்டின் லூத்தர், கிங் போன்றோர் non - violence என்னும் கொள்கையின் மூலம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்று மகிழ்ந்தனர். இயேசுவின் மாதிரியான இத்தகைய சகிப்பு, பொறுமை வன்முறை அகல உதவும்.

இரண்டாவதாக, “ஒருவர் அங்கிக்காக வழக்கு தொடர்ந்தால் மேலங்கியையும் கொடுத்து விடுங்கள்” (மத். 5:40). மோசையின் சட்டப்படி மேலாடையை அடமானமாகக் கூட எடுத்துக் கொள்ளக்கூடாது (யாத். 22:26). அப்படி எடுத்துக் கொண்டால், அந்த மேற்சட்டையை கதிரவன் மறையும் முன் திரும்பக் கொடுத்துவிட வேண்டும். ஏனெனில் அது ஒருவரது இரவுத் தூக்கத்திற்கும், கடும் குளிரை சமாளிப்பதற்கும் அவசியமானதாகும் (உபா.24:13). கடவுள் பார்வையில் அச்செயல் நியாயமானதாகும்.

ஜனங்களின் அத்தியாவசியப் பொருட்களை வழக்காடிப் பெறுவது வன்முறைச் செயலாகும். ஆனால் இயேசு அந்த வன்முறைச் செயலை மேற்கொள்ளுவதற்கு தனி மனித தேவையைக் கூட விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்றார்.

மூன்றாவதாக, "ஒரு படைவீரன் உங்களை ஒரு மைல் தூரம் துரத்தினால் நீங்கள் அவருடன் இரண்டு மைல் தூரம் நடந்து செல்லுங்கள்" என்றார் (மத்.5:41). இது ஒரு அரசியல் வன்முறைச் செயலாகும். இயேசு வாழ்ந்த காலத்தில், ரோம காவல் அதிகாரிகள் தமது உடமைகளை மற்றவர் சுமந்து வரக் கூறுவர். தங்களது மேலாதிக்கத்தை வெளிப்படுத்தும் இச்செயல் மக்கள் மனதை புண்படுத்தும் பாரசீக மன்னர் கோரேஸ் காலத்திலும் இத்தகைய முறை இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். தனிமனித சிரமங்களை பொறுமையுடன் ஏற்றுக் கொள்வதின் மூலம் அரசியல் வன்முறைகளை முறியடிக்க முடியும். மற்றும் கூட ஒரு மைல் நடப்பதின் மூலம் வன்முறையாளர் மனமாற்றம் அடைய வாய்ப்பு ஏற்படுகிறது என்றார்.

நான்காவதாக, "உங்களிடம் கேட்பவர்களுக்கு கொடுங்கள், கடன் கேட்பவர்களுக்கும் கொடுங்கள்" என்றார் (மத்.5:42). இல்லாமல் வாழுபவர்களுக்கு மனமுவந்து உதவி செய்யுங்கள் என்றார். இல்லாமை என்றும் பொருளாதார வன்முறை மாற கொடுங்கள் என்றார். பொருளாதர பகிர்வு என்பது உதவி மட்டுமல்ல, கடமை என்பதை வலியுறுத்தினார்.

ஆக, இயேசுவானவர் கலாச்சாரம் வழக்காடி பெறுதல், அரசியல் மற்றும் பொருளாதார வன்முறை அகல பொறுமையுடன் சகிப்பு அவசியம் என்றார். அமைதி ஏற்ப தனிமனித பொறுமை மிகவும் இன்றியமையாதது என்றார். ஆக பழிவாங்குதல் தவிர்ப்போம் வன்முறையை தவிர்ப்போம்.

### *2. பகைவர்களை நேசிப்போம், வன்முறை தவிர்ப்போம் :*

மத். 5:43-48

அன்பு எவ்வாறு வன்முறையை அகற்றுவதற்கு உதவுகிறது என்பதை இயேசு இந்த வசனங்களில் விளக்குகிறார். பகைவர்களை சிநேகியுங்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள் என்றார் (மத். 5:44). பகைவர்களையும், நமக்கு தீமைசெய்கிறவர்களையும் நேசிப்பது நாம் பழிக்குப்பழி செய்யும் தீமையினின்று நம்மைப் பாதுகாக்கிறது. நாம் இத்தகைய அன்பு செய்யும் போது பிதாவின் குழந்தைகள் ஆவீர்கள் என்றார் (மத்.5:45). கர்த்தர் எத்தகைய குணநலன்கள் உடையவர் என்றால்,

“நல்லவர்களுக்கும், தீயவர்களுக்கும் சூரியனை உதிக்கச் செய்கிறார்.” நன்மை செய்பவர்களுக்கும், தீமைசெய்பவர்களுக்கும் மழையை அனுப்புகிறார். என்றார் (மத். 5:45). நமது தவறுகளை மறந்து நம்மீது அன்புகூரும் கர்த்தருடைய குழந்தைகளான நாமும் அத்தகைய குணநலன்களுடைய மாறும்போது வன்முறைச்சூழலில் தவிர்க்கப்படுகிறது என்பதே இயேசுவின் வழிகாட்டுதல்.

இயேசுவின் பார்வையில், தவறு இழைத்தவர்கள் அரசு சட்டப்படி விசாரணை செய்யப்பட்டு, பொதுவான சட்டத்திற்குட்பட்டு தண்டனை பெறுவதை அரசு பொறுப்புடன் நிறைவேற்ற வேண்டும். ஆனால் தீமை செய்பவரை யாரும் தண்டிக்கலாம் என்ற கருத்த பழிவாங்குதல் போன்ற வன்முறைகளுக்கு வழிவகுப்பதால் அதை களைந்திட அன்பை போதித்தார். “உனது அயலாரையும் உன்னைப்போல நேசி” என்ற மோசேயின் சட்டம் (லேவி.19:18). அன்பினால் நிறைவேற வேண்டும். ஒருமுறை இயேசு நியாயப்பிரமாண கற்பனைகளில் பிரதான கற்பனைகளாக இரண்டைக் குறிப்பிட்டார்.

(1) கர்த்தரிடத்தில் முழுமையான அன்பு, (2) உன்னிடத்தில் நீ அன்புகூருவது போல, பிறரிடத்திலும் அன்புகூருவாயாக என்றார் (மத்.22:37 -40). ஒருவரது நன்மை தீமை பாராமல் கதிரவன் ஒளியைத் தருவதும், மழை பெய்வதும் கடவுளின் அன்பின் மாட்சிமைக்கு எடுத்தக்காட்டு. அத்தகைய அன்பை நாமும் நம் பகைவருக்கும், நமக்கும் தீமை செய்தவருக்கும் காட்டவேண்டும் என்பதே வன்முறைக்கு தீர்வாகும் என இயேசு உரைத்தார்.

சீன பேரரசர் தமது குடிமக்கள் தமக்கு எதிராக கிளர்ச்சி செய்கிறார்கள் என்பதை அறிந்து அவர்களை தண்டித்து அளிக்க தமது படைவீரர்களுடன் புறப்பட்டார். தமது கட்டளையின்படியே அவர்கள் தமது எதிரிகள் எனவும், எதிரிகள் அழிக்கப்படவும் படைவீரர்களைக் கேட்டுக் கொண்டார். ஆனால் பேரரசர் வருவதை அறிந்த கிளர்ச்சியாளர்கள், ஆயுதங்களை எறிந்துவிட்டு சரணடைய ஆயத்தமானார்கள். ஆனால் அரச பிரதானிகள் அவர்கள் அரசரின் எதிராளிகள் ஆகவே கொலை செய்யப்படவேண்டும் என்றனர். அரசர் பதிலுக்கு இவ்விதமாய் கூறினார். “நான் என் எதிராளிகளை அழிக்கக் கட்டளை கொடுத்தேனே” தவிர என் நண்பர்களை அல்ல. எப்போது இவர்களட என்னிடம் சரணடைந்தார்களோ அப்போதே நான் அவர்கள் என் நண்பர்களாகிவிட்டார்கள். அவர்களை நான் மனித்துவிட்டேன் என்றார்.

வன்முறைக்கு அன்புதான் மாற்றுவழி என்பதை மிகவும் அழகாக இயேசு கூறினார். ஆகவே பகைவரிடமும், நமக்கு தீமை செய்கிறவர்களையும் நேசிக்க வன்முறை அகன்றுபோம். நமது அன்பை புரிந்து கொண்டு மாற்றம் மாற்றம் அடையும் வாய்ப்பு உருவாகிறது.

பழிவாங்குதல் எனும் வன்முறைக் கலாச்சாரம் சுயநலத்தை சார்ந்தது. அதன் வெளிப்பாடு கலாச்சாரம், வழக்காடுதல், அரசியல், மேலாதிக்கம், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றில் காணப்படுகிறது. இயேசுவானவர் வன்முறையை தகர்க்க தனிமனித அமைதியை வலியுறுத்தினார். வன்முறைச்சூழலை முற்றிலும் அகற்றிட அன்பை முன்னிறுத்தினார். நமது பகைவரையும், தீமை செய்பவரையும் நேசித்து, அவர்களுக்கு இறைவேண்டுதல் செய்யவதின் மூலம் பதிலுக்குப் பதில் அல்லது பழிவாங்குதல் எனும் வன்முறையிலிருந்து நாம் பாதுகாக்கப்படுவது மட்டுமல்லாமல் இறைகுணம் படைத்த இறைகுழந்தைகள் ஆகுவோம் எனும் நற்பந்தியை நமக்கு ஏற்படுத்தினார். ஆகவே வன்முறையை களைந்து அன்பை பின்பற்றி வன்முறை கலாச்சாரத்துக்கு முடிவு கட்டி நல்ல அமைதியான சமுதாயம் உருவாக உழைப்போம்.

அருள்திரு. முனைவர் M. **ஜஸ்டின் மோசஸ்**

# முதியோரைப் பராமரித்தலும் ஏற்றுக்கொள்ளுதலும்

**CARING AND ACCEPTING THE ELDERLY**

தொநூ 46:28-34; 47:-1-10 1திமொ 5:1-10
திபா 21 லூக் 2:25-35

**"முதியோரிடம் கடுமையாய் இராதே, அவர்களைத் தந்தையராக மதித்து ஊக்குவி"** (1திமொ 5:1a).

முதியோர் நம் இல்லங்களிலும், திருச்சபையிலும், சமூகத்திலும் இருப்பது மிகப்பெரிய ஆசீர்வாதம். முதியோர் குடும்பத்திற்கும், திருச்சபைக்கும் மிக முக்கியமானவர்கள். முதுமைப் பருவம் ஏனைய பருவங்களைப் போன்ற ஒருபருவம். Buruson என்பவரது கருத்துப்படி உடல்நலக்குறைவு, தனிமை, பணி நிறைவு, குடும்பத்தில் பொறுப்பின்மை இவைகள் ஏற்பட்டாலும் அவர்கள் உள்ளத்தில் நிறைவு இருக்கும்.

60 வயதிற்கு மேற்பட்டவர்கள் முதியோர் வரிசையில் வருகின்றனர். நம் இந்திய நாட்டில் 2021 புள்ளிவிவரப்படி முதியோரின் எண்ணிக்கை 194 மில்லியனாகும். அடுத்த 10 ஆண்டுகளில் 41 விழுக்காடு முதியோரின் எண்ணிக்கை பெருகலாம் எனக் கூறப்படுகிறது. உயர்ந்து வரும் முதியோரின் எண்ணிக்கையால் இவர்களைப் பராமரிப்பது தொடர்பாக குடும்பங்களில், சமூகத்தில் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. முதியோரை அவமானப்படுத்தி ஓரங்கட்டுவது (Elder abuse) ஒரு சமூகப் பிரச்சனையாகவும், திருமறை வெளிச்சத்தில் மிகபெரிய பாவமாகவும் கருதப்படுகிறது. இப்பிரச்சனை தொடர்பாக NHO சார்பில் பல ஆராய்ச்சிகளும் நடத்தப்பட்டன என்றாலும் முதியோரை கனவீனப்படுத்துவது (Elder abuse) தொடர்கிறது. இச்சூழலில் இன்றைய அருளுரைக்கான கருப்பொருள் "முதியோரை பராமரித்தலும் ஏற்றுக் கொள்ளுதலும்" இத்தலையங்கம் நம்மை சிந்திக்கத் தூண்டுகிறது. இச்சமூகம் முதியோரை பிரச்சனையாக கருதினாலும் அவர்களை அறிவிற் சிறந்தவர்கள், கிரீடம் போன்றவர்கள்,இவர்களை அலட்சியம் செய்வோர் இறைவன் பார்வையில் பாவிகள் வரிசையிலும் வைக்கப்படுகின்றனர். எனவே முதியோர் பராமரிப்புக் குறித்து தரப்பட்ட திருமறைபகுதிகளின் வெளிச்சத்தில் சிந்திப்போம்.

### *1. நல்அனுபவம் கொண்டவர்கள்* :

"அதற்கு யாக்கோபு பார்வோனை நோக்கி என் வாழ்க்கைப் பயண நாள்கள், நூற்றுமுப்பது ஆண்டுகள். அவை எண்ணிக்கையில் குறைந்தவை; துன்பத்தில் மிகுந்தவை ஆனால் அவை என் மூதாதையரின் நாள்களுக்குக் குறைந்தவையே" (தொநூ 47:9).

முதியோர் அன்பைப் பகிர்வர், அனுபவத்தைப் பகிர்வர், அறிவைப் பகிர்வர் (2தீமோ 1:4,5, (யோபு 12:12). ஏனென்றால் அவர்கள் நல்ல அனுபவங் கொண்டவர்கள். அனுபவம் என்பது தங்களது வாழ்வில் நம்பிக்கை, கடவுளின் நடத்துதல், தங்கள் உழைப்பு அனைத்தையும் உள்ளடக்குகின்றது.

இப்பகுதியில் யாக்கோபு தன் மகன் யோசேப்பை சந்திப்போம் என நினைக்கவில்லை எதிர்பாரா நிலையில் சந்தித்தபோது எழுந்த உணர்வு, உணர்வுப் பூர்வமான அனுபவப் பகிர்வாகவே அமைந்துள்ளது. யோசேப்பிற்காக பொறுமையோடும், நம்பிக்கையோடும் காத்திருந்தார் (தொநூ 46:30). தனது மரணம் மனநிறைவற்ற மரணமாயிருக்கும் (தொநூ 37:35) என்று நினைத்து துன்பபாதையில் வருத்தத்தோடு பயணித்தார். யோசேப்பைக் கண்டவுடன் இனி சாவு வந்தாலும் நிறைவோடு மரிப்பேன் என்கிறான் (தொநூ 46:30). தான் அதிகமாய் நேசித்த யோசேப்புக்காக வருத்தத்தோடு பயணித்தார் மாறாக பிறரை வருத்தப்படுத்தவில்லை. பார்வோனிடம் செய்த உரையாடலில் தன் மூதாதையரின் சிறப்பையும் வரலாற்றுப் பெருமையையும் தெளிவாக கூறுகிறார் (தொநூ 47:8-10) தன் மரணம் நெருக்குகையில் இறைகாட்சியையும், இறைமாட்சியையும் வெளிப்படுத்தினார் (தொநூ 48:1-21).

ஆபிரகாம் தன் முதிர்வயதில் எலயேசரை அழைத்து ஈசாக்கு பெண்பார்க்கும் படி கூறி சில அனுபவப்பூர்வமான ஆலோசனைகளை கொடுக்கிறார். முதியோரின் அனுபவப்பூர்வமான ஆலோசனை இறைதிட்டத்தினின்று விலகாது (ஆதி 24:1-9, யோசுவா 23:3).

### *2. நம்பிக்கையோடு காத்திருப்பவர்கள்* : (லூக் 2:25-35)

"ஆண்டவரே, உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்கிறீர்" (லூக் 2:29)

நாம் வாழும் இவ்வுலகு அனைத்து துறைகளிலும் விரைவாய் முன்னேறியுள்ளது. ஆனால் இறை நம்பிக்கையும், பொறுமையோடு காத்திருத்தலும் துறந்து சுய நம்பிக்கையில் பற்று கொண்டதால் இளம்

தலைமுறையினர் தவறான முடிவை மேற்கொள்கின்றனர். இதன் விளைவாக வன்முறை, தற்கொலைகள், அமைதியில்லா குடும்ப வாழ்வு போன்ற நிகழ்வுகள் அதிகரிக்கின்றன. இளம் தலைமுறையினர் முதியோரின் முன்மாதிரிகளை பின்பற்ற வேண்டும். ஏனென்றால் அவர்கள் நம்பிக்கையோடு காத்திருப்பவர்கள், இறை திட்டத்திற்கு ஒப்புக் கொடுக்காதவர்கள், தினம் தினம் கடந்த கால இறை நடத்துதலை நினைத்து பார்த்து பற்றுறுதி கொண்டவர்கள்.

இயேசு நாதரை ஆலயத்தில் அற்பணிக்க சென்றபோது (லூக் 2:22-38) சிமியோன் என்ற முதியவை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அவரை குறித்து சொல்லப்பட்ட நற்சான்றுகள் என்னவெனில் நேர்மையானவர், இறைபற்று கொண்டவர், இஸ்ரவேலின் ஆறுதலுக்காக காத்திருந்தவர், தூய ஆவியை பெற்றிருந்தார். ஆண்டவரின் மெசியாவை காணுமுன் சாவதில்லை என தூயாவியால் உணர்த்தப்பட்டவர். அதன்படி மீட்பரை கண்டேன் கரத்தில் ஏந்தினேன் என மகிழ்ந்தார். அவரது நம்பிக்கை நிறைவேறியது.

முதியோர் கடவுளை அடைக்கல பாறையாகவும், பாதுகாக்கும் அறணாகவும், இந்நாள் மட்டும் பாதுகாக்கும் நம்பிக்கைகுரிய கடவுளாகவும் கொள்வர் (திபா 71:1-10). கடவுளின் திட்டத்தில் பொறுமையோடு முதுமையில் நம்பிக்கை கொண்டவர்களில் ஆபிரகாம் மிகமுக்கியமானவர். கடுமையான பாதைகளை நம்பிக்கையோடு கடந்து சென்றார் (ஆதி 12:24)

நம் குடும்பங்களிலும், முதியவர்கள் நமக்கு நல்ல மாதிரிகளை கற்றுத் தந்துள்ளனர். நாம் பல நிலைகளில் இதை அனுபவித்துள்ளோம். எத்தனை தன்பமாயினும், சோர்பு தரும் நிலையாயினும் அவர்கள் பதட்டப்படுவதில்லை. எல்லாம் கடவுள் பார்த்துக் கொள்வார் என முடிப்பர், காரணம் அவர்களது இறை நம்பிக்கை.

***3. நல்மனதுடன் நடத்தப்பட வேண்டியவர்கள் :*** (1திமொ 5:1-10)

“முதியோரிடம் கடுமையாய் இராதே, அவர்களைத் தந்தையராக மதித்து ஊக்குவி ...” (1தீமோ 5:1a).

பெற்றோரை பராமரிப்பதே மிகமுக்கிய கடமைகளில் ஒன்றாக திருமறை நமக்க கற்று தருகிறது (மாற்கு 7:10). முதுமை காலங்களில் அவர்களை பராமரிப்பது நமது கடமை. அவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. நல்லனுபவமும், இறை நம்பிக்கையும் கொண்டவர்கள். பல காரியங்களை சாதித்தவர்கள், நமக்காக தியாகம் செய்தவர்கள், நமக்காகவே வாழ்ந்தவர்கள், நமக்காக தங்களது சுகம், மகிழ்ச்சி

போன்றவற்றை இழந்தவர்கள். இப்போது அவர்களிடத்தில் சக்தி இல்லை (Power less), இயலாமை, தனிமை, குழந்தைத்தன்மை, சரீர உபாதைகளை கட்டுப்படுத்துவதற்கு கூட சில நேரங்களில் இயலாத நிலை ஏற்படுகிறது. இது போன்ற நேரங்களில் நல்ல மனதோடு அவர்களை பராமரிக்க வேண்டும். இம்முதியோர் வாழும் காலம் கிருபையின் காலம் (திபா 90:10). இக்காலம் சஞ்சலம் நிறைந்த காலம். இக்காலங்களில் அவர்களை கருத்தாய் பராமரித்தல் அவசியம். அவர்கள் சமாதானத்தோடு தங்கள் வாழ்வை நிறைவு செய்ய வேண்டும் (ஆதி 15:15).

இன்று இளம் தலைமுறையினர் முதியோரை பராமரிப்பதை பெரும் பாரமாக கருதுகின்றனர். பலர் முதியோர் இல்லங்களில் சேர்த்து விட்டுவிடுகின்றனர். நாட்டில் சட்டங்கள் இயற்றினாலும் பல முதியோர் கைவிடப்படுகின்றனர். நம் நாட்டில் 2007-ல் Senior Cititzen Act என்ற சட்டம் அதாவது பெற்றோர் மற்றும் முதியோர் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம் ஜனாதிபதி ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்தது. ஆனாலும் கைவிடப்பட்ட மற்றும் காப்பகங்களில் சேர்க்கப்பட்ட முதியோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. பல முதியோர் தங்களுக்கென ஒன்றும் வைத்துக் கொள்ளாதபடி நம்பிக்கையோடும் பாச உணர்வோடும் எல்லாவற்றையும் கொடுத்து விடுகின்றனர். இளையோரிடம் கடுகள வேணும் அப்பாச உணர்வு இல்லை என்பது தான் உண்மை. இதுபோன்றவர்களை திருமறை எச்சரிக்கிறது (விப 21:15,17, நீதி 19:26, நீதி 30:17, லூக் 18:20, 1தீமோ 5:1). நல் அனுபவம் கொண்ட இறை நம்பிக்கையோடு காத்திருக்கும் முதியோரை பராமரிப்பதும், ஏற்றுக் கொள்வதும், நம் வாழ்வின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. இப்பணியை நிறைவேற்றாமல் இறைவனின் பிள்ளைகளாய் வாழ இயலாது.

அருள்திரு. S. **பெல்சன் கிராமணி**

02-10-2022



# அனைத்து இறைமக்களின் குருத்துவம்

## PRIESTHOOD OF ALL BELIEVERS

எசா 61:1-11 1பேது 2:1-10

திபா 135:12-21 யோவா 17:1-8

**"..... உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி".** (1பேது 2:9)

திருச்சபை வளர்ச்சியில் பெரும் பங்கு வகிப்பவர்கள் இறைமக்கள். ஏனெனில் அவர்கள் சமூகத்தில் மக்களோடு இரண்டறக் கலந்து வாழ்கின்றனர். அவர்களது அன்றாட வாழ்க்கை பிரச்சனைகளில் எளிதில் பங்கெடுக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே அவர்களது வாழ்வு உலகில் பிறமக்கள் எளிதில் கடவுளை அறிய வாய்ப்பாக அமைகிறது. எனவேத்தான் பேதுரு தனது கடிதத்தில் நீங்கள் கடவுளுக்கும் மக்களுக்கும் இடையே நட்பை ஏற்படுத்துகின்ற ஆசாரியக் கூட்டமாக இருக்கிறார்கள் என்கின்றனர். கடவுள் மனிதனுக்கு கொடுத்த பிரதான கட்டளை இந்த உலகை பண்படுத்தி பாதுகாப்பதே. எனவே இந்த உலகின் வாழ்வுக்காக, உலக மக்களின் வாழ்வுக்காக ஒருவர் செய்கின்ற எந்தப்பணியும் இறைப்பணியே. எனவே கடவுள் நம் வாழ்வில் நமக்கு கொடுத்த எந்த பொறுப்பையும், பணியையும் இறைப்பணியாற்ற இறைவன் கொடுத்த வாய்ப்பாக எண்ணி அவற்றை உண்மையுடன் நிறைவேற்றுவோம். இந்த உலகம், நாம் வாழும் சமூகம் பயன் பெறுகிறது, வளம் பெறுகிறது. இதனால் இந்த உலகில் இறைவனின் திட்டம் நிறைவேறுகிறது. எனவே அனைத்து பணிகளும் இறைபணியே. அதனை அனைத்து இறைமக்களும் இறைப்பணியாளர்களே. இந்த இறைவனின் எதிர்பார்ப்பை நமது வாழ்வில் நாம் எவ்விதம் நிறைவேற்றுவது என்பதை நமது திருமறைப் பகுதிகள் மூலம் சிந்திப்போம்.

### *1. விடுதலைப் பணி மூலமாக*: (எசா 61:1)

ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருட்பொழிவு செய்துள்ளார். ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பினர். என ஏசாயா மூலம் கடவுள் எதிர் நோக்கும் பணி குறித்த செய்தியைக் கூறுகின்றார். இந்தப் பகுதியை இயேசு

நாசரேத்தூரில் வசித்து ஆகவே தனது பணி என தனது பணிபற்றிய விளக்கத்தைத் தருகின்றார் (லூக் 4:18-21).

கிறிஸ்துவில் நாம் விடுதலைப் பெற்றவர்கள் நம்மிடம் கடவுள் எதிர்பார்ப்பது இயேசு கிறிஸ்துவில் கடவுள் தொடங்கின விடுதலைப் பணியை நாம் தொடர வேண்டும் என்பதே. இந்த உலகில் நம்முடன் வாழும் மக்களின் விடுதலை வாழ்வை விரும்பி, கடவுள் நமது கரத்தில் கொடுத்துள்ள, பொறுப்புகள், தாலந்துகள், பணி வாய்ப்புகள் இவற்றின் மூலம், மக்களின் விடுதலையில் நமது பங்கை ஆற்ற வேண்டும் என்பதே. யோசேப்பு எகிப்தில் போர்த்திபாரின் வீட்டில் அடிமையாக இருந்த போதும், அவன் நாட்டின் பிரதான மந்திரியாக இருந்த போதும் கடவுள் தனக்கு கொடுத்த வாய்ப்பை பயன்படுத்தி தன் உடன் வாழும் மக்களுக்கு பயனுள்ளவனாக வாழ்ந்தான். (தொநூ 39:3-5, 39:22, 40:5-13, 41:46-49, 59-57). இதனால் அந்த நாடு பயன் பெற்றது. மட்டுமல்ல அவனை நாடி வந்த அனைவரும் பயன் பெற்றனர். எனவே இந்த சமூகத்தில் காணப்படும் அவலங்களையும், அடிமைத்தனங்களையும் மக்களை கட்டியுள்ள கட்டுகளையும் அறிந்து அவற்றை போக்குவது நமது கடமை. இதன்மூலம் நாமும் இயேசு கிறிஸ்துவின் பணியை நாம் வாழும் சூழலில் நிறைவேற்ற முடியும்.

***2. வார்த்தையைப் பெற்று அதன்படி வாழ்தல்:*** (யோவா 17:8)

"...... நீர் என்னிடம் சொன்னவற்றையை நான் அவர்களிடமும் சொன்னான் அவர்களும் அதை ஏற்றுக் கொண்டு நான் உம்மிடம் வந்தேன் என்பதை உண்மையில் அறிந்து கொண்டார்கள்."

இயேசு தனது வார்த்தையை ஏற்றுக் கொண்டு வாழ்கின்ற மக்களைக் குறித்து கூறுகின்றார். வசனம் 6-ல் நீர் கொடுத்த மக்கள் கடவுளின் வார்த்தைகளை கடைபிடித்தார்கள் என்று கூறுகின்றார். ஒரு மனிதன் கடவுளுடைய வார்த்தைய ஏற்றுக் கொண்டு அதின்படி வாழும் போது அவர் அவயருக்கு சாட்சியாய் மாறுகின்றான். ஏனெனில் அவரை வார்வைப் பார்க்கின்ற மக்கள் அவரில் கிறிஸ்துவையும், கடவுளின் சாயலையும் காண முடியும். தானியேல் ஓர் அடிமையாகச் சென்று அதிகாரி என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டவன். அவன் தன் வாழ்வை கடவுளின் வார்த்தையின்படி நடத்தினான். வாழ்வில் உண்மை உள்ளவனாய் இருந்தான் (தானி 6:4). கடவுளுடன் உறவை ஏற்படுத்தும் ஜெபவாழ்வில் உறுதியாய் இருந்தான் (தானி 6:10). தானியேலின் வாழ்வு அரசனுக்கு முன்பாக சாட்சியாக இருந்தது. அரசனுக்கு தானியேலின்

கடவுள் உயிருள்ளவர் என்பதை அவன் கூறாமலே உணர்த்தியது. எனவே தான் தானியேலை சிங்ககெபியில் போடுமுன்பு அரசர் கூறிய வார்த்தை (தானி 6:16). இங்கு தானியேலின் வார்த்தை அன்று தானியேலின் வாழ்க்கையே அரசரின் நம்பிக்கைக்கு காரணமாக அமைந்தது. இந்தச் சமூகத்தைத்தான் பேதுருவும் (பேது 2:1,2) வசனங்களில் கூறுகிறார். ஏனெனில் நமது வாழ்வில் இறைவனுடைய வார்த்தையை நமது உணவாக்கி, அதின்படி வாழும் போது நாம் ஜீவனுள்ள கிறிஸ்துவின் புண்ணியங்களை அறிவிக்கும் ஆசாரியக் கூட்டமாக மாறுகிறார்.

இந்த உலகில் இயேசு கிறிஸ்துவை தமது வாழ்வில் ஏற்றுக் கொண்டு வார்கின்ற அனைவரும் இறைவனின் பணியாளர்களே. நமது வார்வில் நாம் அன்றாடம் நாம் சந்திக்கும் சூழல்களில் ஒடுக்கப்பட்டு, அறியாமையில் சிக்கி, அநீதியின் பிடியினால் அடிமைப்பட்டு, சிறைப்பட்டு காணப்படுகின்ற மக்களின் விடுதலைக்காக நமது பங்களிப்பை நாம் கொடுக்கின்ற போதும், நமது கடவுள் நமக்கு தந்திருக்க்ன்ற அவரது வார்த்தைகளை நமது வார்வோடு இணைத்துக் கொண்டு அதின்படி வாழும் போதும் நாம் இறைவனை வாழுகின்றவராக இந்த உலகத்தக்கு அறிவிக்கும் ஆசாரியர்களாகவும், இறைவனுக்கும் மக்களுக்கும் இடையே பாலமாக அமைத்து இறைசாயலை இழந்த மக்கள் மறுபடியும் இறைவனுடைய சாயலை பெற்றுக் கொள்ள அவர்களை வழி நடத்தும். இறைபணியாளர்களாகவும் செயல்பட முடியும். இத்தகையை பணியில் கடவுள் நம்மை இணைத்துப் பயன்படுத்த நம்மை நாமே ஒப்புக் கொடுப்போம்.

அருள்திரு. J. **விக்டர் ஞானராஜ்**

# இயலாமை: பராமரித்தலும் மதித்தலும்

## DISABILITY : CARE AND HONOUR

2சாமு 9:1-13 திப 9:32,33
திபா 146 மாற் 3:1-6

**"…. யோனாத்தானின் இருகால் ஊனமுற்ற மகன் ஒருவன் இருக்கிறான்"**
(2சாமு 9:3b).

கோவையை சார்ந்த பிறவியிலேயே செவித்திறன் குறைபாடுடைய ரெஞ்சித் என்பவர், காது கேளாதவருடைய சிறப்பு பள்ளியிலே படித்து, 12-ம் வகுப்பில் மாநில அளவில் காது கேளாதவருக்கான பிரிவில் முதலிடம் பிடித்தார். இதனால் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவவல் பாராட்டப்பட்டார். 2020 ஆம் ஆண்டு ஐ.ஏ.எஸ் என்ற இந்திய ஆட்சி பணி உள்ளிட்ட குடிமைப் பணிக்ளுக்கான அதிகாரிகளை தேர்வு செய்வதற்காக நடைபெற்ற யுபிஎஸ்சி பங்கு கொண்டு இந்திய அளவில் 750-வது இடத்தை பெற்று வெற்றி பெற்று சாதனை படைத்தார். இது குறித்து ரெஞ்சித் கூறுகையில் யுபிஎஸ்சி தேர்வினை தமிழில் எழுதினேன். மொழி எனக்கு எங்கும் தடையாக இல்லை. மெக்கானிக்கல் இஞ்சினியரிங் படித்த போது Campus Interview -ல் எனது செவித்திறன் குறைபாட்டைக் காரணம் காட்டி நான் இயலாதவன் என்று வேலைக்கு எடுக்காமல் நிராகரித்தனர். என்னனல் இயலும் எனக்கூறியும், நிராகரித்ததால் எப்படியும் என்னால் சாதிக்க முடியும் என்பதை நிரூபிக்க தொடர்ந்து முயன்றேன். தொடர் முயற்சியால் வெற்றி பெற்றுள்ளேன். மாற்று திறனாளிகள் தங்களுக்கென தனி உலகத்தை சுருக்கிக் கொள்ள கூடாது என தெரிவித்தார்.

உடலிலும் மனதிலும் ஊனம் அல்லது குறைபாடு உள்ளவர்களின் எண்ணிக்கை இந்திய அளவில் உள்ள மக்கள் தொகையில் 2011-ம் ஆண்டின் கணக்கெடுப்பு படி 2.21% என ஆய்வு கூறுகிறது. உடல் ஊனமுற்றோரை குருடர், செவிடர், நொண்டி, சப்பாணி எனக் கூறும்போது மனிதனின் குறைவை மிகைப்படுத்தி கூறுவதாக அமைகிறது. பழைய ஏற்பாட்டில் லேவி 21:12-ல் உடல் குறைவுடையவர் ஆசாரியப்பணி செய்யத் தகாதவர் என படிக்கிறோம். யாத் 12:5-ல் உடல் குறைவுடைய மிருகமும் பலிக்கு ஏற்றதில்லை. குறைவுடையவர் பாவம் செய்தவர் எனக் கருதப்பட்டனர். ஆகவேதான் பிறவி குருடனை குறித்து சீடர்கள் பாவமே இவனது குறைக்கு காரணம் எனப் பேசினார். இயேசு நாதரிடம் இது இவன்

செய்த பாவம் அல்ல இவனைப் பெற்றவர் செய்த பாவமும் அல்ல என்றார். இந்திய நாட்டில் கூட தலைவிதி அல்லது ஊழ்வினை எனக் கூறி பாவத்தின் பலன்தான் உடல்நலக் குறைவு எனக் கருதினர். ஆனால் பாவம் இயலாமைக்கு காரணம் அல்ல என்பது தான் இயேசுநாதரின் பதிலாகும்.

இயலாமையிலிருக்கும் மாற்றுதிறனாளிகளை கவனிப்போமானால் அவர்களிடம் சிறப்புத்திறன் இருப்பதைக் காணலாம். பார்வை குறைவுடையவர்களுக்கு அதிக நினைவாற்றலிருக்கும். கால் போலியோவால் பாதிக்கப்பட்டவர்களின் கைகள் அதிக திடமாயிருக்கும். பேச முடியாதவர் நம் உதட்டு அசைவை, உடல் அசைவை கவனித்து சரியாக பொருளை புரிந்து கொள்வர். இயேசுநாதர் ஊனமுற்றோர் ஆலயத்துக்குள்ளே வரலாகாது என்னும் நிலையை மாற்றி குருடரும், சப்பாணிகளும் தேவாலத்துக்குள் வர அனுமதி அளித்தார் (மத் 21:14). இயலாமையில் இருப்போரை மதித்து பராமரித்திடல் வேண்டும் என்பது கடவுளின் விருப்பம். ஐ.நா. சபையும் அவர்களை கௌரவிக்கும் விதமாக 1981 ஆம் ஆண்டை உலக மாற்று திறனாளிகளின் ஆண்டாக அறிவித்தது. அதுமட்டுமல்ல ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3ஆம் நாளை மாற்றுதிறனாளிகளின் தினமாக அனுசரித்து அவர்களை ஊக்கப்படுத்தியும் பல சலுகைகள் வழங்கியும் வருகிறது.

2சாமு 9:1-13 வசனங்களில் மன்னன் தாவீது தன் நண்பரான யோனாத்தானின் சந்ததியாய் காணப்பட்ட மேவிபோசேத் என்ற ஊனமுற்றோரை அன்பு செலுத்தின நிகழ்வு சொல்லப்பட்டுள்ளது. தாவீதுக்கு எதிரிதான் சவுல் மன்னர். தாவீது நன்மை செய்த பிறகும் சவுல் தாவீதை கொலை செய்ய வகை தேடினார். ஆனால் சவுல் தாவீதால் சிநேகிக்கப்பட்டார். சவுலின் மகன் யோனாத்தான் தாவீதின் உயிர்தோழன். தாவீது ஒருநாள் சவுலின் குடும்பத்தாரை விசாரிக்கிறார். 2சாமு 9:1ல் தாவீது தன் மனுஷரிடம் யோனாத்தானிமித்தம் என்னால் தயவு பெறத்தக்கவன் எவனாவது சவுலின் வீட்டாரில் இன்னும் மீதியாயிருக்கிறவர் உண்டோ? எனக்கேட்டார். இந்நேரத்தில் சவுலின் வீட்டுவேலைக்காரன் சீபா அழைத்து வரப்பட்டான். சீபா சவுலின் மகன் யோனாத்தானுக்கு இரண்டு கால்களும் முடமான ஒரு மகன் இருக்கிறான் என பதிலளித்தான் (2சாமு 9:3). அந்த முடமான மனிதன் தான் மேவிபோஷேத்.

சவுலும் யோனாத்தானும் மரிக்கும் போது மேவிபோஷேத்துக்கு வயது 5. அவனது சாதி அவனை எடுத்துக் கொண்டு ஓடிப் போகிற போது அவசரத்தில் அவள் கீழே விழுந்து, குழந்தையான மேவிபோஷேத் முடவனானான் (2சாமு 4:4). சவுலும் யோனாத்தானும் மரித்த பிறகு மேவிபோஷேத் தன் தாயாரோடு கூட ஊரிலே தங்கியிருந்தான். இப்படி

இரண்டு கால்களும் முடமான குறைபாடுடன் இயலாமையில் காணப்பட்ட மேவிபோஷேத்தை மன்னன் தாவீது அழைப்பித்து தன் வீட்டில் ஏற்று உதவி செய்கிறான். இந்த பின்னணியத்தில் மாற்றுத்திறனாளிகள் ஞாயிறாகிய இன்று சிந்திக்க தரப்பட்டுள்ள இயலாமையில் இருப்போரை மதித்தலும் பராமரித்தலும் என்னும் தலைப்பில் சிந்திப்போம்.

### *1. மனித மாண்பை மாற்றுத்திறனாளிக்கு அளித்தல்* :

இரண்டு கால்களும் இழந்த மேவிபோஷேத் தள்ளப்பட்டவர். முந்தைய அரசாட்சியாளர்களின் மீந்திருப்பவர். தாவீது மன்னன் முன்பாக தன்னை ஒரு வெட்கமுள்ளவனாக் காட்டுகிறான். அவன் வணங்கி நான் செத்த நாயை போன்ற பணியாளன். நீர் என்னைக் கடைக்கண் பார்ப்பதற்கு எனக்கு என்ன தகுதி உள்ளது (2சாமு 9:8) என்றான். சாதாரணமாக சிம்மாசனத்திற்கு ஆபத்தினையும் அச்சறுத்தலையும் கொடுக்கக்கூடிய எந்தவொரு முந்தைய வம்சத்தினை சேர்ந்தவனையும் கொல்வது தான் மரபு. கருவில் இருக்கும் அரச வம்சத்தின் கருவினைக் கூட சொல்ல தயங்க மாட்டார்கள். அப்படிப்பட்ட நிலையில் ஊனமுற்ற, இயலாத மேவிபோஷேத்தை மன்னன் தாவீது ஏற்று மனித மாண்பினை அவனில் வெளிப்படுத்துகிறார். அதைத்தான் 2சாமு 9:6-ல் தாவீது மேவிபோஷேத்தை என பாசத்துடன் அழைத்து வெளிப்படுத்துகிறார். மேவிபோஷேத்தைப் பார்த்தபோது மன்னன் தாவீது ஆச்சரியமம் சந்தோஷமும் அடைந்தார். ஏனென்றால் மேவிபோஷேத்தின் தந்தை யோனாத்தான், தாவீதின் ஆத்ம சினேகிதன். மேவிபோஷேத்தைப் பார்க்கும் போது தன் நண்பன் யோத்தானைப் பார்த்தது போன்ற உணர்வினைத் தாவீது பெறுகிறார். ஆனால் மேவிபோஷேத்துக்கு தாவீதைப்பற்றி தெரியாது. எனினும் தாவீது மேவிபோஷேத்தை என அன்புடன் மனித மாண்பினை வெளிப்படுத்துகிறார். Don’t be afraid. You will always eat at my table (2Sam 9:7). தாவீது மேவிபோஷேத்தை பெயர் சொல்லி அழைத்தல், கனிவான பேச்சு, பராமரித்தல் ஆகியவை தாவீது இயலாமையில் இருப்போருக்கும் நண்பன் என்பதை வெளிப்படுத்துகிறது.

மாற்றுத்திறனாளிகள் இயலாதவர்கள் என எண்ணும் மனநிலை தவிர்க்கப்படல் வேண்டும். மாற்றுத்திறனாளிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை ஆண்டவர் நம்மில் எதிர் பார்க்கிறார். சாதாரணமாக ஒர கழந்தை எந்த இடத்தில் எந்த வீட்டில் எந்த இனத்தில் எந்த மாதத்தில் பிறப்பது என்பதை பிறக்கும் குழந்தை நிர்ணயிப்பதில்லை. அதபோல ஊனமும் யாரும் விரும்பி ஊனமடைவதில்லை. பிறப்பாலோ, வியாதியாலோ, விபத்தாலோ எப்படியோ உடலில் ஊனம் ஏற்பட்டு விடுகிறது. ஊனமுள்ள

மேவிபோஷேத்துக்கு அவன் இழந்துபோன மானிடத்தின் மேன்மையை பெற்ற தர தாவீது முயற்சிக்கிறார். இறையிலாளார் வென்சஸ்லாஸ் லாரன்ஸ் அவர்கள் நற்செய்தி மயமாக்கதல் என்பது சமுதாயத்தில் காலம் காலமாக எல்லையோரத்தில் இருப்பவர்களுக்கு மனித மாண்பளிப்பது என குறிப்பிடுகிறார். மனிதநேயமுள்ள நம்முடைய செயல்பாடுகள் உடல் ஊனமடைந்து இயலாநிலையில் காணப்படும் அனைவரையும் உற்சாகப்படுத்தி வாழ வைக்கிறது.

## *2. மன தைரியத்தை மாற்றுத்திறனாளிக்கு அளித்தல்* :

பயம் என்பது குறைபாடு உள்ளவர்களின் மனதில் ஏற்கனவே உண்டான ஒன்றாகும். இந்நிலையில் அவர்கள் முன்னுக்கு வராமல் தடையாயிருக்கும் அனைத்தையும் தகர்த்தெறிய வழிகாட்டுதல் மிக முக்கியமானதாகும். இயலாமையை வைத்து ஒருவரைத் தரைக்குறைவாகவோ ஒடுக்கும் போங்கோ கூடாது என்பதை ஆண்டவர் கற்றுத்தருகிறார். 2சாமு. 9:7-ல் தாவீது மேவிபோஷேத்திடம்நீ பயப்படாதே என்கிறார். தாவீது வாள்பலம், படைபலம், தோள்பலம் எல்லாமுடையவராயிருந்தும் கருணை கண்ணாய் வாழ்ந்து மாற்றுத்திறனாளியான மேவிபோஷேத்தை தைரியப்படுத்தியது. தாவீதை தலை குனிந்து தைரியமாய் வணங்கி நின்றார். மாற் 3:1-6 வசனங்களில் ஜெபாலயத்தில் காணப்பட்ட சூம்பின கையுடைய மனிதனை இயேசு சுகம் கொடுத்த நிகழ்விலே பரிசேயர் சதுசேயர் ஓய்வுநாளைக் காரணம் காட்டி மாற்றுத்திறனாளி வாழ்வதை தடை செய்ய முயன்றனர். மேலும் மேலும் அவனை பதற வைத்தனர். ஆனால் பாரம்பரிய அடிப்படையில் அந்த மனிதர் ஒரு கல்தச்சர். கட்டிட பணியினைச் செய்கையில் அவரது கை பாதிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் கை சூம்பின நிலைக்கு என்ன காரணம் எனத் தெரியவில்லை. நோய்க்கான காரணம் பல இருந்தாலும் அதை வைத்து அவரது ஆற்றலைக் கட்டுப்படுத்தவும், இயேசுநாதரின் அற்புதத்தை தடை செய்ய முற்படுவதும் வேடிக்கையானதாகும். சூனால் வேன் கையை நீட்டச் சொல்லி சுகம் கொடுத்து அவனை இயேசு தைரியப்படுத்தினார்.

இயலாமையைக் காரணம் காட்டி எவரையும் ஒடுக்க முடியாது. குறைவுள்ளவர்களை குறித்து இயேசுவின் அணுகுமுறை இயலாமையில் இருப்பவரை வெறுத்து ஒதுக்கும் சமூகத்துக்கு மாபெரும் சவாலாகும் (மத். 21:14). ஊனமுற்றோரை நேசித்து அவர்களை தைரியப்படுத்தி வாழ வைப்பது திருச்சபையின் கடமையாகும். இயலாத மனிதர்களும் உலகில் ஒரு அங்கம். இயன்றவர்களால் கூட செய்ய இயலாதபல சாதனைகளை

இந்த மாற்று திறனாளிகள் செய்த அவர்களுக்கு மட்டுமல்லாமல் உலகிற்கும் பயனுள்ள வகையில் சாதனை படைத்துள்ளார்கள். மாற்றுத்திறனாளிகளின் இடத்தில் முதலில் இருப்பவர் உலகறிந்த கணித மேதையான ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் என்பவர் வாய் பேசமுடியாதவர். தொலைபேசியை கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிரகம்பெல் என்பவர் கற்கும் திறனற்றவர். அமெரிககாவில் நியுயார்க் கவர்னராகவும் நான்கு முறை அமெரிக்காவின் ஜனாதிபதியாகவும் சாதனைபடைத்தவர் போலியோ தாக்கி கால் பாதிக்கப்பட்ட எடிசன் என்பவர்.

செவிடு, குருடு, முடக்கு எல்லாம் இருந்தும் உலகளவில் சாதனைபடைத்து அமெரிக்கா பாராளுமன்றத்தில் அங்கம் வகித்து அமெரிக்க அரசால் கௌரவிக்கப்பட்டு நாணயத்திலும் இடம் பெற்றவர் ஹெலன் கெல்லர் ஆவார். இன்று உலகில் இரவை பகலாக்குகின்ற ராட்ச மின்விளக்குகள் முதல் 1500 க்கும் மேற்பட்ட மின்சார மருத்துவ உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை கண்டு பிடித்து மனித குலத்தை மகிழ்ச்சி கடலில் மிதக்க விட்ட மாபெரும் விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன் காது கேளாதவர். இப்படிப்பட்ட சாதனை படைத்தவர்கள் பலர் இன்று நம்மிடையேயும் இல்லாமல் இல்லை.

நமதாண்டவர் குறைவுற்றவர்களுக்கும் குணம் வேண்டி காத்திருப்பவர்களுக்கும், இயலாமையிலிருப்பவர்களுக்கும் எந்நாளும் பக்கபலமும் பாதுகாப்புமானவர். சமுதாயத்தில் மாற்றுத்திறன் படைத்தோருக்கு இன்றைய அத்தியாவசிய தேவையாக காணப்படுவது அங்கீகாரமே. அவர்களின் திறமைகளை கொச்சைப்படுத்தாது மறுவாழ்வு கொடுப்பது திருச்சபையின் தலையாகிய கடமையாகும். மாற்றுத்திறன் படைத்தோரை நேசித்து மாண்புடன் நடத்தி மன தைரியத்தை ஏற்படுத்தி கிறிஸ்துவின் பிள்ளைகளாய் வளர்ந்து பெருகசெய்வோம்.

அருள்திரு. அறிவர். P. ***ராஜா ஜெயசிங்***

# செயலில் கிறிஸ்துவுடன் இளையோர்

## YOUTH WITH CHRIST IN ACTION

தானி 1:1-17 திப 6:1-7
திபா 98 யோவா 1:35-42

**"அரசனது சிறப்புணவினாலும், அவன் பருகி வந்த திராட்சை இரசத்தினாலும் தம்மைத் தீட்டுப்படுத்திக் கொள்ளலாகாது என்று தானியேல் தம் உள்ளத்தில் உறுதி செய்து கொண்டார்; அவ்வாறே தாம் தீட்டுப்படாதிருக்க அலுவலர் தலைவனிடம் அனுமதி கேட்டார்"** (தானி 1:8).

ஒருமுறை 'காலை விடிவெள்ளி' தன்னைப்பற்றி பெருமையாகக் கூறியது, "என்னுடைய பணி அதிகாலையிலே விழித்தெழுந்து வேலை செய்யும் எண்ணமுடைய மக்களை ஊக்குவிப்பது; அவர்கள் எல்லாரும் உலகிலுள்ள உண்மையான தலைவர்கள்" என்றது. அதற்குப் பதிலளித்த 'மாலை விடிவெள்ளி', "என்னுடையப் பணியோ மிக முக்கியமானது. நான் வானத்திலிருந்து ஒளி கொடுப்பதால் தான், கடிகாரத்தைப் பயன்படுத்தாத மக்கள் தங்கள் கனவு நிறைவேற நள்ளிரவு வரை கடுமையாக உழைத்திடத் துணைபுரிகிறேன்; அவர்களே இந்த உலகின் உண்மையான தலைவர்கள், என்றது. " இவர்கள் பேசுவதை கவனித்துக் கொண்டிருந்த சூரியன் அமைதியாக சிரித்தது; ஏனெனில், அவர்கள் இருவரும் பேசுவது ஒரே மக்கள் குழுவைப் பற்றித்தான் என்பது சூரியனுக்குத் தெரியும்.

சோம்பலைக் களைந்து, ஓய்வின்றி அதிகநேரம் கடினமாக உழைப்பவர்களே இந்த உலகில் அரும்பெரும் செயல்களைச் செய்ய இயலும்; பல முன்னேற்றங்களைக் கண்டுகொள்ள முடியும். இளைமைப்பருவம் கடினமாக உழைப்பதற்கு ஏற்றபருவம்; எந்தவொரு செயலையும் செய்யும் திறமை பெற்றிருக்கும் பருவம். "நூறு இளைஞர்களை என்னிடம் தாருங்கள், இந்திய நாட்டை மாற்றிக் காட்டுகிறேன்" என்றார் விவேகானந்தர். "இளைய பாரதத்தினாய் வா வா" என்றார் பாரதியார். "வருங்காலத்தில் அதிக இளையோரைக் கொண்ட நாடாக இந்தியா இருக்கப் போகிறது. அதனால் உலக அரங்கில் ஆற்றல், அறிவுத்திறன், உழைப்பு என எல்லா வகையிலும் வலிமையுடையதாய் இந்தியா திகழப் போகிறது" என்றார் அப்துல்கலாம். மேற்சொன்ன வாசகங்களெல்லாம் இளையோரின் சிறப்பை எடுத்துரைக்கின்றன.

மனித வளங்களில் முதன்மையாக விளங்குகின்ற இளையோரின் ஆற்றலைக் கொண்டு, மாபெரும் செயலைச் செய்ய முடியும். அதற்கு

இயேசு கிறிஸ்துவே மிகச் சிறந்த உதாரணமாக இருக்கின்றார். ஒரு துணிவுமிக்க, தூய்மையான இளைஞராகத் தம் தந்தை தமக்குப் பணித்திட்ட அனைத்து வேலைகளையும் வெற்றியாய்ச் செய்து முடித்தார். இவ்வாறு, செயல்களில் சிறந்து விளங்குவதற்கு இயேசு கிறிஸ்து இளையோருக்கு அகத்தூண்டுதலாக (Inspiration) இருக்கின்றார்.

செயல் என்பது ஒரு பெயர்ச் சொல் மட்டுமல்ல; அது ஒரு வினையைக் குறிக்கும் சொல். இந்த உலகில் எல்லாச் செயல்களும் கிறிஸ்துவோடு இணைந்து செயல்பட்டால் அவை வெற்றி காணும் என்பதில் ஐயமில்லை. இன்றைய இளையோர் தாம் செய்யும் செயல்களில் வெற்றி காண்பதற்கு கிறிஸ்துவோடு இணைந்து செயல்படுவது இன்றியமையாதது. இன்று பொருள் தேடலில் உயர்ந்த இடத்தை அடைந்திருக்கின்ற இளையோர், வாழ்க்கைக்கான அறத்தேடலை அறிந்து கொள்ளவில்லை. சம்பாதிக்கும் பொருளைக் காட்டிலும், வாழ்வு பொருளுள்ளதாய் அமைந்திருக்க வேண்டும் என்பதை அறியாதிருக்கின்றனர். எனவேதான், வாழ்வில் தோல்வியையும், தடுமாற்றத்தையும் கண்டு ஏமாற்றம் அடைகின்றனர். இச்சூழலில் இன்றைய திருமறைப்பகுதிகள் இளையோரை, கிறிஸ்துவுடன் இணைந்து செயல்பட்டு வெற்றி காண்பதற்கு அழைப்பு விடுக்கின்றன. அதைக் குறித்து தியானிப்போம்.

### 1. *தீமையைத் துணிவுடன் எதிர்க்கும் இளையோர்* :

(தானி 1:8)

இஸ்ரயேல் மக்கள், எங்ஙனம் தூய்மையோடு வாழ வேண்டும் என்பது பற்றி யாவே கடவுள் அவர்களுக்கு மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் மக்கள் இறைவார்த்தைக்குச் செவிச் சாய்க்காமல், வேற்று நாட்டவரின் தெய்வங்களை வழிபடுவதில் அதிக நாட்டங்கொண்டிருந்தனர். இவர்களை இறைவழியில் நடத்த வேண்டிய அரசர்களும் பலவீனப்பட்டுப் போயினர். எனவே நேபுகத்னேசர் கடவுளின் சினத்தின் அடையாளமாக, யூதேயாவை முற்றுகையிடுகிறார். யூதேயாவின் அரசர் யோயாக்கிமைத் தோற்கடித்து, எருசலேம் கோவில் கருவூலத்தைச் சூறையாடுகிறான். அதுவுமின்றி, உடலிலும் உள்ளத்திலும் தகுதியுற்ற சில இஸ்ரயேல் இளைஞர்களையும் அடிமைகளாய் அழைத்துக் கொண்டு சென்று அவர்களை பாபிலோனியர்களாக மாற்ற விரும்பினார். அதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும், முயற்சிகளையும் மேற்கொண்டார். பாபிலோனிய மன்னரின் இந்த முயற்சி பாபிலோனியக் கலாச்சாரத்துக்கும், இஸ்ரயேலின் சமய நம்பிக்கைக்கும் இடையில் போராட்டமாக உருவெடுத்தது.

அரசரே கட்டளையிட்டாலும் ஒருபோதும் எங்கள் பக்திவிருத்திக்கு எதிராக இருப்பவற்றோடு சமரசம் செய்து கொள்ளமாட்டோம் என்பதில் உறுதியாக இருந்தவர்கள் தான் இளைஞர்களான தானியேல், அனனியா, மிசாவேல், அசரியா எனபவர்கள். தங்கள் முன் வைக்கப்பட்ட தீமையைத் துணிவுடன் எதிர்கொள்ளத் துணிந்து நின்றனர். அவர்களில் காணப்பட்ட அறிவும், அழகும் இயல்பாகவே உருவானது அல்ல; மாறாக, இறைநம்பிக்கையின் வெளிப்பாடுகளாய் இருந்தன எனலாம். எனவேதான், எத்தகைய இடர்ப்பாடுகள் நேரிடினும் அதைக் கண்டு அஞ்சாமல், தங்கள் யாவே கடவுள் மீது நம்பிக்கையில் நிலைத்திருந்து, தீமையை எதிர்த்தனர். அன்று தன் விருப்பத்திற்கு மாறாக எகிப்தில் விற்கப்பட்டு, ஓர் எகிப்தியராக உருவாக்கப்பட்ட யோசேப்பு எகிப்தியக் கலாச்சாரத்திற்குத் தம் சமய நம்பிக்கையை விற்றுவிடவில்லை (தொநூ 39:1-6, 41:39-46).

பாபிலோனியர்கள் பொதுவாக புலால் உணவு உண்பர். தானியேலின் வலிமையை வலுப்படுத்தும் விதத்தில் அவர்கள் அளிக்கவிருக்கும் சிறப்புணவில் இறைச்சி வகையில் யூதர்கள் உண்ணக்கூடாத இறைச்சி வகை (பன்றி இறைச்சி) இருந்தது. அத்துடன், பாபிலோனியர் பருகி வந்த திராட்சை இரசம் யூதர்கள் பருகி வந்ததிலிருந்து சற்றே மாறுபட்டதாகும். இந்தத் திராட்சை இரசத்தைத் தயாரிப்பதற்கும், போதையை அதிகரிக்க யூதர்கள் தீட்டாகக் கருதும் பொருட்களையும் பயன்படுத்தினர். எனவேதான், இந்தச் "சிறப்புணவை" அறவே தவிர்க்க தானியேல் விரும்பினார். உடலைத் தீட்டுப்படுத்தாத பருப்பு முதலான மரக்கறிகளையும் குடிப்பதற்குத் தண்ணீர் மட்டுமே எங்களுக்குத் தாரும் என்று மேற்பார்வையாளரிடம் தானியேல் விண்ணப்பிக்கிறார்.

இங்கு தானியேலும், அவருடைய நண்பர்களும் உலகத்தால் தங்களைக் கறைபடாது காத்துக்கொள்வதிலே விழிப்புடன் செயல்பட்டார்கள். சமூக, சமய வாழ்வில் இறைவிருப்பத்திற்கு மாறாக, உலகில் மலிந்து காணப்படுகின்ற தீமைகளைத் துணிச்சலோடு எதிர்த்தனர். அமெரிக்கா ஐக்கியநாட்டில் இனப்பாகுபாட்டிற்கு எதிராகத் துணிச்சலாகப் போராடியவர், 27 வயது Ida Bell Wells Barnett என்பவராவார். "வலைப்பொறிக்குள், நாயாக அல்லது எலியாக இறப்பதை விட அநீதிக்கு எதிராகப் போராடி இறப்பது சிறந்தது என உணர்கிறேன்" என்றார். தனது 22 ஆவது வயதில் Memphis -லிருந்து Nashville-வுக்கு இரயிலில் முதல் வகுப்பில் பயணச்சீட்டு வாங்கி பயணம் செய்தார். அங்கு வந்த பயணச்சீட்டுப் பரிசோதகர், இவரை முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து, ஏற்கனவே கூட்டம் நெரிசலாக உள்ள, ஆப்பிரிக்கா - அமெரிக்கா இரயில் பெட்டிக்கு வலுக்கட்டாயமாக அனுப்பி வைத்தார். இவ்வாறு பாதிக்கப்பட்ட இப்பெண், அமெரிக்கா ஐக்கியநாட்டின் தென்பகுதியில் நிலவிய இனவெறி

மற்றும் அரசியலை எதிர்த்து செய்தித்தாள்களிலும், இதழ்களிலும் கட்டுரை எழுதினார். இனப்பாகுபாட்டை எதிர்த்து எழுதியதற்காக தனது 29 ஆவது வயதில் தான் வகித்து வந்த ஆசிரியப்பணியிலிருந்து நீக்கப்பட்டார். எதிர்ப்புகளின் மத்தியிலும் எழுத்துகள், உரைகள் மற்றும் போராட்டங்களால் முற்சார்பு எண்ணங்களுக்கு எதிராகத் துணிச்சலோடு போராடியவர், ஐடா பெல் வெல்ஸ். தீமையை எதிர்ப்பதில் இத்தகைய துணிவும், மனவுறுதியும் இன்றைய இளையோருக்குத் தேவை.

### 2. ***விருந்தோம்பலால் நல்லுறவை உருவாக்கும் இளையோர்*** : (திப 6:3)

திப 6:1-7 வரையுள்ள வசனங்கள் தொடக்ககாலத் திருச்சபையில் பந்தி விசாரிப்பு முறையாகச் செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும், அதற்குத் தீர்வுகாணப்பட்ட நிகழ்வையும் குறித்தும் தெளிவாக எடுத்துரைக்கிறது. அதாவது, கிரேக்கக் கைம்பெண்கள் முறையாகக் கவனிக்கப்படவில்லை எனக் கிரேக்கமொழி பேசுவோர், எபிரேய மொழி பேசுவோருக்கு எதிராகக் குற்றம் சாட்டினார். யார் இந்த கிரேக்கமொழி பேசுவோர்? இவர்கள் வெளிநாடுகளில் சிதறிக்கிடந்த யூதர்கள். இவர்களுக்கு எபிரேயமொழி தெரியாதென்றும், தாங்கள் யூதர்கள் என்ற உணர்வோடும் வாழ்ந்து வந்தவர்கள். அதேநேரத்தில், எபிரேயமொழி பேசுகின்றவர்கள் பாலஸ்தீனத்தில் பிறந்து வளர்ந்த யூதர்கள். இவர்கள் அரமேய மொழியையும் தெளிவாகப் பேசுகின்றவர்கள்.

அனாதைகளையும், கைம்பெண்களையும் பாதுகாக்க வேண்டுமென்பது பழைய ஏற்பாட்டுச் சட்டம். இவர்களுக்கு "உரிய நீதியைப் புரட்டுபவர் சபிக்கப்படட்டும்" என்பதும் சட்டம். பல கைம்பெண்கள் தங்கள் இறுதிக் காலத்தை எருசலேமில் செலவிட ஆசைப்பட்டனர். இவர்கள் ஒருவேளை தங்கள் உடைமைகளை இழந்தவர்களாயிருக்கலாம் அல்லது வேலை செய்து பொருளீட்ட முடியாதவர்களாகக் கூட இருந்திருக்கலாம். எனவே கோவில் சூழலில் இவர்கள் அமர்ந்து தங்கள் இறுதி நாட்களை செலவிட விரும்புகின்றவர்கள். இத்தகையோருக்குத் தான் உரிய பராமரிப்பை தொடக்ககாலத் திருச்சபை சரிவரச் செய்யவில்லை என்னும் குற்றச்சாட்டை வைக்கின்றனர். ஆனால், திருத்தூதர்கள் இந்தப் பிரச்சனையை மிகவும் சாதுரியமாகக் கையாண்டு, தனிக்குழு ஒன்றை அமைத்து விருந்தோம்பல் வழி நல்லுறவை இம்மக்களிடம் ஏற்படுத்தியதாகக் காண்கின்றோம். அதாவது, திருத்தூதர்கள் தாங்களாகவே முடிவு எடுக்காது, சபையைக் கூட்டி, ஆலோசனை வழங்கி, ஏழு நபர் கொண்ட திருத்தொண்டர்க் குழுவைத் திருச்சபை தெரிவு செய்யத் துணைபுரிந்தனர். இதனால், கடவுளின்

வார்த்தை மென்மேலும் பரவியதோடு மட்டுமன்றி, சீடர்களின் எண்ணிக்கையும் எருசலேமில் மிகவும் பெருகியதாகக் காண்கிறோம்.

கொரோனா பொதுமுடக்கக் காலத்தில் நம் நாடு பூட்டப்பட்டு மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து நின்ற வேளையில், சமூக, சமய வரையறைகளைத் தாண்டி இளையோர், மக்கள் மத்தியில் ஆற்றிய சேவை மிகவும் பாராட்டுதலுக்குரியது. குறிப்பாக, ஒருநேர உணவு கூட இல்லாமல், சாலையோரங்களிலும், தெருக்களிலும் தவித்து நின்ற மக்களுக்கு இளையோரை உறுப்பினராகக் கொண்ட எத்தனையோ அமைப்புகள், தன்னார்வத்தோடு உணவு வழங்கியும், நோயினால் பாதிக்கப்பட்டோரை, மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றும், இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்ய உதவிகள் பல செய்தும், சேவை மனப்பான்மையோடு செயல்பட்டார்கள்; இன்றும் செயல்படுகின்றனர். இத்தகைய தியாகம் நிறைந்த மனப்பான்மையோடு செயல்படுகின்ற இளையோர்களின் வழி சமூகமும், திருச்சபையும் வாழ்வு பெறும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

### *3. அறிமுகம் செய்து ஆண்டவரைப் பின்பற்றும் இளையோர்* : (யோவா 1:35-42)

யோவான் நற்செய்தி நூலில் அறிமுகம் செய்து வைக்கின்ற நிகழ்ச்சி பல இடம்பெற்றுள்ளன. இது இந்நூலின் சிறப்புகளில் ஒன்று. யோவான் ஒன்றாம் அதிகாரம் தொடங்கி பல நிகழ்வுகளில் கண்டுகொள்ள முடியும். திருமுழுக்கு யோவான், "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! ஆட்டுக்குட்டியாம் இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர் (1:29)" என்று இயேசுவைக் குறித்த அறிமுகப்பணியை ஆற்றலோடு துவங்கி வைக்கின்றார். பிலிப்பு, நாத்தான்வேலை இயேசுவிடம் அழைத்துச் சென்று, இயேசுவின் பாராட்டுதலை நாத்தான்வேல் பெற்றுக் கொள்ள காரணமாக அமைகின்றார் (1:45-47). ஐந்து வாற்கோதுமை அப்பங்களையும், இரண்டு மீன்களையும் வைத்திருந்த சிறுவனை, அந்திரேயா இயேசுவினிடத்தில் அறிமுகப்படுத்துகின்றார் (6:8,9). இயேசுவைக் காண வேண்டும் என்று விரும்பிய கிரேக்கர்களுக்கு பிலிப்புவும், அந்திரேயாவும் இணைந்து அவர்களின் விருப்பத்தை இயேசுவுக்கு அறிவிக்கின்றனர் (12:21,47). இப்படித் தனித்தன்மையும், பல சிறப்புகளையும் கொண்ட யோவான் நற்செய்தி நூலிலே, இன்றைய நற்செய்திப் பகுதியும் ஒரு அறிமுகத்தைக் குறித்த தெளிவை எடுத்துரைக்கிறது (1:35-42).

திருமுழுக்கு யோவான் தனது இரண்டு சீடர்களோடு நிற்கையில், இயேசுவைப் பார்த்து, "இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி" என்றார் (1:36).

இக்கூற்றின் வழி அச்சீடர்கள் இருவரும் இயேசுவைப் பின்தொடர்ந்தனர். அதுவுமின்றி அவர்கள் அவரோடு தங்கினர் (1:39). திருமுழுக்கு யோவான் இயேசுவை அறிந்து கொண்ட அந்திரேயா, தனது சகோதரனாகிய சீமோனுக்கு அதைத் தெரிவித்து, அவரையும் இயேசுவிடம் அழைத்து வந்தார் (1:42). இந்த சீமோன் பின் நாள்களில் இயேசுவின் அன்பான சீடர்களில் ஒருவராய் இருந்ததுமன்றி, இயேசுவின் மரணத்திற்குப் பின் பல தொடக்காலத் திருச்சபைகள் உருவாகக் காரணமாக அமைந்தார். கிறிஸ்துவைப் பின்பற்றுதல் என்பது அவரைப் பிறருக்கு அறிமுகம் செய்து வைத்தல் ஆகும். முழுக்கு முனிவர் யோவான் அதைச் செய்தார். அவரது இரண்டு சீடர்களும் அப்பணியை செவ்வனே செய்தனர். இன்றைக்கு இளையோர்கள் இப்பணியைச் செய்ய அழைக்கப்படுகின்றனர்.

அன்று நம் மத்தியில் வந்து திருப்பணியாற்றிய ரிங்கல்தௌபே சார்லஸ் மீட் இவர்களைத் தொடர்ந்து வந்த மேலை நாட்டு அருள்பணியரெல்லாரும் இயேசுவை நமக்கு அறிமுகம் செய்து ஆன்மிகப் பணியாற்றியதோடு மட்டுமல்லாது, கல்விப்பணியையும், மருத்துவப்பணியையும் மிகச் சிறப்பாகச் செய்தனர். இவர்களெல்லாரும் கிறிஸ்துவோடு இணைந்து செயலாற்றினபடியால் சமூகமும், திருச்சபையும் வாழ்வு பெற்றன.

இன்று நமது திருச்சபைகளில் கடவுள் தந்திருக்கின்ற கி.ப.மு. சங்கம் வாயிலாக, இளையோர் சமூகத்திலே, திருச்சபையிலே காணப்படுகின்ற தீமைக்கு எதிராகக் குரல் கொடுத்து, விருந்தோம்பல் வழி பிறருக்கு உதவிகள் பல செய்து, பிறருக்குக் கிறிஸ்துவை அறிமுகம் செய்து நம்பிக்கையில் நிலைத்திருக்கத் துணை செய்யும் காரணிகளாய் கிறிஸ்துவோடு இணைந்து செயல்பட அர்ப்பணிப்போம்.

அருள்திரு. P. **பால் ஒய்சர் ஷெல்லி**

23-10-2022

# நுகர்வோரியத்திற்குக் கிறிஸ்தவ மறுமொழி

**CHRISTIAN RESPONSE TO CONSUMERISM**

| | |
|---|---|
| தொநூ 3:1-7 | பிலி 3:17-21 |
| திபா 37 | மத் 6:25-34 |

**“அந்த மரம் உண்பதற்குச் சுவையானதாகவும், கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும் அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததைக் கண்டு.....”** (தொநூ 3:6).

“வயிறே அவர்கள் தெய்வம்......” (பிலி 3:19)

“நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்” (மத் 6:34)

தேவைக்கு அதிகமான அளவிலும், அத்தியாவசியமற்ற நிலையிலும் பொருட்களை வாங்கிக் குவிப்பதே நுகர்வோரியமாகும். பொருட்களை வாங்குவதிலும் அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் குறிப்பாக, பொருட்களைப் பற்றி சிந்தித்தலும், காணவிரும்புதலும் அதிக நேரம் சந்தைப் பகுதிகளிலும், இணையதளங்களிலும் செலவிடுதல் நுகர்வுக் கலாச்சாரமாகும். நவீன வாழ்வியலைப் பற்றி இறையியலாளர் செபாஸ்டியன் காப்பன் சொல்லுகிறார், ‘காசே நமது கடவுளாகிவிட்டது, கடைகளும் சந்தையுமே நம் கோவில்களாகிவிட்டன, புதுப் புது சொகுசுகளையும் சுகங்களையும் வாங்கி’ அனுபவிப்பதே நமது வழிபடாகிவிட்டது. விளம்பரங்கள் பார்ப்பதே தினசரி தியானம். அடுத்து என்ன பொருளை வாங்கலாம் என்று சிந்திப்பதே நமது ஜெபம். கடைவீதியும் சந்தைப் பொருளாதாரமுமே நம் ஆன்மிக மீட்பாகிவிட்டது என்கிறார். நுகர்வுக் கலாச்சாரம் இறைமக்களின் ஆன்மிகச் சீர்குலைவிற்குக் காரணமாகிவிட்டது. இவை மனிதர்களை அவர்களிடமிருந்தே அந்நியமாக்கிக் கொண்டிருக்கிறது. இன்றைய சமூகத் தொடர்பு ஊடகங்கள் நுகர்வு வெறியைத் தூண்டி, வெறும் கற்பனை உலகங்களின் கவர்ச்சியைக் காட்டி, உலகச் சுகங்களும், பொழுது போக்குகளுமே மனிதர்க்குப் போதும் என்ற மாயையை மனதில் வளர்த்துள்ளன. இந்த நுகர்வுக் கலாச்சாரத்திற்குத் திருமறை கூறும் கிறிஸ்தவப் புரிதல்களும், பதிலுரைகளும் என்னவென்று சிந்திப்போம்.

***1. கவர்ந்திழுக்கும் விளம்பரங்களுக்கு மயங்காமல் கடவுளின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவோம்*** : (தொநூ 3:1-13)

நுகர்வோரியத்திற்குச் சிறந்த உதாரணமான இந்தப்பகுதி எப்படி கவர்ச்சிகரமான விளம்பரங்களால் மக்கள் ஈர்க்கப்பட்டு, பொருள் வேட்கையில் விழுந்து, கடவுளின் வார்த்தைகளை விட்டு விலகிப்

போகின்றனர் என்பதை விளக்குகிறது. சூழ்ச்சிமிக்க உயிரினமான பாம்பின் (தீயோனின்) கவர்ச்சியான வார்த்தைகளால் மானுடம் மயங்கி வீழ்ந்து போனது. எளிதில் நம்பக்கூடிய கருத்துகளால் ஆட்கொள்ளப்பட்ட ஆதாமும் ஏவாளும் (தொநூ 3:6) இறைவனின் கட்டளையை (தொநூ 3:3) மறந்துபோய், தங்கள் தீர்மானத்தை உடனே மாற்றிக் கொள்ள ஆவல் கொண்டனர். ஆசைகள் பேராசைகளாய் மாறி, அவைகளின்பால் நாட்டம் அதிகரித்து, செயல்வடிவம் பெறுகையில் விளைவுகள் விபரீதமாகின்றன (தொநூ 3:7). இறையோடுள்ள இசைவு முறிந்து, (தொநூ 3:8) ஒளித்து (தொநூ 3:10), துரத்தப்பட்டு, பாடுகளை வாழ்வில் சந்தித்தனர்.

இன்றும் விளம்பரங்கள் பொய்களை உண்மைகளைப் போல் காண்பித்து, ஆசைகளைத் தூண்டி மக்களை ஏமாற்றுகின்றன. எளிதில் கவர்ந்திழுக்கும் புதிய கலாச்சாரங்கள், கொள்கைகள், திட்டங்கள், சித்தாந்தங்கள் போன்றவைகளில் மயங்கி, வீழ்ந்து போகாதபடி கவனமாக இருந்து இறைவார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவரில் நிலைத்திருந்து கிறிஸ்தவ மதிப்பீடுகளை வெளிப்படுத்துவோம்.

### *2. ஊனுடலுக்கான கவலைகளை விடுத்து இறைநம்பிக்கையோடு வாழ்வோம்* : (பிலி 3:17-21, மத் 6:25-34)

வாழ்க்கையைக் குறித்துத் திட்டமிடல் அவசியம். ஆனால் கவலை அவசியமற்ற ஒன்று, பயனற்றது. கவலை எதையும் சாதிக்க உதவாது. ஜீவனைத் தந்த இறைவன் ஊனுடலுக்கான உணவையும், உடலையும் தருவது உறுதி (மத் 6:25). பறவைகளும் மலர்களும் சூழ்நிலைகளைக் கண்டு சோர்வடையாமலே இறைவனின் எதிர்பார்ப்பை நிறைவு செய்கின்றன. மனிதர்களோ இறைநம்பிக்கை குறைந்து, சோர்ந்து, கவலையுற்று முடங்கிப் போகின்றனர். இன்றைய நுகர்வுக் கலாச்சாரத் தாக்கத்தால் மக்கள் ஞானமற்றவர்கள் போல நடந்து கொள்கிறார்கள். இறைவன் மீது நம்பிக்கை கொண்டு, இறையரசின் (மத் 6:33) விழுமியங்களை வெளிப்படுத்த முதலிடம் கொடுத்து வாழ்வதே இறைவனின் விருப்பமாகவும், கிறிஸ்தவர்களிடம் எதிர்பார்க்கப்படும் செயல்பாடாகவும் உள்ளது.

சொந்த ஆசைகளை முதன்மைப்படுத்துவோர் அழிவுக்குரியவர்கள் எனப் பவுல் எச்சரிக்கிறார் (பிலி 3:19). மண்ணுலகு சார்ந்த எண்ணங்களிலும், வெட்கத்துக்குரிய இச்சைகளிலும் பெருமை பாராட்டுகிறவர்கள் உண்மையற்ற கிறிஸ்தவர்களும், கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞருமாயிருக்கிறார்கள். பிலிப்பியர் உலகக்

கவலைகளிலிருந்து விடுபட்டு, இறைநம்பிக்கையோடு மேலானவைகளை நாடவேண்டுமென பவுல் அறிவுறுத்துகிறார் (வ.20). ஆகவே, கவலைகளைக் கடவுளிடம் விட்டுவிட்டு (மத் 11:28, பிலி 4:6, 1பேது 5:7), இறைவர் மீது முழுநம்பிக்கை கொண்டு (எபி 11:6) வாழும் போது இறைவர் நமக்கு நிறைவான வாழ்வைத் தந்தருள்வார் (பிலி 4:19).

இருபத்தியொன்றாம் நூற்றாண்டில் கொரோனா ஊரடங்குச் சூழலில் பிள்ளைகளும் நுகர்வுக் கலாச்சாரத்தின் தாக்கத்தால் பணம், பொருள் சேர்ப்பதும், பொருளாதார ரீதியான அதிக வலிமை பெறுவதுமே சமூக அந்தஸ்தைக் கொடுப்பதாக நம்பியுள்ளனர். “பொருள் (பண) ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர்” (1திமோ 6:10) என்பதைப் புரிந்து கொண்டு உலகத்தில் உள்ள பொருளாதார வெறியால் ஆட்கொள்ளப்படாமல், பணத்தையும், நுகர்வு வெறியின் தாக்கங்களை குறித்தும் திருமறை காட்டும் சரியான அணுகுமுறைகளைப் பின்பற்றினால் கிறிஸ்தவ மதிப்பீடுகளை வெளிப்படுத்தலாம். கவர்ந்திழுக்கும் புதிய கலாச்சார மாய வலைகளில் வீழ்ந்து விடாதபடி, இறைவார்த்தைகளில் நிலைத்திருந்து, ஊனுடலுக்கான தேவைகளைத் தினமும் அறிந்து வழங்கும் கடவுள் மீது பற்றுக்கொண்டு, நுகர்வோரிய கொள்கைகள் ஆட்கொண்டிருக்கும் நம் வாழ்வியல் சூழல்களில் கிறிஸ்தவ மாண்புகளை பறைசாற்ற இறைவன் தாமே துணை நிற்பாராக.

அருள்திரு. J. **யாபேஸ்**

30-10-2022

*சீர்திருத்த ஞாயிறு*

# கடவுளின் இறையாண்மையின் கொண்டாட்டம், நீதியும் அமைதியும்

**CELEBRATION OF GOD'S SOVEREIGNTY, JUSTICE AND PEACE**

| | |
|---|---|
| விப 7:1-7 | உரோ 13:1-7 |
| திபா 89:1-18 | யோவா 18:33-38 |

**இயேசு மறுமொழியாக, "எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல."**
(யோவா 18:36).

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பணிக் காலத்தில் அநீதி மலிந்து மக்கள் அமைதியற்றவர்களாக வாழ்ந்து வந்தார்கள். இச்சூழலில் தமது வாழ்வு, போதனை இவைகளினூடாகச் சமூகத்தில் சீர்திருத்தம் ஏற்படுத்தினார். அநீதிக்கு எதிராக, அமைதிக் குலைச்சலுக்கு எதிராகப் போராடி, சீர்திருத்தச் செம்மலாக மாறி நீதி, அமைதி ஏற்படுத்துவதே அவருடைய தலையாயக் கடமையாக இருந்தது. நற்செய்திப் பகுதியில் கைது செய்யப்பட்டு ஆளுநர் மாளிகைக்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்ட இயேசுகிறிஸ்துவுக்கும், ஆளுநர் பிலாத்துவிற்கும் இடையே நடைபெற்ற உரையாடல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில், இயேசுகிறிஸ்து, எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல. இவ்வுலக ஆட்சி போன்றதென்றால் நான் கைது செய்யப்படாதவாறு தப்பியிருப்பேன் என்று ஆளுநர் பிலாத்துவிடம் கூறினார். ஆம், ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் ஆட்சி அநீதி, பொய், வன்முறை இவைகளை வேரறுத்து சீர்திருத்தம் செய்யும் அரசு ஆகும்.

இதைப்போல, திருச்சபையில் சீர்த்திருத்தம் ஏற்படுத்தியவர் மார்ட்டின் லூத்தர் என்ற பாதிரியார் ஆவார். திருச்சபைகளில் சமயத்தின் பெயரால் பல சுரண்டல்கள், அநீதிகள் அரங்கேற்றப்பட்டன. செய்த பாவங்கள் மன்னிக்கப்பட திருச்சபைகளில் விற்கப்பட்ட பாவமன்னிப்புச் சீட்டு வாங்க வேண்டும். இத்தகைய ஊழல், அநீதி, புரட்டு உபதேசங்களை மார்ட்டின் லூத்தர் அவர்கள் கடுமையாக எதிர்த்தார். தனது சீர்திருத்தக் கருத்துக்களை 95 குறிப்புகளாக எழுதி கி.பி. 1517ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் நாள் விட்டன் பர்க் தேவாலயத்தின் கதவில் தொங்கவிட்டார். தற்கால விளக்கத்தின்படி இது ஐந்து சாராம்சங்களை உள்ளடக்கியது. அவை (1) திருமறை மட்டும் (Sola Scriptura) (2) பற்றுறுதி மட்டும் (Sola Fide) (3) அருள் மட்டும் (Sola Gratia) (4) கிறிஸ்து மட்டும் (Solus Christus) (5) இறைவனுக்கு மட்டும் மாட்சிமை (Soli Deo Gloria) என்பவைகளாகும்.

இந்தச் சீர்த்திருத்தக் கருத்துகள் திருச்சபையின் இறைமக்களைச் சிந்திக்கத் தூண்டின. இதன் விளைவாக சீர்திருத்தத் திருச்சபை உருவானது. சீர்திருத்தம் என்பது என்றோ முடிந்துவிட்ட ஒன்றல்ல. மாறாக அது தொடர்ந்து நடைபெறுகின்ற ஒன்று. சீர்திருத்தத்தில் நீதியும், அமைதியும் மலர்ந்திடச் செய்வது கடவுளின் இறையாண்மையின் கொண்டாட்டமாக அமையும். எவைகளில் நாம் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும்? என்பதைச் சிந்திப்போம்.

### *1. சொந்த வாழ்வில் சீர்திருத்தம்* : (உரோ 13:3)

ஒவ்வொருவரின் சொந்த வாழ்விலும் சீர்திருத்தம் தேவை என்று தூய பவுலடிகளார் உரோமைத் திருச்சபைக்கு எழுதின கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆளும் அதிகாரம் உள்ளவர்களுக்குப் பணிந்திருக்க வேண்டும். தீச்செயல் செய்யக்கூடாது. சொந்த வாழ்வில் சீர்திருந்தி நற்செயல் செய்ய வேண்டும். சொந்த வாழ்வில் அரசிற்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும். அஞ்ச வேண்டியவர்களுக்கு அஞ்சவேண்டும், மதிக்க வேண்டியவர்களை மதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார் (உரோ 13:1-7). உரோ 13:13,14இல் களியாட்டம், குடிவெறி, கூடா ஒழுக்கம், காமவெறி, சண்டைச் சச்சரவு ஆகியவற்றை தவிர்ப்போமாக! தீய இச்சைகளைத் தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ளுங்கள் என்று சொந்த வாழ்வில் சீர்திருந்த வேண்டும் என்பது குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

திருத்தொண்டராகிய திமொத்திக்கு ஆலோசனை சொன்ன பவுலார், புனைகதைகளையும், மூதாதையரின் முடிவில்லாப் பட்டியல்களிலும் கவனம் செலுத்தாமல் "சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி" தூய்மையான உள்ளம், நல்மனச்சான்று, வெளிவேடமற்ற விசுவாசம் என அன்பைத் தூண்டுவதையே நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டுமென்று சொந்த வாழ்வில் சீர்த்திருத்தம் செய்து வாழவேண்டியதின் அவசியத்தைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார் (1 திமொ 1:1-7).

நமது சொந்த வாழ்வில் சீர்திருத்தம் செய்து நீதியும் அமைதியும் ஏற்படுத்தி கடவுளின் இறையாண்மையின் கொண்டாட்டத்தில் இணைந்திட முயலுவோம்.

### *2. சமய வாழ்வில் சீர்திருத்தம்* : (விப 7:6)

சமய வாழ்வில் சீர்திருத்தம் தேவை. மோசேயும் ஆரோனும் இணைந்து இறைவன் பணித்த பணியாகிய இஸ்ரயேல் மக்களை

வழிநடத்தும் பொறுப்பினைச் சிறப்புடன் செய்தார்கள். கடவுள் என்ன சொன்னாரோ அதன்படியெல்லாம் செய்தார்கள் (விப 7:1-7). சமய வாழ்வில் சீர்த்திருத்தம் ஏற்படுத்திட கடவுளுக்குக் கீழ்ப்படிதல் அவசியம். "கடவுளோடு இசையாத சமய வாழ்வு வாழ்வல்ல" என்று மார்ட்டின் லூத்தர் குறிப்பிட்டார். எனவே கடவுளோடு இணைந்து அவரது வார்த்தைக்குக் கட்டுப்பட்டு சமய வாழ்வில் சீர்திருத்தம் ஏற்படுத்த முயல வேண்டும்.

இறைப்பணி செய்வதற்காக அழைக்கப்பட்ட மோசே மக்களை நியாயம் விசாரிக்கும் பணியினைச் செய்தார். அப்படி மக்களுக்கு நீதி வழங்க மோசே அமர்ந்தார். காலை முதல் மாலை வரை மக்கள் மோசேயைச் சுற்றி அமர்ந்து கொண்டனர். இதை மோசேயின் மாமனார் கவனித்து, ஏன் இப்படித் தனியாக அமர்ந்து இருக்கிறீர்? என்று கேட்க, மோசே பதிலுக்கு மக்கள் என்னிடம் நீதி கேட்டு வருகிறார்கள் என்று கூற, மோசேயின் மாமனாரோ, நீர் இவைகளைத் தனியாகச் செய்வதேன்? அதனைப் பிறருக்குப் பிரித்துக் கொடுத்துவிடும். பலர் இணைந்து இப்பணியைச் செய்யும் போது மகிழ்ச்சி உண்டு என்றார். மோசே சீர்திருத்தம் செய்து சமய வாழ்வில் இணைந்து செயல்பட ஆயத்தமானார் (விப 18:15-27).

சமய வாழ்வில் சீர்திருத்தம் செய்து இணைந்து பணிவிடை செய்து நீதியும் அமைதியும் மலரச் செய்து கடவுளின் இறையாண்மையின் கொண்டாட்டத்தில் இணைந்து இறையாசி பெறுவோம்.

### ***3. சமூக வாழ்வில் சீர்திருத்தம்*** : (யோவா 18:37)

நீதியும் அமைதியும் மலரச்செய்து கடவுளின் இறையாண்மையின் கொண்டாட்டத்தில் இணைந்திட நாம் சமூக வாழ்வில் சீர்திருத்தம் ஏற்படுத்த வேண்டும்.

யோவா 18:37இல் இறைமகன் இயேசு கிறிஸ்து கைது செய்யப்பட்டு நீதி விசாரணைக்காக ஆளுநர் பிலாத்துவிடம் அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது இயேசுகிறிஸ்து பிலாத்துவின் கேள்விக்குப் பதில் சொல்லும் போது, உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன் என்று குறிப்பிட்டார். சமூகத்தில் மலிந்திருக்கும் அநீதிகளை, நீதி நியாயமற்ற தன்மைகளை அகற்றி உண்மையை நிலை நாட்டவே நான் வந்தேன் என்றார். அதையே தம் வாழ்வில் சாதித்துக் காட்டினார். நலிவுற்றோரை, ஆதரவிழந்தோரை ஆதரித்தார்.

அவரது வாழ்வு வெறும் பேச்சாக மட்டும் அல்ல. செயல்பாடு நிறைந்ததாக இருந்தது. இயேசு கிறிஸ்துவின் திருப்பணி சமூகச்

சீர்திருத்தம் செய்வதாக அமைந்தது. தூய பவுலடியார் சமூகத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டுமென்று உரோமையர்களுக்கு ஆலோசனையாகக் குறிப்பிட்டுள்ளார் (உரோ 13).

இறையடியார்களாகிய நாம் சமூகத்தில் பசியுற்றோர், நோயுற்றோர், சிறைப்பட்டோர், ஆதரவிழந்தோர் போன்றவர்களைப் புறந்தள்ளுவது தவறு. அவர்களை ஏற்றுக்கொண்டு ஆதரவு காட்டி சமூகத்தைப் புனரமைப்புச் செய்ய வேண்டும் (மத் 25). இத்தகைய நிலையில் வாழ்ந்து இயேசு கிறிஸ்துவை வாழ்வினூடாகக் காட்ட வேண்டும். இதனை இறையியலாளர் தாமஸ் தங்கராஜ் அவர்கள்,

இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே
பேச்சில் அல்ல, செயலில் நல்ல
இயேசுவை வாழ்வோராய்க் காட்டுங்களே -

என்று பாடியுள்ளார். நாம் நமது வாழ்வில் இயேசு கிறிஸ்துவை வாழ்பவராகக் காண்பித்து சமூக வாழ்வினில் சீர்திருத்தம் செய்திட முற்படுவோம்.

அருள்திரு. R. **டேவிட் ஜெபசிங்**

06-11-2022

# இந்தக் குழந்தை என்னவாகப் போகிறது?

**WHAT THIS CHILD IS GOING TO BE?**

நீத 13:1-14 எபே 6:1-4
திபா 119:9-16 லூக் 1:57-66

**"…. இக்குழந்தை எப்படிப்பட்டதாக இருக்குமோ?" என்று சொல்லிக் கொண்டார்கள்**
(லூக் 1:66)

முழுக்கு முனிவர் யோவானின் பிறப்பில் பல அதிர்ச்சியும், ஆச்சரியமும் வெளிப்பட்டன. கருவுற இயலா நிலையில் இருந்த எலிசபெத் கருவுற்றது, திடீரென வாய்பேச நிலையில் அவதிப்பட்ட அவரது கணவர் செக்கரியா, பிள்ளையின் பெயரைப் பலகையில் எழுதியவுடன் வாயின் கட்டு அவிழ்க்கப்பட்டது போன்ற வியத்தகு நிகழ்வுகளைக் கண்ணுற்ற மக்கள் அதிர்ச்சியில் உறைந்து போயினர். இவ்வதிர்ச்சியில் மக்கள் எழுப்பிய குரல் தான் "இக்குழந்தை எப்படிப்பட்டதாயிருக்குமோ?" என்பதாகும்.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே ஆர்.கே. பேட்டை ஒன்றியத்தில் உள்ள நாராயணபுரம் கிராமத்தில் ஏழைப் பெற்றோருக்கு மூன்றாவதும் பெண் குழந்தை பிறக்கவே, அக்குழந்தைக்கு "வேண்டாம்" எனப்பெயர் வைத்தனர். ஏழைப் பெற்றோரின் மூன்றாவது மகளான இவரது வாழ்வின் வெறுமை, வெறுப்பு போன்றவற்றை அவரது பெயர் உணர்த்தியது. இக்குழந்தையைக் குறித்த அனைவரது எதிர்பார்ப்பும் எதிரிடையானதாகவே இருந்தது. ஆனால் தமது வீட்டுச் சூழல், பொருளாதார நெருக்கடி அனைத்தையும் தாண்டி கடினமாய்க் கற்று, கல்வியில் முன்னேறி ஜப்பான் நாட்டில் ஆண்டுக்கு 22 இலட்சம் சம்பளத்துடன் பணி வாய்ப்பை பெற்றதுடன் "பாலினச் சமத்துவத்தின் தூதராக" நியமிக்கப்பட்டுள்ளார் (தி இந்து 24 ஜனவரி 2020).

குழந்தைச் செல்வங்கள் கடவுள் குடும்பங்களுக்கு அருளும் அருட்கொடையாகும். அவர்களைக் குறித்த மிகப்பெரிய திட்டத்தைக் கடவுள் வைத்திருக்கிறார். ஒரு விதைக்குள் அடங்கியிருக்கும் பெரிய மரம் போல, குழந்தைகளுக்குள் மிகப்பெரிய எதிர்காலம் அடங்கியிருக்கிறது என்பதைத் திருமறை தெளிவாய் எடுத்தியம்புகிறது. அவர்களுக்குள் இருக்கும் ஆற்றலை அடையாளங்கண்டு கொள்ளவும், அவைகளில் அவர்கள் வளரவும் வழி செய்ய வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும். யோவான் எனும் குழந்தையினிடத்தில் காணப்பட்ட சிறப்புகள் என்ன என்பதை இவண் தியானிப்போம்.

### *1. உளம் ஒத்துப் போகச் செய்யும்* : (லூக் 1:17)

பிறக்கப் போகும் குழந்தையைக் குறித்து முன்னுரைத்த வானதூதர் கூறும் கூற்று, இவர் "தந்தையரும் மக்களும் உளம் ஒத்துப்போகச் செய்வார்" என்பதாகும். அதிலும் சிறப்பு என்னவென்றால் மலா.4:6 இல், மலாக்கி இறைவாக்கினர் கூறும் போது, பெற்றோரின் உள்ளங்களைப் பிள்ளைகளிடத்தும், பிள்ளைகளின் உள்ளங்களை பெற்றோரிடத்தும் திருப்புமாறு செய்வார் என்கிறார். ஆனால் யோவானின் பிறப்பினூடாய் தந்தையரும் பிள்ளைகளும் உளம் ஒத்துப் போகச் செய்வார். (பிதாக்களின் இருதயத்தைப் பிள்ளைகளினிடத்திற்குத் திருப்புவார்) என்கிறார். அப்படியென்றால் பிள்ளைகளிடமிருந்து கற்றுக் கொள்வதற்கும், அவர்களிடமிருக்கும் நல்ல பண்புகளைப் பாராட்டி அவற்றை வாழ்வில் ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாக வேண்டும். யோவானின் பிறப்பைக் குறித்து, முன்னுரைக்கப்பட்டபோது, "இது நடைபெறும் என எனக்கு எப்படித் தெரியும்" என செக்கரியா கேட்டவுடன் செக்கரியா பேச்சற்றவராய் மாறிவிட்டார் (லூக்.1:18-20). ஆனால் பிள்ளைக்குப் பெயரிடும் நேரத்தில் குடும்பத்தவர் பல பெயர்களை கூறியபோதும், எலிசபெத்து தனது கணவரின் மனதிலிருந்த யோவான் என்ற பெயரை முன்கூட்டியே அறிவித்தார். இதனால் யோவானின் தந்தைக்கும் தாய்க்குமிடையே ஏற்படும் உளமொத்த அனுபவம் சிறப்பானதாகும்.

ஒரு கிராமத் திருச்சபையின் அறுவடை விழாவில் அனைத்துக் குடும்பங்களுக்கு சுவையான தின்பண்டங்களுடன் திருச்சபையில் வந்து, தொழுகைக்குப் பின் அதனை அனைவருக்கும் அளித்து மகிழ்வது வழக்கம். ஒருமுறை பகையாளியாகிய அண்ணனும், தம்பியும் தங்கள் சார்பில் சுவையான பதார்த்தங்களை வைத்திருந்தனர். தம்பியின் 10 மற்றும் 6 வயதான இருமகள்களும் தங்கள் பெரியப்பாவின் வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த இனிப்பைப் பெற்று சுவைத்த பிற்பாடு, மூத்தவள் தமது பெரியப்பாவிடம், "பெரியப்பா ... எனக்கு இன்னும் ஒன்று" என்று கேட்கவே, உள்ளமுருகிய பெரியப்பா இரண்டு பிள்ளைகளையும் வாரியணைத்து, உச்சி மோந்து நேராகத் தமது இல்லத்திற்குக் கொண்டு சென்றார். சிறிது நேத்தில் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தமது தம்பியின் இல்லம் சென்றார். நீண்ட கால பகை முறிந்து, உண்மையான உறவு பிறக்க இப்பிள்ளைகள் காரணமாயினர். இயேசு கிறிஸ்துவும், பிள்ளைகளைப்போல் மாறினால் மட்டுமே இறையரசில் நுழைய முடியும் எனக்கூறினார் (மாற். 10:15). பிள்ளைகளிடம் உள்ள சிறந்த பண்புகளான, மன்னிப்பு, களங்கமற்ற

தன்மை, சார்பு நிலை, விட்டுக் கொடுத்தல் போன்றவற்றை அனைவரும் வாழ்வில் தரித்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகளும் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என தூய பவுலார் கற்பிக்கிறார் (எபே. 6:1).

## *2. உலகோரை உன்னதரிடம் திருப்பும்* : (லூக் 1:17)

1780 ஆம் ஆண்டு இராபர்ட் ரெய்க்ஸ் என்னும் இறையடியவரால் இங்கிலாந்தில் தொடங்கப்பட்ட ஓய்வுநாள் பள்ளியின் நோக்கம் "பிள்ளைகளைக் கிறிஸ்துவுக்கு நேராக நடத்துதல்" (Lead the Children To Christ) என்பதாகும். சேற்றில் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகள் சேற்றை ஒருவர் மேல் ஒருவர் வீசி எறிந்து கொண்டிருந்த வேளை, இராபரட் ரெய்க்ஸின் மீது சேறுபட்டது. அமைதியாகச் சென்ற இறையடியவர், "ஒருவன் குற்றவாளியாவதற்கு முன் சிறுபிள்ளையாயிருக்கும் போதே அவனுக்கு நல்வழி காட்டுவது சிறப்பு" என சிந்திக்கலானார். அதன் விளையே ஓய்வுநாள்பள்ளி. உன்னதரின் பாதையில் சிறாரை நடத்த விழைந்தார். இங்கிலாந்தில் தொடங்கப்பட்ட இவ்வியக்கம் இன்ற அகில உலக முழுவதும் வியாபித்திருக்கிறது. சிறாரை மையமாகக் கொண்டு தொடங்கப்பட்ட இந்த ஓய்வுநாட்பள்ளி, பெற்றோர், ஆசிரியர், பெரியோர் என அனைவரையும் உள்ளடக்கி கிறிஸ்துவுக்கு நேராக வழி நடத்துகிறது.

முழுக்கு முனிவர் யோவானும் ஆண்டவர் இயேசுவுக்கு வழியை ஆயத்தப்படுத்தும் பணியை நிறைவேற்றினார். "மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கியுள்ளது" என்று அறைகூவல் விட்டு தம் பணியை நிறைவேற்றினார். திரள் கூட்டமாக மக்கள் கடந்து வந்த போது அவர்களும் நற்செய்தியை விளக்கிச் சொல்லி திருமுழுக்கினூடாய் கிறிஸ்துவண்டை நடத்தினார், அதையே தம்முடைய முழுமையான பணியாக நிறைவேற்றினார் (மத். 3:1-12).

இன்று நாம் கற்கின்ற இடங்களிலும், கடமையாற்றுகின்ற இடங்களிலும் பலரைக் கிறிஸ்துவண்டை நடத்துகின்றகருவிகளாக செயல்பட அழைக்கப்படுகின்றோம். இன்றைய சூழலில் கிறிஸ்துவண்டை அனைவரையும் வழி நடத்த வாழும் சாட்சிகளாக வாழ வேண்டும். வார்த்தையால் கிறிஸ்துவண்டை நடத்துவதை விட வாழ்வினூடாய்க் கிறிஸ்துவுக்கு நேராய் நடத்துவதே சிறப்பானது ஆகும். இதனை பவுலார் திமொத்திக்கு கூறும் போது, ".... பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை, ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன் மாதிரியாய் விளங்கு" (1திமொ 4:12) என்று கூறுகிறார். பக்தர் ஒருவர் தமது பாடல் வரிகளில் "இயேசுவை வாழ்க்கையில் காட்டுங்களே, பேச்சில் அல்ல, செயலில் நல்ல இயேசுவை வாழ்வோராய் காட்டுங்களே...." என்று குறிப்பிடுகிறார்.

### ***3. உன்னதரின் ஆற்றலை வெளிப்படுத்தும்*** : (லூக் 1:17)

யோவான் எனும் குழந்தை “எலியாவின் உளப்பாங்கையும், வல்லமையையும் உடையவராய் அவருக்கு முன் செல்வார் ...” என்று இறைவாக்கினர் முன்னுரைக்கிறார். இறைவாக்கினர் எலியாவின் ஆற்றல் குறித்த செய்திகளைத் திருமறைத் தெளிவாக எடுத்தியம்புகிறது. தனி ஒருவராய் நின்று யாவே தான் வாழும் கடவுள் என்று நிரூபித்தார் (1 அர.18). நாபோத் என்ற குடியானவரை அநியாயமாய் கொன்று போட்ட ஆகாப் அரசரிடம் மிகத்தெளிவாய் அறிவித்தார். “.... என் வாக்கினாலன்றி, வரும் ஆண்டுகளில் பனியோ, மழையோ பெய்யாது” (1அர 17:11). “இஸ்ரயேலரிடையே கலக மூட்டுகிறவன் நானல்ல; நீயும் உன் தந்தையின் வீட்டாரும் தான்...” (1அர.18:18). இத்தகு ஆற்றலைத் தம்மகத்தே யோவானும் கொண்டிருப்பார் என முன்னுரைக்கப்பட்டுள்ளது. இதற்கேற்றார்போல் தம்மிடம் திருமுழுக்கு பெற வருவோரின் பாவங்களைச் சுட்டிக்காட்டி மனம் மாறுங்கள் என்று அழைப்பு விடுத்தார். அநியாய வாழ்வுக்கு எதிராய் (லூக். 3:7-9), பதுக்குதலுக்கு எதிராய் (லூக். 3:11), கையூட்டு பெறுவதற்கு எதிராய் (லூக்.3:11) அவருடைய பணி இருந்தது. அதுமட்டுமல்ல மரணம் வரினும் தமது பணியை உண்மையாய் நிறைவேற்றினார். அரசரிடம் இருந்த தவறான உறவை, அநீதியான வாழ்வைக் கண்டித்ததால் கொலை செய்யப்பட்டார் (மத்.14:1-12)

வாழ்வு என்பது இறைவனால் தரப்பட்டிருக்கும் அற்புதமான ஓர் அனுபவம். அதை இறைவனே தந்திருக்கிறார் என்பதாலேயே திருப்பாடகர் “என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உமது கையில் உள்ளது” என்று குறிப்பிடுகிறார் (திபா. 31:15). ஒவ்வொருவருடைய வாழ்வுக்கும் ஒரு நோக்கம் உண்டு என்பதை மறந்து போகக் கூடாது. இறைஆற்றலைப் பெற்று, நீதியை வெளிப்படுத்தி கடவுளின் திருவிருப்பை நிறைவேற்றி வாழ வேண்டும். இறைஆற்றலைத் தன்னகத்தே கொண்டு வாழும் பிள்ளைகள் ஒரு தேர்வை எதிர்கொள்ளத் துணிவற்று தவறான முடிவெடுப்பதும், தொடர்பு சாதனங்களில் மூழ்கி ஆக்கபூர்வமான செயல்களை புறக்கணிப்பதும், கட்டுப்பாடற்ற வாழ்வு வாழ எண்ணுவதும், சுயபுத்தியில் சாய்ந்து இறைவனைச் சாராது வாழ்வதும் மிகவும் அபத்தமாகும். கடவுள் விரும்பும் பாத்திரங்களாய் வனையப்பட சில கடினமான பயிற்சிகள் கட்டாயமாகும். முழுக்கு முனிவர் யோவான் ஆண்டவருடைய பணிக்காய்ப் பக்குவப்படுத்தப்படும் போது அவரது குடியிருப்பு பாலைநிலம், அவரது உணவு வெட்டுக்கிளி, காட்டுத்தேன், அவரது ஆடை ஒட்டகமயிர் (மத்.3:4), இத்தகைய சூழ்நிலையை ஏதிர்கொள்ளும் போது இறை ஆற்றலைப் பெற்று முன்னேற வேண்டுமேயொழிய முடங்கிப் போய்விடக்கூடாது. எனவே உன்னதரின் ஆற்றலைப் பெற்றவர்களாய் வாழ்வோமாக.

அருள்திரு. A. **பிரைட் சாலோமன்**

13-11-2022

# திராட்சைச் செடியும் - கொடிகளும்

**VINE AND BRANCHES**

எசே 37:15-23 1கொரி 12:12-27
திபா 133 யோவா 15:1-8

**"நானே திராட்சைச் செடி; நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார்."** (யோவா 15:5)

இன்றைய ஞாயிறு சிந்தனையின் தலைப்பு தனித்துவ அடையாளங்களையும் தகர்த்து எறிந்து விட்டு மனித நேயம் என்ற மையப்புள்ளியில் பேதமற்று அனைவரும் கலப்பது. திருச்சபை பயணத்தில் இந்த ஒன்றிப்பு சிறப்பானது. அதுதான் சமூகத்தின் உயர்ந்த இலட்சியம். மனித குலத்தை எது ஒன்றுபடுத்துமே அதுவே நல்லது, மேலானது, அழகானது. எது பிழைத்து சிதைக்குமோ அது கேடானது, தவறானது, இழிவானது என்கிறார் உலக புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் டால்ஸ்டாய். இயேசுவானவர் ஒன்றிப்பு என்ற உண்மையை வெளிப்படுத்த, திராட்சைசெடியும் - கொடிகளும் என்ற உருவகத்தின் வழியும், பவுல் அடிகளார் உடல் என்ற உருவகம் வழியாகவும் விளக்கும் உண்மையை காண்போம்.

## *1. திராட்சைச் செடியும் - கொடிகளும்* : (யோவா 15:5)

நானே திராட்சை செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளை கொடுப்பான். என்னை அல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது.

திராட்சை செடி இஸ்ரவேல் மக்கள் கானானில் நிலையாக குடியிருக்க தொடங்கிய காலத்தில் இருந்து பயிரிட்டு அவர்கள் வழ்வோடு இணைந்த தொழிலாகும். இஸ்ரவேலர் திராட்சை செடி பற்றியும் அதன் வளர்ப்பு முறைகள் எபற்றியும் ஒன்றாக தெரிந்தவர்கள். எனவே தான் இயேசுவுக்கும் சீடருக்கும் உள்ள உறவை சுட்டிக் காட்ட திராட்சை செடியும்-கொடிகளும் என்றும் உருவகத்தை எடுத்து பயன்படுத்துகிறார். இயேசு அரிய கருத்துக்கள் நடைமுறையில் பயன்படுத்தப்படும். பொருட்கள் மற்றும் அன்றாடக வாழ்வோடு தொடர்புள்ளவைகளை கொண்டு விளக்குபவர்.

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர் திராட்சை செடியாக உருவாக்கப்பட்டுள்ளது. எகிப்தினின்று திராட்சை செடி ஒன்றை கொண்டு வந்தீர் சங் 80:8. ஆனால் இங்கு இயேசு தம்மையே திராட்சை செடியாக

ஒப்புமைப்படுத்துகிறார். உண்மையான திராட்சை செடி நானே யோவா 15:1. திராட்சை செடி நன்கு பலன் தர வேண்டுமானால் திராட்சை கொடி திராட்சை செடியோடு இணைந்திருக்க வேண்டும். ஒரு மரத்தின் கிளைகள் அந்த மரத்தோடு இணைந்து இருந்தால் தான் அதுவளரும்-மலரும் கனிதர முடியும். வீட்டில் மின்சார விளக்கு இருந்தாலும் அது மின்சாரத்துடன் இணைக்கப்படாவிட்டால் ஒளிதர முடியாது. கரும்பும் சாறும்போல, மலரும் மணமும் போல, பூவும் நாரும் போல, நகமம் சதையும் போல தண்ணீரும் மீனும் போல, தாமரையும் தண்ணீரும் போல மனித வாழ்வுக்கு மதிப்பு வேண்டுமெனில் இயேசுவோடு இணைக்கப்பட வேண்டும்.

***2. இறையுறவில் இணைதல் அவசியம்*** : (யோவா 15:5)

செடி வழியாக கொடிகள் உணவு சத்தை பெறுவது போல சீடர்களும் இயேசு வழியாக இறையாற்றலை பெற முடியும். திராட்சை செடியின் உயிர் தான் அதன் எல்லா கிளைகளிலுமுள்ளது. செடியுடன் இணைந்திருக்கும் கிளையானது தனக்கு தேவையான சத்தினை செடியில் இருந்து பெற்றுக் கொள்ளும். அதுபோல நாமும் இயேசுவுடன் இணைந்திருந்தால் வாழ்வுக்கு தேவையான சக்தியினை அவரிடமிருந்து பெற முடியும்.

இறையுறவில் இணைவதற்கு இயேசுவே வழிகாட்டியுள்ளார். காலை மாலை இரவு முழுவதும் ஜெபித்ததன் வழியாக அதுவே இறைமக்களின் அனுபவமாகுதல் அவசியம். கிறிஸ்துவில் இணைந்தவர்கள் கிறிஸ்துவை போல் அன்பு செய்து வாழ்கிறவர்கள். நான் என் தந்தையின் கட்டளைகளை கடைபிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என் கட்டளைகளை கடைபிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள் (யோவா 15:10). அவருடைய கட்டளைகளை கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறார். அவரும் அவனில் நிலைத்திருக்கிறார். எனவே தான் பவுல் கூறும்போது “இனிநான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்” உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக .... கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். அதாவது நாம் பெற்றுள்ள திருமுழுக்கின் வழியாக, எனது சதையை உண்டு எனது இரத்தத்தை குடிப்பார் என்னோடு இணைந்திருப்பார் யோவா 6:56. திருவிருந்தில் பங்கெடுப்பதின் வழியாக இணைந்த அனுபவம்.

***3. இறைவனோடு இணைந்து இருப்பவர் நற்கனி தர வேண்டும்*** :

எல்லாம் இறைமைத்துவத்தால் நிறையும் போது அங்கே பாகுபாட்டிற்கு இடமில்லை. சாட்சியம் நிறைந்த கிறிஸ்தவ வாழ்வு,

மனிதநேயம் கலந்த தொண்டுள்ளம், இறையரசின் மதிப்பீடுகள் நிறைந்த வாழ்வியல், ஆன்மீகம், சமூக பணிகளில் வெளிப்படுத்தப்படுகிற உஉஅனுபவம். நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டுள்ளோமென்றால் மிகவும் சிறியவராகிய என் சகோதரனான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதை செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் மத் 25:40. சோர்வு நேரங்களில் சக்தியும், வல்லமையும் பெறுகிற அனுபவம் 'உலகத்தில்' இருக்கிறவர்களிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர் 1யோவா 4:4. தீமைகளும், பிரச்சனைகளும் வாழ்வை கடல் போல் சூழ்ந்து கொண்டாலும் அவற்றை எதிர்கொள்வதற்கான மனவலிமையும், புதிய ஆற்றலையும் பெறுகிறோம்.

### *4. பொதுநலத்தைத் தேடி* :

நாம் வாசிக்க கேட்ட 1கொரி 12-ம் அதிகாரத்தில் பவுலடியாரின் காலத்தில் கொரிந்து திருச்சபையில் யூதர்கள், கிரேக்கர்கள், அடிமைகள், உரிமை குடிமக்கள், பிற இனமக்கள் திருமுழுக்குப் பெற்று தூய ஆவியரின் அருட்கொடைகளையும் பல்வேறு வரங்களையும் பெற்றவர்களாக இருந்தனர். இதன் மத்தியிலும் பல்வேறு கருத்துவேறுபாடுகள் தோன்றி மக்களிடையே ஏற்ற தாழ்வுகள் பெருகியது. இதனை உணர்ந்த பவுலடியார் தூய ஆவியின் வரங்கள் பலருக்கு பல்வேறு வகையில் பனிர்ந்தளிக்கப்பட்டு இருப்பது தன் சொந்த வாழ்வுக்காக அல்ல திருச்சபையின் வளர்ச்சிக்காக என்பதை சுட்டிக் காட்ட விரும்பி நாம் அனைவரம் மறையுடலாகும் அதன் உறுப்புகளாகவும் இருக்கிறோம் என்பதை வலியுறுத்துகிறார். பொது நலத்தை மறந்து, தன்னலத்தோடு வாழுகின்ற மக்களை கிறிஸ்துவின் மறையுடலோடு இணைக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் ஓர் ஒன்றுபட்ட சமுதாயம் காண அழைப்பு விடுக்கிறார்.

உடல் ஒன்று உறுப்புகள் பல ..... எனவே தான் பல உறுப்புகளை உடையதாய் இருந்தாலும் உடல் ஒன்றே 1கொரி 12:12-20. உடலில் உள்ள அனைத்து உறுப்புகளுக்கும் தனித்தனி செயல்பாடும், திறமையும் கொடுக்கப்பட்டுள்ளது. உறுப்புக்கள் அதனதன் நிலையில் அதனதன் செயல்பாடு தெரியாது என்பதை விளக்குகிறது. அதனதன் செயல்பாடு எந்த அளவுக்கு குறிப்பிடத்தக்கதாக இருப்பினும் அந்த உறுப்பு மொத்த எஉறுப்புக்களின் இன்றியமையாததாகவே உள்ளது.

உறுப்புகள் ஒருங்கிணைந்து செயல்படுகின்ற சூழ்நிலையில் ஓர் உறுப்பின் இருப்பு நிலைபொருள் உடையதாகுகிறது. அனைத்து உறுப்புகளும் அதினதின் வேலைகளை சரியாக செய்தால் தான் உடல்

சீராக இயங்க முடியும். நாம் அனைவரும் உறுப்புக்கள் - கிறிஸ்து உடலாக இருக்கின்றார். உறுப்புக்கள் சரியாக இயங்கவில்லையெனில் கிறிஸ்துவாகிய உடல் சரியாக இயங்க முடியாது. "நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய் இருக்கிறோம். ஒருவருக்கொருவர் உடனுறுப்புகளாய் இருக்கிறோம்" உரோ 12:5.

நமது உடலில் உறுப்புக்கள் பலவாறு இருந்தாலும், சீரான வாழ்வுக்கும் உடலின் வளர்ச்சிக்கும் ஒன்றுக்கொன்று துணையாக இருப்பது போல புதிய சமுதாயத்தில் அனைவரும் ஒன்றிணைந்து கிறிஸ்துவின் மறையுடலான திருச்சபையை கட்டி எழுப்ப வேண்டும். அதில் ஒன்றிணைந்து அநீதிகளை அழித்து நீதி தழைக்கவும், வறுமை நீக்கி வளமை நிறையவும், ஏற்ற தாழ்வுகள் நீங்க சமத்துவம் மலரவும், பகைமை நீக்கி அன்பு ஓங்கிடவும் பணியாற்ற வேண்டும். சுயநலம்விட்டு பொது நலம் நோக்கி பயணிக்க வேண்டும். நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஆகவே நாம் சுயநலம் விட்டு பொது நலம் தேடி கிறிஸ்தவ வாழ்வில் நிலைத்திருப்போம்.

அருள்திரு. N. **ஜாண் பெண்டிங்**

# பெண் குழந்தையின் பெருமதிப்பை உறுதி செய்தல்

**AFFIRMING THE WORTH OF THE GIRL CHILD**

எண் 27:1-11 திப 21:7-14
திபா 71:1-12 மாற் 5:35-43

**"சிறுமியின் கையைப் பிடித்து அவளிடம், "தலித்தா கூம்" என்றார். அதற்கு, 'சிறுமி,' உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திடு' என்பது பொருள்"** (மாற் 5:41)

"கடவுளின் படைப்பிலே அனைவரும் சமம்." குழந்தைகள் என்றாலே எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்படுபவர்களாவர். அக, புற, மென்மை கொண்டவர்கள். எப்போதும் துடிப்புடன் அடுத்தடுத்த நிகழ்வுகளுக்குப் பறக்கக்கூடியவர்கள். ஆனால் இன்றைக்கு நம்முடைய சமுதாயத்திலே பெண் குழந்தைகள் எப்படி மதிக்கப்படுகின்றனர்? இன்றைக்கு நிலைமை என்ன? சிட்டுகளாகப் பறக்கத் தொடங்கும் முன்னே சிறகுகள் பாதியிலே ஒடிக்கப்படுகின்றன. அவர்கள் வாழ்வதற்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பெண் குழந்தைகளின் திறமைகள் கூட அனேக இடங்களில் மறைக்கப்படுகின்றன. ஆனாலும் போராடிப் போராடி அவர்கள் ஓய்ந்துபோகின்றனர். இதனால் வாழ்விழந்த நிலையிலே இருக்கும் குழந்தைகளை மீட்டெடுத்து உரிமைகளைப் பெற்றுக் கொடுப்போம். அவர்களின் பெருமதிப்பை இந்த உலகிற்கு எடுத்துச் சொல்லுவோம். திருமறையின் வழியாக அவர்களின் மதிப்பு இந்த உலகிற்கு எப்படிப் பறைசாற்றப்பட வேண்டும் என்பதைத் தியானிப்போம்.

## *1. உரிமையற்ற நிலையில் உரிமையை உறுதிசெய்தல்* :

(எண் 27:1-11)

திருமறையிலே யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் குடும்பத்திலே செலொபுகாதின் புதல்வியர் மோசேயிடம் வந்து எங்களுடைய தந்தை இறந்துவிட்டார். எங்களுக்குச் சகோதரர்கள் இல்லாத காரணத்தினால் தந்தையின் சொத்தில் எங்களுக்கும் உரிமை கிடைக்க வேண்டும் என்று தங்களுக்காக வாதாடி தங்களுடைய உரிமையைக் காத்துக்கொண்டனர். ஒருவேளை அவர்களுக்குச் சகோதரர்கள் இருந்திருந்தால் சொத்தில் அவர்களுக்குப் பங்கு கிடைத்திருக்காது. அப்படிப்பட்ட சமூக மற்றும் குடும்பக் கட்டடைப்பை நம் காலத்திலும் நாம் காண முடியும். எத்தனை குடும்பங்களில் பெண் குழந்தைகளின் மதிப்பை நிலைநாட்டுகின்றார்கள்? இந்தியாவிலும் கூட பெண்களுக்குச் சொத்தில் பங்கு கிடைக்க அரசியலமைப்புச் சட்டம்

வழிவகை செய்தாலும் அது நடைமுறையில் சாத்தியமில்லாத ஒன்றாக உள்ளது. பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் பல உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. கல்வியானாலும், அரசியலானாலும் அவர்களுக்கு உரிமை இல்லை. திருமணம் செய்து கொடுப்பதோடு தங்களின் கடமை தீர்ந்து விட்டது எனப் பல பெற்றோர்கள் நினைக்கின்றனர். இந்த நிலைமை மாற வேண்டும். அதற்கு முதலில் இல்லங்களிலிருந்து சுதந்திரம் பிறக்க வேண்டும். அப்போதுதான் வெளியில் செல்லும் போதும் புது விடியல் பிறக்கும். திருமறையிலே செலொபுகாதின் புதல்வியருக்குத் தந்தையின் சொத்தில் பங்கு கிடைக்க மோசேயும் தலைவர்களும் எவ்வாறு வழிவகுத்தார்களோ, அதே போல நாமும் நம்முடைய பெண் குழந்தைகளின் உரிமையை நிலைநாட்டுவோம். அவர்களின் மதிப்பை இந்த உலகிற்கு எடுத்துரைப்போம்.

***2. வாழ்விழந்த நிலையில் வாழ்வு கொடுத்தல்*** : (மாற் 5:35-43)

மாற் 5:35ஆம் வசனம் முதல் நாம் வாசிக்கும் போது தொழுகைக் கூடத் தலைவர் இயேசுவிடம் என் மகள் சாகும் தருவாயில் இருக்கிறாள். அவளை நீர் குணமாக்கும் என வேண்டிக் கொள்கிறார். அப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே வீட்டிலிருந்து ஆட்கள் வந்து உம்முடைய மகள் இறந்து விட்டாள். இனிப் போதகரைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என வேண்டிக் கொள்கின்றார்கள். இயேசு கிறிஸ்து இதைக் கேட்டவுடனே தொழுகைக் கூடத் தலைவரிடம், "அஞ்சாதீர்; நம்பிக்கை கொள்ளும்" எனக்கூறி அவருடைய வீட்டிற்குச் சென்று இறந்த அந்தச் சிறுமியைப் பார்த்து 'தலித்தாகூம்' எனக் கூறினவுடனே அந்தச் சிறுமியும் எழுந்து நடந்தார். இந்த நிகழ்வினை நாம் வாசிக்கும்போது இறந்து போன சிறுமியை இயேசு கிறிஸ்து எவ்வளவு முக்கியத்துவப்படுத்துகின்றார் என்பதைப் புரிந்து கொள்ளலாம். நம் நாட்டில் பெண் குழந்தைகள் வாழ்விழந்த நிலையிலே இருக்கின்றனர். பிறக்கும் போதே அவர்களை ஏற்றுக் கொள்ளாத நிலையில் தான் பல குடும்பங்கள் காணப்படுகின்றன. வறுமை, வரதட்சணைக் கொடுமை, பாதுகாப்பற்ற நிலை இவைகளால் தான் கருக்கொலை, சிசுக்கொலை அரங்கேறி வருகின்றன. அதற்குத் தப்பும் நம் பெண் குழந்தைகள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுக் கொலை செய்யப்படுகின்றார்கள் (Only one in every three girls, in India, completes school education age-appropriately (U-Dise 2016-17) Out of the 12.15 million children married in India 8.9 million girls and married girls are three times the boys. As per census 2011 there are about 3 million children below age 14 that are married).

மொட்டுகள் மலரும் முன்னே அவை கிள்ளி எறிவதற்கோ, நசுக்கப்படுவதற்கோ அல்ல; இறைவன் படைத்திருப்பது அவை மலர்ந்து

மணம் வீச! அவைகளைக் கிள்ளி எறிய யாருக்கும் உரிமையில்லை. பெண் குழந்தைகள் பிறக்கும் போதே அனைத்துப் பெற்றோர்களுக்கும் ஒரு பயம் தொற்றிக் கொள்கிறது. காரணம், பாலியல் வன்கொடுமை. எங்குமே அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. நம்முடைய சமுதாயம் பெண்களுக்கும், பெண்குழந்தைகளுக்கும் எதிராக மாறிக் கொண்டிருக்கிறது. இன்று பெண் குழந்தைகள் நசுக்கப்பட்டு வருகிறார்கள், கடத்தப்பட்டு பாலியல் தொழிலுக்குத் தள்ளப்படுகிறார்கள். இயேசு கிறிஸ்து அவருடைய இறைப்பணிக் காலத்தில் அனேகரை வார்த்தையால் குணமாக்கினார். ஆனால் உயிரற்ற வாழ்வை இழந்த சிறுமியை நடந்து சென்று கரத்தைப் பிடித்து, சிறுபெண்ணே எழுந்திரு என அழைத்து உயிரைக் கொடுக்கின்றார். அதே போலத்தான் இன்றைக்கு அநியாயமாக வாழ்வை இழக்கும் ஒவ்வொரு குழந்தையின் அழுகுரலும் அவரிடம் போய், அன்று ஆபேலின் இரத்தம் கதறினது போல இறைவனை நோக்கிக் கதறிக் கொண்டிருக்கிறது. இதற்கான பதிலை நாம் தான் சொல்ல வேண்டும். எனவே அவர்களை ஒதுக்கி வைக்காமல் அவர்களை அன்போடு அரவணைப்போம். அவர்களின் வாழும் உரிமையை அவர்களுக்குக் கொடுப்போம்.

பெண் குழந்தைகள் இல்லத்திற்கு அச்சாணியாக இருந்து மகிழ்ச்சியையும் அன்பையும் உருவாக்கும் நீரூற்றுகளாக இருக்கிறார்கள். ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கும் பெற்றோர்கள் அச்சாணியாக இருந்து வேறுபாடற்ற நிலையை உருவாக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் வெளியிலும் சுதந்திரத்தை உணர்வார்கள்! ஒவ்வொரு ஆண் குழந்தைக்கும் பெற்றோர்கள் நல்நண்பராக இருந்து வாழ்க்கையைக் கற்றுக்கொடுக்கும் தருணத்தில் ஒவ்வொரு பெண் குழந்தையும் மேன்மையடைவர், பாதுகாப்பை உணருவர்.

திருச்சபைகளில் பெண் குழந்தைகளை மதிப்போம் சிறுவயதிலிருந்தே தலைமைத்துவப் பணிக்கு ஆயத்தப்படுத்துவோம். அப்போது தான் அவர்கள் சிறந்த தலைவர்களாக வளருவார்கள். அது தான் சமுதாயத்தின் அழகும் கூட. எனவே அவர்களை அரவணைப்போம், ஆதரிப்போம், சம உரிமை கொடுப்போம்.

திருமதி. **டெல்பா ஆல்பர்ட்**

27-11-2022

# கடவுளின் வாக்குறுதிகளைக் கொண்டாடுதல் (எலிசபெத்துடனான மரியாவின் சந்திப்பு)

## CELEBRATING THE PROMISES OF GOD (MEETING OF MARY WITH ELIZABETH)

| | |
|---|---|
| 1 சாமு 2:1-10 | எபி 11:29-40 |
| திபா 66 | லூக் 1:39-45 |

**"நம்பிக்கையினாலேயே இவர்கள் அரசுகளை வென்றார்கள்; நேர்மையாகச் செயல்பட்டார்கள்; கடவுள் வாக்களித்தவற்றைப் பெற்றார்கள்; சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்"** (எபி 11:33).

மனிதரின் வாழ்க்கையை கட்டமைக்கிறதும் கட்டுடைக்கிறதுமான இரண்டு அடிப்படை கட்டமைப்பு உணர்வுகள் உள்ளன. ஒன்று மகிழ்ச்சி; மற்றொன்று துக்கம். இரண்டுமே வாழ்வை கட்டமைக்கவும், கட்டுடைக்கவும் செய்கின்றன. சிறு வயதிலே மகிழ்ச்சியும், துக்கமும் அழகாக வெளிப்படுத்தப்பட்டு விடுகின்றன.

லூக் 1:44 இல் எலிசபெத்தின் வயிற்றிலிருந்த பிள்ளை களிப்பாய் துள்ளினது போல, மகிழ்ச்சியில் சிறுபிள்ளைகள் களிப்பாய் துள்ளி, ஆடி பாடுகிறார்கள். துக்கம் ஏற்படும் போது சத்தமிட்டு அழுது விடுகிறார்கள். ஆனால் வளர்ந்து பெரியவர்களான பின் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா? துக்கமாக இருக்கிறார்களா? என்பதை யாரும் கண்டுவிடிக்க முடியாது.

முற்காலங்களிலே வீடுகளிலே திண்ணை பேச்சு மூலம் பெண்கள் தங்கள் கவலைகளை வெளி கொண்டு வந்தார்கள். ஆண்கள் நண்பர்களிடம் பேசுகிற Tea கடை பெஞ்சுகளிலே தங்கள் மகிழ்ச்சியையும் துக்கங்களையும் வெளியே கொண்டு வந்தார்கள்.

சமீப காலங்களிலே இணையவெளி யுகத்திலே யாருடைய மகிழ்ச்சியையும், துக்கத்தையும் அறிய முடியவில்லை. காரணம், யாரும் முன்பு போல யாரிடமும் வெளிப்படையாக பேசுவதில்லை. தங்களது மகிழ்ச்சியையும் துக்கத்தையும் சமூக வலைதளங்களில் தான் பதிவிடுகிறார்கள்.

அமெரிக்காவின் Venmont பல்கலைகழக மாணவர்களா Peter Dodds, Chris Danforth ஆகிய இருவரும் இவ்வாறு மக்கள் பதிவிடும்

கருத்துக்களிலுள்ள சொற்களை அடிப்படையாக எடுத்து அவர்கள் மகிழ்ச்சியி உள்ளார்களா, துக்கத்தில் உள்ளார்களா என்பதை ஆராய்ந்து கண்டறிய Hedonomenter org என்னும் செயலியை உருவாக்கியுள்ளார்கள்.

திருமறையிலே மரியாள் தன் உணர்வுகளை வெளிப்படுத்த பழைய முறையான உறவினர்களை சந்தித்து அளவளாவுவதையே தெரிந்தெடுத்தார்.

அப்படி வயது முதிர்ந்த நிலையில் தூரமாக மலைநாட்டில் வசித்த தன் உறவுகளான ஆசாரியன் சகரியாவையும் எலிசபெத்தையும் சந்தித்து தன் மகிழ்ச்சியை கொண்டாட சென்றார். ஏமாற்றங்களையும், கடினங்களையும் சோர்வுகளையும் சந்தித்த

- மரியா
- ஆசாரியர் செக்கரியா
- எலிசபெத்து

ஆகியோரின் கொண்டாட்டம் எந்த அடிப்படைகளில் இருந்தது என்பதை தியானிப்போம்.

### *1. ராஜ்யங்களை ஜெயித்தவர்களின் கொண்டாட்டம்* :

(லூக் 1:39,40)

“அந்நாட்களில் மரியாள் எழுந்து, மலைநாட்டிலே யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய், சகரியாவின் வீட்டுக்குள் பிரவேசித்து எலிசபெத்தை வாழ்த்தினாள்.” நற்செய்தி என்பது ஒருவரையொருவர் நல்லாரித்தைகளை வாழ்த்துவதாலும் காபிரியேல் தூதன் செய்த செய்தியை மரியாளும்சொல்கிறார்.

பூமியில் வாழும் போது பூமி பரலோகமாக, ஆண்டவருடைய ராஜ்யமாக இருக்க வேண்டும் என விரும்புகிறோம். ஆனால் இந்த பூமிக்குள்ளே பல ராஜ்யங்கள் இருக்கின்றன. ஏமாற்றுவோரின் ராஜ்யம், வன்முறையாளர்களின் ராஜ்யம், சந்தர்பவாதிகளின் ராஜ்யம், கல்நெஞ்சக்காரர்களின் ராஜ்யம். நாம் பரலோகத்தின் வாழ்த்துக்களை சொன்னாலும், பரலோக ராஜ்யத்தின் குணங்களை அவர்களிடம் பிரதிபலித்தாலும் அவர்கள் தங்கள் ராஜ்யத்திற்குரிய பழக்கவழக்கங்களைக் கொண்டே நம்மை நடத்துவார்கள்.

ஆளற்ற தனிச்சிறு தீவில் மாட்டிக் கொண்டு தவிக்கும் ஒரு நபரை கண்டால், என்ன செய்ய வேண்டும். ஒன்று அவரை தன்னோடு கூட்டிச் செல்ல வேண்டும். இல்லையேல் அவரோடு கூட இருக்க வேண்டும். இரண்டுமில்லாமல் சிரித்துக் கொண்டே கடந்து செல்வது எப்படி

முறையாகும்? சிறுவயதிலேயே தாயையும் தந்தையையும் இழந்த கன்னியான மரியாளை சொந்தங்களோ பந்தங்களோ யாரும் அக்கறையாக பார்த்துக் கொள்ளவில்லை. எல்லாரும் அலட்சியமாக சிரித்துக் கொண்டே கடந்து சென்றார்கள்.

குழந்தையாக பிறந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை-யார் இவர் யாரோ? என அறிமுகப்படுத்தி பாடிய தனது பாடலில் பாகவதர் வேதநாயகம் சாஸ்திரியார்-உலகத்திலேயே (பாரினில்) ஒரு எளிய கன்னிகையின் பாலன் ஆனாரோ! எனப்பாடினார். எளிய இந்த கன்னிகையை எவ்வளவு அவமதிக்க முடியுமோ, அவ்வளவாய் இவ்வுலக ராஜ்யத்தின் மக்கள் அவமதித்தார்கள். எல்லா வளமும் உண்டு, இவள் அவற்றை மறைத்து வைத்து எளியவள் என வேடமிட்டு வாழ்கிறாள் என மனசாட்சியே இல்லாமல் உலகம் தூற்றியது.

ஏழையாய் பிறந்து ஏழையாய் வாழ்ந்த அவளை வரிந்து கட்டிக் கொண்டு விரட்டியது. பரம்பரை சொத்து இல்லாமல் பணி செய்து காக்கும் தந்தையுமில்லாமல், விழுந்தால் உதவ சொந்தம் இல்லாமல், தனியாக வாழ்ந்த கன்னிமரியாள் உலக ராஜ்ஜியத்தின் மனிதர்கள் கொடுத்த அவமானங்களின் நஞ்சு தன் நெஞ்சில் படித்து விடாதபடி அகற்றி, அகம்பாவமான உலக ராஜ்ஜியங்களை ஜெயித்தார்.

பருவ காலங்கள் கூட தங்கள் பருவங்களை மறந்துமோறி போய் விடுகின்றன காற்றுகள் கூட தருணங்களில் தன் திசை மறந்து போகின்றன. ஆனால் கன்னிமரியாள் உலக மக்களின் பல்வேறு சுயநல ராஜ்ஜியங்கள் தந்த வெறுப்புகளை உணர்வசங்களாக தன் ரத்த நாளங்களில் படியவிடவில்லை. தான் ஆண்டவருக்கு அடிமை என தன்னை அர்ப்பணித்து பரலோகத்தின் குடிமக்கள் எனத் தனித்த அடையாளத்தை ஏற்படுத்தி, ராஜ்யங்களை ஜெயித்து வாழ்வை கொண்டாடினார்.

போலி புகழில் மூழ்கியிருக்க விரும்பும் மனிதகுலம் மரியாளிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியதை கற்றுக்கொண்டு விட்டால் உலக ராஜ்யங்கள் தரும் ஏமாற்ற வலிகளை எளிதாக வென்று வாழ்வை கொண்டாடலாம்.

### *2. நீதியை நடப்பித்தவர்களின் கொண்டாட்டம்* :

(லூக் 1:42,43)

(எலிசபெத்து) உரத்த சத்தமாய்: ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது.

சகரியாவையும் எலிசபெத்தையும் குறித்து திருமறையின் பதிவு செய்யப்பட்டுள்ள நற்சாட்சி என்னவென்றால் அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள் (லூக் 1:6).

ஆசாரியனாக பொது வாழ்க்கைக்கு வந்துவிட்ட சகரியாவும், அவர் மனைவி எலிசபெத்தும் நீதிக்கு மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். தாங்கள் மட்டும் பாவம் செய்யக்கூடாது என சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ்ந்து வந்தால் அது சுயநீதியாகிவிடும். சகரியாவும் எலிசபெத்தும் மக்களை பாவங்களின் மயக்கத்திலிருந்து விழித்தெழச் செய்ய வேண்டுமென்னும் அர்ப்பணத்தோடு வாழ்ந்தார்கள்.

பலிபீடத்திற்குள்ளே பலி செலுத்தப் போகும் ஆசாரியனின் காலில் சங்கிலி கட்டி அனுப்புவார்கள். சகரியாவின் காலில் சங்கிலி கட்டப்பட்டிருந்தாலும் பாவ சங்கிலியால் அவரை யாரும் கட்ட முடியவில்லை அந்தளவிற்கு பரிசுத்தமுள்ளவராக சகரியா வாழ்ந்து வந்தார். மக்களிடம் நுகர்வு கலாச்சாரத்தோடு பொருட்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் வேட்கை சிறிதும் இல்லாமல், மக்களின் துன்பங்களில் பங்கேற்று ஆறுதலளித்து சிறந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள் தான் சகரியா எலிசபெத் தம்பதியினர்.

உலகத்திலே எவரிடமும் காணமுடியாத வாழ்க்கையை சகரியாவும் எலிசபெத்தும் வாழ்ந்தார்கள் என்பதையே (லூக் 1:6) பதிவு செய்துள்ளது. பல ஊழியர்களும் தொடக்கத்தில்-நாங்கள் இருக்கிறோம் என நம்பிக்கை தருவார்கள். முடிவில் நான் அப்பொழுதே சொன்னேன் என்பார்கள். ஆனால் சகரியா, எலிசபெத்திடம் வாயின் தாறுமாறுகளோ, மாய்மலமோ இல்லை. தங்களில் கொஞ்சம் நீதி குறையாதபடி, நீதி நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

ஒரு விழாவில் இளைஞர் ஒருவர் தன் பழைய ஆசிரியரை சந்தித்தார். ஆசிரியரிடம் தன்னை தெரிகிறதா எனக் கேட்டார். ஆசிரியரோ எனக்கு நினைவில் இல்லை. நீங்கள் யார் என அறிமுகம் செய்யுங்கள் என்றார். இளைஞர் கூறினார் நான் உங்கள் முன்னாள் மாணவன், நான் ஆசிரியராக பணி செய்கிறேன் உங்களால் தான் நான் ஆசிரியராக வேண்டுமென்ற உந்துதல் பெற்றேன் என்றார். உடனே ஆசிரியர் எப்படி நான் உந்துதல் தந்தேங்ன என்று கேட்டார்.

உடனே இளைஞன் சொன்னார் ஒருநாள் என்னுடைய வகுப்புத் தோழன் மிகவும் விலையுயர்ந்த கடிகாரத்தை அணிந்து வந்தான். அப்படிப்பட்ட ஒரு கை கடிகாரத்தை வாங்குவது என்னுடைய சக்திக்கு

அப்பாற்பட்டது. எனவே அதை திருட நினைத்து அவன் கொஞ்சம் அதை கழற்றி வைத்திருந்த நேரத்தில் எடுத்து விட்டோம் கடிகாரத்தை காணாமல் அவன் ஆசிரியரிடம் புகார் கூறினான். ஆசிரியரும் யாராவது எடுத்திருந்தால் திரும்ப கொடுத்து விடுங்கள் என்றார். நான் கடிகாரத்தை எப்படி திருப்பி கொடுப்பது என சிந்தித்து அமைதியாகி விட்டோம்.

ஆசிரியர் வகுப்பறையின் கதவை மூடச் சொன்னார் எல்லாரையும் வரிசையாக நிற்க சொன்னார். எனக்கு பயமாக இருந்தது. ஆசிரியர் சொன்னார், மணவர்களே நீங்கள் எல்லாரும் கண்களை மூடிக்கொண்டு நில்லுங்கள் என்றார். அவர் ஒவ்வொரு பாக்கெட்டுகளையும் சோதித்துக் கொண்டே சென்றார். என்னிடம் வந்த போது என் பாக்கெட்டிற்குள் கை கடிகாரம் இருப்பதை கண்டு எடுத்துக் கொண்டார். ஆனால் எல்லாரும் கண்களை மூடி இருந்தால் எவரும் எதையும் பார்க்கவில்லை.

பின்னர் அந்த கடிகாரத்தை உரியவரிடம் கொடுத்து விட்டார். ஆனால் அது பற்றி என்னிடம் ஒரு வார்த்தையும் கேட்கவில்லை. வேறு எவரிடமும் இதை பற்றி கூறவுமில்லை. அந்நாளில் நீங்கள் என் மானத்தை காப்பாற்றினீர்கள். என்னை திருடன் என்று திட்டமலிருர்தீர்கள் இது ஆசிரியர் பணியின் உன்னதத்தை எனக்கு கற்பித்தது. இப்பொழுதாவது என்னை தெரிகிறதா என்று கேட்டார்.

ஆசிரியர் எனக்கு நினைவில் இல்லை என்றார். ஏன் தெரியவில்லை என்று கேட்டார் இளைஞர் அதற்கு ஆசிரியர் நானும் அந்த நேரத்தில் அதற்கு கண்களை மூடிக் கொண்டிருக்தேன் என்றார். தன் குற்றம் மறைப்பதும் பிறர் குற்றம் காண்பதும் நீதியல்ல. நீதியை நடப்பித்தால் என்பது பாரபட்சமில்லாமலிருப்பது, தீமையை காணாத சுத்த கண்ணுள்ளவர்களாயிருப்பது, கள்வனை நல்லவனாக்குவது. இது தான் இயேசு கிறிஸ்துவின் நீதி. இதை நடப்பிக்கிறவர்களாக சகரியாவும் எலிசபெத்தும் இருந்தார்கள்.

நாம் சகரியா எலிசபெத் போல நீதியை நடப்பிப்பவர்களாக இல்லை. ஒருமனிதனை / மனுஷியை பார்க்கும் போது முதலாவது எந்த வயதிங்ல அவர்களை பார்த்தோமோ அதே வயதிலேயே அவர்களை நம் மனதில் பதிய வைத்து நடத்துகிறோம். அவர்கள் வளர்ச்சிக்கும் வயதிற்கும் ஏற்றபடி நடத்துவதில்லை. மரியாளை சிறுவயது முதலே அநிர்த எலிசபெத்து, தன்னை காண வந்த மரியாளை சிறுவயது பெண்ணாக நடத்தவில்லை. மரியாளுக்கு உரிய மரியாதையை கொடுத்து எண் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது என்று சொல்லி மரியாளை வரவேற்று கொண்டாடினார்கள்.

நாம் நீதியோடிருக்கும் போது நமது கொண்டாட்டங்களும் நீதியோடிருக்கும். குடும்பம், உறவு, சமூகம், நாடு என ஒவ்வொரு அருக்கிலும் சிதைந்துப் போயிருக்கும் நீதியை சரி செய்வோம். நம் கொண்டாட்டங்கள் சகரியா எலிசபெத்தின் நீதியுள்ள கொண்டாட்டமாக இருக்கட்டும்.

### *3. வாக்குத்தத்தங்களைப் பெற்றவர்களின் கொண்டாட்டம்:*

(லூக் 1:45)

விசுவாசித்தவனே பாக்கிவதி, கர்த்தராலே அவளுக்கு சொல்லப்பட்டவைகள் நிறைவேறும். எலிசபெத்தின் இந்த கூற்று, நாம் பண்டிகையை கொண்டாடுவோராக அல்ல, வாழ்க்கையை கொண்டாடுபவர்களாக இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறது. ஆண்டவரின் வாக்குறுதி எப்படி நமக்கு காப்புறுதி செய்யப்படுகிறது?

'பயப்படாதே' என்னும் வார்த்தையால் அவரது வாக்குறுதி காப்புறுதி செய்யப்படுகிறது. திருமறையில் 365 தடவை இவ்வார்த்தை வருகிறது. வருடத்திற்கு 365 நாட்கள் ஒவ்வொரு நாளுக்கும் ஆண்டவரது வாக்குறுதி இப்படியே நமக்கு தரப்படுகிறது. மரியாளுக்கும் இதுவே வாக்குறுதியாக கொடுக்கப்பட்டது (லூக் 1:30) "மரியாளே, பயப்படாதே நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்."

- நான் உன்னோடு இருக்கிறேன் நீ பயப்படாதே (எசா 41:10)
- நான் உன்னோடு துணை நிற்கிறேன் நீ பயப்படாதே (எசா 41:13)
- உன்னை மீட்டுக் கொண்டேன். நீ பயப்படாதே (எசா 43:1)
- உனக்கு மகா பெரிய பலனுமாய் இருக்கிறேன் நீ பயப்படாதே (தொநூ 15:1)
- உனக்கு உனக்கு வேண்டியபடியெல்லாம் செய்வேன். நீ பயப்படாதே (ரூத் 3:11)
- நீ வெட்கப்படுவதில்லை. பயப்படாதே (எசா 54:4)
- உன் வேண்டுதல் கேட்கப்பட்டது. நீ பயப்படாதே (லூக் 1:13)

கோபத்தில் உரத்த சத்தமாய் சாபமிடும் மனிதர்களின் வார்த்தைகளை கேட்டு கேட்டு கலங்கிப் போயிருந்த மரியாளுக்கு இந்த வாக்குறுதி பெரிய மனவுறுதியையும் கொண்டாடும் களிப்பையும் கொடுத்தது.

தனி நபருக்கென்று வாக்குறுதி எதையும் சமீப காலமாக கொடுக்காமல் கூட்டமாக வாழும் மக்கள் கூட்டத்திற்கு வாக்குறுதியை கொடுக்கும் கடவுள் தன்னை சந்தித்து வாக்குகுறியை கொடுத்தது வானில் சிறக்கடித்து பறப்பது போன்ற ஒரு கொண்டாட்ட மனநிலையை

மரியாளுக்கு ஏற்படுத்தாவிட்டாலும் மனமகிழ்ந்து அதை கொண்டாடினாள்.

உயிர்களை தன்னில் தாங்கும் கடவுளை தான் தன் மடியில் தாங்கப் போகிறோம் என்பதை நினைத்த போது, நிசப்த இருட்டுக்குள் இருந்த மரியாள் தன்னை தாழ்த்தி தன்னை விளக்காக்க கொண்டு கொண்டாடினாள். ஏதோ ஓரிடத்தில் பிறந்து, வளர்ந்து ஒரு வட்ட சுழிக்குள் சிக்கிக் கொள்ளுவது போல வாழ்வை வாழ்ந்து முடிக்க வேண்டிய தனக்கு உலகமெங்கும் பெயர் உச்சரிக்கப்படும் கனம் கிடைக்கிறதே! இது எவ்வளவு பெரிய கனம் என்று மகிழ்ந்து போனாள் மரியாள்.

எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டு முகத்தில் பல சுருக்கங்களோடும், கண்கள் ஒளியற்று, முகம் தளர்ந்து, கன்னங்கள் ஒட்டி வறண்டு போய் உயிர்ப்பில்லா புன்னகையோடு திடமற்ற சத்தமற்ற சன்ன குரலில் பேசி வந்த மரியாளை இந்த வாக்குறுதி உயிர்பித்தப்படியால் நான் தொலைந்து விட்டேன் என்று இருந்த மரியாள், கடவுளால் நான் கண்டுபிடிக்கப்பட்டு விட்டேன் என கொண்டாடினாள். சிறு வயதில் தாயையும் தகப்பனையும் இழந்து என்னில் தான் எத்தனையெத்தனை இழப்புகள்; விழியோரத்தில் கூட ஈரமில்லாத ஒருத்தியாகி விட்டேன் என்று இருந்த மரியாள் இப்போது இழந்ததையெல்லாம் மறுப்படியும் பெறுகிற மகிழ்ச்சியை ஆண்டவரின் வாக்குதத்தத்தால் பெற்று வாழ்வையே கொண்டாடினாள்.

பண்டிகை உலகை இணைக்கிறது. பண்டிகை என்பது கூட்டுணர்வே தவிர தனியுணர்வல்ல. பண்டிகை காலத்திலே மரியாள், எலிசபெத்து சகரியா ஆகியோரிடம் காணப்பட்ட உரையாடல்களும் பகிர்தலும் நமக்கும் அவசியம். பண்டிகையில் நாம் கொண்டாடுகிற ஆண்டவரை வாழ்க்கையில் எப்போதும் கொண்டாடினால் பண்டிகை முடிந்து நாம் திரும்பப் போகும் இயல்புநிலை இல்லாமல் வாழ்க்கையில் எப்போதும் கொண்டாடினால் பண்டிகை முடிந்து நாம் திரும்பப் போகும் இயல்புநிலை இல்லாமல் வாழ்க்கை உன்னத நிலையாக இருக்கும்.

அருள்திரு. **ஜே. பிரகாஷ் நாயகம்**

04-12-2022

**திருவருகைக்காலம் இரண்டாம் ஞாயிறு & விவிலிய ஞாயிறு**

# இறைவாக்கு : இருமுனையுள்ள கூர்வாள்

## WORD OF GOD : DOUBLE EDGED SWORD

எரே 36:1-10 | எபி 4:11-13
திபா 118:89-96 | லூக் 1:5-17

**"கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது; இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது."** (எபி 4:12)

2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஊடகங்களில் பரவலாய்ப் பேசப்பட்டு, எல்லாத் தரப்பு மக்களாலும் கொண்டாடப்பட்டவர் காவல்துறை ஆய்வாளர் ராஜேஷ்வரி. மழையால் மரம் விழுந்து உணர்வற்றுக்கிடந்த இளைஞரை மரித்துப் போனார் என விலகி நின்ற மக்கள் கூட்டத்திலிருந்து உள்ளே வந்த ஆய்வாளர் ராஜேஷ்வரி, சற்றும் தாமதிக்காமல் மயங்கிக் கிடந்த இளைஞரைத் தனது தோளில் தூக்கிக் கொண்டு வந்து ஆட்டோவில் ஏற்றி கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்த்தார். ராஜேஷ்வரியின் இந்தச் செயல் வீடியோவாக இணையம் முழுவதும் பரவியது. பொதுமக்களும், காவல்துறை உயர் அதிகாரிகளும் அவரைப் பாராட்டினர். இதற்கு முன்பும் இதுபோன்ற நற்பணிகளை தொடர்ச்சியாக செய்து வருகின்றார். முதல்வர். திரு. முகஸ்டாலின் அவர்கள் ராஜேஷ்வரி அவர்களை அழைத்து நேரில் பாராட்டி சான்றிதழ் வழங்கினார். இச்செயலை முன்னிட்டு ஊடகங்கள் அவரிடம் இதுபோன்ற செயல்களில் ஈடுபட எது உந்துதல் தந்தது எனக் கேட்டபோது, அவர், "தன் அப்பாவின் படிப்பினை மற்றும் விவிலிய உபதேசம்" என்று கூறினார். விவிலிய வார்த்தைகள் ஆற்றலுள்ளவை. அவை கடவுளின் இயல்பை, பெருநோக்கை, திருவிருப்பத்தை மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தும் ஊடகமாகும். கடவுள் தலைமுறை தலைமுறையாகத் திருமறையின் வழியாக மனுக்குலத்தோடு உரையாடிக் கொண்டேயிருக்கின்றார். மனுக்குலம் திருமறையை அடிப்படையாகக் கொண்டு தங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும் என விரும்புகிறார். ஆனால் நாம் எப்படி திருமறையை அணுகுகிறோம்? Many people want the Bible to point the direction, they want to go rather than the direction the Bible wants them to go. அதாவது மக்கள் திருமறை காட்டும் திசையில் பயணிப்பதை விட, தாங்கள் விரும்பும் திசையில் பயணிக்க, திருமறை வழிகாட்ட வேண்டும். என்று விரும்புகிறார்கள். திருமறையே

நம் வாழ்வின் அடித்தளமாகவும் ஆதாரமாகவும் இருக்க வேண்டும் எபிரேயர் ஆக்கியோன் 4:12-இல் “கடவுளின் வார்த்தை உயிருள்ளது ஆற்றல் வாய்ந்தது. இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது”. என்று இறைவார்த்தையின் இயல்பையும் காலம் கடந்த அதன் இருப்பையும் எடுத்துரைக்கின்றார். இறைவாக்கு எத்தகையது? என்பது குறித்து தியானிப்போம்.

***1. உணர்வூட்டும் இறைவாக்கு*** : (எரே 36:1-10)

எரே 36-44 வரையுள்ள அதிகாரங்கள் துன்பச்சூழலிலும் எரேமியா துணிவுடன் மக்களுக்கு உணர்வூட்டும் வகையில் இறைவாக்குரைத்தது பற்றிப் பேசுகின்றன.

எரேமியா மக்களின் அழிவைக் கண்டு வேதனையடைகிறார். மக்களுக்காகத் துன்புற்றவர் மக்களோடு இணைந்து துன்புறுகிறார். மக்களின் பாவ வாழ்வையும் அதனால் வரும் துன்பங்களையும், மக்கள் படும் வேதனைகளையும் கண்டு, தாமும் துன்புறும் கடவுளின் இயல்பை எரேமியா பிரதிபலிக்கின்றார். மக்களின் பாவங்களுக்கான தண்டனையை முன்னறிவித்த போதிலும் அவர்கள் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என கடவுள் விரும்புகின்றார். அதற்கான முயற்சி தான், எரேமியா சிறையிலடைக்கப்பட்டுள்ள நிலையிலும் ஏட்டுச் சுருளில் இறைவாக்கை எழுதி மக்கள் உணர்வடைய வாசித்துக் காட்டப் பணிக்கிறார். “இறைவாக்கினரைச் சிறையிலடைக்கலாம் இறைவாக்கைச் சிறையிலடைக்க இயலாது.” இதற்கு பவுலாரின் வாழ்வும் இறைவாக்குரைக்கும் பணியும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. அவர் 2திமொ 2:9-இல் நற்செய்திக்காகவே நான் குற்றம் செய்தவனைப் போலச் சிறையிடப்பட்டுத் துன்புறுகிறேன். ஆனால் கடவுளின் வார்த்தையைச் சிறைப்படுத்த முடியாது என்கிறார். தடைகளைத் தாண்டி இறைவாக்கு மக்கள் முன் படிக்கப்படுவதன் நோக்கத்தை எரே 36:7-இல் வெளிப்படுத்துகிறார். மக்கள் ஆண்டவரின் திருமுன் விழுந்து மன்றாடவும், தம் தீய வழிகளை விட்டுத் திரும்பவும் இறைவாக்கு அழைப்புத் தருகிறது.

உணர்வூட்டும் இறைவாக்கைக் கேட்டபோதும் கூட அரசர் யோயாக்கிமோ உணர்வடையவில்லை. மாறாக, இறைவார்த்தை எழுதப்பெற்ற ஏட்டுச் சுருளை நெருப்பிலிட்டு எரித்தார். இருப்பினும் கடவுள் மீண்டும் அதே வார்த்தைகளை இன்னுமோர் ஏட்டுச் சுருளில் எழுதப் பணித்தார். யோயாக்கிமால் ஏட்டுச் சுருளை எரிக்க முடிந்ததே அன்றி இறைவாக்கை மாற்றவோ அழிக்கவோ இயலவில்லை.

இந்தியாவின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பெற்ற சாது சுந்தர்சிங், இளவயதில் திருமறையைத் தீயிட்டுக் கொளுத்தினார். பின்னர் இறைவார்த்தையின் பணியாளரானார். இன்றும் இறைவார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருக்கும் நாம் அவைகளுக்கு முதன்மை தருகிறோமா என்பதை ஆய்வுசெய்ய அழைக்கப்படுகிறோம். எத்தனை வழிபாடுகள், அருளுரைகள், திருமறையின் அறைகூவல்கள் இவைகளால் உணர்வடைந்திருக்கிறோமோ?

எரேமியாவின் இறைவாக்குப் பணி மக்களை உணர்வடையச் செய்தது. இன்றும் இறைவாக்கினால் உணர்வடைந்து திருச்சபையாகிய நாம் இறைவாக்குரைக்கும் பணியைச் செய்ய முன்வர வேண்டும். கடவுளின் வார்த்தை நம்மை தூக்கத்தில் ஆழ்த்தும் தாலாட்டு அல்ல. மாறாக, நம்மை எழுப்பிச் சேயர்ப்படத் தூண்டும் சமிக்ஞை (The word of God is not a lullaby to put us to sleep, but a reveille to wake us up).

### *2. ஊடுருவும் இறைவாக்கு* : (எபி 4:12)

திருமறையில் இறைவார்த்தையைக் குறிக்கப் பல்வேறு உருவகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. "நெருப்பு, சம்மட்டி, கண்ணாடி, காற்று, விதை" என்பனவாகும். எபி 4:12-இல் இறைவாக்கு இருபக்கமும் வெட்டக்கூடிய வாளினும் கூர்மையானது என்கிறார். அது உடலையும் ஊடுருவக் கூடியது உள்ளத்தையும் ஊடுருவக் கூடியது. மருத்துவத்தில் X-ray, C.T. Scan, MRI Scan போன்ற கதிர்களை பயன்படுத்துவார்கள். X கதிர்கள் உடலை ஊடுருவிச் செல்லக் கூடியவை. அதிலும் உயர்ந்தவை C.T. மற்றும் MRI Scan. இவைகளிலும் துல்லியமாகக் கண்டறிய இயலாத நிலைக்கூட உண்டு. உடலை வேண்டுமானால் இவை ஊடுருவிச் செல்லாம். ஆனால் உள்ளத்தை அதன் யோசனையை இறைவார்த்தை ஊடுருவிச் செல்கிறது. திப 38:3 சொல்கிறது, நீர் கடுஞ்சினங் கொண்டதால் என் உடலில் நலமே இல்லை; என் பாவத்தால் என் எலும்புகளின் வலுவே இல்லை. நற்செய்தி உடம்புக்கு உரமளிக்கும் (நீமொ 15:30). கடவுள் தமது வாக்கை அனுப்புவதன் வாயிலாக, அவை நம் உடலிலும் மனதிலும் ஊடுருவி நமக்கு நலமருளுகிறது.

### *3. உயிராற்றல் அளிக்கும் இறைவாக்கு* : (லூக் 1:5-17)

எசே 37ஆம் அதிகாரத்தில், உருவற்று, உலர்ந்து போன எலும்புகள், இறைவாக்கு உரைக்கப்பட்டபோது உருகொண்டு உயிர் பெற்றன. இறைவார்த்தை நம்பிக்கையின்மையில் நம்பிக்கையாகவும், உலர்ந்து, உயிரற்றுப் போன நிலையில் இருப்போர்க்கு உயிராற்றல் அளிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது. புதிய ஏற்பாட்டில் செக்கரியா - எலிசபெத்து

தம்பதியர்இதற்கு உதாரணமாய் உள்ளனர். செக்கரியா-எலிசபெத்து தம்பதியினர் குழந்தை பெறும் வயதைக் கடந்தவர்கள். இனிக் குழந்தை பெற இயலாது எனக் கருதப்பட்டவர்கள். ஆனால் கடவுளின் வார்த்தை அவர்களில் வந்தபோது அசாதாரணமானவை சாதாரணமாக அவர்களுக்குக் கிடைத்தது. கடவுளின் வார்த்தையால் செக்கரியா-எலிசபெத்து தம்பதியினர் திருமுழுக்கு யோவானைப் பெற்றெடுத்தனர்.

திருமுழுக்கு யோவானைக் குறித்து முன்னறிவிக்கும் போது, "பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது" என்கிறார் எசாயா இறைவாக்கினர். திருமுழுக்கு யோவான் இறைவார்த்தையின் சத்தம். இயேசு கிறிஸ்து இறைவார்த்தையின் மானுட வடிவம். திருவருகைக் காலத்தைக் கொண்டாடும் நாம் யோவானை போல இறைவார்த்தையின் சத்தமாக இருக்க வேண்டும். நமது கொண்டாட்டங்கள் அர்த்தமற்ற ஆரவாரமாக இல்லாமல் இறைவார்த்தையின் சத்தமாக இருக்க வேண்டும். வார்த்தை மனுவாகி நம்மிலே வாசம் கொள்ளும் ஆண்டவரை வெளிப்படுத்த வேண்டும்.

அருள்திரு. A. **கால்வின் தேவநேசன்**

11-12-2022

திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு

# இம்மானுவேலின் வாக்குறுதி

**PROMISE OF IMMANUEL**

எசா 7:10-17 | 1பேது 3:8-16
திபா 98 | மத் 1:18-25

**"இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்...இம்மானுவேல் என்றால் 'கடவுள் நம்முடன் இருக்கிறார்' என்பது பொருள்"** (மத் 1:22-23).

இன்றைய நற்செய்திப் பகுதி ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்வுக்குச் சான்று பகர்கிறது. ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கு எசாயா வழியாகப் புதுஉடன்படிக்கையை வாக்குறுதியாக அளிக்கிறார். புதிய உடன்படிக்கை ஒரு புதிய பார்வையல்ல; மாறாக, கடவுள் எப்பொழுதும் இறைமக்களுடன் இருப்பார் என்பதாகும். கடவுள் எப்பொழுதும் நம் கூடவே இருக்க வேண்டுமென்பது ஒவ்வொருவரின் எதிர்பார்ப்பு. ஏனென்றால் இறைவரின் உடனிருத்தல் கிறிஸ்தவர்களின் வாழ்வில் ஓர் உந்து சக்தியைத் தருகிறது. இஸ்ரயேல் மக்கள் மன்னராட்சிக்குத் தாரைவார்க்கப்பட்ட பின்னர் சிறையிருப்பின் அனுபவங்கள் அவர்களுக்கு ஏற்பட்டன. இக்காலத்தில் தங்களை மீட்பதற்கு ஒரு மெசியா தாவீதைப் போல வரவேண்டுமெனக் காத்திருந்தனர். அந்த எதிர்பார்ப்பு எசாயா வழியாக வாக்குறுதியாக உரைக்கப்பட்டது. பின்னர் இவ்வாக்குறுதி மத்தேயு நற்செய்தி நூலில் இயேசு கிறிஸ்துவின் வழியாக நிறைவேறுகிறது. இவ்வாக்குறுதியின் கருப்பொருள் "இம்மானுவேல்" என்பதாகும். இம்மானுவேல் என்பதற்கு "கடவுள் நம்முடன் இருக்கிறார்" என்று அர்த்தமாகும் (எண் 23:21; திபா 46:7; ஆமோஸ் 5:14; மீக் 3:11; செப் 3:15). இம்மானுவேலின் வாக்குறுதியால் என்னென்ன நன்மைகள் நமக்குக் கிடைக்கும் என்பதனைத் திருமறைப் பகுதிகள் வழியாகத் தியானிப்போம்.

### *1. இம்மானுவேலே நீதியை நிலைநாட்டுபவர்* : (திபா 98:9)

இறையாட்சியை எதிர்பார்க்கின்ற இப்பூவுலகில் நீதிக்காக நெடுந்தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. இஸ்ரயேலருடைய வாழ்விலும் அவர்கள் நீதிக்காக நெடுந்தூரம் பயணம் செய்தனர். கடைசியில் இயேசுவின் உயிர்த்தெழுதல் வழியாக அநீதி அழிந்து நீதி மலர்ந்தது. நமக்குத் தரப்பட்டுள்ள 98-ஆம் திருப்பாடலானது கடவுள் அனைத்துலகின் தலைவர் என்பதனைச் சுட்டுகிறது. இந்தத் திருப்பாடல் சிறையிருப்புக்கு முற்பட்ட காலத்தில் எருசலேமில் நடைபெற்ற ஆலய வழிபாட்டில் கடவுளை அரசராகப் புகழும் பாடலாகக் காணப்பட்டது. காரணம் கடவுளை அரசராக நினைத்தனர். கடவுள் இந்த உலகை

நியாயம் தீர்ப்பதற்கு வருவார் என்கின்ற எண்ண ஓட்டமும் மக்கள் மத்தியில் நிலவியது. கடவுளின் அரசுரிமையில் அடங்கும் மீட்பின் தன்மையானது இங்கு உருவகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே நம்மை மீட்கின்ற இம்மானுவேல் அநீதிக்கு எதிராக நீதியான தீர்ப்பிடுவார். ஆகவே, நீதி செய்வதால் வரும் துன்பங்களைக் கண்டு பயப்படாமல் துணிவுடன் வாழவேண்டும். உலகில் நீதியின் பொருட்டு துன்புறும் மக்களுடன் கூட்டொருமை கொள்ளவேண்டும். உலகில் நீதிக்காக அலைக்கழிக்கப்படும் மக்களுக்கு இம்மானுவேலாகிய கடவுள் உதவி செய்வார் என்கின்ற நற்செய்தி இவ்விடம் எடுத்துரைக்கப்படுகிறது. ஆக இம்மானுவேலாக இருக்கின்ற கடவுளே நீதியை நிலைநாட்டுபவர் என்பதனை மறந்துவிட வேண்டாம்.

***2. இம்மானுவேலே நல்வாழ்வருளுபவர்*** : (எசா 7:14)

எசாயா ஏழாம் அதிகாரம் இம்மானுவேலைப் பற்றிய இறைவாக்குறுதியின் ஒரு பகுதியாகும். இந்தப் பகுதி மெசியாவின் வருகை எப்படிப்பட்டது? என்பதனை எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ளது. இயேசுவின் பிறப்பிற்குமுன் ஏறக்குறைய 700 ஆண்டுகளுக்கு முன்னால் ஆகாசு என்ற மன்னர் யூதாவை ஆட்சி செய்து வந்தார். இவர் உருவ வழிபாட்டில் அதிக ஆர்வம் கொண்டவர். ஆர்வமிகுதியில் தன்மகனையே அந்தச் சிலைக்குப் பலிகொடுக்கத் தயாரானார். இச்சூழலில் ஒரே கடவுளை வழிபடுகின்ற மக்கள் ஆகாசுவின் செயலைக் கண்டு வெறுப்படைந்தனர். காரணம், இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட பத்துக் கற்பனைகளில் முதல் இரண்டு கற்பனைகளை மீறுவதாக இச்செயல் காணப்பட்டது (விப 20:1-6). மன்னர் நெறிதவறியதால் மக்களின் வாழ்வெல்லாம் அழிந்து போகக் கூடிய நிலை ஏற்பட்டது. ஏனென்றால் இரட்சின் என்னும் சிரியா நாட்டு அரசரும், இராமலியாவின் மகன் பெக்கா என்னும் இஸ்ரயேல் நாட்டு அரசரும் யூதாவுக்கு எதிராகப் போர்தொடுத்து அதை வீழ்த்த முற்பட்டனர். மேலும் சிரியா எப்பிராயிமோடு கூட்டணி அமைத்துக்கொண்டது என்ற செய்தி அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதாவது பெருங்காற்றினால் காட்டு மரங்கள் அலையதிர்வு கொள்வதுபோல், ஆகாசுவின் உள்ளமும் அவர் நாட்டின் மக்களின் உள்ளங்களும் அலைக்கழிக்கப்பட்டன. இப்போது எசாயா வழியாக அஞ்சாதே, இம்மானுவேல் நம்மோடிருக்கிறார் என்ற வாக்குறுதி கொடுக்கப்படுகிறது. ஆனால் ஆகாசு அதைப்பொருட்படுத்தவில்லை. தனது திறமையில் நம்பிக்கை வைத்து அசீரிய அரசரிடம் உதவியை நாடுகிறார். அதேநேரத்தில் மக்கள் கடவுளைத் தொடர்ந்தார்கள். மக்களைக் காக்கும்படி கடவுள் எசாயாவை அனுப்பி ஆகாசு நம்பும்படி ஓர் அடையாளம் தரப்படும் எனச் சொல்கிறார். இவ்விடம் கடவுளின் விருப்பம் என்னவென்றால் எல்லாரும் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதாகும்.

### *3. இம்மானுவேலின் வாக்குறுதி துன்பத்திலும் உள்ளத்தை அழகுபடுத்தும்* : (1பேது 3:14)

நீதிக்காகத் துன்பம் அனுபவிக்க அஞ்சவேண்டாம். கிறிஸ்து உங்கள் உள்ளத்தில் ஆண்டவராக ஆளட்டும், அப்போது உங்கள் உள்ளம் துன்பத்திலும் அழகுபடும். இங்கு பேதுரு, இயேசுவின் போதனை முறையைக் கையாளுகிறார். நீதியின் பொருட்டுத் துன்புறவேண்டியிருப்பினும் நீங்கள் பேறுபெற்றவர்களே. யாருக்கும் நீங்கள் அஞ்சி நடக்கவோ மனம் கலங்கவோ வேண்டாம். எனவே நம்முடனிருக்கின்ற இம்மானுவேலின் நீதியானது துன்பத்திலும் மகிழ்வைத் தருகிறது. இயேசு கிறிஸ்து தம்முடைய மலைப்பொழிவில் சொல்லும்போது, நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது (மத் 5:10). இந்த உலகத்தில் நீதி கிடைக்கக் காலத்தாமதமாகலாம். ஆனால் இறைநீதி வெளிப்படும்போது அது துன்பத்திலும் உள்ளத்தை அழகுபடுத்தும்.

### *4. இம்மானுவேலின் வாக்குறுதியே நிறைவான மகிழ்ச்சி* : (மத் 1:22,23)

“இம்மானுவேல் என்ற பெயரையும் இயேசு என்ற பெயரையும் இணைத்து மத்தேயு பதிவு செய்கிறார். அப்படியானால் இயேசு கிறிஸ்துவினால் வரும் மீட்பு கடவுள் நம்மோடு இருப்பதன் மூலமாக ஏற்படும் மீட்பு என்பது தெளிவாகிறது. இஸ்ரயேல் மக்கள் காணாமல் போன ஆடுகள், மேய்ப்பனில்லாத மந்தையென மத்தேயு நற்செய்தியாளர் விளக்குகிறார். எனவே அப்படிப்பட்ட அலைந்துபோன மக்களுக்கு நிறைவான மகிழ்ச்சியைக் கொடுப்பதற்காகக் கடவுள் நம்முடனிருக்கிறார் என்கின்ற செய்தி தரப்பட்டது. அங்கே நின்ற வீண்மீனைக் கண்டதும் அவர்கள் மட்டில்லாப் பெரும் மகிழ்ச்சியடைந்தார்கள் (மத் 2:10). வானதூதர் அவர்களிடம், அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் (லூக் 2:10) என்றார். இம்மானுவேலின் வாக்குறுதியே நிறைவான மகிழ்ச்சியைத் தருகிறது.

தற்காலச் சூழலில் பெருந்தொற்று நோய்கள், காரிருள் போன்ற அனுபவங்கள் இவைகளால் நம் வாழ்வு நம்பிக்கையற்றுப் பட்டுப்போன மரத்தைப் போலக் காணப்படலாம். ஆனாலும் இம்மானுவேலின் வாக்குறுதியானது எப்போதும் “நம்முடனிருப்பேன்” என்பதாகும். இம்மானுவேலின் வாக்குறுதி இறைமக்களின் வாழ்வை சந்தன மரமாக, மல்லிகைப் பூக்களாக, ரோஜா பூக்களாக பிறருக்கு வாசனையைக் கொடுக்கும் ஒன்றாக மாற்றும்.

அருள்திரு. அறிவர் K. **பிறின்ஸ்குமார்**

# ஆயத்தம்: ஆண்டவர் வருகிறார்

## PREPARATION : THE LORD IS COMING

மீக் 4:1-5 | 1யோவா 4:7-21
திபா 126 | யோவா 4:21-37

**"கடவுள் இருப்பது போல் நாமும் இவ்வுலகில் இருக்கிறோம். எனவே தீர்ப்பு நாளில் உறுதியான நம்பிக்கை கொண்டிருப்போம்"** (1யோவா 4:17).

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, ஒரு ஜப்பானிய பேரரசர் ஒரு பறவையை வரைவதற்கு ஒரு ஓவியரை ஏற்படுத்தினார். பல மாதங்கள் கடந்துவிட்டன. வருடங்களும் ஆயின. எனினும், அரண்மனைக்கு எந்த ஓவியமும் கொண்டுவரப்படவில்லை. மிகவும் கோபமடைந்த பேரரசர் விளக்கம் கேட்பதற்காக நேரடியாக ஓவியரின் வீட்டுக்குச் சென்றார். பேரரசர் அவரிடம் ஓவியத்தை பற்றி கேட்டவுடன் சாக்குப் போக்கு செல்வதற்கு பதிலாக, வர்ணம் தீட்டும் நிலைச்சட்டம் ஒன்றில் வரைதிரை (Canvas) ஒன்றை வைத்தார். ஒரு மணி நேரத்திற்குள் அவர் ஒரு அற்புதமான ஒரு பறவையின் ஓவியத்தை வரைந்தார். தாமதத்திற்கான காரணத்தை பேரரசர் கேட்டபோது, ஓவியர் அவருக்கு இறகுகள், தலை மற்றும் கால்களின் வரைபடங்களைக் காட்டினார். ஓவியத்தை முடிப்பதற்கு இவைகளை குறித்த ஆராய்ச்சியும், ஆயத்தமும் தேவை என்று கூறினார். தீர்ப்பு நாளில் ஆட்வரைச் சந்திப்பதற்கு இவ்வுலகில் நாம் ஆயத்தத்துடன் வாழ்வது அவசியம் என 1யோவா 4:7-21 வரையுள்ள திருமறைப்பகுதி கூறுகின்றது. இந்த பகுதி கூறும் மூன்றுவித ஆயத்தங்களை நாம் இன்று தியானிப்போம்.

### *1. தனிநபராக ஆயத்தம்* (Internal Preparation) : (1யோவா 4:13-15)

இயேசுவே இறைமகன் என ஏற்று அறிக்கையிடுபவரோடு கடவுள் இணைந்திருக்கிறார்; அவரும் கடவுளோடு இணைந்திருக்கிறார் (வ.15). தந்தை தன் மகனை இவ்வுலகுக்கு அனுப்பி நம்மை மீட்டிருக்கிறார் (வ.14) என்ற நம்பிக்கை ஒவ்வொரு தனிநபருக்கும் இருக்க வேண்டியது ஆண்டவரை சந்திப்பதற்கான அடிப்படை ஆயத்தம் என யோவான் கூறுகிறார். கிறிஸ்து எனப்படும் மேசியா வரும்போது அவர் அனைத்தையும் அறிவிப்பார் என்று சமாரியப் பெண் நம்பியிருந்தார் (யோவா 4:25). தன்னோடு பேசிக் கொண்டிருப்பவரே மேசியா என்று அறிந்தவுடன் (யோவா 4:26) அவரை மேசியா என அறிக்கை செய்கிறார் (1யோவா 4:29).

ஜெனரல் லூ வாலஸ் (Lew Wallace) ஒரு நாத்திகர். இராணுவ ஜெனரலாக இருந்த இவர் இலக்கிய மேதை இராபர்ட் இங்கர்சோலுடன் (Robert Inqersoll) இணைந்து கிறிஸ்தவத்தை என்றென்றும் அழிக்கும் ஒரு நூல் ஒன்றினை எழுத ஒப்புக் கொண்டனர். கிறிஸ்தவத்தை அழிக்கும் தகவல்களை சேகரிப்பதற்காக ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் முன்னணி நூலகங்களில் திரு. வாலஸ் இரண்டு ஆண்டுகள் படித்தார். அவரது புத்தகத்தின் இரண்டாவது அத்தியாயத்தை எழுதும்போது, அவர் திடீரென்று முழங்காலில், "என் ஆண்டவரும் என் கடவுளும்" என்று கூக்குரலிட்டார். தான் கண்ட ஆதாரங்கள் மிகவும் உறுதியானவை. இயேசு கிறிஸ்து யூதர்களின் மேசியா, உலக இரட்சகர் என்று சொந்த மீட்பர் என்ற முடிவுக்கு வந்தார். ஆண்டவரை சந்திக்க, அவரை நமது உள்ளங்களில் ஏற்று அயத்தமாக இருக்கிறோமா?

***2. பிறரோடுள்ள ஆயத்தம்*** (External Preparation) : (1யோவா 4:7,8,11)

கிறிஸ்துவை ஏற்று ஆயத்தத்துடனிருப்போரிடம் நிலவ வேண்டிய இரண்டாவது ஆயத்தம் பிறரோடு அன்பு பாராட்டுதல் கடவுள் நம்மீது அன்பு கொண்டுள்ளதுபோல நாமும் ஒருவர் மற்றவர் மீது அன்புகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம் (1யோவா 4:17). கடவுளின் அன்பை ருசித்த சமாரியப் பெண் தம் குடத்தை விட்டு விட்டு ஊருக்குள் சென்று மக்களிடம் நான் செய்த எல்லாவற்றையையும் என்னிடம் சொன்ன மனிதரை வந்து பாருங்கள் என பிறரும் மேசியாவைச் சந்திக்கும்படி ஆயத்தப்படுத்துகின்றார் (யோவா 4:28,29).

திருத்தூதுவர் யோவானது வாழ்வின் இறுதியில் நடைபெற்ற ஒரு கதை உள்ளது. அவர் எபேசுவிலுள்ள ஒரு அலயத்தில் போதகராக இருந்த போது மிகவும் வயதானவராக இருந்தார். அவரால் நடக்க முடியவில்லை. எனவே, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அத்திருச்சபையார் அவரை ஒரு நாற்காலியில் தூக்கி வந்து சபையின் நடுவில் அமர வைப்பர். அவர் சபைக்குச் சொல்லும் ஆலோசனைகளைக் கேட்டு சபையார் கிறிஸ்துவுக்குள் பெலப்பட்டு வந்தனர். ஒரு கட்டத்தில் அவர் 'ஒருவர் மற்றவர் மீது அன்பு கொள்ளுங்கள்' (Love one another) என்று தொடர்ச்சியாக அருளுரையில் கூறி வந்தார். சில வாரங்கள் இந்த போதனையே தொடர்ச்சியாக கூறி வந்ததால் ஒரு பெரியவர் அவரிடம், "யோவான் அவர்களே! நீங்கள் கூறுவது ஒரு சிறந்த செய்தி. ஆனால், நாங்கள் வேறு எதாவது உங்களிடமிருந்து கேட்க வேண்டாமா" என்று பணிவுடன் கேட்டார். அதற்கு யோவான் "இந்தப் பாடத்தை நாம் கற்றுக்கொண்ட பின்பு தான் அடுத்த பாடத்திற்கு செல்ல முடியும்" என்று பதிலளித்தார். பிறரோடு அன்புகொள்வது தான் ஆண்டவரை சந்திக்க நாம் செய்யும் இரண்டாவது ஆயத்தமாகும்.

***3. சமூக ஆயத்தம்*** (Social Preparation) : (1யோவா 4:20-21)

ஆண்டவர் வருகைக்காக நாம் வாழும் சமூகத்தை ஆயத்தப்படுத்துவதும் கிறிஸ்தவனின் கடமையாகும். கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் பொய்யர் என 1யோவா 4:20 கூறுகின்றது. திருப்பாடல்கள் 126:4 இல் கடவுள் சீயோனின் அடிமைநிலையை மாற்றும்படி விண்ணப்பம் வைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு பதிலாக மீகா 3ஆம் 4ஆம் அதிகாரங்களில் மீகா இறைவாக்கு உரைக்கிறார். இஸ்ரவேல் குடும்பத்தார் தங்கள் சகோதர சகோதரிகளோடு அன்பு கொண்டு, நீதி செய்து (மீகா 3), கடவுளைத் தேடுகையில் சீயோனின் அடிமை நிலை மாற்றப்படும் (மீகா4) என உறுதியளிக்கிறார். சமூக தீமைகளை அகற்றி ஆட்வருக்காக வழியை ஆயத்தம் செய்வதை ஏசாயா தெளிவாக கூறுகின்றார். பள்ளங்களை நிரப்பி, மலைகளையும், குன்றுகளையும் தாழ்த்தி, கோணலானவற்றை நேராக்கி, கரடு முரடானவற்றை சமதளமாக்க (ஏசா 40:4) அவர் ஆண்டவரின் மக்களை அழைக்கிறார்.

கடவுளின் மனிதராகிய பில்லி கிரகாம், "திருச்சபை கடவுளின் உடல் மட்டுமல்ல, கலங்கரை விளக்காகவும் இவ்வுலகில் திகழ்கிறது எனவே, உலகின் இருளை அகற்றுவது அதன் கடமை என்கிறார்." ஒருமுறை அவர் டெக்சாஸ் மாகாணத்தில் 75,000 பேர் கலந்து கொண்ட கண்வென்ஷன் கூட்டத்தில் அருளுரைக்கு முன்பு அனைவருக்கும் ஒரு தீப்பெட்டியினை வழங்கும்படி ஏற்பாடு செய்தார். அருளுரையின் நடுவில் விளக்குகளை அணைக்கக் கூறி அவர்கள் தீக்குச்சியினை எரியச் செய்து 1 செக்கன்ட் மட்டும் வைத்திருக்கும்படி கூறினார். பின்னர் அவர்களுக்கு அருளுரையாற்றுகையில் விளக்குகள் அணைக்கப்பட்ட போது நம்மைச் சூழ்ந்திருந்த இருள் உலகின் இருள் போன்றது என்றும், நாம் ஒவ்வொருவரும் ஒளியை ஏற்படுத்த முடியும் என்பதை செயல்முறையில் விளங்கச் செய்தார். சமூகத் தீமைகளைக் களைந்து உலக கிறிஸ்துவுக்கு ஆயத்தப்படுத்தும் பணியில் நாம் பங்கு கொண்டிருக்கிறோமா?

ஆண்டவரின் வருகைக்காக உலக ஆயத்தம் செய்வதற்காக கிறிஸ்து இவ்வுலகில் மானிடராக வந்தார். அவர் நமக்கு அளித்துள்ள மீட்பை ஏற்று நம்மை தினிநபராக ஆயத்தம் செய்வதும், பிறரோடுள்ள உறவில் சரியாக இருந்து, வெளிப்பட ஆயத்தமுடையோராயிருப்பதும், சமூகத் தீமைகளைக் களைவதில் பங்கேற்று சமூக ஆயத்தமுடையோராயிருப்பதும் நமது கடமையாகும்.

அருள்திரு. முனைவர். A. **இராயப்பன் ஐசக்**

24-12-2022

# கடவுளுக்கே மாட்சி உரித்தாகுக

## GLORY TO GOD

எசா 52:7-10 தீத்து 3:4-8
திபா 148 லூக் 2:1-14

**..."உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக!"** (லூக் 1:13,14)

மாட்சி என்ற சொல்லுக்கு தமிழ் இலக்கிய அகராதியில் மாட்சிமை, நன்மை, பெருமை ஆகிய வார்த்தைகள் அர்த்தங்களாகத் தரப்பட்டுள்ளன. 'கடவுளுக்கே மாட்சி உரித்தாகுக' என்றால் இறைவர் செய்த நன்மை, அவரது அருமை பெருமைகளை உயர்த்துவது (உயர்த்திக் கூறுவது) எனலாம். மேலும், இறைவர் தம் மாட்சிமையை அவரது படைப்பிலும் வெளிப்படுத்தியிருக்கின்றார். திபா 19:1இல் 'வானங்கள் இறைவரின், மாட்சிமையை வெளிப்படுத்துகின்றன; வான்வெளி அவர்தம் கைகளின் வேலைப்பாட்டை விவரிக்கின்றது' என்றும், எசாயா 6:3இல் 'மண்ணுலகம் முழுவதும் அவரது மாட்சியால் நிறைந்துள்ளது' என்று சேராபீன்கள் கூறினதும் இதை உறுதி செய்கின்றன. அதுமட்டுமல்லாமல், இறைவர் தம் சாயலில் படைத்த மனிதர்களும் தம்மை மாட்சிமைப்படுத்த வேண்டும் என்று விருப்பம் கொள்ளுகின்றார். திபா 22:23இல் 'ஆண்டவருக்கு அஞ்சுவோரே அவரைப் புகழுங்கள். யாக்கோபின் மரபினரே, அனைவரும் அவரை மாட்சிமைப்படுத்துங்கள்...' என்ற திருவசனத்தின் வழியாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. எனவே, மனிதரும், அனைத்துப் படைப்புகளும் ஆண்டவரை மாட்சிமைப்படுத்தி வாழவே அழைக்கப்பட்டுள்ளோம். இறைவரை எப்படி மாட்சிமைப்படுத்தலாம் என்பதை விவிலியப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்கலாம்.

### *1. மாட்சியைப் புதுப்பிக்கிறவர்க்கே மாட்சி உரித்தாகுக* :
(எசா 52:7-10)

இச 10:21-இல், "அவரே (யாவே ஆண்டவர்) இஸ்ரயேலரின் புகழ்ச்சி, அவரே உங்கள் கடவுள்! உங்கள் கண்கள் கண்ட ஆற்றல்மிகு அச்செயல்களை உங்களுக்காகச் செய்தவர் அவரே" என இஸ்ரயேலரைப் பார்த்து மோசே கூறுகிறார். இதிலே இஸ்ரயேலரின் மாட்சி ஆண்டவரே என்று அறிய முடிகின்றது. எசாயா 51:17-52:6 வரையுள்ள பகுதி எருசலேமுக்கான கவிதையாகும்.

எருசலேம் ஆண்டவரது புனித நகரம். அவரது ஆலயம் அங்கு உள்ளது. எனினும் எருசலேமில் வாழ்ந்த மக்கள் அழிவைக் கண்டார்கள். அதற்குக் காரணமாயிருந்தது அவர்கள் கடவுளுக்கு விரோதமாகச் செய்த பாவமே. அந்தத் தேசமும், மக்களும் தங்கள் மாட்சிமையை இழந்து நிற்கின்றார்கள். இந்தச் சூழ்நிலையில் தான் இங்கே ஆண்டவர் எருசலேமின் மாட்சியைப் புதுப்பிப்பதாக உறுதி கூறுகிறார். துன்புறும் அவருடைய மக்களை அவர் மீட்பார். எதிரிகள் இனிமேலும் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்த விடமாட்டார். அவர்களது தற்பெருமையை அவர் தகர்த்து விடுவார்.

குறிப்பாக, எசா 52:7-12 வரையுள்ள வசனங்கள் இஸ்ரயேலுக்கான ஆண்டவரின் நற்செய்தியை விளக்குகின்றது. 7ஆம் வசனத்தில், "நற்செய்தியை அறிவிப்பவருடைய பாதங்கள் எத்துணை அழகானவை" என்கிறார் எசாயா. அதன் அர்த்தம், ஆண்டவரின் மீட்பின் நற்செய்தியைச் சுமப்போரின் பாதங்கள் அழகு என்பதாகும். மேலும், கடவுளின் நற்செய்தியைக் கேட்பதினால் மக்களிடையே அக்களிப்பும் ஆரவாரமும் ஏற்படுகின்றன (வ.8). அத்தோடு ஆண்டவருடைய மீட்பைக் காண்பார்கள் என்ற செய்தி அவர்களுக்குப் புத்துயிர் கொடுக்கிறது (வச 9-10). ஆண்டவரே முன்னின்று எருசலேமுக்குத் தமது மக்களைக் கூட்டி வந்ததன் மூலம் அவர் தம் மீட்பை அவர்களுக்குக் காட்டுவார். இங்ஙனம், இஸ்ரயேலரின் மாட்சிமையைப் புதுப்பிக்கிறவரே எல்லா மாட்சியும் பெறுவார் (வ 13).

இந்தக் கிறிஸ்துப் பிறப்பு ஆயத்த நாளில் நாம் இழந்த மாட்சிமையைப் புதுப்பிக்கிறவரின் ஆட்சிக்கு நம்மைத் தந்து புதுப்பிக்கப்பட்ட வாழ்வைப் பெறுவோம். அத்தோடு, இந்த நற்செய்தியை அனைவருக்கும் சொல்வோம். அதனால் இறைவர் தம் மாட்சிமையை விளங்கப்பண்ணுவார், அவருக்கே எப்போதும் மாட்சி உரித்தாகும்.

### *2. மாட்சியுடன் பிறந்தவர்க்கே மாட்சி உரித்தாகுக* :

(லூக் 2:13)

மாட்சி என்ற வார்த்தைக்குத் திருமறையில் 'ஆண்டவரின் பண்பு' என்றும் 'ஆண்டவரைப் புகழ்வது' என்றும் அறிந்து கொள்ளலாம். இதை ஆண்டவரின் பண்பாகச் சிந்திக்கின்றபோது யோவான் நற்செய்தி நூல் 1ஆம் அதிகாரம் 14ஆம் வசனத்தில், "அவரது மாட்சியை நாங்கள் கண்டோம். அருளும், உண்மையும் நிறைந்து விளங்கிய அவர் தந்தையின் ஒரே மகன் என்னும் நிலையில் இம்மாட்சியைப் பெற்றிருந்தார்" என்று

குறிப்பிடுகின்றார். இதிலே தந்தையாகிய கடவுளின் மாட்சிமையின் முழு வடிவமாய் மகனாகிய இயேசு கிறிஸ்து திகழ்ந்தார் என்பது தெளிவாகிறது. மேலும், 'ஆண்டவரைப் புகழ்வது' என்று லூக்கா நற்செய்தி நூல் 2:13-ஐ சார்ந்து சிந்திக்கின்றபோது "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக என்பதின் பொருள், உயர்வான இடத்தில் வசிக்கும் ஆண்டவருக்கு உயர்வான மாட்சி உரித்தாகட்டும் என்பதாகும்." ஏனென்றால், அவரே தமக்கு ஒத்த மாட்சியை உடைய தம் மகனைப் பூமிக்கு அனுப்பியவர்.

பிரபல தமிழ்ப் பேச்சாளரும், எழுத்தாளருமான தமிழருவி மணியன் அவர்கள் "ஊருக்கு நல்லது சொல்வேன்" என்ற தமது புத்தகத்தில் 'புகழுக்கும் விளம்பரத்துக்கும்' உள்ள வேறுபாட்டைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"காலத்துக்குச் சவால் விட்டு நிற்பது புகழ்; வானத்தில் சிறிது நேரம் வர்ணஜாலம் காட்டி மறையும் வானவில் போன்றது விளம்பரம்."

இதற்கு அவர் தரும் விளக்கம் : விளம்பரம் நிரந்தரம் இல்லாதது. ஆனால் புகழ் நிரந்தரமானது. மேலும் விளம்பரம் கரவொலி மற்றும் கூட்டத்தைச் சார்ந்து வாழும்; ஆனால் புகழ் என்றும் மக்கள் உள்ளத்தில் வாழ்வதாகும்.

கிறிஸ்துப் பிறப்பில் அவர் ஒருவருக்கே மாட்சிமையைச் செலுத்த வேண்டும். அதற்கு மாறாக, கிறிஸ்துப் பிறப்புக்குத் தொடர்பில்லாத "கிறிஸ்துமஸ் மரம், கிறிஸ்துமஸ் தாத்தா, ஆடம்பர அலங்காரங்கள்" ஆகியவற்றின் வழியாக விளம்பரம் செய்வது அர்த்தமுள்ள கிறிஸ்துப் பிறப்பு ஆகுமா? சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

"கடவுளுக்கே மாட்சி உரித்தாகுக." இன்றும் நமது வாழ்வின் மாட்சியைப் புதுப்பிக்கிறவர்க்கே, "நற்செய்தியாக மாட்சியுடன் பிறந்தவர்க்கே" என்றும் மாட்சி உரித்தாகுக. நமது வாழ்வின் சொல்லும், செயலும் அனைத்தும் அவர் ஒருவருக்கே மாட்சியை உருவாக்கட்டும் (1கொரி 10:31).

அருள்திரு. **வின்சிலோ G. ஷேபர்**

25-12-2022

# கிறிஸ்துப் பிறப்பு: அருளின் மேல் அருள்

**CHRISTMAS: GRACE UPON GRACE**

| | |
|---|---|
| இச 6:1-9 | எபே 2:4-9 |
| திபா 20 | மத் 2:13-23 |

**"நீங்கள் அந்த அருளாலேயே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள். இது உங்கள் செயல் அல்ல; மாறாக இது கடவுளின் கொடை"** (எபே 2:8).

இறையருள் (Grace of God) என்பது கடவுள் தாமாகவே விருப்பம் கொண்டு மனித குலத்திற்குக் கொடையாக அளிக்கின்ற இறை அன்பையும் இரக்கத்தையும் குறிக்கும். இக்கொடையானது மனிதர் செய்யும் செயல்களுக்குக் கைம்மாறாகக் கிடைப்பது அல்ல; மாறாக, கடவுளின் தாராள மனதால், அவரது சொந்த விருப்பப்படி, மனிதரின் தகுதியின்மையைப் பாராமல் வழங்கப்படுகின்ற கடவுளின் கொடை ஆகும். இது கடவுள் மனிதர்மீது கொண்டுள்ள பரிவு, கனிவுடைமை ஆகியவற்றின் வெளிப்பாடாகும். கடவுளின் கட்டளைகளை மீறி, தீச்செயல் புரியும் மனிதரின் பாவங்களைக் கடவுள் மன்னிப்பதன் வழியாகத் தம் மீட்பை மனிதருக்கு வழங்கும்போது அங்கே வெளிப்பட்டு நிற்பது கடவுளின் அருள் ஆகும்.

கடவுளின் அருள் உலகில் வெளிப்பட்ட மாபெரும் வரலாற்று நிகழ்வுதான் கிறிஸ்து பிறப்பு. மரியாள் இயேசு கிறிஸ்துவைப் பெற்றெடுத்ததால் கடவுளின் அருளை மிகுதியாய்ப் பெற்றார் (லூக் 1:28). இந்த உலகத்தில், உலக மக்களை இயேசு கிறிஸ்து சந்தித்ததால் உலகம் இறையருளைப் பெற்றது. இதை யோவான் நற்செய்தியாளர், இவரது நிறைவிலிருந்து நாம் யாவரும் நிறைவாக அருள் பெற்றுள்ளோம் என்கிறார் (யோவா 1:16). கிறிஸ்துப் பிறப்பு வாயிலாக நமக்கு வெளிப்படுத்தப்பட்ட இறையருளின் சிறப்பைக் குறித்து திருமறையின் வெளிச்சத்தில் தியானிப்போமாக.

## *1. வார்த்தையால் வாழ்வை வெளிச்சமாக்கும் இறையருள்*

(இச 6:9)

இறைவார்த்தை என்பது வாழ்வுதரும் ஒளியாகக் கூறப்பட்டுள்ளது. என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு; என் பாதைக்கு ஒளியும் அதுவே எனத் திருப்பாடலாசிரியர் இதை விளக்குகிறார் (திபா 119:105). இஸ்ரயேல் மக்களுக்குக் கடவுள் கொடுத்த திருச்சட்டத்திற்கு இணையான

சட்டங்களின் விளக்கத்தில் மக்களிடம் முதன்மையாகக் கடவுள் எதிர்பார்ப்பது அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகும். இத்திருமறைப்பகுதியில் இஸ்ரயேல் மக்களிடம் தம் வார்த்தைகளைக் கடைப்பிடிக்க கடவுள் வலியுறுத்துகிறார். இஸ்ரயேல் மக்களும், அவர்கள் பிள்ளைகளும், பிள்ளைகளின் பிள்ளைகளும், ஆண்டவருக்கு அஞ்சி அவர் கட்டளையிட்ட எல்லா நியமங்களையும் கட்டளைகளையும் வாழ் நாள் முழுதும் கடைப்பிடிக்கக் கூறுகிறார் (6:2) மேலும், இறைவார்த்தையைப் தங்கள் உள்ளத்தில் பதித்து வைத்து, பிள்ளைகளின் உள்ளத்தில் பதியுமாறு சொல்ல வேண்டும் எனவும், வீட்டில் இருக்கும்போதும், வழிப்பயணத்தின்போதும், படுக்கும்போது, எழும்போதும் அவற்றைப் பற்றிப் பேசவேண்டும் எனவும், கையில் அடையாளமாக அவற்றைக் கட்டிக்கொண்டு, கண்களுக்கிடையே அடையாளப்பட்டமாக வைக்க வேண்டும் எனவும், வீட்டின் கதவு நிலைகளிலும் நுழை வாயில்களிலும் அவற்றை எழுத வேண்டும் எனவும் வலியுறுத்திக் கூறுகிறார் (6: 69). இவ் இறைவார்த்தையைக் கடைப்பிடித்தால் இறையருள் வெளிப்பட்டு வாழ்வு ஒளிமயமாக மாறும். கடவுள் வாழவைக்கும் இடத்தில் நெடுநாள் வாழ்ந்து, நலம் பல பெற்று மேன்மேலும் பெருகும் ஒளிமயமான வாழ்வு இறையருளின் வெளிப்பாடாகும் (6:2,3).

கிறிஸ்துப் பிறப்பை மனுவுருவேற்றல் (Incarnation) என யோவான் நற்செய்தியாளர் வாயிலாக அறியலாம். (யோவா 1:14). வார்த்தையாய் இருந்தவர் மனுவுருவேற்றதை விளக்கும்போது, வார்த்தையானவர், அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி எனக் குறிப்பிடுகிறார் (யோவா 1:9). மனிதராய் வந்த இந்த வார்த்தை நம்மிடையே தங்கினார். இவர் இறையருள் நிறைந்து விளங்கியவர். இவரது மாட்சியை இவ்வுலகம் கண்டது (யோவா 1:14). வாக்கு மானிடரானதன் வாயிலாக வெளிப்பட்ட இறையருளால் மனித வாழ்வு ஒளிமயமானது.

## *2. மீறுதலினின்று மீட்பளிக்க வரும் இறையருள்*

(எபே 2:4-9)

குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் மீட்கப்பட்டிருப்பது அந்த அருளாலேயே (எபே 2:5).

திருச்சபையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய மார்ட்டின் லுத்தர் உள்ளிட்ட சீர்திருத்தவாதிகள் வலியுறுத்திய சீர்திருத்தத்திற்கான ஐந்து தூண்களில் அருள் மட்டுமே (Grace alone) நம்பிக்கை மட்டுமே (Faith alone) என்பவை உள்ளடங்கும். மனிதரால் மனிதருக்கு அருள் வழங்க முடியாது என்றார் லுத்தர். அருள் கடவுளிடமிருந்து கிடைப்பதாகவும் அதை எந்த ஒரு மனிதரும் சக மனிதருக்கு வழங்க முடியாது என்றும் போதித்தார். அதாவது, தூய ஆவியாரின் செயலால் இறையருளால்

மட்டுமே பாவத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு மீட்பைப் பெற்றுக் கொள்ள முடியுமென்று வலியுறுத்தினார். மேலும், உரோமையர் திருமுகத்தில் உள்ள தூய பவுலின் போதனையான தொடக்கம் முதல் கடைசிவரை விசுவாசத்தினால் மட்டுமே ஒருவர் கிறிஸ்துவுக்குள் நீதிமானாக்கப்படுகிறார் என்ற உண்மையை ஆணித்தரமாக உரைத்தார்.

எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர். ஆயினும், அனைவரும் கிறிஸ்து இயேசு நிறைவேற்றிய மீட்புச் செயலின் மூலம் கடவுளுடைய அருளால் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகின்றனர் (உரோ 3:23,24). ஆகவே, மனிதர் விரும்புவதாலோ அல்லது உழைப்பதாலோ மீட்பின் செயல் நம்மில் நிறைவேறுவதில்லை; மாறாக, கடவுள் இரக்கம் காட்டுவதாலேயே, அவர் தரும் அருள் வழியாகத்தான் எல்லாம் ஆகிறது என்பதை உணர வேண்டும் (உரோ 9:16). மனந்திரும்புகிற பாவி இறையருளால் நம்பிக்கையின் வழியாக மட்டுமே கிறிஸ்துவுக்குள் நீதிமானாக்கப்படுகிறார். நீங்கள் அந்த அருளாலேயே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள் என்பது தூய பவுலின் கூற்று (எபே 2:8).

மனுக்குலம், வான்வெளியில் அதிகாரம் செலுத்தும் தலைவனுக்கு ஏற்ப வாழ்ந்து, கடவுளுக்குக் கீழ்ப்படியாத மக்களிடையே தீய ஆற்றலுக்குப் பணிந்து நடந்து, உடலும் மனமும் விரும்பியவாறு வாழ்ந்து பாவத்துக்கு அடிமையானது. கடவுளையும், அவரது வார்த்தையையும் புறந்தள்ளி, அவரது கட்டளைகளை மீறி பாவங்களிலே இறந்ததாயிருந்த நம்மைக் கடவுள் தம் அருளால் மீட்டிருக்கிறார். எனவே, இறையருள் மீட்பைத் தருகிறது. கிறிஸ்து பிறப்பில் வெளிப்பட்ட இறையருள் நமக்கு மீட்பைக் கொண்டு வருகிறது. இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளிதரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது என்பது கிறிஸ்துவின் பிறப்பில் வெளிப்படும் இறையருள் வழியான மீட்பின் வாக்குறுதியாகும் (லூக் 1:78,79).

### *3. துரத்தப்பட்டாலும் தொடர்ந்துவரும் இறையருள்*

(மத் 2:13-23)

துரத்தப்படுதல் என்பது வலி மிகுந்த அனுபவம். பறவைகளும், விலங்கினங்களும் மனிதரால் துரத்தப்படுகின்றன. மனிதரும் உடன் வாழும் மனிதரைத் துரத்துகின்றனர். சொந்த ஊரிலிருந்து வேறொரு ஊருக்கு துரத்தப்படுதல், சொந்த நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குத் துரத்தப்படுதல் என்பது ஒருவரை அழிப்பதற்குச் சமம். இஸ்ரயேல்

மக்களைக் கடவுள் தம் மக்களாக நடத்தினார். ஆனாலும் அவர்கள் அன்னியர்களால் துரத்தப்பட்ட சூழல் ஏற்பட்டன. ஆனால், கடவுள் அவர்கள்மீது அருள்கூர்ந்து அவர்களுக்கு மறுவாழ்வளித்தார். காணாமல் போனதைத் தேடுவேன்; அலைந்து திரிவதைத் திரும்பக்கொண்டுவருவேன் என்பது இஸ்ரயேலருக்குக்கான கடவுளின் வாக்குறுதியாகும் (எசே 34:16)

இயேசு கிறிஸ்து பிறந்தவுடன் துரத்தப்படும் வலிமிகுந்த சூழல் உருவானது. ஏரோது அரசன் காலத்தில் பெத்லகேமில் இயேசு பிறந்தார். அப்போது கிழக்கிலிருந்து எருசலேமுக்கு வந்த ஞானிகள், யூதர்களின் அரசராகப் பிறந்த இயேசுவை வணங்க வந்திருப்பதாக ஏரோதுவிடம் கூறியபோது ஏரோது கலங்கினார். ஞானிகளை அனுப்பிவிட்டபின்பு, குழந்தையாகிய இயேசுவைக் கொல்ல வகைதேடினார். எனவே, ஆண்டவருடைய தூதர் யோசேப்பிடம், மரியாளையும் குழந்தையையும் எடுத்துக்கொண்டு எகிப்துக்கு தப்பிச்செல்ல அறிவுறுத்தினார். அதன்படி அவர்கள் இரவிலேயே எகிப்துக்குத் தப்பிச்சென்றனர். ஏரோதுவின் கொடிய குணத்தால் துரத்தப்பட்ட நிலை இயேசுவுக்கும் வந்தது. ஆனாலும், இறையருள் அவரைப் பின்தொடர்ந்தது. எகிப்திலிருந்து என் மகனைஅழைத்து வந்தேன் என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறியது என துரத்தப்பட்ட இயேசுவைத் பின்தொடர்ந்த இறையருளைக் குறித்து மத்தேயு நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார் (மத் 2:15).

இறையருள் எல்லா நேரங்க்களிலும் நம்மைப் பின்தொடருகிறது என்பதை நாம் உணரவேண்டும். நீ வானத்தின் கடையெல்லைவரை துரத்தப்பட்டிருந்தாலும், உன் கடவுளாகிய ஆண்டவர், அங்கிருந்து உன்னைக் கூட்டிச் சேர்ப்பார். ஆண்டவர் அங்கிருந்து உன்னை அழைத்துக் கொண்டு வருவார் என்பது கடவுள் தம் அருளால் அனைவரையும் அரவணைப்பதற்கான வாக்குறுதி (இச 30:4).

நம்மைச் சந்தித்து, நம்மோடு குடிகொண்டு, நம்மைக் கடவுளின் பிள்ளைகளாக மாற்றிட கடவுளின் மகன் நம்மைப் போல ஒருவராக, சாதாரண மனிதராக மாறினார். மனிதரைக் கடவுளின் தன்மைக்குக் கொணர்ந்திட கடவுளே மனிதரைத் தேடி வந்தார் என்னும் ஆழ்ந்த உண்மையைக் கிறிஸ்துப் பிறப்பு நமக்கு உணர்த்துகிறது. கிறிஸ்துவின் பிறப்பால் நாம் அருளின்மேல் அருள் பெற்றோம். இறையருள் கடவுளின் வார்த்தையால் நம்மை வெளிச்சமாக்குகிறது; இறையருள் நம்முடைய மீறுதலினின்று மீட்பு தர வருகிறது; நாம் துரத்தப்பட்டாலும் இறையருள் நம்மைப் பின்தொடர்ந்து வருகிறது என்பதைப் புரிந்துகொண்டு, கிறிஸ்து பிறப்பின்வழி இறையருளைச் சொந்தமாக்குவோம்.

அருள்திரு. T.P. **ஸலீம் தங்க குமார்**

31-12-2022

# வாருங்கள் ஆண்டவர் நல்லவர்

**COME THE LORD IS GOOD**

நாகூ 1:1-5 1பேது 2:1-10
திபா 34:1-10 யோவா 7:37-39

**“ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்”** (திபா 34:8).

ராண்டி ஆல்கோன் (Randy Alcorn) என்ற எழுத்தாளர் எழுதிய ‘If God is Good’ என்ற நூலில் இடம்பெறும் நிகழ்வு இது. ஆண்டவர் மீது ஆழமான நம்பிக்கைக் கொண்டிருந்த பெண்மணி ஒருவர் இருந்தார். இவர் நாள்தோறும் ஆலயத் தொழுகைக்குச் செல்வார். அருளுரையில் சொல்லப்படும் கருத்துக்களை இயன்றவரைக் கடைப்பிடித்து வாழ்வார். இவர். “ஆண்டவர் எப்பொழுதும் நல்லவர்” என்ற வார்த்தைகளை அடிக்கடி உச்சரிப்பார். இதைக்கேட்டு இவருக்கு நெருக்கமாக இருந்த தோழிகள், “அது எப்படி ஆண்டவர் எப்பொழுதும் நல்லவராக இருக்க முடியும்?” என்று இவரைக் கேலி செய்வார்கள். இவர் அதைப் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. திடீரென்று ஒருநாள் இவருக்குப் புற்றுநோய் இருப்பது தெரிய வந்தது. செய்தியறிந்த இவருடைய தோழிகள் சிலர் இவரைப் பார்க்க வந்தார்கள். அவர்கள் இவரோடு பேசிக்கொண்டிருக்கையில், ஒருவர் இவரிடம் அடிக்கடி நீ, “ஆண்டவர் எப்பொழுதும் நல்லவர்” என்று சொல்லிக்கொண்டு இருப்பாயே இப்பொழுது உனக்கு புற்றுநோய் வந்துவிட்டது. இனிமேலும் உன்னால் அந்த வார்த்தைகளைச் சொல்ல முடியுமா? என்றார். அதற்கு இவர், “ஏன் சொல்ல முடியாது? எனக்குப் புற்றுநோய் வந்த பிறகு ஓர் உண்மையை மிக ஆழமாக உணர்கிறேன். அது என்னவெனில், எனக்குப் புற்றுநோய் வந்த பிறகு ஆண்டவர் என்னைக் கைவிட்டுவிடவில்லை. அவர் என்னை முன்னின்று வழிநடத்துகின்றார் என்பதுதான். அதனால் நான் எப்பொழுதும் போல், “ஆண்டவர் எப்பொழுதும் நல்லவர்” என்று சொல்வேன் என்றார்.

ஆம், ஆண்டவர் இப்பொழுதும் எப்பொழுதும் நல்லவர். அதனால் அவரை ஆர்ப்பரித்து வாழ்த்த வேண்டும். ஆண்டின் கடைநாளில் இந்த ஆண்டு முழுவதும் நம்மை பாதுகாத்து, வழிநடத்திய மூவொரு கடவுளை நினைவுகூர்ந்து நன்றியை ஏறெடுக்கவும், புதிய ஆண்டை புத்துணர்வோடும், புதிய நம்பிக்கையோடும், புதிய ஆன்மிக பயத்தோடும் துவங்க வந்திருக்கிறோம். இந்நிலையில் கடவுள் நம் வாழ்வில் நல்லவராக இருந்து எவ்வாறு வழிநடத்தினார் என்பதைச் சிந்திப்போம்.

### *1. அறியாமையின் அழிவில் உயிர்மீட்சி* (நாகூ 1:1-5)

மகாநகரமாகிய நினிவே சீக்கிரத்தில் அழிந்துப்போகும் என்று யோனா இறைவாக்குரைத்தார். நினிவேயின் மக்கள் தங்கள் தீமை நிறைந்த வாழ்விலிருந்து மனம் மாறினார்கள். இதனால் ஆண்டவர் அவர்களை அழிக்காமல் விட்டுவிட்டார். தங்கள் தீமைகளிலிருந்து மனம் மாறின நினிவேயின் மக்கள் மீண்டும் தீமை நிறைந்த வாழ்வுக்கு துணைப்போனார்கள். அவர்களுடைய பழைய வாழ்வைக் காட்டிலும் வாழ்வு மிகவும் மிகவும் மோசமாயிருந்தது. இச்சூடிலில் தான் என்கோசைச் சார்ந்த நாகூமுக்கு ஆண்டவர் தம் வார்த்தையை வெளிப்படுத்தினார். மனிதருக்காக மனஸ்தாபப்பட்டார். நினிவேக்கு அழிவு வரும். நினிவேயின் மனிதர் அழிவுக்கு தப்ப இயலாது எனவும் கூறினார்.

நாகூம் இறைவாக்குரைக்கும் போது, ஆண்டவர் எப்படிப்பட்டவர், அவருடைய தன்மை எத்தகையது (நாகூ 1:28) என்பதை விவரித்தார். காரணம் நினிவேயின் மக்கள் ஆண்டவரைக் குறித்து அறியாதவர்களாக, தீமை நிறைந்த வாழ்வுக்கு துணைநின்று தங்கள் வாழ்வில் அழிவைச் சம்பாதித்துக் கொண்டனர். ஆகவே தான் ஆண்டவரின் தன்மைகளை விவரித்தார். ஆண்டவர் பழி வாங்குபவர், சினம் கொள்பவர், மிகுந்த ஆற்றலுள்ளவர், நீதியுள்ளவர் எனக்கூறி அவர் நல்லவராகவும், துன்ப நாளில் காவலாளராகவும் இருக்கிறார். மக்கள் அறியாமையின் இருளில் வாழ்ந்துக் கொண்டிருந்தாலும், அழிவை தாங்களாகவே தேடிக் கொள்ளக்கூடாது, அவர்கள் வாழ்வு அழிவிலிருந்து உயிர்மீட்சி அடைய வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தார். ஆதலால் தான், ஆண்டவர் நல்லவராக இருந்து துன்பநாளில் காவலராகவும், அவரிடம் அடைக்கலம் புகுந்தோரை அவர் அறிவார் என நாகூம் இறைவாக்குரைத்தார்.

நமது வாழ்விலும் அநீதிகளும், அக்கிரமங்களும் அறியாமையின் வாழ்வுக்கு நேராக அழைத்துச் சென்று அழிவை எதிர்நோக்கியிருக்கலாம். ஆனால் ஆண்டவர், நமது வாழ்வு அழிவைக் காணவொட்டாமல், உயிர்மீட்சியை சொந்தமாக்க நல்லவராக செயல்படுகிறார். ஆகவே அவரை அறிந்து, அடைக்கலமான வாழ்வைச் சொந்தமாக்குவோம்.

### *2. அழியா வாழ்வுக்கு ஆன்மிக எழுச்சி* (1பேது 2:1-10)

வாழ்வில் சோதனைகளும், வீழ்ச்சிகளும் வரும்போது தடுமாறுகிறோம், ஆன்மிக வாழ்வில் குன்றிபோகிறோம். தீமைகளுக்கு துணை போகிறோம். ஆனார் வீழ்ச்சியடைந்த வாழ்வில் ஆண்டவர் நல்லவராக இருந்து புத்தாக்கம் மற்றும் ஆன்மிக எழுச்சியை அருளுகின்றார். ஆகவே நாம் அவரை சுவைக்க ஆயத்தமாக வேண்டும்.

திருத்தூதுவராகிய பேதுருவின் அறிவுரை ஆன்மிக வாழ்வின் புத்தாக்கத்துக்கு நேராய் வழி நடத்துகிறது. அவர் கூறும் போது, தீமை, வஞ்சகம், வெளிவேடம், பொறாமை, அவதூறு ஆகிய அனைத்து குணங்களும் (1பேது 2:2) வாழ்வின் எழுச்சிக்கு தடையாக இருக்கிறது. எனவே இறைமக்களாகிய நாம் இறைவார்த்தையாகிய பாலை அருந்த ஆர்வமுள்ளவர்களாக இருக்க வேண்டும். அது தான் ஆன்மிக வாழ்வு எழுச்சியடைய துணைச் செய்கிறது என்கிறார்.

நம்முடைய வாழ்வில் எதை நாடினோம்? தீய வாழ்வையா? தூய வார்த்தைகளா? தூய வார்த்தையாகிய வசனமே நம்மை அழியா வாழ்வுக்கு நேராய் நடத்துகிறது. ஆகவே இறைவார்த்தையால் நம் ஆன்மிக வாழ்வில் தடம் பதிப்போம்,

## *3. அன்றாட வாழ்வில் ஆவியாரின் இறையாட்சி*

(யோவா 7:37-39)

அன்றாட வாழ்வில் உணவு, உடை, உறைவிடம் மனித வாழ்வுக்கு தேவையானதாக காணப்படுகிறது. இதில் ஒன்று குறைந்தாலும் வாழ்வு தடுமாற்றம் அடைவதுண்டு,

இயேசு கிறிஸ்துவின் போதனையைக் கேட்ட யூத மதத்தலைவர்கள் கடுங்கோபம் கொண்டார்கள், மக்களில் பலர் அவரை அசட்டைச் செய்தார்கள், ஆனால் அவர்கள் மத்தியில் இயேசு நின்றுக் கொண்டு, என்னிடம் நம்பிக்கைக் கொள்ளுங்கள். அப்பொழுது உள்ளத்திலிருந்து வாழ்வு தரும் தண்ணீர் ஆறாய் பெருக்கெடுத்து ஓடும் என அறைக்கூவல் விடுத்து, ஆவியாரின் மாட்சியை வெளிப்படுத்தினார், காரணம் ஆண்டவரே வாழ்வின் ஆதாரம். தேவைகளை சந்திப்பவர். அவர் மீது நம்பிக்கைக் கொண்டவர்களுக்கு எந்தக் குறையும் இல்லை.

நம்முடைய வாழ்விலும் ஆண்டவரில் நம்பிக்கைக் கொண்டு, அவர் வழியாய் தேவைகளைச் சந்திக்க ஆயத்தமாவோம், ஆவியாரின் மாட்சியை வாழ்வில் சொந்தமாக்குவோம்.

ஒரு வருடத்தை நிறைவுச் செய்து புதிய ஆண்டை எதிர்நோக்கும் இந்த வேளையில், இந்த ஆண்டு முழுவதும் வாழ்வில் நேரிட்ட துன்பங்கள் மத்தியில், ஆண்டவர் நல்லவராக இருந்து நம்மை நடத்தின சூழல்களை நினைந்து நன்றிச் சொல்லுவோம். வாழ்வில் உயிர்மீட்சியையும், ஆன்மீக எழுச்சியையும், இறைமாட்சியையும் வெளிப்படுத்தும் நல்லவராக ஆண்டவர் செயல்படுவார் என்ற நம்பிக்கையோடு புதிய ஆண்டில் அடியெடுத்து வைப்போம். இறையாசி நம்மில் தங்கட்டும்.

திரு. M.R. **மில்ட்டன் மார்க்**

# புதிய மாத நன்றித் தொழுகை அருளுரைகள்

01-02-2022

# வழியை அறியச்செய்யும் ஆண்டவர்

திபா 16:11

**“வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர்; உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு; உமது வலப்பக்கத்தில் எப்போதும் பேரின்பம் உண்டு.”**
(திபா 16:11)

நிலப்பிரபு ஒருவர் சில நூறு ஆண்டுகளுக்கு முன் சீனா நாட்டில் இருந்தார். பல ஏக்கர் நிலம் கொண்ட அவர் விவசாயம் செய்து வாழ்ந்து வந்தார். ஒரு நாள் மலைச் சரிவில் இருந்த தனது தேயிலைத் தோட்டத்தை, மலை மேல் இருந்த தனது வீட்டின் மேல் தளத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது தூரத்தில் ஆழிப்பேரலை (Tsunami) வருவது அவரது கண்ணுக்கு தெரிந்தது. சரிவில் வாழ்ந்து வந்த குடும்பங்களையும், வேலையாட்களையும் காப்பாற்றும் நோக்கில் தேயிலை தோட்டம் முழுவதும் தீயிட்டு கொழுத்தினார்.

இதை கவனித்த மக்கள் மலையில் ஏதோ பிரச்சனை என்று மேலே ஓடிவந்தனர். மக்கள் வந்த பிறகே பேரலையும் வந்தது. மக்களை காப்பாற்ற வேண்டியே தனது தோட்டத்தை தீயிட்டார் என்பதை பார்த்த மக்கள் அனைவரும் நிலப்பிரபுவுக்கு நன்றி கூறினார். அவரும் இது எனது கடமை என்று சாந்தமாய் கூறினார். அத்துடன் அந்த அரசன் கூறியது, “ஆண்டவர் தான், நான் தினமும் ஏறெடுக்கும் இறைவேண்டலுடட்ன கூடிய நல்வாழ்வின் மூலமாகவே உங்களை காப்பாற்றிடும் வழியை அறியச் செய்யும் ஆண்டவராய் என் மூலம் செயல்பட்டார்.” ஆம்! மக்கள் அனைவரையும் அழிவில் இருந்து காப்பாற்ற தன் தோட்டத்தையே தீயிட்டுக் கொழுத்திய நிலப்பிரபு போல், நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் மக்கள் அனைவரும் வாழ்வு பெற வேண்டி தன் உயிரையே தந்தார்.

இத்திருப்பாடல் இஸ்ரயேலரின் வாழ்வுக்கு நம்பிக்கையூட்டி நல் வாழ்வினை தரும் பாடல் என்று கருதப்படுகிறது. இம்மக்கள் கண்ட கடவுள், மனிதன், உலகம், மறு உலக வாழ்வு, கடவுள் மனித தொடர்பு, தத்துவ உண்மைகள், அவர்களின் வாழ்வு சூழலிலே பெறும் திருப்பங்கள் இவை காலத்திற்கு ஏற்ப மாறுபட்ட தன்மையது எனினும், இஸ்ரயேல் சமூகத்தின் இறையனுபவ முயற்சியே வெளிப்படுத்தப்படும் உண்மையாய் புலப்படுகின்றன.

வழியை அறியச் செய்யும் ஆண்டவர் எந்நிலையில் உடன் பயணிக்கிறார் என்பன குறித்து தியானம் செய்வோம்.

***1. வழியாகிறார்:*** திபா 16:11

"வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர்"

வழி என்பதற்கு எபிரேயத்தில் டெரெக் (Derek) ஓரா (Orah) என்ற சொற்களும், கிரேக்கத்தில் ஹொடோஸ் (Hodos) என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது. வாழ்வின் வழியை நான் அறியச் செய்யும் என்ற பகுதி வேண்டலின் வடிவமாய் தான் காட்சிபடுத்தப்படுகின்றன. உலகின் இன்பங்களும், ஆசைகளும் என்றும் அழிவுக்கு நேராகவே நம்மை அழைத்துச் செல்லுகின்றன. இதன் மத்தியில் இறைவரைத் தஞ்சமாகக் கொள்வதே நிலையான வாழ்வுக்கும், நிறைவான மகிழ்ச்சிக்கும் நேராய் அழைத்துச் செல்கின்றன. ஆண்டவர் ஒருவரே நமக்கு வழியாக உள்ளார்.

யோவா 14:6-இல் நானே வழி என்று கூறிய இயேசுநாதர், என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர்; வெளியே வருவர்; மேய்ச்சல் நிலத்தைக் கண்டு கொள்வர் என்று யோவா 10:9இல் எடுத்துரைக்கிறார். ஆகவே தான் வழியாகவே பயணிக்கும் இறைவனிடம் "வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர்" என்று வேண்டுகிறார் திருப்பாடகர்.

***2. வாய்மையாகிறார்:*** திபா 16:11

"உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு"

இறைவரின் வழிகாட்டுதலின் நிறைவால் கிடைக்கும் முழுமையான நிறைவே மகிழ்ச்சியின் பூரிப்பு எனலாம். இங்கே திருப்பாடகர் நிறைவான மகிழ்ச்சி என்பது இறைவரிடமே உள்ளன என்பது தனது வாழ்வின் அனுபவத்தின் வெளிப்பாடாய் உள்ளன. எபிரேயத்தில் எமெத் (Emeth) என்ற சொல் உண்மை என்ற பொருள் படுத்தப்படுகின்றது. மானிட வாழ்வின் மிகவும் உயரிய பண்பு என்பது வாய்மையே. இப்பண்பு மானிட வாழ்வைக் காப்பாற்றும். வாய்மையின் உச்சக்கட்ட நிறைவின் வெளிப்பாடே மகிழ்ச்சி என்பதுடன் இது இறைவரின் ஈடுபாட்டால் மட்டுமே அனுபவமாக்கிட முடிகின்றன. பேச்சில் வாய்மையை வெளிப்படுத்துவதுடன் செயலில் நிலையான தன்மையையும், வெறும் அறிவளவில் கண்டுணரக்கூடிய பண்பு மட்டுமல்ல, மாறாக அது மனிதரிடையே உள்ள உறவில் வெளிப்படும் ஒன்று; செயல்பாடுகளில் மட்டுமே அதைக் கண்டுணர முடியும். யோவா 4:6 உண்மைக்கு ஆதாரம் இயேசுவே என்பதுடன், அவர் சென்ற வழியே நம்மை உண்மைக்கு (வாய்மைக்கு) நேராய் வழி நடத்துகிறது.

***3. வாழ்வாகிறார்:*** திபா 16:11

"உமது வலப் பக்கத்தில் எப்போதும் பேரின்பம் உண்டு"

கடவுளின் நன்மைத்தனம் அனைத்துப் படைப்புகளிலும் உள்ளது. கடவுள் முதல் மனிதனை நிலத்தின் மண்ணால் உருவாக்கி அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊதி, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான் (தொநூ 2:7). விவிலியத்தின் பல இடங்களில் கடவுள், "உயிர் வாழும் கடவுள்" என அழைக்கப்படுகின்றார். கடவுளே "வாழ்வு தரும் ஊற்று" (திபா 36:10) என்றும், "நம்மை உயிர் வாழச் செய்பவர்" (திபா 66:9) என்றும் அவரால் மட்டுமே நமக்கு உயிரளிக்க முடியும் என்றும் (திபா 71:20) கூறப்படுகின்றன. யோவான் நற்செய்தியாளர் இயேசுவை யோவா 1:4 இல் "அவரிடம் வாழ்வு இருந்தது; அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது" என்பதுடன் அனைவரும் நிலைவாழ்வு பெற வேண்டும் என்பது தான் கடவுளின் திருவுளம் யோவா 12:50 "வாழ்வு தரும் உணவு நானே" யோவா 6:35 என்று விளக்குகிறார்.

யோவா 14:16 இல் வழியும், உண்மையும், வாழ்வும் நானே எனும் ஆண்டவர் இயேசுவே தந்தையாம் கடவுளை அடைவதற்கான வழி என்றும், அவ்வழியே நம்மை உண்மைக்கும், நிறைவாழ்வுக்கும் காட்டிச் செல்லும் என்றும் குறிப்பிடுகிறார். திபா 16:11c உமது வலப்பக்கத்தில் எப்போதும் பேரின்பம் உண்டு என்பது நிலைவாழ்வின் நிறைவின் அடையாளமாகும்.

திரு. **S.S. ஆல்பின் டேவிட் ராஜ்**

01-03-2022

## கண்மணியெனக் காக்கும் ஆண்டவர்

திபா 17:1-15

**"உமது கண்ணின் மணியென என்னைக் காத்தருளும்; உம்முடைய சிறகுகளின் நிழலில் என்னை மூடிக்கொள்ளும்"** (திபா 17:8).

மாசற்ற இறையடியார் ஒருவர் தம் குற்றமின்மையை இறைவரிடம் எடுத்துக்கூறி உதவி வேண்டுகின்றார். வழக்கு மன்றத்தில் நீதியரசரிடம் தன் குற்றமின்மையை எடுத்துக் கூறி நீதி கேட்பதைப் போன்று தாவீது, ஆண்டவரிடம் சவுல் அரசர் தனக்கு எதிராகத் தொடுக்கும் தாக்குதலினின்று நீதி கிடைக்க வேண்டுமென்றும், தனக்கு ஆண்டவரால் பாதுகாப்பு கிடைக்க வேண்டுமென்றும் மன்றாடுகிறார். ஆண்டவரை நம்பியிருக்கும் நம் வாழ்வில் அவர் எவ்வாறு பாதுகாப்பு தருகின்றார் எனச்சிந்திப்போம்.

***1. அருகிலிருந்து பாதுகாக்கின்றார்*** : (திபா 17:8a)

நமது உலகில் மிகவும் முக்கியமான, அதே வேளையில் மிகவும் மென்மையான பகுதி நம் கண்கள். ஆண்டவர் நம்மைப் படைக்கின்றபோதே கண்களை மிகவும் பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கின்றார். உறுதியான எலும்பு அமைப்பைக் கொண்ட மண்டை ஓட்டில், ஒரு குழியான பகுதியில் கண்கள் பொருத்தப்பட்டுள்ளன. கண்களில் எந்தத் தூசியும் விழாமல் தடுக்கும் இமைகளும், நெற்றியிலிருந்து வழியும் வியர்வையை தடுக்க கண்ணுக்கு மேலே புருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதையும் தாண்டி ஒருவேளை நம் விழிகளில் தூசி விழுந்தால் அதை உடனடியாக கழுவி சுத்தம் செய்ய கண்ணீர் சுரப்பிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த அளவிற்கு பாதுகாப்பான வளையத்தில் கண்மணிகள் இருக்கின்றன. அதுபோன்றே நம் வாழ்வின் இக்கட்டான சூழலில் ஆண்டவர் நம் அருகில் இருந்து பாதுகாக்கின்றார்.

என்ன நேர்ந்தாலும் கடவுளுக்கு உண்மையாக இருப்போம் என்று முடிவு செய்த அனனியா, மிசாவேல், அசரியா ஆகியோர் அரச கட்டளையின்படி தீச்சூளையில் இடப்பட்ட சூழலில், அரசர் கண்ட காட்சி அவரை வியப்புறச் செய்தது. கட்டவிழ்க்கப்பட்டவர்களாய் நெருப்பின்

நடுவில் நான்குபேர் உலாவுவதை நான் காண்கிறேன்; நான்காவது ஆள் தெய்வமகன் ஒருவன் போன்று தோன்றுகிறானே என்று கூறி உன்னத கடவுளைப் போற்றி அவர்களைத் தீச்சூளையிலிருந்து வெளியே அழைத்தார். இக்கட்டான சூழலில் ஆண்டவர் தமது பிள்ளைகளின் அருகில் வந்து அவர்களைப் பாதுகாக்கின்றார்.

***2. அரவணைத்துப் பாதுகாக்கின்றார்*** : (திபா 17:8b)

ஆண்டவரின் சிறகுகள் என்பவை பாதுகாவலின் அடையாளச் சின்னமாகும். தாய்ப்பறவையின் சிறகுகள் அதன் குஞ்சுகளுக்கு மிகவும் சிறப்பான பாதுகாப்பாக இருக்கும். எதிரிகளால் வரும் கேடுகளிலிருந்தும், வெயிலின் கொடுமையிலிருந்தும், மழையின் குளிர்ச்சியிலிருந்தும் தன் குஞ்சுகளைப் பாதுகாக்கும். அதைப்போன்றே ஆண்டவர் தம் பிள்ளைகளைத் தீயோனிடமிருந்து பாதுகாக்கின்றார்.

சீனாய் மலையருகே இஸ்ரயேல் மக்கள் வந்தபோது கடவுள் அவர்களிடம் நான் எகிப்திற்குச் செய்ததையும், கழுகுகளின் இறக்கைகளின் மேல் உங்களை ஏந்தி என்னிடம் வந்துசேரச் செய்ததையும் நீங்களே கண்டீர்கள் என்று கூறி இஸ்ரயேல் மக்கள் தங்கள் விடுதலைப் போராட்டத்திலும் பிரச்சனை நிறைந்த பாலைநிலப் பயணத்திலும் ஆண்டவர் அவர்களை அரவணைத்துப் பாதுகாத்ததை நினைவுபடுத்துகின்றார் (விப 19:4).

நாம் வாழும் உலகில் நமக்கு வரும் இன்னல் இக்கட்டுகளிலே ஆண்டவர் தம் சிறகுகளால் நம்மை அரவணைக்கின்றார். அவர்தம் இறக்கைகளின் கீழ் நமக்குப் புகலிடம் தருகின்றார் (திபா 91:4). தாய்க்கோழி தன் குஞ்சுகளுக்கு வருகின்ற ஆபத்தை உணர்ந்து தம் சிறகுகளினுள் அரவணைத்துப் பாதுகாக்க அழைப்பதைப் போன்று உலகின் மாயையினின்று நம்மைப் பாதுகாக்க ஆண்டவர் அழைப்பை விடுக்கின்றார் (மத் 23:37).

தீமை நம்மை நெருங்குகின்றபோது ஆண்டவர் மேல் ஆழ்ந்த நம்பிக்கை கொள்கின்றபோது, அவர் நம் அருகில் வந்து அரவணைத்துப் பாதுகாக்கின்றார். இந்தப் புதிய மாதத்திலும் ஆண்டவர் நம்முடன் இருப்பதையும் அரவணைத்துக் காப்பதையும் உணர்ந்து ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்.

திரு. S. **சாமுவேல் ராஜன்**

01-04-2022

## இருளை ஒளிமயமாக்கும் ஆண்டவர்

திபா 18:28

**“ஆண்டவரே, நீர் என் விளக்குக்கு ஒளியேற்றுகின்றீர் என் கடவுளே, நீர் என் இருளை ஒளிமயமாக்குகின்றீர் ”** (திபா 18:28)

மனித வாழ்வு எப்போதும் நிலையானதாகவும், பாதுகாப்பு நிறைந்ததாகவும் இருப்பதில்லை. குழப்பங்களும், போராட்டங்களும், கவலைகளும், துன்பங்களும் நிறைந்தே காணக்கிடக்கின்றன. வாழ்வில் தைரியமுடனும், தெளிவுடனும் முன்னேறுவது என்பதே சவால் நிறைந்த அனுபவமாகவே தென்படுகின்றது. இருளில் ஒளியின்றி பயணிப்பது எவ்வளவு கடினமோ, அது போலவே குழப்பங்களின் நடுவில் பயணிக்கும் வாழ்க்கைப் பயணத்தின் இருளான அனுபவமும் கடினமானது. இதை தன் வாழ்வில் உணர்ந்து கொண்ட தாவீது அரசர் கடவுள் தன்னை வழிநடத்தி வந்த நிலையை எண்ணி நம்பிக்கையுடன் கூறுகின்றார், என் கடவுளே, நீர் என் இருளை ஒளிமயமாக்குகின்றீர்.

யூத பாரம்பரியத்தில் ஒளி என்பது வாழ்வையும் (Life), நன்மையையும் (Goodness), உண்மையையும் (Truth) அதிகமாய் பிரதிபலிக்கின்றது. கடவுளே ஒளியாகவும், அவரே இருளான அனுபவத்தில் வாழ்கின்றவர்களின் வாழ்வில் ஒளியேற்றுகின்றவராகவும் பார்க்கப்பட்டார். இந்த நம்பிக்கையே தாவீது அரசரின் சில திருப்பாடல்களில் பிரதிபலிக்கின்றது (திபா 27:1, 4:6, 36:9)

தாவீது அரசரைப் போல் கடவுளே என் வாழ்வுக்கு ஒளி, இருள் நிலையை மாற்றி அவர் ஒளியேற்றுவார் என்ற இறைபற்றுறுதியோடு புதிய மாதத்தை துவங்குவது புது நம்பிக்கையோடு பிரயாணிக்க உதவும்.

### *1. பாதை காட்டி ஒளியேற்றுகின்றார்*

“. . . இரவில் ஒளி காட்ட நெருப்புத் தூணிலும் இருந்தார். . .” (விப 13:21)

எகிப்து நாட்டிலிருந்து விடுதலை பெற்று வெளியேறிய இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் எல்லாம் சரியாயிற்று என்ற நிச்சயமான நிலை காணப்படவில்லை மாறாக அவர்கள் புதிய பாதையிலும், பல பிரச்சனைகளையும், போராட்டங்களையும், சவால்களையும் சந்திக்க நேரிட்டது. ஆனால் கடவுள் அவர்களை பராமரித்து அவர்கள் பாதையில்

அவர் உடனிருப்பை கொடுக்கின்றார். விப 13:21 இல் ஆண்டவர் இஸ்ரயேல் ஜனங்களுக்கு நெருப்புத் தூணாய் இரவில் அவர்களுக்கு பாதைக் காட்டி அவர்களை வழிநடத்திய செய்தியை காண முடிகிறது.

நாம் பயணிக்க இருக்கும் புதிய மாத்தின் பாதையிலும், இஸ்ரயேலரின் வாழ்வில் காணப்பட்டது போல போராட்டங்களும், பிரச்சனைகளும் பாதையில் இருக்கலாம். எந்த பாதையில் பயணிப்பது என்ற குழப்பம் கூட எழலாம். இந்நிலையில் கடவுள் நமக்கு பாதை காட்ட எப்போதும் ஆயத்தமுள்ளவராய் இருக்கின்றார் என்ற புரிதலோடு அவரை சார்ந்து நம்பிக்கையுடன் முன் செல்வது அவசியமாகிறது. கடவுளே வெளிச்சமாகி நமக்கு பாதை காட்டுவார் என்பதை ஏசாயா இறைவாக்கினரின் வார்த்தை நமக்கு நினைப்பூட்டுகிறது ஏசா 48:17 ". . . பயனுள்ளவற்றை உனக்குக் கற்பிப்பவரும், செல்ல வேண்டிய வழியில் உன்னை நடத்துபவரும் நானே. . ." எனவே இடறலற்ற பாதையில் முன் செல்ல இறைவன் தந்திருக்கும் திருமறை வெளிச்சத்தில் பயணிப்பது இன்றிமையாதது. அது நம் வாழ்வுக்கு பாதைகாட்டி ஒளியேற்றும்.

### *2. பயம் அகற்றி ஒளியேற்றுவார்*

". . . சாவின் இருள் சூழ் பள்ளத்தாக்கிலே நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன். . ." (திபா 23:4) கடவுளை நல் ஆயராக விளக்கும் அரசர் தாவீது, தானும் மேய்ப்பராக இருந்து ஆடுகளை இருள் நிறைந்த பள்ளத்தாக்குகளின் நிலைகளில் நடத்திய கடினமான அனுபவங்களை நினைக்கின்றார். பாலஸ்தீன பின்புலத்தில் கட்டமைக்கப்பட்டுள்ள இத்திருப்பாடல், (திபா 23) மேய்ப்பன் தன் ஆடுகளோடு பயணிக்கும் மிகவும் ஆபத்தான இருள் நிறைந்த பள்ளத்தாக்கின் அனுபவமாகவும் பார்க்க இயலும். இத்தகைய ஆபத்து மிகுந்த, திகில் நிறைந்த பள்ளத்தாக்கின் இருளின் நிலையிலும் கடவுள் தன்னோடிருப்பதால் தனக்கு பயமில்லை என்று தாவீது அரசர் கூறுகின்றார்.

கடந்து செல்லும் பிரயாணத்தில் இருள் என்பது பொதுவாக அனைவருக்கும் பய உணர்வையே கொண்டு வரும் என்பது இயல்பான ஒன்று, ஆனால் அதே பிரயாணத்தில் கையில் விளக்கு இருக்கிறது என்ற நம்பிக்கை பய உணர்வை தளர்த்தி தைரியமுடன் முன் செல்ல ஊக்கம் தருகின்றது. அதுபோலவே இருள் அகற்றி ஒளி தரும் கடவுள் என்னோடு இருக்கின்றார் என்ற உணர்வு வாழ்வில் தைரியமுடன் பிரயாணம் செய்ய உதவும். "ஆண்டவரே என் ஒளி; அவரே என் மீட்பு, யாருக்கு நான் அஞ்ச வேண்டும். . ." (திபா 27:1) என முன்னேறி செல்வோம்.

### *3. பாதுகாத்து ஒளியேற்றுகின்றார்*

"என் நெருக்கடி வேளையில் நான் ஆண்டவரிடம் மன்றாடினேன், என் கடவுளை நோக்கிக் கதறினேன். தமது கோவிலினின்று அவர் என் குரலைக் கேட்டார், என் கதறல் அவர் செவிகளுக்கு எட்டியது. . ." (திப 18:6)

இத்திருப்பாடல் முழுமையும் (திபா 18) தன் வாழ்வில் வந்த எல்லா நெருக்கடியான சூழல்களுக்கும் தன்னை விலக்கிப் பாதுகாத்த இறைவனுக்கு நன்றி சொல்லும் நன்றித் திருப்பாடலாகவே காட்சிபடுகின்றது. இத்திருப்பாடலின் சாரத்தை 2 சாமு 22 ஆம் அதிகாரத்திலும் காண இயலும். சவுலின் வழியாக வந்த அத்துணை நெருக்கடியான சூழல்களிலிருந்தும தாவீது பாதுகாக்கப்படுகின்றார், வாழ்வில் உயர்வுகளையும் பெற்றுக்கொள்கின்றார்.

கடவுள் மனிதருக்கு வரும் நெருக்கடியான வாழ்க்கையின் அனுபவங்களிலிருந்து பாதுகாக்க ஆற்றல் மிகுந்தவர். எனவே வாழ்வின் எல்லா சூழலிலும் அவரை சார்ந்திருப்பதும், நம்புவதும் மிகவும் முக்கியமானது. தன் துன்பத்தின் நடுவிலும் தன் முந்தைய இன்ப நிலையில் கடவுள் தன்னை பாதுகாத்ததை நினைக்கின்றார். யோபு 29:3 "அப்போது அவர் விளக்கு என் தலைமீது ஒளிவீசிற்று, அவரது ஒளியால் இருளில் நடந்தேன்." யோபு தன் துன்ப நிலையிலும் இறைவனால் பாதுகாக்கப்பட்டார். கடை நிலையில் மகிழ்வின் அனுபவங்களால் நிறைக்கப்பட்டார். இருளின் அனுபவம் மாறி வெளிச்சத்தின் அனுபவம் பிறந்தது. கடவுள் இன்ப நிலையில் மட்டும் அல்ல துன்ப நிலையிலும் நம்மோடேயே பயணிக்கின்றார். அவர் நம்மோடு இருக்கும்போது இருளான வாழ்க்கைச் சூழல்களின் நடுவிலும் பாதுகாப்புடன் முன் செல்ல இயலும். வாழ்வில் இன்பமோ, துன்பமோ எப்பொழுதும் கடவுளை விட்டுவிடாதிருப்போம், அப்போது அவர் இருளான நிலைகளை மாற்றி நம்மை பாதுகாத்து வாழ்வில் ஒளியேற்றுவார்.

இன்று இருளின் பிடியில் வாழ்வோர், வாழ்விழந்தோர் என அநேகர் நாம் வாழும் சமூகத்தில் உண்டு. அவர்கள் வாழ்வில் ஒளியேற்றும் பொறுப்பை கடவுள் ஒவ்வொருவருக்கும் தந்திருக்கின்றார். "நீங்கள் உலகிற்கு ஒளியாயிருக்கிறீர்கள்" (மத் 5:14). எனவே ஒளியின் பிள்ளைகளாய் அங்கீகாரப்படுத்தப்பட்டிருக்கின்ற நாம் இறைவனுக்காய் சிறு தீபங்களாய் ஒளிர்ந்து இச்சமூகத்தில் இருளில் வாழும் மக்கள் வாழ்விலும் ஒளியேற்ற பிரயாசப்படுவோம்.

திரு. **N. P. அலெக்ஸ்**

01-05-2022



# புத்துயிர் அளிக்கும் ஆண்டவர்

1 அர 19:1-18

**“அப்பொழுது அவர் எழுந்து உண்டு பருகினார். அவ்வுணவினால் வலிமை அடைந்த அவர், நாற்பது பகலும் நாற்பது இரவும் நடந்து, ஓரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தார்.”** (1அர 19:8).

வாழ்வில் நேரிடும் எதிர்மறையான சூழல்களினாலும், போராட்டங்களின் மிகுதியினாலும் மனிதர்கள் தங்கள் ஆற்றலை இழந்துபோய் விடுகின்றனர். இவ்வாறு இளைப்படைந்தவருக்கு பெலனையும் சத்துவத்தையும் புத்துயிரையும் ஆண்டவர் அருளுகின்றார் என்பது திருமறை கூறும் நற்செய்தியாகும். புதிய மாதத்தில் நுழைந்திருக்கின்ற நம்மைக் கடந்த கால விரத்தியிலிருந்தும், நிர்க்கதியான நிலையிலிருந்தும் கடவுள் எவ்வாறு மீட்டு நடத்துகின்றார் என்பதைத் தியானிப்போமாக.

## *1. விரக்தியில் புத்துயிர் பெற்ற எலியா* : (1அர 19:10)

எலியா அனைத்தும் வீணாய்ப் போனது என்றும், தன் முயற்சிகள் வீண், இனி நான் இருப்பதைவிட சாவதே மேல் என்றும் எண்ணுகிறார். வாழ்க்கையில் விரக்தியின் உச்சத்தில் மரணத்திற்காய் மன்றாடுகின்றார்.

ஆனால், படைகளின் ஆண்டவராகிய கடவுள், தம் அடியவராகிய எலியாவிற்குப் புத்துயிர் அளிக்கின்றார். ஆகாரம் அளிக்கின்றார்; அதைவிட மேலாய் உள்ளம் களிப்படையும் விதமாய் எதிர்காலத் திட்டத்தை அளிக்கின்றார் (1அர 19:15-18). அதில் கடவுளின் தீர்க்கருக்கு எதிராய்ச் செயல்பட்டவர்கள் அழிக்கப்படுவர் என்றும், என்னைப் பின்பற்றுவதில் நீ ஒருவன் மாத்திரம் இல்லை. உன் முயற்சி வீண் போகவில்லை என்றும் பாகாலை வழிபடாத 7000 பேரை வைத்திருக்கிறேன் என்கிறார்.

இன்று நாமும் இறைவாக்கினர் எலியாவைப் போன்று உலக வாழ்வில் கடவுளுக்காய் உண்மையாய் வாழ்ந்தேன் என்றும், எனது கடமைகளில் நேர்மையாய் இருக்கிறேன். ஆகிலும் அவைகளினால் பயன் இல்லை. ஏமாற்றமும், பகையும், வேதனையும் பெருகுகின்றன என்று கவலை கொள்வோமாகில் எலியாவோடு பேசிய ஆண்டவர் இப்புதிய மாதத்தில் நம்மோடு பேசுகிறார். உங்கள் உண்மையுள்ள வாழ்வு வீணாகவில்லை, அதற்கேற்ற பலன் நிச்சயமாய் உண்டு என்கிறார்.

## *2. நிர்க்கதியில் புத்துயிர் பெற்ற ஏழைக் கைம்பெண்* :

(2அர 4:1-7)

ஆண்டவருக்கு அஞ்சி நடந்த இறைவாக்கினர் இறந்து விடுகிறார். கடன் கொடுத்திருந்த கல்மனம் கொண்ட கடன்காரர் கடனைச் செலுத்தாததால் அத்தாயாருக்கு ஆதரவாய் இருந்த இருமகன்களையும் அடிமைகளாகக் கேட்கிறார்.

இப்பொழுது பொருளாதார நன்மைகள் ஏதும் இல்லை. தன் மகன்களை அடிமைகளாய்க் கொடுத்து இப்பிரச்சனைக்குத் தீர்வு காண இயலுமோ என்னும் நிர்க்கதியோடு இறைவாக்கினர் எலிசாவை நாடி வருகிறார். ஆண்டவர், எலிசா தீர்க்கரின் வாயிலாய்ப் புது வழியை அத்தாயாருக்கு ஏற்படுத்திக் கொடுக்கிறார். கடனை மாத்திரம் தீர்க்கவில்லை. அதன் பிறகு மூவரின் வாழ்விற்குத் தேவையான நன்மைகளையும் அதிலிருந்து பெறும்படி ஆண்டவர் அருள் செய்கிறார்.

இன்று நாமும் நமது வாழ்வில் இருக்கும் இக்கட்டான நிலமைகள், நோய்கள், கடன், வறுமை, போராட்டங்கள் எல்லாவற்றையும் கண்டு சோர்ந்து போய் விடுகிறோம். ஆனால் ஆண்டவர், ஒரு வழி அடையும்போது புது வழியை நம் வாழ்வில் திறக்கிறவராக இருக்கிறார்.

இப்புதிய மாதத்திலும் நம் வாழ்வில் இருக்கும் போராட்டங்கள் அமைதியின்மை, வேலைவாய்ப்பின்மை, கடன், நோய்கள், குடும்ப வாழ்வில் நன்மைகள் இல்லாத சூழல், தடைபட்டிருக்கின்ற நன்மைகள் இவைகளையெல்லாம் கண்டு அஞ்ச வேண்டாம். ஆண்டவர் அடைபட்ட வாயில்களைத் திறந்து நம்மை நன்மையினால் திருப்தியாக்க வல்லவராயிருக்கிறார்.

திரு. A. **அனிஸ் ராஜன்**

01-06-2022



## மனவிருப்பத்தை அருளும் ஆண்டவர்

திபா 20:1-9

**"உமது மனம் விரும்புவதை அவர் உமக்குத் தந்தருள்வாராக!**
**உம் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவாராக!"** (திபா 20:4)

இருதயம், மனம், உள்ளம் போன்ற வார்த்தைகள் ஒன்றையொன்று தொடர்புடையன. திபா 20-ஐ நாம் படிக்கிறபொழுது, அப்பகுதியில் தாவீது அரசர் போருக்காகத் தம்மை ஆயத்தப்படுத்துகின்ற போது இவருக்காக சபை மற்றும் குரு ஏறெடுத்த வேண்டுதல்தான் இப்பகுதி. மனிதர்கள் பல நேரங்களில் தங்கள் சுயவிருப்பத்தோடு எல்லாவற்றையும் செய்கிறார்கள். ஆனால் அரசர் தாவீது ஒவ்வொரு முறை போருக்குச் செல்லும் போதும் கடவுளின் சித்தமா? என்று கேட்டறிந்தார் (இச 20:1-4) தம்மை இறைவரின் சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார். புதிய மாதத்தில் ஆண்டவரை நம்பி பயணம் செய்ய விரும்புகின்ற நம் மனவிருப்பத்தை அவர் அருளவேண்டுமென்றால் எதைச் செய்ய வேண்டும் என்பதைச் சிந்திப்போம்.

***1. ஆண்டவரிடம் வேண்டுதல் செய்ய வேண்டும்*** : (திபா 20:9b)

'இறைவேண்டல்' கிறிஸ்தவ வாழ்க்கையின் உயிர் மூச்சு. தாவீது அரசர் தன் வாழ்வின் எல்லா நிலையிலும் ஆண்டவரிடம் வேண்டுகிறார். இயேசு கிறிஸ்து, 'நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்டதெல்லாம் நடக்கும்' (யோவா 15:7) என்கிறார். லூக் 18:35-43 இல் பார்வையற்ற மனிதர் "இயேசுவே! தாவீதின் மகனே, எனக்கு இரங்கும் என்று வேண்டுகிறார்." வேண்டுதல் செய்ய பல தடைகள் வருகிறது தடைகளையும் தாண்டி பார்வை பெற வேண்டி பார்வையும் பெற்றுக் கொண்டார். மத் 7:7இல் "கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்" என்கிறார். இவ்வுலகில் வாழ அடிப்படைத் தேவைகள் சந்திக்கப்பட வேண்டுமெனில் இறைவேண்டுதல் அவசியமானது. அதையும் ஆண்டவர் நிறைவேற்றுவார். பேராயர் I.R.H. ஞானதாசன் அவர்கள் பெலவீனப்பட்டு 18-03-1972இல் இங்கிலாந்துக்குச் சிகிச்சைக்காகச் செல்லும்போது 'நல்ல ஆண்டவரே! இதுகாறும் எங்களை

நடத்தி வந்தீர். இன்றும் நடத்தி வந்தீர். இன்று சிகிச்சை ஆரம்பிக்கும்போது வைத்தியர்களும், வைத்தியத்திற்கும் அப்பாற்பட்டு உம்மை நோக்கிப் பார்க்க அருள் செய்யும்' என வேண்டினார். நாமும் எல்லா சூழ்நிலையிலும் ஆண்டவரிடம் வேண்டுதல் செய்வோம்.

### *2. ஆண்டவரை மேன்மைப்படுத்த வேண்டும்* :

ஒவ்வொரு நாடும் அதன் செழிப்பு, செல்வம், ஆட்சிமுறை, இராணுவ வலிமை, போர்த்திறன், போர்க்கருவிகள், போன்றவை குறித்து மேன்மையாக எண்ணுவது வழக்கம். பல நேரங்களில் எப்போதும் மேன்மைக்குரியவராகிய ஆண்டவரை மறந்து பணம், பதவி, உயர்வு, செல்வங்களைக் குறித்து மேன்மைபாராட்டுகிறோம். ஆனால் திருப்பாடல் ஆசிரியர் சிலர் தேர்ப்படையிலும், சிலர் குதிரைப் படையிலும் பெருமை கொள்கின்றனர்; நாமோ நம் கடவுளாகிய ஆண்டவரின் பெயரில் பெருமை கொள்கின்றோம் என கூறுகின்றார் (திபா 20:7). நூற்றுவர் தலைவர். உரோமைப் பேரரசில் முக்கியப் பொறுப்பு வகித்த போது தனக்கு பணிவிடை செய்ய வேலைக்காரர்கள் இருந்தும், தன்னைத் தாழ்த்தி, தனக்குப் மேலாக இருந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடம் 'ஐயா நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன் என்கிறார்'(மத் 8:5-10). நாமும் ஆண்டவரை மேன்மைப்படுத்தி நம்மைத் தாழ்த்துவோம்.

### *3. ஆண்டவரில் நம்பிக்கைகொள்ள வேண்டும்* : (திபா 20:8)

போரின் போது இஸ்ரயேலர் ஆண்டவரை மட்டுமே நம்பியிருந்தனர். ஆடுமேய்ப்பர் தாவீது தனக்கு கொடக்கப்பட்ட போர் உடையையும், ஆயுதங்களையும் வேண்டாம் என்று ஒதுக்கி வைத்து விட்டு இறைப்பெயரில் கொண்டு நம்பிக்கையின் வழியாகப் பெலிஸ்தியனை வெற்றி கொண்டார். நம் வாழ்க்கையும் போருக்குச் சமமானது. இவ்வுலக வாழ்க்கை பயணத்தில் முழுமையாக ஆண்டவரில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

அமெரிக்கா உள்நாட்டுப்போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஐரோப்பாவிலிருந்து அநேகம்பேர் அமெரிக்காவில் குடியேறினார்கள். இவர்கள் பெரிய பண்ணைகளை நிறுவி, புகையிலையைப் பயிரிட்டு வந்தனர். இங்கு வேலை செய்ய ஆப்பிரிக்கா நாட்டின் நீக்ரோ இனமக்களை மிருகங்களை வேட்டையாடுவது போல அடிமை வியாபாரிகள் முதலாளிகளுக்கு விலைக்கு விற்றனர். அந்நாட்களில் பிலடெல்பியா நகரில் மகிமை நிறை ஆலயத்தின் போதகராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர் டாக்டர் டட்லி A. டிங். இவரின் திருச்சபையின் அங்கத்தினர்களாக இருந்த முதலாளிகளின், அடிமை வியாபாரிகளின் செயலை 'பாவச்செயல்' என்று

பகிரங்கமாகப் போதித்தார். இவரின் பேச்சுக்குப் பல எதிர்ப்புகளைச் சந்தித்தார். இதனால் இவர் திருச்சபைப் பொறுப்பிலிருந்து வெளியேற்றப்பட்டார். எனினும் இறைப்பணியைத் தொடர்ந்தார். பின்னர் ஒருமுறை பிங்சோளாம் பிரித்தெடுக்கின்ற எந்திர அறையில் சென்றபோது அவரின் அங்கியின் நீளப்பகுதி எந்திரத்தின் சக்கரத்தில் சிக்கி, காயம் ஏற்பட்டு சில நாட்கள் தாண்டி 19-04-1858 மரித்துபோனார். இவரின் மரணப்படுக்கையருகே, போதகர் Dr. டப்பீல்டு பிரியாவிடைச் செய்தியை கேட்டுக் கொண்டிருந்தார். இவர் போதகர் A. டிங் அவர்களின் இறுதி வார்த்தைகளை பாடலாக எழுதுகிறார். அப்பாடல் தான் (ஞான. 317)

நல் மீட்பர் பட்சம் நில்லும்!
ரட்சண்ய வீரரே!
ராஜாவின் கொடியேற்றிப்
போராட்டம் செய்யுமே! ......

இப்பாடல் எங்கும் பிரபல்யமானது. மட்டுமின்றி அமெரிக்கா உள்நாட்டுப் போர் வீரர்களின் விருப்பப் பாடலாகவும் பெயர்பெற்றது.

புதிய மாதத்தில் பயணம் செய்யக் காத்திருக்கின்ற நாம் ஆண்டவரிடம் வேண்டுதல் செய்து, ஆண்டவரை மேன்மைப்படுத்தி ஆண்டவரில் நம்பிக்கைக் கொண்டு பயணம் செய்வோம். ஆண்டவர் நாம் அனைவரின் மனவிருப்பத்தையும் நிறைவேற்றுவாராக.

திரு. S. **சதீஷ்**

01-07-2022



# எளியோர் சார்பில் செயலாற்றும் ஆண்டவர்

திபா 37:1-5

**“உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு, அவரையே நம்பியிரு; அவரே உன் சார்பில் செயலாற்றுவார்”** (திபா 37:5).

அநியாயமான, அற்பமான, ஆதரவற்று, கேட்பாரற்று கிடக்கும் சில காரியங்களை நீதிமன்றம் தானே முன்வந்து வழக்கு பதிவு செய்து, விசாரித்து தக்க நீதி வழங்குவது போல் இறைவனை நம்பி, இறைவனோடு ஒன்றித்து வாழும் மக்களின் சார்பில் இறைவன் செயலாற்றுகிறார் என திபா.37:5-இல் படிக்கிறோம். ஆண்டவர் இயேசுவும் இம்மண்ணில் ஏழைகளின் நற்செய்தியாகவே வந்தார் என லூக்கா 4:18 -இல் படிக்கிறோம். எப்படி இறைவன் எளியவரோடு செயலாற்றுகிறார் என்பதை தியானிப்போம்.

## *1. இல்லாமையில் செயலாற்றும் இறைவன்*: (1 அர 17:8-16)

சாறிபாத் என்னும் ஊரில் இல்லாமையில், வறுமையில் வாடிய ஓர் ஏழைக் குடும்பம், கைம்பெண் மற்றும் ஒரே மகனுடன் வாழ்ந்து வந்தார். மழையில்லாமல் வறட்சியான சூழல், ஒருவேளை மட்டும் உண்பதற்கு பானையில் ஒரு பிடி மாவும், கலசத்தில் கொஞ்சம் எண்ணெய் மட்டும் இருக்கிறது. அதை அடை செய்து சாப்பிட ஏழைத்தாய் விறகு பொறுக்கப் போகிறாள். கவலையோடும், கண்ணீரோடும் போகின்றாள். நாளை தினத்திற்கு என்று ஒன்றுமில்லை என்ன செய்வது என்று எண்ணிக் கொண்டு போகும் போது இறைவாக்கினர் எலியா வருகின்றார். ஏழை கைம்பெண்ணிடம் தாகத்துக்குத் தண்ணீர் கேட்டார். பின்பு அப்பம் கேட்டார். தாய் தன் நிலையை, இல்லாமையை எடுத்துக் கூறுகிறார்.

எல்லாம் கேட்ட எலியா, கைம்பெண்ணிடம் பயப்படாதே, முதலில் எனக்கு ஒரு சிறிய அடையை பண்ணி, என்னிடத்தில் கொண்டு வா, ஆண்டவர் கூறுகிறார் : மழை பெய்கிறது வரையிலும் பானையில் மாவும் தீராது, கலசத்தில் எண்ணெயும் குறையாது என்று கூறினார் (1 இரா.17:14). எலியாவுக்கு அடைபண்ணி கைம்பெண் கொடுத்தாள். அவர் சொன்னபடியே பானையில் மாவு தீரவுமில்லை, கலசத்தில் எண்ணெய் குறையவுமில்லை.

***2. இயலாமையில் செயலாற்றும் இறைவன்*** : (யோவா 5:1-14)

பெத்சதா (இரக்கத்தின் வீடு) என்று பெயர் கொண்ட 5 மண்டபங்கள் கொண்ட குளம் ஒன்று உள்ளது. இம்மண்டபங்களில் உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், கால் ஊனமுற்றோர், முடக்குவாதமுற்றோர் போன்ற பலர் படுத்திருப்பார்கள். இவர்கள் குளத்து நீர் கலங்குவதற்காக காத்திருப்பார்கள். 38 ஆண்டுகளாக உடல் நலமற்றிருந்த ஒருவர் அங்கு இருந்தார். குளம் கலங்குகின்றபோது இந்த மனிதனால் போக முடியாத இயலாமை இயேசு இந்த மனிதனை காண்கிறார். மனிதனின் இயலாமையைக் காண்கிறார். 38 ஆண்டுகள் காத்திருந்த அந்த நிலையை காண்கிறார். கண்டுகொண்ட இயேசு அவனுடைய இயலாமையில் செயலாற்றுகின்றார். எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்து கொண்டு நடந்து செல்லும் என கூறினார்கள். உடனே அந்த மனிதர் நலமடைந்து படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்தார். இன்றும் நம்முடைய இயலாமைகளிலும் இறைவன் நம்மோடு இருந்து செயலாற்றுகின்றார்.

இறைவனை நம்பி, இறை சமூகத்தில் நம்மை ஒப்படைத்து உண்மையாய், உறுதியாய் கிறிஸ்துவில் இணைந்து வாழ்கின்றபோது, நம்முடைய இல்லாமையிலும், இயலாமையிலும் இறைவனின் உடனிருப்பை புரிந்து கொள்ள முடியும். மட்டுமல்ல இறைவனே நம்மோடிருந்து செயலாற்றுவார் என்ற நம்பிக்கையில் புதிய மாதத்தில் பயணிப்போம்.

திரு. E. **ஜெபராஜ்**

01-08-2022

# மகிழ்வைத் தரும் ஆண்டவர்

திபா 40:12-17

**"உம்மைத் தேடுவோர் அனைவரும் உம்மில் மகிழ்ந்து களிகூரட்டும்"** (திபா 40:16).

கவலைகளும், கண்ணீரும் நிறைந்த உலகத்திலே பயணித்துக் கொண்டிருக்கிறோம். மனிதன் அமைதியாக வாழ வேண்டும் என விரும்புகிறான். ஆனால், அமைதியாக வாழ முடியாத சூழ்நிலைகள் நாளுக்கு நாள் வாழ்விலே நடைபெறுகின்றது. அமைதியற்ற உலகிலே மகிழ்ச்சி கேள்விக்குறியாக இருக்கின்றது. வெளியிலே சிரிக்கிற மனிதன் மனதுக்குள்ளாக அழுகின்றான். கவிஞன் ஒருவன் சொல்லுகின்ற பொழுது "சிலர் அழுவார் சிலர் சிரிப்பார் நான் அழுது கொண்டே சிரிக்கிறேன்". என குறிப்பிடுகிறார். இன்று அனேகருடைய வாழ்வு இப்படியாகதான் இருக்கிறது. மகிழ்ச்சியாய் வாழ வேண்டும் என விரும்பியும் வாழ முடியாத சூழ்நிலையில் மகிழ்ச்சியாய் வாழ்வதை போல வெளி உலகத்திற்கு தங்களை காட்டிக் கொள்ளுகின்ற நிலை.

திருமறையின் வழியாக தன்னை வெளிப்படுத்துகின்ற ஆண்டவர் மனிதன் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என விரும்புகின்றவர். அவர் தன்னுடைய மக்களுக்கு மகிழ்வை தருகின்றவர். அடிமை தனங்களிலே சிக்கி தவித்த மக்களுக்கு மகிழ்வை தர விரும்பி அடிமை தனங்களை விலக்கியவர்.

பாடமாக கொடுக்கப்பட்டுள்ள திபா 40-ல் தாவீது சொல்லுகின்ற பொழுது ஆண்டவரை தேடுகின்றவர் மகிழ்ச்சி அடைகின்றனர் என சொல்லுகின்றார். புதிய மாதத்தின் முதலாவது நாளிலும் மகிழ்வைத் தரும் ஆண்டவர் என்கிற தலைப்பை அடிப்படையாக கொண்டு ஆண்டவர் தரும் மகிழ்வை நாம் பெற்றுக் கொள்ள 2 ஆலோசனைகளை தொடர்ந்து சிந்திப்போம்.

## *1. ஆண்டவருக்காகக் காத்திருப்போம்* :

திபா 40:1-ல் சொல்லுகிறது "நான் ஆண்டவருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவரும் என் பக்கம் சாய்ந்து எனது மன்றாட்டைக் கேட்டருளினார்" என்று காத்திருதல் என்பது மனிதனுடைய வாழ்வின் தொடர் நிகழ்வு. மனிதன் தன் வாழ்நாளிலே அனேக காரியங்களுக்காக காத்திருக்கிறான். காத்திருக்கின்ற மனிதன் தான்

விரும்பியதை பெற்றுக் கொள்ளுகின்றபோது மகிழ்ச்சி அடைகின்றான். திருமறை ஆண்டவருக்காக காத்திருக்கின்ற போது நாம் அடைகின்ற நன்மைகளை குறித்து சொல்லுகின்றது. ஆண்டவருக்காக பொறுமையுடன் காத்திருக்கும்போது நமது மன்றாட்டுகள் கேட்கப்படுகின்றது. மன்றாட்டுகள் கேட்கப் பட்டு நமது விருப்பங்கள் நிறைவேறும்போது மகிழ்ச்சி அடைகின்றோம். நமது ஆண்டவர் தமக்காக காத்திருக்கின்ற மக்களின் மன்றாட்டைக் கேட்டு அவர்களின் வாழ்வில் மகிழ்ச்சியை கொடுக்கின்றார்.

தம் பேரன்புக்காக காத்திருப்போரை ஆண்டவர் கண்ணோக்குகிறார் (திபா 33:18). காத்திருப்போரை ஆண்டவர் உயர்த்துகிறார் (திபா 37:34) என திருப்பாடல் ஆசிரியர் குறிப்பிடுகின்றார். புதிய மாதத்திலே அடியெடுத்து வைத்திருக்கின்ற நாமும் ஆண்டவருக்காக பொறுமையுடன் காத்திருந்து, அவர் தருகின்ற மகிழ்வை பெற்றுக் கொள்வோம்.

### *2. கவலைகளை விட்டுவிடுவோம்* :

கவலை மனிதனின் எதிரி. கவலை மனிதனுடைய வாழ்விலே பல பெலவீனங்களை உருவாக்கி மனிதனுடைய மகிழ்ச்சியை கேள்வி குறியாக்குகின்றது. பிலிப்பி நகர இறைமக்களுக்கு கடிதம் எழுதிய பவுலடியார் கிறிஸ்து இயேசுவின் வழியாக மகிழ்ச்சியை பெற முடியும் என குறிப்பிடுகின்றார். பிலிப்பி நகர கிறிஸ்தவர்கள் அமைதியுடன் வாழ்வதற்கு கவலை கொள்ளாமையை ஆலோசனையாக சொல்லுகின்றார் (4.6). கவலை மனிதனுடைய மகிழ்ச்சியை அழிக்கிறது என்பதை தெளிவாக அறிந்து வைத்திருந்த பவுலடியார் நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம் என குறிப்பிடுகின்றார்.

மத் 6:25-34 வரை உள்ள பகுதியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கவலை படுவதனால் எதையுமே செய்து விட முடியாது என குறிப்பிடுகிறதை படிக்க முடிகின்றது. பலவிதமான கவலைகளோடு தனது உரையை கேட்டுக் கொண்டிருந்த மக்களிடம் ஆகாயத்து பறவைகள், காட்டுபுஷ்பங்கள் போன்றவற்றின் வாழ்வுகளை சுட்டிக் காட்டி அவைகளையே விண்ணகத் தந்தை போஷிப்பிக்கிறார் என்றால் நீங்கள் அவைகளை விட விசேஷித்தவர்கள் அல்லவா என்று சொல்லி, கவலைபடாதிருங்கள் என்ற பாடத்தினை கற்றுக் கொடுக்கின்றார்.

புதிய மாதத்திலே பிரவேசித்திருக்கின்ற நாமும் ஆண்டவருக்காய் காத்திருந்து, கவலைகளை விட்டு விட்டு ஆண்டவர் தருகின்ற மகிழ்வான வாழ்வை பெற்றுக் கொள்வோம். மகிழ்வை தருகின்ற ஆண்டவர் தாமே மகிழ்வான வாழ்வை தொடர்ந்து நமக்கு தந்தருள்வாராக.

அருள்திரு. R. **செந்தில்ராஜ்**

# பேரன்பைப் பொழியும் ஆண்டவர்

திபா 42:1-11

**"ஆண்டவர் தமது பேரன்பைப் பொழிகின்றார்"** (திபா 42:8).

19ம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த டாக்டர் ஜாண் ஹென்றி ஜோசப் என்ற இறையியல் வல்லுநரும் பிரபல அருளுரையாளருமான இவர் தன் நண்பனுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றார் "நான் ஒரு பெரிய பரிசுத்தவான் என்று நீங்கள் நினைக்க கூடாது என்று நான் விரும்புகின்றேன். ஒரு வேளை என் வாழ்க்கையில் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்று இடைவிடா மகிழ்ச்சியோடும் மன அமைதியோடும் நான் இருப்பதாக நினைக்கலாம் ஆனால் அது அல்ல. நான் அடிக்கடி நிர்பந்தமானவன் என்பதை உணருகிறேன்." இத்திருப்பாடலும் நாடு கடத்தப்பட்ட நிலையிலே திருக்கோவில் எழுந்தருளல் வழிபாடுகள் முதலியவற்றை இழந்த ஓர் இறையடியார் இறைவனையே தாம் இழந்துவிட்டதாக எண்ணி புலம்புகிறார் எனலாம். உன் கடவுள் எங்கே? திபா 42:3-10 அவரால் என்ன செய்ய கூடும் என்று கூறி வினைவிப் பகைவர் கேலி செய்தாலும் அவரோ தம் நம்பிக்கையை இழக்கவில்லை. இது பாபிலோனியத் தளையின் போது பாடப்பட்ட பாட்டொன்றும் சொல்பவரும் உள்ளர். சமூக புலம்பல் பாடல் என்போரும் உளர். எனினும் இது தனியொரு இறையடியாரின் பாடல் என்பதே இதில் பொருந்தும் என்றும், அமைதியற்ற இறையடியவர் பற்றுறுதியோடு கடவுள் பேரன்பை பொழிவார் என்கிற நம்பிக்கையோடு (மனஉறுதியோடு) பாடியுள்ளார். கடவுள் யாருக்கு பேரன்பை பொழிகிறார் என இப்பாடலின் வழி மூன்று குறிப்புகளை உள்ளடக்கி இன்றைய சிந்தனையை தியானிப்போம்.

## *1. கடவுளைத் தேடுங்கள்* :

இன்றைய விஞ்ஞான உலகில் வாழும் மனிதன் பல்வேறு நிலைகளின் உலகத்துக்குரிய மேன்மைகளை தேடிகொண்டு இருக்கின்றான். எதை தேடுகிறானோ அதை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அந்த தேடலில் வெற்றி இல்லையேல் மனம் உடைந்து கடவுள் என்னையும் மறந்து விட்டார் என்று மனவேதனை அடைகிறான்.

திபா 42:1-5 கலைமான் வறட்சி காலத்தில் நீரூற்றுக்கு அலைந்து தேடுவது போல் பக்தன் இக்கட்டான மனவேதனையான நிலையில் கடவுளை தேடுகிறான். கடவுள் பேரிலுள்ள தாக்கத்தினால் இறையவர் தனது வாழ்வில் இருக்கின்ற இக்கட்டான சூழ்நிலையில் கடவுளை தேடுகிறான். கடவுள் பேரிலுள்ள தாகத்தினால் இறையவர் தனது வாழ்வில் இருக்கின்ற இக்கட்டான சூழ்நிலையில் சிக்கி தவிக்கிறார். அமைதியற்ற சூழ்நிலையில் திருப்பாடகர் கடவுளை தேடினார். நண்பர்கள் உறவுகள் கடவுள் எங்கே ஸ்என அவரின் விசுவாச வாழ்க்கையை சோதித்தார்கள். ஆனாலும் என் ஆத்துமா தேடல் கடவுளையே சார்ந்து இருக்கிறது என கூறுகின்றறர். மனிதன் இவ்வேளையில் ஆண்டவர் கைவிடப்பட்டதைப் போன்று உணரும்போது மனவேதனைத் தாக்குகின்றது. ஆனால் கடவுள் தம்முடையவர்களை கைவிடுவதில்லை. எனவே நம்முடைய தேடலில் மனசோர்படையும் போது கடவுளை சார்ந்து இருக்க வேண்டும்.

### *2. கடவுளை நம்புங்கள்* :

எந்த நிலையிலும் கடவுளை தேடுகின்ற போது கடவுள் மீது முழுமையான நம்பிக்கை கொள்ள வேண்டும். வாழும் காலநிலையில் பல இன்னல்கள் மன வேதனைகள் துன்பமான அனுபவங்கள் நம்முடைய விசுவாச வாழ்வில் மனவேதனையை ஏற்படுத்தலாம். ஆனாலும் நாம் கடவுள் மீது முழுமையாக நம்பிக்கை கொள்ள வேண்டும். நம்முடைய வலிமையை மட்டுமே நம்பியிராது ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்ளுங்கள்.

மீசார் மலைப்பகுதி எர்மோன் மலை உச்சியிலிருந்து யோர்தான் ஆறு ஊற்றெடுக்கிறது. இம்மலை ஏறதாழ 9100 அடி உயரமானது ‘‘மீசார்’’. மீசார் என்பது சின்னமலை. மற்றொரு தாழ்வான குன்றாக இருக்கலாம். இப்பாடலாசிரியர் இம்மலைக்கு நாடு கடத்தப்பட்டிருக்கலாம். அங்கிருந்து சீயோன் மலையின் இறை நம்பிக்கை குறித்து நம்பிக்கை கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறது. தம் பிரச்சனைகளை சுற்றி பார்க்காமல் கடவுள் மீது முழுமையான நம்பிக்கை கொண்டு இருந்தார். அவரின் துன்பமான நிலையிலும் கடவுள் தன்னோடு இருப்பதாக நம்பிக்கை கொண்டு கடவுளை நோக்கி பார்த்தார்.

### *3. கடவுளைப் போற்றுங்கள்*:

கடவுள் மீது நம்பிக்கை கொண்ட நாம் நாள்தோறும் ஆண்டவர் தமது பேரன்பை பொழிக்கின்றார் என்ற நம்பிக்கை உணர்வுடன் கடவுளை போற்ற வேண்டும். இத்திருப்பாடல் ஆசிரியர் தன் பட்ச துயரத்தை

உற்றுபார்த்து கொண்டிருக்கவில்லை. துன்ப காலத்தில் கடவுளை தேடினேன். கடவுள் மீது நம்பிக்கை கொண்டிருந்தேன். கடவுள் என்னுடைய வாழ்வின் மனவேதனை மனசோர்புகளை மாற்றி எனக்கு பேரன்பை பொழிய செய்து ஆனந்த மகிழ்ச்சியாக்கினார் என ஆண்டவரை போற்றினார். இறைவனின் பிள்ளைகளாகிய நாம் பல வேளைகளில் கவலைப்பட்ட போதிலும் கடவுளை தேட மறந்த தருணம் உண்டு. அவர் மீது வைத்த நம்பிக்கையை இழந்த சூழ்நிலைகள் உண்டு. எந்த நிலையில் நாம் இருந்தாலும் கடவுள் மீது நம்பிக்கையுடையவராக இருக்கும்போது ஆண்டவரை போற்றி துதிக்கும் போது நமது வாழ்வில் ஆண்டவர் பேரன்பை பொழிய செய்து நம்மை மகிழ்ச்சி திறக்க பண்ணுவார் கடந்த எண்ணங்களை மனசோர்புகளை ஆண்டவர் மாற்றி புதிய மாதத்தில் அவர் பேரன்பை பொழிய செய்து நம்மை வழி நடத்துவார்.

திரு. M. **ஐசக் வினோ**

01-10-2022



# அச்சம் அகற்றும் ஆண்டவர்

திபா 56:1-13

**"கடவுளையே நம்பியிருக்கின்றேன்; எதற்கும் அஞ்சேன்; மானிடர் எனக்கெதிராய் என்ன செய்ய முடியும்?"** (திபா 56:11).

நாம் நம்பும் ஆண்டவர் வலிமைமிக்கவர். புதிய மாதம் கடவுளின் கருணையால் நமக்குக் கிடைத்திருக்கிறது. இம்மாதம் இறைவன் நமக்குத் தரும் சிந்தனை நம்முடைய அச்சத்தை அகற்றக்கூடியதாய் அமையட்டும்.

## *1. அச்சம் தவிர்ப்பீர்* :

அச்சம் (அ) பயம் குறித்து ஆராய்ந்தால் ஸ்டாத்மின் என்ற மரபணு தான் பயம் உருவாகக் காரணம் என்று மருத்துவ அறிவியல் சொல்கிறது. பயத்தில் இரண்டு வகைகள் உண்டு.

(i) ஆக்கும் பயம் (Constructive Fear) :

இப்பயம் நெருக்கடியிலிருந்து நம்மைக் காப்பாற்றிக்கொள்ள ஆக்கப்பூர்வமான செயல்களையும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுப்பதற்கான தூண்டுதல்களைத் தரும் Constructive Fear (எகா. தேர்வு). இந்தப் பயமானது ஆக்கப்பூர்வமானது, கட்டுப்பாட்டினைத் தரும், கடமையை ஒழுங்காய்ச் செய்ய உதவும். நல்ல ஒழுக்கத்தினைத் தரும்.

(ii) அழிக்கும் பயம் (Destructive fear) :

நெருக்கடிகளிலிருந்து காப்பாற்றுவதற்குப் பதிலாகப் பல நெருக்கடிகளை ஏற்படுத்தி, அதன் விளைவாக அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டு அதுவே ஆபத்தாக மாறினால் அது Destructive fear. இத்தகைய பயம் குடி, புகைப் பழக்கத்தைவிட மிக மோசமானது. இதனால் உடல்நலன் பாதிக்கப்படுகிறது. இந்தப் பயம் தொடருகின்ற போது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து இருதயப்பாதிப்பு, ஜீரண சக்தியின்மை, குடல்பாதிப்பு, மறதி, சோர்பு, மன உளைச்சல் போன்றவை ஏற்படுகின்றன.

திருப்பாடல் 56 தனிமனிதரின் புலம்பல் மன்றாட்டு என்று அறியப்படுகிறது. கொடிய பகைவர்களால் ஆபத்து தன்னைச் சுற்றிலும் இருந்த சூழலில் (1 சாமு. 21::10-15) தாவீது, "நான் எதற்கும் அஞ்சேன்"

என்று தனது அச்சமற்ற மனநிலையை வெளிப்படுத்துகிறார். மட்டுமல்ல, “அற்ப மனிதர் எனக்கென்ன செய்ய முடியும்?” என்ற கேள்வியையும் எழுப்புகிறார். இங்கு அற்ப மனிதர் என்பதை மாம்சமான மனிதர் மற்றும் மனிதரின் வலிமை மிகவும் குறைவானது என்றும் பொருள் கொள்ளுதல் சிறப்பு (புல்லின் பூ, நீர்க் குமிழ்).

அழிக்க நினைக்கும் பெலிஸ்தியர்களும், சவுலின் படைகளும் வலிமை குன்றிய அற்ப மனிதர்கள் என்பது தாவீதின் மனநிலையின் வெளிப்பாடு. வாழ்வில் போராட்டங்களும், நெருக்கடிகளும் ஏற்படும் சூழலில் “நான் எதற்கும் அஞ்சேன்” என்ற துணிவு இல்லாமை மனம், உடல் தளர்வுற்று மனிதரை தற்கொலை எண்ணத்திற்கு வழி நடத்துகிறது. ஆண்டவர் தம் மக்களான நம்மிடம் “பயப்படாதே” என்று சொல்லுகிறார்.

***2. ஆற்றல் அடைவீர் :***

ஆற்றல் உணவினால், உடற்பயிற்சியினால் மட்டுமல்ல நம்பிக்கையினாலும் கிடைக்கிறது. அவமானங்கள், இழப்புகள், தோல்விகள் எல்லாம் உலகின் எல்லாச் சாதனையாளர்களுக்கும் பொருந்தும். ஆனால் அவற்றை நம்பிக்கை என்ற ஆயுதத்தால் வென்றதால் அவர்கள் சாதனையாளர்களாக மாறினார்கள். தாவீதின் ஆற்றல் அவருக்கென இருந்த மக்கள் செல்வாக்கோ, கிடைத்த புகழோ, அதிகாரமோ, தன் மீது தனக்கிருந்த நம்பிக்கையோ அல்ல. மாறாக, கடவுளிடம் தனக்கிருந்த உறுதியான நம்பிக்கையே ஆகும். ஆபத்து நெருங்கின போது அச்சம் அருகே வந்தது.ஆண்டவரை நினைத்த போது அச்சம் ஓடி மறைந்தது. “ஆண்டவரை நம்பியிருக்கிறேன்” என்பது எந்த சம்மட்டியாலும் உடைக்க முடியாத வலிமையான பற்றுறுதியின் வெளிப்பாடு ஆகும். எதற்கும் அஞ்சேன், அற்ப மனிதன் எனக்கென்ன செய்ய முடியும்? எனக் கேட்பது வலிமையான ஆண்டவர் என் ஆற்றலாய் இருக்கும் போது வலிமையற்ற மனிதர் என்னை என்ன செய்து விட முடியும் என்பதே. கடவுளின் பேராற்றல் எந்த அளவைகளினாலும் அளவிட இயலாதது. “ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவர்” அவர்.

அமெரிக்கர்கள் பயன்படுத்தும் நாணயத்தில் (Currency) எழுதப்பட்டிருக்கும் வாசகம் கவனிக்கத்தக்கது. அது “எங்கள் நம்பிக்கைக் கடவுளில் (In God we Trust)” என்பதாகும். பணம் என் கரத்தில் இருக்கிறது என்று பணத்தின் மீது நம்பிக்கை கொள்ளும், பெருமை பேசும் மனிதர்களிடத்தில் அமெரிக்கர்களின் பணம் பேசுகிறது. “என்னை நம்பாதே, கடவுளை நம்பு.” நம்பிக்கை என்ற தமிழ் வார்த்தை, Trust

என்று ஆங்கிலத்தில் அறியப்படுகிறது. “Trust” என்ற வார்த்தைக்கு Betach என்ற எபிரேயச் சொல் பயன்படுத்தப்படுகிறது.” “Bet” என்ற எபிரேய எழுத்திற்கு “உள்ளே பாதுகாப்புடன்” (with safety and security) என்பது பொருளாகும். மட்டுமல்ல “betach” என்ற வார்த்தை வெல்டிங் என்ற பண்டைய கலையிலிருந்து வந்தது என்றும், உண்மையில் இது வெல்டிங்கிற்காகப் பயன்படுத்தப்பட்ட பண்டைய வார்த்தை என்றும் சொல்லப்படுகிறது. கி.மு. 2300 இல் (Bronze Age) வெல்டிங் கண்டறியப்பட்டது. மெசொப் பெத்தோமியன் பகுதியில் கி.மு. 1500, 1000இல் வெல்டிங் செய்யப்பட்டதற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இரண்டு உலோகத்துண்டுகளை ஒன்றாகப் பற்ற வைக்கும் போது ஒரு உலோகம் மற்ற உலோகத்துடன் இணைக்கப்படுவது போல கடவுள் மீது மனிதர் வைக்கும் பற்றுறுதி உடைக்க இயலாதபடி அவரோடு நம்மை உறுதியாய் இணைக்கிறது என்று சிந்தித்தால் Trust என்ற வார்த்தைக்கு பொருள்மிக்கதாகிறது.

புதிய மாதத்தைக் குறித்து அச்சம்கொள்ளுகிறீர்களா? ஆண்டவர் தம் அடியவராம் தாவீது வழியாய் நமக்குச் சொல்கிறார், “அஞ்சாதீர்கள்! ஆண்டவராம் என்னிடம் நம்பிக்கை கொள்ளுங்கள், வலிமைமிக்கவரான நான் உங்களோடு இருக்கிறேன்.” ஆகவே, கடவுளிடம் வைக்கும் நம்பிக்கையால் நாம் ஆற்றல் அடைவோம்; அச்சம் தவிர்ப்போம்; ஆண்டவர் துணை நிற்பார்.

அருள்திரு. R. **அனில் குமார்**

# அடைக்கலம் அருளும் ஆண்டவர்

திபா 59:1-17

**"...நெருக்கடியான வேளையில் நீர் எனக்கு அரணும் அடைக்கலமுமாய் இருந்தீர்"**
(திபா 59:16)

அடைக்கலம் என்பது 'முழுமையான பாதுகாப்பை' குறிக்கிறது. 21, 196 கீ.மி நீளமுடைய, பெருஞ்சுவர், எதிரிகள் தங்களை தொடக் கூடாது என்று பாதுகாப்பிற்காக கட்டப்பட்டதே சீனப்பெருஞ்சுவர் ஆகும். இது மன்னர் காலங்களில் நிகழ்த்தப்பட்ட வழக்கமான செயல்.

இங்கு தரப்பட்டத் திருமறை வசனத்தில் (வ.16), ஆசிரியரான தாவீது 2 முக்கியம் சொற்களைப் பயன்படுத்துகிறார். "அரண், அடைக்கலம்". இவை இரண்டும் "பாதுகாப்பு" என்ற ஒரே நோக்கம் கொண்ட பொருளை தருபவையாக இருந்தாலும், சொல்லுக்கான பொருள் அடிப்படையில் வேறுப்பட்டது.

'அரண்' (fortress) என்பது பகைவர்களிடமிருந்து நாட்டு மக்களைக் காப்பதற்காக அமைக்கப்பட்ட கட்டமைப்பு ஆகும். அரண்-நீரரண், நிலவரன், மலையரண், காட்டரண் என அது அமைக்கப்படும் இடங்களை பொறுத்து பெயர் வேறுபடுகிறது. அரண் என்பது கண்களால் கண்டு அறியப்படுவது. ஆனால் 'அடைக்கலம்' என்பது உள்ளத்தால் உணர்ந்து நிம்மதி கொள்வதாகும். ஆகவே தாவீது அடைக்கலம் அருளும் ஆண்டவரின் பாதுகாப்பை பெறுகிறார். சவுல் மூலமாக தனக்கு ஏற்பட்ட பற்பல நெருக்கடிகளில் தான் நம்பும் கடவுளை எப்படி பார்க்கிறார் என்பதை இந்த வசனம் தெளிவுப்படுத்துகிறார். அதாவது கடவுள் வெளிப்பார்வைக்கு மட்டும் அடைக்கலமாக இல்லாது, மனதால் மிகப் பாதுகாப்பை உணர்கிற அடைக்கலமாக இருக்கிறார். என்பதை அறிவிக்கிறது.

இந்த 59 ஆம் சங்கீதம் முழுமையும், தாவீது தன் எதிரிகளிடமிருந்து தன்னை காக்க வேண்டி கடவுளிடம் முறையிடுதலை பற்றி பாடப்பட்டுள்ளது. தாவீது அவ்வளவு பெரிய நெருக்கடிகளை தன் வாழ்வில் கண்டாரா? என்ற கேள்விக்கு பதில்களை அறிவது இந்த பகுதிக்கு இன்னும் வலுசேர்க்கும்.

## *1. தாவீதுக்கு ஏற்பட்ட நெருக்கடிகள்* :

திபா 59:16 ஆம் வசனத்தில் தாவீது "என் நெருக்கடி வேளையில்" என்ற சொற்றொடரை பயன்படுத்துகிறார். இந்த நெருக்கடி வேளைச் சூழல் 1சாமு 19:8-18 வரையுள்ள பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

சவுல் இஸ்ரயேலின் முதல் அரசர். சவுலின் காலத்தில் கோலியாத் எனும் பெலிஸ்தியன் இஸ்ரயேலை சண்டைக்கு இழுத்து இழிவுப்படுத்துகிறார். யாரும் எதிர்க்க முன்வராத போது தாவீது எதிர்த்து சண்டையிட்டு கோலியாத்தை வீழ்த்துகிறார். (1சாமு 19:5). தாவீது கோலியாத்தின் தலையை வெட்டி எடுத்து வரும் வழியில், சாலையில் இரு மறுங்கிலும், முன்னாலும், பின்னாலும் நின்று பெண்கள் நடனமாடி சவுல் கொன்றது ஆயிரம்தான் ஆனால் தாவீது ஒருவனைக் கொன்றாலும் பத்தாயிரம் பேரை கொண்றதற்கு சமமானது என புகழ்ந்து ஆடி தாவீதை புகழ்கிறார்கள். இந்த புகழ்ச்சியைக் கேட்டு தாவீது கடுஞ்சினம் கொள்கிறான் சவுல் அதன் விளைவு பலமுறை கொல்ல முயற்சிக்கிறான் சவுல்.

குறிப்பாக 1சாமு 19:8-18 வரையுள்ள பகுதியில் சவுலின் அடுக்கடுக்கான கொலை வேட்கைகளை அறியலாம். ஈட்டியால் தாவீதை அவரோடு குத்த, அவரில் ஈட்டி பாய்கிறது (வ 10). தாவீது தப்புகிறார். மறுநாள் தாவீதின் வீட்டிற்கு அவனைகொல்ல காவல் துறையை அனுப்புகிறார். தாவீதின் மனைவி மீக்காள் பலகணி வழியாக இறக்கிவிட்டு காப்பாற்றுகிறார். இப்படி இன்னும் பல அடுக்கடுக்கான மரணக் குழிகளை தாவீதுக்கு சவுலின் ஆட்கள் வைத்ததினால், தாவீது 59:6-14 போன்ற வசனங்களில் தன்னை கொல்ல சவுல் மற்றும் சவுலின் ஆட்கள் இரைதேடி அலையும் நாய்களைப் போல அலைகிறார்கள் என்று தாவீது குறிப்பிடுகிறார். இவைகள் மட்டுமல்லாது இன்னும் பல நெருக்கடிகளை தாவீது கடவுளிடமிருந்து அனுபவிப்பதை திருமறை எடுத்தியம்புகிறது.

இப்படிப்பட்ட நெருக்கடி வேளைகளில் கடவுளை எப்படி அரணாக, அடைக்கலாமாக தாவீது உணர்ந்தார் என்பதை அறிவதும் நலம்.

## *2. தாவீதுக்கு அடைக்கலம் தந்த ஆண்டவர்* :

தாவீது சவுல் அரசனால் நெருக்கடிகளை சந்தித்த காலகட்டத்தில் அவரிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள காடுகளில் மலைகளில், குகைகளில், மலைப்பிளவுகளில் ஒழிந்து வாழ்ந்தார். அதனால் தான் பல சங்கீதங்களில் கடவுளை தன் கோட்டை,கற்பனையாக அரண், அடைக்கலம் என்று பாரபார்கிறார் (சங் 18:46; 18:51; 27:5; 59:16). 2சாமு 22:1-3 இல் வசனங்களை வாசிப்பின், கடவுளை தாவீது என்

கற்பாறை, என் கோட்டை, மீட்பர், நான் புகலிடம் தேடும் மலை, என் அரண், என் தஞ்சம், என்னை விடுவிப்பவர் என்று புகழ்ந்து பாடுகிறார். அப்படியென்றால் தாவீது கடவுளிடமிருந்து அடைக்கலம் பெற்றிருப்பதையும் அறிய முடிகிறது. ஒரே ஒரு நிகழ்வை இதற்கு சான்றாக எடுத்துக் கொள்வோம்.

1சாமு 23 அதிகாரத்தின் பிற்பகுதியில் ஒரு நிகழ்வு வருகிறது. சவுல் தாவீதை கொல்வதற்கு பல முறை முயல்கிறான். மட்டுமல்லாது மலைகளில், காடுகளில் வாழும் மக்களிடத்தில் சவுல் தாவீதை கண்டால் தன்னிடம் அறிவிக்க வேண்டும் என கட்டளையிடுகிறான். இந்த சூழலில் தாவீது ஆவிலா எனும் மலைக்காட்டில் ஒளிந்திருந்தான். இதை அறிந்த சீப் எனும் ஊரார் சவுலினிடத்தில் அறிவிக்கின்றனர். (1சாமு 23:19,20). சவுல் பெருமகிழ்வுடன், வீரர்களை அழைத்துக்கொண்டு செல்கிறார். மாகோன் எனும் சமவெளியில் தாவீது இருக்கிறான் என்ற செய்தி கிடைக்கிறது. உடனே தாவீது இருந்த பகுதியை முழுவதுமாக சுற்றி வளைக்கிறது சவுலின் படை (1சாமு 23:26). இனி தாவீதினால் தப்பிக்க முடியாது எனும் நெருக்கடியில் தாவீது இருக்கிறான். மரணத்திற்கும், தனக்கும் ஒரு சில அடிகளே இருக்கின்றன. அந்நேரத்தில், சவுலித்தில் ஒரு மனிதர் ஓடி வந்து பெலிஸ்தியர் படை கொண்டு போரிட வருகிறார்கள் எனும் செய்தியை கொண்டு வருகிறார் (1சாமு 23:27). தாவீதா, பெலிஸ்திய படையா எனும் நிலையில் இருந்த சவுல் அரசன் பெலிஸ்தியரை போரிட திரும்பி செல்கிறான். தாவீது காப்பாற்றப்படுகிறான். அப்போது தாவீது பெருமகிழ்வுடன் சேலா அம்மாவிகேத் எனும் பெயரை அந்த இடத்திற்கு சூட்டுகிறான். அதன் அர்த்தம் தப்புவுக்கும் கன்மலை.

ஆகவேதான் பல இடங்களில் தாவீதால் அடைக்கலம், கோட்டை என பாட முடிந்திருக்கிறது. நம் வாழ்வில், கடவுளையே அடைக்கலமாக, அரணாக கொள்ளுவோம். அப்படிக் கொண்டால் கடவுள் வாழ்நாள் முழுவதும் நமக்கு அடைக்கலமாக இருப்பார்.

திரு. L. **லோபின் லினேஷ்**

# விண்ணப்பத்தைக் கேட்கும் ஆண்டவர்

திபா 69:29-35

**“ஆண்டவர் ஏழைகளின் விண்ணப்பத்திற்குச் செவிசாய்க்கின்றார். சிறைப்பட்ட தம் மக்களை புறக்கணிப்பதில்லை”** (திபா 69:33).

அமெரிக்காவின் சிக்காகோ மாகாணத்தின் மருத்துவ விஞ்ஞானியான Dr. மார்க்கண்ட் என்பவர் புற்றுநோய்க்கான மருந்தை கண்டுபிடித்தவர். இவருடைய மருத்துவத்தை பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும் அங்கீகரித்து இன்றளவும் பாராட்டி வருகின்றன. ஒருமுறை பாராட்டு விழாவில் பங்குபெற சிக்காகோ விமான நிலையத்தில் இருந்து புறப்படுகிறார். கடுமையான புயல், மழை காரணமாக பயணித்த விமானம், அருகாமையில் இருந்த விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. தொடர்ந்து விமானப் பயணம் மேற்கொள்ள முடியாத நிலையில் தரைவழிப் பயணத்தை மேற்கொள்ள முயற்சி செய்கிறார். அதுவும் சாத்தியமற்றுப் போகவே அண்மையில் இருந்த இல்லத்தில் சென்று தன் சூழ்நிலையை எடுத்துரைத்து அந்த இல்லத்தில் ஓய்வு எடுக்கிறார். இதனால் பாராட்டு விழா நிகழ்வு நடைபெறுவதாக இருந்த இடத்திற்கு குறித்த சமயத்தில் போக முடியாத சூழல் உருவானது. ஓய்வு எடுத்த இல்லத்தில் இரவு உணவு அருந்த ஆயத்தப்படுகிறார். சற்று நேரம் தாமதித்து உணவு அருந்துகிறேன் என்று மருத்துவர் கூறினார். உடனே அந்த இல்லத்தின் தாயார் நான் சற்று நேரம் கடவுளிடம் வேண்டுதல் செய்துவிட்டு வருகிறேன் என்று கூறி படுக்கை அறையில், படுக்கையில் பெலவீனத்தோடு கிடந்த 15 வயது மதிப்புடைய வாலிபனிடம் அருகில் அமர்ந்து கடவுளை நோக்கி வேண்டுதல் செய்கிறார். இதை கவனித்துக் கொண்டிருந்த மருத்துவர் அந்த தாயாரிடம் அந்த வாலிபன் யார்? என்ன பெலவீனம் என்று கேட்க அதற்கு அவர் பதிலாக இது என் மகன், இவன் பல ஆண்டுகளாக புற்றுநோய் பலவீனத்தோடு போராடிக் கொண்டிருக்கிறான். என் மகனை மருத்துவர் மார்க்கென்ட் அவர்களிடம் சிகிச்சையளிக்க முயற்சி செய்கிறேன். ஆனால், போதுமான பொருளாதார வசதி இல்லாததால் மருத்துவம் செய்யாமல் கடவுளிடம் வேண்டுதல் செய்து வாழ்ந்து வருகிறோம் என்று தன் பரிதாப நிலையை எடுத்துரைத்தார்.

இதைக் கேட்ட மருத்துவர் தான் யார் என்ற உண்மையை எடுத்துக் கூறி அந்த வாலிபனுக்கு சிகிச்சையும் அளித்தார். இதைப் போன்று கடவுள் எல்லா சூழலிலும் நம் வேண்டுதலைக் கேட்டு பதில் அளிப்பவராக இருக்கிறார். கடவுள் எப்படி நம் விண்ணப்பங்களை கேட்கிறார் என்பதை தியானிப்போம்.

## *1. கடும் துன்பத்தில் கேட்கப்படும் விண்ணப்பம்*

"ஆழமிகு நீர்த்திரளுள் அமிழ்ந்திருக்கின்றேன்; நிற்க இடமில்லை; நிலைகொள்ளாத நீருக்குள் அமிழ்ந்திருக்கின்றேன்; வெள்ளம் என் மீது புரண்டோடுகிறது." (திபா 69:2)

கடந்த ஆண்டு 2021 நவம்பர் மாதம் நம்முடைய குமரி மாவட்டம் மற்றும் ஏனைய பல மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு நம் மக்களை நிலைகுலைய செய்து ஆழத்தில் அமிழ்ந்து போகிற அனுபவத்தைக் கொடுத்தது. மேலும், நம்முடைய வாழ்விலும் பல நேரங்களில் ஏற்படும் துன்பமான அனுபவங்கள் அமிழ்ந்து போகும் அனுபவத்தை தருவதுண்டு. திருமறையில் எரேமியா இறைவாக்கினரின் வாழ்வில் அனுபவித்த துன்ப நிலை தரப்பட்டுள்ளது. எரேமியா அழும் இறைவாக்கினர் மற்றும் துன்புறும் மனிதன் என்றும் அழைப்பர். எரேமியாவின் இறைப்பணியில் அதிகமான பாரங்களும், வேதனைகளும் நிறைந்த மனிதராக காணப்பட்டார். எரேமியா பாவங்களை கண்டித்து உணர்த்தி, சமூக மாற்றம் ஏற்படுத்தும் நோக்கில் உள்ளதை உள்ளபடி பேசி, எடுத்துரைத்து இறைப்பணியை செய்து வந்தார். இதனால் பல இடறல்களையும், துயரங்களையும் அனுபவிக்க நேரிட்டது. நேர்மையான நீதியான வாழ்வு வெளிப்படுத்தும் போது மனிதர்கள் நம்மை விட்டு விலகுவார்கள். கடவுள் நம்மிடம் நெருங்கி வருகிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாக எரேமியாவின் வாழ்வு அமைகிறது. சிதேக்கியா அரசன் அதிகாரத்தையும், ஆட்சியையும் பாதுகாக்கும் பொருட்டு அநீதிக்கு துணை போகிறார். அதே சமயம் தன் உயிரைக் குறித்த எந்த அச்சமுமின்றி எரேமியா கடவுளின் வார்த்தையை வெளிப்படுத்தினார். இன்றும் நேர்மையாக வாழ்பவர்கள் ஓரங்கட்டப்படுகிறார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சி, உரிமை மறுப்பு என பல நிலைகளில் அச்சுறுத்தல் உருவாக்கப்படுகின்றது. எரேமியா இறைவாக்கினர் கொல்லப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கிறார் (எரே 38:4) சிதேக்கியா அரசன் இதனால் எரேமியா இறைவாக்கினரை தண்ணீரில்லா சேறு சகதி நிறைந்த கிணற்றில் இறக்கி விடுகிறார்கள். எனவே எரேமியா சேற்றுக்குள் புதையத் தொடங்கினார். இதனால் மிகவும் துயருற்று வேதனையோடு இருக்கும்

போது கடவுள் இறைவாக்குப் பணியில் அழைத்தபோது கொடுத்த வாக்குத்தத்தை எண்ணிப் பார்த்து தனக்கு ஏன் இந்தப் பாடுகள் என கேள்வி எழுப்பாது கடவுளை மாத்திரம் நம்பிக் கொண்டிருந்தார். இச்சூழலில், சிதேக்கியா அரசனின் அரசவையோருள் ஒருவரான எபேது மெலேக்கு என்ற எத்தியோப்பியர் எரேமியாவின் மரணத்திற்கு எதிராக போராடுகிறார். அதைக் கேட்ட அரசன், எத்தியோப்பியரான எபேது மெலேக்கிடம் தான் முன்பு இட்ட ஆணையை மாற்றி எரேமியாவை சாவதற்கு முன்பே கிணற்றில் இருந்து தூக்கி விடுங்கள் என்று கூறினார். திபா 69:14-ல் சேற்றில் அமிழ்வதிலிருந்து என்னைக் காத்தருளும் என்று கூறுவது போல, எரேமியாவும் காக்கப்படுகிறார். கடந்த 11-மாதங்கள் நாம் சந்தித்த துன்பங்கள், இன்னல்கள், சவால்கள் எல்லாவற்றையும் தாண்டி வாழ்வின் பயணத்தில் நாம் அமிழ்ந்து போகாது காக்கின்ற ஆண்டவர் தொடர்ந்து நம்மை காப்பவராக இருப்பார். மனிதர்களால் ஆகாதென்று தூக்கி வீசப்பட்ட கிழிந்து போன பழம் புடவைகளையும், கந்தை துணிகளையும் கொண்டு எரேமியா கிணற்றிலிருந்து தூக்கி எடுக்கப்படுகிறார். எனவே தான் நம்முடைய இருளான நேரத்திலும் கடவுள் அங்கே இருக்கின்றார். அவரது ஒளி அங்கேயும் ஒளிர்கின்றது Even our dark times God is still there His light still shines என்கிறார் Gurdev Namdhari. கந்தை துணி கிழிந்து போனதால் மனிதனால் தூக்கி வீசப்பட்டது. ஆனால் தூக்கி வீசப்பட்ட அதே கந்தை துணி மனிதனை ஆழத்திலிருந்து தூக்கிவிடப்பட உதவியது, நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது.

### 2. இன்பத்தில் கேட்கப்படும் விண்ணப்பம்

“ஆண்டவரே நான் தக்க காலத்தில் உம்மை நோக்கி விண்ணப்பம் செய்கின்றேன்.” (திபா. 69:13)

விண்ணப்பம் துன்பத்தில் மாத்திரம் ஏறெடுப்பதும் சுயநலம் சார்ந்ததும் அல்ல. அது இன்ப காலத்திலும் ஏறெடுக்கும் உன்னதமான அனுபவம். திபா. 69:13-ல் தக்க காலத்திலும் (எந்த சூழலிலும்) ஆண்டவரை நோக்கி வேண்டுகின்ற பண்பை திருப்பாடல் ஆசிரியர் கைக்கொண்டிருக்கிறார்.

“என் இன்ப துன்ப நேரம்
நான் உம்மைச் சேருவேன்
நான் நம்பிடுவேன்
பாரில் உம்மை சார்ந்திடுவேன்”

என்ற பாடலின் வரிகள் இருசூழல்களிலும் விண்ணப்பத்திற்கான முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. திருமறையில் அன்னாளின்

துன்பத்தில் வேண்டுதல் கேட்கப்பட்டு கடவுளின் அனுக்கிரகம் கிடைத்தது. சாமுவேலின் பிறப்பின் காலத்தை காட்டிலும், ஆண்டவரின் ஆலயத்தில் அவர் வளர்ந்த காலம் அன்னாளுக்கு இன்பமாய் இருந்தது. அன்னாள் சுயநலமற்ற வாழ்வை ஆண்டவருக்கு முன் வெளிப்படுத்துகிறார். இருளான துன்பச்சூழலில் ஆண்டவருடைய பாதம் அமர்ந்து வேண்டிய விண்ணப்பங்களை காட்டிலும் ஆண்டவருடைய சமூகத்தில் ஏலியின் பராமரிப்பில் ஆலயப்பணிவிடையில் முழு ஈடுபாட்டுடன் செயல் பட்ட சாமுவேலின் வாழ்வைக் கண்டு, உள்ளத்தால் அகமகிழ்ந்து பல நன்றி விண்ணப்பங்களை ஏறெடுத்தார்.

இன்றைய வாழ்க்கைச் சூழலில் பல மனிதர்கள் தங்கள் துன்பச் சூழலில் கடவுளோடு இருக்கும் நெருக்கத்தினை தங்களின் இன்பமான காலங்களில் வெளிப்படுத்துவதற்கு தவறி விடுகின்றனர். தங்களுக்கு துன்பம் வரும்போது மட்டும் கடவுள் துணை போதும் என்கிற சுயநலம் கொண்ட கிறிஸ்தவர்கள் பெருகி வருகிறார்கள். திருப்பாடலாசிரியர் தாவீது திபா 34:1-ல் ஆண்டவரை நான் எக்காலமும் போற்றுவேன்; அவரது புகழ் எப்பொழுதும் என் நாவில் ஒலிக்கும் என்று கூறி விண்ணப்பத்திற்குரிய புரிதலை ஏற்படுத்துகிறார. ஜாய்ஸ் மேயர் விண்ணப்பத்தைக் குறித்து சொல்லும் போது எல்லாச் சூழ்நிலைக்கும், இறைவேண்டலே எப்போதும் நம் முதல் மறுமொழியாக இருக்க வேண்டும். (Prayer should always be our first response to every situation) என்கிறார். விண்ணப்பம் கடவுளோடு மனிதன் கொள்ளும் தொடர்பு ஊடகம். எனவே கடவுளோடு கொண்ட நம்முடைய தொடர்பு துண்டித்து விடாதபடி எந்த சூழலிலும் விண்ணப்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து விண்ணரசின் பங்காளிகளாவோம்.

திருவருகைக் காலத்தை கொண்டாடுகிறோம். விண்ணக மேன்மை கொண்ட கடவுள் மண்ணுலக பாடுகளை ஏற்க மனுவுருவானார். மனித சுபாவங்கள், மனிதத் தன்மைகளை முழுமையாகப் பெற்றிருந்த இயேசு தன் இன்பத்திலும், துன்பத்திலும் தன் பிதாவின் சித்தத்திற்கும், திட்டத்திற்கும் ஒப்படைத்தார். எச்சூழலிலும் பிதாவினிடத்தில் விண்ணப்பம் செய்யும் வாழ்வியல் பாடத்தைக் கொண்டிருந்தார். இயேசு கிறிஸ்து வாழ்வு மாதிரியாக வைக்கப்பட்டது போன்று அந்த மாதிரியை கைக்கொண்டு நன்மைகளை பெற முயலுவோம்.

திரு. J. **வைஜூஷ்**

# தவக்காலம்
# புதன் & வெள்ளி அருளுரைகள்

04-03-2022

**தவக்கால முதலாம் வெள்ளி**

## சிலுவையும் தாழ்மையும்

பிலி 2:1-11

**"சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்"** (பிலி 2:8)

முற்காலங்களில் அரசர்கள் மாறுவேடம் பூண்டு நாட்டு மக்களின் மத்தியில் போய் அவர்களில் ஒருவராக நடமாடுவதுண்டு. பார்ப்பவர்கள் அவரை அரசர் என்று அடையாளம் காண்பதில்லை. சாதாரண மனிதர் என்றே எண்ணுவதுண்டு. அரசரோ, தான் அரசர் என்பதை சாதாரண உடையினால் மறைப்பது போல, ஊழுடல் எடுத்த இயேசுகிறிஸ்து தமது இறைத்தன்மையை மனிதத் தன்மைக்குள் மறைத்திருந்தார். அவர் மனிதராய்ப் பிறந்ததால் இறைத் தன்மையை இழந்துவிடவில்லை. அது அவர் மனிதத்தன்மைக்குள் மறைக்கப்பட்டிருந்தது. எனவே அவரைப் பார்த்தவர்கள் அவரை மனிதனாகக் கண்டார்களே ஒழிய மனித வடிவில் வந்த இறைவன் என்று அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அவர் சில இடங்களில் தமது மாட்சியை வெளிப்படுத்தியபோதிலும் (மத். 17:18) அவரது மாட்சிமை மனிதத் தன்மைக்குள் மறைந்திருந்ததால் மற்றவர்கள் அவரை மனிதராகவே எண்ணினார்கள். அவரது தாழ்மையான பண்புதான் கடைசி வரையிலும் அவருடைய மாட்சிமைக்குக் காரணமாய் அமைந்திருந்தது. சிலுவையிலும் தம்மைத் தாழ்த்தினார். அவரது சிலுவை கற்றுத்தரும் பாடங்களைச் சிந்திப்போம்.

### *1. தன்னலம் துறத்தல்*

தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார் (பிலி 2:7).

சிலுவை என்பது பிறர்பொருட்டுத் துன்பத்தை ஏற்றுக்கொள்வது ஆகும். பிற மக்கள் வாழ்வுபெற ஒருவர் தன்னை ஒப்புக்கொடுப்பதுதான் இங்கு எதிர்பார்க்கப்படுகிறது. பிறர் நலம் நாடுமிடத்து தன்னலம் முற்றிலும் துறக்கப்பட வேண்டும். இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வந்ததன் நோக்கமே உலக மக்களின் பாவங்களிலிருந்து அவர்களை மீட்பது தான் (மத் 1:21).

உலக மக்களுக்காக வந்தவர் தன்னலம் முற்றிலும் துறந்தார். அவர் தம்மை வெறுமையாக்கினார். அதாவது, தன்னலம் விட்டு, பிறர் வாழ்வு பெறும் பொருட்டுத் தம்மை ஒப்புக்கொடுத்தார். அவர், பாவிகளான அனைவருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்காக வந்தார் (மாற் 10:45; யோவா 10:10,11). கடவுள்நிலையில் இருந்தவர் மனுவுருவேற்கும் நிலையில் மனிதருக்காகத் தன்னலத்தைத் துறந்து பிறர் நலத்தை முதன்மைப்படுத்தினார்.

தம் சீடர்களும் தம்மைப் போல மாறவேண்டும் என்று எண்ணி அவர்களுக்குச் சீடத்துவப் பயிற்சி கொடுக்கும்போதும் தன்னலம் துறக்க வேண்டும் எனக் கற்றுக்கொடுத்தார். தம் சீடர்கள் தம்மைப் போல தன்னலம் துறந்து பிறர்நலம் நாட வேண்டும்; பிறருக்காகத் துன்புறத் தங்களை ஒப்படைக்க வேண்டும் என அறிவுறுத்தினார். தம்மைப் பின்பற்ற விரும்புவோரிடம் இயேசு கிறிஸ்து எதிர்பார்ப்பது, என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும் என்பது தான் (மாற் 8:34). எனவே, இயேசு கிறிஸ்துவின் சிலுவை கற்றுத்தரும் பாடம், தன்னலம் துறந்து பிறருக்காக துன்பமேற்க வேண்டும், அதாவது, சிலுவை சுமக்க வேண்டும் என்பதாக அமைகிறது. நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர்; ஏனெனில், விண்ணரசு அவர்களுக்குரியது (மத் 5:10).

## *2. மனத்தாழ்மையை அணிதல்*

சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார் (பிலி 2:8)

பிறருக்காக துன்பமேற்க, சிலுவை சுமக்க மனத்தாழ்மையை அணிந்து கொள்ள வேண்டும். மனத்தாழ்மையை இயேசு கிறிஸ்துவிடம் கற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், அவர் சிலுவையில் இறக்கும் வரையிலும் மனத்தாழ்மையோடு இருந்தார். அவரது பிறப்பு முதல் அவருடைய இறப்பு வரையிலும் மனத்தாழ்மையை அவரில் நாம் காணமுடிகிறது. எல்லாவற்றிற்கும் சொந்தக்காரர் ஒரு மாட்டுத் தொழுவத்தில் வந்து பிறந்தார். இயேசுவின் உலகத் திருப்பணிக் காலத்தில், அவர் சென்ற இடமெல்லாம் கூட்டம் கூடியது. அவர் செய்த அற்புதங்கள் மக்களை அவரிடம் கொண்டு வந்தன. ஆனால், அவர்கள் அவரைக் கட்டாயப்படுத்தி அரசராக்க நினைத்தபோது, அவர் அவர்களிடமிருந்து நழுவிக் கொண்டார் (யோவா. 6:15). தம் தந்தையின் நோக்கத்திற்குள்ளாக

தம்மை இணைத்துக் கொண்டு ஒவ்வொரு முறையும் அவருடைய திருவிருப்பத்திற்கும், நேரத்திற்கும் தம்மை ஒப்புக்கொடுத்தார் (யோவா 4:34; 8:29; 12:23). தமக்கு எதிராய்ப் பல பொய்யான குற்றச்சாட்டுகளைச் சொன்னபோதிலும் அவர் ஒன்றும் பேசாமல் தாழ்மையாக இருந்தார். அவருடைய போதனையும், தம்மைத்தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப் பெறுவர்; தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப்பெறுவர் (லூக் 14:11; 18:14) என்பதுதான்.

உலகைப் படைத்தவர், இறைத் தூதர்களால் புகழ்ந்து போற்றப்படுகிறவர், மனு உருக்கொண்டு ஏழையின் கோலமாய் தாழ்மையைத் அணிந்தவராய் வந்தார். அடிமையின் வடிவமும், மனித உருவமெடுத்தலும் அவரது மனத்தாழ்மையைக் குறிக்கிறது. எல்லாவற்றிற்கும், எல்லாருக்கும் மேலாக இருந்தாலும் சீடர்களின் கால்களைக் கழுவினார் (யோவா 13:5). அவர் பூமிக்கு இறங்கி வந்ததே அவரது மனத்தாழ்மையைக் குறிக்கிறது. புகழ் எப்பொழுதும் இயேசுவின் இலக்கு அல்ல. அவருடைய நோக்கம் மிக எளிமையானது. இறைமைந்தராக, அவருக்குக் கீழ்ப்படிந்து, தாழ்மையோடு, தாமாகவே தம்மைத்தாமே, நம்முடைய பாவங்களுக்காகப் பலியாக ஒப்புக்கொடுத்தார். சிலுவையிலும் இயேசு தமது மனத்தாழ்மையை வெளிப்படுத்துவதைக் காண முடிகின்றது. அவர் தாழ்மையுடன் அதனை ஏற்கிறார். அவரது இறப்புக்குப்பின், தந்தையாம் கடவுள் இயேசுவை அனைத்திற்க்கும் மேலாக உயர்த்தி, மாட்சிப்படுத்துகின்றார்.

மனத்தாழ்மை என்பது இயேசுவில் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான பண்பு. தற்பெருமை, அகந்தையை விட்டுவிட்டு, மனத்தாழ்மையோடு வாழவேண்டும். இயேசு கிறிஸ்துவின் உண்மைச் சீடர்களாக வாழ அழைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் தன்னலம் துறந்து, பிறர்நலம் நாடவே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, நாம் தன்னலம் துறந்து, தாழ்மையை அணிந்துகொண்டு, பிறர் வாழ்வுபெறும் பொருட்டு ஒப்படைப்போம். சிலுவை சுமந்து கிறிஸ்துவைப் பின்தொடர்வோம்.

அருள்திரு. T.P. **ஸலீம் தங்க குமார்**

09-03-2022

தவக்கால இரண்டாம் புதன்

## வெளிவேடமாகிய புளிப்புமா

லூக் 12:1-7

**“பரிசேயருடைய வெளிவேடமாகிய புளிப்பு மாவைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள்”** (லூக் 12:1).

உண்மைத் தன்மையும், உயிராற்றலின் துடிப்பும் உன்னதரோடுள்ள உறவின் வழித்தடங்களாக அமையும் போது உயரிய எண்ணங்கள் ஊற்றெடுக்கிறது. இதையே திருமைந்தரின் போதனையில் அறிந்து கொள்ள முடிகிறது. இறையரசு உருவாக்கும் பணியில் புளிப்பு மாவை உருவகமாகக் குறிப்பிட்டு பேசியவரே அதைக் குறித்து எச்சரிப்பது உண்மையை உணர்த்துகிறது.

புளிப்பு மா நற்செயலுக்கும், நற்பணிக்கும், பரம்புதலுக்கும் அடையாளமாக குறிப்பிடும் ஆண்டவர் (மத் 13:33) . லூக் 12:1ல் பயன்படுத்தும் போது அநீதமான செயலுக்கும், சூழ்ச்சும எண்ணங்களுக்கும், ஒப்புமைப்பெற்ற வேடதாரிகளான பரிசேயரின் இழிச் செயல் வெளிப்படுத்தப் பயன்படுத்துகிறார்.

வெளிவேடம் எனும் விஷதொற்று மானிட வாழ்வில் பரவி விடும்போது மரணத்தோடு மரணிக்க வேண்டிய நெருக்கடி சூழல் ஏற்படுகிறது. இதை உணர்ந்தவராக இயேசு நாதர் தனது சீடர்கள் இறையரசின் தகவுகளுக்குட்பட்டவர்களாக செயல்பட வேண்டுமென விரும்பி அவர்களை உருவாக்கம் செய்கிறார். மட்டுமன்று இந்த அடையாளத்தின் வாயிலாக நாம் எப்படி வாழ வேண்டுமெனவும் கற்று தருகிறார்.

### *1. முரண்பாடுகளைக் களைந்து வாழுங்கள்* :

வாழ்வு வாழ்வதற்காகவே என்ற உயரிய சிந்தனைக்கேற்ப, இலட்சியப் பார்வையும், இடறிடா உறுதியும் கொண்டோராய் நடந்திட வேண்டும். ஆனால் இதற்கு எதிர்மறை எண்ணங்களோடும், கருத்தியல்களோடும் வாழ்ந்தவர்களே பரிசேயர்கள். சட்டத்தை பல கட்டளைகளாகப் பிரித்து செயல்படுத்துவதில் தீவிரம் காட்டியவர்கள். ஓய்வுநாள், சடங்கு தூய்மை, பத்திலொன்று போன்றவற்றுக்கு முன்னுரிமைக்

கொடுத்தார்கள். தங்களது நலம் பாதிக்கப்படும் போது அதை நீதிக்குரிய பிரச்சனையாக மாற்றி மனித உரிமையின் மீறல்களாக வெளிக்காட்டிக் கொள்பவர்கள். தந்திரமும், பிரித்தாளும் சிந்தையும் கொண்டோராக, உள்ளொன்று வைத்து புறம் இன்னொன்றைக் காண்பிக்கும் வேடதாரிகளாக காணப்பட்டனர். ஆண்டவரோ இவர்களை அறிந்திருந்தார். ஆகவேதான் எச்சரிப்பாக உணர்த்துகிறார். "கத்தும் கழுதை கவினம் இட்டு நின்றாலும் தத்து பரிபோல் உயர்வு சாருமோ? இத்தகையில் மூடர் அறிந்தவர் போல் முன்னி நிமிர்ந்தாலும் பீடு பெறுவரோ பின்" தரும தீபிகை என்னும் நூலில் பதிக்கப்பட்ட பாடல் பொருள் என்னவெனில் கத்துகின்ற கழுதைக்கு கடிவாளத்தைப் பூட்டி விடுத்தாலும் அது உயர்ந்த குதிரை ஆகாது, அதுபோன்றே அறிவிலிகளும் ஞானவான்களைப் போன்று வேடமிட்டு இறுமாப்புடன் நிமிர்ந்து நின்றாலும் அவருக்கு மேன்மை உண்டாகாது. கழுதை கத்துவதும், அதனுடைய நடையுமே உண்மைத் தன்மையை வெளிப்படுத்துவது போன்றே வேடதாரிகளின் வேடமும் கலைந்து போகும்.

இதை உணர்ந்து நமது வாழ்வையும் சீராக்கிக் கொள்வோம். வைரஸ் போன்று பரவி செயலிழக்க வைக்கும் பாவமாகிய புளிப்பு மாவை (1கொரி 5:8) தவிர்த்திடுவோம். நன்மை, தீமை எது என்பதை வரையறுத்து முரண்பாடுகளில்லாத வாழ்வை தொடர்ந்திடுவோம். மனமாற்றமும், மனந்திரும்புதலும் மாற்றுருவாக்கத்திற்குரிய படி நிலைகள் என்பதை புரிந்து அதற்கேற்ப நடந்திடுவோம்.

### *2. முன்மாதிரியுடன் நடந்திடுங்கள்* :

வாழ்வுக்கும், வார்த்தைக்கும் செயலுக்குமிடையே ஒத்துணர்வு இருத்தவே முன்மாதிரியான வாழ்வுக்குரிய அளவுகோலாகும். அளவு கடந்த மமதையும், சுய நம்பிக்கையும், தற்பெருமையும் அழிவுக்குரிய வாயிலாகும். பரிசேயர்கள் நல்லவர்களாகவே காண்பித்து நெறியற்றச் செயல்களுக்கு துணை போனவர்கள். இயேசு நாதரின் பேச்சில் குற்றம் கண்டுபிடிக்கும் நோக்கிலும் (மத் 22:15, மாற் 12:13) அவரைக் கொல்ல வேண்டுமென்ற சூழ்ச்சியிலும் (மத் 12:14, மாற் 3:6) அவரோடு பயணித்தவர்கள் மட்டுமன்று ஆண்டவரை கைது செய்தவற்கு காவலர்களையும் அனுப்பியவர்கள், ஆன்மீகவாதிகளாகக் காண்பித்து அக்கிரமச் செயல்களை துணிவுடன் நிறைவேற்றினார்கள். தங்களை நேர்மையாளராக நினைத்து மற்றவர்களை இகழ்ந்து ஒதுக்கி இறை முன்னிலையிலிருந்து அகற்றப்பட்டார்கள். (லூக் 18:9-14, மத் 23:28). இந்நிகழ்வே நமக்கும் எச்சரிப்பாகும். ஆகவே இந்நிலைக்கு

தள்ளப்படாமலிருக்க ஆண்டவரின் முன் மாதிரியில் அவர் வாழ்ந்துக் காட்டியது போன்றே (யோவா 13:14,15) நாமும் வாழவேண்டும். அத்தகைய வாழ்வின் நெறியில் தாழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடும், தாழ்வுற்று நொறுங்கிய மனத்தோடும், தயாபரரின் பேரருளை பெற்றுக் கொள்ளும் தகுதியோடும் (1பேது 5:5) தாழ்பணிதலே சிறப்புக்குரியதாகும்.

இறை மக்களாகிய நாம் அனைவரும் அறிவார்ந்தப் பார்வையும், அறிவுக் கூர்மையும், அப்பமுக்கற்ற எண்ணமும், சிந்தையும் கொண்டோராய் அர்ப்பணிப்போம். அர்த்தமுள்ள வாழ்வால் ஆன்மிக மணம் பரப்பிடுவோம்.

அருள்திரு. R. **சாம் பிரின்ஸ்**

11-03-2022



## சிலுவையும் கடவுளின் வல்லமையும்

1கொரி 1:18-25

**"...மீட்புப் பெறும் நமக்கோ அது கடவுளின் வல்லமை"** (1கொரி 1:18).

தவக்கால சிலுவை தியானங்களில், கடவுளின் வல்லமையை வெளிப்படுத்துகிற சிலுவையைப்பற்றிய அறிவும், அதின் வழியாக ஏற்படுகின்ற பற்றுறுதியும் மிக சிறப்பு வாய்ந்தது. சிலுவையின் ஆற்றலையும், மனிதனின் ஞானத்தையும் தொடர்புபடுத்துவதை காண இயலுகிறது. 1 கொரி 1:17 ம் வசனத்தில் பவுல் அப்போஸ்தலர், மனிதன் பெற்றிருக்கிற ஞானத்தோடு சிலுவையைப் பற்றி பிரசங்கிக்க தான் அனுப்படவில்லை என்பதையும், மாறாக, இரட்சிப்பை பற்றிய சிந்தைனையோடும், இரட்சிக்கப்படும் அனுபவங்களோடு சிலுவையின் ஆற்றல் வெளிப்படும் போது, அது கடவுள் தரும் பெலனாக அமைகிறது என்பதையும் தெளிவாக குறிப்பிடுகிறார். ஆகவே தான் தன்னுடைய செய்தியானது நற்செய்தியை பற்றியது. நற்செய்தியானது கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றியது. அது முழுக்க இரட்சிப்பின் அனுபவங்களை உள்ளடக்கியது என்று நாம் புரிந்து கொள்ள அழைப்பு தருகிறார். இங்கு பவுல் மற்றுமொரு உண்மையை வெளிப்படுத்துகிறார். ஞானஸ்நானம் கொடுக்கும்படி கிறிஸ்து தன்னை அனுப்பவில்லை என்றும், கிறிஸ்தவம் என்பது உலகில் காணப்படுகின்ற மற்றொரு சமய அனுபவமுள்ளதாகவோ, சமய மாற்றம் தொடர்புடையதோ அல்ல என்றும் தெளிவுபடுத்துகிறார்.

### *1. சிலுவையில் வெளிப்படும் மீட்பின் வல்லமை :*

மீட்பு என்பது என்ன என்பதையும், எதிலிருந்து மீட்பு வேண்டும் என்பதையும், எப்படி மீட்பு என்பதையும் நாம் விளக்கமாக புரிந்துகொள்ளும் போது தான் சிலுவையிலிருந்து வெளிப்படும் மீட்பின் வல்லமையைபற்றி அறிந்து கொள்ள இயலும். பாவத்தின் சம்பளம் மரணம் என்பது திருமறையின் கூற்று. அப்பாவமானது நமக்கு மரணத்தை பெற்றுத் தரும் என்பது உண்மை. அப்படியானால் நாமெல்லம் மரணமடையும் போது, நாம் செய்திருக்கிற பாவங்களுக்கு விலைகொடுத்து, அதிலிருந்து

விடுபடுகிறோம். நமக்கு எதற்கு, எதிலிருந்து மீட்பு உண்டாக வேண்டும் என்பதைப் பற்றிய புரிதல் அவசியம். அப்படி நாம் விலைகொடுக்க இயலுகிற மரணத்திலிருந்து நம்மை மீட்க மட்டுமா கிறிஸ்து சிலுவையில் பலியாக வேண்டும்? இல்லை. ஆனால் நித்திய மரணத்திலிருந்து நம்மை இரட்சிக்கும்படியாக கல்வாரி சிலுவையில் நித்திய மரண ஆக்கினைகளை தான் அனுபவித்து நமக்கு இரட்சிப்பை வழங்கியிருக்கிறார். மரண ஆக்கினைகளை நாம் அனுபவிக்க வேண்டிய துன்பத்தை சிலுவையில் அவர் ஏற்றுக்கொண்டபடியால், அச்சிலுவையிலிருந்து வெளிப்படும் ஆற்றல் மீட்பை வெளிப்படுத்துகிறது. அம்மீட்பை சொந்தமாக்கும்படியாக கல்வாரி சிலுவையை விசுவாசிக்கும் விசுவாசம் நமக்கு தரப்பட்டுள்ளது. அச்சிலுவையின் மீட்பின் ஆற்றலை பெற்றுக்கொள்ளும் விசுவாசம் நமக்கு அருளப்பட்டுள்ளது.

### *2. விசுவாசத்தில் அருளப்படும் மீட்பின் வல்லமை :*

ஞானத்தின் மிகுதியால் இரட்சிப்பை சுதந்தரித்துக் கொள்ளுதல் என்பது நவீன மயமாக்கப்பட்ட திருச்சபைகளின் போதனைகளாக இருக்கிறது. மீட்பை பெற்றுக் கொள்ளும் தகுதியை திருச்சபைகள் தீர்மானம் செய்வதும், திருவருட்சாதனங்களெல்லாம் தனித்தகுதி, சுயதகுதி இவைகளின் பொருட்டு வழங்கப்பட்டு வருகிற கடினமான சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். சிலுவை அதின் பாடுகள் எனக்காக என்று கிறிஸ்துவை விசுவாசிக்கின்ற போது அதனுடைய இரட்சிப்பின் வல்லமையை நாம் சுதந்தரித்துக் கொள்ளுகிறோம். இரட்சிப்பு என்பது தகுதி அடிப்படையில் பெறுகின்றோம் என்பதல்ல. மாறாக கடவுளின் அருளால் நமக்கு அருளப்படுகிறது என்பதும், அதற்காக இரட்சிப்பின் ஆற்றலை வெளிப்படுத்தி நிற்கும் சிலுவையை, இரட்சகர் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தல் என்பது மட்டுமே இங்கே முக்கியத்துவம் பெறுகிறது.

அருள்திரு. J. **ஜெப டேனியல்**

16-03-2022

**தவக்கால மூன்றாம் புதன்**

## கொள்ளையிட்டுத் தின்னும் ஓநாய்கள்

மத். 7:15-20

**"நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்"** (மத் 7:17).

வெகுதிரள் தொடர்பு சாதனங்களின் அத்துமீறிய ஆதிக்கமும், சமூகத்தாக்கமும் நிறைந்த வாழ்க்கைச் சூழலில் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். ஏனெனில் சுரண்டல்கள், ஏமாற்றுதல், மனச்சலவை, உண்மையை மறைத்தல் போன்ற எதிர்மறைச் செயல்கள் அதிகம் நடைபெறுகிறது. உழைக்காமல் சாப்பிட வேண்டும், சொகுசாக வாழ வேண்டும் போன்ற எண்ணங்களால் பிறரைக் கொள்ளையிடும் மோசமான, பரிதாபமான கலாச்சாரம் பரவிக் கிடக்கிறது. இரத்தத்தை உறிஞ்சி எடுக்கும் வேட தாரிகளின் கூட்டமும் மலிந்து விட்டது. உண்மைகளை சொல்லாமல், பொய்களை தேனொழுகும் சொற்களாலும், தந்திரமான நடிப்புத் திறன்களாலும், திரைகளில் காண்பித்தும் கபட நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தங்களது சிந்தைகளை பிறர் மீது திணித்து தன் வயப்படுத்தும் தவறான அணுகுமுறையால் இறை நெறியை விட்டகன்று போகின்றனர். பிழைப்புக்காக நற்செய்தியைக் கறைப்படுத்தி பிறரது பழிச் சொல்லுக்கும், வசைச் சொல்லுக்கும் கிறிஸ்தவத்தை விற்கும் விற்பன்னர்களாக மாறிவிடுகின்றனர். இச்சூழலில் எத்தகைய நிலையில் வாழ்ந்து இறை மணம் பரப்ப வேண்டுமென தவக்காலத்தில் கற்றுத் தருகிறார் ஆண்டவர்.

### *1. இறைஅறிவில் வளருங்கள்:*

பொய்யிலே பிறந்து பொய்யிலே வாழ்பவர்களாகவே மானிட செயல்கள் மாறியுள்ளன. ஏனெனில் தங்களது நடிப்பு திறன்களால் மனமாற்றத்தை விரும்புவது போல கூறி தவறான நிலைக்கு திருப்பும் சூட்சுமப் புத்திக்காரர்களின் நெறியிழந்த நிலைகளால் பக்தி வாழ்வு கேள்வியாக்கப்பட்டுள்ளது. நன்மை எது தீமை எது என்பதைப் பகுப்பாய்வு செய்து வாழ்வதற்குரிய உரிமையை பொறுப்புணர்வை எதிர்பார்ப்புக்கு எதிரான நடவடிக்கையால் வீழ்ச்சியும், உடைச்சலுமே ஏற்பட்டது. எந்நிலையிலும் வெளித்தோற்றத்துக்கு மயங்கிவிடாமல், உள்ளத்தின்

ஆழத்தை உற்று நோக்கும் இறையவருக்கு அஞ்சி நடப்பதே இறை அறிவின் அலங்காரம். அதை விடுத்து அநீதங்களுக்கு துணை நின்று, துணிகரமான தவறுகளைச் செய்து, வஞ்சகத்தால் வீழ்ந்துபோவது தான் ஓநாய் குணத்தின் வெளிப்பாடு. இதை உள்வாங்கியே நம் முன்னோர்கள் "ஆடு நனைகிறது என்று ஓநாய் ஆழுததாம்" என வெகுளியாகக் குறிப்பிட்டுள்ளார்கள். எப்படியெனில் ஆட்டுக்கும், ஓநாய்க்கும் ஒத்துப்போகும் குணமே இல்லை. ஏனெனில் இரண்டின் குணங்களும், நடவடிக்கைகளும் வேறுபட்டேயிருக்கிறது. இந்நிலையில் சொல்லப்பட்டுள்ள இந்தக் கூற்றில் ஆடு மழை நீரில் நனைகிறது என ஓநாய் அழுகிறது. ஆட்டின் மீது கொண்ட இரக்கத்தினால் அல்ல மாறாக பாசாங்கு. வெளிவேடம் என்பது தான் உண்மை. இதைப் போன்றே இறைவாக்கினர் என்ற வெளிவேடப் போர்வையைப் போர்த்தி வலுவற்றவர்களிடம் இரக்கம் காண்பிப்பது போலவும், அவர்களின் மனமாற்றத்தை விரும்புவது போலவும் கூறி தவறான வழிகளில் திரும்பினார்கள். அன்பும், கரிசனையுமுடையவர்களைப் போல நடித்து வாழ்வாதாரத்தை விழுங்க முற்படும் போலி இறைவாக்கினர்களிடம் இறை அறிவோடு நடந்து கொள்ள வேண்டும்.

இத்தகையோரின் வாக்கை கேட்டு மயங்கி விடாமல் அவர்களின் செயலைப் பார்த்து அறிந்து கொள்ள வேண்டுமென விரும்பும் ஆண்டவர் உருவகப்படுத்தியது தான் முட்செடி, திராட்சைப் பழம், முட்பூண்டு, அத்திப்பழம் போன்றவைகளாகும். இவை அனைத்தும் எதிரும் புதிருமானதாகும். ஒன்றிலிருந்து இன்னொன்றின் தன்மையை எப்படி நாம் அறிந்து கொள்ள முடியாதோ அவ்வாறே வேடமணிந்து வலம் வருகிறவர்களிடம் எதையும் பெற்றுக் கொள்ள முடியாது. ஆகவே விழிப்புடன், நம்பிக்கையில் நிலைத்திருந்து, துணிவுடன் நடந்து, வலிமையுடன் செயல்படுங்கள் என்ற (1 கொரி 16:13) பவுலாரின் போதனைக்கேற்ப இறை வழியில் இறை அறிவோடு வாழ்ந்திட வேண்டும்.

### *2. இடறிடாமல் நிலைத்திருங்கள்:*

நமது பற்றுமையை அசைத்துப் பார்க்கும் நிகழ்வுகள் எதிர்பாரா நிலையில் நடைபெறும் போது அதையே தங்களுக்கு சாதகமாக்கி, தவறானப் போதனைகளைத் திணிக்க முற்படுபவர்கள் தான் ஓநாய்களுக்கு ஒப்பானவர்கள். எப்படியெனில் ஓநாய்களுக்கு முரட்டுத்தனமும், மத வெறியும், துணிச்சலும், பேராசையும் அதிகம். அவ்வாறே போலி இறைவாக்கினர்களும் (மத் 7:15) திருப்பணிக்கு எதிரானவர்களும் (மத் 10:16, லூக் 10:3). சபைகளுக்குள்ளே எழும்பும் உண்மைக்கு எதிரானவர்களும்

(திபா 20:29,30). தந்திரமாய் தன்வயப்படுத்த முனையும் போது இடறிடாமல் மன உறுதியுடனிருந்து வாழ்வைக் காத்துக் கொள்ள வேண்டும் (மாற் 13:13, லூக் 21:19).

16ம் நூற்றாண்டில் இங்கிலாந்து நாட்டை எட்டாம் ஹென்றி ஆளுகைச் செய்த காலத்தில் கர்த்தினலாக இருந்த இறைப்பணியாளர் தாமஸ் வோல்ஸி (Thomas Wolsey) அவர்கள், இறைப்பற்றில் உறுதியுடனிருந்த இவர்கள் சுயநலமும், பேராசையும் கொண்ட அரசரின் சூழ்ச்சி நடவடிக்கையில் இடறிப்போனார். இதனால் அரசரின் ஒழுக்கமற்ற செயல்களுக்கு அங்கீகாரம் அளிக்க கட்டாயப்படுத்தப்பட்டார். இறை நெறியை விட்டு எதிர்பாரா நிலையில் இடறிய கர்த்தினலின் உள்ளம் சோர்புற்றது. இந்நிலையில் அரசரின் நடவடிக்கைகளுக்கு உடன்படமாட்டேன் எனக் கூறியதால் துன்ப நிலைகளுக்குட்படுத்தப்பட்டார். நாளுக்கு நாள் அவரது உடல் நலிவடைந்தது. தன் நாள்கள் நெருங்கி விட்டதை உணர்ந்த அவர் “கடவுளில் கொண்டிருந்த நம்பிக்கையை விடுத்து அரசரின் தந்திரத்தால் தடுமாறியதின் விளைவே இந்நிலை” எனக் குறிப்பிட்டார். நாளடைவில் மன உளைச்சலோடு மரணத்திற்குள் நுழைந்தார். இறை பற்றாளரையே அசைத்த ஓநாயின் கொடூரம் நமக்கும் எச்சரிப்பல்லவா?

வலதுபுறம், இடதுபுறம் சாயாமல் ஆண்டவரின் வழியில் பயணிக்க இறைவாக்குக்கு செவிகொடுத்து, இறைகட்டளையையேற்று, இறைமணத்தின் செயல்களோடு வாழ்ந்திடுவோம். எந்நிலையிலும் பாதுகாப்பவரின் பரம கரங்களுக்குள் அர்ப்பணிப்போம்.

அருள்திரு. R. **சாம் பிரின்ஸ்**

18-03-2022

**தவக்கால மூன்றாம் வெள்ளி**

# சிலுவையும் நலமருள்தலும்

1 பேதுரு 2:18-25

**"...அவர் தம் காயங்களால் நீங்கள் குணமடைந்துள்ளீர்கள்"** (1பேது 2:24).

சிலுவை ஒரு கொலைக்கருவி தூக்கு மரமாகவும் உரோமை அரசின் அடிமைகள், அரசுக்கு எதிராகப் புரட்சி செய்கிறவர்களுக்கு அளிக்கப்படும் மரணதண்டனையாகச் சிலுவை இருந்து வந்தது. இந்தச் சிலுவையைத்தான் இயேசு தம் சீடர்களுக்குத் தியாகத்தின் அடையாளமாகவும், நலமருளி வாழ்வளிக்கும் நம்பிக்கையின் சின்னமாகவும் இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவோடு நெருங்கி வாழும் போது வரும் துன்பங்களையும், வேதனைகளையும் சுமக்க நாம் தியாகம் செய்ய முன் வரவேண்டும். அதற்காகவே சிலுவை தியாகத்தின் சின்னமாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. "பிறர் வாழ வேண்டுமெனில் நான் சாக வேண்டும்." நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உலகத்தின் மக்களுக்காகவே தம்மையே தியாகமாக்கிக் கொண்டார். உண்மையாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். எசா 53:4 -இல் நாம் செய்த குற்றங்களுக்கும் பாவத்திற்கும், அவர் மரித்து நீதிக்கு வாழும்படி அவர் தாமே தமது உடலிலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார். இந்தத் தியாகத்தினால் நாம் பெற்றுக்கொண்டவைக் குறித்தும் அவற்றுக்கு நம் மறுமொழி என்ன என்பது குறித்தும் தியானிப்போம்.

## *1. சிலுவையிலிருந்து பாவ விடுதலை* :

குணமாகுதல், நலம் பெறுதல் யாவும் இறைவன் அருளும் அருட்கொடைகள். இவை உடலை மட்டும் சார்ந்தவையல்ல, ஆத்துமாவையும் சார்ந்தவை. உண்பதும், உடுப்பதும் மட்டுமல்ல வாழ்வு. அதைவிட மேலானது அதாவது, இருத்தலினின்று நிறைவான வாழ்விற்கு பயணிப்பதாகும்.

எரோனிமுஸ் சொன்னார், "முழு மனித வாழ்வே இறைவனின் மகிமை."

லேவி. 1:4 -இல் ஒரு நபரின் பாவத்துக்கான காணிக்கையாக ஒரு மிருகத்தைக் கொண்டு வரும் போது அவர் எரி பலியின் தலையில் கை வைக்க வேண்டும். மேலும் அவருக்காக பிராயசித்த நாளில் தலைமைக்குரு மக்களின் பாவங்களைச் சுமக்க ஓர் ஆட்டைத் தேர்ந்தெடுக்கிறார் (லேவி 16:21-22).

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் விலங்குகளைப் பலியிடுவதன் வழியாகத் தங்கள் பாவங்களில் இருந்து விடுதலை பெறலாம் என நம்பினர். விலங்குகளைப் பலியிட்டு வந்தனர். ஆனால் பாவச் செயல்கள் குறையவில்லை.

இந்த நிலையில் கடவுள் குற்றமற்ற தம் மகன் மேல் உலகினரின் பாவங்களைச் சுமத்தி அவரைப் பலியாக்கி மக்களைப் பாவங்களில் இருந்து விடுவிக்கிறார். இயேசுவில் தான் இச்செயல் முழுமை பெறுகிறது. இயேசு மட்டும் தான் தம் உயிரைக் குற்றம் நீக்கும் பலியாகத் தந்தார். பாவிகளின் பாவங்களுக்கான தண்டனையைத் தாமே ஏற்றுக்கொண்டார்.

பாவம் செய்கிற எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான். (யோவா 8:34). பாவத்திலிருந்து விடுதலை கொடுக்கும்படியாகக் குமாரனாகிய இயேசு நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார். அந்த சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே நம்மை அடிமை என்கிற நிலையிலிருந்து மாற்றி பிள்ளைகள் என்ற உரிமையுள்ள உறவு நிலைக்குக் கொண்டு வந்தார்.

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற பின் அடிமை முறையை ஒழிக்க ஜெபத்துடன் முயற்சி மேற்கொண்டார். இதற்கு பல எதிர்ப்புகள், உள்நாட்டுப் போர் ஏற்பட்டது. ஆனால் அமெரிக்காவில் அடிமை முறை முற்றிலும் ஒழிக்கப்பட்டது. இதனை விரும்பாத ஜாண் பூத் என்பவர் ஆபிரகாம் லிங்கனைச் சுட்டுக் கொன்றார்.

லிங்கனின் மரணம் அடிமை முறைக்குச் சாவுமணி அடித்தது. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் நமது பாவங்களுக்குச் சாவுமணி அடித்தது. நம்மை அரச குருக்களாக உயர்த்தியிருக்கிறார்.

பேதுரு இங்கு மீட்பைக் குறித்துப் பேசுகிறார். நம் பாவங்களுக்கு எனச் சொல்லும் போது நம்முடைய பழைய நிலையைக் குறிக்கிறது. தழும்புகளால் குணமானீர்கள் என்பது பாவ நோயிலிருந்து சுகம் பெறுவதைக் கூறுகிறார். சிலுவை பாவ நோயிலிருந்து வாழ்வு தருகிறது.

***2. சிலுவையின் வழி புது உறவு*** :

கல்லைக் காயப்படுத்துவது சிற்பியின் நோக்கமும் அல்ல; சிலுவையைச் சுமக்க வைப்பது கடவுளின் நோக்கமும் அல்ல.

மனித குலத்தை மீட்பதற்காகச் சிலுவைச் சாவை ஏற்க முன் வந்த இயேசு, மண்ணக மாந்தர் அனைவரும் வாழ்வு பெற கோதுமை மணியென துன்பங்கள் வழியாக மீட்பைக் கொடுத்தார். அவர் நம்மைப் பார்த்துச் சொல்லுவது,

ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன் (மத்.16:24).

நம்முடைய வாழ்வு சிலுவையை நோக்கி இருக்கும் போது அந்தச் சிலுவை நமக்கு முழு வாழ்வை அளிக்கிறது. அவர் அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்து கடவுளின் சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

புனித அகுஸ்தினார் சொன்னார், “இயேசு நமக்காகத் தம்மையே தியாகப் பலியாகத் தந்ததன் வாயிலாக அவர் நம் மீது இருந்த குற்றங்களை, அதற்கான தண்டனைகளை ஒட்டு மொத்தமாக நீக்கி விட்டார். அனைவரின் பாவங்களுக்கு பரிகாரமாக ஒரு தூய்மையான பலி தேவைப்பட்டது. அத்தகைய பலிக்குத் தகுதியாக இருந்தவர் இயேசு மட்டுமே. எனவே அவர் தம்மை வழங்கி நம்மை மீட்டிருக்கிறார். எனவே அவர் சொல்படி தன் சிலுவையை எடுத்து அவரைப் பின்பற்றக் கடவோம் என்றார்.

சிலுவையினால் நலம் பெற்றவர்கள் அச்சிலுவையை மேன்மைப்படுத்தி கடவுளோடு புது உறவு கொண்டனர்.

பவுலடிகளார் சொல்லும் போது, நான் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்தும் பெருமை பாராட்டமாட்டேன் (கலா 6:14) என்று கூறுகிறார்.

வாழ்வது ஒரு முறை; வாழ்த்தட்டும் நம் தலைமுறை என்பார்கள். துன்பங்களையும், துயரங்களையும் எண்ணி துவளாமல் சிலுவையண்டை வருவோம். நலம் பெற்று மகிழ்ச்சியோடு கடவுளில் புது உறவுடன் வாழ்வோம்.

அருள்திரு. C. **போவாஸ்**

23-03-2022

தவக்கால நான்காம் புதன்

## தம்பட்டமடிக்கும் தற்புகழ்ச்சி

மத். 6:1-18

**"இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள்"** (மத் 6:1).

இறைச்சாயலில் படைக்கப்பட்ட மானிடம் அன்பு, கனிவு, பரிவு, பகிர்வு எனும் உறவுக்குரிய பிணைப்போடு வாழவேண்டுமென்பதும், புகழ்ச்சிக்கும், போற்றுதலுக்குமுரிய உன்னதருக்கு முன் மகா வணக்கத்தோடு பணிந்து வாழவேண்டுமென்பதும் எதிர்பார்க்கப்பட்ட விருப்பமாகும். ஆனால் மானிடமோ நோக்கமறியாது, உண்மையை உணராது, பிறரை உணர்வுகளைக் காயப்படுத்தி வாழும் இக்காலச் சூழலில் வாழ்வின் உயிர்மூச்சு கடவுளின் அருட்கொடை என்பதை உணர்த்துவது மிக முக்கியமானதாகும். பக்திப் போர்வையில் பகட்டு வாழ்வு வாழ்ந்து, செருக்கு எனும் மமதையில் மயங்கி எல்லாம் எனக்கு தெரியும் என வாழும் மனிதர்களை சீராக்கி சரியான வழிக்குள் கொண்டு வருவது தான் தவக்காலம்.

எல்லா நாட்டையும் எனதுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவேன் என முழக்கமிட்ட கிரோக்க அரசரான மகா அலெக்சாண்டர் கூறிய கூற்று "ஒன்றுமில்லாமல் வெறுமையுடன் விடைபெறுகிறேன்" என்பதாகும். வாழ்வது சிலகாலமே என்பதை மறந்து பணம், பதவி, படிப்பு, குலப் பிறப்பு இவைகளை வைத்து தற்புகழ்ச்சியுடன் நடந்து கொள்ளும் பலரை நாம் பார்க்கிறோம். "நிறைகுடம் தழும்பாது, குறைகுடமே கூத்தாடும்" "நம் சாதனைகளுக்கு நாமே செய்யும் சவப்பெட்டி தான் தற்புகழ்ச்சி" என்பதையும் மறந்து மானிடம் தடுமாறிக்கொண்டிருக்கிறது. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் தம்பட்டமடிந்து தற்புகழ்ச்சியில் மயங்கிய பரிசேயர், சதுசேயர் மறைநூல் அறிஞர்களை எச்சரித்தார். இந்தக் கூற்றையே நமக்கும் எச்சரிப்பாக தந்து வாழ்வின் மதிப்பீடுகளைக் கற்று தருகிறார். மட்டுமன்று நம்மிடம் ஆண்டவர் எவ்வாறு வாழ அறிவுறுத்துகிறார்.

### *1. நற்பண்புகளால் தகுதி பெறுங்கள் :*

திருச்சட்ட நூலைக் கற்றறிந்திருந்தவர்களை மறைநூல் அறிஞர்கள், தங்களையே அறிவாளிகளாகவும், ஆன்மீகவாதிகளாலும் காண்பித்துக்

கொண்டிருந்த பரிசேயர், சதுசேயர் போன்றோர் இறைமணத்திற்கேற்ப வாழாமல், இவ்வுலக மேன்மைக்குரிய நிலையிலே வாழ்ந்தார்கள். அதற்கேற்ற நிலையிலே அவர்களது செயல்பாடுகளும் அமைந்திருந்தது. இதை அறிந்திருந்த ஆண்டவர் அவர்கள் விசுவாச தெளிவுப் பெற வேண்டுமென விரும்பி அவர்களை அறிவுறுத்துகிறார். எப்படியெனில் அறச் செயல்களும், தர்மம் செய்தலும், இறைவேண்டலும், நோன்பிருத்தலும் பக்தி செயல்களின் அளவீடுகளே தவிர தம்பட்டம் அடித்து தற்புகழ்ச்சியில் மமதைக் கொள்ள அல்ல என்பதை உணர்த்துகிறார்.

இஸ்ரயேலரும் பக்தி நிலையில் பாசாங்குடன், இறைமதிப்பீடுகளுக்கு எதிரான நிலையில் நெறிமுறைகளை விடுத்து தங்களை முன்னிலைப்படுத்திய போது இறைவாக்கினர் ஏசாயா வாயிலாக எச்சரித்தார் (ஏசா 2:11,12, 58:3-6). வாழ்வுக்குரிய படிநிலைகளில் நிலை நிற்க தெளிவுப்படுத்தினார். நாமும் ஆன்மிக தெளிவுடன் நடந்து கொள்வது ஏற்புடையதாகும். இறையன்பினால் மீட்புக்குரியவர்களான நாம் எப்போதும் நற்பணியில் தழைத்தோங்க வேண்டும் (எபே 4:2,3, கலா 6:9). அதை விடுத்து தகுதிக்கு அதிகமாக தன்னை பெரியவராக மதிப்பிட்டுக் கொண்டால் அது தற்புகழ்ச்சியின் வாயிலான ஆபத்துக்கு தள்ளிவிடும். ஒருமுறை ஞானியர் ஒருவர் குளத்தின் கரையோரமாக சென்று கொண்டிருந்த போது கால் தடுமாறி கீழே விழ வேண்டிய சூழலில் அங்கு வந்த ஒருவர் ஞானியர் விழாமல் தாங்கிப் பிடித்து காப்பாற்றினார். ஞானியர் அவருக்கு நன்றி கூறி விடைபெற்று சென்றார். ஆனால் காப்பாற்றிய மனிதரோ அமைதியாக இராமல் ஞானியரை எவ்விடத்தில் கண்டாலும் பிற மனிதர்கள் முன் நான் தான் ஞானியரை குளத்தில் விழாமல் காப்பாற்றியவன் என தம்பட்டம் அடித்துக் கொள்வார். வழக்கத்தின் படி மக்கள் கூடியிருக்கும் குளத்தின் ஓரமாக வந்த ஞானியர் எதிர்பாரா நிலையில் குளத்தில் குதித்து விட்டார். ஞானியர் தவறி விழுந்ததாக நினைத்த பலர் இறங்கி தேடுதல் தொடர்ந்தனர். அதில் தம்பட்டம் அடித்தவரும் ஒருவர். ஆனால் ஞானியரோ எதைப் பற்றியும் கவலைப்படாமல் நீச்சலடித்து விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது தான் அனைவருக்கும் தெரிந்தது. ஞானியருக்கு நீச்சல் தெரியுமென்று. இந்நிலையிலே ஞானியர் அங்கிருந்த மக்களிடம் தம்பட்டம் அடித்தவரை அறிமுகப்படுத்தி எனக்கு நீச்சல் தெரியாது என நினைத்து இந்த தனவான் ஒரு முறை விழாமல் காப்பாற்றினார் எனக் கூறினார். இதைக் கேட்ட தம்பட்டம் அடித்து தன்னையே பெருமையாக எண்ணியவர் அவமரியாதையுடன்

வெளியேறினார். தகுதிக்கு அதிகமாக தற்புகழ்ச்சி கொள்கிறவர்கள் வருகையின் காலம் அண்மையில் இருக்கிற படியால் தந்தையயகிய கடவுளின் கைம்மாறு பெற மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளை கொடுக்கவும், நற்பண்புகளால் தகுதிப் பெறவும் ஆண்டவர் கூறிய போதனையே நமக்கும் ஏற்புடையதாகிறது.

### *2. நற்செயல்களால் சான்று பகருங்கள்:*

மானிட வாழ்வின் கட்டமைப்புக்கான எந்தவொரு நற்செயல்களும் இறையரசு நெறியுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். ஏனெனில் இறைப்பணி என்பது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் தன்னலம் துறந்து நற்பணியாற்ற வழங்கப்பட்டிருக்கும் அங்கீகாரமாகும். பிறரது பார்வையில் தற்புகழ்ச்சி எனும் மயக்க மமதையில் பேதலித்து அதற்காக அறச்செயல்களை செய்வதோ, தங்களை மட்டுமே பக்திக்குரியோராக காண்பித்துக் கொள்வதோ ஏற்புடையதன்று, மாறாக நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும். ஆண்டவர் எதிர்பார்ப்பதெல்லாம் மானிட வலிகளைப் புரிந்து கொண்ட நிலைகளில் அவர்களிடம் மனதுருக்கத்துடன் நடந்து கொள்வது தான் (மத் 9:35,36) மட்டுமென்று அழுத்தப்பட்டோரின் சுமைகளை ஏற்கும் சுமை தாங்கிகளாக ஒப்படைப்பதுமாகும். ஆனால் இந்நோக்கத்தைத் தவிர்த்து நம்மை மட்டுமே உயர்வாக நினைத்து, பிறரை தரம் தாழ்த்திப் பார்ப்பது, தற்புகழ்ச்சியில் தடம் புரளுவது நமக்கு நாமே வீழச்சியை தேடிக் கொள்வது என்பது நெபுகாத்நேசரின் வாழ்வு வாயிலாக அறிந்து கொள்ளும் செய்தியாகும் (தானி 4:30-33).

ஆடம்பர உலகில் ஆன்மிகத்தை மையப்படுத்தி சொகுசான வாழ்வு வாழ முன்வருவதும், அதற்காக இறைவாக்கை தங்களுக்குரியதாக சாதகமாக்கிக் கொள்வதும் ஆபத்தானதாகும். ஆகவே அதை விடுத்து அற செயல்கள், இறைவேண்டல், உண்ணநோன்பு ஆகிய அனைத்தும் மக்களால் ஏற்றுக் கொள்ளப் படுபவையாக அன்று மாறாக கடவுளால் ஏற்கபடுபவைகளாகயிருக்க வேண்டும். இறையுறவுக்கு ஊடகமானவைகளால் நாம் தம்பட்டம் அடிக்காமல் கடவுளின் நன் மதிப்பிற்குரியோராக வாழ்ந்திடுவோம். திருச்சிலுவையின் தடயத்தினில் மீட்பின் ஒளியில் விழிகளை உயர்த்தி, விண் வாழ்வின் பார்வையில் என்றென்றும் பயணிப்போம்.

அருள்திரு. R. ***சாம் பிரின்ஸ்***

25-03-2022

தவக்கால நான்காம் வெள்ளி

## சிலுவையும் அநீதியான அதிகாரமும்

கொலே. 2:8-15

**"தம் சிலுவையில் கிடைத்த வெற்றியால் ஆட்சியாளர் அதிகாரம் கொண்டோர் ஆகியோரின் படைக்கலன்களைக் கிறிஸ்து பிடுங்கிக் கொண்டு அவர்களை இகழ்ச்சிக்குள்ளாக்குமாறு ஊர்வலமாக இழுத்துச் சென்றார்"** (கொலே. 2:15).

தவக்காலம் அடிமை வாழ்வை விடுத்து உரிமை வாழ்வுக்கு அழைக்கிறது. அடிப்படை உண்மைக்குத் திரும்புதல். நவீன உலகில் கிறிஸ்துவை, சிலுவையில் அவர் அடைந்த வெற்றியை கொண்டாடாத மலிவுத்தனமான ஆன்மிகம் பெருகிவிடுகிறது. தவறான கொள்ளைகளும், கோட்பாடுகளும் இறைமக்களின் ஆன்மிக வேர்களை சிதைக்கிறது. மறுபக்கம் அரசுகளின் அத்துமீறிய அதிகாரப் போங்குகளால் பாதிக்கப்படும் சாமானிய மக்கள் இப்படிப்பட்ட நிலை கொலோசை திருச்சபையிலும் நிலவியது. மக்கள் கிறித்துவை விடுவித்து அநீதியான அதிகாரங்களையும், தவறான சடங்குகளையும், முறை தவறிய வாழ்வையும் முதன்மைப்படுத்திய போது தூய பவுல் தனது கடிதத்தின் வழியாக கிறித்துவின் முதன்மையை உணர வைத்து அனைத்து அதிகாரங்களின் மீதும் சிலுவை வழி அவர் அடைந்த வெற்றியையும் அனைத்து அதிகாரங்களுக்கு மேல் அவருக்கிருந்த அதிகாரத்தையும் தெளிவுபடுத்துகிறார். கொலே 2:15 ல் "தம் சிலுவையில் கிடைத்த வெற்றியால் ஆட்சியாளர் அதிகாரம் கொண்டோர் ஆகியோரின் படைக்கலன்களைக் கிறிஸ்து பிடுங்கிக் கொண்டு அவர்களை இகழ்ச்சிக்குள்ளாக்குமாறு ஊர்வலமாக இழுத்துச் சென்றார்"

கிறிஸ்து சிலுவையில் பெற்ற வெற்றி இன்றைய திருச்சபைக்கு விடுக்கும் சவால்.

### *1. விதியை மாற்றியது :*

ஆண்டவர் இயேசு சிலுவையில் அடைந்த வெற்றி அநீதியான அரசுகள் கட்டமைத்திருந்த விதியை மாற்றி அமைக்கப்படுகிறது. கொலோ 2:15 ல் பேரரசர்களின் வெற்றிப்பவனி உருவகப்படுத்தப்படுகிறது. எதிரிநாட்டை வெற்றிகொள்ளும் உரோமைப் பேரரசர் ஜூப்பிட்டர் கடவுளுக்கு உடையணிந்து, படைத்தளபதிகள் மற்றும் போர் வீரர்களுடன்

முன் செல்வர். தோல்வியுற்ற அரசர்களை கைதிகளாக்கி ஊர்வலத்தில் இழுத்து வருவார்கள். இந்த வெற்றியை ஜூப்பிட்டர் கடவுளின் வெற்றியாகக் கொண்டாடினார்கள். ஊர்வலத்தில் கொண்டுவரப்படும் கைதிகளை நாட்டு மக்கள் சுற்றி நின்று அவமானப்படுத்தி, ஏளனம் செய்வார்கள். இது தான் அன்றைய ஊரோமை பேரரசு ஏற்படுத்தியிருந்த விதி. ஆனால் தூய பவுல் கொலேசே திருச்சபைக்கு அதிகாரங்களை இகழ்ச்சிக்குள்ளாக்க சிலுவை எடுத்து வீதிக்கு வரவேண்டும். திருச்சபையின் வெற்றி நாம் எடுக்கும் சிலுவையைப் பொறுத்து அமையும். ஆனால் ஒன்று விதிகள் மாறும்.

### *2. விடியலைத் தந்தது :*

இருள் விலகும் போது விடியல் தோன்றும் இது இயற்கையின் விந்தை. இங்கு மக்களது சுதந்திர வாழ்வை இருட்டடிப்புச் செய்து மகிழ்ந்த ஆட்சியாளர் அதிகாரம் கொண்டோர் கிறித்துவின் சிலுவை வெற்றிப்பவனியில் இழுத்துச் செல்லப்பட்டார்கள். எனவே, மக்கள் வாழ்விற்கு தடையாக இருந்த இருள் விலக்கப்பட்டு கட்டாய விடியல் கொண்டு வரப்பட்டது. மட்டுமல்ல கிறித்துவை அறியாத வாழ்வு கடன்பட்ட வாழ்வாக அடையாளப்படுத்திய பவுல் கிறித்து அதை அழித்து, சிலுவையில் ஆணியடித்து அறவே ஒழித்தால் கிடைத்த மன்னிப்பால் பாவ இருளிலிருந்து மீட்பின் விடியலை வைத்தார் (கொலே 1:14). அதேபோன்று மீட்பிற்கு தடையாக இருந்த கிரேக்கர்களின் ஞான உணர்வு கொள்கை, யூதர்களின் விருத்தசேதனம் வானதூதர்கள் வழிபாடு (கொலே 2:18). வேறு சிலரின் மாய வித்தகைள், ஆவி உலகத் தொடர்பு, முதாதையர் வழிபாடு இவைகளால் மீட்படைய முடியாது. விளக்கும் போது இந்த அநீதியான அதிகாரங்களையும் அவர்கள் ஏற்படுத்தியிருந்த அநீதியான விதிகளையும் ஆண்டவர் இயேசு சிலுவையில் அடைந்த வெற்றி மாற்றி அமைந்தது என்கிறார். மாத்திரமல்ல, தனது பவனியில் ஆட்சியாளர், அதிகாரம் கொண்டோர் ஆகியோரின் படைக்கலன்களைக் கிறித்து பிடிங்கிக் கொண்டு அவர்களை இகழ்ச்சிக்குள்ளாக்குமாறு ஊர்வலமாக இழுத்து இழுத்துச் சென்றார் (கொலே 2:15) என்கிறார். அநீதியான அதிகாரங்கள் பெறும் வெற்றியும், புகழ்ச்சியும், கிறித்துவின் சிலுவை முன் தோல்வியாக, இகழ்ச்சியாக முடிகிறது. விதி மாற்றம் தானே. கிறித்து சிலுவையில் அடைந்த வெற்றியால்

a. அநீதியான தண்டனை கழுவி, நீதிக்கான பரிசாக பரிணமித்தது

b. அவமானச் சின்னம் அடையாளச்சின்னமானது (கலா. 3:20).

எனவே திருச்சபை அநீதியான அதிகாரங்களைக் கண்டு பயப்படாமல், கிறித்துவிலும், அவர் அடைந்த சிலுவை வெற்றியிலும் நம்பிக்கை வைக்க வேண்டும். மக்களை ஒடுக்கும் அநீதியான மாறாக, கிறித்துவால் மட்டுமே மீட்படைய முடியும் என்கிறார். ஆகையால் தூய பவுல் ஒரு புது வாழ்விற்கு அழைக்கிறார். அந்த வாழ்வு கிறித்துவில் பெறும் வாழ்வு (கொலே. 3:4).

எனவே அன்பிற்குரியோரே தவக்காலம் நம்மை ஒரு புது வாழ்விற்கு அழைக்கிறது. திருச்சபை சிலுவையை வாழ்வாக்க வேண்டும். மக்களது வாழ்வை இருட்டடிப்பு செய்யும் அநீதியான அதிகாரங்கள், தவறான கொள்கைகள், கோட்பாடுகள், மனித நேயமற்ற செயல்கள் மாற்றப்படவும், திருச்சபை கிறித்துவில் முழுமை அடையவும், திருச்சபை சிலுவை எது;து வீதிக்கு வரவேண்டும். அப்போது விதிகள் மாறும் மக்கள் விடியலைக் காண்பார்கள்.

அருள்திரு. A. **ஆபிரகாம் ஜஸ்டின் குமார்**

30-03-2022

**தவக்கால ஐந்தாம் புதன்**

## இதயத்தை மந்தமாக்கும் பாரம்

லூக் 21:34-38

**"... இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாத வாறும்.... எச்சரிக்கையாயிருங்கள்"** (லூக் 21:34).

இதயம் மனிதரது உணர்ச்சி மிகு அறிவார்ந்த, சுதந்திரமான, தனித்தன்மையாகவும், உணர்வுகளோடு தொடர்பு கொண்டதாகவும் இறையவரின் படைப்புக்குரிய ஊக்கியாகவும் திருமறை தெளிவுபடுத்தியிருக்கிறது. கண்களுக்கு புலப்படாத உள்ளுறுப்பாகிய இதயம் நினைவுகளின் கருவூலமாகவும், பல்நிலை உணர்ச்சிகளின் தொகுப்பாவும் படைக்கப்பட்டுள்ளது. மட்டுமன்று நன்மை, தீமை எது என்பதை பகுத்தறிந்து நடத்தும் ஆற்றலையும் உள்ளடக்கியுள்ளது. உயிர்துடிப்பின் அடையாளமான இதயமே தீமைகளின் கருவறையாகவும், அக்கிரமச் செயல்களின் பட்டறையாகவும், உலகபட பொருளின் அத்துமீறிய பற்றுக்கு அடிமைப்படுத்தும் வலிமைக் கொண்டதாகவும் மாறிவிட்ட நிலையிலே ஆண்டவர் எச்சரிக்கிறார். தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் கடவுள் அவர்களைக் காண்பார்; (மத்.5:8) எனும் மலைப்பொழிவின் போதனையை மறந்து, மரத்துப்போன மந்த இதயத்தோடு உலக சிற்றின்பங்களில் நாட்டம் கொண்டு கட்டுப்பாடற்ற வாழ்வு வாழ்ந்த சூழலில் எச்சரித்து திருந்த அழைப்பு விடுக்கும் இயேசுநாதர், நம்மை உற்று நோக்கிடவும் புது வாழ்வு வாழ ஒப்படைத்திடவும் விரும்புகிறார். அதற்குரிய வழிகாட்டுதல்களோடு சிந்திப்போம்.

### *1. அறத்திலிருந்து அகன்று போகாதிருங்கள்*

மானிட வாழ்வு ஒழுக்கவியலில் நிலை நிற்பதற்கு வாழ்வியலின் நெறியில்தடுமாறாமல் திடன் பெறவேண்டும். அவ்வாறு உறுதி கொள்ளும் போது, இதயத்தில் மகிழ்வொலியும், களிப்போசையும் வெளிப்படுகிறது. (திபா 51:8). மெய் ஞானத்தால் நிரப்பப்பெற்று, புதுப்பிக்கும் ஆவியால் முத்திரையிடப்படுகிறோம். எப்படியெனில் மானிடம் படைக்கப் பட்டிருப்பதின் நோக்கமே இறையுறவில் ஒன்றிணைந்து, இறை ஒழுங்குக்கேற்ப வாழவும், இறை திருவுளத்திற்கேற்ப படைப்பாற்றலோடு

செயல்படவுமே. ஆனால் அதை விடுத்து, வாழ்வது சில காலம். அனுபவிப்பது தான் இன்பகாலம் என்ற தவறான எண்ணங்களால் தடம் மாறும் போது வழித்தோன்றல்கள் தீமைகளுக்கு துணை போகின்றனர். ஆன்மீகப் பார்வையிலிருந்து அகன்று அக்கிரமச் செயல்களை நிறைவேற்றவும், சூட்சுமங்களுக்கு அடிபணிந்து பொருளற்ற வாழ்வு நிலைக்கும் கீழாக்கிக் கொள்கின்றனர். ஆகவே தான் ஆண்டவர் சீடர்களுக்கு உவமையைக் கூறி எச்சரிக்கையாயிருக்க அறிவுரை வழங்குகிறார். சமயவெறியாளர்களும், சமூகத்தைப் பாழ்படுத்துகிறவர்களும் பக்தித் தன்மையை மறைக்கும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டும் நிலையில் மானிட மகனின் வருகையை எதிர்நோக்கியிருங்கள் எனவும், அதை விடுத்து உலக நாட்டத்தில் பற்று கொண்டு உண்மைக்கு எதிரானவைகளை நிறைவேற்றாமல் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்துகிறார். வருகையின்நாள் மீட்பரின் நாளானபடியினால் தகுந்த ஆயத்தமும், அர்ப்பணமும் கொண்டோராய் செயல்பட வேண்டும். வேடன் வலையில் விழுந்து துடிக்கும் பறவை போல் உலக மயக்கத்தில் விழாமல் கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருத்தல் வேண்டும். இதயத்தை மந்தமாக்கும் இழிவுணர்ச்சிகள், இச்சைகள் சிலுவையில் இறந்தாக வேண்டுமென்பதே பவுலாரின் போதனையுமாகும் (கலா. 5:24). இதயத்தில் இன்ப உணர்வை ஊற்றெடுக்க வைத்து முழுஉடலையும் கறைபடுத்தி விடும் தீமைகளில் உடன்படாமல் ஊனியல்புக்குரியவைகளுக்கு முன்னுரிமை வழங்காமல் வாழ்வின் நிபந்தனைகளுக்குட்பட்டு நன்னெறியுடன் வாழ ஒப்படைப்பதே இதயத்தை இலகுவாக்குவதற்குரிய வழிகாட்டியாகும். அதை உணர்ந்து செயல்படுவோம்.

### *2. அகத்தெளிவுடன் விழிப்பாயிருங்கள்*

தீயோரின் இதயம் தீமையின் பிறப்பிடம், அநீதங்களின் ஊற்று, அக்கிரமச் செயல்களின் ஊக்கி என்றெல்லாம் உருவகம் பெறுகிறது (மாற். 7:21-23) மட்டுமன்று இதயத்தின் நினைவுகளே இடறுதலுக்கும், இன்னல்களுக்கும், இவ்வுலகப்பற்றுக்கும் காரணியாக அமைந்துள்ளது. ஆகவே இறுதி நாள்களில் நடுதீர்ப்பின் தண்டனைக்குட்படாதபடி எச்சரிக்கையுடன் விழிப்பாயிருக்கும்படி ஆண்டவர் அறிவுறுத்துகிறார். மேலும் இறுதி நாளான நடுதீர்ப்பு நாளில் நம்பிக்கையுடனும், உறுதியுடனும், ஆற்றல் பெற்றோராய் நிற்பதற்கு விசுவாச உறுதியுடனும், அகத்தெளிவோடும் நடந்து கொள்ள சீடர்களுக்கு உணர்வூட்டுகிறார். ஏனெனில் துன்பக்காலங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால்

இறை வழியை விட்டு அகன்று போகாமல் அவரது அருளை மட்டுமே சார்ந்து நிற்கவும் போதிக்கிறார். இவைகள் மட்டுமல்லாமல் புற இனத்தாரின் மேலாண்மையும் இயற்கையில் வியத்தகு முறையிலான அடையாளங்களும் தோன்றும் (லூக்.21:32). ஆகவே எச்சூழலிலும் உறுதியுடன் நிலை நிற்க வேண்டும். இதை விடுத்து இப்படியோ, அப்படியோ என இதயத்தை பாரப்படுத்தாதபடி இறைவேண்டலோடு நிலைத்திருக்க வேண்டுமென்பது சீடர்களுக்கு பயிற்றுவிக்கும் போதனையாகும்.

இன்றையச் சூழலில் நம்மை சுற்றிலும் நெருக்கிக் கொண்டிருக்கும் நிகழ்வுகள், அச்சுறுத்தும் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, பிள்ளைகளின் வருங்காலம் என எவைகளிலும் நாம் காயப்படாமல் காருண்யரிடத்தில் இறக்கி வைப்போம் (திபா. 55:23, 1 பேதுரு 5:7) .

உலகத்தையே வென்றிட வேண்டுமென நினைத்த மாவீரன் நெப்போலியன் கடைசி காலத்தில் பிரிட்டனிடம் தோல்வியடைந்தார். ஆகவே, நெப்போலியனை பிரிட்டீஷ் படை சிறைபிடித்து ஆப்பிரிக்க தனிச்சிறையில் தனிமைப்படுத்தினர். இந்நிலையில் அவரை பார்க்க வந்த நண்பர் அவரிடம் சதுரங்க அட்டையைக் கொடுத்து, “இது உங்களின் சிந்தையை செயல்பட வைக்கும், தனிமையை போக்கும்” என்றாராம். ஆனால் இப்படி சிறை நிலை ஏற்பட்டதே என்ற இதயப் பாரத்தில் இதற்கு முன்னுரிமை கொடுக்காமல் அப்படியே இறந்து போனார். பிற்காலத்தில் பிரான்ஸ் அருங்காட்சியகம் நெப்போலியனிடமிருந்த சதுரங்க அட்டையை ஏலம் விட ஆய்வு செய்த போது அந்த அட்டையின் நடுவே சிறு குறிப்பில் தப்பித்துச் செல்லும் வழி முறையிருந்தது. ஆனால் நெப்போலியனோ இதய அழுத்தத்தினால் செயல்பட முடியாமல் விழிகளை மூடியனார்.

தவக்காலத்தில் நமது இதயத்தை மந்தமாக்கும் பாவத்தை உதறித்தள்ளி (எபி. 12:1), நியமிக்கப்பட்ட இலக்கினை அடைந்திட கிறிஸ்துவிடம் (மத். 11:28) நம்மையே நாம் அர்ப்பணிப்போம். நிலை வாழ்வின் பயணத்தில் வெற்றி கொள்வோம்.

அருள்திரு. R. **சாம் பிரின்ஸ்**

**01-04-2022** **தவக்கால ஐந்தாம் வெள்ளி**

# சிலுவையும் பெருமை பாராட்டுதலும்

கலா 6:11-18

**“நானோ நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்ட மாட்டேன். அதன் வழியாகவே, என்னைப் பொறுத்தவரையில், உலகம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. உலகைப் பொறுத்த வரையில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். மனிதனுடைய செயல்களுக்கெல்லாம் அடிப்படையான காரணம் அவனுடைய உள்ளத்தில் எழுகின்ற எண்ணங்கள் எனலாம்”** (கலா 6:14).

மனிதர் தன்னுடைய எண்ணங்களை மாற்றுவதன் வழியாக வாழ்க்கையையே மாற்றி அமைக்கமுடியும். நம்முடைய எண்ணமே நம்முடைய வாழ்க்கை. எனவே தம்மிடம் உள்ள தேய்ந்துபோன எண்ணங்களை தூக்கி எறிந்துவிட்டு, புத்துணர்வு தருகின்ற நன்மையான, புதுமை படைக்கின்ற எண்ணங்களைச் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

தொடக்காலத் திருச்சபையில் யூதக்கிறிஸ்தவர்களும், வேற்றினக் கிறிஸ்தவர்களும் கலந்தே இருந்தார்கள். இந்நிலையில் யூதக் கிறிஸ்தவர்களுள் சிலர் வேற்றின கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியும், யூதச்சட்டம், தைத்திணித்தும், சபையாரைக் குழப்பியும் வந்தனர். இதனால் அவர்கள் நடுவே கருத்துவேறுபாடும் குழப்பமும் நிலவின. இச்சூழலில் கலாத்திய இறைமக்கள் கிறிஸ்துவை விடுத்து வெறொரு நற்செய்தியைப் பின்பற்றுவதில் ஆர்வம் காட்டி வந்தார்கள் (1:6) வலுவற்ற, வறுமைமிக்க பஞ்சபூதங்களுக்கு மீண்டும் அடிமைகள் ஆனார்கள்(4:9) நாள், திங்கள், காலம் ஆண்டு முதலியவற்றைக் கணிக்கத் தொடங்கினார்கள் (4:10)விருத்தசேதனமும் செய்துகொண்டார்கள் (5:2). சுருங்கச் சொல்லின், கிறிஸ்துவுடன் உறவற்று போய் (5:4) உலகின் மீது பற்றும், பெருமையும் கொண்டார்கள்.

திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதில் ஆர்வம் கொள்ளாமல், வீண் பெருமை பாராட்டுவதில் ஆர்வம்காட்டிய களத்தியரை பவுல் அடிகளார் எச்சரிக்கின்றார், அவர்களை கடிந்துகொள்ளுகின்றார். நீங்கள் பெருமைபாராட்ட வேண்டியது உலகின் மீது அல்ல. யூதர்கள் வெறுத்து ஒதுக்கி, இகழ்ச்சிக்குள்ளாக்கிய சிலுவையிலே பெருமைகொள்ள வேண்டும்

அவரே உங்களுக்காய் சிலுவையில் அறையுண்டிருக்கிறார். ஆதலால் மனித முயற்சியின் அடிப்படையில் உள்ள பெருமை பாராட்ட ஒருபோதும் வழியே இல்லை சிலுவையின் மீதே பெருமை பாராட்டுங்கள் என்ற அழைப்பை நமக்கு விடுக்கின்றார்.

எபிரெய மொழியில் கையாஹ் (geah) என்னும் சொல்லும், கிரேக்க மொழியில் அலட்ஸொனியா (alazoncia) என்னும் சொல்லும் தமிழ்த் திருமறையில் 'பெருமை' என்ற சொல்லால் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. இதன் மூலப்பொருள் 'உயர்த்துதல்', 'அலைதல்' என்று பொருள்தருகின்றது. மனிதர் தாம் ஒரு படைப்பு மட்டுமே என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்தலே பெருமை என்பதன் அடிப்படையான கருத்தாகும். கிரேக்க எழுத்தாளர் தியோபிரஸ்டஸ் அவர்கள் பிரபலமான கதாபாத்திர ஓவியங்களை எழுதினார். அதில் அவர் பெருடையை 'அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட அவமதிப்பு' என்று வரையறுத்தார். திருமறை பெருமையின் எந்த வெளிப்பாட்டையும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

### *1. பாவத்தின் அடையாளம் பெருமை* :

ஆதிப் பெற்றோர் ஏதேனில் கடவுளின் கட்டளையைமீறின நிகழ்வில், பாவத்தின் உட்கரு பெருமை தான் என்பது திட்டமாகப் போதிக்கப்படுகின்றது. தாங்கள் பலவீன மனிதர் மட்டுமே என்ற நிலையை ஏற்றுக் கொள்ள மறுத்து, தங்கள் கண்கள் திறக்கப்பட்டு தேவர்களைப் போல ஆகவேண்டும் என்ற உளநிலையாகிய பெருமை இந்நிகழ்வில் விளக்கப்படுகின்றது (ஆதி 3:5). உயர்த்துதல் என்பது பாவத்தைக் குறிக்கும். நேபுகாத்நேச்சார் பெருமையினாலே கடவுளுக்கு மேலாகத் தன்னை உயர்த்தி, 'நான் கட்டின மகா பாபிலோன்' என்று கூறினபோது கடவுளின் பொதுவான ஆளுகையை வன் ஏற்றுக்கொள்ளாதவனாகக் காணப்பட்டு கொடிய தண்டனையை அடைகிறான் (தானி 4:30-32). பெருமையினாலே ஏரோது மன்னன் கடவுளுக்கு செலுத்த வேண்டிய மகிழ்ச்சியை தான் அபகரித்து கொண்டபோது ஆண்டவருடைய தூதர் அவனை அடித்தார் (அப் 12:21-23). 1யோவா 2:16இல் வாழ்க்கையின் பெருமை குறித்து சொல்லப்படுகின்றது. வாழ்க்கைக்குரிய உலகப் பொருள் மிகுதியாக தனக்கு இருப்பதினால் ஒருவர் கொள்ளும் வீண் பெருமை, இறுமாப்பு, வீண்தோற்றம் முதலியவை இநத் வாக்கியத்தில் கண்டிக்கப்படுகின்றன. "ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினுண்டானவைகளல்ல அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்".

யோவான் முழுக்குநரும் இயேசுவும் யூத மக்களின் குலப்பெருமையை எதிர்த்தனர். யூதர்கள் தங்கள் ஆபிரகாமின் சந்ததியினர் என்பதிலும், மீட்பு தங்களுடைய இயற்கையான சொந்தம் என்றும் வீண் பெருமை கொண்டனர் (லூக் 3:8). தூய பவுலடிகளார் மாம்சத்திற்குரிய பாவங்களை பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக கலத்திய திருச்சபையாருக்கு (கலா 5:19,20) எழுதும் போது அத்தகையை பாவங்களைக் குறிப்பிட்டு, "இயேசு கிறிஸ்துவை அறிந்தவர்கள் அத்தகைய பாவங்களை சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" எனக் குறிப்பிடுகிறார்.

இன்று பாவமாகிய பெருமை நம்மில் குடி கொண்டிருக்கின்றதா? நான் பெரியவன் எனக்கு எல்லாம் தெரியும், நான் சொல்வதில், செய்வதில், சிந்திப்பதில் எந்த தவறும் இருக்க முடியாது. என் குடும்பம், செல்வம், கல்வி, அழகு, அந்தஸ்து என்ற நிலையில் சாதிய, சமய, பாலின, பொருளாதார, நிற, வர்க்க, கலாச்சார நிலையில் திருச்சபையிலும் இருப்போரும் உண்டு. நீ சிறியவன் (ள்) உனக்கு ஒன்றும் தெரியாது. உன்னால் சரியாக சிந்திக்க, சொல்ல, செய்ய முடியாது என்று பெருமை கொள்வோரும் உண்டு. பெருமை மிக மோசமான பாவம். இறைவன் பெருமைய வெறுக்கிறார். இறைவன் விருப்பத்தை நாமும் விரும்பக் கூடாது. ஏனெனில் நாம் எதையாவது பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்றால் அது கடவுளிடமிருந்தே பெற்றுக் கொண்டிருக்கிறோம். நமக்கு கிடைத்த அத்தனை நன்மைகளும் அவராலே உண்டானது. எனவே அனைத்து மாட்சியும் அவருக்கே உரித்தாக்குவோம். கடவுள் பெருமை உள்ளவர்களுக்கோ எதிர்த்து நிற்கிறார். தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார் (யாக் 4:6).

## *2. தூய்மையின் அடையாளம் சிலுவை* :

இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் யூதர்களின் நோக்கத்தின் அடிபபடையில் அது இறை பார்வையில் பொருளுள்ளதாய் அமைந்தது. உலகின் பார்வையில் சிலுவை அவமானமாகயிருந்தது. ஆனால் மீட்பின் பார்வையில் கடவுளின் கருவியாக இருந்தது. எனவே தூய பவுலடியார் அந்த சிலுவையும், மரணமும் தனக்குப் பெருமையாக கருதுகின்றார் (கலா 6:14). மனிதர்களின் பாவங்களுக்காக இயேசு சிலுவையில் அறையப்பட்டார். அதுபோல மனிதன் தன்னுடைய பாவங்களை சிலுவையில் அறைய வேண்டும். கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேல் இனத்தில் பென்யமீன் குலத்தை சேர்ந்த பவுல். எபிரேயருக்கு பிறந்த எபிரேயர் பக்தியும், செல்வமும் மிக்க குடும்பத்தில் தோன்றினவர். திருச்சட்டத்தை கடைபிடிப்பதில் பக்தியிலும், பாரம்பரியத்திலும் சிறந்த

பரிசேய குழுவை சார்ந்தவர். யூத ஒழுங்கின்படி எட்டாம் நாளில் விருத்தசேதனம் பெற்றவர், கமாலியேலின் பாதத்தில் அதிகமாய் பெருமை பாராட்டியிருக்கலாம். ஆனால் இவை எவையும் தனது பெருமை அல்ல. சிலுவை மட்டுமே தனது. மேன்மையாகக் கருதினார் (பிலி 3:5-8, உரோ 11:1). கிறிஸ்துவுக்காக அனைத்தும் நஷ்டம் என்றும் கருதினார். மாம்சத்தின் பாவங்களை சிலுவையில் அறைய வேண்டும் என்று ஆலோசனைத் தருகின்றார். அதுபோன்று ஆவிக்கு விரோதமான பாவங்களையும் சிலுவையில் அறைந்து தூய்மைபெற அறிவுறுத்துகின்றார். எப்படியெனில் “பிரியமானவர்களே, மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மை சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படக்கடவோம் ” என (2கொரி 7:1) குறிப்பிடுகின்றார்.

இயேசு கிறிஸ் தமது சிலுவைச்சாவுமூலம் ஈடேற்றத்தை நிறைவேற்றி, அதன் வாயிலாகத் தமது அடியார்களை தூயராக்கினரிர் என்பதே திருத்தூதுவர் எடுத்துக் கூறும் உண்மை. ஆகையால் சிலுவையில் அறையுணட் கிறிஸ்துவின் காட்சி கிறிஸ்தவர்கள் கண்முன் எப்போதுமிருக்க வேண்டும் என்றார் பவுல் அடிகளார் (கலா 3:1). அப்படம் நம் கண் முன் இருந்தால் பாவம் அருவருக்கப்படும், பெருமை அகற்றப்படும், ஆசை, இச்சை சிலுவையில் அறையப்படும் (கலா 5:24,26) திருத்தூதுவர் பவுலைப் போன்று நாமும் கிறிஸ்துவின் சிலுவை மீது பெருமை கொள்வோம்.

தன்னிடம் தவறு உண்டு, இயலாமை உண்டு என்பதனை ஏற்றுக் கொள்ளும் போது ஒருவன் பெருந்தகையாளன் ஆகிறான். மாறாக செய்த தவற்றை நியாயப்படுத்துவதற்காக கற்பனை விளக்கங்களையும், அறிவார்ந்த விளக்கங்களையும் (Rationalisation) தரும்போது அவர் தன்னைச் சிறுமைப்படுத்தி விடுகிறான். தன்னை மாற்றுவது சமூக மாற்றத்தின் துவக்கம். அத்துவக்கம் நம்மிலிருந்து தொடங்குவோம்.

தன் நிலையிலிருந்து இறங்கி வருவது தாழ்ச்சி. கடவுன் தன்மையில் விளங்கிய அவர் அதனை விடாத ஒன்றாகக் கருதாமல் மனித உறவில் எல்லா மனிதருக்கும் ஒப்பானவர். அது தாழ்ச்சி. நம் பெருமை அனைத்தும் சிலுவைக்கு முன், கிறிஸ்துவுக்கு முன் ஒன்றும் இல்லை என்று உணருவோம். சிலுவை குறித்தே பெருமை பாராட்டுவோம். அவருக்கே மாட்சி உண்டாகட்டும்.

அருள்திரு. S.E. ***சிமியோன்***

06-04-2022

தவக்கால ஆறாம் புதன்

# சிலை வழிபாடான பேராசை

லூக் 12:13-21

கொலோ 3:5

**"எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள்"**
(லூக் 12:15).

முதலாளித்துவமே பேராசை எனும் கலாச்சாரத்தை உருவாக்கி அடிமைத்துவ நிலைக்கு நேராக இழுத்து விடுகிறது என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும். தேவைக்கு அதிகமாகப் பொருட்களை வாங்கிக் குவிப்பது, விளம்பர மயக்கத்தில் வீழ்ந்து உடமைகளை இழப்பது நடைமுறையில் நடக்கும் நிகழ்வாகும். நினைத்ததை அடைவதற்காக பிறரது பொருளின் மேல் நாட்டங்கொள்வது (எசே 22:29), அதற்காக தவறான வழிமுறைகளைக் கையாள்வது போன்ற தீயச் செயல்களை முன்னெடுப்பது ஆபத்தானதாகும் (25:21). எனவே தான் கட்டுப்பாடு, ஒழுங்கு இவைகளை விரும்பிய கடவுள் வாழ்வின் சட்டங்களாக பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார். அந்நிலையில் பிறர்க்குரியது எதையுமே கவர்ந்திட விரும்பாதே (விப 20:17, இச 5:1-21) என்பது முக்கியத்துவம் பெறுகிறது. இதைப் புரிந்து கொள்ள தடுமாறும் நிலையிலே பேராசை பெருந்தொற்றாகத் தாக்கி நீதியின் போக்கை நெறிபிறழச் செய்கிறது. மட்டுமன்று, ஆன்மாவையும் காயப்படுத்தி இரக்கமற்றச் செயல்களைச் செய்ய தூண்டுகிறது (எரே 22:17, அப 2:9). ஆதாம், ஏவாளைத் தூண்டி, கடவுளைப் போலாக வேண்டுமென்ற பேராசையால் அவர்கள் உரிமையையும், உறவையும், உன்னத மேன்மையையுமே இழந்து விட்டனர் (தொநூ 3:5, யாக் 1:14-15). ஆகவே தான் ஆண்டவர் பேராசை சிலை வழிபாடு என்பதை உணர்த்தி உலகப் பற்றற்றவர்களாயிருங்கள் எனக் குறிப்பிடுகிறார் (மத் 7:22, லூக் 12:15). இதன் வாயிலாக நமக்குக் கற்றுத் தரும் செய்தி என்ன?

## *1. மதிப்பின்மையை உணர்ந்திடுங்கள்* :

ஒருவருடைய மதிப்பு பணத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாகப் பண்புள்ள வாழ்வை மையப்படுத்தியும், ஆசைகளின் நெறிபிறழ்வை அகற்றுவதிலுமே அமைந்துள்ளது. அதற்கு அழுத்தம் தரும்

நிலையிலே இவ்வுவமையைக் கோடிட்டுக் காட்டுகிறார். இயேசு நாதரின் புகழ், ஞானம், மக்களிடையே பெற்றிருந்த மதிப்புமிக்க நிலை இவைகளை அறிந்து கொண்ட செல்வந்தர் சொத்துரிமைப் பிரச்சனைகளில் நடுவராக இருந்து தீர்த்துக் கொள்ளக் கேட்டதும், அதைத் தொடர்ந்துள்ள உவமையில் விளைச்சலால் பெருமிதம் அடைந்து பேராசையால் பயன்படுத்தும் கூற்றுகளையும் திருமறை தெளிவுபடுத்துகிறது. இரண்டு நிகழ்வுகளையும் அறிந்து கொண்ட ஆண்டவரோ இவர்களின் அறிவிலித் தன்மையைப் புரிந்து கொண்டு மதிப்பற்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மதிப்புமிக்க ஆன்மாவுக்கு முக்கியத்துவம் கொடுக்க உணர்வூட்டுகிறார். மேலும் உனது உயிரே உன்னுடையதன்று அப்படியிருக்க உன்னுடையது எனக் குறிப்பிடும் செல்வம் எப்படி உனக்குரியதாகும் என்ற கேள்வியால் வாழ்வியலைக் கற்றுக் கொடுக்கிறார் (லூக் 12:15). மிகுதியான உடமைகளே வாழ்வுக்குரியது என்ற தவறான சிந்தையை ஆண்டவர் எச்சரிக்கிறார். டைட்டானிக் கப்பல் 1912ஆம் வருடம் ஏப்ரல் மாதம் பனி மலையின் மீது மோதி மூழ்கிப் போனது. அதில் பயணித்த செல்வந்தர்கள் அனைவரின் சொத்து மதிப்பு சுமார் 200 மில்லியன் டாலர்கள் எனக் கணக்கிடப்பட்டிருந்தது. ஆனால் துன்ப நிலையில் எவருக்கும் பணம் முக்கியமாகத் தெரியவில்லை. அவர்களில் ஒருவரான Major A.G. Peuchen of Toronto மாபெரும் செல்வந்தர். தன்னுடைய சேமிப்புக் கருவூலத்தில் 3,00,000 பணம் மற்றும் நகைகள், சொத்துப் பத்திரங்கள் வைத்திருந்தார். அவர் கூறிய வாக்கு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. எப்படியெனில் பணத்தை விட உயிர் காக்கும் ஆரஞ்சுப் பழம் முக்கியமானதால் நான் என் உடமைகளுக்கு முன்னுரிமை வழங்காமல் வாழ்வைக் காப்பதில் உறுதியாயிருந்தேன். ஆகவே உடமைகளை இழந்து உயிருடன் இருக்கிறேன் எனக் குறிப்பிட்டார். பணமே வாழ்வைத் தீர்மானிக்கும் கருவியாகக் கருதப்படுவதால் சிந்திப்பதால் பேராசை தீமைகளின் வேராக மாறி வாழ்வைப் பொருளற்றதாக்கி விடுகிறது (1திமொ 6:10). ஆகவே மனிதரும், தெய்வீகமும் பிணைக்கப்பட்ட நிலையில் பிறரிடம் கரிசனை கொண்டோராய் நல் மதிப்புடன் வாழ ஒப்படைப்போம்.

### *2. மதிப்பிற்குரியோராய் வாழ்ந்திடுங்கள்:*

ஒழுக்கவியலுக்கும், ஒழுக்கத்துக்கும் அறைகூவல் விடுக்கும் சிலை வழிபாடாகப் பேராசையே. எந்த ஒரு கிறிஸ்தவரையும், தகுதியிழப்புச் செய்து காயப்படுத்தும் கூரியக் கத்தி போன்றதாகும். ஆகவே தான் பவுலார் 2கொரி 8:9இல் நம்மைச் செல்வராக்க ஏழையான கிறிஸ்தேசுவில் உரிமைப்

பேற்றின் உயரிய நிலையை எட்ட பணத்தின் மீதும் வெட்கக் கேடான ஆதாயத்தின் மீதும் பற்றுக் கொள்ளாமல் நற்சான்றின் பணியாளர்களாய் வாழ்ந்திட அழைப்பு விடுக்கிறார் (2கொரி 6:10). யூதாவின் பேராசையினால் (மத் 26:14-16, 27:3-10) மதிப்பிழந்து, மாண்பிழந்து மாண்டு போனதைப் போன்று எவரும் தவறிவிடக் கூடாது என்பது உணர்த்தப்படும் உண்மையாகும். பேராசையைத் தவிர்த்து பகிர்வின் மனப்பான்மையோடும், தாராளத்துவமும், தயாளத்துவமும் கொண்ட நல் எண்ணங்களோடு வாழ ஒப்படைக்கும் போது மதிப்பும், மரியாதையும், மாண்பும் மணிமகுடமாகச் சூடப்படும். ஆகவே போதும் என்ற மனப்பான்மையோடும் (1திமொ 6:6), என் சகோதரனே ஏற்கனவே என்னிடம் மிகுதியாக உள்ளது, உன்னுடையதை நீயே வைத்துக் கொள் (தொநூ 33:9) என்ற உயரிய எண்ணங்களோடும், எந்நிலையிலும் வாழ்வதற்குரிய திடனோடும் (பிலி 4:11,12) முன்னெடுத்துச் செல்வோம். பேராசை பெருநஷ்டம் என்ற சொல்லுக்கேற்ப வாழப் பழகிக் கொள்வோம். இவ்வுலகத்தில் எதுவுமே நமக்குரியதாயில்லாதபடியால் உடலுக்கும், உளத்துக்கும் தேவையானதைக் குறைவின்றி வழங்கும் உன்னதரைத் தேடுவோம் (மத் 6:33). மனநிறைவும், மனமகிழ்வும் பெற்றிடுவோம். தம்மையே தந்து நம்மை மீட்டெடுத்திருக்கும் திருமைந்தரின் நல் முன்மாதிரியில் மதிப்பிற்குரியோராக வாழ்ந்திடுவோம்.

அருள்திரு. R. **சாம் பிரின்ஸ்**

08-04-2022

**தவக்கால ஆறாம் வெள்ளி**

## சிலுவையும் ஊனியல்பும்

கலா 5:16-26

**"கிறிஸ்து இயேசுவுக்கு உரியவர்கள் தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும், இச்சைகளோடும் சேர்த்து சிலுவையில் அறைந்து விட்டார்கள் "** (கலா 5:24).

தவக்காலம் இறைவனுக்கு ஏற்பற்ற குணங்களை அகற்றி ஏற்புடைய குணங்களை நம்மில் வெளிப்படுத்தும் காலம் என்று கூறலாம். இதற்காகக் கொடுக்கப்பட்ட காலத்தில் நமக்கு நாமே கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து பயணித்து தவக்காலத்தை அர்த்தமுடையதாக மாற்றுவது நம்மில் இறை எதிர்பார்ப்பாக இருக்கிறது. அதற்கு நமக்கு வழிகாட்டுவதே சிலுவை. சிலுவை வெறும் இருமரத்துண்டுகளின் இணைப்பு அல்ல. அது விண்ணையும் மண்ணையும் இணைக்க வந்த உறவுச் சின்னம் என்று கூறலாம். எனவே, கலா 5:19-26 வரையுள்ள வசனங்கள் வாயிலாக, ஊனியல்பின் இழிவுணர்ச்சிகளை, இச்சைகளை சிலுவையில் அறைந்து, அறுந்துபோன உறவை மீட்டெடுத்துப் பயணிக்க வேண்டிய பயன்தரும் பயணமாக அமைய தூயாவியார் துணை செய்ய நாம் செய்ய வேண்டியவை குறித்துத் தியானிப்போம்.

### *1. ஊனியல்பை இறைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம்* :

கலா 5:16-இல் தூய ஆவியின் தூண்டுதலுக்கு ஏற்ப வாழுங்கள். அப்பொழுது ஊனியல்பின் இச்சைகளை நிறைவேற்ற மாட்டீர்கள் என்கிறது இறைவார்த்தை. மனித ஊனியல்பு இறைக்கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும். அதற்குத் தூய ஆவியின் தூண்டுதலுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். ஆனால் மனித வாழ்வில் மனிதர்கள் உடலை அதன் போக்கிற்கு விட்டு விடுகிறார்கள். மனித உடலின் புலன்கள் (கண், காது, மூக்கு, வாய்) வெளி உலகைப் பார்க்கிறதாகவே இருக்கிறது. எனவே இவற்றுக்கு ஒரு ஆளுகை மிகவும் அவசியமாக வேண்டும். சஉ 1:8 எவ்வளவு பார்த்தாலும் கண்ணின் ஆவல் தீர்வது இல்லை, எவ்வளவு கேட்டாலும் காதின் வேட்கை தணிவதில்லை என்கிறது. இதுதான் ஊனியல்பின் நிலை, இப்படிப்பட்ட ஊனியல்பை நாம் எப்படிக் கையாளப் போகிறோம் என்பதில் தான் நமது வெற்றி வாழ்வு ஆரம்பிக்கிறது. எனவே அப்போதும் நமது ஊனியல்பு நாம் சொல்லக் கேட்கும் பணியாளாய் இருக்க வேண்டுமே

தவிர நமது தலைவராய் மாறக் கூடாது. இன்று மனிதர் தமது ஊனியல்பின்படி தங்களை நாலாப்பக்கமும் சிதறவிட்டு ஊனியல்பின்படி வாழ்வதால் வெற்றி வாழ்வை இழக்கிறார்கள்.

இந்தத் தவக்காலம் நம்மை இறைக்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அழைக்கிறது. அருள்நாதர் இயேசு கூறும் போது, யோவான் 6:38இல் “என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே...வந்தேன்” என்றார். கலா 6:24 கூறுவது, தூய ஆவியின் தூண்டுதலுக்கு ஏற்ப வாழுங்கள். அப்படி வாழும் போது ஊனியல்பின் இச்சைகளுக்கு இடம் தரமாட்டீர்கள். எனவே தூய ஆவியாரின் உதவியைப் பெற்று நமது புலன்களைச் சிதறவிடாமல் இறைக்கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வோம்.

### *2. ஊனியல்பின் இச்சைகளைச் சிலுவையில் அறைவோம் :*

கலா5:24இல்“தங்கள் ஊனியல்பை அதன் இழிவுணர்ச்சிகளோடும், இச்சைகளோடும் சேர்த்து சிலுவையில் அறைந்து விட்டார்கள்” என்று கூறப்பட்டுள்ளது. இழிவுணர்ச்சிகளும், இச்சைகளும் மனிதரில் மறைந்து அவர்களை அறியாமலே வாழ்ந்தும் வளர்ந்தும் கொண்டிருக்கிறது. சில தருணங்களில் அவர்களை அறியாமலே வெளிப்படும். உரோ 7:23இல் என் உறுப்புகளில் வேறொரு சட்டத்தைக் காண்கிறேன்; என் மனம் ஏற்றுக்கொள்ளும் சட்டத்தை அது எதிர்த்துப் போராடுகிறது. இப்படிப்பட்ட தருணங்களில் தங்களைக் கட்டுப்படுத்துகிறவர்கள் வெற்றி அடைகிறார்கள். கட்டவிழ்ந்து விடுகிறவர்கள் இகழ்ச்சி அடைகிறார்கள். 1கொரி 10:23இல் எல்லாவற்றையும் செய்ய உரிமை உண்டு. ஆனால் எல்லாம் தகுதியாய் அல்லது வளர்ச்சி தரக்கூடியவையாய் இருக்க வாய்ப்பில்லை. எனவே இறைவனை நோக்கி நம் மனதை மாற்றும் போது இழிநிலை உணர்ச்சிகள் நம்மில் குறைய ஆரம்பிக்கும். அதற்கு நமது ஊனியல்பைச் சிலுவையில் அறைய வேண்டும். சிலுவை நாதர் இயேசு தம்மை சிலுவையில் அறையக் கொடுத்து மீட்பை நமக்குக் கொடுப்பதைத் தமது சித்தமாகக் கொண்டு தமது பணியைச் சிலுவையில் நிறைவேற்றினார். எனவே அவரைப் பின்பற்றுகிற நாமும் நம் இழிவுணர்ச்சிகளைச் சிலுவையில் அறைந்து உயிர்ப்பின் அனுபவத்தைச் சுதந்தரிக்க வேண்டும். சுயம் நம்மில் சாகாமல் அவர் நம்மில் பெருக வாய்ப்பில்லை. வீட்டு வேலைசெய்யும் பெண்மணி ஒருவர், எனக்கு மாத்திரம் 500 ரூபாய் பணம் இருந்தால் எவ்வளவு மகிழ்ச்சியாயிருப்பேன் என்று சொல்வது எஜமான் காதிலே கேட்டது. உடனே அந்த வேலைக்காரப் பெண்மணி மகிழும்படி

500 ரூபாய் பணத்தைக் கொடுத்தார். உடனே அவள் அவருக்கு மனமார நன்றி செலுத்தினார். ஆனால் அவர் சென்றவுடன், சே! ஐநூறுக்குப் பதிலாக ஆயிரம் கேட்கத் தவறிவிட்டேன் எனப் புலம்பினார். இது தான் நமது சுயம். மனக்குதிரை வேறே வேறே நினைத்து புயலாகப் பறக்கும். இதைத் தவிர்க்க இச்சைகளைச் சிலுவையில் அறைவோம். வெற்றி வாழ்வை நமதாக்குவோம்.

தவக்காலம் பாவமாம் இலைகள் உதிர்ந்து தூய தளிர் நம்மில் தோன்றும் காலம். எனவே ஊனியல்பைச் சிலுவையில் அறைய இறைக்கட்டுபாட்டில் நம்மைக் கொண்டுவந்து, போலியானதே இவ்வுலகில் அதிகம் அலங்கரிக்கப்பட்டிருக்கும் என்ற உண்மையைப் புரிந்து, நம் ஊனியல்பைக் கட்டுப்படுத்தி வெற்றி வாழ்வைச் சுதந்தரிக்க தூய ஆவியார் தாமே துணை செய்வாராக!

அருள்திரு. J. **ஹட்சன்**

# சிலுவைத் திருமொழிகள்

# விண்வாழ்வின் தகுதியாக்கும் மன்னிப்பு

லூக். 23:32-34

**"...தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்கு தெரியவில்லை என்றார்"** (லூக் 23:34).

கொடியவருள் ஒருவராக கருதப்படார் என்ற இறைவாக்கு நிறைவேற இரண்டு கள்வர்கள் நடுவே சிலுவையில் அறையப்பட்டவராய் தொங்குகையில், அவ்வழியே நடந்து சென்றவர்கள் "கோவிலை இடித்து மூன்று நாளில் கட்டி எழுப்பிகிறவனே, நீ இறை மகன் என்றால் சிலுவையிலிருந்து இறங்கி வா" என்றும் "பிறரை விடுவித்தான் தன்னையே விடுவிக்க திராணி இல்லை" என்றும் "கடவுள் பேரில் இவன் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தானாம்" என்றும் ஏளனம் செய்தார்கள். இவைகள் மற்றவர்களுக்கு ஏளனச் சொற்களாக இருந்தாலும் நமக்கு உண்மையான செய்திகளாகவே இருக்கின்றன.

சிலுவையில் நமக்கு பாடமாக அமைந்த திருவசனங்களில் முதலாவது மன்னிக்கும் குணம் பற்றியது. ஏன் மன்னிப்பு முதன்மையானது? உலகில் மன்னிப்பு எல்லா மனிதரிடமும் இருந்தால், பகை ஏது? பட்டயம் ஏது? எங்கும் அன்புமயமாகும் அல்லவா!

இயேசு கிறிஸ்து தம் மூன்றரை ஆண்டு கால திருப்பணியில் மன்னிப்பிற்கு செயல்முறை இலக்கணம் தந்தார். சீடர்களுக்கு கற்று கொடுத்த மாதிரி இறைவேண்டலில் "எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்தது போல எங்கள் குற்றங்களை மன்னியும்" என கற்பித்தார். சீடர்கள் எத்தனை முறை மன்னிக்க வேண்டும் என கேள்வி எழுப்பியதற்கு எழுபதின் அடுக்கு ஏழு அதாவது ஏழு எழுபது தரம் என கூறினார்.

மன்னிப்பு என்பதன் கிரேக்க பதம் "அபிமேயி" என்பதாகும். இதற்கு "மடைதிறந்த வெள்ளம் போல" என்பது பொருள். உண்மைதான் மன்னிப்பு என்பது மனிதனிடத்தில் மடை திறந்த வெள்ளம் போல வர வேண்டும். மடை திறந்த வெள்ளம் எப்படி வேகமாக வருகிறதோ அதே போல மனிதனிடமும் மன்னிப்பு தாமதமின்றி வர வேண்டும். மடை திறந்த

வெள்ளம் நிலம் பார்த்து பாய்வதில்லை, அனைத்து நிலத்திலும் பரந்து பாய்கிறது. அது போல மனித மன்னிப்புகள் நிறம், இனம், பொருள் சார்ந்திராமல், இயல்பு பண்பாக இருக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்து சிலுவையில் நின்று தன்னை இகழ்ந்த, ஏளனம் செய்த, காயப்படுத்தின, தவறான முடிவு சொன்ன அத்தனை பேருக்காகவும் பிதாவிடம் மன்னிக்க வேண்டுகிறார். பொதுவாக மனித குணம் நன்மைக்கு நன்மை செய்வது; பிசாசின் குணம் நன்மைக்கு தீமை செய்வது ஆனால் தீமைக்கு நன்மை செய்வது தெய்வீக குணம். இயேசு சிலுவையில் அத்தகைய தெய்வீக குணத்தை, தெய்வீக சாயலை வெளிப்படுத்தினார்.

அன்று தன்னை இகழ்ந்த, காயப்படுத்தின, தவறான முடிவுகளை சொன்னவர்களுக்கு "இவர்களுக்கு மன்னியும்" என்று மன்றாடுவது போல் இப்பகுதி இருப்பினும், இன்று இந்த திருவசனத்தை சிந்திக்கும் அனைவரையும் இது செயல்பட தூண்டுகிறது.

இயேசு கிறிஸ்து பேதுருவிடம் விண் அரசை குறித்து ஒரு உவமையை மத்தேயு 18:23-35 இல் சொல்லும் போது. அரசனிடம் 10,000 தாலந்து கடன்பட்டிருந்த பணியாள் ஒருவனுக்கு அந்த கடனை மன்னித்து விடுகின்றார் ஆனால் மன்னிப்பை பெற்ற அப்பணியாள் தன்னிடம் 100 தொனாரியம் கடன் பட்ட உடன் பணியாளனை பார்த்து, அவனை மன்னிக்க மனதில்லாமல் அவன் கழுத்தை பிடித்து, நெரித்து, கடன் தீர்க்கும் வரை சிறையில் அடைக்க கட்டளை கொடுக்கிறான். இதை அரசன் கேள்விப்பட்ட போது அவனை வதைப்போரிடம் ஒப்படைக்கிறார். அதே போல நம்முடன் இருப்பவர்களை நாம் மன்னிக்க மறுப்பது விண்ணுலக வாழ்விற்கு நம்மை தகுதி அற்றவர்களாக மாற்றுகிறது.

திரு. G. **பெர்லிங்டன்**

## விண்வாழ்வின் அங்கீகரிக்கும் ஏற்பு

லூக். 23:39-43

**“நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்”** (லூக் 23:43).

இரண்டாம் திருமொழிக்கான காட்சியை நம் மனக்கண் முன்பாக கொண்டு வந்து நிறுத்தினால் அங்கே இயேசுக்கிறிஸ்து நீதிபதியாக சிலுவையில் இருப்பது போல காட்சி. இரண்டு கள்வர்களுக்கு நடுவில் இருக்கிறார். இதே காட்சி மத்தேயு நற்செய்தி 25 ம் அதிகாரத்தில் பார்க்கிறோம். இறுதி தீர்ப்பின் போது நல்லவர்கள் ஒருபுறம் தீயவர்கள் ஒருபுறமாகப் பிரிக்கப்படுகின்றனர். அதே பார்வையில் பார்க்கின்றபோது;

* இடதுபுறம் உள்ள கள்வன் சுயநலத்தோடு அவர் மேசியாவாக தன்னை மீட்கவில்லை என்ற கோபத்தோடு இயேசுவை அணுகுகிறான்.

* வலப்புறம் இருக்கும் கள்வன் அவரை மேசியாவாக நம்பி அவருடைய மீட்பில் இடம் கேட்கிறான்.

இதுவே அவன் ஜெபித்த முதலும் கடைசியுமான ஜெபமாக இருக்கலாம். ஏன் ஒருமுறை ஜெபமாக கூட இருக்கலாம். அவனுடைய ஜெபம் கேட்கப்பட்டது. ஆனால் முழுமையான பதில் கொடுக்கப்பட்டது என்கிற கேள்வியை கேட்டுப் பார்த்தால் முழுமையான பதில் கிடைக்கவில்லை. அவன் இவ்வாறு கேட்கிறான்.

“.... நீர்ஆட்சியுரிமை பெற்று வரும் போது என்னை நினைவிற்கொள்ளும்” (லூக். 23:42).

Remember me when you come into your kingdom (Lk. 23:42).

அதற்கு இயேசு கிறிஸ்துவின் பதில் இவ்வாறு அமைகிறது.

“.... நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்” (லூக். 23:43)

Truly I tell you today you will with in Paradise (Lk. 23:43).

இந்த குற்றவாளியின் ஜெபம் கிறிஸ்து ஆட்சியுரிமைப் பெற்று வரும் போது அதாவது இறையரசு வரும் போது (Kingdom of God) தன்னை நினைவிற் கொள்ள ஜெபிக்கிறான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ இன்று என்னோடு பேரின்ப வீட்டில் (Paras) இருப்பாய் என்று ஆக இன்றைய

கிறிஸ்தவர்களில் அநேகர் இப்படி தான் கடைசி நேரத்தில் கிறிஸ்துவை பார்த்து விண்ணரசில் இடம் பிடிக்கலாம் என எண்ணி கொண்டுள்ளனர். வாழும் போது எப்படி வேண்டுமானாலும் வாழலாம் கடைசியில் கிறிஸ்துவை நோக்கி பார்த்து விண்ணரசில் போகலாம் என மனபால் குடித்து கொண்டிருக்கின்றனர். அது கடினம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். காரணம் இந்த குற்றவாளிக்கு இறையரசில் இடம் உண்டா? இல்லையா? என்பது நமக்கு தெரியாது. அது இறுதி தீர்ப்பு நாளில் உறுதி செய்யப்படும். அவனுடைய மாற்றம் இன்று பேரின்ப வீட்டில் கிறிஸ்துவோடு இருக்கும் வாய்ப்பபை உருவாக்கி கொடுத்தது. ஆனால் கிறிஸ்துவை பின்பற்றும் நாம் இவ்வுலக வாழ்வின் நிறைவில் விண்ணரசை சொந்தமாக வேண்டும் என்கிற நோக்கில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆகவே இறையரசை நாம் தக்க வைக்க கிறிஸ்து சொன்ன வழிகளை தொட நாம் அழைக்கப்படுகிறோம். திருமறை வழி இயேசு கிறிஸ்து தான் வாழ்ந்த நாட்களில் நான்கு வழிகளை குறிப்பிட்டு உள்ளார்.

***1. திருந்திய வாழ்வு*** (மத். 18:3)

மனம் திரும்பி பிள்ளைகளை போல் வாழும் போது இறையரசை தக்க வைத்து கொள்ள முடியும். இன்றைய கிறிஸ்தவ சமூகத்திற்கு இவ்வார்த்தை கேட்டு கேட்டு சலித்து போன வார்த்தையாக உள்ளது. ஆனால் அது எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. மனந்திரும்புகள் என்கிற செய்தி யோவான் ஸ்நானகன் காலம் தொடங்கி (மத். 3:2). இயேசு கிறிஸ்து, (மத். 4:17) அப்போஸ்தலர்கள் (அப். 2:38) மற்றும் இன்று வரையுள்ள போதகர்கள் அறிவித்து கொண்டே இருக்கிறார்கள். ஆனால் நாமோ இன்னும் விழிப்படையவில்லை. கிராமப்புறங்களில் புலி வருது என்கிற கதை ஒன்று சொல்வார்கள். ஒரு சிறுவன் அடிக்கடி புலி வருது என எல்லாரையும் ஏமாற்றிக் கொண்டிருந்தான். ஒருநாள் நிஜமாகவே புலி வந்தது அவனை பீறிப்போட்டது. நமக்கும் மனந்திரும்புங்கள் என்ற செய்தி இந்த கதையை போல தோன்றலாம். ஒருநாள் என் ஆண்டவர் வர போகிறார் அன்று நாம் அவரோடு இணைந்து வாழ வேண்டுமெனில் மனந்திரும்பி கபடற்ற வாழ்வு வாழ அழைக்கப்படுகிறோம்.

***2. மறுபடியும் பிறந்த வாழ்வு*** (யோவா. 3:5)

தண்ணீராலும், தூய ஆவியால் பிறந்தால் இறையாட்சிக்கு உட்பட இயலும் என இயேசு கிறிஸ்து கூறுகிறார். தண்ணீரால் பிறத்தல் என்றால் திருமுழுக்கு வழியாய் புதிய மனிதனாய் பிறக்கும் அனுபவம். இன்று

திருமுழுக்கு பல்வேறு விதங்களில் கொடுக்கப்படுகிறது. (தெளித்தல், மூழ்குதல், ஆன்லையன் வழி) எது என்பது இன்றையக் குழப்பம். காரணம் நாம் இன்று திருமுழுக்கின் அடையாளங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதன் ஆழமான சத்தியங்களை விட்டுவிடுகிறோம். பவுலார், ரோமார் 6:6 வழி நாம் கிறிஸ்து இயேசுவின் மரணத்திற்குள்ளாய் திருமுழுக்கு பெற்றோம். பாவத்துக்குச் செத்து நீதிக்கு பிழைக்கும் ஓர் வாழ்வு மட்டுமல்ல. தூய ஆவியரால் பிறத்தல் என்பது நமக்குள்ளாய் வாசம் பண்ணும் தூய ஆவியரை துக்கப்படுத்தாமல் ஒவ்வொரு நாளும் அவர் நம்மில் செயல்படவும், நம்மை நாமே இந்த உலகத்தில் மறுபடியும் பிறப்பிக்க வேண்டும் நான் யார்? (Who am I?) நான் எதைச் சார்ந்து வாழ்கிறேன்? (What do I belong to?) நான் எதற்காய் வாழ்கிறேன்? (Why am I Living for?) என்கிற கேள்வியை எழுப்பி நமக்குள்ளாய் வாசம் பண்ணும் தூய ஆவியர் துணையால் பதில்களை கண்டுபிடித்து வாழும் போது இறையாட்சிக்கு உட்பட இயலும்.

### *3. நீதியுள்ள வாழ்வு* (மத். 5:20)

மாய்மால Or வெளிவேட வாழ்வு வாழ்ந்த மறைநூல் அறிஞர், பரிசேயர் வாழ்வில் இரண்டு விதமான நெறியை கடைபிடித்தனர் (லூக்.18:12) வாரம் இரண்டு தரம் உபவாசம்; சம்பாத்தியத்தில் தசமபாகம் என்பவைகள் இந்த நெறியைவிட நம் நெறி அதிகமாயிருந்தால் விண்ணரசில் புக முடியும் என இயேசு கூறுகிறார். வெளிவேடக்காரர்களாகிய அவர்கள் இந்த நெறியை மனிதர் காண வேண்டும். புகழ வேண்டும் என செய்தனர். (மத்.6:16). நாம் அப்படி அல்ல (மத்.6:17). கடவுளுக்கு உகந்த நிலையில் அவைகளை மேற்கொள்ள (ஏசா. 58:6,7) அர்த்தமுள்ள நிறைவேற்ற அழைக்கப்படுகிறோம். தசமபாகமும் அப்படியே இறைவனுக்கு ஏற்புடைய நிலையில் ஏரே. 6:19. கிறிஸ்து கற்பித்த வண்ணம் உறவை சீர் செய்த பின் (மத்.5:23,24). பவுலார் சொன்னது போல (2கொரி.8:5). முதலாவது நம்மை படைத்து பின்னர் காணிக்கைகளைப் படைத்தால் அது அர்த்தமுள்ளதாய் இருக்கும் வெளிவேடக்காரர் நெறியை விட சிறந்ததாய் அமையும். அத்தகைய வாழ்வு நமக்கு விண்ணரசில் புகும் வாய்ப்பினை தரும்.

### *4. கடவுளின் திருவுளத்தின்படியான வாழ்வு* (மத். 7:2)

இன்றைய கிறிஸ்தவ சமூகம் கடவுளின் திருவுளத்தினை அறிந்திட அதி பிரசித்தி பெற்ற ஊழியர்களை நாடி ஓடுகின்றனர். ஆனால் அதனை நாமே அறிந்துகொள்ள முடியும் என்பதனை மறந்து வாழ்கின்றனர். தினமும் முழங்காலை முடக்கி, திருமறையை தியானித்தாலே கடவுளின் மெல்லிய

சத்தத்ததை நம்மால் அறிந்துகொள்ள முடியும். எல்லா காரியங்களிலும் கடவுளின் திருவுளத்திற்கு இடம் கொடுப்போம். ஊழியர்களை நாடி ஒருவரால் நாம் அவர்களையும் பாவம் செய்ய வைத்திருக்கிறோம். அவர்கள் தங்கள் சுய அபிப்பிராயங்களை சொல்லி அவைகள் நடைபெறவில்லையென்றால் நாமும் சோர்ந்து போகிறோம். 1 இரா.13 ம் அதிகாரத்தை படித்து பாருங்கள். கடவுள் சித்தத்தை தானே அறியமுடியும் என்பதை அறிந்தும் ஒரு இறைவாக்கினர் போலியான இறைவாக்குக்கு செவிகொடுத்து தன்னுடைய ஜீவனை இழந்தார். இன்னொரு இறைவாக்கினர் ஒரு யோனாவினுடைய வாழ்வு நமக்கெல்லாம் எடுத்துக்காட்டாய் அமையட்டும். கடவுளின் திருவுளத்தின்படி வாழும் வாழ்வு நம்மை இறையரசில் கூட்டிச் சேர்க்கும்.

இறை இயேசுவில் அன்புமிக்க இறைமக்களே இந்த குற்றவாளி கடைசி தருணத்தில் ஆண்டவரை அறிந்தான். பேரின்ப வாழ்வு கேள்விக்குறியே! ஆனால் நமக்கு கிருபையாய் காலங்கள் தரப்பட்டிருக்கிறது பயன்படுத்துவோம். கல்வாரியின் இரத்தம் முதலில் மீட்டது. புனிதர்களையல்ல மாறாக, ஒரு கள்வனைத்தான். காரணம் அவன் வாழ்வில் இயேசுவை மேசியாவாக நம்பி, தன்னை ஒப்புக்கொடுத்தால் கிடைத்த ஒரு அனுபவம், நாமும் நம்மை கிறிஸ்துவின் கரத்தில் ஒப்புக் கொடுப்போம், நிலைவாழ்வை பெற்றுக் கொள்ள நம் ஒவ்வொருவருக்கும் துணை புரிவாராக!

திரு. S. **ஸ்மைலின் நிம்மி ஆனந்த்**

# விண்வாழ்வின் குணமாக்கும் அரவணைப்பு

யோவா 19:26,27

**"இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்பு சீடரையும் கண்டு..."**
(யோவா 19:26).

சிலுவை மனிதர்களுக்கு உறவின் அடித்தளமாக, சிகரமாக இறைவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிலுவை உறவின் சின்னமாக இறைமைந்தன் இயேசுவால் உயர்த்தப்பட்டிருக்கிறது. இம்மூன்றாம் திருமொழியில் உறவு என்பது உயர்த்தப்பட்டிருக்கிறது. உலகிற்கும் அடையாளமாக எடுத்துரைக்கப்படுகிறது.

கோடை காலத்தில் வத்தல் போன்ற தானிய வகைகளை ஆற்றின் கரையில் வாழ்பவர்கள் ஆற்றின் உள் வைப்பார்கள். இதில் இருந்து விழும் தானியங்களை உண்பதற்காக பறவைகள் வருவதுண்டு. ஒருமுறை ஒரு தாய் குருவி தன் மூன்று குஞ்சு குருவிகளுடன் வந்து தானியங்களை உணவாக சாப்பிட்டுக்கொண்டிருந்தது. அந்நேரம் எதிர்பாராவிதமாக காட்டு தண்ணீர் ஆற்றில் கரைபுரண்டு வேகமாக வந்தது. இதை பார்த்த தாய் குருவி பறந்து மேலோங்கி சென்றது, ஆனால் அந்த குஞ்சு குருவிகள் பிறந்து சில நாட்களே ஆனபடியால் வேகமாக பறக்க முடியவில்லை. தண்ணீர் அந்த மூன்று குஞ்சு குருவிகளையும் அடித்து சென்றது. இதை பார்த்த தாய் குருவி பின்னாக பறந்து சென்றாலும் குஞ்சு குருவிகளை காப்பாற்ற முடியவில்லை. அடுத்து வருகின்ற ஒவ்வொரு ஆண்டும் அந்த தாய்குருவி தன் சிறு குருவிகள் அடித்து கொல்லப்பட்ட இடத்தில் தண்ணீர் வரும்பொழுதெல்லாம் தன் குஞ்சுகள் வந்துவிடும் என்று காத்துக் கொண்டிருக்கும்.

நம்முடைய உலக ஓட்டத்தில் நாம் கிறிஸ்துவின் அரவணைப்பை நட்பை விட்டு விலகி, பாவத்தால் தூரம் சென்று கொண்டிருக்கிறோம். என் உன்னதமான உறவை விட்டு சென்ற என் மகன், மகள் தன் பாவத்தை எல்லம் விட்டு என்னிடத்தில் மறுபடியும் வந்து சேருவார்கள் என்று ஆண்டவரும் எதிர்பாக்கின்றார்.

இயேசுவின் பாச உறவு நிலைகளை இரண்டு தலையங்கத்தின் கீழ் சிந்திப்போம்.

## *1) உடைந்த உள்ளத்திற்கு அரவணைப்பு*

"... இயேசு தம் தாயிடம் அம்மா, இவரே உம் மகன் என்றார்" (யோவா 19:26)

குடும்பத்தில் அதிக அக்கரை கொண்டு உறவை கனப்படுத்திய இயேசு நாதர், பாரத்தோடு தன் தாயை பார்க்கிறார். உடைந்த உள்ளத்தோடு, இறுகிய மனதோடு தன் வாலிப மகனை துன்புறுத்திச் சாகடித்துக் கொண்டிருக்கும் காட்சியை காண்கிறார். தாய்க்கு இறுதி அடக்கம் செய்ய வேண்டிய என்னுடைய மரணத்தை என் தாய் பார்த்துக்கொண்டிருக்கிறாரே என்ற கடின நிலையில் இயேசு நாதர் தன் தாயைய பார்த்து (யோவா 19:26) "அம்மா, இவரே உம் மகன்" என்கிறார்.

சுமார் மூன்றரை ஆண்டு காலம் தம்மோடு திருப்பணி ஆற்றிய நண்பர்கள் ஓடிவிட்டனர். யோவான் சீடன் மட்டும் நிற்கிறான், மற்றவர்கள் எல்லாம் தங்கள் பழைய பணிக்கு திரும்பி விட்டனர். தன் நண்பர் போல் உடன் இருந்தவரின் அவல நிலைகளை பார்த்து பரிதபித்து உடைந்த உள்ளத்தோடு நின்ற சீடன் யோவானை பார்த்து "பின்னர் தம் சீடனிடம் இவரே உம் தாய் என்றார். . ." (யோவா 19:27).

தன் வாழ்வில் அவமானம், நிந்தை, பழிச்சொல் மிகுதியாயிருக்கும் நேரத்திலும் எனக்குப் பின்னால் என் தாயை யார் கவனிப்பது? தன் உயிரைப்பற்றி கவலைப்படாமல் தனக்காக கடைசி வரை நின்ற யோவானுக்கு என் இழப்புக்குப் பின் எவ்வளவு வேதனையடைவான்? என உறவுகளைக் குறித்து யோசித்து. எனக்குப் பின்னால் என் தாயும் என் சீடனும் என் இழப்பின் நிமித்தம் அரவணைப்பு இல்லாமல் போய்விடக்கூடாது என்று எண்ணி இருவருக்கும் உன்னதமான உறவை ஆண்டவர் காண்பிக்கின்றார்.

யோவான் 14 :18 "நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன்..." என்று ஆண்டவர் தன் வார்த்தையை நிறைவேற்றினார். இயேசுநாதர் தனது பன்னிரெண்டாவது வயதில் பஸ்காப் பண்டிகையைக் கொண்டாட எருசலேம் செல்கிறார். கொண்டாட்டம் முடிந்த பின்பும் வீடு திரும்பவில்லை என அறிந்த இயேசுவின் தாய் (லூக். 3:48) "... மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ பார் உன் தந்தையும் நானும் மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே" இதில் தாய் தன் மகன் மீது கொண்ட பாசத்தை பார்க்கமுடிகிறது.

யோவானும் இயேசுவின் மார்பில் சாய்ந்தவர். இயேசுவுக்காக கடைசி வரை நின்றவர். இவர் தன் தாயை கடைசி வரைப் பார்த்துக்

கொள்வார் என்றும் தன் மீது அன்புகொண்ட தாய் யோவான் மீதும் அன்பு செலுத்துவார் என்று தன் வாழ்வின் கடைசி நிலையிலும் அன்பு நிறைந்த அரவணைப்பை ஏற்படுத்துகின்றார்.

### *2) உறவை உருவாக்க அழைப்பு*

"... அந்நேரம் முதல் அச்சீடன் அவரைத் தன் வீட்டில் ஆதரவு அளித்து வந்தார்" (யோவா 19:27)

உறவுகளின் வழியாக இறைவரின் இரக்கத்தை மனிதன் உணர்ந்து கொள்ள முடியும். தன் வாழ்வின் கடைசி வரை உறவின் மேன்மைக் குறித்து சிந்தித்தார் இயேசு. இன்று நாம் வாழும் உலகில் உறவுகள் சிதைந்து போகின்ற சூழ்நிலைகள் அதிகமாய் காணப்படுகிறது. உறவை உருவாக்க அனேக வாய்ப்புகள் இருந்தும் மனிதன் தன் தாய், தந்தை மற்றும் தன் நலம்விரும்பிகளை கூட அரவணைத்து நேசிக்க முடியாத ஒரு சுயநல வாழ்விற்கு நேராக பயணிக்கின்றனர்.

கடவுள் மானிடரோடு உறவு கொள்ளவேண்டும். உறவை உறுதிப்படுத்த வேண்டும் என்ற நிறைவு எண்ணத்தோடு மனுமகனாக இயேசுவை உலகத்திற்கு தந்தருளினார். கடவுளின் மகனாக திருவாக்கு செல்வாக்குரியது என்பதை உலக உறவு சார்ந்து இவ்வார்த்தையில் உறுதிபடுத்தியிருப்பது உயர்ந்த ஈடுபாடு என நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த மூன்றாம் திருமொழி மூலம் உடைந்த காயமடைந்த உறவுகளை குணமாக்கும் அன்புடன் வாழ அழைக்கப்படுகிறோம்.

திரு. **A.S. இர்வின் ஸ்மைல்**

# விண்வாழ்வின் மகிமையாகும் கைவிடப்படுதல்

மத் 27:45-50

**"என் இறைவா! என் இறைவா! ஏன் என்னைக் கைவிட்டீர்"** (மத். 27:46).

சாரா என்ற இளம்பெண் இரட்டைக் குழந்தைகளைக் கருவில் சுமந்து கொண்டிருந்தார். ஒரு குழந்தையை 17 வாரத்தில் இழந்தார். மற்றொரு குழந்தையும் 23 வாரத்து குழந்தையாக, உயிரற்ற நிலையில் கொடுக்கப்பட்டது. இவ்விரு சிசுக்களின் இழப்பும் சாராவை வெகுவாகப் பாதித்தது. அதனால் "இரண்டு குழந்தைகளும் இவ்வுலகில் பிழைக்காது. வாழ முடியாது எனத் தெரிந்தும் ஏன் இறைவன் அவைகளை என்னில் அகுமதித்தார்? நான் இவ்வேதனையைச் சந்திக்க வேண்டும் என்பதற்காகவா? துயரப்பட வேண்டும் என்பதற்காகவா? என் இழப்பை ஏன் இறைவன அனுமதிக்கிறார்" என்று கதறினார். சாராவின் கேள்வியும் புலம்பலும் நியாயமானது. ஆனால், இத்தகைய ஆழமான வலிகளுக்கும் இழப்புகளுக்கும் யாரும் பதில் தர இயலாது; எனினும் "ஏன்" என்ற கேள்விகள் நிறைந்த புலம்பல்களை இறைவனின் அன்புப் பிள்ளைகளாக அழுது புலம்பி கேள்வி கேட்க நமக்கு உரிமையாயிருக்கிறது. இது ஒரு அத்தியாவசியமான இறைப் புலம்பல் அல்லது இறை உரையாடல் என விளக்குகிறார். இறையியலாளர் குஸ்தாவோ. இயேசுவும், தமது கடினமான சூழலில் கடவுளை நோக்கி இவ்வா, ஏன்? ஏன்? ஏன்? என வினா எழுப்புகிறார் (மத். 27:46, மாற் 15:34). எந்த ஓர் எழுத்தாளரும், எப்படிப்பட்ட கற்பனைக் காவியத்தை எழுதினாலும், என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்? என்ற இப்படிப்பட்ட சொற்களை எந்த ஒரு கதை நாயகனுடைய வாயிலும் வைக்க மாட்டார். கதை அளவில் கூட நினைத்துப் பார்க்க இயலா இச்சொற்கள் மிகுந்த ஆழமும் அழுத்தமும் நிறைந்தவை. எதற்காக இயேசு இந்த வரிகளைச் சொல்கிறார் என்பதை சிந்திக்குங்கால் பின்வரும் உண்மைகளை அறிந்து கொள்ள முடியும். அவற்றை ஈண்டு தியானிப்போம்.

### *1. உறவினின்று நிராகரிக்கப்பட்ட வலியின் அறிக்கை:*

வலிகளிலேயே மிகப்பெரிய வலி நிராகரிக்கப்படும் வலி தான். இயேசு இப்போது நிராகரிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார். மக்களின்

பாவங்களைப் போக்க வேண்டுமெனவும் மாபெரும் லட்சியத்துடன் வருகைபுரிந்த இயேசு, விண்ணின் மகிமையைத் துறந்து, மண்ணின் புழுதியில் நடந்து, இறையரசை அறிவித்துத் திரிந்தார். கடைசியில் மதவாதிகளாலும், அதிகாரிகளாலும், ஆளும் வர்க்கத்தாலும், ஏன் கூட இருந்த நண்பராலுமே நிராகரிக்கப்பட்டார். ஆகவே, நிராகரிப்பின் வலி அவருக்குப் புதியதல்ல. எனினும், இப்போதைய இயேசுவின் கதறல் மக்கள் அவரை நிராகரித்ததால் வந்ததல்ல. அவரது தந்தையாம் கடவுள் அவரை நிராகரித்ததால் ஏற்பட்ட வேதனை. உண்மையில் இயேசுவுக்கும் கடவுளுக்குமிடையில் அதுவரை காலமும் முறிவடையாமல் இருந்த உறவு சிலுவையில் முறிவடைந்து நித்திய உறவு துண்டிக்கப்பட்டது. இதனால் “சிலுவையில் இயேசு தனிமையில் இருந்தார்; ஆகவே சிலுவையில் துன்புறும்போது என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?” என்று அதிக சத்தமிட்டார். அளவுக்கடற்து நேசிக்கும் ஒருவரால் ஏற்படும் உடல் வலியைவிட, அவர்கள் உறவை முறித்துப் பிரிந்து செல்லும்போது ஏற்படும் வேதனை அல்லது வலி கடுமையானது. கைவிடப்படல் மிகவும்வேதனையான விஷயம். ஒரு நபர் தான் கைவிடப்படும் சூழல் ஏற்படும்போது வாழ்வையே வெறுத்து விடுகிறார். நாம் ஒரு சமுதாயமாக, ஒருவரோடொருவர் உறவு கொண்டு வாழ உருவாக்கப்பட்டுள்ளோமே தவிர, தனிமையில் வாழ உருவாக்கப்படவில்லை. இதனால் தான் தனிமையில் விடுவது மிகவும் கடுமையான தண்டனையாக உள்ளது. இயேசு சிலுவையில் தொங்கின பொழுது அந்தத் தனிமையினால் ஏற்பட்ட வேதனையை உணர்ந்தார் என்பது “என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?” என்று இயேசு மிகுந்த சத்தமிட்டுக் கூறினதின் மூலம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. கிறிஸ்து நமது பாவங்களின் பாரத்தினால் பாடுபட்டபொழுது, திடீரெனக் கைவிடப்பட்டவராக, தனிமையில் விடப்பட்டவராக, கடவுளோடு இருந்த தொடர்பு அற்றுப் போனவராக இருந்தார். ஆகவே, இந்த வார்த்தையின் வழி உறவுகளின் பாசம் கிடைக்காத மக்களின் ஏக்கத்தின் பிரதிபலிப்பே ஏன் கைவிட்டீர்? என்ற கதறல் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

### *2. போராட்டத்தை இறைவனிடம் எடுத்துரைக்கும் பாங்கு:*

“என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?” என்ற வரிகள் இயேசுவின் கதறல்களை, கேள்விகளை, புலம்பல்களை முன்வைக்கிறது. இயேசுவின் இந்தப் போராட்டம் அல்லது துயரம் ஆன்மிகத்துக்கு ஒரு பெரும் சவாலாக உள்ளது. விவிலியத்தில் ஏன்

உலகில் மற்றெந்தப் படைப்புகளிலும் இயேசுவின் ஆழ்ந்த, அழுத்தமான, துயர வலி நிறைந்த போராட்டங்கள் போல வேறெங்கும் நாம் படிக்கவோ காணவோ முடியாது. இந்த வார்த்தை "அநீதியின் செயலின் விளைவால் வந்த மரணத்தோடு போராடுகின்ற போராளியின் வார்த்தையாகக்" காணமுடிகிறது. 21ஆம் நூற்றாண்டின் இமாலய வளர்ச்சி என்று சொல்லிக்கொள்ளும் நம் சமுதாயத்தில் எங்கும் பரவிக்கிடக்கும் உலகமயமாதல், தாராள மயம், தனியார் மயம், நுகர்வு மயம், இயந்திர மயம் போன்ற சூழல்களில் பாதிக்கப்படும் மக்களின் குரலும், வீழ்ச்சியுற்று வரும் நாடுகளின் அபயக் குரலும் ஏன்? ஏன்? ஏன்? என்று ஒலித்துக் கொண்டே இருக்கிறது. வாழ்வே ஒரு போராட்டமாக மாறிப்போன சூழலில், பணத்துக்காக் கொலை, சதி, துரோகம், ஏமாற்று வேலைகள் எல்லாம் அரங்கேறுகின்றன. மக்களை அச்சுறுத்தும் தீவிரவாத செயல்கள், உள்நாட்டுப் பிரச்சனைகளால் புலம்பெயரும் நிலை, யுத்தங்களால் அப்பாவி மக்கள் உடல் உறுப்புகளை இழந்து ஊனமுற்று அலைகிற அவலம், பல்லாயிரக்கணக்கான பெண்கள் தினந்தினம் மிருகத்தனமாகப் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படல், வறுமை, பட்டினி, வேலையின்மை, பிணி, கடன், கார்ப்பரேட் மயம் போன்ற அவலங்கள் இறைவா, நீர் கைவிட்டதினாலா? என்று அன்றாடம் நிகழும் போராட்டமான வாழ்வின் இயல்புகளை இறைவனின் பார்வைக்குக் கொண்டு செல்கிறார் இயேசு. மேலும், இவ்வாறு இந்த வினாவைக் கேட்பதன் மூலம் தாமும் ஒடுக்கப்படுகிறவர்களோடு அவர்களின் வரலாற்றில், வாழ்வில், வழியில் இணைத்து இருந்தவராக, வாழும் வரலாற்றில் தம்மையும் இணைத்துக் கொண்டவராக இந்தச் சொற்றொடரை வெளிப்படுத்துகிறார் என்பது தெளிவு.

செல்வாக்கு மற்றும் செல்வம் நிரம்ப பெற்ற யோபு, தன் பிள்ளைகள், அனைத்துக் கால்நடைகள் மற்றும் உடைமைகளை எல்லாம் இழந்து நின்ற போதும், அவரது நண்பர்கள் குறை கூறின போதும், மனைவி இறைவனை மறுதலிக்கச் சொன்ன போதும் யோபு அதற்கு இணங்காததால் அவரைத் தனியே விட்டுச் செல்கின்றனர். தனிமையில், துயரத்தில், இழப்பின் உச்சத்தில் பெயரிடப்படாத உடல், தோல் நோயில் இறைவனிடம் புலம்பி தன் போராட்டத்தை எடுத்துரைக்கிறார். அதுபோலவே, இங்கு இயேசுவும் தமது போராட்டத்தை இறைவனிடம் எடுத்துரைக்கிறார்.

### *3. நம்பிக்கைச் சிதைவின் பிரதிபலிப்பு:*

உன்னை எப்படியெல்லாம் நம்பியிருந்தேன்? இப்படி என்னைக் கைவிட்டு விட்டாயே? என்று நம்முடைய நெருங்கிய நண்பர்கள் நமக்கு

ஏதாவது தீங்கு செய்கிறபோதோ, உதவி கேட்டு மறுக்கிறபோதோ நாம் சொல்வதுண்டு. அது நாம் அந்த நண்பரிடத்தில் வைத்திருக்கிற தீராத நம்பிக்கையின் வெளிப்பாடு. அந்த நம்பிக்கை சிதைக்கப்படுகிறபோது, மனம் நொறுங்குண்டு இந்த வார்த்தைகளை உதிர்க்கிறோம். அப்படிப்பட்ட தொனியில் தான், இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டபோது, அவர் சிலுவையிலிருந்து உதிர்த்த நான்காம் வார்த்தை இருக்கிறது என்பது பொதுவாகச் சொல்லப்படும் விளக்கம். ஆனால், "பொதுவாக என் இறைவா என்று இறைவனைக் கூப்பிடுவது வாழ்வு கடினப்படும் பொழுது அல்லது துன்பப்படும்பொழுது வெளிப்படுத்தும் கூக்குரலின் போது பயன்படுத்தப்படும் ஓர் அடையாளச் சொல்லாக என் இறைவா என்று இதனை இங்கே கூறி இருக்கிறார்" என்பது வில்லியம் லேன் என்பவரது கருத்து. எது எப்படியாயினும், கடவுள் மீது முழுமையான நம்பிக்கை கொண்ட ஒருவரின் வார்த்தை தான் நம்பிக்கை இழந்த நேரத்தில் வெளிப்பட்டது என்பது பலராலும் குறிப்பிடப்படும் கருத்து. இயேசு கடவுள் மீது நம்பிக்கை கொண்டிருந்த நேரத்திலும், துன்பங்களை அவர் சந்திக்க நேரிடுகிறது. அந்தத் துன்ப நேரத்தில், மற்றவர்கள் நம்பிக்கையாளரான இயேசுவை பரிகசிக்கிறார்கள். அவரை வார்த்தைகளால் வதைக்கிறார்கள். கடவுள், கடவுள், என்று சொன்னானே? இப்போது அந்தக் கடவுள் எங்கே? என்று இறுமாப்பு செய்கிறார்கள். துன்ப நேரத்தில் கடவுள் நம்பிக்கை கொண்டவரை நெருக்கடிக்கு உள்ளாக்குகிறார்கள். அந்த வேதனையில் எழுப்பப்படக் கூடிய வரிகள் தான் இவை. என்னால் சமாளிக்க முடியாது. இதை நம்மால் தாங்க, தாக்குபிடிக்க இயலாது போன்ற வாசகங்கள் துன்பமிகு நேரங்களில் நாம் நம்பிக்கை இழந்து சொல்லக் கூடிய வாக்கியங்களாகும். இந்நோயை, வலியை, ஏமாற்றத்தை, தோல்வியை, இழப்புகளைச் சந்திக்கவோ, தாங்கவோ, கடந்துவரவோ எனக்குச் சக்தியில்லை என்ற மனப்போராட்டத்தோடு நாம் புலம்புவது, எனக்கு ஏன் இந்த இழப்பு? எனக்கு ஏன் இந்தச் சோதனை? எனக்கு ஏன் பெரிய கடன் தொல்லை? எனக்கு மட்டும் ஏன் இறைவன் இந்த வலியை துயரத்தை தருகிறார்? நான் வலியில் கதறவேண்டும் என இறைவன் அனுமதிக்கிறாரா? விரும்புகிறாரா? என்ற புலம்பல் வார்த்தைகளாகத் தொடர்கின்றன. குறிப்பாக, கொரோனா வைரஸின் அச்சுறுத்தலுக்குப் பயந்து, தங்கள் உயிரைக் காக்கவும், வெளியே இருப்பவர்களின் உடல் நலத்திற்காகவும் வீடுகளுக்குள் முடங்கியிருந்தவாறு "என் இறைவா, என் இறைவா, ஏன் எம்மை இப்படிக் கை விடுகிறீர்?" என மக்கள் கேட்பது இந்த நான்காம் வார்த்தையின் எதிரொலி ஆக உள்ளது. மேலும், இதுவரை

கேள்வியுற்றிராத மதம், இனம், மொழி சார்ந்த பல பயங்கரவாத, தீவிரவாத இயக்கங்கள் பற்றி தற்காலத்தில் அறிகின்றோம். இவற்றுக்குப் பின்னால் சர்வதேச வலைப்பின்னல் படர்ந்திருப்பது நன்கு தெரிகிறது. இந்த நிலை வந்தது, இறைவா, நீர் கை விட்டதினாலா? என்ற நம்பிக்கைச் சிதைவுடன் மக்கள் கேள்வி எழுப்புவது நிதர்சனமான தினசரி செய்திகள் என்பதும் மறுப்பதற்கில்லை.

நாம் அன்றாட வாழ்வில் விளக்கங்கள் தர இயலாத, புரிய முடியாத வலிகளையும், துயரங்களையும் சந்திக்கும் பொழுது நம் சாட்சியம் சோதிக்கப்படுகிறது. நம் விசுவாசத்திற்கு இறைப்பற்றுக்குச் சவாலான தருணம் இது. இவைகளில் இருந்து நாம் விலகி ஓட முடியாது. சிலுவையில் அறையப்பட்டு "ஏன் என்னை கைவிட்டீர்" என்று உள்ளுணர்வில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. தேசத்தின் அநீதிகளைக் கவனிக்காததால் நம் நாடும் நாட்டின் மக்களும் ஏன் கைவிடப்படுகிறோம் என்ற அழுகுரலுடன் வாழ்கிறார்கள் என்பது நிதர்சனம். ஆயினும், கடவுள் எப்போதும் நம்மைக் கைவிடமாட்டார். எந்நாளும் அவர் நம்மோடு இருக்கிறார். நம் துன்பத்தில் பங்கெடுக்கக் கூடியவராக இருக்கிறார் என்பது நம் பற்றுறுதியை வலுவாக்கும் நங்கூர வார்த்தைகள் என்பதும் வெள்ளிடைமலை. அதற்கு, நமது போராட்ட அனுபவத்தில், வலியில், துயரில், கடவுள் நம்மோடு இணைந்து இருக்கிறார், நம்மோடு பங்கேற்கிறார் என்பதை அடையாளம் காண்போம், போராட்டத்தை அவரிடம் எடுத்து உரைப்போம். ஆறுதலும், தேறுதலும் பெறுவோம்.

திரு. **G. சந்தோஷ்**

# விண்வாழ்வின் எதிர்பார்க்கும் தாகிப்பு

மத் 27:45-50

**"...இயேசு தாகமாய் இருக்கிறது என்றார்"** (யோவா 19:28).

சிலுவையில் தொங்கிய படியே கிறிஸ்து இயேசு "தாகமாயிருக்கிறேன்'' என்றார். இவ்வார்த்தை ஓர் சிறிய வார்த்தை ஆனால், அவ்வார்த்தையை சொன்னவர் யார்? சொன்ன சூழல் என்ன? என்பதைப் பொறுத்து அதன் பொருள் மாறுபடுகிறது. மனிதனாகப் பிறந்தவர்கள் அனுபவிக்க கூடிய பாடுகளில் கொடூரமானது தாகத்தினால் ஏற்படும் பாடு என்றால் மிகையாகாது. என்ன விலை கொடுத்தாவது தண்ணீரை வாங்கி தாகத்தை தணிக்கின்றனர். "நான் கொடுக்கும் தண்ணீரை குடிப்பவர்க்கோ ஒரு நாளும் தாகம் உண்டாகாது" என்று உரைத்த இயேசு கிறிஸ்து "தாகமாயிருக்கிறேன்" என்றார். ஏன் இந்த தாகம்? பல மணி நேரமாக தொடர்ந்து கொண்டிருக்கும் பாடுகள் நிறைவுற போகும் நேரம் நெருங்கி கொண்டிருக்கிறது. பல கசையடிகள், அங்குமிங்குமாக அலைக்களிக்கப் பட்ட நிலை, முந்தைய நாள் இரவில் தம் சீடர்களுடன் பஸ்காவை ஆசரித்த போது பானம் பண்ணினார். அதன் பின் தண்ணீர் குடித்ததற்கான குறிப்புகள் எதுவுமில்லை. தாகமாயிருக்கிறேன் வார்த்தை நமக்கு கற்றுதரும் உண்மைகளைச் சிந்திப்போம்.

## *1. இறைவாக்கு நிறைவேறியதன் வெளிப்பாடு :*

வேத வாக்கியம் நிறைவேறத்தக்கதாக . . . (யோவா. 19:28a)

தாகமாயிருக்கிறேன் என்ற சொல் இயேசுவை உலகின் மீட்பர் என்பதனை உறுதி செய்கின்றது. திபா. 69 : 21-ன் படி என் தாகத்திற்கு காடியை குடிக்க கொடுத்தார்கள் என்ற வார்த்தையின் நிறைவேறுதற்காக அமைந்த ஒரு வார்த்தை ஆகும். இயேசு தம்மை குறித்து கூறப்பட்ட அனைத்து வார்த்தைகளையும் தம் பணிகாலத்தில் செய்து நிறைவேற்றினார். நிறைவேறாமல் இருந்த இந்த வார்த்தையினை சிலுவையில் நிறைவேற்றினார். இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, பாடுகள், சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவை முன் அறிவிக்கப்பட்ட

ஒன்று. அவைகளை படிப்படியாக செய்து இறைவாக்கினை நிறை வேற்றினார் தன்னுடைய வாழ்வின் வழியாக தந்தையின் சித்தத்தினை அப்படியே செய்து நிறைவேற்றினார் இயேசு கிறிஸ்து. தாகமாயிருக்கிறேன் என்ற வார்த்தையினை கேட்டவுடன் உரோமை படைவீரர் ஒருவர் கடற்காளானை காடியில் தோய்த்து அவருக்கு குடிக்க கொடுக்கிறான். இயேசு கசப்பான அந்த காடியை வாங்கி தன்னுடைய தாகத்தினை தீர்த்தார் என்றால் அது இறைவார்த்தையின் நிறைவேறுதலுக்காகவே என்றால் அது உண்மையிலும் உண்மை. இயேசு உலகில் வந்து தந்தையாம் கடவுளின் வார்த்தையை நிறைவேற்றியதை போல நாமும் நிறைவேற்ற அழைக்கப் படுகிறோம்.

## *2. மனிதத் தன்மையின் வெளிப்பாடு :*

ஆண்டவரும் கிறிஸ்துவுமாகப் போற்றப்படும் இயேசு தமக்கு தாமே சூட்டிக் கொண்ட பெயர் மானிட மகன் (மனுமைந்தன்) இறைமைந்தரும் திருவாக்குமாக என்றென்றும் இறைவனுடன் இருந்தவர் இயேசுவில் ஓர் உண்மையான மனிதராக ஊன்உடலேற்று இவ்வுலகத்தில் வந்தார். யோவா. 12:32 நான் பூமியில் இருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன் என்றார். அவர் சொன்ன படியே அனைவரையும் தம்மண்டை இழுத்துக் கொண்டார். சிலுவையில் இயேசு மொழிந்த இந்த வார்த்தையின் படி அவரது மானிட தன்மையின் வெளிப்பாடாகவே தாகமாயிருக்கிறேன் என்றார். ஒரு சாதாரண மனிதர் படும் பாடுகளை அவரும் பட்டார். வேதனைதனை அனுபவித்தார் சாதாரண மனிதனை போன்று தாகமாயிருக்கிறேன் என்கிறார். இச் செயல்கள் இயேசுவின் மானிடத் தன்மையின் ஓர் வெளிப்பாடாக இருந்தது. இயேசு கிறிஸ்து வார்த்தையின் மனுவுரு என்பதும், அவரது ஊன் உடலில் ஒரே பேறான இறை மகனின் மாட்சியானது தங்கியுள்ளது என்பதும் இவ்வார்த்தையின் வெளிப்பாடாக, நிறைவேறுதலாக அமைந்துள்ளது.

இயேசுவுக்கு கடவுள் கொடுத்த பணி அவருடைய விருப்பத்தின்படி மனுக்குலத்தை வாழ்வடையச் செய்யும் படி தம்முடைய உயிரை கொடுப்பதாகும். மக்கள் மீட்படையும்படி, தம் உயிரை கொடுத்து மீட்படைய செய்யும் தாகமாகும். தாகமாயிருக்கிறேன் என்ற வார்த்தையின் படியாக இயேசு திருமறையால் தம்மை குறித்தவைகள் நிறைவேறவே வார்த்தையினை உதிர்த்தார். இவ்வார்த்தையை சிந்திக்கும் நாமும் இயேசு கிறிஸ்து எப்படி தந்தையின் விருப்பத்தினை செய்து நிறைவேற்றினாரோ அப்படியே இயேசு கிறிஸ்துவின் விருப்பத்தினை செய்து நிறைவேற்ற அழைக்கப்படுகிறோம். விருப்பத்தை உணர்ந்து, நிறைவேற்றி இறையாட்சியை பெற்றுக் கொள்வோம்.

அருள்திரு. A. **ஜெபதாஸ்**

# விண்வாழ்வின் கடமையாகும் நிறைவு

யோவா 19:30

**இயேசு,"எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறித் தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார்.** (யோவா 19:30)

"இன்றே வாழ்வின் இறுதி நாள் என்றும் இறையரசு பூமியில் இருந்தது என்றும் எண்ணி வேகமாய் செயல்பட வேண்டும்" என்று தாமஸ் எ. கெம்பிஸ் கூறுகிறார். ஒரு மனிதனுக்கு இரண்டு பிறந்த நாட்கள் உண்டு என்று வில்லியம் பார்க்ளே கூறுகின்றார். ஒரு மனிதன் இந்த உலகில் பிறக்கும் நாள் முதல் பிறந்தநாள் என்றும் இந்த உலகத்தில் என்ன நோக்கத்திற்காக பிறந்தார் என்பதை அறியும் நாள் இரண்டாவது பிறந்தநாள் என்பதும் அவரது கருத்தாகும். எனவே ஒரு மனிதன் அறிவதும் அத்துடன் அந்த நோக்கத்தை இவ்வுலகில் நிறைவேற்றுவதும் மிகவும் முக்கியமானது.

ஆண்டவர் இயேசு கிறிஸ்து தான் இந்த உலகத்தில் வந்ததன் நோக்கம் என்ன என்பதை அறிந்து அந்த நோக்கத்தை முழமையாய் நிறைவேற்றி "எல்லாம் நிறைவேறிற்று" என்று சிலுவையில் நின்று உரத்த சத்தமாய் கூறுகின்றார்.

லூக் 4:18,19 வசனங்களில் இயேசு இந்த உலகத்தில் என்ன நோக்கத்திற்காக வந்தார் என்பதை குறிப்பிடுகின்றார். இயேசு மேசியாவென்று தீர்க்கர்களால் முன்னுரைக்கப்பட்டார். உலகத்தின் பாவங்களை நீக்கி மனிதரை ரட்சிக்கும் ரட்சகர் (மத் 1:21) என்று தூதர்களால் அறிவிக்கப்பட்டார். உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி என்று யோவானால் அறிவிக்கப்பட்டார். இழந்து போனதை தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார் (லூக் 19:10) என்று கூறுகிறார். இவ்வாறு அவரைக் குறித்து சொல்லப்பட்ட வார்த்தைகளையும் வாழ்ந்து காட்டினார். அந்த மீட்பின் செயலை நிறைவேற்றி எல்லாம் முடிந்தது என்று மாதிரியைக் காண்பித்தார்.

பவுலடியார் குறிப்பிடும்படி ஓட்டத்தை முடிக்க நல்ல போராட்டம் போராடுதல் அவசியம். போராட்டம் நிறைந்த வாழ்க்கையில் பின்னிட்டு பாராமல் துணிவுடன் முன்னோக்கி செல்வது மிகவும் தேவையான ஒன்று.

இயேசு நாதர் பிறந்தது முதல் பல போராட்டங்கள் அவரது வாழ்க்கையில் வந்தன. பிசாசானவன் அவரை சோதித்தான். யூத மத தலைவர்கள் இயேசுவின் போதனைகளையும், அவர் செய்யும் அற்புதங்களையும் எண்ணி அவரை எதிர்த்தனர். சிலுவைப் பாடுகள் அவருக்கு கூடாது என்று பேதுரு தடுத்தான். இப்படிப்பட்ட அனைத்து தடைகளையும் தாண்டி இயேசு சிலுவை பணியை நிறைவேற்றினார். தனது சீடர்களைப் பார்த்து "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின் மீது வெற்றி கொண்டுவிட்டேன் " (யோவா. 16:33) என்று கூறினார். எனவே தந்தையின் சித்தத்தை துணிவுடனும் தந்தையின் துணையோடும் செய்து நிறைவேற்றி எல்லாம் நிறைவேறிற்று என்று சிலுவையில் மொழிந்த இயேசு நம் அனைவருக்கும் பெரும் சவாலை விட்டுச் சென்றுள்ளார். அவரது பணியைத் தொடரும் நாமும் வெறும் வார்த்தையிலல்ல வாழ்வில் அவரைப் பறைசாற்றுவோம். உலகில் வரும் அனைத்துத் தடைகளையும், துன்பங்களையும் துணிவுடன் மேற்கொண்டு இறைவனின் சித்தத்தை இவ்வுலகில் நிறைவேற்றுவோம்.

திரு. Y. **சுஜின்ராஜ்**

ஏழாம் திருமொழி

# விண்வாழ்வின் மணிமுடியாகும் ஒப்படைப்பு

லூக் 23:46

**“தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன் என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார்”** (லூக் 23:46).

மாவீரன் நெப்போலியன் பல இராஜ்யங்களை கைப்பற்றி பின்னர் எதிரிகளின் கைகளில் சிக்குண்டு செயின்ட் ஹெலினா தீவில் சிறை வைக்கப்பட்டார். அப்போது மந்தோன் பிரபுவிடம் இயேசு கிறிஸ்து யார் என்று தெரியுமா? என்று கேட்டார். அவர் தெரியாது என கூறினார். நெப்போலியன் அவரிடம் நான் சொல்வதை கேள்! அலெக்சாண்டர், ஜூலியஸ் சீசர் மற்றும் நானும் ஆயுதத்தைக் கொண்டு அதிகாரம் செய்து இராஜ்யங்களை ஸ்தாபித்தோம். ஆனால் இயேசு ஒருவரே அன்பினால், விண் வாழ்வில் மணிமுடியாகும் ஒப்படைப்பான வாழ்வினால் ஸ்தாபித்தார். அதினால்தான் இன்றும் மனித இதயங்களை ஆண்டு வருகிறார் என்றார். யோவா 11:13 இன் படி “உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” என்று முன்னுரைத்த இயேசு நாதர் தனக்குள் ஆவியை வைத்த பிதாவாகிய கடவுளிடமே ஆவியாகிய உயிரை ஒப்படைத்தார். ஆம் விண் வாழ்வின் மணிமுடியாகும் மூன்று விதமான ஒப்படைப்பை தியானிப்போம்.

## *1. அதிகாரத்துடன் கூடிய ஒப்படைப்பு* :

சிலுவை பாடுகளை ஏற்கும் முன் தன்னை நல்ல மேய்ப்பருக்கு ஒப்பிட்டு பேசும் போது, யோவா 11:15b,18) நல்ல ஆயன் நானே. தந்தை என்ன அறிந்திருக்கிறார்; அதுபோல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன். என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன். உயிரைக் கொடுக்கவும், எனக்கு அதிகாரம் உண்டு; அதை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் அதிகாரம் உண்டு. என் தந்தையின் கட்டளைப்படியே நான் இப்படிச் செய்கிறேன். தன் உயிரைக் கொடுக்கவும், அதை திரும்ப எடுக்கவும் தமக்கு அதிகாரம் இருந்தும் பிதாவின் சித்தம்

நிறைவேற சிலுவையில் ஒப்புக் கொடுத்தார். மாற் 26:53ல் இயேசவை கைது செய்ய வந்த போது பிரதான ஆசாரியரின் வேலைக்காரனை, சீடனில் ஒருவனாகிய சீமோன் பேதுரு கதற வெட்டினான். இயேசு அவனை கடிந்து, நான் என் பிதாவை வேண்டிக் கொண்டால் பன்னிரெண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பியிருப்பரே என்றார். ஒரு லேகியோன் என்பது ஆறாயிரம் போர் வீரர்களுக்கு சமம். தன்னை பாதுகாக்க அதிகாரம் இருந்தும் பிதாவின் திருவுளம் நிறைவேற்ற தன் ஆவியை சிலுவையின் வழியாய் ஒபபுக் கொடுத்தார். இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் உச்சகட்ட நேரம். மரணத்தை ஜெயிக்கும் வார்த்தையாக ஏழாவது வார்த்தையை குறிப்பிடுகிறார். மனுக்குலத்தின் பாவங்களை ஏற்று, நமது துக்கங்களை சிலுவையில் சமந்து, நமது மீறுதல்களுக்காய் காயப்பட்டு, நமது அக்கிரமங்களுக்காய் நொறுங்கப்பட்டு, நமக்கு வரவேண்டிய ஆக்கினையை அவர் ஏற்றுக் கொண்டார். இவையாவும் இயேசு நாதர் நம்மீது கொண்ட அன்பின் பொருட்டு எல்லாவற்றையையும் ஏற்று முடித்ததும் தன் ஆவியை பிதாவிடம் ஒப்படைத்தார். குறள் 72 அன்பிலார் எல்லாம் தமக்குரியவர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு. பொருள்: அன்பு இல்லாதவர் எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர். அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி அனைத்தும் பிறருக்கென எண்ணிடுவார். ஆம் அன்பின் பிறப்பிடமாகிய ஆண்டவர் இயேசு நாதர் மக்கள் மீது கொண்ட அளவுகடந்த அன்பின் பொருட்டு, உலக மக்களின் மீட்புக்காக தன் ஆவியை பிதாவிடம் ஒப்படைத்தார்.

### *2. விண் வாழ்விற்கான ஒப்படைப்பு* :

சிலுவையில் திருவாய்மொழிந்த, முதல் வார்த்தையை இறைவேண்டுதலோடு துவங்கியது போலவே, நிறைவு மொழியையும் இறைவேண்டுதலோடு மனுக்குலம் விண் வாழ்வின் மேன்மையை உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தன்னை ஒப்புக் கொடுத்து நிறைவு செய்கிறார். திப 31:5 இன் படி யூத மக்கள் நித்திரைக்கு செல்லும் முன் “உமது கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்” என்று இறைவேண்டல் செய்வது வழக்கம். அவ்வாறே அருள் நாதர் இயேசுவும் இறைவேண்டல் செய்கிறார். முதல் இரத்த சாட்சியும், பரிசுத்தமுமான, ஆதி திருச்சபையின் ஏழு மூப்பர்களில் ஒருவரான ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்படும் சமயத்தில் “ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும்” என்று அப் 7:59 இல் படி இறைவேண்டுதலோடு தன் ஜீவனை விண் வாழ்விற்கென ஒப்படைத்தார். வரலாற்றில் இறை

மனிதர்களின் கடைசி வார்த்தைகள்: மைக்கல் ஏஞ்சலோ; நான் இயேசு கிறிஸ்துவின் மேல் உள்ள முழு நம்பிக்கையுடனும், அவர் எனக்கு அருள போகிற விண்ணக வாழ்வை எதிர்நோக்கிய வண்ணம் செல்லுகிறேன். மார்ட்டின் லூத்தர்; மரணத்தை வெல்ல இயேசு கற்றுக் கொடுத்துள்ளார். சத்திய பரனாகிய கர்த்தாவே உமது கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன். நம் வாழ்வின் கடைசி வார்த்தைகள் எவ்வண்ணமாக இருக்க போகிறது? நம் வாழ்வை இன்னும் பரிசுத்தமாக்குவோம், முழுமனதோடு ஆண்டவரில் அன்பு கூறுவோம், நம்மை இயேசுவுக்கு ஒப்புக் கொடுப்போம். விணி வாழ்வில் மணிமுடியாகும் வாழ்வை பெற்றுக் கொள்வோம்.

திரு. R. **அனிஷ் ரூபன்**

# விழாக்கால அருளுரைகள்

# குழந்தைகள் குடும்பத்தின் மகிழ்ச்சி

நீமொ 23:22-26

**"ஞானமுள்ள பிள்ளையைப் பெற்ற தகப்பன் அவர் பொருட்டு மகிழ்ச்சி அடைவர்"** (நீமொ 23:24)

குழந்தைகள் மகிழ்ச்சியின் ஊடகங்களாகவும், அடையாளங்களாகவும் திகழுகிறார்கள். குடும்பத்தில் பிள்ளைகள் பிறக்கும் போது அளவிட முடியாத மகிழ்ச்சி நமக்கு ஏற்படுகிறது. பிள்ளைகள் மகிழ்ச்சியைத் தொடர்ந்து தர வேண்டுமானால் அதில் பெற்றோர்களின் பங்கு அதிகம் இருக்கிறது. பிள்ளைகளின் வாழ்வில் அடித்தளம் சரியாக அமைத்துக் கொடுக்க வேண்டிய கடமை பெற்றோர்களுக்கு இருக்கிறது. தங்கள் கரத்தில் கொடுக்கப்பட்ட பிள்ளைகள் பிறருக்கும் மகிழ்ச்சியாக வாழ்வதைப் பெற்றோர் உறுதிப்படுத்த வேண்டும். குழந்தைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை சாலமோன் வழியாக கடவுள் கூறுகிறார். (நீமொ 23:24) நீதிமானாக ஞானமுள்ளவர்களாக பிள்ளைகள் வளரும் போது அவர்கள் பிறருக்கும், தங்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். பிள்ளைகள் வாழ்வு சீரமைக்கப்பட்டால் சமுதாயம் சீரமைக்கப்படும். ஓய்வுநாள் பள்ளியின் பங்களிப்பு பிள்ளைகளை சீர் செய்வதில் அதிகம். பிள்ளைகள் மகிழ்ச்சியாக இருக்க ஓய்வுநாள் பள்ளி எந்த நிலையில் பிள்ளைகளை சீர் செய்ய வேண்டும் என்பதைத் திருமறை வழியாகத் தியானிப்போம்.

## *1. இருதயம் ஞானமுள்ளதாயிருந்தால் - மகிழ்ச்சி*

(நீமொ 23:15)

ஞானம் இருதயத்தில் இருந்தால் மகிழ்ச்சி. பொதுவாக ஞானம் என்றாலே அது தலையிலிருந்து வருவது என நாம் குறிப்பிடுவதுண்டு. ஆனால் திருமறை இருதய ஞானம் என நம்மை சிந்திக்கத் தூண்டி பக்குவப்படுத்துகிறது. தலையிலிருந்து வரும் ஞானம் மற்றவர்களை மட்டம் தட்டுகிறது, மற்றவர்களின் நிலையைப் புரியாது, சுய நலம் உடையது. ஆனால் இருதய ஞானம் ஒத்துணர்வையும் (Empathy), பரிவுணர்வையும் (Sympathy) ஏற்படுத்துகிறது, அன்புடன் செயல்பட வைக்கிறது. சுருக்கமாகக் கூற வேண்டுமானால் நம் இருதயம் ஒரு நாள் 1,03,689 முறை துடிக்கிறது.

மூளை 70 லட்ச செயல்கள் செயல்பட உதவுகிறது. இருதயம் இதை அனைத்தையும் விளம்பரம் இல்லாமல் அனுதினமும் இதை செய்து வருகிறது. இருதயத்தின் செயல்கள் தேக்கமில்லாமல் செயல்படுகிறது, அதே போல் தேக்கமில்லாத எப்போதும் கரிசனையுள்ள ஞானமாக இருக்க வேண்டும் இத்தகைய நிலையில் பிள்ளைகளை ஓய்வுநாள் பள்ளி உருவாக்க வேண்டும்.

## *2. வாய் செம்மையானதாக இருந்தால் - மகிழ்ச்சி*

(நீமொ 23:16)

வாழ்க்கை நம் வசமாவதும் அதுவே விஷமாவதும் நம் வார்த்தைகளில் தான் இருக்கிறது. ஆண்டவர் செம்மையான வார்த்தைகளை நம்மிடம் எதிர்பார்க்கிறார். நீதி, உண்மை, கனிவான சொற்கள், தேவையான வார்த்தைகளைப் பயன்படுத்தும்போது நம் வாய் செம்மையானதாக இருக்கிறது. இந்த உலகம் தான் பிள்ளைகளுக்குப் பேசக் கற்றுக்கொடுக்கறிது குறிப்பாக பிள்ளை பேச படிப்பது தன் பெற்றோர்கள் வாயிலாக. பெற்றோர் எந்நிலையில் பேசுகிறார்களோ அப்படியே பிள்ளைகளும் பேசுவார்கள். இன்று நம்முடைய சமூதாயத்தில் பிள்ளைகள் கேட்ட வார்த்தைகளை பயன்படுத்தும் போது அது கெட்ட வார்த்தைகளாகவும் சில நேரங்களில் இருக்கிறது. பெற்றோர்களின் வாய் செம்மையாக இருக்கும் போது பிள்ளைகளின் வார்த்தைகளும் கரிசனையுள்ளதாக, நீதியுள்ளதாக இருக்கும். பெரியோர்களை மதிப்பது, கணம்பண்ணுவது இன்று நம் சமூதாயத்தில் குறைந்து கொண்டு வருகிறது. எனவே சிறு வயதிலிருந்து செம்மையானதயே கற்றுக் கொடுக்க வேண்டும்

## *3. திருச்சபையும் திருமறைப்பள்ளியும்*

தலைமுறைகளை வடிவமைக்கும் இடம் திருச்சபையும், திருமறைப்பள்ளியும் “Church is a place of formation and reformation” திருச்சபை நம்மை உருவாக்கவும், மாற்றுறுருவாக்கவும் செய்கிறது. அதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும். ஓர் சமூதாயத்தை வடிவமைப்பதில் திருச்சபையின் பங்கு அதிகம், அதே போல் அடுத்த தலைமுறையாகிய சிறார்களை வடிவமைப்பதில் திருமறைப்பள்ளி முக்கியத்துவம் வகிக்கிறது.

பாமரன் என்னும் வார்த்தையைக் கேட்டிருப்போம். ஒன்றும் தெரியாதவர்களை சுட்டி காட்டும் வார்த்தை பாமரன். பழைய காலத்தில் சொல்லத் தெரியாதவர்களை பாமரன் என்பார்கள், பிற்காலத்தில் படிக்க தெரியாதவர்களை பாமரன் என்பார்கள். ஒரு காலத்தில் ஆங்கிலம் தெரியாதவர்களை பாமரன் என்பார்கள், தற்காலத்தில் கணிணி

தெரியாதவர்களை பாமரன் என்கிறோம். காலம் புதுப் புது பாமரர்களை உருவாக்கிக் கொண்டு இருக்கிறது. ஆனால், இன்று பிள்ளைகள் பல நேரங்களில் பெற்றோர்களைப் பாமரர் என்று கருதுவதுண்டு. படிப்பு, வேலை, வெற்றி, பணம் வந்துவிட்டால் மற்றவர்களை மதிக்கும் நிலை மாறிவிட்டது இது மகிழ்ச்சியைச் சீர்குலைத்துவிடுகிறது.

குடும்பத்தின் மகிழ்ச்சியாக இறைவன் குழந்தைகளை தந்திருக்கிறார். அதை பாதுகாக்கும் பொறுப்பு நம் கரத்தில், பெற்றோர், திருச்சபையுடன் இணைந்து பிள்ளைகளை உருவாக்க வேண்டும் அப்போது அவர்கள் மகிழ்ச்சியை தருவார்கள். உலக கல்வியுடன் திருமறை கல்வி மிக முக்கியம் அதை உணர்ந்து மகிழ்ச்சியின் குடும்பங்களையும், சமூதாயத்தையும் உருவாக்குவோம்.

திரு. **நிஸ்பர்ட்** G.N. **ஷாலோம்**

# அருட்பணி : மானிடத்திற்குப் பணிவிடை

**MISSION : SERVICE TO HUMANITY**

எசா 42:1-9 1கொரி 1:18-31
திபா 146 யோவா 13:1-17

**"நான் உங்களுக்கு செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்"** (யோவா 13:15).

இன்று சுதேச மிஷனெறிச் சங்க நாளைக் கொண்டாடுகின்றோம். 1899 -ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22,23 நாட்களில் திட்டுவிளையில் கூடிய சபாலோசனைச் சங்கக் கூட்டத்தில் ஆலோசனை நடத்தி சுதேச மிஷனெறிச் சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கினர். இதற்கு உறுதுணையாக அருள்திரு. ஹாக்கர் ஐயர், அருள்திரு. டாக்டர் டதி ஐயர் மற்றும் கமிட்டி அங்கத்தினர் மிகுந்த ஆதரவு நல்கினர். இன்றும் இச்சங்கம் மிகத் திறம்பட செயலாற்றி வருகின்றது. சுமார் 157 திருச்சபைகளை கன்னியாகுமரிப் பேராயத்தில் ஒப்படைத்துள்ளது.

அருட்பணி என்பது மாற்கு 10:45-இல் கூறப்பட்டுள்ளதின்படி தொண்டு ஏற்பதற்கு அல்ல; தொண்டு ஆற்றுவதற்கு அழைக்கப்பட்டுள்ளோம். அருட்பணியை எங்ஙனம் செய்ய வேண்டும் என்பதனைத் தியானிப்போம்.

## *1. இறைப்பணி தாழ்மையின் பணி*:

இயேசுநாதர் தம்முடைய இறுதி வேளை வந்தது என அறிந்தும், சிலுவைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளக் கூடிய தருணம் வந்தது என அறிந்தும், தம்முடைய சீடர்களிடம் அன்பு செலுத்துகிறார் (யோவா 13:1). கடைசிபரியந்தமும் அன்பு செலுத்தினார். எரே 31:3-இல் உனக்கு நான் முடிவில்லா அன்பு காட்டியுள்ளேன் என்கிறார். உரோ 8:38,39-இல் பவுலடியார், சொல்லும்போது ஒருவரும் இறையன்பை விட்டு என்னைப் பிரிக்கமுடியாது என்கிறார் (உரோ 5:6-8). நம்மேல் வைத்த அன்பினால் சிலுவையில் தம்மைத் தந்தார் (உரோ 5:8). யூதாஸ்காரியோத்து தம்மைக் காட்டிக் கொடுப்பான் என்று அறிந்தும், அவன் பாதங்களைக் கழுவினார். பாதங்களைக் கழுவுவது என்பது வீட்டின் அடிமை, வீட்டிற்கு வரும் விருந்தினர்களின் பாதங்களைக் கழுவுவது இயல்பு. ஆனால் இங்கு தலைவர் சீடர்களின் பாதங்களைக் கழுவுகிறார்; மாதிரியைக் காண்பித்தார் (யோவா 13:5). அருட்பணி என்பது உயர்விடங்களில் இருந்து கொண்டு அதிகாரம் செலுத்துவது அல்ல; அன்பினால் தாழ்மையோடு நிறைவேற்றுவதாகும்.

## *2. அருள்வாக்கினால் அருட்பணி நிறைவேற்றுதல்:*

யோவா 13:6-9 வரையுள்ள திருவசனங்களைப் பார்க்கையில் இயேசுவின் செயலினால் வியப்படைகிறார் பேதுரு. என் பாதங்களைக் கழுவக் கூடாது என்கிறார். நான் உன் பாதங்களைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்கிறார். அருள்வாக்கினால் அடியவரைக் கீழ்ப்படிதல் உள்ளவராக்கினார். பேதுரு என் பாதங்களை மட்டுமல்ல என்னையே முழுவதும் கழுவும் என்கிறார். அருள்வாக்கு மாற்றத்தைக் கொண்டுவந்தது. பேதுரு கீழ்ப்படிதலோடு இறையாசியைப் பெற்றுக் கொண்டார். யோவா 14:15-இல் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்கிறார். அன்பினால் இறைக் கட்டளைகளைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். என்னை முற்றிலும் கழுவும் என்பது என் பாவங்களைக் கழுவும் என்பதே (திவெ 1:5, 1பேது 1:18,19). தாவீது திருப்பாடலில் (32:5) என் பாவத்தை மன்னித்தீர் என்கிறார். அருள்வாக்கு மாற்றுருவாக்க வாழ்வுக்கு நேராக வழிநடத்த வேண்டும். இன்று அருள்வாக்கு செழுமை இறையியலுக்கு நேராகச் சென்று கொண்டிருக்கும் தருணத்தில் அருள்வாக்கு கண்டித்து உணர்த்துவதாகவும், சீரான வாழ்வுக்கு நேராக வழிநடத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

## *3. இறைஞானத்தால் அருட்பணி நிறைவேற்றுதல்:*

இறையரசில் யார் முதன்மையானவர் என்ற வினா எழுந்த போது (லூக் 22:24, யோவா 13:12-15), ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேனென்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்கிறார். இறைஞானத்தால் நிரப்பப்பட்டவர்கள் அருட்பணியை இறைஞானத்தோடு செய்தல் வேண்டும். இறுமாப்பாய் நடத்துவது அல்ல, இறையடியவராய் ஊழியம் செய்தல் வேண்டும் என்கிறார் (மாற் 10:42-44). யோவா 13:16-இன்படி அருட்பணியாளர் இறைவரிலும் பெரியவர் அல்லர். அருட்பணி என்பது மத் 5:43-48-இல் சத்துருக்களை, சபிக்கிறவர்களை அன்பு செய்தல் என்கிறார். யோவா 13:17-இல் இறைஞானத்தைப் பெற்றவர்கள் இறைவரோடு இணைந்து செயலாற்ற வேண்டும். யாக் 4:17-இல் நன்மை செய்ய அறிந்திருக்கும் போது அதைச் செய்ய வேண்டும். பிலி 2:4-இல் தனக்கானவைகளை அல்ல பிறருக்கானவைகளைச் செய்தல் வேண்டும். இதுதான் கிறிஸ்துவின் மனநிலை.

அருட்பணி தாழ்மையோடு, இறைவார்த்தையினால், இறைஞானத்தால் நிறைவேற்றுவதாகும். அதற்காய் நம்மை அர்ப்பணிப்போம்.

திரு. S. **ஜாண் வினோராஜ்**

# இளையோரே இலக்கை நோக்கிப் பயணிப்போம்

1சாமு 17:21-47

**தாவீது சவுலை நோக்கி, "இவன் பொருட்டு யாருடைய இதயமும் கலங்க வேண்டியதில்லை; உம் அடியானாகிய நானே சென்று அந்தப் பெலிஸ்தியனோடு போரிடுவேன்"என்றார்.** (1சாமு 17:32)

"ஒருமுறை வந்தால் கனவு, இருமுறை வந்தால் ஆசை, பலமுறை வந்தால் இலட்சியம், இளைஞர்களே ! கனவு காணுங்கள்" என எழுச்சிமிகு வரிகளை இளையோரின் இதயங்களில் பதித்தவர் டாக்டர் A.P.J. அப்துல் கலாம். வெறும் கனவு காண்பதோடு நின்றுவிடாது இலக்கை எட்ட வேண்டும் என்பது தான் அவரின் அறிவுரை. இவ்வுலகம், இளையோரை உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கின்றது. இளையோர் மாற்றங்களின் பிறப்பிடம். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கான சக்திகள். திருச்சபைகளின் தூண்கள். இளையோரின் சிறந்த சிந்தனையும், அறிவுக்கூர்மையும், நுணுக்கமான அறிவியல் ஆற்றலும் உலகைப் படிப்படியாக வளர்ச்சியை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கின்றன. கவிக்கோ அப்துல் ரகுமான் தன் கவிதை ஒன்றில்

"நீ சிறிய விதை தான் ஆனால்
உனக்குள் ஒளிந்திருக்கிறது பிரம்மாண்டமான மரம்
உன் வேர்களுக்கு பூமியும் எல்லை இல்லை

உன் கிளைகளுக்கு வானமும் எல்லை இல்லை"... என இளமையின் பேராற்றலைத் தன் அழகான வரிகளால் வர்ணிக்கின்றார். இருப்பினும் இளையோர் என்றாலே தொந்தரவுகள், கோபக்காரர்கள், சோம்பேறிகள், அனுபவமற்றவர்கள், குழப்பவாதிகள், மதிக்காதவர்கள் என பழைய இளைஞர்கள் தீர்ப்பு வழங்கி வருகின்றார்கள். அதோடு இளமையை வெறுப்பதும், இளையோரை மட்டம் தட்டுவதும் நடந்து கொண்டேதான் இருக்கிறது. இளையோரை நிராகரிக்கும் சமூகமோ, நாடோ, திருச்சபையோ எழுச்சி பெறுவதில்லை; மந்த நிலையிலேயே இருக்கும். ஆகவே இளையோரை முன்னிறுத்துவதும், தடம் மாறாமல் தடத்தில் நடக்கப் பயிற்றுவிப்பதும், திருச்சபையின் தூண்களாய் உருவாக்குவதும், அவர்களுக்கு வழி விட்டு வளரவிடுவதும் பெரியோர்களின் கடமையாகும். இளையோரை எதிர்மறை

எண்ணங்களோடு அணுகாமல் நேர் மறையோடு அணுகுகின்றபோது அவர்களை எளிதாக இயக்கமுடியும், இறையரசுக்குரியோராய் வழிநடத்த முடியும். இளையோரும், வேலியைத் தாண்டாமல் சுதந்தரத்தை அனுபவிப்பதும், சவால்களை சாதுரியத்துடன் எதிர்கொள்தலும், கவர்ச்சிகளில் கவிழாமலும் தோல்விகளில் வெற்றி காண்பதும், நல்ல பண்புகளை வளர்த்து கொள்தலும் மிக மிக அவசியம். இளமை இனியது என்பதற்காக இழிவானவைகளைச் செய்தால் வாழ்க்கையை கசப்பாகிவிடும். எனவே, ஆக்கப்பூர்வமான செயல்களைச் செய்து, வாழ்க்கையை இனிமையாக்கிக் கொள்ள வேண்டும். 1திமொ 4:12இல் தூய பவுலார் இளமையை இனிமையாக்கச் சொன்ன அறிவுரையை மனத்திலே பதித்து இலக்கை நோக்கிப் பயணிப்போம்.

***1. இயலும் என முன்னேறுவோம்*** : (1சாமு 17:36)

இளையோர் இலக்கை நோக்கி முன்னேறுகின்றபோது அவர்களுக்கு முட்டுக்கட்டையான முதல் வார்த்தை “உன்னால் இயலாது” என்பதாகும். இந்த வார்த்தையால் முடங்கிவிடாது நம் ஆற்றலைப் பயன்படுத்தி தன்னம்பிக்கையோடு முன்னேறுவது வெற்றிப்படிகட்டுகளில் ஏற வழிவகுக்கும்.

அரசர் சவுலின் ஆட்சிக் காலத்தில் பெலிஸ்தியர் இஸ்ரயேல் மக்களுக்கு எதிராகப் போராட அணிவகுத்தனர். இந்நிலையில் காத் நகரைச் சார்ந்த கோலியாத் என்ற பெலிஸ்திய வீரன் ஆயுதங்களோடும், பாதுகாப்புக் கவசங்களோடும் வந்து நின்று, உங்களில் ஒருவன் என்னுடன் போரிட்டு என்னைக் கொன்றால் நாங்கள் உங்களுக்கு அடிமைகளாகி உங்களுக்குப் பணி செய்வோம் நான் உங்களால் அனுப்பப்படும் ஒருவனை வென்று அவனைக் கொண்டுவிட்டால் நீங்கள் அடிமைகளாகி எங்களுப் பணி செய்ய வேண்டும். எனத் தினமும் காலையும் மாலையும் வந்து சுமார் 40 நாட்களாக மிரட்டிக் கொண்டிருந்தான். கோலியாத்தின் சவாலைக் கேட்டு அரசன் முதற்கொண்டு அனைவரும் கண்கலங்கினர். பயத்தால் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்தனர். யாரும் அவனை எதிர்கொள்ள முன்வரவில்லை. இந்நிலையில் இளைஞராகிய தாவீது தந்தையின் சொல்லுக்கிணங்கி போருக்குச் சென்றிருந்த தனது மூன்று சகோதரர்களின் நலன் விசாரிக்கவும், உணவு கொடுக்கவும், வந்திருந்தார். வழக்கம்போல் கோலியாத் மிரட்டும் உடல் தோற்றத்துடனும், அச்சுறுத்தும் வார்த்தைகளாலும் பயமுறுத்திக் கொண்டிருக்க, இஸ்ரயேலர் கலக்கத்தோடு இருப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த தாவீது நான் கோலியாத்தோடு போரிட தயார் என்றான். தாவீதின் மூத்த சகோதரர்

எலியாபு வேடிக்கை பார்க்க வந்த உனக்கு இது தேவையில்லாதது எனக் கோபத்துடன் எச்சரிக்கின்றார் (1சாமு 17:28). அரசர் சவுல் நீ இளைஞன் உன்னால் இயலாது என்கிறார் (1சாமு 17:33). ஐந்து கூழாங்கற்களையும், கையில் தனது கோலையும் எடுத்து வந்த தாவீதை பார்த்து கோலியாத் நீ இளைஞன் எனக் கேலி செய்து சபிக்க ஆரம்பித்தான். (1சாமு 17:43,44). வானத்துப் பறவைகளுக்கும், வன விலங்குகளுக்கும் உன்னை இரையாக்குவேன் எனப் பயமுறுத்தினான். எல்லாரும் உன்னால் இயலாது, இயலாது என்று சொல்ல, தாவீது என்னால் இயலும் என்ற நம்பிக்கையோடு முன்னேறுகின்றார். நடந்தது என்ன? ஒரு சிறிய கல்லால், ஒரே கல்லில் கோலியாத்தை வென்று விடுகின்றார். உன்னால் இயலாது என்றவர்கள் எல்லாரும் வாயடைத்துப் போனார்கள்.

இளைஞர்களே! "உன்னால் இயலாது" என்ற வார்த்தையால் ஒருபோதும் முடங்கி விடக்கூடாது. சூழ்நிலைகளைக் கண்டும், சூழ்ச்சிகளைக் கண்டும் அச்சப்பட அவசியமில்லை. சூழ்நிலை எனக்குச் சாதகமாகட்டும் எனக் காத்திருக்க வேண்டியதில்லை. சூழ்நிலையைச் சமாளிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். என்னால் இயலும் என முன்னேற வேண்டும். வெற்றிக்கான இலக்கை எட்டி விடலாம்.

***2. இறைவரைப் பற்றிக்கொள்வோம்*** : (1சாமு 17:45)

இலக்கை எட்ட என்னால் இயலும் என்ற தன்னம்பிக்கையோடு இறைநம்பிக்கையும் அவசியம். "என்னால் எல்லாம் செய்ய முடியும்" எனக் கர்வம் கொள்கின்ற போதும், வாழ்வில் எழுச்சிக்குப் பதிலாக வீழ்ச்சியடைவோம் என்பதை மனத்தில் பதித்திட வேண்டும். யோவான் 15:5இல் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது என இயேசு நாதர் தெளிவாகக் கற்றுத் தருகின்றார். ஆக, இறைவரை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும். அவரையல்லாமல் இலக்கை எட்ட இயலாது.

தாவீது இளம் வயதிலேயே இறைவரை இறுகப் பற்றிப் பிடித்திருந்தார். கடவுளையல்லாமல் தன்னால் ஏதும் செய்ய இயலாது என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்தார். ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும்போது ஆடுகளைப் பிடிக்க வந்த சிங்கத்தையும், கரடியையும் இறையருளால் வெற்றி கொண்டவர், அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கோலியாத்தையும் இறையருளால் வெற்றி கொள்ள முடியும் என உறுதியளிக்கின்றார். மேலும் 1சாமு 17:45இல் வாளோடும், ஈட்டியோடும் வந்திருந்த கோலியாத்திடம் படைத்திரளின் கடவுளாகிய ஆண்டவரின் பெயரால் வருகிறேன் என ஆற்றலுடன் அறிவிக்கின்றார். இளம் வயதிலேயே இறைவரைப் பற்றிப்பிடித்ததால் இலக்கை எளிதாக அடைகின்றார்.

வாழ்க்கைச் சூழலில் இளையோர் உலகப் பற்றில் அதிக ஆர்வம் கொள்கின்றனர். இதனால் வாழ்க்கை ஒரு கட்டத்தில் கசந்து விடுகின்றது. மது, புகை மற்றும் குப்பை உணவுகள் மீதுள்ள அதிகப் பற்றால் ஆரோக்கியத்தை இழந்து தவிக்கின்றனர். அலைபேசி மற்றும் வலைதளங்களில் ஏற்படும் அதிதப் பற்றால் கனவுகளில் வாழ்கின்றனர். இதனால் உடல் திறன், மனத் திறன், பேச்சுத் திறன் ஆகியவற்றை இழக்கின்றனர். மேலும் பணம், பதவி மற்றும் ஆடம்பர வாழ்க்கை மீதுள்ள பற்றால் நல்ல உறவுகளை உதறிவிடுகின்றனர். மனசாட்சி மழுங்கிய நிலையில் அடுத்திருப்போருக்குத் துன்பம் கொடுத்துவிடுகின்றனர். கட்டுப்பாடில்லாப் பாலுணர்வுகளின் மீதிருக்கும் பற்றால் குடும்பத்தை இழந்தும், குற்ற உணர்ச்சியால் அவதிப்பட்டும், வாழ்க்கையை இழந்தும் வேதனைப்படுகின்றனர். யாக்கோபு 4:4இல் உலகப் பற்று கடவுளுக்கு விரோதமான பகை என்கின்ற அறிவுரையைத் தருகின்றது திருமறை. ஆகவே இலக்கை எட்டத் தடையாயிருக்கின்ற உலக பற்றுகளை உதறிவிட்டு, உன்னதரை இறுகப் பற்றிக்கொள்வோம்.

### *3. இமயமாக உயர்ந்திடுவோம்* :

இறைவரைப் பற்றிக்கொண்டு, என்னால் முடியும் என முன்னேறுகின்றபோது சவால்களைச் சந்திக்கமுடியும், தடைகளைத் தாண்ட முடியும், இமயமாக உயர்ந்திட முடியும்.

இளைஞராகிய தாவீது சாதாரண ஆடு மேய்ப்பவன், இறையருளால் சவால்களைச் சந்திக்கப் பழகிக்கொண்டார். வாளோடும், ஈட்டியோடும், கவசங்களோடும் வந்திருந்த கோலியாத்தைக் கண்டு ஒட்டு மொத்த இஸ்ரயேலே நடுங்கிக் கொண்டிருந்தபோது, இளைஞராகிய தாவீது பயப்படாமல், பதற்றப்படாமல் வெறும் ஒரு சிறு கல்லை வைத்து மிக எளிதாக வெற்றி கொண்டார். இறைவரை இறுகப் பற்றிக்கொண்டு என்னால் முடியும் என முன்னேறினபோது ஆடு மேய்த்துக் கொண்டிருந்தவர் அரசராக உயர்த்தப்படுகின்றார்.

வாழ்க்கைப் பயணத்தில் பிரச்சனைகள், தோல்விகள் ஏற்படுகின்றபோது பதற்றப்படாமல் இறைப் பலத்தோடு என்னால் இயலும் என நம்பிக்கையோடு முன்னேறி இலக்கை எட்டுவது அவசியம்.

ஒருமுறை சவால்களை நினைக்கின்றபோது பயந்து மனம் கலங்கி போன மகளுக்கு அவளின் அம்மா ஆலோசனை வழங்கினார். மகளே! ஒரு முட்டை, ஒரு கேரட், சில காப்பிக் கொட்டைகள் எடுத்து வா என்றார்கள். மூன்று பொருட்களையும் சூடான தண்ணீரில் போடச் சொன்னார்கள். சிறிது நேரம் சென்ற பின்பு, அம்மூன்று பொருட்களையும்

கொதிக்கும் தண்ணீரிலிருந்து எடுக்கச் சொன்னார்கள். முதல் பொருளான முட்டையை எடுத்தபோது அந்த அம்மா "மகளே, உன் இளமைப் பருவத்தில் கொதிக்கும் தண்ணீர் போன்று கடினமான சூழல்கள் வரும். ஆனால் இம்முட்டை போன்று கடினமாகிவிடக் கூடாது" என்றார்கள். அடுத்த பொருளான கேரட்டை எடுக்கச் சொல்லி "மகளே, இந்த கேரட்டைப் போன்று மென்மையாகிவிடாதே." கடினமான சூழல்கள் வாழ்க்கையில் ஏற்படும்போது சோர்வடைந்து அழுது புலம்பாதே. மூன்றாவது பொருளான காப்பிக் கொட்டைகளைக் கொதி நீரில் சுட்டிக்காட்டி "உன் இளமை பருவத்தின் சவால்களை இக்காப்பி கொட்டைகள் போல எதிர்கொள். அது கொதி தண்ணீரில் விழுந்து அத்தண்ணீரோடு கலந்து நறுமணத்தை தருகின்றது போல சூழல்களைச் சமாளித்து அக்கொடும்சூழலிலிருந்து நறுமணமாகப் பலருக்கு உதவுகின்றவளாக மாறு" என அந்த அம்மா அறிவுறுத்தினார்.

வாழ்க்கையில் அவ்வப்போது ஏற்படும் கடினங்களையும், சவால்களையும் கண்டு கோபப்படாமல், பதற்றப்பட்டு கண்கலங்காமல், பயப்படாமல் சூழல்களை இறைபலத்தோடு சமாளிக்க கற்றுக்கொள்ள வேண்டும். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலிப்பியர் 4:13) என்ற தூய பவுலாரின் நம்பிக்கை வரிகளை மனதிலே பதித்து, இறைவரைப் பற்றிக் கொண்டு இலக்கை நோக்கிப் பயணிப்போம், இமயமாக உயர்ந்திடுவோம்.

திரு. R. **அஷ்வின் ஷாத்**

## நம்பிக்கையால் நற்சான்று பகர்ந்த லீதியா

திப 16:8-15

**"... நான் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டவள் என்று நீங்கள் கருதினால் என் வீட்டுக்கு வந்து தங்குங்கள்"** (திப 16:15).

கடவுளிடம் பற்றும் நம்பிக்கையும் கொண்ட பல பெண்கள் திருமறையில் இடம் பெற்றுள்ளனர். அவர்களது வாழ்க்கை பெண்களுக்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. புதிய ஏற்பாட்டின் காலத்தில் இயேசு கிறிஸ்துவைக் குறித்து திருத்தூதர்களின் கற்பிதங்களைக் கேட்டு, மனம்திரும்பி, கடவுளை ஏற்றுக் கொண்டு திருமுழுக்குப் பெற்ற ஒரு பெண் தான் லீதியா. லீதியா என்றால் "நீரூற்று" என்று பொருள். இவர் கி.பி.47-இல் வாழ்ந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது,

இவர் சின்ன ஆசியாவிலுள்ள தியத்திரா ஊரைச் சேர்ந்தவர். தியத்திரா என்றால் வெள்ளைமாளிகை என்று பொருள். லீதியா இந்த நகரில் செந்நிற ஆடை விற்கும் தொழில் செய்து வந்தார். செந்நிற ஆடை செல்வந்தர்களும், அரசர்களும் பயன்படுத்தும் ஓர் ஆடை. இது அதிக வருவாய் கொடுக்கக் கூடிய ஒரு தொழில். இதனால் இந்தத் தொழில் செய்யக் கூடியவர்களும் செல்வந்தர்களாய் வாழ்ந்தார்கள். லீதியா இந்தத் தொழில் செய்வதற்காகப் பிலிப்பி நகர் வருகிறார். இங்குத் தனது தொழிலுக்காக மட்டுமல்லாமல் பெண்களுடன் இணைந்து ஆற்றங்கரையில் அமர்ந்து கடவுளின் வார்த்தைகளைக் கேட்பதற்காக வருகிறார். பின்பு பவுலின் போதனைகளைக் கேட்டு மனம்மாற்றம் பெற்றார். லீதியா எவ்வாறு நற்சான்று பகர்ந்தார் என்பதைக் குறித்துத் தியானிப்போம்.

### *1. கேட்பதில் கவனம் கொண்டவர்* : (திப 16:14)

வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்தும் பொழுது மாணவர்கள் பலர் இருப்பார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் கேட்க விரும்பமாட்டார்கள். சிந்தனைகள் வேறு திசைக்குத் திரும்பும். சிந்தனை சிதறாமல் கேட்கும் மாணவர் அதிக மதிப்பெண் பெறுவார். இதைப் போன்று லீதியாவும் பவுலின் போதனையைக் கேட்கிறார். பிலிப்பி நகரத்தில் பெண்கள் பலர் கூடி ஆற்றங்கரையில் இறைவேண்டல் செய்ய வருவார்கள். இந்த லீதியாவும் கடவுள் மேல் நம்பிக்கை கொண்டு, பெண்களுடன் இணைந்து ஆற்றங்கரையில் அமர்கிறார்.

லீதியா செந்நிற ஆடை விற்கும் பெண். மக்களிடம் கனம் பொருந்திய ஒரு பெண். செல்வாக்கு பெற்றவர். இவரிடம் தேவைக்கு மேல் எல்லாம் இருந்தன. ஆனால் அவைகளால் மட்டும் திருப்தியடையாமல் அதைவிட உயர்ந்த ஒன்றைக் கற்றுக்கொள்ள விரும்புகிறார். தனது உயர்ந்த செல்வாக்கான நிலையை மறந்து, ஆற்றங்கரையில் அமர்ந்து ஆண்டவர் இயேசுவைப் பற்றி பேசின பவுலின் வார்த்தையைக் கேட்கிறார். தனது புகழ், மதிப்பு மங்கி விடுமோ?, மற்றவர் தன்னைத் தாழ்வாக நினைப்பார்களோ? என்று நினைக்காமல் பவுல், கிறிஸ்துவைப் பற்றி சொன்ன வார்த்தைகளைக் கவனமாய்க் கேட்டு இயேசுவை ஏற்றுக் கொள்கிறார். கேட்பதில் கவனம் கொண்டதால் அவர் மாற்றம் பெறுகிறார்.

***2. கொடுப்பதில் ஆர்வம் கொண்டவர்*** : (திப 16:15)

மனிதர்களிடம் இரண்டு குணங்கள் உண்டு. ஒன்று எதையாவது செய்ய நினைப்பவர்கள்; இன்னொன்று அடுத்தவர் செய்வதைப் பார்த்து ரசிப்பவர்கள். ஆனால் லீதியா மற்றவர்களுக்கு எதையாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். இதனால் கடவுளின் மனிதர்களைக் கனம் பண்ணுகிறவராயும், உபசரிக்கிறவராயும் காணப்பட்டார். இதனால் தான் கடவுளின் அடியார்களைத் தன் இல்லத்தில் தங்கியிருங்கள் என்று தன் இல்லத்தைக் கொடுத்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தனது மீட்பராக ஏற்றுக் கொள்கிறார். இறையடியார்களைத் தனது இல்லத்தில் ஏற்று அவர்களோடு கடவுளைப் போற்றி, இறைவேண்டல் செய்து தனது இல்லத்தை ஒரு சிறிய ஆலயமாக்கினார். இறையடியார்களுக்கு மட்டுமல்லாமல், ஆண்டவரைப் பற்றி அறிய வருபவர்களுக்கும் தேவையான உணவைக் கொடுத்து உபசரித்தார். கொடுப்பதில் ஆர்வம் கொண்டதினால் இறையடியார்களை ஏற்றுக் கொள்கிறார்.

***3. அறிவிப்பதில் சிறப்பு பெற்றவர்*** : (திப 16:15)

லீதியா பாரம்பரியமாகக் கடவுளை வழிபடுகிறவராயிருந்தும் உண்மையான மனந்திரும்புதலைக் குறித்து அறியாதிருந்தார். பின்பு பிலிப்பி நகரில் பவுலின் போதனையைக் கேட்டு கடவுளை ஏற்றுக் கொள்கிறார். கடவுள் லீதியாவின் உள்ளத்தைத் தொட்டார். பின்பு அவர்கள் குடும்பமாய்த் தொடப்பட்டு திருமுழுக்கு பெற்றனர். “ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும். அப்பொழுது நீரும் உம் வீட்டாரும் மீட்படைவீர்கள்” (திப 16:31).

நீண்ட காலமாக அறியாமல் இருந்து பின்னர் ஆண்டவரைப் பற்றி அறிந்து அந்தச் செய்தியை லீதியா தன்னோடு வைத்துக் கொண்டு, தான் மட்டும் அந்த மகிழ்ச்சியை அடைய விரும்பாமல் தனது இல்லத்தில் இருந்த உறவினர்களுக்கும் சொல்லி அவர்களும் இயேசுவை ஏற்றுக் கொள்ளும்படி செய்தார். சுயநல நோக்கம் இல்லாததினால் உறவினர்களிடம் இயேசுவைப் பற்றி அறிவிக்கிறார்.

திருமறையில் ஆபிரகாம் தன் இல்லத்திற்கு வந்த தூதர்களைத் தன் மனைவியோடு சேர்ந்து உபசரித்தார். இதனால் ஆசீர்வாதத்தைப் பெற்றார். உபசரித்து, தங்குவதற்கு இடமும் கொடுத்த சூனேமியாவுக்குக் கடவுள், குழந்தை செல்வத்தைக் கொடுத்தார். எலியாவுக்கு உதவியாக இருந்த எலிசா இரட்டிப்பான வரங்களைப் பெற்றார்.

'இறைவார்த்தையை அறிவிக்க வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் இதைச் செய்வதில் நீ கருத்தாயிரு' (2திமொ 4:2). செந்நிற ஆடைவிற்கும் தொழில் செய்யும் சுமையின் நடுவிலும் கிடைக்கின்ற நேரத்தை வீணாக்காமல் அதைப் பயன்படுத்தி பவுலின் வார்த்தைகளைக் கேட்டு கடவுளை ஏற்றுக் கொள்கிறார். இதனால் கடவுள் அவர் உள்ளத்தைத் தொடுகிறார்.

ஆகவே பெண்களாகக் கூடி தீமையானவைகளைப் பேசி நேரத்தை வீணடிக்காமல், லீதியா போன்று நற்போதனைகளைக் கேட்போம். அந்த நற்போதனைகளை மற்றவர்களுக்கும் பகருவோம்.

திருமதி. R. **மகிழ்**

# ஆண்டவரைப் பாடுவோம்

2 குறி 5:11-14

**"எக்காளம் ஊதுவோரும், பாடகரும் இணைந்து ஒரே குரலில் ஆண்டவருக்கு மாட்சியும் நன்றியும் செலுத்தினர்"** (2 குறி 5:13a).

இசைக்கும் பாடலுக்கும் திறக்காத உள்ளங்களே இவ்வுலகில் இல்லை. பாடலுக்குள் உயிர் இருக்கிறது. இசைக்குள் ஒலி இருக்கிறது. இசையானது செவியின் மூலம் மனதுக்கும், ஆன்மாவுக்கும் இன்பம் தரக்கூடியது. இசையும் பாடலும் கடவுளோடு பேசும் மொழியாகவும், தொடர்பு சாதனமாகவும் இருக்கிறது. இசைக்கு சாதி, சமயம், இனம், ஏழை, பணக்காரன், மொழி, நிறம் என்ற வேறுபாடற்ற புதிய மனுக்குலத்தை உருவாக்கி சமத்துவ சமதர்ம உலகை உருவாக்குகிறது.

திருச்சபை தொழுகைகளில் பாடலும், இசையும் இரண்டறக் கலந்துள்ளன. கிறிஸ்தவர்கள் அதிகாலையில் எழுந்து கிறிஸ்துவே ஆண்டவர், கடவுள் என போற்றிப்பாடுகின்றனர். பிளினி எனும் ரோம அரசர் ட்ரேஜன் என்பவருக்கு எழுதியுள்ளார். படகற்குழு ஆண்டுவிழாவை முன்னிட்டு திருமறை வழியாக நமக்கு அருளப்பட்டிருக்கும் தியான சிந்தனையை சிந்திப்போம்.

### *1. இசைந்து பாடுவோம்* : (2 குறி 5:13)

இசையோடு இணைந்து பாடல்களைத் தனதாக்கிப் பாடுதல் கவலைகளை அகற்றி ஆறுதல் அடையும்படி செய்து பரிபூரணமான மகிழ்வைத் தருகிறது.

தாவீதின் நகரமாகிய சீயோனிலிருந்த உடன்படிக்கைப் பேழையை ஏழாம் மாதத் திருவிழாவின் போது சாலமோன் அரசனோடு இஸ்ரயேலின் பெரியோர், எல்லாக் குலத்தலைவர்களும், இஸ்ரயேலின் மக்கள், குடும்பத் தலைவர்களும் புடை சூழ கடவுளின் திருப்பேழையை லேவியர் எருசலேம் தேவாலயத்திற்கு சுமந்து கொண்டு வந்தனர். கொண்டு வந்த உடன்படிக்கைப் பேழையைக் குருக்கள் கோவிலின் கருவறையான திருதூயகத்திற்குக் கொண்டு வந்து, கெருபுகளின் இறக்கைக்குள் வைத்தனர். பின்னர் குருக்கள் எக்காளம் ஊத, லேவியர் பாடகர்க்குழு கைத்தாளம் கொட்டி, இசைக்கருவிகள் மீட்டி, "ஆண்டவர் நல்லவர்;

என்றுமுள்ளது அவர் தம் இரக்கம்'' என்று ஒரே குரலில் ஆண்டவருக்குப் புகழிசை தந்தனர். தொடக்கக்காலத் திருச்சபை இறை புகழ் பாடும் திருச்சபை. ஏனெனில், ''ஒருமுறை பாடுவது இருமுறை ஜெபிப்பதற்கு சமம்'' என உணர்ந்திருந்தனர். நாமும் இசைந்து பாடி மகிழ்வோம்.

***2. அர்த்தத்தோடு பாடுவோம் :*** (எபே 5:19)

யூதச் சமயச் சடங்குகளில் திருப்பாடல்களும், சிறுபாடல்களும் பாடப்பட்டன. திருக்கோவிலின் சடங்கின்படி குழுத்தலைவர் தனியாகப் பாடினபிற்பாடு சபை ஒன்றாகச் சேர்ந்து முறையாகப் பாடுவார்கள்.

அர்ப்பணப்பாடகியெனவும், பியோனா இசைக் கலைஞரெனவும் அழைக்கப்படுகின்ற பிரான்சிஸ் ரிட்லி ஹேவர்கல், இங்கிலாந்திலுள்ளஅஸ்ட்லி என்னுமிடத்தில் 1836இல் பிறந்தார். ஏழு வயதிலிருந்து பல பாடல்களை, விசுவாசம், அர்ப்பணம், ஊழியம், ஒப்படைப்பு, சேவை ஆகிய பொருள் பட பாடியுள்ளர். விபத்து ஏற்பட்டதின் மூலம் 21 ஆண்டு காலம் சக்கர நாற்காலியிலே தன் காலத்தைக் கழித்தார். 1873ஆம் ஆண்டிலிருந்து இயேசுவை மட்டுமே புகழ்ந்து பாடுவதற்குத் தனது தாலந்து அனைத்தையும் உபயோகித்தார். பல பாடல்கள் இவருக்குப் புகழையும், பணத்தையும், செல்வாக்கையும் தேடித்தந்தன. நமது கிறிஸ்தவப் பாமாலையிலுள்ள ஞானப்பாட்டு 287யை எழுதிப்பாடியுள்ளார். அப்பாடலின் நான்காவது சரணத்திலுள்ள, ''எந்தன் ஆஸ்தி தேவரீர் முற்றும் அங்கீகரிப்பீர்'' என்ற ஜெபப்பாடல் வரிகளை அவரால் திரும்ப, திரும்ப பாடமுடியவில்லை. காரணம், தன்னிடத்திலுள்ள பணமும், நகையும் ஏராளமாக வைத்து கொண்டு நான், ''அங்கீகரியும்'' எனப் பாடுவது எவ்வளவு தவறு என உணர்ந்தபடியினால், அவரால் பாடமுடியவில்லை. தீர்மானித்தார். தன் பணத்தையும், நகையும் திருச்சபையின் ஊழியத்திற்கெனக் கொடுத்தார். இப்போது, தன்னால் பாடமுடியாத பாடல் வரிகளைக் களங்கமற்ற மனசாட்சியுடன் கெம்பீரமாகப் பாடி மகிழ்ந்தார்.

பவுல் எபேசு சபை மக்களுக்குச் சொல்லும் போது, திருப்பாடல்களையும், புகழ்பாக்களையும் ஆவிக்குரிய பாடல்களையும் ஒன்றியோடு உளமாரப் பாடிக் கடவுளைப் போற்றுங்கள் (கொலோ 3:16) என்றார். நாம் பாடும்பேது தாளமோ?, ராகமோ! முக்கியமல்ல. இன்பம், துன்பம் இவைகளின் மத்தியில் உணர்ச்சி பொங்க உள்ளத்தில் ஆழத்திலிருந்து ஹேவர்கல் போல அர்த்தத்தோடுபாடி மகிழ்வோம்.

***3. நம்பிக்கையோடு பாடுவோம் :*** (திப 16:25)

பாலஸ்தீன நாட்டில் ஆண் குழந்தை பிறந்தால் பாடகர்க்குழுவினர் அவ்வீட்டிற்கு வந்து இசையோடு கூடிய வாழ்த்துப் பாடல் பாடுவர். இயேசு பெத்லகேமில் பிறந்த போது அங்கே பாடுவதற்கு எவரும் இல்லை. எனவே வானதூதர்கள், உன்னதத்திலிருக்கிற கடவுளுக்கு மாட்சியும், பூமியிலே சமாதானமும் உண்டாவதாக என பாடி ககடவுளைப் போற்றினார்கள்.

தந்தையாகிய கடவுள், இயேசு பெருமானை, நம்மை மீட்கும்படி உலகத்திற்கு அனுப்பினதால் வானதூதர்கள் பாடினர். நம்மெல்லாரையும் இயேசு சிலுவை மரணத்தின் மூலம் மீட்டெடுத்தார். தீயவராய் வாழ்ந்த சவுல், தமஸ்குவில் வைத்து உயிர்த்தெழுந்த ஆண்டவரால் சந்திக்கப்பட்டார். "நீ துன்பப்படுத்துகிற கிறிஸ்து நானே" என்ற வார்த்தையின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவின் நற்செய்திப் பணியாளராக மாறினார். தியத்திரா பட்டணத்தில் வாழ்ந்த குறி சொல்லும் பெண்மணியைச் சந்தித்து, மனம் மாறச் செய்ய கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார். அவரால் ஆதாயம் பெற்ற எஜமானர்கள் பவுலையும், சீலாவையும் ஜனங்களை வைத்து அநேக அடிகளைக் கொடுத்து, ஆடைகளைக் கிழித்து சிறைச்சாலையில் ஒப்படைத்தனர். அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் சங்கிலிகளால் கட்டி வைத்தனர். அவர்கள் நடுராத்திரியில் கடவுளைத் துதித்து நம்பிக்கையோடு பாடினார்கள். அப்போது பூமி மிகவும் அதிர்ந்தது. கதவுகளெல்லாம் திறவுண்டன. சங்கிலிகளெல்லாம் கழன்றன; கட்டுகள் அறுந்தன; பாடிக் கொண்டே சிறைச்சாலையை விட்டு வெளியே வந்தனர். தொடர்ந்து நற்செய்திப் பணியைச் செய்தனர். அனேகரைத் திருச்சபைக்குள் சேர்த்து மகிழ்ந்தனர். திருச்சபைகள் கட்டி எழுப்பப்பட்டன.

பவுல் குறிப்பிடும் போது, "நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன்; கருத்தோடும் பாடுவேன்" என கொரிந்து சபைக்கு சொல்லுகிறார்.

இசையும் பாடலும் மனித உள்ளங்களை ஆற்றல்படுத்தி மிளிரச் செய்கிறது. நாம் இசைந்து பாடுவோம். அர்த்தத்தோடு பாடுவோம். நம்பிக்கையோடும் பாடி துன்ப துயரங்களை அகற்றி இன்பமாய் வாழுவோம்.

சுவி. T.S. **ஏசையன்**

# குழு இறைவேண்டல்

**“அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்”** (அப். 2:42).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் துதிப்பதும், உன்னதமான அவர் மந்தையில் மீட்கப்பட்டோரை வழிநடத்துவதும் குழு இறைவேண்டலின் பணி. இங்கு கர்த்தரே அனுதினமும் தம் மந்தையில் (திருச்சபையில்) மக்களை சேர்க்கிறார் என்ற தெளிவு தேவையானது. துவக்க காலத் திருச்சபையில் ஒவ்வொரு இறைவேண்டல் குழுக்களும் அருள்வாக்கு மன்றங்களாகவும் ஐக்கியத்தின் ஊடகமாகவும், சிறுகுழுக்களின் வெளிப்பாடாய் சிறு பெரும் திருச்சபைகள் தோன்ற காரணிகளாய் அமைந்தன. இறைவேண்டல் குழு ஆண்டுவிழாவில் தற்கால சூழலில் இறைவேண்டல் குழு ஆற்றலுடன் செயல்பட ஆண்டவர் துணையே முதன்மையானது என உணர்வு பெறுவோம்.

## *1. இறைவேண்டலில் அருள்வாக்கு* (அப். 2:42)

இறைவேண்டலில் அருள்வாக்கு அச்சம் தர ஆற்றல் உடையது. அது அற்புதங்கள் பிறப்பிக்கும் (திப.2:43). திருத்தூதுவர் பேதுரு தமது உரையில் “ இஸ்ரவேல் மக்களே... நாசரேத்து இயேசுவின் வழியாக உங்கள் நடுவில் வல்ல செயல்களையும் அருஞ்செயல்களையும், அடையாளங்களையும் செய்து, அவரை இன்னாரென்று உறுதியாகக் காண்பித்தார்....” என அறிவித்தார். இங்கு அற்புதங்களை வாழ்வில் கண்டோருக்கு சாட்சியிட இறைவேண்டல் குழு இடமளிக்கிறது. சாட்சியிடல் நடைபெறுகையில், உடன் அமரும் மக்கள் கர்த்தரை துதித்து அவர் செய்த அற்புதத்திற்காய், வல்ல செயலுக்காய் அவர் பெயரை போற்றுகின்றனர்.

## *2. இறைவேண்டலில் ஐக்கியம்* (திப. 2:42)

ஒன்றித்த உள்ளம் உடையோரின் ஒன்றான இறைவேண்டலை கேட்டு பதில் தருபவர் நமது ஆண்டவர். ஒருமித்து, ஓர் இடத்தில் அமர்வது இறைவேண்டல் குழுவின் முதல் படிநிலை (திப. 2:44). அமரும் இடம் பொது நிலையான ஆலயம் (திப. 2:46b) என்றால், வெளிப்படையான

இறைவேண்டல் குழு கூடுகை இடம் பெறும் என்பது சமூகப் பார்வை. இல்லங்களில் பல நிலைகளில் இறைவேண்டல் குழுக் கூடுகைள் கூடும் போது, அது பிரிவினை குழுக்களாய் வடிவம் பெறுகிறது. நட்புறவு என்னும் குணநலன் பகைமைக்கு எதிரானது. அது பகைமையைக் களைந்து நம்பிக்கையில் வலுபெறச் செய்யும் ஆற்றலுடையது. இருமனிதர் இறைவேண்டல் செய்ய ஆலயம் சென்றனர் (லூக்.18:10 14) என்ற இயேசுவின் உரையில் "பரிசேயன்" தன்னை "ஆயக்காரனோடு" ஒப்புமை செய்து நட்பினை மறுக்கிறார். மற்றவனோ தன் குறையை உணர்ந்து, ஆண்டவரிடம் ஒன்றிக்கிறார். இங்கு இருவரும் ஆலயத்தில் அமர்ந்திருந்தனர் என்றபோதிலும் ஒன்றிப்பில், நட்புறவில் பிளவு இருந்தது என்பது அறிவிக்கப்படுகிறது. தன்நிலை உணர்ந்த ஆயக்காரன் மீட்பினை பெற்றார் என்பது நம்மையும் ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ள அழைக்கிறது அல்லவா.

### ***3. இறைவேண்டலில் சிறுகுழுக்கள்*** (திப. 2:42)

இடைக்கால திருச்சபையில் சிறுகுழுக்கள் திருச்சபையின் தோற்றுவாயாகவும், பகிர்தலின் பணி இடமாகவும் வலிமை பெற்று திருச்சபையில் மறுமலர்ச்சி பெருக ஊன்றுகோலாயிற்று. ஒன்றித்த சிந்தையோடு ஒன்றித்த மக்கள் தாங்கள் சேர்த்தவற்றை ஓர் இடத்தில் பொதுவாய் பகிர்ந்தனர் (திப. 2:44,45), பஞ்சத்தில் வாடியோருக்கு சேர்த்தனுப்பினார் (உண்டியல் காணிக்கை) (1கொரி. 16:1,2). பவுல் கொரிந்தியருக்கு சொல்வது, "இப்பொழுது உங்களிடம் மிகுதியாயிருக்கிறது; அவர்களுடைய குறையை நீக்குங்கள். அவ்வாறே அவர்களிடம் மிகுதியாக இருக்கும் போதே உங்கள் குறையை நீக்குவார்கள். இவ்வாறு உங்களிடையே சமநிலை ஏற்படும்" (2கொரி. 8:14) என்ற வார்த்தைகள் நற்செய்திப்பணிக்காய் கொடுங்கள் என நமது இதயத்தின் ஓரத்தில் ஒலிக்கின்றதன்றோ? பாரும் இம்மக்களை (திப. 2:46,47) எளிய உள்ளத்தோடு அவர்கள் அப்பம் பிட்டு, கர்த்தரை மகிழ்வுடன் துதிக்கையில் மீட்க்கப்பட்ட மக்கள் கர்த்தரால் சபையில் இணைந்தனர். ஆமென்.

அருள்திரு. **ஜோசப் C.G. ஸெனித்**

# அறுவடைப் பண்டிகை (திருவிழா)

விப. 23:14-17 2 கொரி. 9:6-15
திபா. 65 யோவா. 6:26-35

**"வயலில் நீ விதைத்து, உன் உழைப்பின் முதற்பலன் கிட்டும் போது அறுவடைவிழாவும் ஆண்டத் தொடக்கத்தில் வயலிலிருந்து உனது உழைப்பின் பயனை ஒன்று சேர்க்கையில் சேகரிப்பு விழாவும் எடுக்க வேண்டும்"** (விப 23:16).

இஸ்ரயேலர் தங்கள் வரலாற்றை நினைவுகூரும் வண்ணமாக பல திருவிழாக்களைக் (பண்டிகைகளை) கொண்டாடி வந்தனர். அவற்றில் மூன்று திருவிழாக்கள் மிக முக்கியமானவை. அவை

1. பாஸ்கா விழா
2. கூடார விழா
3. அறுவடைவிழா

கொண்டாட்டங்களில் மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன. கடவுள் தம் மக்களை கடந்த நாட்களில் எங்ஙனம் வழிநடத்தினார் என்பதை நினைவுகூருவதும், தற்காலத்தில் கடவுள் தம் மக்களோடு எதை எதிர்பார்க்கிறார் என்பதை உணர்ந்து கொள்வதும், எதிர்காலத்தில் தம் மக்களோடு கடவுள் எவ்வாறு செயல்படுவார் என்பதை உள்ளடக்கியுள்ளன. மேலும் இஸ்ரயேலர் கொண்டாடிய இம்மூன்று திருவிழாக்களும் அவர்களது வாழ்வோடு இசைந்ததாக இருந்தன. குறிப்பாக, பஸ்கா விழா இஸ்ரயேலர் தங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து விடுதலை பெற்ற நிகழ்வை நினைத்துக் கொண்டாடப்பட்டது. கூடார விழா இஸ்ரயேலர் பாலைவனத்தில் தற்கால உறைவிடங்களில் வாழ்ந்த நாட்களை நினைவு கூரும் வண்ணமாக அனுசரிக்கப்பட்டது. அறுவடை திருவிழா அல்லது சேர்ப்பின் பண்டிகை ஆண்டவர் தங்களுக்குத் தந்த ஆசீர்வாதத்தின் ஒரு பகுதியை குவியல் குவியலாக (2நாளா 31:7). ஆண்டவரின் ஆலயத்திற்கு காணிக்கையாக கொண்டுபடைக்கும் வண்ணமாக அனுசரிக்கப்பட்டது. ஒவ்வொரு திருவிழாக்களின் பின்னணியமும் சில முக்கிய இறையியல் சிந்தனைகளை வெளிப்படுத்துவது போல அறுவடை திருவிழா வெளிப்படுத்தும் இறையியல் சிந்தனைகளை சிந்திக்க முயலுவோம்.

## *1. ஆண்டவரின் ஆசியைக் கொண்டாடும் விழா :*

அறுவடைப் பண்டிகை அல்லது திருவிழாவில் ஆண்டவர் ஓர் ஆண்டில் தங்களுக்கு கொடுத்த விளைச்சலை அடிப்படையாக் கொண்டு கொண்டாடப்பட்டது. திருத்தூதுவர் பவுல் தனது நற்செய்திப் பணியின் அறுவடையின் போது பவுலாகிய நான் நட்டேன், அப்பொல்லோ நீர்பாய்ச்சினார். கடவுளே அதனை விளையச் செய்தார் என்று கடவுளின் ஆசீர்வாதம். விவசாயி ஒருவர் விதை விதைக்கும் போது அல்லது பயிர் நடும்போது பல்வேறு வேண்டுதல்களால் அவரது மனம் நிறைந்திருக்கும். அப்பயிர் வளர தேவையான தண்ணீர் அல்லது மழை கிடைக்குமா?, பயிர் வளர ஏற்ற தட்ப வெப்ப சூழல் இருக்குமா? பயிர் நோயின்றி வளர்ந்து நல்ல பலன் தருமா? எனது முயற்சி ஆசீர்வாதமாக இருக்குமா? என்றெல்லாம் எதிர்பார்ப்புகளும், ஏக்கங்களும் வெற்றியாக நிறைவேறுவது, வளமாய் அமைவது என அனைத்தும் இறைவனது கரத்திலுள்ளது. இதனை உணர்ந்த திருப்பாடல்கள் ஆக்கியோன், கண்ணீரோடு விதைப்பவர்கள் அக்களிப்போடு அறுவடை செய்வார்கள். விதை எடுத்துச் செல்லும் போது அழுகையோடு செல்கின்றார்கள். அரிகளைச் சுமந்து வரும்போது, அக்களிப்போடு வருவார்கள் (திபா 126:5,6) என்பதாக உணர்வு பொங்க கூறுவது எத்தனை உண்மை. தூய பவுலார் கடவுளால் ஆண்டவருக்குக் கொடுக்கும் அடைமொழி பெயர் “விதைப்பவருக்கு விதையையும், உண்பதற்கு உணவையும் வழங்குபவர் (2கொரி 9:10)” என்பதாகும். நம்முடைய முயற்சிகள் வாய்க்கப்பண்ணப்படுதல் என்பது கடவுளின் கருணையே. கடவுளின் ஆசீர்வாதம் இல்லையேல் அறுவடை பண்டிகை இல்லை. எனவேதான் ஆண்டவரின் ஆசீர்வாதத்தை நினைத்து கொண்டாடும் பண்டிகை என்கிறோம்.

## *2. ஆண்டவரின் கட்டளையை உள்ளடக்கிய திருவிழா :*

கடவுள் இஸ்ரயேலராகிய தம்முடைய மக்களுக்கு அவர்களது வாழ்வின் வழிகாட்டியாக இருந்து நெறிப்படுத்துவதற்கென சட்டங்களைக் கொடுத்தார். அதில் சீனாய் உடன்படிக்கை அனுபவம் சிறப்பு வாய்ந்தது. அதைப் போன்று வாழ்வில் கட்டாயமாக கடைபிடிக்க வேண்டிய சில கட்டளைகளையும் கொடுத்தார். இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுத்த கட்டளையாகும். “நீ வயலில் விதைத்து, உன் உழைப்பின் முதற்பலன் கிட்டும் போது, அறுவடை விழாவும், ஆண்டுத் தொடக்கத்தில் வயலிலிருந்து உனது உழைப்பின் பயனை ஒன்று சேர்க்கையில் சேகரிப்பு விழாவும்” எடுக்க வேண்டும் (விப 23:16) என்ற இறைவனின் கட்டளை இறைவாக்கிலிருந்து இவ்விழா இறை கட்டளையை உள்ளடக்கிய

திருவிழா என்பதை உணர முடிகிறது. இவ்விழாவில் இஸ்ரயேலின் பற்றுறுதி அறிக்கை செய்யப்பட்டது (இச 26:1-9). சபை கூடி வருதல் முக்கியப்படுத்தப்பட்டது (விப 23:17). முதற்பலன் ஆண்டவருடையது என்ற நியதிக்கேற்ப விழாவில் முதற்பலனாக படைக்கப்பட்ட காணிக்கை தேவையுள்ளவர்களுக்குப் பகிரப்பட்டது. இக்கட்டளையை நிறைவேற்றுவதில் தந்தையாகிய கடவுளும் மாதிரியாக இருக்கின்றார். தம்முடைய ஒரே மகன் இயேசு கிறிஸ்துவை உலக மக்களின் நிலைவாழ்விற்காக தம் மிகுந்த அன்பினிமித்தமாக கொடுத்தார் (யோவா 3:16). மேலும் இயேசு உயிர்த்தெழுதலின் முதற்பலன்.

### *3. ஆண்டவர் இயேசுவைக் கொண்டாடும் திருவிழா :*

"திருவிழா அமாவாசை, ஓய்வுநாள் கொண்டாடுவது ஆகியவற்றைக் குறித்து எவரும் உங்களைக் குறை கூற வேண்டியதில்லை. இவை எல்லாம் வர இருந்தவற்றின் வெறும் நிழலே. கிறிஸ்தவே .... உண்மை" (கொலோ 2:16,17). மேற்கூறிய திருவாக்கிலிருந்து இத்திருவிழாவின் உட்பொருளாக கிறிஸ்து அடையாளப்படுத்தப்படுகிறார். விளக்கமாக புரிந்து கொள்ள வேண்டுமெனில், அறுவடை திருவிழாவில் முதற்பலன் கடவுளுக்கு காணிக்கையாக செலுத்தப்படுவது போல, கிறிஸ்துவும் முதற்பலனாக காணிக்கையாக அல்லது பலியாக செலுத்தப்பட்டார். நாம் திருச்சபையில் திருவிருந்து தொழுகையை அனுசரிக்கும் போது, "ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து எங்கள் தம்மையே தரித்துக் கொள்ளவும், சிலுவையில் மரித்து எங்களை மீட்டுக் கொள்ளவும் அவரைத் தந்தருளினீரே .... அவர் சர்வ லோகத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கு நிறைவும், பூரணமும் போன்றதுமான பலி, காணிக்கை, பரிகாரம் (பக். 19) " என்பதாக கூறப்பட்டுள்ளது. அந்தவகையில் அறுவடைத் திருவிழா ஆண்டவர் இயேசு கிறிஸ்து முதற்பலனாக காணிக்கையாக படைக்கப்பட்டது அடையாளமாக்கப்படுகிறது. நம்முடைய திருவிழா கொண்டாட்டங்கள் எதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆண்டவரின் ஆசீர்வாத்தை, ஆண்டவரின் கட்டளையை, ஆண்டவரின் தியாகத்தை நினைத்து கொண்டாடும் போது ஆண்டவரின் விருப்பம் நிறைவேறும்.

திருமதி Y. **ஹெர்லின் சஜிதா நெல்சன்**

# செயல்படும் திருச்சபை

2குறி 7:1-10 திவெ 2:18-29
திபா 122 மத் 25:31-46

**"ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம் என்ற அழைப்பை நான் கேட்டபோது அகமகிழ்ந்தேன்"** (திபா 122:1).

தொழுகை, கோவில் என்பவை மனிதரோடு ஒன்றிணைந்தவை. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்". என்பது ஆன்றோர் வாக்கு. தொழுகையில் கலந்து கொள்ளும் போது மனிதர் ஓர் இனிமையான உள்ளுணர்வைப் பெறுகின்றனர். பெந்தெகோஸ்து நாளில், மேல்வீட்டறையில் குடியிருந்த இயேசுவின் சீடரும், விசுவாசிகளும் தூய ஆவியாரின் பொழிவைப் பெற்ற நிகழ்வு தான் திருச்சபையின் ஆரம்பநாள். உலகின் அநேக நாடுகளிலுமிருந்து மக்கள் எருசலேமில் கூடியிருந்தார்கள். பல மொழி பேசும் மக்களுக்கும் பேதுருவினால் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அனேகர் இரட்சிக்கப்பட்டனர். ஆண்டவரரகிய இயேசுவை ஏற்றுக் கொண்ட மக்கள் உலகெங்கும் சென்று சாட்சி பகர்ந்து, தங்களுடைய உடமைகளையும் மற்றவர்களுடன் பகிர்ந்தும், அன்பும், சமாதானமும் பெருக வாழ்ந்தனர். "இரத்தசாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாகும்" (The Blood of the martyer is the seed of the church). திருச்சபை செயல்படும் திருச்சபையாகக் காணப்படுவது மிகவும் சிறப்பிற்குரியதாகும். திருச்சபையின் செயல்படும் தன்மைகள் குறித்துத் தியானிப்போம்.

***1. வாழ்வை மேன்மைப்படுத்தும் திருச்சபை*** : (மத் 25:40)

திருச்சபை பல நிலைகளில் பொறுப்புகளையும், பணிவிடைகளையும் கொண்டுள்ளது. தொழுகைகளில் பங்கெடுக்கும் மக்கள் உள்ளத்தின் பாரங்களை இறைவரிடம் சமர்ப்பித்து துயர் நீங்கி மகிழ்ச்சியடைகின்றனர். ஆண்டவர் மோசேக்கு அருளிய திருச்சட்டத்தில் 'உன்னிடம் வறியவர் இல்லாதிருக்கட்டும்' (இச 15:4) என்கிறார். "எளியவர்களைக் கொள்ளையிட்ட பொருள்கள் உங்கள் இல்லங்களில் நிறைந்துள்ளன" (எசா 3:14) என்கிறார் எசாயா இறைவாக்கினர். வலிமையுடையோர், வலிமை குன்றியோரை மேன்மையான விதத்தில் நடத்த வேண்டிய பொறுப்பினைப் பெற்றுள்ளார்கள்.

எருசலேம் சபை வறுமையில் காணப்பட்ட போது மாசிதோனியா, அக்காயா சபையினர் உதவி செய்தனர் (உரோ 15:26).மிகவும் வறுமையில் இருந்த மக்களும் இல்லாதோரைத் தாங்க முன்வந்தனர். நாம்

செல்வந்தராகும்படி கிறிஸ்து வறியவரானார் (2கொரி 8:9). வாழ்விழந்தோரை மேன்மைப்படுத்தச் செயல்படுகின்ற ஒவ்வொரு செயலும் இறைவரால் அங்கீகரிக்கப்டுகிறது. வாழ்விழந்தவர்களின் மேன்மைக்காகச் செயல்படுபவர்களை இயேசு கிறிஸ்து அடையாளம் கண்டு அவர்களை அருகில் சேர்க்கிறார் (மத் 25:44). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனுக்குல வாழ்வினை மேன்மைப்படுத்த தம்மைத் தியாகமாக்கினார். இயேசு கிறிஸ்துவின் போதனைகளுக்கும், வாழ்வுக்கும் சான்றாகச் செயல்படும் திருச்சபை, இயேசுவை மக்கள் கண்டு கொள்ளும் செயல்பாடுகளை வெளிப்படுத்துவது அவசியம். நீமொ 19:17-இல் ஏழைக்கு இரங்கி உதவி செய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார். அவர் கொடுத்ததை ஆண்டவரே திருப்பித் தந்திடுவார். உண்ண உணவு, உடுக்க உடை, உறங்க இடம் போன்ற அடிப்படைத் தேவைகள் இல்லாமல் கஷ்டப்படுவோருக்கு கரம் கொடுப்பது மிகவும் உயரிய பணிவிடையாகும். மக்களின் வாழ்வு சார்ந்த உயரிய பணிவிடைகளை நிறைவேற்ற திருச்சபையாக அர்ப்பணிப்போம்.

***2. வாழ்வை இணைக்கும் திருச்சபை*** : (திவெ 2:19)

திருச்சபையின் செயல்பாடுகள் ஒவ்வொருவரையும் ஆண்டவராகிய இயேசுவிடம் ஒன்றிணைய வைப்பதாகவும் காணப்படுவது சிறப்பிற்குரியதாகும். திவெ 2:19 இல் செயல்கள், அன்பு, ஊழியம், விசுவாசம், பொறுமை போன்ற சிறந்த பண்புகள் தியத்திரா சபையில் காணப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பண்புகள் திருச்சபையில் தொடர்ந்து காணப்படும் போது, ஆண்டவராகிய இயேசுவிடம் வாழ்வை மக்கள் அர்ப்பணிக்க உதவியாக இருக்க முடியும். கிரியையில்லாத சர்தை சபையினைக் குறித்துக் கூறப்படுவதை திவெ 2:19ஆம் வசனத்தில் பார்க்கிறோம். இறையாட்சியின் முன் சுவையாகத் தரப்பட்டுள்ள திருச்சபை இறை மக்களை ஆண்டவரிடம் சேர்க்க கிரியையுள்ளதாயிருத்தல் கட்டாயமானதாகும். திருவெளிப்பாடு நூலில் ஆதித்திருச்சபைகள் இறையாசியைச் சுதந்தரிக்க கிரியைகளை முக்கியப்படுத்தி இருப்பதைக் காண்கிறோம்.

திருச்சபை தனக்குள்ளே ஆற்றும் பணிகளிலிருந்து விரிவடையச் செய்யும் போது தான் மீட்கப்படுகிறவர்களை ஆண்டவர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (திப 2:47) என்ற அனுபவங்களை நாம் காண இயலும். திருச்சபை அனைத்து மக்களும் ஆண்டவருடைய தூய பிரசன்னத்தைக் காண்கின்ற முறையில், அனுபவிக்கிற நிலையில் இருக்கிறது. திருச்சபையின் செயல்பாடுகள் அனேக மக்களின் வாழ்வினை மேன்மைப்படுத்தி, அனேகரை இயேசுவிடம் ஒன்றிணைப்பதாக செயல்படுவது முதன்மையானதாகும் (கலா 3:28).

Notes

***Notes***

**Notes**

**Notes**

**Notes**

**Notes**

**Notes**

ENVISIONING TOGETHER AN OPEN CHURCH IN AN OPEN WORLD

CHURCH OF SOUTH INDIA - PLATINUM JUBILEE 1947 - 2022

# Church of South India

# Platinum Jubilee

1947 - 2022

Praise God for the United Pilgrimage

for the Past Seventy Five years


THAT THEY MAY HAVE LIFE

KANYAKUMARI DIOCESE C.S.I.

வெளியீடு

தொடர்புத்துறை

கன்னியாகுமரிப் பேராயம்

C.S.I. PRINTING PRESS

Marthandam 04651 - 271329